T.D.R.C - 2179
R.R. No. 22-4-1902

Q11:4196
N02
119909

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 NOV 1902
MADRAS

I

122
4-1902

ஸ்ரீ க்ருஷ்ண சைதந்யர்:

அவர் அவதாரச் செயல்களும்,
நற்போதனைகளும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED ON
14 [illegible] 1902
MADRAS

ஸ்ரீக்ருஷ்ண சகாய மாலிகா—நெ. 1.

ஸ்ரீக்ருஷ்ண

சைதன்ய ஸ்வாமிகள்

சரித்திரம்.

12
4-1902

அனைவருக்கும் மோக்ஷ சாம்பிராஜ்யம்.

திரு. பக்தவத்ஸலம், பி. ஏ.,

வெ. வெங்கட ஸ்ரீநிவாஸன்,

இவர்களால் இயற்றப்பட்டு—

பட்டு. விஜயரத்னப் பிள்ளை, எப். டி. எஸ்.,

அவர்களால்

சென்னை வைஜயந்தி அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1902.

All rights reserved.

Q22:4196
N02

119907

TO

Annie Besant

AND

Swami Abhayananda

AND

All other Bhaktas of whatever age or clime,
caste or creed,

THIS WORK IS

AS A HUMBLE TOKEN OF ESTEEM AND REVERENCE.

Most Respectfully Dedicated.

सर्वधर्मान्परित्यज्य मामेकंशरणंव्रज ।
अहंत्वासर्वपापेभ्यो मोक्षयिष्यामिमाशुचः ॥

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்ஸரணம்வ்ரஜ,
அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாஸுச:.

எல்லாத் தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக அடைவாயாக; நான் உன்னை ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்; துக்கிக்க வேண்டாம்.

THE PUBLISHER'S PREFACE.

SINCE the publication of the English work of two volumes, "Lord Gauranga, or Salvation for All," by Mr. SHISHIR KUMAR GHOSE, M. A., of the "Amrita Bazar Patrika," my ardent desire has been to bring out a Tamil work narrating the life and expounding the teachings of the great Avatar of Nadia. It is rather strange that Southern India knew next to nothing of the momentous religious reform effected and the wonderful miracles wrought in Bengal and elsewhere only four hundred years ago by Sri Gauranga who is widely believed to be the incarnation of Lord Sri Krishna. And though at first the Honorable Rai Bahadur P. ANANDA-CHARLU, B.L., C.I.E., Vidya Vinoda, and my brother Mr. P. KESAVA PILLAI, F.T.S., Pleader, Gooty, sought permission from the revered author of the English work to bring out the work in Telugu and Tamil respectively, and although these gentlemen had a great mind to do that, they were prevented from doing so on account of their professional exigencies.

The idea of publishing the book in Tamil that had entered my mind grew stronger and stronger and at last I rejoiced when, by a fortunate coincidence in which I thought I found the 'finger of God,' I met my learned friend, Mr. T. BHAKTAVATSALAM, B. A., to whom I had been thinking of paying a visit for this purpose. He readily consented to undertake the work, onerous as it was, and wheels within wheels as there were, regard being had to his private affairs. He, with his collaborator and my friend, Mr. V. VENKATA SRINIVASAN, has, despite many difficulties and inconveniences, done the work in an eminently satisfactory way. An introductory essay has been furnished by him which indeed, is the first masterly dissertation in Tamil on Natural Theology based on materials culled from the various English sciences.

For materials, the authors relied chiefly on the excellent English volumes of Mr. SHISHIR KUMAR GHOSE and the small Manual of Mr. KEDAR NATH DUTT, Bhakti Vinod. But the Tamil work is by no means a translation, as it contains many passages of poetic prose which manifest the fervid imagination and the great literary skill of the authors.

I have to tender my hearty thanks to the authors for their kindness in having gratified my longing. My thanks are also due to Mr. SHISHIR KUMAR GHOSE for the kind permission he granted and the blessings he pronounced on me through my dear and respected brother, Mr. KESAVA PILLAI for the publication of this Tamil work and to Dr. NANJUNDA ROW, B. A., M. B., C. M., for his having with his usual religious fervour helped me towards furnishing the book with the pictorial representation of Sri Krishna Chaitanya Avatar. I must not omit to express my obligation to the Hon'ble Mr. P. ANANDA CHARLU for the neat execution of the work in his press and to Mr. N. BALASUBRAMANYA MUDALIAR, M. A., for having kindly furnished an English introduction to the book expressing his valuable opinion, and last, but not least, to Rai Sahib Mr. N. RATNASABHAPATI PILLAI, B. A., B.C. E., Retired Executive Engineer, P.W.D., for the interest which he evinced in the progress of the work and the helpful advice he has been, from time to time, giving the authors who are, it may be casually mentioned, bound to him by the closest ties of relationship.

Owing to a thousand and one impediments that stood in the way, there are to be found in the book many a typographical blunder, for which I crave the indulgence of the public. Of course, these trifling mistakes may be removed when the work passes through a second edition. I owe also an apology to the public for the small delay in the publication of this book.

MADRAS,
20th October 1902.

P. VIJIARATNA PILLAI.

INTRODUCTION.

I have been asked to write a few words in the way of introducing this book to the kind notice and patronage of the public. It gives me very great pleasure to do so, especially as the work, the maiden attempt of the authors, many parts of which I read through, both during its progress and while, in its final shape, it was passing through the press, is one of considerable literary excellence and merit. It is written in limpid delicious illuminative Tamil, free from pedantic archaisms and false ornament; the similes and illustrative quotations are happy and well-chosen; and the work contains many passages of poetic prose which will delight every lover of the beautiful. Not unfrequently the writing rises to heights of genuine eloquence; and the authors must be congratulated not only on their attainments in Tamil which the work displays, but also on the possession of a fine literary gift which, if properly trained and exercised, must enable them to make additions of permanent value to the Tamil literature of the present day.

Now as to the matter of the book. It is a life of Sri Chaitanya, the great Vaishnava teacher of Bengal, whose name is little known in Southern India. Lord Chaitanya was born at Mayapur in the town of Nuddea on the 18th February 1485. His father, Pandit Jaganath Misra, and his mother, Sachi Devi, were poor but good and godly people. As a child, Chaitanya was strangely attractive and winsome; and there was no greater pleasure to the women living around than to take him up in their arms and caress him. He displayed precocious genius and sometimes astonished sage and elderly men by his serious and wise observations which ill accorded with his usually funful and frolicsome behaviour. In his eighth year, he entered the *tol* (Sanskrit School) of Gangadar Pandit, where he remained for two years and studied grammar, literature and rhetoric. He applied himself to study thereafter assisted only by his own

For materials, the authors relied chiefly on the excellent English volumes of Mr. SHISHIR KUMAR GHOSE and the small Manual of Mr. KEDAR NATH DUTT, Bhakti Vinod. But the Tamil work is by no means a translation, as it contains many passages of poetic prose which manifest the fervid imagination and the great literary skill of the authors.

I have to tender my hearty thanks to the authors for their kindness in having gratified my longing. My thanks are also due to Mr. SHISHIR KUMAR GHOSE for the kind permission he granted and the blessings he pronounced on me through my dear and respected brother, Mr. KESAVA PILLAI for the publication of this Tamil work and to Dr. NANJUNDA ROW, B. A., M. B., C. M., for his having with his usual religious fervour helped me towards furnishing the book with the pictorial representation of Sri Krishna Chaitanya Avatar. I must not omit to express my obligation to the Hon'ble Mr. P. ANANDA CHARLU for the neat execution of the work in his press and to Mr. N. BALASUBRAMANYA MUDALIAR, M. A., for having kindly furnished an English introduction to the book expressing his valuable opinion, and last, but not least, to Rai Sahib Mr. N. RATNASABHAPATI PILLAI, B. A., B.C. E., Retired Executive Engineer, P.W.D., for the interest which he evinced in the progress of the work and the helpful advice he has been, from time to time, giving the authors who are, it may be casually mentioned, bound to him by the closest ties of relationship.

Owing to a thousand and one impediments that stood in the way, there are to be found in the book many a typographical blunder, for which I crave the indulgence of the public. Of course, these trifling mistakes may be removed when the work passes through a second edition. I owe also an apology to the public for the small delay in the publication of this book.

MADRAS,
20th October 1902.

P. VIJIARATNA PILLAI.

What of the Master's teaching? While agreeing in all essential points with the religious philosophy of orthodox Vaishnavism, the Master laid particular stress on Bhakti (devoted love to God) as the only all-sufficient means for the attainment of Moksha (spiritual emancipation), which is no other than union with the Lord, Sri Krishna. It is not the intellect of man with its finiteness of grasp, but his heart with its almost infinite capacity for love that can help us to draw near unto the Infinite Eternal Being, Sri Krishna, whose love for man draws Him down to us, our love for whom alone can raise us up to Him. Bhakti, genuine, intense, self-consuming; Bhakti that puts forth no claim and asks for no recompense; Bhakti, heart-whole, that forgets itself and is manifested in the singing of Sri Krishna's praises and dancing beatifically to the music of the Kirtans, in meditation on Him and His lila, and worshipping with fervour, Him and His devotees;—such Bhakti alone can help man to secure the highest spiritual end for which he must strive.

Such are the salient points of the Master's life and teaching. It is a matter of great gratification to me that all the details of a life so captivating, beautiful, god-filled, and of a teaching so instructive, inspiring, soul-raising, are now made available to Tamil readers for the first time in this present work; and it is only natural for the authors to hope that the public would receive it with indulgent kindness and accord to it a fair share of their patronage and sympathy.

I must not omit to mention that the work has, prefixed to it, an essay by Mr. T. Bhaktavatsalam B. A., which is a very suggestive and excellent piece of writing containing many facts, thoughts and lines of argument which would be new to Tamil readers; also that great praise is due to the publisher, Mr. P. Vijiaratna Pillai, F. T. S., for his intelligent enterprise and the fine taste displayed in the get-up of the book which leaves nothing to be desired.

N. BALASUBRAMANYAN.

(EXTRACT FROM THE "AMRITA BAZAR PATRIKA," JULY 10, 1902.)

SALVATION IN THE KALI YUGA.

As previously announced, Swami Abhayananda delivered her second public lecture last Saturday at the Hureetokey Bajan Natya mandir before a pretty large and appreciative audience composed of such representatives of the Hindu nobility and gentry as Maharajah Sir Jotindra Mohan Tagore, Babus Hirendra Natu Dutt and Nalin Behar Sirkar, etc. She spoke with her usual eloquence and perspicuity and kept her hearers enthralled for about an hour. Every word she uttered was listened to with deep attention, and she managed her subject,—"Salvation in the Kali Yuga" in a rational and scientific way which went straight into the heart of the whole audience. The Swami speaks with great fluency, without any notes, in a state of semi-trance; and yet she never falters or speaks a sentence which is not relevant to the subject of her discourse. Here is almost a full text of her last Saturday's speech :

The scriptures of every religion may be read from many a different stand-point. You may take any section of any scriptures and read it from two distinctly different stand-points. You may read it from the stand-point of letters or from the standpoint of spirit. We should be very careful to discriminate one from the other. For instance, suppose we take into consideration the teachings regarding the four Yugas. We read in our scriptures that there are four Yugas or ages of the world, *viz.*, (1) Satya (2) Treta (3) Dwapar and (4) Kali. This doctrine, we may read either from the literary stand-point or from the spiritual stand-point. From the literary standpoint it means the existence of the world divided into so many ages. In the first age we have divine knowledge when we have all goodness and spirituality. In the second age of Treta we find man

declining from that high standard. Again in Dwapar we find greater decline and in Kali much more. In Satya Yuga the divine knowledge had four legs—in the second or Treta, three legs left—in the third age or Dwapar, two legs left—and in the Kali only one. Now let us consider it from the other stand-point—the stand-point of spirituality. We believe that these ages belonged to the building or the existence of the world. They had much to do with the progress of the man, the progress of humanity and its evolution. It shows how far has humanity progressed, how far has a change or growth in man. To night I shall show you that in this Kali Yuga we stand at the middle point—we are neither on the very highest nor in the lowest. We are between the one and the other.

Vishnu incarnated nine times. First he was born as a fish —the least manifestation of life in the animal kingdom. The second incarnation of Vishnu is tortoise. Here we find a higher type of creation, His mission being to bear on his back the weight of the earth which means the sub-stratum of the earth. Then we find Vishnu incarnating as boar. While considering these incarnations of Vishnu, we must be conscious of the fact that each of the nine *avatars* had a different mission to perform —different mission to accomplish. His mission was to lift up the earth which had been sunk down by a demon. Then we find the incarnation of a higher type—the incarnation of half man and half beast that is, man and lion combined. Again we find Vishnu incarnated as *Vamana* or dwarf which represents the formation of man to only imperfect extent. His next incarnation is Ram *avatar*; now we have the full bloom of a human incarnation. Here the humanity had outgrown the lower animal kingdom. Rama or Vishnu came to fulfil the mission, that is to say, how to fight against our enemy and how to fight against our own passions. Rama came with bow and arrow. Then we find him as the charioteer of Arjuna in the battle-field of Kurukshetra—His incarnation as Sri Krishna. This is the highest of His incarnations. Here he had a mission a great deal higher than in the other incarnations. Krishna is more accomplished than Rama. Rama fought to regain his wife. The wife represents the mind of a man and the man represents the soul, seeking to redeem the mind.

When we come to Krishna we find his mission so grand, his mission so perfect, his mission so complex, that it is almost impossible for a man to comprehend during his whole life time. We find him teaching *Karma Yoga* at Dwarka, *Gyana Yoga* at Kurukshetra and the highest expression of his teaching *Bhakti Yoga* at Brindavan. His life at Dwarka is that of a householder, at Kurukshetra that of a warrior, and at Brindavan that of a lover.

Krishna was the full incarnation of Vishnu. In Him we find the unfolding of the plant whose root was in the beginning and the manifestation more and more accomplished, more and more elevated. When we come to Sri Krishna of Brindavan we find that He cannot be approached through scriptures, or through sacrifice, or through any other ceremonials, but is to be approached with love, with praying, singing and *Bhakti*; that is what He taught at Brindavan—the highest of His teachings.

It is said in Scriptures that Vishnu incarnated only in three Yugas. His last incarnation was in Dwapar. He incarnated in the first three Yugas but not in the fourth, for Sri Gauranga was not an *avatar* because in the Kali Yuga there can be no incarnation, as many sections of the Scriptures have laid down the same fact.

Let us consider for a moment as to why we claim Sri Gauranga as being an incarnation of Vishnu. Vishnu came in higher and higher bodies, because He had a mission to fulfil in each. Each succeeding one had a mission greater and more important than the one preceding. Each of His *avatar* in the animal kingdom had more important functions than the one preceding. Vishnu incarnated as fish and then as tortoise—why? Because humanity progressed more and more. The limit of full incarnation means His incarnation as perfect man. So we

say His highest incarnation is His incarnation as Sri Krishna. These different incarnations show the growth of humanity. There was a time when a man would not grasp any higher ideal than a fish. To them the fish was the symbol. So Vishnu had to come as a fish in order to respond to their feelings. If we approach Him by the name of Krishna, He approaches us as Krishna; if we approach him by the name of Govinda, He approaches us as Govinda; if we approach him by the name of Siva, he approaches us as Siva; if we approach him by the name of Ganesh, he approaches us as Ganesh. This simply shows that he comes as the embodiment of the faculties to which humanity can respond to. It depends upon the mental development of humanity. As humanity grows, the manifestation of God will also grow. But remember that God being perfect, He has no growth. It is because we are growing, it is because we can comprehend so much of Him, that He comes in those different aspects, each apparently higher than the other.

Sri Krishna taught at Brindavan that the proper way to approach Him was by praying to Him, by loving Him, by pronouncing His name, by preaching His name, by *Hari nam*; and not by the method of austerity—not by the method of offering flowers, not as Ram Chandra taught with his bow and arrow, but by simply repeating *Hari nam, Haribole, Haribole* (shouts of *Haribole and Haribole*)—by becoming mad with this *Haribole* and seeing Krisnna everywhere.

I now come back again to my own point as to how it is that Sri Gauranga claims to the world to be Sri Krishna's incarnation. Because He came down to preach to the world the *mahatma*, the grandeur, of Harinam. I believe that the contradictory opinions are here reconciled. Let us consider what took place with regard to Sri Gauranga at Nadia. He did not come down to perform any particular mission, and that will prove the divine nature in him. He was Sri Krishna Himself but not with a new mission. He came to explain the mission of Sri Krishna at Brindaban which was given to us as mysterious five thousand years ago. His mission at Brindavan was so mysterious that we did not dare to approach it. So Gauranga came for the explanation of that mission by precepts and examples. Gauranga's teaching was through *prem* or love. Vyasa Deva himself said that in the Kali Yuga there could be no salvation except through the uttering of *Harinam*, except through meditation and except through concentration of mind. Now you remember Krishna Dwypayan whom you call Vyasa, the compiler of the Vedas, said that the duties, the ceremonials and the laws laid down in the Vedas and those beautiful works of the Sastras were not for Kali Yuga. He says he does not understand that though he produced those beautiful works yet he is miserable—yet he is not happy. There must be something which I did not understand. Having produced such wonderful things, having gone through all penances and austerities, he was wanting in one thing. It was love. Narada came to Krishna Dwypayan and said: "How is it that you are so sad?" He replied: "I am sad and my soul finds no ease. I have written all these wonderful books and yet I am miserable." Upon which, Narada replied: "All that you have written is simply misleading, because it belongs to the lower plane, and there can be no salvation only in the laws and ceremonials of the Vedas. Bare ceremonials are necessary for the purification of the mind and not for the salvation of the soul—you have forgotten to sing the glories of the Lord; without this, there can be no peace for any one." It is a higher ideal, which is heaven to us.

Now Krishna Dwypayan understood this at once and he next wrote that wonderful book Srimat Bhagavat. That is the book which sings the glory of the Lord—that is the flower of the crown of the Hindu Scriptures (cheers)—the flower of all the Puranas. It teaches us the Salvation in the Kali Yuga. It teaches how we can come in touch with Krishna by singing His name in Kali Yuga, it teaches of the God Supreme. To come to Him we must concentrate our mind in Him. It is then that

we come in touch with His own reality. Salvation in the Kali Yuga must be through the uttering of Harinam simply, for the reason as far as I can see is this: When Vishnu incarnated as fish, humanity could not respond to any higher refinement than that. Thus mental texture was coarse. Next we come to His incarnation as tortoise meaning thereby that humanity had grown a little more sensitive and more delicate. As humanity grows higher and higher, his sensibility, mental, spiritual and physical, grows finer and finer. I hope you have understood me. Growth of incarnation means the growth of humanity. As He incarnates in higher and higher planes it means that human mind can vibrate in that higher plane. As we come higher and higher, the incarnation of Vishnu represents the higher aspect Spiritual sensitiveness, mental sensitiveness and physical sensitiveness can respond according to their developement. In this age we find that humanity has developed the individuality to a great extent. We have reached the highest state of sensitiveness, the delicacy of touch, physical, mental and spiritual. By saying Hari, singing the very ideal of Krishna, we gain a refinement of our nature and thereby we come in direct touch with Krishna. So it is said that Kali Yuga is the time in which the utterence of His name will bring man to his goal.

A man, however spiritually developed he may be, cannot kill a kid because it is against reasons—it is against spiritual conception—it is against common sense. It is a thing of the lower conception and is not taught by the teachers. But when a man has grown he would not take the life of any animal in order to save himself. No body will tell that you will be redeemed by killing others. The only thing that redeems is not to look down but to look up. So they said, "Great is the Kali Yuga, happy is the Sudra and happy is the woman," because in Kali Yuga we are more simply elevated by uttering His name than in previous ages—because we come in touch with God by simply singing his *prem*. Sri Gauranga came to teach us by His own life and doing, that He incarnated not as Sri Krishna, but as a devotee to Sri Krishna. He incarnated Himself, for the object of the mission was to represent Radha and Govinda blended together. He said He was Radha. He taught from the beginning to the end of His life how to seek Him through *prem*, through singing His glories and repeating His name. We find this throughout the life of Sri Gauranga. Sometimes he weeps like Radha, and sometimes we find him seeking his beloved—praying and weeping in order to get that beloved. Sometimes he says nothing but the name of Krishna, sometimes he says, "say Hari Hari, say Krishna, serve Krishna, sing Krishna, say *haribole, haribole* (shouts of Haribole)." These are all that the Lord Gauranga came to teach. So it is said He was no *avatar*, He simply came to explain the teachings of Sri Krishna taught by him five thousand years ago at Brindavan. He had nothing to do with the Sri Krishna of the battle-field, of the Kurukshetra and he had nothing to do with the Sri Krishna of Dwarka as house-holder. Because Sri Krishna at Dwarka was a family man, and taught us how to come in touch with God leading family life. But Sri Gauranga presents Himself to us as one going away from family, leaving the world behind by taking the vows of a *Sanyasi.*

The mission of Sri Gauranga is the mission of Sri Krishna and it is one mission because it is one *avatar* which is the teaching of salvation in the Kali Yuga by simply singing the name of the Lord, uttering His name, and repeating His name, and singing His name as Sri Gauranga taught us to sing, with the instruments of music. That is one of the greatest and glorious teachings of Sri Gauranga. Then He taught us how to dance in the ecstacy of love for the Lord ; because as you sing Hari Hari, Radha Govinda, you will be placed in a state of concentration and meditation ; and concentration unfolds our inner nature. We find him saying Haribole Haribole from the bottom of his heart. We see Him saying Radha Govinda in everything. As soon as we concentrate our mind to one thing we become that—when we think Radha Govinda we become so Sastras say what man thinks, that he becomes. You all know—at least you ought to know—that through concentration and meditation we become that on which we meditate or concentrate. As we sing the glories of God our minds become concentrated on those glories and through this concentration we come in to that stage which is called perfect *samadhi*, or trance. Our sankirtan sings of the glories of the Lord, and its exhultation makes the man rise and commence dancing. We are then absolutely united with the deity. That is what Sri Gauranga taught us. There was such power in dancing that Sri Gauranga spent twenty years of his life as Sanyasi dancing and singing the name of the beloved Lord. The divine vibration of kirtan music shook his whole frame and in this exhultation He passed away. Because the dancing and singing the glories of God is our redemption in Kali Yuga. Sing and again sing, repeat and repeat it over and over again, never cease to repeat His name. Everything you perceive, everything you see will then appear to you as Sri Krishna. This is redemption—singing of "Hari-nam", crying of Haribole, dancing in exhultation of Bhakti. (Loud cheers.)

(EXTRACT FROM THE "MADRAS MAIL," AUGUST 27, 1902.)

THE AMERICAN LADY WHO IS NOW WORKING as a preacher of Chaitanyism, or Vaishnavism as preached by Chaitanya, says a Bengali Calcutta correspondent, attracts large crowds wherever she goes. She is an out-and-out Chaitanyite, always laying stress on her contention that Chaitanyism is the best, highest and most rational religion. She puts on the dress of a Vaishnav woman who has dedicated her life to religion. She has been found on occasions to take part in *Sankirtan* or religious singing parties, during which she joins in the dancing in which the singers freely indulge. Swami Abhayananda, as she calls herself, has excited much curiosity and even wonder, and the ability with which she expounds the philosophy of Chaitanyism in English is expected to win converts to this Neo-Vaishnav sect in Bengal from among the English educated Bengali youths belonging to other Hindu sects.

நூலாசிரியர்கள் முகவுரை.

ஓர்நாள் மாலைப்போது இந்நூலாசிரியர்களில் ஒருவராகிய T. பக்தவத்ஸலம், பி. ஏ., கடற்கரை யுலாவி மின்சாரவண்டியில் வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தகாலை அவர் அன்பிற் குகந்த ஸ்ரீமான், பட்டு-விஜயரத்னம் பிள்ளை அவர்கள் அவரை வழியில் சந்தித்து, ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம் ஆங்கிலத்தில் உள்ளதாக, அஃதை தமிழிலும் இயற்றிப் பரோபகாரம் புரியல் வேண்டுமென்றுகேட்டனர். இந்நூலாசிரியர்கள் அதற்கு முன்னரேயே ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட அத்திவ்விய சரித்திரத்தை நோக்கி நோக்கி அதன் தெவிட்டாத இன்சுவையை யனுபவித்து அத்தகைய நூல் தமிழில் ஒன்றும் காணப்படுமாயின் மகோபகாரமாய் லோகோபகாரமாய் இருக்குமென்று நினைத்திருந்தா ராதலால் இப்புத்தகத்தின் பதிப்பாசிரியராகிய பிள்ளையவர்களின் மேதக்க குணத்தையும் உதாரத் தகைமையையும் மிகப்பெரிதும் பாராட்டி அவரெண்ணத்திற்கும் தமதெண்ணத்திற்கும் ஒத்து நடக்கச் சித்தமாயினர். இந்நூல் எழுத வாரம்பித்து முடிவதற்குள் பன்னெடுநாளாயினும் நேர்ந்த இடையூறுகள் கணக்கில. ஒரு நல்ல காரியத்தினுக்கு எத்தனையோ தடைகள் நேருவது உலக வியல்பாயிருக்கின்றது. இந்நூலாசிரியர்களுக்கு நேர்ந்த அசந்தர்ப்பங்களாலும் இந்நூலை மொத்தத்தில் வெகு நன்றாய் அச்சியற்றித்தந்த யந்திரசாலையில் தோன்றிய சிலதடைகளாலும், "அச்சுப்பேய்கள்" என்று ஆங்கிலர் கூறும் கொச்சைப்பிழைகள் அநேகம்விளைந்தன, அவைகளை அறிவுடையோர் பொறுப்பாராக. அடுத்த பதிப்பு வெளிவரும் அதிருஷ்டம் நேருமாயின் அவைகளையறவே களைந்துவிடலாகும். இச்சில்லரை குற்றங்கள் நீங்கலாக மனதை மருட்டுவனவாய்க்காணும் சில பிழைகளை மட்டும் ஒரு தனிக் கடிதத்தில் பதித்து இதனுடன் சேர்த்திருக்கிறது.

ஆயினும், தமிழின் தற்கால நடையொழுங்கைப்பற்றி நூலாசிரியர்கள் கொண்ட அபிப்பிராயம் யாதெனின், ஒரு பாஷை உயிருள்ளதாய்க் குன்றிக்குறைந்து ஒன்றுமிலாதாகாது ஓங்கி வளர வேண்டியதாயின் அதனிடம் கட்டாயம் அனேக மாறுதல்கள் காணப்படும் என்பதே. உலக வழக்கத்தில் ஒருவகைச் சொல்லுருபும் ஊன்றிவிட்டதாயின் ஆரம்பத்தை நோக்கி யது குற்றமுள்ளதாய்த் தோன்றினும் பின்னாள் மரபை யநுசரித்து அதை யேற்றமுள்ளதாகவே யெடுத்துக்கொள்ளல் வேண்டும். ஐந்நூறு வருஷங்களுக்குமுன் எழுதிய தொன்னூற்களில் அவ்வித மாறுதல்களுக்கு ஆதாரம் இல்லையேயென்று கூறுவது Avatar (அவதாரம்) என்று ஆங்கிலத்தில் சேர்க்கப்பட்டு அகராதியிலும் காணப்படும் பதம் ஐம்பது வருஷத்திற்கு முன்னும் அப்பாஷையிடம் தோன்றாததால் அதை அறவே யொழித்துவிடல் வேண்டும் என்று அநுதாபப்படல் போலும். சாஸர் (Chaucer) என்னும் பிரதம ஆங்கில கவிவாணருடைய ஆங்கிலத்திற்கும் இப்போது வழங்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள வித்தியாசங்கள் எம்மால் சொல்லத்தரமன்று. டாக்டர் ட்ரெஞ்ச் (Trench) என்பவர் எழுதிய "English, Past and Present" என்ற அரிய நூலாலும், மாரிஸ் (Morris) எழுதிய " Historical Accidence" என்ற நூலாலும் இன்னம் வேறுபல கிரந்தங்களாலும் அவைகள் விசதமாகும். அப்படியே தமிழிலும் நன்னூல் எழுதிய காலத்திலிருந்து இதற்குள்ளாக எத்தனையோ மாறுதல்கள் விளைந்திருக்கின்றன. பாமரர் பேச்சு வழக்கத்தை யறவே தள்ளினும் பண்டிதர்கள் சொற்போக்கிலாயினும் அதிகமாய் அநுஷ்டித்துச் செல்வதே இன்றியமையாத தாகிறது. இவ்வாறிலாது வெகு பழைய இலக்கணமே நமக்கு ஊன்றுகோலாவது என்று எண்ணி நடக்கமுயன்றால் நம் பாஷை பேசப்படுவதற்கும் எழுதப்படுவதற்கும் விரும்பப்படாத அனேக வித்தியாசங்கள் உண்டாகி பல்லோருக்கும் பயன்படாததாக இறந்த பாஷைகளில் ஒன்றாய் மறைந்துவிடும். இவ்வாறு நவீன வழியை நாடிச்செல்வதிலும் ஒருவருக்கொருவர் அபிப்பிராயத்தில் மாறுபடுவாராயினும் எம் மாறுதல்கள் கொள்ளத்தகுவன எம் மாறுதல்கள் கொள்ளத்தகாதன என்பதை முடிவாய்க் காலமாகிற கடவுள் காட்டவேண்டுமே யன்றி மனிதரால் தெரிந்தெளிய முடியாது. இதற்கிணங்க இந் நவீனவழியை அநுஷ்டித்த இந்நூலாசிரியர்கள் 'ஒருக்கால்' என்பாரேயன்றி 'ஒருகால்' என்றுசொல்ல ஒருப்படார்; 'சக்கரம்' என்பாரே யன்றி 'சக்கிரம்' என்னார்; 'ஒரு' என்பதை விட 'ஓர்' என்பது வலிவுற்றது என்ற வித்தியாசம் மாத்திரங் கூறுவரே யன்றி வேறோர் பேதமுங் கற்பியார்; 'சசிதேவியம்மாள்' என்பாரே யன்றி 'சசிதேவி யம்மை' என்று கூற ஒருக்காலும் இசையார்; 'தான்' 'தாம்' என்பவைகளுக்குள் உள்ள வித்தியாசம் இப்போது வழக்கத்தில் தடுமாற்ற முற்றதால் அவைகளை யுபயோகிப்பதில் நூலாசிரியர்கள் சிறிது இடர்ப்படுவாராயினர். ஒரு வாக்கியத்தில் எழுவாய் தோன்றாது மறைந்து நிற்றல் கதைப்போக்கின் தன்மையாலும் சம்பாஷணையியல்பாலும் தமிழ்ப்பாஷை யிலக்கியத்திற்கு ஒத்ததென்று அவ்வாறே அநுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறியவை போன்ற வேறுசில மாறுதல்களும் இந்நூலினிடம் ஆங்காங்கே காணப்படும். அன்றியும், பாஷை நயத்திற் குரித்தாகிய வடசொற்களை யாங்காங்கே பிரயோகிப்பது கிரமமென்றும், தற்கால இலக்கியத்திற்கொத்ததென்றும், அவ்வாறிலாது வடமொழி போக்கி கடுந்தமிழ் மொழிக்கோடல் உசிதமல்லவென்றும், இந்நூலிடங் கொள்ளப்பட்டிருக்கிறது. விரிக்கிற் பெருகும். இக்கொள்கைக்கு அநுகுணமாக ஸெயிஸ் (Professor Sayce) என்ற பிரபல ஆங்கில மகா பண்டிதர் கூறியுள்ளவற்றை அப்படியே கீழ் பதித்திருக்கிறது.*

---

* EXTRACT FROM

Professor Sayce's "Introduction to the The Science of Language."

In fact, the current system of teaching grammar is destructive of all true conception and appreciation of what language really is. Language is no artificial product, contained in books and dictionaries and governed by the strict rules of impersonal grammarians. It is the living expression of the mind and spirit of a people, ever changing and shifting, whose sole standard of correctness is custom and the common usage of the community. What is grammatically correct is what is accepted by the great body of those who speak a language, not what is laid down by the grammarian. To extract certain rigid rules from the works of a selected number of writers, and treat

இவ்வாறு அனுஷ்டித்த சில மாறுதல்களாலேயே நூல் முழுவதும் பயனற்றதாய்ப் பாங்கற் றொழியு மென்பது தர்க்க விரோதமாவதன்றியும் சாதாரண அறிவிற்கும் அசாதாரணமாய்த் தோன்றுகிறது.

இத் திவ்ய சரித்திரத்தில் சோகரஸமும் பக்திரஸமும் மிக்கிருத்தலால் நூலாசிரியர்களால் இயன்றவரையிலும் அனேக அலங்கார விசேஷங்களோடும் பாச்சுவை பரவிய நடையோடும் இந்நூலை அவர்கள் எழுத முயன்றார்கள். அவர்கள் எவ்வளவு தேர்ச்சி யுற்றார்கள் என்பதை பிறர்தாம் சொல்லாகும். அழுக்காறை நீக்கி இக் நூலி லுளவாகிய குற்றங் குறைகளை நூலாசிரியர்களுக்கு எடுத்துக் காட்டில் அதனால் அவர்கள் நன்றி பாராட்டுவாரே யன்றி மனம் வருந்தார்.

தற்காலத்துக்கு இயைந்த நூல்கள் தமிழில் இல்லையே யென்றும் நம் தமிழையே கற்றுணர்ந்த பண்டித சிகாமணிகளும் ஆங்கில நூலாசிரியர்களின் அரிய கருத்துகளை யறிந்திருப்பின் 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்கிற வண்ணம் மேன்மை யுறலாகுமே யென்றும் கருதி நூலாசிரியர்களில் ஒருவராகிய திரு. பக்தவத்ஸலம், B.A., அவர்களால் ஆங்கிலத்தில் உள்ள வான, பூ, ரசாயன, சக்தி, ஜீவ, மன, ஞாய, தர்க்க, தத்வ சாஸ்திரங்களுக்கு இயைய ஒரு வியாசம் எழுதப்பட்டு இந்நூலுக்குப் பாயிரமாக முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தற்காலத்திற் கியைந்தவாறு ஆழ்ந்த கருத்தும் நூதன பொருளும் அமைந்தநூற்கள் தமிழ்ப் பாஷையிலும் மற்ற திராவிடபாஷைகளிலும் கிடைப்பது அருமையாயும் அசாதாரணமாயும் இருப்பதை யறியும் புத்தி

---

everything which does not conform to these rules as an exception or a mistake, is to train up the young to a radically wrong notion of speech. The first lesson to be learnt is that there is no intrinsic right or wrong in the use of language, no fixed rules such as are the delight of the teacher of Latin prose. What is right now will be wrong hereafter, what Language rejected yesterday she accepts to-day. The exception is often a survival of what was once the prevailing usage, the current form may be the creation of a false analogy. There are no golden and silver ages in grammar, whatever may be the case in literature and to confound the analysis of an arbitrarily limited literature with the knowledge of a Language is to put the shadow for the substance, the frigid maxims of the schoolmen for the pure spring of living Speech.

மான்களினுடைய பிரேரபனையாற்றான் இந்தியாவில் உயர்தரக் கல்விச் சீர்திருத்தத்தினைப் பற்றி ஏற்பாடுகள் செய்வதற்கென்று ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட சபையார் (Indian Universities Commission) திராவிட பாஷைகளைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகட்குப் பாடமாக வைத்தல் பிரயோசன மற்ற தெனத் தேறி யுரைத்தனர். அக் குறையை நீக்கவேண்டியே முக்கியமாய் அப் பாயிரம் வரையப்பட்டது. அதனாலேயே நூற்கிடையிடையே சந்தர்ப்பங்கட் கியைந்த வண்ணம் தமிழ்ப்பாக்கள் இயற்றிச் சேர்க்கப்பட்டுள்ளன. அவைகள் பொருளடக்கத்தின் கீழ் பதிப்பிக்கப்பட் டுள்ள குறிப்பொன்றினால் இன்னவென அறியலாகும்.

தமிழ்ப்பாயிரத்தின் கடைசி அத்தியாயத்தின் கடைசி சரித்திரத்தில் குறிப்பித்தவாறு ஸ்வாமிகள் மதத்தினைத் தற்காலத்தில் வெகு ஊக்கத்துடன் பிரசங்கித்து வரும் ஸ்ரீ மாது சிரோன்மணி ஸ்வாமி அபயானந்தர் கல்கத்தா நகரில் செய்த ஒரு பிரசங்கமானது "அம்ருத பஜார் பத்ரிகா" வில் பிரசுரிக்கப்பட்ட வாறு ஆங்கில பாஷையிலும், அதன் கருத்தினைத் தமிழரும் வாசித்தறியுமாறு அதன் மொழி பெயர்ப்பாய் தமிழிலும் இதனுடன் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. அம்மாது சிரோன்மணியார் அமெரிக்கா தேசத்தினராயினும் நம்மவர் மதத்தில் நம்பிக்கை வைத்து அதனை வெகு ஊக்கத்துடன் விருத்தி செய்து அனைவருக்கும் பயன் படுமாறு பரவச்செய்ய உழைக்கின்றமைப் பற்றி நம்மவர்கள் அவர் பால் என்றுங் கடமைப் பட்டவராவார்கள். அவர் கூடிய சீக்கிரத்தில் நம் சென்னை நகருக்கும் விஜயஞ் செய்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்நூலாசிரியர்களுக்கு முதலில் உற்சாகம் தந்த குத்திநகர் வக்கீலாகிய ஸ்ரீமான் ப. கேசவப்பிள்ளை, F. T. S., அவர்களுக்கும் இந்நூலைப்பற்றி தம்முடைய அருமையான அபிப்பிராயத்தினை ஆங்கில பாயிர முகமாய் தெரிவித்த ம-ா-ா-ஸ்ரீ, N. பாலசுப்ரமணிய முதலியார், M. A., அவர்களுக்கும், தமிழேமணமற்றுப் போகும் இக்காலத்தில் கர்னனேயென முன்னர் வந்து தமது ஒப்பற்ற

ஔதாரியத்தால் இதுவரையிலும் தமிழுலகங் கண்டிராத இவ்வரிய பெரிய நூலை வெகு பிரயாசையெடுத்துக்கொண்டு பதிப்பித்த ஸ்ரீமான் ப. விஜயரத்னப்பிள்ளை, F. T. S., அவர்களுக்கும், இப்புஸ்தக விஷயத்தில் பற்பலவிதத்தாலும் அவ்வக்காலங்களில் உதவி புரிந்த மற்ற நண்பர்களுக்கும் இந்நூலாசிரியர்கள் என்றுங் கடமைப்பட்டவராவார்கள்.

இத் திவ்ய சரித்திரம் எழுதுவதில் நூலாசிரியர்களுக்கு முக்கிய ஆதாரமாய் இருந்தவை ஆங்கிலத்தில் பதிப்பிக்கப்பட்ட இரண்டு அரிய கிரந்தங்களே. அவைகளில் ஒன்று "அம்ருத பஜார் பத்ரிகா" ஆசிரியரான கனம்பொருந்திய மிஸ்டர் ஷிஷிர் குமார் கோஸ், M. A., அவர்கள் இரண்டு வால்யமாய் பதிப்பித்தது. மற்றொன்று "பக்தி வினோத" ரான கனம் பொருந்திய மிஸ்டர். ஸ்ரீ கேதார் நாத் டட் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட ஒரு சிறிய நூல். சமஸ்கிருதத்தில் ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் சரித்திரத்தைப்பற்றி அநேக நூல்கள் உள்ளன வாயினும் மேற்கூறிய ஆங்கில கிரந்தங்களே தக்க ஆதாரமாக கொள்ளப்பட்டன. என்றாலும், இத் தமிழ் நூலின்கண் பெரும்பாலும் அதனாசிரியர்களுடைய சுயகற்பனா சக்தியா லாய விஷயங்கள் புலப்படலால் அது அவ் வாங்கில நூல்களின் மொழிபெயர்ப்பு அன்று என்பதை ஒவ்வொருவரும் உணரலாகும்.

நம்மவர் சிலரில் ஒரு கெட்ட பழக்கம் நடையாடுகின்றது. ஒரு நூலில் உள்ள குற்றங்[illegible] சிலவே யாயினும் உண்மை யுறுதிகள் பலவே யாயினும் குற்றங்களை நாடி குணங்களை மறந்து குறை கூறுவது அன்னோர்களுக்கு பாயசம் பருகுவதுபோல தோன்றுகிறது. இவ்வாறிலாது இந்நூலின்கண் உள்ள குற்றங்களைப் பாராட்டாது குணங்களை நாடியாயினும், குற்றங்களையும் குணங்களையும் சமநோக்காய் ஆங்கில பரிசோதகர் போன்று கவனித்தாயினும் இந்நூலாசிரியர்களை பண்டித ரத்னங்கள் கனப்படுத்துவார்கள் என்று வினயமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிப்பாசிரியர் ஸ்ரீமான்,
பட்டு - விஜயரத்னப்பிள்ளை யவர்கள்மீது
திருநின்றவூர் - பக்தவத்ஸலம் பிள்ளை, பி. ஏ., அவர்கள் இயற்றிய
புகழ்ச்சிப் பாடல்கள்.

பாயிரநான் மறைப்பொருளும் பகர்புராணத் துணிபொருளும்
    பற்பலவாய் மல்கக் கண்டும்
ஆயிரமா முடியோனு மளப்பரிய பெருங்கீர்த்தி
    யையன்றன் னலகில் காதை
மாயிருசெந் தமிழ்ஞால மறந்திருத்த னனிமிகவும்
    வசையுடைத்தா மென்று தேர்ந்து
ஞாயிறெனப் பதிப்பித்தா னல்லதனை நல்லவர்க்குள்
    நாயகமாய் விளங்க நின்றான்.

வேறு.

இந்தப்பா ரெங்கணுமே யியம்ப வொண்ணா வானந்த
    மீளை வாகை சூடிவெகு நேயங் கொண்ட சிந்தையினான்
சந்தப்பா தங்கிடவே சமைந்த நன்னூ லாமென்று
    தாக மேக யோகமிது தேவன் னன்பு வந்ததுதான்
மந்தக்கோ ளெங்குமிலா தொதுங்கு மென்றே மாதங்க
    வாசி யாக வேகமொடு தானந் தந்த கண்ணியவான்
புந்திக்கே முந்துரிமை புரிந்து நன்றா வாமென்று
    பூமி யோர சைதனிய நாமஞ் சொன்ன வண்மையினான்.

வேறு.

வெங்கடா சலன்புதல்வன் விஜய ரத்தினனே
நங்கட்குச் சைதன்ய னல்குமே லவன்பெருமை
திங்களைப் பழிக்காதோ செப்புவாய் தோழா.

மனோன்மணி மைந்தன் மாவிஜய ரத்தினனே
தினம்போற்றத் தேவ னளிக்குமே லவன்பெருமை
கனம்மிக்க தாகாதோ கழறுவாய் தோழா.

மாசினால் வர்க்கிளைய மாவிஜய ரத்தினனே
ஈசன்றன் சரித மீயுமே லவன்பெருமை
வாசவனு மெச்சானோ வழுத்துவாய் தோழா.

பொருளடக்கம்.

தமிழ்ப்பாயிரம்—T. பக்தவத்ஸலம், பி. ஏ. அவர்கள் இயற்றியது .—

அத்தியாயம். பக்கம்.

1, 2. இயற்கை விநோதங்களும் தேவசித்தமும் 1,19
3. சுற்றுச் சுழற்சியும் சந்த்ர வெளிச்சமும் 41
4. மாணிக்கத் தோற்றமும் ஜோதி ப்ரவாஹமும் ... 77
5. புதுமலரும் வெகு மணமும் 89
கலியுகத்தில் மோக்ஷ சாம்பிராஜ்யம் "அம்ருத பஜார் பத்திரிகா" ஜூலைமீ 10௳, 1902௵ பிரசுரத்தினின்றும் தமிழ் மொழி பெயர்ப்பு (ஸ்வாமி அபயானந்தர் ஆங்கில உபந்யாசம்.) 94
சென்னை "மெயில்" எக்ஸ்ட்ராக்ட்டின் தமிழ்மொழிபெயர்ப்பு. 102

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்.

1. ஸ்வாமிகளினிளம்பருவம் 1
2. விஸ்வரூபர் விருத்தாந்தம்—சைதன்யர் உபநயனவிசேஷம்—ஜகந்நாத மிஸ்ரர் தேகவியோகம் 51
3. ஸ்வாமிகள் முதல்விவாகம்—கேசவ கர்வ பங்கம்—இரண்டாவது விவாகம் 22
4. ஸ்ரீகயா க்ஷேத்ர தர்ஸன பலன் 39
5. அத்வைதாசார்யரைக் காண்டல்-ஸ்வாமிகள் பக்திப் பரவசம்-ஸ்வாமிகள் ஜோதித் தோற்றம் 49
6. நித்யானந்தர் வருகை-ஹரிதாசர் பக்திமேன்மை ... 70
7. மஹாப்ரகாஸம்-ஸ்ரீராமதரிசனம்—முகுந்தர் வைபவம் ... 83
8. ஜகை மாதை 98
9. காஜி கர்வபங்கம் 127
10. செத்த குழந்தை பேசுதல் 141
11. ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி லீலை—ஓர் நவீனநாடகம் ... 145
12. கிருஷ்ணலீலை நாடக முடிவு 161
13. சாந்திபுர விஜயம் 173

அத்தியாயம். பக்கம்.
14. ஸ்வாமிகள் விரகம் 185
15. துறவியாதற்கு அனுமதிபெறுதல் 197
16. துறவியாதற்கு அனுமதி பெறுதல்—மகாவிஷ்ணு ப்ரசன்னம் 214
17. துறவியாதல் 227
18. ஸ்வாமிகள் சாந்திபுரம் போதல்—நதியா நகரத்தார் ஸ்வாமியைச் சேவித்தல் 245
19. ஜகந்நாத் விஜயம்—வாசுதேவ சார்வபௌமர் பக்தியடைதல் 270
20. தக்ஷிண ப்ரதேச விஜயம் 288
21. பிரதாபருத்ரர் இரக்ஷகம்—பிரகாசானந்த சரஸ்வதி யாட்கொள்ளப் படல்—நதியா விஜயம்—ஸ்வாமிகள் அந்தர்த்தானமாதல் 301
22. சைதன்ய ஸ்வாமிகள் மதக்கொள்கைகளும் நற்போதனைகளும் 314
முக்கியபிழை திருத்தம் 319

T. பக்தவத்ஸலம், பி. ஏ. இந்நூலிற் கென்று ஆங்காங்கே யியற்றி யமைத்த பாக்களின் குறிப்பு.

பக்கம்.	பாவின் முதற்குறிப்பு.
6	தேவரும்
41	ஒப்பனை
57	கருணை
84	ஐயனே
93	வான்முகில்
148	மின்னென
,,	பொறிபுலன்
163	சத்தியமே
,,	அழகில்
211	ஜயகோ
,,	ஆ ஆ
221	சங்குடன்
223	மன்
,,	அருள்

பாயிரம்.

(T. பக்தவத்ஸலம், பி. ஏ., இயற்றியது.)

முதலாவது அத்தியாயம்.

இயற்கை விநோதங்களும் தேவ சித்தமும்.

I.

உலகத்தில் மனிதரைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை; மனிதரிடம் அவர்களுடைய ஆத்தும விலக்ஷணத்திற்கு அதிகப்பட்டது வேறொன்று மில்லையென்று ஆங்கிலேயப் புலவரொருவர் கூறியிருக்கிறார். ஒரு சடபதார்த்தம் எவ்வளவுதான் வன்மை யுடையதா யிருந்த போதிலும், அதற்குத் தன்னைப் பற்றி யாவது தனக்குப் பிறிதாகிய வேறெதனைப் பற்றி யாவது அறிந்து கொள்ளும் சக்தி கிடையா தென்பதை நாம் அறிந்தே யிருக்கிறோம். ஆயின், மனிதர்க்கு இவ்வித சக்தி யேற்பட் டிருக்கிற தென்பதற்கு நம் அனுபவத்தை விட வேறு சாக்ஷி வேண்டுவதில்லை. இந்த வன்மையோ, உலகப் பரிணமிப்புக் கிரமத்தில் மிருகங்களில் படிப்படியாய் மேன்மேலும் விளங்கிக்கொண்டு வந்த போதிலும், மானிடர்பால் அதன் பூரணத் தோற்றம் நிகழ்கின்றது. இதனால், பல வேறு பதார்த்தங்களின் ஒற்றுமைக் குணத்தை நாடி அவைகளை ஒரு வகுப்பிற் குட்படுத்தவும், ஒரு பெரும் வகுப்பிற் குள்ளாகிய பல சிறுசிறு வகுப்புகளின் வித்தியாசங்களை நோக்கி அவ்வவைகளின் வரையறை யேற்படுத்தவும், ஒவ்வொரு வகுப்பிற்கும் பெயரிட்டு நினைவில் வைக்கவும், நியாயம் பேசவும், தர்க்கஞ் செய்யவும், இன்னும் இவைபோன்ற அறிவு பதிந்த அரும்பெருங் காரியங்களியற்றவும் நம்மா லாகின்றது. முன் கூறியபடி, மனோதர்ம மேன்மை மனிதரிடமே யல்லாமல் அனேக மிருகாதிக ளிடத்திலும் காணப்பட்ட போதிலும், மனிதரிடம் தோன்றுகிற அதன் பூரண வொளிவு மிருகாதிகளிடத்தில் விளங்குகிற தில்லை. மனிதருடைய புத்தி கோசரத்துக்கும் பிற ஜீவராசிகளிடம் காணப்படும் அறிவிற்கும் பர்வத பரமாணு வொப்புதான் நேருகின்றது. இச் சிற்றறிவு தானும் புல் பூண்டு கல் மண் முதலியவைகளிடம் காணப்படவில்லை. உதயகிரியி னின்றும் புறப்பட்டுக் குடகடல் முழுகத் தினம் யாத்திரை செய்வதாய்த் தோன்றும் சூரிய னாயினுஞ் சரி, அவன் வெப்பந் தணிக்கக் கருணையங் கடலென வொளிர்ந்து தன் புகழைக் காட்டத் தாரகைக் கணங்கள் சுற்றிலும் வந்தனை செய்து ஜய ஜயவெனக் கட்டியங் கூற வெகு சரச சல்லாப கம்பீரத்துடன் பவனி வருஞ் சந்திர னாயினுஞ் சரி, ஒருபோது சகத்தைத் தந்து மற்றொரு வேளை மரத்தையும்

மானிடரையும் ஒன்றாய் வீழ்த்தித் தள்ளுங் காற்றாயினுஞ் சரி, கடலாயினுஞ் சரி, ஆன்ம லாபம் பெறாத வேறெந்த வஸ்து வாயினுஞ் சரி, அதிக வன்மை யுளதாயினும் வன்மை யிலதாயினும், ஒன்றைப் பற்றி ஒரு நிமிடமாயினுஞ் சிந்தனை செய்யக் கூடியதோ? தான் இன்ன தென்றும் தனக்கெதிரில் அல்லது பக்கத்தில் இன்ன துளதென்றும் தான் செய்வது இன்னதென்றும் அறிந்துகொள்ளும் ஆற்ற லுடையதோ?—நாம் கூறவேண்டுவதில்லை. அதி சித்திர விசித்திர அற்புத அமைதி யோங்கி, அகோர பயங்கர மிலேச்ச வன்மை தாங்கி நடைபெறும் உலகக் கணக்க ளாகிற யந்திரச் சுழலிற் சிக்குண்ட இப் பூமியின் கண் வசிக்கும் நாம் ஒவ்வொரு உஸ்வாஸ நிஸ்வாஸ காலத்திற்குள் எவ்வளவு அபாயங்களுக் குட்படுகிறோம்?—ஒரு சிறிய மரமாயினும் முறிந்து மேல் வீழ்ந்தால் நம்மால் தாங்க முடியுமா? காற்று சிறிது வேகமாய் வீசினும் காதவழி நம்மை யடித்துப் போகாதா? நீராலெத்தனை துன்பம், நெருப்பா லெத்தனை வருத்தம்! இவை யெல்லா மிவ்வாறாயினும், சடப்பொருள் இயற்கை வன்மை முன் மனிதர் பலம் மாண்டொழியினும், இவர்களிடம் மிக அருமையானதோர் பொருளிருக்கின்றது. அதாவது இவர்களது உன்னத ஆத்துமலக்ஷணமே. இதற் கின்றி யமையாத மனத் தோற்றங்களால், வன்மை மாத்திரமே பெற்ற சடப் பொருள்களினியக்கங்களை நன்கறியவும், அறிந்து கூடுமானவற்றைத் தம் விருப்பங்கட்கிசைய மாற்றவும், தத்துவ விஷயங்களை யுன்னி யுன்னி மேம்பா டடையவும் வேறு இதுபோல்வனவற்றைச் செய்யவும் நேரிடுகின்றது. இதனால் மனிதர் தேகமானது சடப் பொரு ளாயினும் அவர்களிடம் தங்கியுள்ள ஆன்மா அதிக விலக்ஷண மென்பது சொல்லாமலே யமைகிற தல்லவா?

II.

நம் 'காடோடி' வழக்கங்களை விட்டு, சிறிதுநேரம் இவ்வுலகம் யாதென்றும், இது இயற்கையாய் இவ்வகை நடை பெறுகின்றதோ அன்றி இதற்கெல்லாம் காரண பூதனாய் சர்வாந்தர்யாமியாய் பரஞ்சுட ரொருவ னிருக்கின்றனனோ என்றும் முதலில் சற்று நிதானிப்போம். இவ்வாறு சொல்வதனால், இங்கு யாம் யாதோ தத்துவ சாஸ்திர மெழுதப்புகுவதாய் நம் நண்பர்கள் எமாறா திருக்கக்கடவர். இவ்விடம் தத்துவசாஸ்திர ரீதியாய் முழுமையும் எழுத நமக்கு அவகாசமு மில்லை, போதிய இடமுங் கிடையாது. எழுதுவதற்கு வேண்டிய சக்தி யுளதோ என்பது முக்கியமான வேறொரு கேள்வி. ஆயின் எடுத்த காரியத்தை யினிது முடித்தற் பொருட்டு, ஆஸ்திக வாதம் யுக்தி யநுபவங்களுக் கிசைந்ததோ, அன்றி நாஸ்திக வாதம் அத்தகைத்தோ என்று முன்னர் பேசிப் பின் வேறு விஷயங்களுக்கு விரைந்து செல்வாம்.

ஒரு நாள் பகல் இரவு காலத்திலே நிகழும் தோற்றங்களையே உற்று நோக்கின் அவைகள் எவ்வளவு ஆச்சர்யகரமாகவும் ஒழுங்காகவும் விளங்குகின்றன. சுருங்கச் சொல்லுமளவில், கடவு ளிருக்கிறா ரென்று அனுமானித்தற்கு அவையே போதிய சான்றாகு மென்பது எமது அபிப்பிராயம்.

* * *

நாம் வசிக்கிற உலகத்தை கற்பனா சக்தியால் ஓர் பெரும் வீடெனப் பாவிக்க லாகும். ஹா! ஹா!! என்ன வினோதம்! நம்வீட்டிற்கு மேற்கூரையென விளங்கும் நீலவானம் என்ன அழகாயிருக்கின்றது! இயற்கை ஸ்வரூபத்தி லிணங்கிய நீலநிறத்தின் மேன்மைக்கும், நாம் சுவர்களிலும், கதவுகளிலும், சித்திரங்களிலும் பூசும் நீல நிறத்திற்கும் என்ன வித்தியாசம்! இவ்வகை நீல வர்ணத்தால் ஆகாயத்திற்கு உண்டாகிய மனோன்னத நிலையை விளக்கஞ் செய்வதற்கே போலும், எம் அண்ணலாகிய கண்ணபிரானை நீனிறக் கடவு ளாக்கினர்! இப்பொழுது விடியற்காலமாய் விட்டது! கோழி கூவுகின்றது! ஆழியின் ஆரவாரம் அடங்கி வருகின்றது! காகம் கத்துகின்றது! மேகம் வெளுக்கின்றது! அர்த்த ராத்திரிப் போது மெத்த வேகமாய் வெளி சென்ற கள்வர் தத்தம் உறைவிடம் நோக்கிச் செல்லுகிறார்கள்! அந்தந்தோ! இதனினுங் கொடிது, கொடிது! பதின்மடங்கு கொடிதே! புதுமணம் புரிந்து புலவியி லாழ்ந்த மது மலர்த் தாரினோர் கலவி நீங்கி ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மட்டிலாத் துயர் தாங்கி, ஏக்கம் வீங்கிய நோக்கம் காட்டிப் பள்ளி விட் டெழுந்தனர்! ரத்தின விளக்குகள் பூண்ட வானத்தைக் குத்திரமாய்த் திருடிச் செல்ல, நள் ளிருளாய் வந்த கள்வன் அருகில் வரும் ஒள்ளிய தினகரனைக் கண்டு மெள்ள நழுவிச் செல்கிறான்! கோயிலில் மேளமும், குருக்கள் ஸ்நானமும், வாயில்கள் திறப்பும், வழி நடை யோசையும் எங்கெங்கும் வயங்கு கின்றன! ஆதவன் உதையம் அணுகினதால், மாதவர் எழுக்கையும், மாளிகை விளக் கணைத்தலும் போன்றே வான் விளக் காகும் மீனினம் மறைந்து கொண்டேவர, குணகடன் முகட்டில் இப்போது சிறிது சிறிதாய் ஒருவித செந்நிறந் தோன்று கின்றது! இன்னுஞ் சிறிது போதாயிற்று! நக்ஷத்திரங்கள் அனேகம் மறைந்து விட்டன! தானம் வாங்குவோரில் மானங் கெட்டோர் ஈனமாய் நின்று பின்னும் பின்னும் பிடிவாதம் செய்வது போலவே, பெரிய நக்ஷத்திரங்கள் சில இன்னும் பிடிவாதமாய் நின்று கொண் டிருக்கின்றன. பின்னுஞ் சிறிது நேரஞ் சென்றது. வெய்யவன் கிரண மாகிற ஸைந்யத்தால் தள்ளப் பட்டு அவைகளும் ஓடிப் போகின்றன. இதோ, வான முகட்டில் சூரிய னெழுந்தனன்! முன்கோபக் காரருக்கு எதிர்த்ததும் முகம் சிவந்து கண் சிவந்து தடிதடிக்க நேர்வதுபோல், புறப்படும் போதே அன்னவன் கார

மும் வீரமும் கோரமும், அப்பப்பா, எம்மால் செப்பத் தரமில்லை! இக் கொடுமை தாங்காம லன்றோ கவிச் சக்கர வர்த்தியா ராகிய கம்பநாடரும், பரமசிவன் நெற்றியைக் கிழித்துக் கோபக்கனல் வெளிப்பட்டா லென சூரியன் புறப்பட்டனன் என்று வருணித்தார்! இக் கோபக் குருவைப் பழமெனப் பிடிக்கப் பாய்ந்த ஆஞ்சனேயர் ஒருவரைத் தவிர உலகிலுள்ள ஒவ்வொருவரும் இக் கொடுமை தாங்க லாற்றாது வருந்துகின்றனர். தாமரை மலர்ந்தது; தொழிலாளிகள் தம் வேலைக்குச் செல்லுகின்றனர்; சொற்ப விஷயத்தில் அற்ப சந்தோஷப் பட்டுத் தலைகால் தெரியாது தட்டுக் கெட்டுத் தடுமாறிப் பின்ன ரடங்கும் முட்டாள்கள் போல், இரவெல்லாம் குமுறித்த கடல், பொழுது விடிந்ததும் முழுதும் சாந்தமானது! சூரியன் சென்று கொண்டே யிருக்கின்றான்! மணியோ, ஏழானது; எட்டு, ஒன்பது, பத்துப் பன்னிரண்டு மாகிறது! அவன் வேகமோ சிறிதும் போகவில்லை! ஒரே நடையாய்ச் சென்று கொண்டிருப்போனுக்கு ஓய்வேது ஒழிவேது! இந்த வெய்யிலிலும், வீதிவீதியாய்ச் சந்துசந்தாய்த் திரிந்து இரந்துண்ணும் துறவிகளாகும் அறவோரும் காணப் படுகின்றனர். வெய்யிற் சூடு தாங்காது மெய்புழுங்கி, எத்தனைபேர் மெத்த வருந்து கின்றனர்! செல்வத்தால் இயற்கை வன்மையை வெல்லத் துணிவார், சோலைகளாலும் சாலைகளாலும், நல்ல தடங்களாலும் பல்லவ நிழலாலும், பூவாலமைத்த பாயலாலும், தாமரையாற் செய்த சாமரை யாலும், வெட்டி வேராலும் பனிநீராலும் படை யெடுக்கினும் சூரியன் கோபம் தணிகிறதில்லை! இப்படியே பொழுதும் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சாய்கிறது! குடகடல் குளிப்பான் போன்று ஆதவன் அமிழ்கின்றான், அமிழ்ந்தனன்! எசமானன் எதிரில் அசமந்தம் செய்யாது வேலையி லிருந்த கூலியாளன், எசமானன் சென்றதும் அயர்ந்து படுப்பதுபோல், சூரியன் மறைந்ததும் தாமரையும் குவிந்து விட்டது! இதற்குப் பதிலாய் வேலை பார்க்க வருவது போல், நீலோற்பலம் மலர்ந்து விட்டது! வாவல், கூகை, வல்லிய முதலிய பறவைகள் திரிதரத் தொடங்குகின்றன. ஆகாய முழுவதும் வைரவிளக் கேற்றினாலென நக்ஷத்திரங்கள் பிரகாசிக் கின்றன! நள்ளிர வாயிற்று! எங்கும் நிச்சப்தமே குடிகொண்டிருக்கிறது! காயாம்பூ மலர்ந்து நொச்சிப்பூ வுதிர்ந்து, எங்கும் கடவுளின் பெருமையே விளங்கு கின்றது! மறுபடியும் விடியற்காலம் நேர்கின்றது.

இப்படியே நம்மைச்சுற்றி நிகழுந் தோற்றம் ஒவ்வொன் றினையும் ஆலோசித்துப் பார்க்கின், அவைகளெல்லாம் ஒருவித ஏற்பாட்டுக்குட் படிந்து முறை பிறழாது நடப்பவையா யிருக்கின்றன. ஒருநாளுக்குள் நடக்கும் முக்கியமான விஷயங்களை மாத்திரம் நாம் இப்பொழுது ஆலோசித்தோம். அதிலும், கற்பனா சக்தியால் புலவர் வருணிக்கும் விதமாய்ப்

பேசினோமே யன்றி, சாஸ்திர விற்பத்தி (Scientific) முறையாய்ப் பேசினோ யில்லை. ஆயினும் இவ்வித ஒழுங்காலும் அமைதியாலும் நம்மனதில் என்னதோன்றுகிறது? இவ்வளவு வினோத மமைந்த காரியங்களை யியற்றிய கர்த்தர் ஒருவ ருள ரென்று தோன்றுகிறதா? அன்றி, அணுக் கூட்டங்களே தம்முள் ஆலோசனை செய்து கொண்டு இவ்வாறு உலகம் உண்டாக்கிக் கொண்டதாய்த் தோன்றுகிறதா? சூரிய சந்திராதி கிரஹங்களை யாங்காங்கே நிறுத்தி நடப்பன வற்றை நடப்பித்தும், நிற்பன வற்றை நிற்பித்தும், கரையைக் கடந்து வர வொட்டாது கடலைத் தடுத்தும், பூமியைப் பிளந்து போக வொட்டாது அதனைக் காத்தும், காட்டுச் செடிக்கு நீர்வார்த்தும் “கல்லினுட் டேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் மெல்ல வமுதளி”த்தும் விளங்குகிற சக்தி சர்வஞ்ஞத்துவ முள்ளதா? அன்றி, பிரகிருதி சம்பந்தமான வன்மையா?—“அவ னன்றி யோரணுவு மசையா” தென்பர் சிலர். “கண்டதே காட்சி கொண்டதே கோலம்; நம் ஐம்புலன் வழிப்படுவனதாம் உண்மை; இதற்குமேல் யாதோ, எங்கேயோ, எப்படியோ ஒரு வஸ்து இருக்கிறதாம்! அது பரவஸ்துவாம்! அது வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத வன்மையுடையதாம்! ஆணு மன்றும், பெண்ணு மன்றும், அலியு மன்றும், அதற்குத் தாயுமில்லையாம், தந்தையு மில்லையாம், ஊரு மில்லையாம், பேரு மில்லையாம்! இஃது சுத்த சன்னமான பொருளே யன்றி வேறென்ன! இந்த பூஜ்யம் செங்கோல் செலுத்துகிறதாம், அதன் கட்டளை தவிர்ந்தால் கடுமையுடன் தண்டிக்குமாம்! அது போனவழி கடந்தால், மோக்ஷம் தந்திடுமாம்! * * * இதெல்லாம் பைத்தியக் காரத் தன மென்பதில் யாது தடை? எந்த தத்துவசாஸ்திரி ‘பலூன்’ (Balloon) என்கிற ஆகாய வாகனமேறி, எந்த நாளில் எந்த நக்ஷத்திரத்தில் எந்த நாழிகை விநாடியில், தான் சொல்லுகிற ‘ஸைபர்’ (Cipher) ஆகிய பரம்பொருளைக் கண்டு முகமன் பேசி, பாமாலை பாடி, ஆசிர்வாதம் பெற்று, ஆங்கிருந்தும் இறங்கி நம்மைக் கண்டு தாம் அறிந்த உண்மையை உபந்யசித்தார், சொல்லுங்கள்! வேலையற்ற ராமஸ்வாமிகள் எத்தனையோ பேர், தாம் கண்ட கனவையே நனவெனக் கொண்டு மருண்டு தாம் நினைத்த வழுக்களை யெல்லாம் காகிதப் பொத்தலில் வரைந்து வைத்தார்கள்! தான் கெட்டதன்றிச் சந்திர புஷ்கரணியையுஞ் சேர்த்துக் கெடுத்தான் என்பதுபோல், இம் மூளையற்ற மூடர்கள் நம்மைத் தாம் அறியாமையில் அழுத்திக் கொண்டது மன்றி, தம் போன்ற பேதை சனங்க ளெத்தனை பேரைக் கெடுத்து வருகிறார்கள். ஐயோ! பாவம், பாவம்!! பரிதாபம்! கனவில் கண்ட சொத்து வருவதற்குக் கையிலுள்ள பொருளைச் செலவழிப்பது போல், எத்தனை அறியாப் பையல்கள் உள்ள இகசுகத்தையு மிழந்து, காலைக்கு வருமென்று கனவு

காணும் பரசுகமாகிற மனப்பால் குடித்து ஏங்கி யேங்கி வருந்தி வருந்தி ஐம்பது வருடம் பொறுத்துப் போகிற பிராணனையும் முன்னடியே தொலைத்து விடுகிறார்கள்!" என்று பலவாறு நிந்திப்பார்கள். "பாவம் எத்தனை பலம்?" என்பர் சிலர்; "புண்ணியம் எத்தனை வீசை? மோக்ஷ லோகத்தில் இவைகளை யெல்லாம் நிறுத்துக் கொடுப்பவர் யாவர்?" என்பர் வேறு சிலர். இங்கிலீஷ் படிக்காத பெரியோர்கள் எப்படிக் குருட்டு வழிகளில் கட்டுண்டு, நியாயமாகவே அவ்வழியினின்றும் சிறிது திரும்புவோரையும் கடிந்து மேல் வீழ்கிறார்களோ, அப்படியே சிறிது இங்கிலீஷ் படிக்கக் கற்றுக் கொண்டவர்களில் அனேகரும், "ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான் சாகக் கடவன்" என்கிறபடி, தம் அறியாமையாலும், அகந்தையாலும், தம் ஆத்தும உன்னதத்தைப் போக்கிக் கொண்டு வாளா மடிந்து போகிறார்கள்! நிரீச்சுவர வாதிகளில் சிலர் உண்மையிலேயே கௌரதா வழிகளில் நடந்துவருகிறாரென்று நமக்குத் தெரிந்திருப்பினும், அது நமக்குப் பெருமகிழ்வு விளைத்த போதினும், குறிப்பிலாது அம்பெய்தல் போலவும், அஸ்திவாரபல மில்லாத மாளிகை போலவும் அஃது பயனற்றதாய் முடிகிற தென்பது சொல்லாமே புலப்படுகின்றது.

III.

இப்பொழுது 'ஸைன்ஸ்' (Science) என்னும் விஞ்ஞான கலா ரீதியாய் புலன் வழிப்பட்ட அண்டாண்ட சராசரங்களின் இயற்கையையும், இயக்கங்களையும் பரியாலோசித்து, அவைகள் தாமே யுண்டாகத் தக்கனவா? அன்றி அவைகள் உண்டாவதற்கு சித்ஸ்வரூபியான ஒருவன் இன்றி யமையாதவனா? என்பதை விசாரிப்போம்.

ஓர் நாளிரவுப்போது, நாம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால் புள்ளிக் குறியிட்டது போலும், இரத்தினங்கள் ஜொலிப்பது போன்றும் தகதக வென்று மின்னுகிற நக்ஷத்திரங்கள் யாவை? 'டெலஸ்கோப்' (Telescope) என்கிற தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியாலும் அதிக சமத்கார கணித சாஸ்திர நிரூபணங்களாலும், இயற்கையாய்த் தமக்கு உண்டாயிருக்கும் புத்தி கூர்மையாலும் அறிவு முதிர்ச்சியாலும்; வான சாஸ்திரிகள் அவைகளும் பலவேறு அண்டங்க ளென்றும், நாம் காணுகிற சூரிய சந்திரர்களைப் போலவே, இன்னும் பலவேறு சூரிய மண்டலங்களும் இருக்கின்றனவென்றும் ஸ்தாபித்திருக்கிறார்கள். நாம் இருக்கிற பூலோகம் உருண்டை வடிவினதா? தட்டையான ரூப முடையதா? என்னும் கேள்விக்கு அது உருண்டை வடிவினதே யென்றும், அதற்கு நியாயமாக வெகு தூரத்திலிருந்து வருகிற ஒரு கப்பலின் கொடிச் சிகரம் கரையி லிருந்து நோக்குவோனுக்கு முதலில் தோன்றி, அருகில் வர வர முழுமையும் தோன்றுவதை

யும், ஒரு திசையையே நோக்கி நேராகச் செல்லும் கப்பல் யாத்திரைக்காரன் மறுபடியும் தான் புறப்பட்ட இடத்திலேயே வந்து சேருகிறான் என்பதையும் காட்டுகிறார்கள். அனேக நாள் வரைக்கும், பூமி தட்டையானதென்று நினைத்துப் பூமி நின்ற நிலையி லிருப்பதால் அதற்கு 'நிலம்' எனப் பேர் வைத்தும் நடந்தது இப்போது சுத்தப் பிசகானதென்று ஏற்பட்டு விட்டது. கிரேக்கு (Greece) தேயத்தில் இந்த பூமியைத் தாங்கப் பெரிய தூண்கள் நிறுத்தியுள்ளன வென்று ஒருகாலத்தில் நினைத்திருந்தார்களாம்! இவ்விதம் தாங்குவதாய்க் கூறப்பட்ட வஸ்துக்களைத் தாங்குவன எவையோ புலப்பட வில்லை!

பூமியானது ஒரு பந்து வடிவினதா யிருக்கிற தென்றும், அது நின்ற நிலையி லிராமல் சுற்றிக்கொண்டே யிருக்கிற தென்றும், சாஸ்திர விற்பன்னர்கள் (Scientists) நிச்சயம் செய்திருக்கிறார்கள். இப்பூமி சுற்றிவருவதில் இரண்டு வகை யுள்ளன. ஏககாலத்திலேயே பூமி இரண்டு விதமாய்ச் சுற்றி வருகின்றன. மாறிய வேகமாய்ச் சென்று கொண்டே ஒருவருஷத்தில் சூரியனை வலம் வருவதொன்றும், தினம் பகல் இரவு என்னும் பிரிவினை ஏற்படும் வண்ணம், தன் மையத்தினின்றே சுழல்வது மற்றொன்று மாகிய இரண்டு நடை பூமிக் கேற்பட்டிருக்கிறது. பின் சொன்ன காரணத்தால் பூமி சூரியனுக் கெதிர்ப்படும் போது பகலும் மறைந்திருக்கும் போது இரவும் நிகழ்கின்றது!

ஹா! ஹா! என்ன விநோதம்! ஒருமலை யானது அந்தரத்தில் ஆதாரவற்று நின்று கொண்டிருந்தால் நமக்கு எவ்வளவு ஆச்சரியத்தை விளைவிக்கும்! அப்படி யில்லாமல், கயிறில்லாமல் கறங்கு சுழல்வது போல், அந்த மலையே மேற்சொன்ன வெட்ட வெளியில் தாங்குவா ரிலாமலும் சுற்றுவா ரிலாமலும் தன் இயற்கை வன்மையாலேயே கரகரவெனச் சுழன்று கொண்டிருப்பின், முன் சொன்னதினும் பதினாயிர மடங்கு ஆச்சரியத்தை யன்றோ உண்டு பண்ணும்! நம் கண்ணெதிரில் காரண மொன்றும் புலப்படா விடினும், இவ்வளவு அற்புதமான காரியத்தை யியற்றிய புத்திமானும் சக்திமானும் யாவனோ? கண்ணுடன் கருத்தும் எமக்குத் தந்து, கண்ணுக்கு வேடிக்கையும் கருத்திற்கு உணவும் தந்த புண்ணிய புருடன் யாவனோ? திரையின் பின்னர் மறைந்து நம்மை யெல்லாம் பொம்மைகளென ஆட்டுவிக்கும் சூத்திரதாரி யாவனோ? அவன் மாட்சியும் காட்சியும், வன்மையும் தன்மையும் எம்மால் செப்பரிதே! என்றன்றோ பல்வகை ஆச்சரியக் கடலு ளழுந்தி, எண்ண மெல்லாம் ஒருபக்கம் நண்ணா அடியற்ற மரம்போல் சாய்ந்து அன்னவன் பெருமைகளையே நினைந்து நினைந்து நெக்குநெக் குருகி விழுந்து கிடப்போம். இஃதே யிவ்வகை யாக,

"ஸைன்ஸ்கள்" (Sciences) கண்டு பிடித்த முடிவுகளைச் சிறிது சிந்திப்போமாயின், இப்போது நாம் நினைத்த அற்புதத் தோற்றத்தை விட கோடாகோடி அதிகமாய் நம் மனத்தில் ஆனந்தம் கிளர்ந்து, அஃதேயோர் பெரிய தாம்பாய் நம் மனதை வலிவுறப் பிணித்து வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத வன்மையோன் பால் இழுத்து விடும் என்பதில்யாது தடை!

சூரியன் நெருப்புக் கடவுளென நடுவில் நிலைத்திருக்கச் சுற்றிலும் கிரகங்கள் (Planets) பிரதக்ஷிணம் வருவ போன்று சுழன்று செல்லும் உன்னதத் தோற்றம் யாவரால் வருணிக்கத் தக்கது! நாம் வசிக்கும் இப் பூமியும் தன் மலைகளையும், கடல்களையும், வனங்களையுஞ் சுமந்துகொண்டு சூரிய பகவானைச் சுற்றிவரும் ஒரு கிரகம் என்று துணியப்பட்டிருக்கிறது. இப்படியே செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கிரகங்களும், ஒரு நியதிப்படி, சூரியனை வலம் வருவனவாம். ஒருமலை அந்தரத்தில் சுழன்றால் நமக்கு உண்டாகும் ஆச்சரியம் அளவிறந்ததாக, அந்த மலையை அணுவில் அணுவாக ஒப்பு நோக்கிக் கூற வேண்டுவதாய் விளங்கும் மகத்தான உலகங்கள், தத்தம் நிலை தவறாது, வாக்காற் சொல்ல முடியாமலும், மனதால் நினைக்க முடியாமலும், வரம்பற்ற மஹாகாசத் (Infinite Space) தில் மிதந்து பறந்து செல்லும் விநோதக் காட்சியின் அருமையைச் சொல்ல நம்மால் முடியுமா! ஒருசிறிய வண்டியின் சக்கரத்தால் உண்டாகும் சப்தமும், நம் காதிற்குக் கோரமலும், ஜட்கா வண்டியில் நம் உடம்பு ஆடி அசைந்து அடிபடுவதில் எள்ளு மூக்கத்தனையும் காயம் படாமலும், வெகு உன்னதமாய் வெகு ரமணீயமாய் ஒரு மணிநேரத்திற்கு சுமார் எழுபத்தையாயிரம் மைல்கள் செல்லத் தக்க வேகத்துடன் நாம் இருக்கும் பூமியாகிற கிரகம் சூரியனைச் சுற்றி வருவது என்ன அதிசயம்! இதனினும் வேக வாம்பரி பூட்டிய வேறு சில கிரகங்களும், ஒவ்வொரு கிரகத்தின் உபக்கிரகங்களும் (Satellites), தங்கள் தங்கள் தொழிலைச் சந்தடி செய்யாம லியற்றி, தமக்கு உருவைக் கொடுத்து, எழிலைத் தந்து இலக்கமும் வன்மையு மீந்த உத்தமத் தேவனை, உயர்வற வுயர் நல முடையவனை, எவ்விடத்திலும் எப்பொருளிலும் கரந்து நின்று பரந்துளானை, ஒளிய மலிந்தும் அன்பைப் பெருக்கியும், ஞவரா தனுக்கும் நின்மலன் தன்னை, அற்புதப் பெரியனை, ஆதியந்த சோதியை,—சூரிய மண்டலத்திற்குள்ளாகிய கிரகங்களும், வேறு கணக்கில்லாத அண்டாண்ட சராசரங்களும், நாம் கண்டனவும், கேட்டனவும், அனுமானித்தனவும், உத்தேசித்தனவுமாகிய எல்லா உலகங்களும், கிரகங்களும், சந்திராதித்தர்களும், வந்தித்து வழிபட்டு, சிந்தித்துச் சிரமம் விட்டு, மகத்துவ மோங்கிய அமரிக்கை யரசிருப்ப, புகழ்ப்பதம் பாடி அருள்திறங் கொண்டாடி ஓயாக் கீதம் விளைத்து ஆயாசமென்பதின்றி உலாவி வருகின்றனவே:—இவ்வுண்மையைக் கண்ட யாவரே கடவுளிலை யென்பர்! "கண்டதே காட்சி கொண்டதே கோல" மென்பர்! காதலாமலகமெனக் காண்பதைக் கன வென்பர்! அறிகிலேம்.

இவ்வகை பலவகைப்பட்ட அண்டங்களெல்லாவற்றையும் அதனதன் இருப்பிடத்தில் நிறுத்தி நடத்தும் மாட்சிமையெத்தகைத்து? அவைகள் கணக்கில, தாம் நின்ற நிலையி லிராது எவ்வேளையும் வெகு உற்சாகத்துடன் ஓடிக்கொண்டிருப்பவை, கண்மூடித்தனமாய் ஒன்றுடன் ஒன்று முட்டிக் கொள்ளாது தடுப்பது யாது? எல்லாச் சட பதார்த்தங்களும் ஒன்றையொன்றிழுக்கும் கரிமம் அல்லது ஆகர்ஷண சக்தி (Gravitation) வாய்ந்தன வென்றும், வஸ்துவினுடைய ஆக்ருதி நோக்கி இந்த சக்தி வித்தியாசப்படு மென்றும், இதற்கிணங்க ஒரு கல்லைவிட பூமி எத்தனையோ மடங்கு பெரிதா யிருப்பதால் பூமி கல்லை யிழுத்துக் கொள்ளுகிற தென்றும், விசுவம் அல்லது பிரபஞ்ச (Universe) த்திலுள்ள பல அண்டங்கள் ஒன்றையொன்று அதனதன் வன்மைக் கேற்ப நாலு பக்கங்களி லிழுப்பதால், அவ்விழுத்தலுக் கிணங்க, அவ்வவ் வண்டங்கள் அவ்வவ் விடத்தி லிருக்கின்றன வென்றும், இவ்விஷயத்தை நன்கறியும் பொருட்டு சாதாரணமாய் யாதாயினுமொரு சிறிய வஸ்துவைப் பல பக்கங்களி லிழுப்ப, இழுக்கும் வன்மையையும் திசைகளையும் அனுசரித்து அவ் வஸ்து ஓரிட மடைதலை சோதனை செய்யலாமென்றும் 'ஸைன்ஸ்' கைவந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த ஆகர்ஷண சக்தி நம் கண்ணால் பார்க்கப்பட்டதா? காதால் கேட்கப்பட்டதா? வேறெந்தப் புலன்வழியாக வாயினும் நமக்குத் தெரிய வந்ததா? புலனறிவே பூரண அறிவெனப் பிராந்தி கொள்ளும் புத்திமான்களே! ஆலோசியுங்கள் "புலன்வழி வராதது, அறிவி லில்லை" என்றார் லாக் (Locke) என்னும் பிரபல தத்துவ சாஸ்திரியார். "ஆமாம்; ஆயின், அறிவில் இயற்கையாய்ப் படிந்த சக்தி நீங்கலாக, புலன்வழி வாராதது அறிவி லில்லை" யென்றார், லாக் (Locke) சாஸ்திரியாரை விட ஆழ்ந்த ஆலோசனை செய்த லீப்னிட்ஸ் (Liebnitz) என்னும் பெரும் புலவர். மேற்சொன்ன தோற்றங்களில் நாம் பார்ப்பதெல்லாங் கூடி, அவ்வவ் வண்டங்கள் அவ்வவைகளின் நெறி பிறழாது நிற்றலே யன்றி, ஆகர்ஷண சக்தியை

---

1. "There is nothing in the intellect which is not first in the senses"—Locke

2. "There is nothing in the intellect which is not first in the senses, except the intellect itself"—Leibnitz.

நாம் எங்கு காண்கிறோம்? 'கடவுள் சக்தியை நம்மவரில் யாவர் கண்டனர்? எல்லா உலகங்களும் நிலை பெறுவது ஆகர்ஷண சக்தியாலேயே' என்று பயனில் மொழி பகரும் பண்டிதர்களே! உமக்கும் ஆஸ்திகருக்கும் உள்ள வித்தியாசம் வெகு சிறிதே! ஒரு மூடசக்தி உலகங்களை யெல்லாம் நிலை நிறுத்துவ தென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்? இவ்வளவு அதிசய மாகவும், ஒழுங்காகவும், அழகாகவும் இயைந்த உலகக் கணங்கள் பேரறிவுடைய பெரியோன் ஒருவனுடைய சக்தியால் நிலை பெறுவன என்று ஆஸ்திகர்கள் கூறுகின்றனர். நீங்களும் கண்ணில் காணாத சக்தி யொன்றுள தென்கிறீர்கள்; அவர்களும் அவ்வாறே சொல்லுகின்றனர்: ஆயின் இயற்கை வனப்பையும், அதன் ஒழுங்குகளையும் கண்டு உள்ளுணரும் ஆற்றல் உமக்கிலது. அதிக சுரத்தால் பீடிக்கப் பட்டவனுக்கு சர்க்கரையைக் கொடுத்தாலும் எப்படிக் கசப்பாய்த் தோன்றுமோ, அப்படியே உங்களுக்கு வாய்ந்த உணர்வுக் குறைவால் உலகத்தில் நிறைந்த வனப்புகளைக் கண்டு அவைகள் ஈடுமெடுப்பு மிலாத பேரண்ணலின் கற்பனா சக்தியா லமைந்தன வென்று அறியக்கூட வில்லை. சித்திர மெழுதுவதில் மெத்தத் திறம் உண்டாகிய ரவிவர்மரின் படங்களை நோக்குங்கால், அவைகளின் அழகைக் கண்டு மகிழாமலும், அவ்வளவு சுந்தரம் காட்டிய விற்பன்னன் பாவிக சக்தி யென்ன மேன்மை யுடையது என்று களிக்காமலும் எத்தனைபேர் கண்மூடித்தனமாய்ப் போகிறார்கள். அவர்கள் மேற்கூறிய படங்களைத் தமது கண்களால் பார்க்கிறார்க ளென்பது உண்மையே! அவை தூரிகையி லெழுதப்பட்டனவா? அல்லது காகிதத்தி லொருவிதம் அச்சடிக்கப் பட்டனவா? ஆயின் அவைகளுக்காக எவ்வளவு செலவு பிடித்திருக்கும்? என்பவை போன்ற வர்த்தக விஷயத்திலே ஊக்கம் காட்டுகிறார்க ளென்பதும் உண்மையே! இதனால் அவர்களுக்கு கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தலாதிய கணித முறைகள் கைவந் திருக்கின்றன வென்று தெரிவதும் உண்மையே! இவை யெல்லா மிருந்தும் இவைகளுக் கெல்லாம் மேலாகிய ரசஞ்ஞானம் (Aesthetics) அவர்களுக்கு எட்டுணையு மில்லாதது பரிதப்பிக்கத் தக்கதே! இஃ தின்மையால், மாலதி * யென்பவ ளுடைய புன் முறுவலிற் படிந்த உன்னதத் தோற்றத்தையும், சரஸ்வதி * தன் திருமுகத்தில் அருமையாய் வீற்றிருக்கும் ஒரு பெருங் கருணையையும், ஆங்கே பொங்கித் ததும்பிப் பொலிவுற் றிருக்கும் அறிவுப் பெருக்கையும், *முன்னா ளன்பை யுன்னி யுன்னி ஆனந்தக் கடலு ளழுந்தும் மானார் நோக்கினள் மாண்பையும், இவைகளை அபூர்வ மனோத (Imagination) வன்மையால் ஸ்ருஷ்டித்த நாகரிக வித்யா (Fine Arts) வல்லவன் இயல்பையும், மேற்கூறிய ரசஞ்ஞான மில்லாமல் எப்படி யுணரக்கூடும்? சித்திரத்தைப் போன்றே, நாகரீக வித்தைக (Fine Arts) ளில் வெகு உயர்ந்த தாகிய சங்கீதத்தில் ஊற்ற மில்லாதவனுக்கு, வீணையின் விலையும் அக்கருவியின் இலக்கணமும் தெரிந்திருப்பினும் சங்கராபரணத்தின் இங்கிதமும், பைரவி ராகத்தின் கௌரவமும் அவனுக்கு எப்படித் தெரியவரும்? இவர்களைப்போலவே நாஸ்திகர்களும் உலக அமைப்பின் வினோதத்தைக் கண்டு மகிழுதற்கு வேண்டிய ரசஞ்ஞான மில்லாதவர்க ளென்று நம்மைப்போன்ற ஆஸ்திகர் கொள்கை.

இதுநிற்க,—மேற்சொன்ன வினோதங்க ளெல்லாமலும் வேறு பலவு இயற்கையி லுள்ளன வென்று விஞ்ஞான சாஸ்திரிகள் (Scientists) கூறுகின்றார்கள். நாம் வானகத்தில் காண்கிற அனேக நக்ஷத்திரங்கள் வேறு மண்டலங்களைச் சார்ந்த சூரியர்களா யிருக்கக்கூடுமென்று முன்னர் சொன்னோம். அனேக நக்ஷத்திரங்கள் பல நிறமுடையவைகளாயும் காணப்படுகின்றனவாம். ஸிரியஸ் (Sirius) ரெகுலஸ் (Regulus) ஸ்பைகா (Spica) என்பவைகள் வெண்ணிறம் பொருந்திய நக்ஷத்திரங்கள்; பெடெல்கோ (Betelqeux), அல்டிபிரான் (Aldeberan) அர்கட்யூரஸ் (Arcturus) அன்டாரிஸ் (Antares) என்பவைகள் செந்நிறம் பூண்டவைகள்; ப்ரொக்யான் (Procyan) கபெல்லா (Capella) துருவ நக்ஷத்திரம் (Polestor) இவைகள் மஞ்சள் நிறமுடையவை; காஸ்டர் (Caster) பச்சைநிறமும் வீகா (Vega) ஆல்டெயர் (Altair) என்பவை நீலநிறமும் தாங்கினவை.

நவரத்தினங்களையும் நிறத்திலும் குணத்திலும் வென்ற நக்ஷத்திரங்களால் மாத்திரமா, தன் பெருமைகளை விளக்கினன் ஸர்வேஸ்வரன்! இயற்கை ஏகபவ (Uniformity of Nature) த்தி னிடையிடையில் உண்டாகும் மாறுதல்களாய்த் தோற்று மவைகளாலும் அவன் சர்வ சக்தி நமக்கு வெளிப்படச் செய்கின்றனன்! மிரா (Mira) என்னும் ஓர் நக்ஷத்திரம், இரண்டு நாள் பதின்மூன்றரை மணிநேரம், இரண்டாவது பரிமாணமுள்ள விண்மீனாய் வெகு பிரகாசத்துடன் விளங்கி திடீரென ஒளி குன்றி மூன்றரை மணி நேரத்திற்குள் நான்காம் பரிமாணமுள்ள நக்ஷத்திரமாய்க் குறைந்து பின்னர் படிப்படியாய் ஒளி யதிகரித்து மறுபடி மூன்றுமணி நேரத்திற்குள் பழைய நிலையை யடைகின்றதாம். கிறிஸ்து பிறந்த 1572-ம் ஆண்டில் காஸியோபியா (Cassiopeia) வில் முதல் பரிமாண முள்ள ஒரு வெகு அழகான நக்ஷத்திரம் தோன்றினதாம். அது பல நிறங்களை யுடையதாய் வெகு வினோதங்காட்டி ஆசைகாட்டி மோசஞ் செய்வாரைப்போல் கி. பி. 1674-ம் வருடத்தில் மறைந்துவிட்டதாம். இஃதன்றியும், கி. பி. 1866வது மே மாதத்தில், உத்தர நக்ஷத்

---

*ரவிவர்மர் எழுதிய படங்கள்: Malati, Saraswati, Sweet Recollection

திர ராசியில் வெகு மங்கலாய்த் தோன்றிய ஒரு நக்ஷத்திரம் இருந்தாற் போலிருந்து வெகு சுவாலை வீசி இரண்டாம் பரிமாணமுள்ள நக்ஷத்திரத்தின் பெருமை யடைந்தது. இது மறுபடியும் பத்தாம் பரிமாணத்திற்கு இறங்கி விட்டதாம். கிறிஸ்து பிறந்த 807, 840, 1096, 1607-*ம் வருஷங்களிலும் இன்னும் வேறு அனேக வருடங்களிலும், சூரியன் ஒளி வெகு அதிகமாய்க் குறைந்து காட்டிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே கி. பி.* 536-௵ *சூரியன் வெளிச்சம் அதிகமாய்க் குறைந்து அவ்வாறே பதினான்குமாதம் நிலைபெற்றிருந்ததாம். மறுபடியும் கி. பி.* 626௵ *அக்டோபர் மாதம் முதல் அடுத்த ஜூன்மாதம் வரையில் சூரியன் ஒளி குறைந்திருந்ததாம்.* 1547௵*த்தில் மூன்றுநாள் பரியந்தம் சூரியன் பிரகாசங் கொஞ்சமேனு மில்லாது மிகவும் இருளடைந்து பகற்காலத்திலேயே நக்ஷத்திரங்கள் தெரிந்தன வென்று ஸர் ஜான் எப் டப்பிள்யூ* ஹெர்ஷல் (Sir john F. W. Herschel, Bart) *என்னும் பிரபலவான தத்துவ சாஸ்திரியார் எழுதி யிருக்கிறார்.* Vide-The Supernatural in Nature-A- Verification by Free Use of Science: Anonymous: pp. 399 to 405.

IV.

இவ்விதமாய் இயற்கைத் தோற்றங்கள் முழுவதும் ஒழுங்கும் அமைதியும் மிகவும் விளங்குகின்றது. ஒவ்வொரு வஸ்துவும் ஒரு ஏற்பாட்டிற்குட்பட்டு நடப்பதை நாம் காண்கிறோம். ஆழ்ந்த ஆலோசனையும் மேதக்க உணர்வுமுடையோர் ஆங்காங்குள்ள ஒவ்வொரு தோற்றத்திலும், ஒப்புயர்வற்ற அப்பனுடைய பெருமையையும் அருமையையும் புத்தியையும் சக்தியையும் அன்பையும் அருளையுங் கண்டு, அவ்வரிய உணர்வால் ரோமஞ்சிலிர்ப்ப மெய்குழைய அளவிலா ஆனந்த மெய்தி அவன் திருவடிகளைத் தமக்குப் பற்றுக் கோடாகப் பற்றி, பக்தியையும் பிரேமையையுங் கொண்டு எளிதில் முக்தி யடைய வழிதேடுகிறார்கள்! அந்தந்தோ! கலிகாலக் கொடுமை யாலோ, அன்றித் தம் உணர்வுக் குறைவாலோ, அனேகர், தாம் நினைப்பதே நியாய மாகவும் தாம் விளம்புவதே சட்டமாகவும் படாடோபஞ் செய்து பிரகிருதி தவிர வேறு இறைவ னுளனென்று சொல்வது அசம்பாவித மென்றும் தர்க்க விரோத மென்றும் வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் வாளா போர் விளைத்து வாழ்நாட்களைக் கழிப்பாராயினர். இயற்கை யொழுங்கும், அதனுடைய வனப்பும், அஃதொரு சட்டத்திற் கியைந்து நடப்பதும், இவைபோன்ற வேறு அற்புதங்களும் அவர்கள் மனதைத் துளைத்துச் செல்ல வில்லை. கண்ணாடியிற் பார்த்தால் முகம் தெரியும்; கல்லினிற் பார்த்தால் தெரியுமா! ஒருவர் விஞ்ஞான

கலாரீதியாய் விஷயங்களைத் தக்கவாறு விபாகப் படுத்தி (Analyse)*அவைகளை நன்குணரக் கூடும்; அவைகளை ஒருங்கு தொகுத்தலிலும் வகுப்புகளாகப் பிரித்தலிலும் தேர்ந்திருக்கக் கூடும்; தாம் தேர்ந்த விஷயங்களை நன்கு போதிக்கக் கூடும்; அவர்களை விசேஷபுத்திமான்களென்று பலரும் நன்கு மதிக்கக்கூடும்; அவர்கள் புகழைப்பற்றி நாடுமுழுதும் பறை யறைந்திருக்கவும் கூடும். ஆயினும் தாம் பிரசங்கம் புரிந்த அல்லது பண்டிதரென்று பெயர்பெற்ற சாஸ்திர வாயிலாய்க் கிடைத்த ஒழுங்கின் வனப்பைக் கண்டு அவைகள் தெய்வீகச் செயலாய் உண்டானவை யென்று உணருதற்கு வேண்டிய இயற்கை யுணர்வு* (Intuition) *அல்லது தெருட்சி* (Inspiration) *குறைந்திருக்கும் துர்ப்பாக்கியம் பெற்றவர்களா யிருத்தல் கூடும். இயற்கைத்தத்துவ சாஸ்திரியா ராகிய நியூடன்* (Newton) *அல்லது பிரபல பூதத்துவ சாஸ்திரி யாராகிய லையல்*(Lyell) *போன்று தெய்வத்தில் நம்பிக்கை யுடையவராய், அனேக விஞ்ஞான சாஸ்திரிகள்* (Scientists) *விளங்கா திருப்பதற்கு மேற்சொன்ன குறையே காரணமென யூகிக்கலாமென்று தோன்றுகிறது. மேற்கூறிய லையல்* (Lyell) *என்னும் சாஸ்திரியார் தமது அரிய பெரிய பூதத்துவ சாஸ்திரம்* (Geology) *எழுதி தம்முடைய ஆராய்ச்சியின் முடிவாகக் கூறும் சிலவற்றை, இப்புஸ்தகம் வாசிப்பவர்களுடைய சௌகரியத்திற்காக உள்ள துள்ள படியே மொழி பெயர்க்கின்றோம். அவர் கூறுவதாவது:*

“நாம் நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட வானத்தை யாவது அல்லது அணுதரிசினி (Misroscope) *யென்கிற கருவியினால் நமக்கு வெளிப் படையாகிற க்ஷுத்திர ஜீவ* (Animalcules) *ராசிகளை யாவது பரிசோதிக்கும் போது, சிருஷ்டித் தொழில்கள் இடவிஷயத்தில் இவ்வளவு தூரம் தான் பரவி யிருக்கிற தென்று முடிவு ஏற்படுத்துவது அசாத்தியமா யிருக்கிறது. ஆதல் பற்றி, கால விஷயத்திலும் பிரபஞ்சத்தின் இறுதி மானுதீதமான நம் பார்வைக்கு அப்புறப் பட்டிருக்கிற தென்று காண நாம் சித்தமா யிருக்கிறோம். ஆனால், நாம் எந்தப் பக்கத்தில் பரிசோதித்துக் கொண்டு போனாலும், அது காலத்தை யனுசரித்த தானாலும் சரி, தேசத்தைப் பற்றியதானாலும் சரி, எங்கெங்கும் சிருஷ்டிக் கர்த்தாவின் அறிவிற்கும், அவருடைய முன்னுணர்வுக்கும், விவேகத்திற்கும், சக்திக்கும் திருப்திகரமான சாட்சிகள் காண்கிறோம்.*

“பூதத்துவ சாஸ்திரிகளாய் நோக்கு மளவில், அகணிதமாயுள்ள ஜீவ ராசிகளுக்கு இக்கோளத்தின் தற்கால நிலைமை வசதியா யிருப்பதென்று மாத்திரமல்ல, ஆனால், (இக்கோளத்தினுடைய) அனேக முன்னைய நிலை

மைகளும் முன்னைய ஜீவ சந்ததிகளுடைய சரீரக் கட்டிற்கும் வழக்கங்களுக்கும் இசைந் திருந்தன வென்று நாம் கற்கிறோம். கடல்கள், பூகண்டங்கள், தீவுகள், தேசங்களின் சீதோஷ்ண விசேஷங்கள், இவைகளுடைய ஒழுங்குகள் மாறுதல் அடைந்து வந்திருக்கின்றன; அதற்கேற்றாற் போல் ஜீவ வருக்கங்கள் மாற்றப்பட்டு வந்திருக்கின்றன; ஆனபோதிலும் அப்போதைக் கப்போ திருக்கிற தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் ஒத்த குறிப்புகளுக் கியைய அவைகளெல்லாம் மாற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதனால், முழுவதும், ஏக அபிப்பிராயமும் (அதற்கொத்தபடி இயற்கையில் குறைவற்ற) ஒழுங்கின் அமைப்புகளும் தெரிகின்றன. நம்முடைய தத்துவ விசாரணை, அல்லது அதற்கு மேற்பட்ட நம்முடைய யோக சிந்தனை (Speculation) யின் எல்லைக்குள், அவ்வளவு மகத்தான சூத்திரத்தின் ஆதி யந்தங்களைப் பற்றிய சாட்சி யிருக்கிறதென்று கொள்ளுதல் மனிதனுடைய கட்டுப்பட்ட தத்துவங்களுக்கும் யாதொரு வரம்புக்கும் அடங்காத நித்திய மான பொருளின் இலக்கணங்களுக்கும் இயைந்துள்ள சம்பந்தங்களை நாம் நியாயமாய் மதிக்குமளவில் ஒவ்வாததாய்த் தோன்றுகிறது.” (Principles of Geology, Vol. II. 620-1)

இவ்வாறு மேற்கூறிய லையல் (Lyell) சாஸ்திரியா ரவர்கள் எழுதுவதற்கு யாது காரணம் என்று நாம் ஆராய்வோ மாயின் தம்முடைய பரிசோதனைகளில் எங்கும் ஒருவித ஒழுங்கும் அழகும் தோன்றுவதை நன்றாயறிந்து அதற் கெல்லாம் புத்தி அவசிய மென்று அவர்க்குப் புலப்பட்டதே யென்று நமக்கு வெளிப்படை யாகின்றது. பூமியும் கடலும் காற்றும் மழையும் ஒளியும் உஷ்ணமும் மற்றுஞ் சடசம்பந்தமான சக்திகளும் கணக்கிறந்த பல்லாயிரங் கோடியான ஜீவராசிகள் வாழ்வதற்கும் அவைகள் சுகானுபவங்களுக்கு மியைந்த வண்ணம் தொகுக்கப் பட்டிருக்கிறது. ஆதிகாலத்தி லிருந்து இதுகாறும் நடந்து வந்த மாறுதல்களை நோக்குமிடத்து, ஒவ்வொரு காலங்களி லிருந்த தாவரராசிகளுக்கும் மிருக வகைகளுக்கும் ஒத்தபடி அவைகள் நேரிட்டன வென்றும், முன் மாறுதல்கள் பின்னர் முன்னினும் உயர்ந்த தாவர ஜீவராசிகள் உண்டாகி வாழ்வதற்கனுகுணமாக விருந்தன வென்றும் பூ தத்துவ சரித்திரம் தெரிவிக்கிறது. பூமி மாத்திரமே யன்று, கடலில் உண்டாகும் காற்றும் அலைகளும் அதன் உப்புக (Salts) ளும் அதன் கண் படிந்த தாபர மிருகசேஷங்களும் (Fauna and Flora) தேவ சித்தத்திற்குப் பொருந்தும் வகை யேற்பட்ட விநோதங்களை யாராய்ந் தறிந்த லெப்டி னெண்ட் மாரி (Leuitenant Maury) என்பவர் கடவுளின் சித் ஸ்வரூபத்தை யொத்துக் கொள்ளுகிறார். இதல்லாமலும் இப்பூமியின் ஒவ்வோ ரிடங்களில் கடவுள் தம்முடைய அபார சக்தியை விளக்கி நம் மனைவரையும் ஒருவகை துணுக்குறச் செய்திருக்கிறார். எரிமலைகள் (Volcanoes) பூகம்பங்கள் (Earth quake) என்பவைகளைப்பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். பிரபஞ்ச முழுவதையும் அதி யற்புதகரமாய் சிருஷ்டித்த காரணத்தால் பரப்ரம்மத்தை சிருஷ்டி கர்த்தா எனவும், அதை ரக்ஷித்து நாம் முன் சொன்ன பிரகாரம் தாவர ஜீவராசிகள் வசதிக் கேற்றபடி அவைகளை யனைத்துக் காத்தலின் அவரை ஸ்திதிகர்த்தா எனவும் பிரபஞ்சத்தை முடிவு செய்தலின் சம்ஹார கர்த்தா எனவும் நாம் பாவித்தலில் எவ்வளவோ உண்மை யிருக்கிறது. இந்த எரிமலை களாலும் பூகம்பங்களாலும் ஒவ்வொரு காலத்தில் உண்டாகும் பயங்கரத் தோற்றங்களை நாம் உற்று நோக்குங்கால் நம் மனதில் எவ்வளவோ நடுக்க முண்டாகின்றது; உள்ளங் கலங்குகின்றது; உரோமஞ் சிலிர்க்கின்றது; வெயர்வை யெழுகின்றது. எத்தனை நாடு நகரங்கள் இவ் எரிமலை யென்னும் நெருப்பு ராக்ஷதன் பாற் பட்டு தீயினில் தூசாய் விட்டன! இந்த எரிமலைகள் வெடித்து அக்கினிமாரி பொழிதல் வடவானலமோ, அன்றிக் கடவுளே நம் மெதிரில் கடிந்து “ஊழிக்கடை முடிவிற் றனியுமை கேள்வனை யொப்ப” வந்துதித்ததோ யாதெனச் சொல்ல லாகும்! அலகிலாப் பரஞ்சோதி யாகும் ஐயன் திருவிளை யாடலை யா மெங்ஙன முணரக் கூடும்! இவ் எரிமலைகளி னின்றும் நம்மை விலக்கித் தன் அளவில்லாத கருணையால் நம்மைக் கட்டிக் காத்துக் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்து வரும் கடவுளு மவனே! ஒவ்வோர் காலங்களில் தன் சர்வசக்தி புலப்படப் பிரளயகால ருத்திரன் போன்று எரிமலைகளாலும் பூகம்பங்களாலும் பிரவாகங்களாலும், நினைக்கவும் பார்க்கவு மொண்ணாத பயங்கரம் விளைத்துச் சம்ஹாரம் செய்யும் பரமனு மவனே! நல்லார்க்கு நல்லவனாய்ப் பொல்லார்க்குப் பொல்லானாய் முடிவில் எல்லார்க்கும் நல்லவனாய் விளங்கும் எமதப்பனை நோவது எற்றுக்கு? நாம் எதன்மேல் உறுதியாய் நின்றிருக்கிறோ மென நினைக்கிறோமோ, அந்தப் பூமியே பாம்புகள் நிறைந்த படுகுழிபோல் கணக்கிறந்த விபத்துகளை மூடிக்கொண் டிருக்கிறது! புலி பசுவின் தோலைப் போர்த் திருப்பதற்கு வேறு திருஷ்டாந்தம் வேண்டியதே யில்லை. நம்மை யெப்போது விழுங்கி விடலா மென்று பூமியும், நெருப்பு கக்குகிற தன்வாயைத் திறந்து கொண்டிருக்கின்றது. இடை யிடையே பூமியின் உள் கேட்கும் உறுமலும் இரைச்சலும் இரையைக்கண்டு அலைச்ச லுற்ற புலியைப் போல் கடுஞ்சினங் காட்டுகிறது. சுற்றி யுள்ள கடலும் காற்றும் ஒவ்வொன்றும் அடமுள்ளவைகளாயே யிருக்கின்றன. இவைகளால் இடை யிடையே தம் சக்தியைக் காண்பித்தாலும். பெரும் பாலும் அவைகளி னின்றும் நம்மைத் தப்புவிக்

கிற பேரருளாளன் பெருமையைப் பேசவென்றால் நம்மால் ஆமா! ஆயிரந் தலை யுடைய ஆதி சேடனும் ஆயிரந் தோளுடைய வாணனும் ஒன்று சேர்ந்தாலும் ஆகாத காரியம் நம்மா லாகுமா!

இப்பொழுது எரிமலையின் தன்மையைப் பற்றியும், அது எப்படி யுண்டாகின்றது என்பதைப் பற்றியும், வாஸ்தவமா யுண்டான எரிமலையின் காட்சியொன்றைப்பற்றியுஞ் சிந்திப்பாம். எரிமலைகள் கோக்குள்(Conical) வடிவமான மலைகள். பூமி யோட்டின் (Crust of the earth) கணுள்ள வெடிப்புகளுக்கும் அவ் எரிமலைகளுக்கும் வழியேற்பட் டிருக்கின்றது. இவைகள் காலா காலத்தி லாவது ஏறக்குறைய விடாமலாவது புகையையும் ஜுவாலை வீசும் கற்களையும், லாவா (Lava) என்கிற பருவதாக்கினிப்பிரவாகத்தையும் கொட்டு கின்றன வென்று தெரிகிறது. பூமி முதலில் நெருப்பு மயமா யிருந்து வரவரக் குளிர்ந்து இன்னும் குளிர்ந்து வருகிற தென்பது விஞ்ஞானிகள் கொள்கை. பூமியோட்டின் அடிப்பாகத்தில் ஒன்று மில்லாமல் சுரையாயுள்ள பள்ளங்கள் அநேக மிருக்கின்றன வென்றும் அவைகள் நிறைய கற்கள் உருகி யிருக்கின்றன வென்றும், முன் சொன்ன பிரகாரம் பூமி குளிர்ந்து வருவதால், பூமியோடு சுருங்க, உள்ளே யிருக்கும் திரவம் இடமில்லாமல் வெளியே பொங்கி வழிகிற தென்றும், ப்ரெஸ்ட்விச் சாஸ்திரியார் (Professor Prestwitch) அபிப்பிராயப்படுகிறார்.

மிஸ்டர்மாலெட்(Mr. Mallet)என்பவர் வேறு அபிப்பிராயப் படுகிறார். அவர் சொல்லுவதாவது:—பூமியின் உட்பாகங்கள் உஷ்ணம் அதிகமாயிருப்பவை, குளிர்ந்து வரும்போது பூமியின் ஓட்டைவிட விரைவில் சுருங்குகின்றன. இதனால் பூமியோட்டுக்கும் உட்பாகங்களுக்கும் இடையில் தொளைகள் அல்லது சுரைகள் உண்டாகின்றன. இந்த சுரைகளுக்குள் கடினமா யிருக்கும் கற்கள் அல்லது பாறைகள் அதிகமாய் நொறுங்கி விழுகின்றன. இப்படி விழுவதனால் உண்டாகும் உஷ்ணத்தால் அப்பாறைகளுட் சில உருகி, பூமி ஓட்டின் வெடிப்பு வழியாய் அந்த உஷ்ணத் திரவம் வெளிப்படுகின்றது. இதுதான் பருவ தாக்கினிப் பிரவாகம் என்று சொல்லப்படும். இந்த எரிமலைகள் வெடிப்பினால் அநேக இடங்களில் அதிக விபத்து உண்டாயிருக்கின்றது. முக்கியமாய் நாம் இங்கு சொல்லவேண்டியது க்ராகடோவா (Krakatoa) என்கிற இடத்தில் 1883-௵ ஆகஸ்டு௴ 27௳ நிகழ்ந்த விருத்தாந்தம்தான். அற்றை நாள் அங்கு நேர்ந்த வெடிப்பின் அதிர்ச்சியினால், 100 மைலுக்கு அப்பால் இருந்த படேவியா (Batavia) பட்டணத்தில் ஜன்னல்கள் உடைந்தும் சுவர்கள் பிளந்தும் போயின. அந்த எரிமலை வெடிப்பினால், 20 மைல் உயரம் மண்ணும் புகையும் கிளம்பி, அந்த சப்தம் வெடிப் பிடத்திற்கு 3000 மைல் அப்புறமுள்ள ரொட்ரிகோ (Redriques) என்னு மிடத்தில் கேட்டது; இப்பூகோளத்தில் பதின் மூன்றில் ஒருபாகம் முழுவதும் இந்த வெடிப்பின் பயங்கரம் தோன்றினது. மேலும், இந்த அதிர்ச்சியினால், கடல் குழம்பி 100 அடி உயரம் அலை யெழும்பி அடுத்துள்ள கரைகள் மேற் புரண்டு, அனேக விளக்குக் கூண்டுகளை முழுகடித்து அனேக கப்பல்களை நாசப்படுத்திற்று. 36,000 ஜனங்களுக்குமேல் நாசமடைந்தார்கள். க்ராகடோவா வின் ஒரு பாகம் தூளி தூளியாய், அது எங்கெங்கும் பறந்து சூரியாஸ்தமன காலத்தில் வெகு அலங்காரமான செந்நிறம் விளைத்தது. 1883, 84 வருடங்களின் இலை யுதிர்கால (Autumn) த்திலும் மாரிகாலத்திலும் உலக முழுவதிலும் இவ் வினோதக் காட்சி தோன்றியதாம். இது எச். ஆர். மில் (H. R. Mill) எழுதின ரெல்ம் ஆப் நேச்சர் (Realm of Nature) pp. 222-26-ஆல் தெரியவரும். இந்த எரி மலைகள் இத்தன்மையவாக, பூகம்பம் (Earthquake) என்பது யாதெனச் சிறிது சிந்திப்போம். எரிமலைகளை நம்மில் அனேகர் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் பூகம்பம் என்பதை அனேகர் அறிந்திருக்கக்கூடும். பூகம்பம் என்றால் பூமி அசைதல் என்றுபொருள். பூமி அசைவதை, பூமியைத் தாங்குகிற ஆதிசேஷன் பூமி பாரம் தாங்காது தன் தோள் மாற்றுதலால் உண்டாகிற அதிர்ச்சி யென்று நம்மவர் சொல்லிக்கொள்ளுதலால் பூமி அசைதல் என்கிற தோற்றம் அவர்களுக்குத் தெரிந்திருக்கிற தென்று ஏற்படுகிறது. விஞ்ஞான சாஸ்திர வழியாய் இஃது யாதா யிருக்கலாம் என்று விசாரிக்கும் பொழுது, பூமியினுடைய ஓடு நெகிழ்ந்து உறழத் தக்க (Elastic) தாயிருக்கிற தென்றும் அதனால் அலைபோன்ற நடையை அல்லது சலனத்தை (Wave motion) வெகு விரைவில் விளைக்கிற தென்றும் தெரிகிறது. பூமி ஓட்டில் எக்காரணத்தினா லாயினும் குழப்பம் நேரிட்டால் மேற்சொன்ன அலைபோன்ற சலனம் உண்டாகின்றது. இது பூமியின் தரைமீது விரைவில் மேலும் கீழுமாய் அல்லது முன்னும் பின்னுமாய் அசைவது போல் தோன்றுகிறது. இதுதான் பூகம்பம் என்று பெயர் பெற்றிருக்கிறது. எரிமலை வெடிப் பதிர்ச்சியினாலும் இது உண்டாகக் கூடும். மலைகளின் மீது பெரும்புயல் தாக்கினதால் பூமியின் உணர்ச்சியும் நெகிழ்ச்சியு முள்ள ஓட்டில் கலக்கம் விளைத்து, ஜபான் தீவு முழுமையும் அசக்கிற்று. இந்த பூகம்பத்தினால் அனேக வீடுகளும் நகரங்களும் நாசமடைந் திருக்கின்றன. நம் இந்தியாவிலேயே அனேகந்தரம் பூகம்பங்கள் நேரிட்டிருக்கின்றன, ஆனால் அஃதொன்றும் பெருங் கெடுதி

விளக்காது போயிற்று. கி. பி. 1755-ம் வருஷத்தில், ஐரோப்பா கண்டத்திலும் நான்மடங்கு விஸ்தீரணத்தை யசக்கி, உலக முழுமையும் நடுங்க வைத்த ஒரு மஹத்தான பூகம்பம் நேர்ந்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த பூகம்பம் லிஸ்பன் (Lisbon) பட்டணத்தை நாசம் செய்துவிட்டதாம். மற்றொன்று சென்ற 1886-ம் வருஷத்தில் சார்ல்ஸ் டௌன் (Charles town) என்னும் நகரத்தை நாசம் செய்வித்தது, உலகத்தில் முப்பது லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணம் பரவிய பூகம்பமென்று தெரிகிறது. உலகத்தில் மலைகளாய்த் தோன்றுவன எப்படியுண்டாகின்றன? அவைகளும் பூமிக்குள் நேரிடும் உஷ்ண சம்பந்தமான பலவேறு பாடுகளால் உண்டாகின்றனவென்று பூதத்துவ சாஸ்திரம் அபிப்பிராயப்படுகின்றது. எச். ஆர். மில் (H. R. Mill) ரெல்ம் ஆப் நேச்சர் (Realm of Nature, pp. 226-233.)

மேற்கூறியவைகளால் நமக்கு என்ன விசதமாகிறது? சாதாரணமான மனிதர்கள் நினைப்பதுபோல், பூமியென்பது அபாய மற்ற வாழ்விடம், பூமிக்குள் யாதொரு வேறுபாடும் உண்டாகிறதில்லை-இருக்கிற அபாயமெல்லாம் கடலிலேயே யன்றி பூமியில் யாதொரு தொந்தரையுங் கிடையாது, பூமியினால் நமக்கு எப்போதும் கெடுதி நேரிடாது என்று தோன்றுகிறதா? அல்லது சிருஷ்டியின் ஒவ்வொரு அணுவிலும் தோன்றுகிறபடி பூமியிலும் விநோதங்களும் கடவுளுடைய சர்வசக்தி தத்துவமும் அபாரகருணையும் சர்வஞ்ஜத்துவமும் தோன்றுகிறதா? அறிவையே நாடி நன்குணரும் ஆன்மாக்கள் யாவரோ அவ்வாறில்லை யெனச் செப்பத் துணிவர்! மேற்கூறியபடி, லையல் (Lyell) என்னும் பிரபல பூதத்துவ சாஸ்திரியார் கொண்ட முடிவான அபிப்பிராயம் நம் எண்ணத்தை வலிவுறுத்துகிற தல்லவா? பூமிக்குள் உண்டாயிருக்கிற பிரபல ஆபத்துக்களிலிருந்து நம்மை யெல்லாம் காத்து வாழச் செய்கின்றவன் யாவன்? ஒவ்வோரிடங்களில் அவைக ளுண்டாக்கும் அனர்த்தங்களாலேயே, மற்ற இடங்களி லவைகள் தோன்றாது பெரும்பாலும் நிலைபெற் றிருப்பதற்கு வேண்டிய கடாக்ஷ வீக்ஷண்யப் பெருமை கரதலா மலகமாய் விளங்குகிறதன்றோ?

உ-வது அத்தியாயம்.

I.

நாம் ஒவ்வொரு முக்கியமான சாஸ்திரத்தையும் சிறிது சிறிது நோக்கிச் செல்ல வேண்டி யிருத்தலின், ஒன்றினைப் பற்றி யாவது விசேஷமா யெழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடையாது. ஆதலின் பூதத்துவ சாஸ்திர (Geology) த்தைவிட்டு, ரசாயன சாஸ்திரத்துட் (Chemistry) புகுந்து சிலவற்றை யோசிப்போம்.

ரசாயன சாஸ்திர மானது பிரபஞ்சத்தின் ஒவ்வொரு வஸ்துவும் தாதுப் பொருளா? (Element) அன்றி கலப்புப்பொருளா? (Compound) என்பதைத் தெரிவிக்கின்றது. இந்த அரும் பெருங் கலையோ, நக்ஷத்திரங்களுடைய கலப்புத் தன்மையைப் பற்றியும் தாவரப்பொருள்களை யன்றி மிருகங்கள் மனிதர்க ளுடைய தேகத்தில் இன்னின்ன வஸ்துக்கள் இவ்விவ்விதம் சம்பந்தப் பட்டிருக்கின்றன வென்றும் இவ்விவ்விதம் மாறுதல்க ளடைகின்றன வென்றும் அதி சூக்ஷ்மமாய் விசாரித் துணரும் சாகஸத்தையும் பெற்றியையுஞ் சொல்ல நம்மால் தரமில்லை. சுருக்கமாகக் கூறுமளவில், இந்த ரசாயன சாஸ்திரம் வியாபிக்காத ஓரிடமும் வஸ்துவும் பிரபஞ்சத்திலே யில்லை. அது கழுகைப் போன்று வான் முகடளாவி நக்ஷத்திர கணங்களின் சேர்க்கை வேறு பாட் டிலக்கணங்களையும் நம்முடனுழன்று இங்கு தாதுப் பொருள்கள் கூடிக் கலக்கும் குறிப்புகளையும் பாதாளஞ் சென்று அங்கு தோன்றும் வஸ்துப் பொருத்தங்களையும் இந்திர (Organic) வஸ்துக்கள் சேர்க்கை வேறு பாடுகளையும் அநிந்திர (Inorganic) ப் பொருள்கள் சேர்க்கை விசேஷங்களையும் விவரமாய்த் தெரிவிக்கிறது. பிரபஞ்ச முழுமையு முள்ள வஸ்துக்க ளெல்லாம், தாதுப் பொருள்கள் (Elements) பல விதமாய்க் கலப்பதால் உண்டாகின்றன வென்றும், ஆதலால் மேற்கூறிய ஒவ்வொரு வஸ்துவும் மேற்கூறிய தாதுப் பொருள்களில் ஒன்றாக அல்லது பலவாகப் பிரித்து எடுத்துக் காட்டலா மென்றும் தெளிவாய் அது வெளிப்படுத்துகிறது. இந்த தாதுப்பொருள் ஒவ்வொன்றும் தத்தம் சுய இயல்பில் மாறுபட் டிருக்கிறது மன்றி தன்னைத் தவிர வேறு தாதுப் பொருளுடன் சேரும்போது சில பரிமாணம் தவறும லிருக்க வேண்டி யிருக்கிறது. இந்த பரிமாண நியந்தனை கொஞ்சம் பிசகினாலும், பிசகுவது எள்ளு மூக்கத்தனையா யிருந்த போதிலும், வேறு பொருளாகுமே யொழிய முன்னுண்டாகிய சங்கமப் பொருளாகாது. தாதுப் பொருள்கள் இவ்வாறு குறித்த ஏற்பாட்டில், பிசகாதும் மேற்சொன்ன பரிமாண நியந்தனை கடவாதும் இருக்க வேண்டிய அவசிய

மென்ன? நாம் சாதாரணமாய்ப் பார்க்கிற ஜலம், நம்மனோரால் பஞ்ச பூதங்களு ளொன்றா யெண்ணப்பட்ட போதிலும், நவீன ஐரோப்பிய சாஸ்திரிகளால் அது இரண்டு வாயுக்கள் சேர்ந்து உண்டாவ தென்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ரசாயன சாஸ்திரத்தில் சமபாகப் பிரமாணம் (Law of Equivalents) என்று ஒருநிபந்தனை கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இதன் பிரகாரம், தகனுறுவாயு (ஆக்ஸி ஜின் Oxygen) 8-பங்கு நிறைக்கு, ஜலவாயு (Hydrogen) 1-பங்கு நிறைகலந்து ஜலம் உண்டாகின்ற தென்றும், ஜலத்தில் இவ்விரண்டு வாயுக்கள் மாத்திரமே சம்பந்தப்பட் டிருக்கின்றனவே யன்றி வேறொன்று மில்லை யென்றும் பரிசோதனை வழியில் சாஸ்திரிகள் நிரூபித் திருக்கிறார்கள். மேற்சொன்ன சமபாகப் பிரமாணத்தினால் ஒவ்வொரு தாதுப் பொருளும் மற்றொரு தாதுப் பொருளுடன் சேர்வதற்கு வேண்டிய நிறையளவுக் கிரமம் விசதமாகிறது. உதாரணமாக தகனுறுவாயு 8-பங்குக்கு, ஜலவாயு 1-பங்கும், இரும்பு 28-பங்கும், வெள்ளி 108-பங்கும் இருந்தால் தான் ஒன்று சேரும். (See George Frowne's Elementary Chemistry, pp. 218-219) இப்படி கணித முறை வழுவாது ஒழுங்காகவும் அற்புத மாகவும் தாதுப் பொருள்கள் ஒன்றோ டொன்று சேருவதைப் பார்த்து நாம் சிறிது ஆலோசிக்கின், அவைகளை யொன்றோ டொன்று அதிஷ்டானு கூலமாயும் தற்செயலாயும் பலவகை கலப்புற்றதனாலும் மாறுத லடைந்த தாலும் இவ்வளவு சுந்தரமான உலகம் படைக்கப் பட்டதென்று தோன்றுகிறதா? அதாவது; ஆலோசனை யற்ற தாதுப் பொருள்களே குருட்டுத் தசையில் கணித சாஸ்திர வரம்பு கடவா திருக்க நேரிட்டதென்று உபந்யாஸஞ் செய்வது யுக்திக்குப் பொருந்தினதாய்த் தெரிகிறதா? நாம் குருடரா யிருந்தா லொழிய தாதுப் பொருள்களே யிவ்வகை குருட்டுத் தனமாய்ச் சேர்ந்தன வென்று சொல்ல நியாய மில்லை! நம் அறிவு குறைந்திருந்தா லொழிய உலகப் பரிணமிப்பில் புத்தித் தோற்றங் காணவில்லை யென்று சொல்வதில் அறிவு கிடையாது. எப்பக்கம் பார்க்கினும் ஒழுங்குகளும், வரம்புகளும், விவேகமும் நன்கு விளங்குகின்றன. மஹத்தான விவேகத்தின் செயலாய் பிரபஞ்சம் உண்டா யிருக்கிற தென்று சொல்வது புத்திசாலித் தனமா யிருக்கிறதே யன்றி வேறு விதமாய்க் கூறுவது விகடகவியே யாகு மென்பதில் ஒருசிறிதும் ஐயமிலது.

பிரபஞ்சத்தின் தோற்றக் கிரமத்தைப் பற்றி மேற்புல விஞ்ஞானிகள் வழி இங்கு சிறிது விசாரிப்பது நமது கடமையா யிருக்கிறது. இனி அவர்கள் செய்யும் உத்தேசம் இருபாற் பட் டிருக்கின்றது. ப்ரஷ்யிய தேசத்துத் தத்துவ சாஸ்திரியா ராகிய காண்ட் (Kant) என்பவரும், பிராஞ்சு தேசத்து வான சாஸ்திரியா ராகிய லாப்லேஸ் (Laplace) என்பவரும் ஒரு கட்சிக்காகவும், நார்மன் லாக்யர் (Norman Lockyar) என்னும் பிரபல சாஸ்திரியார் மற்றொரு கட்சிக் காகவும் வைத்துக் கொள்ளலாம். லாப்லேஸ் முதலானவர்கள் சொல்லுவதாவது: முதலில் புகை, ஆவி அல்லது தூமம் போன்ற நெபுலா (Nebula) என்பது கவிந்து இருந்ததாகவும், அது வெகு அதிக உஷ்ணமா யிருந்த தாகவும், பின்னர் அது குளிர்ந்து வர வர சுருங்கிவந்த தாகவும் இதனால் அதன்பால், மேற்கே யிருந்து கிழக்குத் திசையாய் ஒருவித சுழலோடுங் கூடின ஓட்டம் காணப்பட்ட தாகவும் பிறகு அது படிப்படியாய் சூரிய மண்டலத்திற்கு மூலமாய் நடுவில் சுருங்கிற் றென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இதன்பின், இவ்வகையாய் ஓடிக்கொண் டிருக்கிற மண்டலத்தின் ஓரமானது மத்தியி னின்றும் விலகி மத்தியாதீத சக்தி (Contrifugal Force) யால் விருத்தமாகத் தள்ளப்பட்டது என்றும் அது நெப்டியூன் (Neptune) என்கிற கிரகமாய் விட்டது என்றும் இப்படியே ஒன்றின்பின் னொன்றாய்த் தள்ளப் பட்டவை வெவ்வேறு கிரகங்களாக, நடுவில் மிச்சமாய் நின்றது நம் மண்டலத்துச் சூரிய னென்றும் அவர்களது கோட்பாடு. இவர்கட்குப் பின்னால் சிலகாலைக்கு முன்னிருந்த லாக்யர் (Lockyar) என்பார் செய்த உத்தேசம் வேறு விதமானது. முதலில் ஆகாசம் முழுவதும் அணு ஸ்வரூபமான சடப் பொருள்களால் நிறைந்திருந்த தென்றும், ஆகர்ஷண சக்தி (Gravity) யாலும் ரசாயன சம்பந்த (Chemical Aiffinity) த்தாலும் அவைகள் ஒன்று சேர்ந்து முதலில் தாதுப் பொருள்களையும் பிறகு அதன் கலப்புருவங்களையும் தூசு ரூபமாக விளைத்த தென்றும், அதன்பின் அந்த தூசு ரூபங்களும் சுருங்கிச் சுருங்கி, ஆகாசக்கல் (Meteiorites) களாய் ஒன்றிற் கொன்று இடைவிட்டு அனேக கூட்டங்களாய் ஆகாய வழியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன வென்றும், அப்புறம் ஆகர்ஷண சக்தியால், ஒவ்வொன்று மற்றொன்றினால் மோதப்பட்டு உஷ்ணம் உண்டாக அந்த உஷ்ணத்தால் அவ் ஆகாசக் கற்கள் ஆவியாக மாற்றப்பட்டு லாப்லேஸ் கூறிய நெபுலா ஆன தென்றும் லாக்யர் (Lockyer) சொல்லுகிறார். இதன் பிறகு லாப்லேஸ் சொன்னதற்கும் இவர் சொல்வதற்கும் வித்தியாச மில்லை.

மேற்கூறிய உத்தேசங்கள் சரியானவையோ அல்லவோ நாம் விசாரிக்க வேண்டிய அவசிய மில்லை, சரியானவை யென்று வைத்துக்கொண்டே பார்த்தாலும் பிரபஞ்சம் முன் சொன்னபடி, ஒரு ஏற்பாட்டிற் கிணங்க பரிணமிப்பதைப் நோக்கின் தேவ சித்தத்தின் படி யாகிற தென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபனையுந் தோன்ற வில்லை.

ரசாயன சாஸ்திர சம்பந்தமாய் நாம் கண்டறிய வேண்டிய வேறொரு

முக்கியமான விஷய முண்டு. ஜீவ ராசிகளுள் தாவரப்பொருள் உணவாகக் கொள்ளுவது சுத்த நிரிந்திரப் பொருள்களேயாம். இதில் இருந்தாயில வாயு (Carbonic acid gas) ஒன்றனது. ஆகாயத்தில் நிறைந்த வாயுவி னின்றும் இந்த இருந்தாயில வாயுவை யுட்கொண்டு, சூரிய வெளிச்சத்தின் உதவியால் இருந்தையைப் பிரித்து, தம்முட் சேர்த்துக் கொண்டு மிச்சமான தகனுனுவாயுவை (Oxygen) வெளி விட்டுவிடுகிறது. இதை மனிதர்களும் மிருகங்களும் சுவாசிக்கிறார்கள். தகனுனுவாயு நம்முட் சென்றதும் தேகத்தில் சேதமான இருந்தை (Carbon) யோடு கலந்து மறுபடியும் இருந்தாயில்வாயு (Carbonic acid gas) ஆகி நிஸ்வாஸ (அதாவது மூச்சு வெளிவிடுதல்) த்தில் வெளி வந்து விடுகிறது. இதை மறுபடியும் தாவர ஜீவராசிகள் உட்கொண்டு நமக்கு சுத்தமாகிய தகனுனுவாயு (Oxygen) வைக் கொடுக்கிறது. இப்படியே மிருகாதிகள் இறந்து கிடக்கையில் ஆகாயத்தி லுள்ள தகனுனு வாயு இறந்த தேகத்தின் இருந்தை (Carbon) யோடு கலந்து இருந்தாயிலவாயு (Carbonic acid gas) ஆகி தாவர ஜீவராசிகள் உட்கொள்ள உபயோக மாகின்றது. பின்னர் தாவரங்கள் முன்சொன்ன பிரகாரம், தகனுனுவாயுவை வெளி விடுகின்றது. இத்தவழியாய் மிருகங்களும் உட்கொள்ள ஏற்றவையா யிருக்கிறது. இதனால் ஜீவராசிகளுக் குள்ளே தாவர ராசிகளுக்கும், மிருகாதிகளுக்கும் ஒன்றுக் கொன்று யிருந்த ஒத்தாசையாய் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது வெகு வியக்கத்தக்கதா யிருக்கிறதென்று ஒரு பிரபல ரசாயன சாஸ்திரியாரா யிருந்த ஜார்ஜ் ப்ரோவன்ஸ் எப். ஆர். ஸ். (George Frownes F. R. S.) கூறுகிறார் (See Manual of Elementary Chemistry, pp. 740).

II.

இவ்விஷயம் நம்மை ஜீவதத்துவ சாஸ்திர (Biology) த்திற்கு நேராய்க் கொண்டுவந்து விடுகிறது. அவயவ முடையவையா யிருக்கும் வஸ்துக்களில், தாவரப் பொருள்கள் ஒருவகையும், மிருகஜாதி மற்றொரு வகையு மாக இரண்டு விதங்க ளிருக்கின்றன. தாவரப் பொருள்களைப் பற்றி விவரிப்பது தாவர தத்துவ சாஸ்திரம் (Botany) எனப் பெயர் பெற்றது; மிருக ராசிகளைப் பற்றிக் கூறுவது மிருக தத்துவ சாஸ்திரம் (Zoology) என்னும் பெயர் பூண்டது. இரண்டும் மேற்சொன்ன ஜீவதத்துவ சாஸ்திர (Biology) த்தி னுடைய பிரிவினைகள் தாம். தாவரங்களால் உண்டாகும் நன்மைகளை முன்னமே கூறி யிருக்கின்றோம். புல் பூண்டு செடி கொடி முதலியவைகளின் அமைதியை நோக்குங்கால், கடவுளுடைய சித்திரச் செயல் செவ்வனே தெரிகின்றது! அவைகளின் ஒவ்வொரு பாகமும் மற்ற பாகங்களுக்கு இயையும்படி செய்துள்ள சித்திரமும், படிப்படியாய் விர்த்தி யாகிக் கொண்டு வருகிற சாதி யமைப்புகளும் வேறுபாடுகளும் நமக்கு விவரமாய்த் தெரிய வேண்டுமானால் அந்த சாஸ்திரத்திற் றேர்ந்த ஒருவர் அதைப்பற்றி ஒரு பெரிய கிரந்த மியற்றினால் தெரிய வருமே யன்றி வேறுவழி கிடையாது. ஆனாலும் நாம் இங்கு சுருக்கமாய்க் கூறுமளவில், மிருகராசிகள் முதலில் உண்டாவதற்கு தாவர ராசிகள் அதற்கு முன்னமேயே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவயவ ஸ்வரூப மாகாத மண் முதலிய இயற்கையி லுள்ள நிரிந்திரப் பொருள்களை ஆகாரமாய்க் கொள்ள மனிதரால் முடியாது. ஆனால் தாவரங்கள் இவைகளையே ஆகாரமாய்க் கொண்டு அவைகளைத் தக்கபடி திருத்திய பின்னர்தான் அவைகளை மிருகங்கள் மனிதர்கள் உணவாய்க் கொள்ள நேரிடும்.

இவ்வுலக அமைதியையும் ஒழுங்கையும் நாம் யாதெனக் கூறுவோம்! யாம் கற்க வேண்டு மாயின் கூடிய வரையிலும் கசடறக் கற்றல் வேண்டும்! அரை குறையாய்க் கற்பது எப்பொழுதும் ஆபத்து விளைக்கக் கூடியது; ஆதலின் கல்வி யூற்றினின்றும் தாராளமாய்ப் பருகல் வேண்டும்; இன்றேல் அதை ருசிக்கவே கூடாது என்று ஒரு ஆங்கிலப் புலவர் கூறியிருக்கிறார். நம்மவ ருள்ளு, இப்பொழுது பெண்கல்வி யென்பதே பெருமை கெட்டிருக்கின்றது. அல்லி யரசாணி மாலை படித்த அம்பாள் அரை வித்துவானாக மதிக்கப் படுகிறாள், பவழக்கொடி மாலை படித்தவள் பண்டிதையாய் விடுகிறாள். இத்தகைய மனதை மருட்டுங்கதையே, கற்பதற்கு இலக்கும் கற்பதின் முடிவுமாய் விட்டால், அறத்தின் வழிநின்று மறத்தைக் கடப்பது எங்ஙனம்! யாம் இங்கு கூறவேண்டியதும், கூறவந்ததும், சந்தர்ப்பத்திற் கியைந்ததும் யாதெனின், கல்வியென்னும் விளக்கைக் கையி லேந்திப் பிரபஞ்சமாகிற அழகு மாளிகையில், நம் கண்ணுக் கெட்டின தூரமும், அறிவுக் கியைந்த அளவும், பரிசோதிக்க ஆரம்பித்தால், அது, கண்ட இடத்தில் ஒன்றாய் இறைந்து கிடக்கும் கற்குவைபோ லிராது, வாசம் செய்வதற் கேற்ற ஒரு வீட்டை சிற்பத்தில் தேர்ந்த வல்லவ னொருவன் கட்டினால் எப்படி அதன் ஒவ்வொரு பாகமும் பழுதற விளங்குமோ, அவ்வாறே பிரபஞ்சமாகிற வீடும் அதனகன் வாழும் பிரஜைகள் சௌக்கியத்திற்கு அமைந்ததாய் இருக்கிற தென்னும் உண்மை யானது, உண்மையாய்த் தளராத ஊக்கத்துடனும் அழியாத அறிவுடனும், உன்னதமான உணர்வுடனும் நோக்குவோனுக்கு விளங்காமற் போகாதென்பது திண்ணம்! ஆனால் அல்லியரசாணிமாலைபடித்த பெண்மணிகள் அனைத்தும் தெரிந்தவரென்று வெளிவரும் ஆபாசம்போல், மேற்கூறிய பரிபக்குவம் சிறிது மில்லாது

சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை போல், 'ஸைன்ஸ்' (Science)என்னும்சாஸ்திரங்களை மாத்திரம் உள்ளுணராது ஓதி விட்டதால், எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் அப்பனாய் ஐயனாய் விளங்கும் அண்ணல் தன் பெருமையறிதல் ஆகுமா? குருடனும் செவிடனும் கூத்து பார்த்த கதைபோல் முடியுமே யன்றி, வேறொரு பயனும் இதனால் விளைவ தில்லை. முன் சொன்ன இந்த பிரபஞ்ச மாகிற பெரிய மாளிகையில் நாலு மூலைகளிலும் நவரத்தினங்கள் கொட்டி யிருக்கும். அவைகள் ஊதாரித் தனமாய்க் கைப்பணத்தை யிறைத்து அவதிப்படும் அற்பன் நடத்தைபோல் அவசரக் காரனுக்குத் தோன்றினும், அத்தனையும் ஒன்றுக் கொன்றுள்ள அமைதி நோக்கி தேவ சித்தத்திற் கொப்ப ஏற்படுத்தப் பட்டவை யென்று, ஐயந் திரிபற வுணரல் வேண்டு மென்று அகந்தையையும் மமதையையும் அகற்றி, "தான் பிடித்த முசலுக்கும் மூன்றேகால்" என்னும் பிடிவாதத்தையும் ஒழித்து அடக்கத்துடன் ஆய்ந் தோய்ந்து விசாரிக்கு மவனுக்குத் தோன்றாது போகாது. அந்த அழகுப் பெரும் அரண்மனையில் ஒவ்வொரு பாகமும்— அதிலுள்ள ஒவ்வொரு அறையும் அரங்கமும், மச்சும் மாடமும், வழிக்கென விட்ட வாயலும், படுப்போர்க் கமைத்த பாயலும், உண்டி வேண்டுவோர்க்கு உணவுத் தொகுதியும், தாகமெடுத் தோர்க்குத் தண்ணீர் தருதியும், அதில் வாழ்வுற்ற சீவராசிகளின் இயல்புகளும் ஏற்றப் படிகளும் — ஒவ்வொன்றும் சர்வோத்தம விதமாயும் ஒன்றுக் கொன்று மிகவும் இணக்கம் உண்டாகும் வகையாகவும் சர்வ வல்லவரான கடவுள் அமைத்திருக்கிறா ரென்பது ஆழ்ந்த அறிவினர்க்கு ஏற்படாது போகாது. அந்தோ! அவ் அரண்மனையிற் சற்று நேரமாயினும் உற்று நோக்காது மெத்த அவசரத்துடன் ஆற்றி லொருகாலும் சேற்றி லொருகாலும் என்கிற வண்ணம் தன் மனதில் முன் ஏற்பட்ட பிடி வாதத்துடன் கட்டின வீட்டில் கருத்து சொல்ல வருவார் அனேக ரிருக்கலாம்! இன்னோர், அந்த அரும் பெரும் மாளிகையில் வசிப்போர் யாவர், எத் தன்மையர், எத்தனை எண்ணினர், எத்தனை வகையினர், தாம் விசாரிக்க அல்லது யூகிக்கப் புகுந்த விஷயம் எவ்வளவு பெரியது, எவ்வளவு மாட்சியுடையது, எவ்வளவு வாசா மகோசர மானது, யூகிக்க புகுந்த நாம் எவ்வளவு சிறியர், எவ்வளவு அற்பர், எவ்வளவு வலி யில்லார், எவ்வளவு அறிவில்லார், நாம் அவ்விஷயத்தில் ஆத்திரப் பட்டுக் குற்றங் கூறுதல் எவ்வளவு அகங்கார மானது, தேவ தூஷண மானது, கெடுதி விளைக்கக் கூடியது என்பனவைகளைச் சிறிதேனுங் கவனியாது "கிணற்றுத்தவளை நாட்டு வளப்பம் பேசுவது" போலும், யானை கண்ட குருடர் ஒவ்வொரு வகை கூறியது போலும், தாம் நினைத்ததைக் கூறி அபராதங் தேடிக் கொள்ளுகிறார்களே தவிர வேறொன்று மில்லை.

இதுநிற்க, இப்பொழுது நாம் பேசிக் கொண்டு வருகிற செடி, கொடி, புல், பூ முதலிய தாவர வர்க்கங்களுள் அமைந்திருக்கிற ஏற்பாட்டின் அழகும், கண்ணுக்கு எட்டாத வெகு சிறிய இடத்திற்குள் அவைகளின் அங்க வுறுப்புகள் சன்னல் பின்னலாய்க் கலப்புற்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலை இடையறாதும் குறித்த குறிப்பில் சாதாரணமாய்க் குறையாதும் நடாத்திவருவதும் பார்ப்பதற்கு எவ்வளவு அற்புதகரமா யிருக்கிறது, கேட்கிறதற்கு எவ்வளவு வினோதந் தருகிறது, அறிவிற்கு எவ்வளவு அலுவல் கொடுக்கிறது? மேற் சொன்ன தாவர வர்க்கங்களைப் பற்றி தக்கபடி விவரணமாய்ப் பேச இங்கு முடியா தாயினும் கிருபைக் களஞ்சியமான கடவுள் தம் திருவருள் வழியாக இப் பூவுலகத்தினோர் பக்கல் உண்டா யிருக்கும் ஒப்பற்ற விருக்ஷமொன்றைப் பற்றிச் சிறிது பேசிச் செல்வது அத்தியாவசியகரமா யிருக்கிறது. தென் அமெரிகா (South America)தேசத்தில் பாழாயுள்ள பாறை யொன்றின் பக்கத்தில் உலர்ந்த இலைகளுடனும், பருத்த வேர்களுடனும், ஒரு மரம் ஓங்கி வளர்கின்றதாம். வருஷம் முந்நூற்றறுபது நாளாயினும், ஒரு நாளாவது அதற்கு மழைத்துளி காணுவது மஹா துர்லபமாம். வயிற்றிற்குக் கஞ்சியில்லாத வறியர் உடுக்கும் உடையும் பொத்தல் பொதிந்தவைகளும் அழுக்குக்கு அரசிடமுமா யிருப்பதுபோல், பானத்திற் கென்று வானத்தி லிருந்து நீர்த்துளி காணாததால், அந்தமரம் மெத்த வருந்தி செத்துப் போன கிளைகளாலும் வாடி வதங்கிய இலைகளாலும் மூடப்பெற் றிருக்கின்றது. இஃதிவ்வாறாயினும், அந்த மரத்தின் அடிப்பாகத்தைப் பீறிடச் செய்தால், மூவா மருந்தாகிய தேவாமிர்தம் போன்று தேகத்தைப் போஷிக்கத் தக்கதும் நாவிற்கு நல்ல ருசி கொடுப்பதும் ஆகிய திவ்யமான பால் அதினின்றும் பொழிகிறதாம். சூரியோதய காலத்தில் இந்த பால் வெகு அபரிமிதமாகக் கிடைக்கிற தென்றும், அவ்வூர்ச் சுதேசிகள் இதைக் கொண்டு போக கிண்ணங்களை யேந்தி நாலு மூலைகளி லிருந்தும் கூட்டமாய் ஒவ்வொரு காலையிலும் அந்த மரத்தண்டை வந்து சேருகிறார்களென்றும் ஹம்போல்ட் (Humbolt) எழுதுகிறா ரென்று ஆர்கானா ஆவ் நேச்சர் என்னுங்கிரந்த மெழுதிய தாமஸ் கோர்ன்ஸ், எம். டி., எம். ஆர். ஸி. எஸ். எல். (Arcana of Nature by Thomas Kerns, M. D., M. R. C. S. L., p. 181) தெரிவிக்கிறார். இந்த மரத்தின் பெயரே 'பசுமரம்' என்பதாம். பச்சைமரமா யில்லாததால் அதற்குப் பசுமர மென்று பெயர் வருவதற்கு நியாய மில்லா விடினும், பசுவைப்போன்று அது பால் தருவதால் 'பசுமரம்' என்று சொல்வதில் யாதொரு தடையுமில்லை. உலகத்திற் கெல்லாம் கிருபை ரூபமாகிய பசுவின்பால் கொடுத்துவரும் கடவுள்,

தம் அதியுன்னத சக்தியை விளக்கஞ் செய்வதற்கே போதும் விருக்ஷ ரூபத்தாலும் ஒரோவிடத்திலும் பாலளிக்கின்றனர். ஹா! ஹா! இவ்வித இயற்கை வனப்புகளின் இயல்பை யாம் என்னென்று கூறுவோம்! தான் வருந்தினும் தருமஞ் செய்தல் தலைமை என்னும் உதார குணம் வகித்து, தனக்குப் பருக நீரில்லாவிடினும் உடுக்க நல்ல உடை யில்லா விடினும், இந்த மரமானது தினம் தோறும் பால் தானம் செய்யும் பண்பு எவ்வளவு விநோதந் தருகின்றது! எவ்வளவு பாடங்கள் கற்பிக்கின்றது? வருவாய் நீங்கிய விருக்கமொன்று இவ்வளவு அசாதாரணப் பலன் தருவதா யமைத்த கடவுள் பெருமை அதனினும் எவ்வளவு மேன்மையாய் நமக்குப் புலப்படுகின்றது? மேலும் சூரியோதய காலத்தில் மாத்திரம் அவ்வளவு அபரிமிதமான பால்கொடுக்க நேருவது எங்ஙனம்? உயிர்களுக்கு வன்மைதரும் உத்தமனான சூரியனுக்கு கைம்மாறு செய்வது கடமை யெனக் கருதியோ, இவ் வோரறி வுயிரான தாவரம் பாலமுது படைப்பது! இவ்விநோதம் யாதெனக் கூறுவோம்!

III.

சர்வ வல்லமை யுடைய சர்வேஸ்வர னுடைய பெருமை எங்கெங்கு விளங்குகின்றது! காற்று நுழையாத இடமில்லை யென்று பழமொழியாய் நம்மவர் சொல்ல நாம் பன்முறை கேட்டிருக்கிறோம். இவ் வாக்கியம் சிறுபான்மை உண்மை யென்று சொல்ல லாகுமே தவிர, எவ்விடத்தும் எக்காலத்தும் பொய்பட்டுப் போகாத உண்மை யென்று சொல்வதற்கு இடமே இல்லை. சுமார் நாற்பது ஐம்பது மைல் உயரத்திற் கப்பால் காற்றில்லை யென்பது கலா விற்பன்னர் துணிபு. வாயுச்சாம்பி அல்லது வாயு வாங்கி (Air-pump) என்னும் யந்திரத்தால், காற்றில்லாம லிருக்கிற ஒரு இடம் இவ்வுலகில் நியமிக்கவும் கூடும். இஃதிவ்வா றானும் பெருமானுடைய அரிய சித்திரங்களும், அவரது எல்லை யற்ற அறிவும், வேறெதற்கும் இணங்காத சக்தியும், ஆழாழியினும் ஆழமாகிய அன்பும் விளங்காத இடம் நம் பூவுலகத்தில் மாத்திர மன்று, நாம் கண்டதும் காணாததும் அனுமானித்ததும் அனுமானிக்காதது மாகிய பிரபஞ்சத்தின் எம் மூலையி லாயினும் முடுக்கி லாயினும் கிடையவே கிடையாது. இது சொல்வதற்கு பிரபஞ்ச முழுதும் நாம் கண்டுணர்ந்து அறிந்து இருக்க வேண்டு மென்பது அவசிய மில்லை. பானைச் சோற்றிற்கு ஒரு சோறே பத மென்னும் நியாயமும், அண்டத்தி லில்லாதது பிண்டத்தி லில்லை, பிண்டத்தி லில்லாதது அண்டத்தி லில்லை என்னும் நியாயமும் இங்கு அனுசரிக்கற்பாலவை. அல்லாமலும், நான் இது காறும் அறிந்தமட்டும் நெருப்பைத் தொட்டால் சுட்டுக் கொண்டே யிருக்கிறது; இதற்கு

மாறான அனுபவம் நேரிட்ட தில்லை; ஆகையினால் நெருப்பைத் தொட்டால் எப்போதும் சுடும் என்பது போன்ற வேத னுமானம் Inductive Inference (முட்டில்லாத பல தனித் தனி அனுபவங்களால் முக்காலத்துக்கு மியைந்த ஒரு பொதுவான சித்தாந்த மேற்படுத்துவது) நியாயத்திற்கு ஒத்ததா யிருக்கிறது. இவ்வா றில்லாவிடின் இப்போது வழங்கி வரும் வேதனுமான தர்க்க சாஸ்திர (Inductive Logic) த்தை நாம் எந்த மூலையிற் கொண்டு போய்ப் போட வேண்டிவரும்? தூர திருஷ்டிக் கண்ணாடி (Telescope) யின் உதவியால் இப்பிரபஞ்சத்தின் பிரமாண்டத் (மஹத்தான விஸ்தீரணம், பெரிய உருவம்) தைப் பரிசோதித்தாலும் சரி, அணுதரிசினி (Microscope) யின் உதவியால் இப் பிரபஞ்சத்தின் நுண்ணிய உருவங்களை உற்று நோக்கினாலும் சரி, இரு புறமும் முடிவில்லாத சங்கிலியாய்ப் படர்ந்து கொண்டிருக்கக் காண்கிறோமே யொழிய, ஒருவரம்பு அல்லது முடிவை எங்குங் காண்கிலம். எவ் வெவ்வளவு அருமையான தூர திருஷ்டிக் கண்ணாடிகள் நாம் கண்டு பிடித்து அவைகள் சகாயத்தால் கோடா கோடி மைல் தூரத்திலுள்ள பார வஸ்துக்களைப் பார்த்த போதிலும் அதற் கப்பாலும் யாதோ இருப்பதாய் நம் அறிவையும் உணர்வையும் இழுத்துக் கொண்டு போகின்றது. மேலும் எத்துணை அருமையான அணுதரிசினிக் கருவிகள் நாம் கண்டு பிடித்து அணுப்போன்ற நுண்ணிய வஸ்துக்களை ஆராய்ந்தாலும், அதனினும் சிறியதாய வஸ்துக்கள் இருக்கிறதாய்த் தோன்றி, எல்லை யுள்ள அசித்த ஜீவராசிக ளாகிய நம் போல்வார் எல்லை யற்றதும் அழிவற்றது மாகிய பரஞ் சுடரின் முழுத் தோற்றத்தையும் கண்டு பிடித்துக் கரகத்தி லடைக்கப் பார்ப்பது எட்டுணை அசாத்திய மான காரிய மென்பதை விளக்குகின்றது.

நாம் இதுகாறும் தாவர சாதிகளைப் பற்றிச் சிலகூறி முடித்தோம். இதனால் தாவரசாதி களும் மிருக சாதிகளும் ஆகிய இருவகைகளும் உயிருள்ளவைக ளென்று யூகித்திருக்கக் கூடும். உயிரற்ற சடப் பொருளாகிய உலகம்—பூமி, சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், மலை, கடல் முதலியவை—எப்படி நெபுலா (Nebula) என்னும் புகை நிலைமையி லிருந்து இப்போது இருக்கும் நிலைமைக்குப் படிப்படியாய் வெளிப்பட்டுக் கொண்டு வந்ததோ, அவ்வாறே உயிருள்ள வஸ்துக்களும் (செடி கொடி, புல், பூண்டு, பலவகை மிருகாதிகளும் கடைசியாய் மனிதர்களும்) தோன்றின வென்றும், முதலில் ஒரே இயல்புள்ள வஸ்துவிலிருந்து பல விகற்பங்களுடனும் பல ஜாதிவகைக ளுண்டாகின்றன வென்றும் ஏகவஸ்துவி லிருந்து விகற்பங் கூறும் வாதிகள் (Evolutionists) போதிக்கிறார்கள். இவ்வாறு பிரபஞ்சம்

வெளிப்படுந் தோற்றத்தை விவரித்துக் கூறுங்கால், சில [illegible] தோன்றுகின்றன வென்று இவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்வதில் உண்மை யெவ்வளவு பொய் எவ்வளவு என்று நாம் சிந்திக்க வேண்டிய அவசிய மில்லை. இவர்கள் சொல்லும் பரிணமிப்புக் கிரமங்க ளெல்லாம் உண்மையைத் தவிர வேறொன்று மில்லை யென்று வைத்துக் கொள்வோம். இவ்விதமாய்ப் பிரபஞ்சத் தோற்றத்தின் கிரமத்தைக் கூறி அதனால் இவர்கள் யாது அனுமானிக்கின்றார்க ளென்று பின்னர் ஆராய்ந்தால், இவர்களுடைய பிசகு இன்ன தென்று நமக்குத் தெரிகிறது. இவர்கள் சொல்வதாவது:- உலகம் எப்படி உண்டாயிற்று? என்னுங் கேள்விக்கு நாம் விடை கொடுக்கத் தெரியாத வரையில், ஒரு விதமான ஆச்சர்யம் நம்மைத் தாம்பெனப் பிணிக்கின்றது; நம்மை நியாய விரோத மாகிய முடிவுகள் கூறும் படியாய் வற்புறுத்துகிறது; இப் பிரமாண்டத்திற் கெல்லாம் நாயகனாய் ஒரு பிரமம் ஆலோசனை செய்து கொண்டு அரசு புரிகிற தென்று நினைக்கச் சொல்லுகிறது; நம்முடைய அஞ்ஞா னாந்த காரமாகிய மந்திர வாதியின் மாயத்தாற் பரவசப்பட்ட நாம் பலவாறு பேயர்போற் பேசுகின்றோம்; தாம்பைப் பாம்பென மருள் கின்றோம், கானலைப் புனலெனக் கொள்கின்றோம்; "மருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பே" யென்பது போல், பிரபஞ்ச உற்பத்தி, விர்த்தித் தோற்றங்களை நாம் அறியாத வரைக்கும் இவ் வுலகத்திற்குக் கடவு ளாகிய காரணங் கற்பித்து அதனுடன் திருப்தி யடைகிறோம்! ஆச்சரியம் என்பது அஞ்ஞானத்தால் உண்டாவது; அஞ்ஞானம், காரணம்; ஆச்சர்யம், காரியம். ஆதலால் நாம் அனுபவ வழியைக் கொண்டே பிரபஞ்சத்தின் உற்பத்தி விர்த்திகளைப் படிப் படியாய் விளக்குவதால், நம்மை யழுத்திய அஞ்ஞானம் ஒழிந்து போய் விட்டது; அறிவாகிய சூரியன், நாம், எந்த வீதியிற் சென்றாலும், சந்தில் நுழைந்தாலும், மலையி லேறினாலும், பள்ளத்தி லிறங்கினாலும், காட்டில் போனாலும், நாட்டில் நடந்தாலும், நிலத்தி லிருந்தாலும், நீரில் மிதந்தாலும், எவ்வெவ் விடத்தி லிருப்பினும், ஞான பாஸ்கரன் தனது ஒப்பற்ற வெளிச்சத்தால் அங்கங்கிருக்கும் தோற்றங்களையும், அவைகள் பிறப்பு வளர்ப்பையும், வளர்ச்சி தேய்வையும் நமக்கு நன்றாய் விளக்குகிறான்! கலி நீங்கிவிட்டது! கடவுள், ஆகாய தாமரையும் முயற்கொம்புமாய் இறந்தொழிந்தனர்! அந்தகாரம் பறந்தது; கூடவே ஆச்சர்யமும் இறந்தது; நெபுலாப் புகைமுதல் மனித ரீறாக எப்படி பிரபஞ்சத்தோற்றம் பரிணமித்ததென்று நாம் ஐயந் திரிபறப் பிரசங்க மாரி பொழியும் போது, அதிகப் பிரசங்கித் தனமாய் அனாவசியமான ஒரு கடவு ளென்கிற காரணத்தை மூட னன்றி எவன் தான் கற்பிக்கத் துணிவன்! உண்மைக் காரணத்தையும்

உண்மைக் காரியத்தையும் நாம் விவரிக்கும் போது பொய்க் காரணமாகிய கடவுள் வரவேண்டிய நியாய மில்லையே—என்பவை போல்வன தாம் அவர்கள் சொல்லும் சாஸ்திர வசனங்கள். மேற் கூறியவை ஏகவஸ்து விகற்ப வாதிகள் எழுதிய வாக்கியங்களின் நேர் மொழிபெயர்ப் பன்று. ஆனபோதிலும், அவைகள் அவர்கள் சொல்லும் தத்துவத்தின் சாராம்ச மானவைதாம். இவ்விதமான பிரசங்கத்தை நாம் எவ்வாறு கொள்ள வேண்டுவது என்பது வெகு முக்கியமான கேள்வி. அவர்கள் சொல்லும் தத்துவத்தை நாம் சரியென் றொத்துக் கொண்டாலும், மேற் சொன்ன முடிவுக்கு அவர்கள் வர வேண்டியதே யில்லை யென்பது எம் மனதை வருத்துகின்றது.

இப்பொழுது அந்த முடிவுரையைப் பற்றிச் சிறிது பரி யாலோசிப்போம். திருஷ்டாந்தமாக, காலத்தை வரையறுத்து நமக்குக் கணக்கற்ற உதவிபுரியும் கடிகாரத்தை யெடுத்துக் கொள்வோம். கடிகாரஞ் செய்வதில் மடியா ஊக்கமும் உள்ளத் தேர்ச்சியும் வாய்ந்த ஒருவர் கடிகாரஞ் செய்தான பின்னர் அதிலுள்ள கருவிகளில் ஒன்றற் கொன்றுள்ள இயைபுகளையும், சக்கரங்கள் சுற்றுகிற சித்திரத்தையும், அதனால் முட்கள் அசைகின்ற முறைமையையும் நமக்கு விவரிக்கிறா ரென்று நினைத்துக் கொள்வோம். அல்லாமலும், அவர் அக் கடிகாரத்தை யியற்றினவ ரென்று நமக்குத் தெரியாதென்றும் வைத்துக் கொள்வோம். இந்த சந்தர்ப்பத்தில் பரிணாம வாதிகள் யாது கூறுவர்? கடிகாரத்தைப் பற்றிய இலக்கணங்களும் விசேஷங்களும் அவர்களுக்குத் தெரிந்தவுடன், தம் தலை சிமிர்த்தியும் முகமலர்த்தியும் அத்யந்த கௌரவ நோக்கம்பூண்டு "இவ் விஷயத்தில் நமக்கென்ன சந்தேகம்? கடிகாரம் எவ்விதமாய்ப் போகிறதென்று நமக்குத் தெரியாத வரையில், அளவில்லாத ஆச்சரியம் நம் மனதிற் குடிகொண்டு இஃதென்ன வேடிக்கை? கண்காட்சி யென்பது இப்படியன்றோ இருத்தல் வேண்டும்! கைக்குள்ளடங்கிய இச் சிறிய பொருள் காலத்தை வரை யறுக்கும் கோலத்தை நாம் என்னவென்று சொல்லுவோம்! சக்கரம் எப்படித் தானாய் சுற்றுகிறது? முள் எப்படித் தானாய் நடக்கிறது? இதை யியற்றிய புத்திமானும் சக்திமானும் யாவனோ? என்று பலவாறு சிந்திப்போம். ஆயினும், கடிகாரத்தின் உள்ளமைந்த கருவிகள் தன்மையையும் அவைகள் ஒன்றுக் கொன்று உண்டாயிருக்கும் சம்பந்தங்களையும் நாம் தெரிந்து கொண்ட உடனே, நம்முடைய முன் ஆச்சர்யம் காற்றில் இலவம் பஞ்செனக் கண்தெரியா தோடி விடுகிறது. நம் மனதில் ஆச்சரியத்திற்குப் பதிலாய் சமாதானம் குடியேறுகிறது. இந்த சித்த சமாதானத்தால் கடிகாரம் இவ்விதம் ஏற்பட்டதில் என்ன

ஆச்சரியம்? அதனுள் கருவிகள் இவ்வாறு தக்க ஒழுங்கில் அமைந்திருப்பதால், சக்கரம் தானாய்ச் சுற்றவும் முள் அசையவும் நேரிடுகிறது. இதை யியற்றிய புத்திமானும் சக்திமானும் யாவனோ? என்று நாம் இப்போது சிந்திக்க வேண்டியதில்லை" என்று தம் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவார்.

உலக மென்பது பல சரக்குக் கடை போன்றது. அதனிடம் வெகு உயர்ந்த வஸ்துவும் காணப்படும்; மிகத் தாழ்ந்த பொருள்களும் மிகுந்து கிடக்கும். நல்லதும் அகப்படும்; பொல்லாதும் அகப்படும். ஆதலின் அங்கு சென்று தம் உபயோகத்துக் கென்று யாதாயினு மொன்றை வாங்க விரும்புவோர், தம் நிலைமையையும் தேகமனோ சவுக்கியங்களையும், தமக்கு உள்ள ஆவலையும், வாங்க விரும்பும் பொருளினால் நேரிடும் குணாகுணங்களையும்—ஒவ்வொன்றையும் பன் முறை சிந்தித்துப் பின்னரே கொள்ள வேண்டும். இஃதே அறிவுடையோர்தமது அரும் பெருங் கடமையாகும். இதற்கிணங்க, மேல் யாம் கூறிய பரிணாம வாதிகள் நியாயம் நம் அறிவுக் கெட்டிய வரையும் ஆலோசித்தால் எவ்வாறு விளங்குகின்றது? அஃது, தத்துவ யுத்தத்திற் கென்று தலை நிமிர்த்துப் புறப்படுங்காலை, சத்துருக்கள் பொழியும் அத்திர மாரி படாது மெத்தத் திடமாய் நிற்கவும், மேனி யெங்கணும் ஹானி யடையாதிருக்கவும், பொருப்பினும் வலிய இருப்புக் கவசம் பூண்டிருக்கின்றதா? அல்லது குளிரினால் குன்றியும் வெயிலினால் வெந்தும் அம்பினால் அயர்ந்தும் ஒரு நிமிஷத்தில் மரண மடையத் தக்க கோலத்துடன் தோன்றுகிறதா? வெகு புத்தி கோசரத் துடனும் இளைக்கலாத ஊக்கத் துடனும், இயற்கையில் விளங்கும் உன்னதங்களை இம் மென்னு முன்னே கண்டு பிடித்துக் கணக்கற்ற உதவி புரிந்த கல்வி யாளரிடம் குற்றங் கூற வேண்டு மென்பது எமது கருத்தன்று. பத்து வருடம் மெத்தத் தமிழ் கற்றும் பாக்கள் பாடப் ப்ரதவிக்கும் பண்டிதர் பலபே ரிருக்க, ஓதாதுணர்ந்து உயர்தரக் கவிகள் செய்யும் உத்தமர்க்கு அருள் வல்லபமே எப்படிக் காரணமென்று சொல்ல விருக்கிறதோ, அவ்வாறே ஐயன் அருளாலேயே அளப்பரும் யூகம் பெற்று, அண்டாண்ட சராசரங்களையும் தம் அறிவு வன்மையாலேயே கடந்து, தமக்குப் பின்னால் தங்கிய பல்கோடி வருடங்களையும் பக்குவமாய் முழக்போட்ட பரம தயாள ராகும் டார்வின் (Darwin) முதலியோருக்கும் பழுது கூற வேண்டுமென்பது எமது விருப்பமன்று. ஒரு விஷயத்தில் யாம் மாறுபடுகின்றோ மென்பதால், அவர் விவரிக்கும் ஒவ்வொரு விஷயமும் வீணானது என்று வெகு ஜனத்தாரும் அறிய வேண்டு மென்பதும் எமது ஆவலன்று.

கடிகார உள் யந்திரங்களின் இயக்கங்களை யாம் அறிந்த வுடனே,

கடவுளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட வேண்டு மென்பது, முன் யாம் சொன்னபடி, பரிணாம வாதிகளுடைய அபிப்பிராயம். கடிகாரம் போவது அதிசயமா யிருப்பின், பல யந்திரங்களைப் பலவகையாய் அமைத்து அதற்குள் உயிரை ஆவாஹனம் பண்ணுகிறது அற்புத மானதன்றோ? என்பது நமது கேள்வி. கடிகார யந்திரங்களின் தன்மைகளை நாம் அறிந்த வுடனே, "அக்கக்கோ! எந்த சாமர்த்தியவான் இவ்வகை இவைகளை யியற்றினனோ? எப்பே ரறிவாளன் இவ் வபூர்வமான பெரிய காரியத்தைச் செய்தனனோ? அவன் அறிவே அறிவு! யூகமே யூகம்! அவன் இப்போது எங்கிருக்கின்றனனோ!" என்றல்லவா நாம் பலவிதமாய் ஆனந்தக் கடலுளழுந்தி ஆச்சர்யப் படுவோம். இவ்வாறே, பரிணாம வாதிகள் சொல்லுகிற முறையிலேயே நாம் பிரபஞ்சத் தோற்றத்தை யறிந்தக்கால், நம் ஆச்சர்யமும் விநோதமும் மேலிட்டுக் கொண்டே வருகின்றது. விஞ்ஞான சாஸ்திரம் கைவந்தவாறே, பிரபஞ்சத் தோற்றத்தின் படிக் கிரமங்கள் விளங்குகிறதே யன்றி, அவைக ளெல்லாம் தேவ சித்தத்தின் படி நடக்கின்றன வென்னும் உணர்வு மறைந்து போகவில்லை. அங்க வேறுபாடில்லாத வஸ்துக்கள் படிப்படியாய் பரிணமித்துப் பின்னர் செடி கொடி முதலிய தாவரப் பொருள்களாய்த் தோன்றி, அப்புறம் மீனும் பூச்சியும் பறவையும் விலங்குமாய்க் கடைசியில் மனிதராய் விர்த்தி யடைகிற இலக்கணம் பரிணாம வாதத்தால் உள்ளங்கை நெல்லிக்கனி போலும், வெள்ளிடைமலைபோலும் விளங்குகின்ற தாயினும், இவ்வகை வேறு பாடுகளைக் குறித்த முடிவுக்குப் பொருத்திய திருவருட்பெருமை பின்னும் பின்னும் விசதமாகின்றதே யன்றி அஃது மறைந்து போகவில்லை. சாஸ்திர ஞான நிபுணராகிய (Huxley) ஹக்ஸ்லி என்பவர் இவ்விஷயத்தை யநுசரித்துக் கூறுவதை ஒரு சிறிது இங்கு நோக்குவோம்: கடிகார வேடிக்கையால் அதை யியற்றிய புத்திமான் யாவனோ என்று நாம் ஆச்சரியத்தால் அனுமானம் செய்தாலும் செய்யக் கூடும்; ஆயின், முதலில் சாதாரண ஒரு குழல் (Barrel) ஆக இருந்தது படிப்படியாய் மாறுத லடைந்து கடிகார உருவமடைந்தால், இதைச் செய்த அறிவாளன் யாவன் என்று நாம் சிந்திக்க இடமில்லை என்று அபிப்பிராயப் படுகிறார். இதைப் பரிசோதித்து டாக்டர் ப்ளிண்ட் (Flint, D.D)என்பவர், இது தர்க்கத்திற் கிணங்காத வாதம் என்று மறுக்கிறார். கை கடிகாரம் செய்வதே அதியற்புதகரமாக இருக்க, மொத்தாகாரமான ஒரு குழாய் படிப்படியாய் கடிகார யோக்கியதை பெறுவது அதனினும் அற்புத மென்றும், அதற்கியைய எல்லா வன்மையையும் உள்ளே யடக்கி ஒரு குழாய் செய்தவன் புத்தி வெறும் கடிகாரம் செய்தவனுடைய அறிவினும் நுண்ணியதா யிருக்கவேண்டும் என்றும் மேற்சொன்ன ப்ளிண்ட்

என்பவர் வெகு சமத்காரமாக விரூபித் திருக்கிறார். அல்லாமலும் ஹெக்கலிப் புலவரும் தான் சொன்ன அபிப்பிராயத்தை மாற்றிவிட்ட தாகவும் இவரால் தெரிய வருகிறது. முடிவாகக் கூறு மளவில், ஒரு விஷயத்தை ஐயந்திரிபறப் படித்து, ஒரு வஸ்துவின் உற்பத்திக் கிரமங்களை அறிவதினாலேயே, அதன் இயற்றுதற் கருத்தா வேண்டிய தில்லை யென்னும் முடிவுக்கு வரலாகு மென்பது பரிணாம வாதிகள் கோட்பாடு. நீராவியந்திரம், புகைவண்டி முதலியவைகளின் இலக்கணங்களை நாம் நன்கறிவதால், அவை புத்தி பூர்வகமாய்ச் செய்யப் பட்டனவே யென்னும் சாதாரண உணர்வு நமக்கு உண்டாவதே அவர்கள் கொள்கையை மறுக்குமாறு காண்க.

IV.

இப் பரிணாம வாதிகள் கொண்ட முக்கியமான கொள்கைகள் யாவையென இப்போது சிறிது நோக்குவோம். உலகத்தில், நிற்பன திரிவன ஊர்வன நடப்பன பறப்பன போன்ற பல வகைப்பட்ட ஜீவராசிகளில் ஒவ்வொன்றும் தன்னைப் போன்றே ஜீவராசிகளை உண்டாக்குகின்றது. பூனைக்கு பூனைக் குட்டியும் யானைக்கு யானைக்குட்டியும் புலிக்குப் புலிக்குட்டியும் எலிக்கு எலிக்குட்டியும் மனிதர்க்கு மனிதக் குழந்தைகளுமாக உற்பவிக்கின்றதே யன்றி, பூனைக்கு யானைக்குட்டியும் புலிக்கு மான் குட்டியும் உண்டாகின்றதைக் காணோம். இவ்வாறே தாவர ராசிகளிலும், ஒருமரம் அல்லது செடியின் விதை அந்தமரம் அல்லது செடியை உண்டாக்குகின்றதே யல்லாமல், ஒரு மரத்தின் விதை மற்றொரு மரத்தை விளைவிக்கிற தில்லை. அவரை போட்டால் துவரை காய்க்காது, தேங்காய் நட மாங்காய் காணாது. இந்த இயற்கைத் தோற்றத்தைப் பரிணாம வாதிகள் பரம்பரைக் கிரமம் (Law of Heredity) என்று கூறுகின்றார்கள். இவ்விதம் கூறுவதனால் அவர்கள் எண்ணம் யாதென நாம் நோக்குங்கால் இவ்விதம் இயற்கைக் கிரமம் சடப்பொருள்க ளாலேயே உண்டாகின்றது என்று தெரிகிறதே யொழிய ஜகதாத்ம ஸ்வரூப மேன்மையை அவர்கள் உணருகின்றார்க ளென்று நமக்குத் தெரியவில்லை. தத்துவ சாஸ்திரிகளாய் நின்று உண்மையை யுணருவோர், மேற்கூறிய பரிணாம வாதிகள் கூறும் சாஸ்திரப் பொருளை வாஸ்தவ மெனக் கொண்டும், அது சடப்பொருளே யுண்டாக்கிக் கொள்ளும் கிரமம் அல்லது சட்டம் என்னல் சாலாது அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பொருளே இவ்வகை சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் காரணமென்று சொல்ல லாமே தவிர அறிவற்றதும் உணர்வற்றது மாகிய சடப்பொருள் தானே கண்ணை மூடியிருந்தும் வாய் திறவாதிருந்தும் விதி ஏற்படுத்திக் கொள்ளுகிற தென்று கூறுதல் சிரிப்புக் கிடமும் கேலிக்குக் காரணமு மாகுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

மேற்சொன்ன பரம்பரைக் கிரம மல்லாமலும், பேத விலக்கணம் (Law of Variabiity) ஒன்றிருப்பதாய் பரிணாம வாதிகள் கூறுகிறார்கள். தந்தை தாயரைப்போல் மகனிருப்பினும், அதாவது, மூதோர் வகுப்பிலேயே அவர்கள் பரம்பரையும் அடங்கப் பெற்று, பெரும்பாலும் அவர்கள் தோற்றத்தையும் தொழிலையும் அங்க அமைப்புகளையும் வன்மை வகைகளையும் அடைந்திருந்தாலும் ஒவ்வொரு சாதியிலும் பெற்றோரிடமில்லாத சில வேற்றுமைகள் பிறந்தோரிடம் காணப்படுகின்றன. மனிதக் கூட்டத்திற் சேர்ந்தோர் மனிதர்களாகவே யிருப்பினும், ராமனைப் போல கோவிந்த னில்லாமலும், கோவிந்தனைப் போல கோபால னில்லாமலும், ஒவ்வொருவ ரிடம் மாறுதல்கள் நாம் கண்டு கொண்டே யிருக்கிறோம். எல்லா விஷயத்திலும் — அழகிலும் அங்கத்திலும் நடையிலும் மொழியிலும் அனைவரும் ஒரேவித மிருக்கப்பெறின், ஒருவரை யொருவர் கண்டறிவ தெங்ஙனம்? இப்படியே கோடா கோடி ஜீவ ராசிகளிலும் கோடா கோடி வேற்றுமைகள் காண்கின்றோம். இவைகளை நாம் நினைக்கும் போதே, இத்தனை அரிய சித்திரம் வகுத்த புத்திமான் எவனோ, மனதில் வகுத்த மாண்பினை இயற்கையில் தொகுத்துக் காட்டும் செயற்கை வன்மை பூண்டவன் எவனோ, அவன்மீது நமது ஆர்வம் படிகின்றது, மனது நாடுகின்றது, வணக்கஞ் செல்கின்றது. மேற்கூறிய தோற்றத்தின் மாத்திரம் வேற்றுமைக ளல்லாது, தொழிலிலும் சிறிது சிறிது மாறத்தக்க அங்க வேறுபாடுகள் இங்கு மங்கும் நேரிடுகிற தென்றும், சுற்றியிருக்கிற வஸ்துக்களுக்கும் சுற்றி நடை பெறுகிற சக்திகளுக்கும் அவ்வக் காலத்திற் கொத்தபடி அமைந்து கொள்ளுகிற (Adaptation to Environment) தன்மை அவ் வேறுபாடுகளுக் குண்டாகுமாயின் அவைகள் நிலை பெறுகின்றன வென்றும் இப்படியே அனேக மாறுதல்க ளுண்டாகின்றன வென்றும் பரிணாம வாதிகள் கூறுகிறார்கள். உயிர் வாழ்தற் கென்று உண்டாகும் போரில் (Struggle for Existence) வன்மை யுள்ளவைகள் மாத்திரமே நிற்க, மற்றைய பலஹீன மமைந்த வஸ்துக்க ளெல்லாம் மறைந்தொழிகின்றனவாம். எஃதெப்படி யாயினும், உலகப் பரிணமிப்புக் கிரமத்தில் உயர்வே அதிகமாகி படிப்படியாய் மேன்மை யுறுகின்ற தென்பது நன்கு விளங்குகின்றது. மடப்பொருளாகிய சடப்பொருளே பரிணமிப்பதென்றால், சுற்றியுள்ளவைகளுக்கு ஒத்த மாறுதலாயே ஏன் உண்டாக வேண்டும்? இயற்கைச் சீதோஷ்ண இழவுகளுடனும், ஒன்றை யொன்று விழுங்கி யேப்பமிடும் ஓலஞ்ச முள்ள உயிர்களுடனும், உயிர் வாழ்தற்கென்று உண்டாகும் போரில், உள்ளதும் ஒழிந்து நல்லதும் போய் "வரவர மாமி கழுதைபோ லானாள்" என்கிறபடி அழிந்து அடங்கிப்

போவது தானே? நைந்தும் நொந்தும் நாசப்படுவது தானே? தாழ்வை றுத் தடுமாறிக் கிடப்பது தானே? இவ்வாறு நிகழாமல், சிற்ப சாத்திர விற்பன்ன னொருவன், மெத்தத் திறமையாய் உத்தேசித்த சித்திர கை படிப்படியாய் கட்டப்படினும், முடிவில் மச்சுடன் மாளிகை அந்த சந்தத்துடன் விளங்குவது போல், பிரபஞ்சத் தோற்றமும் சி சிறிதே யோங்கி, புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகி பல்வகை மா னும், வரிசைக் கிரமத்தில் வளப்பம் அடைந்திருப்பதே கடவு ளுண் னும் சக்தியைப் பலப்படுத்துகின்றது. (Theism by Professor I LL, D.)

இந்த பரிணாம வாதத்தைப்பற்றி இதுவரையில் நாம் செ விஷய மல்லாமலும் மற்றொன்றும் நாம் இங்கு கூறவேண்டி யிரு றது. சடப்பொருளே இப்போது தோன்றும் பிரபஞ்ச முழுவது பரிணமித்தது என்று கூறுவது சந்தேகத்திற் கிடமாயும், வி விளைப்பதாயும், ஆக்ஷேபத்திற்கு ஆளாகியு மிருக்கிற தென்று ப மார்டினோ (Martineau, S. T. D., D. D., D. C. L., LL என்னும் நீதி சாஸ்திர நிபுணர் அபிப்பிராயப் படுகிறார். சத்த சட ருள்கள் வேற்றுமையாலேயே இப்போது தோன்றுகிற வண்ணம் உண்டாய் விட்ட தென்றல், இடை யிடையே அவைகளைத் தடை யும் சால் விலங்குகள் காணப்படுகின்றன வென்று அவர் கூறு அவர் சொல்வதாவது: சடப்பொருள்கள் ஒன்றுட னொன்று சே வேறுபாடின்றி தோன்றுவனவாயின், புளியங்காய் உருவி லிருந்த ளிக்காய் உருவமைந்தும், மண்ணாங் கட்டிகளா யிருந்தது மலையின் யடைந்தும் மலையாய் இருந்தவை மண்ணாங் கட்டிகளாயும் உரு பேதப்படுமே யன்றி வேறொன்றுங் காணாது. பி[illegible] அணுக் சேர்க்கை ஒருவிதமா யிருப்பதால் ஒருவகைத் தோற்றமும், மற் விதமா யிருப்பதால் மற்றொரு வகைத் தோற்றமும் உண்டாகு மெ சர்வ சம்மதமாயும் நியாயத்திற் கொத்ததாயு மிருக்கின்றது. இதை பிரகிருதியே காரணமாக உணர்ச்சி யுண்டாயிற்று என்றும், அறி டாயிற்று என்றும் எவ்வகை கூறலாகும்? சடப்பொருளின் சேர்க்கையாலே, சடப்பொருள் லக்ஷணத்திற்கு முற்றிலும் மா உணர்ச்சி எவ்வகை உண்டாகக் கூடும்? உணர்ச்சி மூளையுடன் ச பட்டிருக்கக் கூடும், அன்றியும், சடப்பொருள்கள் பரிணமிப்பின் நிலைமையில் தோன்றக்கூடும். இதனாலேயே, உணர்ச்சி யென்பது யின் காரியமென்றாவது, சடப்பொருள் பரிணமிப்பின் அந்த நி காரியமென்றாவது சொல்லுதல் தருக்க சாத்திரத்திற்கு முற்றிலு

வாதது. திருஷ்டாந்தமாக, இரைப்பை(Stomach)யின் தொழிலை நோக்குவோம். நாம் உண்ணும் உணவு இரைப்பையில் சென்ற வுடனே, அன்னாசயத் திரவ (Gastric juice) த்தின் சேர்க்கையால் ஒருவிதம் மாறுதல் அடைகின்றது. இப்படியே மூளை (Brain) எவ்வெவ் விதமாய் வேற்றுமை யடைந்தாலும் அது சடப்பொருளின் மாறுதலா யிருக்க வேண்டுமே யன்றி, சடப்பொருள் இலக்கணத்திற்கு வேறுபட்ட உணர்ச்சி யுண்டாதலும் அறிவுண்டாதலும் கூடாவே! இவ் வுணர்ச்சி அறிவாதிகளாகிய மனத் தோற்றங்க ளெல்லாமலும், நம் மனதில் எந்நேரமும் செம்மையுடன் போதிக்கும் மனச்சாட்சி யென்ப தொன் றிருக்கின்றது. இது நம் மனமாகிற சிம்மாதனத்தில் வீற்றிருந்து, நற்போதனை யாகிற செங்கோல் தாங்கி, நாம் விழித்துள்ள வரையும் விழித்திருந்து ஓயாக் கொலு நடத்துகின்றது. கப்பலொன்று கிழக்கே சென்றாலும் மேற்கே சென்றாலும் தெற்கே போனாலும் வடக்கே போனாலும், சுற்றிச் சுற்றி நகர்ந்தாலும், எவ்வெக் காலத்தும் அக் கப்பலிற் பதித்த திசையறி கருவி (Mariner's Compass) எப்படி ஒரே திக்கைக் காட்டுகின்றதோ, அப்படியே, நாம் பிறவிக் கடலில் துன்பமாகிற அலைகளால் மொத்துண்ட காலையும், ஆனந்த வாரியில் அமிழ்ந்தாறும் போழ்தும், கெட்டகாலத்திலும் நல்ல காலத்திலும்—ஏக ரீதியாய் செய்யத் தக்க நன்மையையே நம் மனச்சாட்சி காட்டுகின்றது. இவ் அபூர்வ போதகா சிரியர் ஒரே நிலை வாய்ந்தவர்! அணுவில் அணுவாகியும் மஹத்தில் மஹத்தாகியும் அரசு செலுத்தும் ஐயன் தன் ஆஜ்ஞாசக்கரமே, இவ்வகை நம் மனதில் இருள் போக்குகின்றது போலும்! கடவுள் கருணையாலேயே நம்மிடம் அமர்ந்து, அவர் தம் விருப்பத்தையும் கட்டளையையும் நமக்குக் காட்டி நல்ல வழியில் நம்மைச் செலுத்தியும், நாம் பிசகிய காலங்களில் உள்ளத்தில் நாற்பதாயிரம் தேள் கொட்டினது போல் வருத்தியும் நாளடைவில் நாணயம் விளைக்கிற யதார்த்த வாதியும், கடவுள் அம்சமும், ஒப்புயர் வற்றதும் ஆகிய மனச்சாட்சியும், மண் முதலிய பஞ்ச பூதங்களின் காரியமோ! நன்று நன்று நும்மதி யிருந்தவா! என்று நகைக்கின்றனர் மார்டினோ புலவரும். 'கொன்னைக் கண்ணனைச் செந்தாமரைக் கண்ணன்' என்பது போன்றும், 'மொட்டைத் தலையனைக் குந்தலழகி' யென்பது போலு மன்றோ இருக்கின்றது, அசேதனமான பஞ்ச பூதங்களால் மஹோன்னதமான அதாசைதன்யமும், மற்றைய உணர்ச்சி யறிவாதிகளும் உண்டாகிறதென்று உரைத்தல்? இக் கஷ்டத்தை நோக்கியே லீப்னிட்ஸ் (Leibnitz) டின்டல் (Tyndall), ஹெக்கல் (Haeckel) முதலிய புலவர்களும், சாதாரணமாய் சட பதார்த்தங்களின் மூலாதாரப் பொருளின் இலக்கணங்க ளென்று கொள்ளப் பட்

டவைகளை மாற்றி அதனிடம் உணர்ச்சி யறிவாதிகளின் மூல காரணம் அடங்கி யிருக்கின்றதென்று கதியற்று விதியில்லாமல் அடைக்கலம் காட்டுகிறார்களென்று மார்டினோ துரையவர்கள் கூறுகிறார். இவ்வாறுயின் சாதாரணமாய் சடபதார்த்தமென்று கொள்ளப்பட்டது ஒடி யொளித்துக் கொள்ளுகிற தென்பது பசுமரத் தாணிபோற் பதிந்து நாட்டப்படும். (Types of Ethical Theory by Professor Martineau, S. T. D., D. D., D. C. L., LL. D. VOL. II, pp. 393-400.)

தாவர ஜீவராசிகளைப் பற்றிப் பேசிக்கொண்டு வரும்பொழுது, நாம் அவைகள் சம்பந்தமாய் பரிணாம வாதிகள் விஷயத்தைச் சிறிது ஆலோசிக்க நேர்ந்தது. இஃது நாம் நினைத்த அளவுக்கு மிஞ்சிப் போய்விட்ட போதிலும், கடவுள் ஒருவருளரெனக் கொள்ளுதல் அவர்களுடைய கொள்கைகளுடன் முரண் படுவ தல்லவெனச் சிறிது நிரூபித்தோம். இப்போது ஜீவராசிகளின் தோற்றங்களுட் காணப்படும் சில விநோதங்களைக் கூறி வேறுவிஷயங்களுக்குவிரைந்து செல்லல் வேண்டும். ஜீவ ஜெந்துக்களில் ஒன்றுக்கொன்று போருண்டாகின்றதென்றும், இவ் வுயிர் வாழ்க்கைக்கென்று உண்டாகும் போரில், வன்மை யுள்ளது வலியில்லாததை மாய்த்துவிடுகிறதென்றும் முன்னர் கூறி யிருக்கிறோம். இந்த சங்கடத்தினின்றும் தங்களை நிவிர்த்தி செய்து கொள்ள சில ஜீவ ஜெந்துக்களுக்கு உண்டாயிருக்கும் சக்தியை நோக்கும் போது நமக்கு அளவில்லாத ஆச்சரியத்தையுண்டு பண்ணாமற் போகாது. இன்றே இவ்வேளையே கொன்று தின்போமென்று, அதிபல மாகிய எதிரிகள் நேரும்போது, அவைகளினின்றும் தப்பிப் பிழைக்க, ஏறக்குறைய எல்லா மீன்களும் அநேக கம்பளிப் பூச்சிகளும் தாங்கள் எவ்வெவ் விடங்களில் எவ்வெப் பொருள்களின் நடுவில் இருக்கின்றனவோ, அவ்வவ் விடங்களில் அல்லது பொருள்களின் வடிவமாக ஒரு நிமிஷத்தில் மாறி விடுகின்றனவாம். இப்படி இருப்பது எதற்காகவென்றால், அவைகளின் எதிரிகளுக்குத் தாம் அங்கு இருப்பது தெரியா திருப்பதற் காகத் தான். அநேக முயல்கள், அதி உத்தர தேசத்தில் மலைப் பாங்குகளிலும் சப்பம் புல் வெளிகளிலு மிருப்பவை, கோடை காலத்தில் நீல நிறம் பொருந்தியும், மழை காலத்தில் பனி உறைந்திருக்கும்போது வெண்மை நிறமாக மாறியும் கண்ணுக்குத் தெரியாது தப்பித்துக் கொண்டிருக்கின்றன. அதி யுத்தர தேசமும் பனி பூத்த இடமுமாகிய ஆர்க்டிக் (Arctic) பிரதேசங்களில், கண்ணிமைப் பொழுதில் அல்லது கைந்நொடிப் பொழுதில் சுற்றுப் பக்கங்களுக் கேற்க நிறம் மாற்றிவிடும் அநேக ஜந்துக்க ளிருக்கின்றனவாம். இது மாத்திரமா? ஆகாயத்தில் மின்னும் நக்ஷத்திரங்களுக்கும், கடற்கரையிலுள்ள மணலுக்கும்

கணக்கு ஏற்பட்ட போதிலும், அனைத்தையும் படைத்த அண்ணலின் தொழிலுக்கு அளவு ஏற்படாது. மேற் சொன்னபடி அற்ப ஜந்துக்கள் தங்களை மறைத்துக் கொள்வதால் மாத்திர மன்று, தம் எதிரிகளினின்றும் தப்புவது. வேடம் பூண்டு நாடக மாடுவோர், வேலைக்காரனிலிருந்து வேந்தராய் விடுவதுபோல், பலமுள்ள எதிரி மிருகத்தைப் பார்த்தபோது பலங்குன்றிய மிருகங்கள் தம் இயற்கை யுருவினைத் தவிர்த்து தம்மைக் கொல்ல நேரும் மிருகத்தின் உருவமும் தாங்கி விடுகின்றனவாம்; அற்பத் தன்மை யொழித்து எதிரியின் பொற்படைந்து விடுகின்றனவாம். இவ் விகடமாகிய விஜயத்தின் வழியாக எதிர் தோன்றும் மிருகங்கள் ஏமாந்து போய்விடுகின்றதால், இதற்கு மிருகங்களின் விகடம் (Mimicry) என்றே பெயராயிற்று என்று ஆங்கில விஞ்ஞானிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். (Beauties of Nature by the Right Hon. Sir John Lubbock, Bart. M. P., F. R. S., D. C. L., LL. D. pp 28 to 32. Also 'Realm of Nature'? Mill, D. Sc., Edin., p. 320)

V.

இப்பொழுது நாம் அடிமேலடி வைத்து, சுத்த ஜடப்பொருள்களினின்றும் மானஸ இலக்கணங்கள் பொருந்திய மிருகங்கள் வரையும் வந்து சேர்ந்தோம். மனது என்னும் உன்னத மானதும் அபூர்வ மானது மாகிய கருவி, மனித ரிடத்தில்தான் மிக்க மேன்மை யடைந்திருக்கிறது. மற்ற மிருகங்க ளிடத்தில் காண லாகாத சம்பாஷணை சக்தியும், எழுதும் வன்மையும் இவர்களிடம் உண்டா யிருக்கின்றது. ஆதலால், இவர்கள் மனம் நோய்மை யின்றி தூய்மை பூண்டு மேன்மேலு மோங்கி வளருகின்றது. இதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள பாஷை யாகிற அமைப்புதான். சாதாரண மிருகங்க ளிடத்தில் பாஷையாகிற பொக்கிஷ மில்லாததால், அவைகள் அவ்வக் காலத்திற் கேற்றபடி தனித்தனி தோற்றங்களை யனுசரித்து நடந்து கொள்ளக் கற்றுக் கொள்ளுகின்றனவே யன்றி, சமுதாயப்படுத்தி ஆலோசிக்கவும் நியாயந் தெரிந்து கொள்ளவும் சரிப்படுகிறதில்லை. அவைகளுக்கு இக் குறைவாலேயே, சாதாரண புத்தி(Intelligence) உண்டாயிருக்கின்றதென்று சொல்ல லாகுமே தவிர விஞ்ஞானம் (Intellect) இருக்கிறதென்று சொல்வது அசம்பாவிதமா யிருக்கிறது. அவைகளிடம் அநுதாபம் (Sympathy) காணப்பட்ட போதிலும், நீதி சாஸ்திரம் (Ethics) காணப்பட வில்லை; அவைகளுக்கு மனோசலனம் (Emotion) இருந்த போதிலும் மனச்சாட்சி (Conscience) யென்பது கிடையாது. மனிதர்களோ இவ்வித மல்லர். தாம் கண்ட தோற்றங்களைக் குணப்பொதுமை நோக்கி சமுதாயப் படுத்தி இயற்கையி லில்லா

விடினும் தம் மனதிலேயே பதங்கள் ஆகிற குறிப்புக(symbols)ளால் நிலைப்படுத்தி இவைகளைச் சொல்வதால் ஒருவருடைய மனதைப் பிற ரறியவும், நியாயம் பேசவும், தர்க்கஞ் செய்யவும், முடிவு கூறவும் நேரிடுகின்றது. ஒப்புயர்வற்ற மனத் தோற்றங்கட்குக் காரணம், பேச முடிதலும் பாஷாபிவிர்த்தியும் தான் என்று தாம்ஸன் (Dr. Thomson) என்னும் மேதக்க தார்க்கிகரும். ஜி. எச். லூயிஸ் (G. H. Lewes) என்னும் தத்துவ நிபுணரும் அபிப்பிராயப்படுகிறார்கள். சார்ல்ட்டன் பாஸ்டியன் எம்-ஏ, எம்., டி., எப்-ஆர்-எஸ்-என்பவரும் இவ்விதமே கூறுகிறார் (Vide, The Brain as an Organ of Mind by A. Charlton Bastion, M. A., M. D., F., R. S.—pp. 411- 427).

இவ்வாறு மனிதரிடம் அமைந்த மனத் தோற்றங்களை விபாகப் படுத்தியும் சமுதாயப் படுத்தியும், விவரித்துக் கூறுவது, மனோதர்ம சாஸ்திரம் (Psychology) எனப்படும். நம்முடைய அறிவு வகைகளையும், உணர்வு வேற்றுமைகளையும், சித்த உறுதியின் பாகுபாடுகளையும், அவைகளால் நமக்கு ஏற்படும் அநுமானங்களையும் பெருகக் கூறின் இவ் வியாசம் விரியு மாதலால் வெகு சிறிதே கூறி முடிப்பாம்.

மனதென்பது சடப்பொருளின் காரியமல்ல வென்று யாம் முன்னமேயே குறித்திருந்தோம். ஆயினும் நம் மூளைக்கும் மனதுக்கும் இணைபிரியாத சம்பந்தம் நேரிட்டிருப்பதாய்த் தெரிகிறது. சடப்பொருளிற்கு இட விஷயத்தில் பரிமாணம் ஏற்பட் டிருப்பதும் மனதுக்கு அவ்வகைப் பரிமாணம் கூறமுடியா திருத்தலுமே தான் அவைகளுக்குள்ள வித்தியாசம். மூளை சடப்பொரு ளாக, மனதோ சித்துப் பொருளாகும். இவ்விதமாய் ஒன்றுக்கொன் றொவ்வாத குணங்களைப் பெற்றிருக்கும் சடப் பொருளுக்கும் சித்துப் பொருளுக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டிருப்பதை நாம் அறிகிறோம். பூனையும் எலியும் உறவாடக் கண்கிறோம். பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்கும் வண்ணம், பக்ஷபாத மின்றி பரம தயானத்துடன் செங்கோல் செலுத்தினோர் சிலர் என்று நாம் கேட்டது உண்மையாய் இங்கு உபமானம் கொள்ளற்பாலது. எல்லாராலும் அறிந்தும் அறியப் படாதவனாய், நம் மனத்தகத்தே நிலைத்திருந்தும் மனதை மீறிய மாண்பினனாய், ஒளியைக் காட்டி இருளை விளக்கும் ஒப்பற்ற அற்புதனாய், சொல்லுக் கடங்கியும் சொல் லொணாத வண்மையனாய், எல்லாமாகியும் எல்லாமாகாத இறைவன் அருட்சக்தியும் அறிவுப் பெருக்கும் இங்கு வர்வர விசத மாகின்றது. சடப்பொருளைக் காட்டினும் சக்தியே கிடையா தென்னும் சடவாதிக ளாகும் அடவாதிகள், மனது சடப்பொருள்களின் காரிய மாதலின் சடமென்றும் சித்தென்

றும் இரண்டு தனித்தனி பொருள்கள் கிடையா என்று ஒழித்து விடுகிறார்கள். அருபசித்து வாதிகள் நம் மனதினின்றும் விவகாரம் செய்து கொண்டே உள்ள தெல்லாம் சித்துப் பொருள்களே சடப்பொருள் பொய் என்று தள்ளிவிடுகிறார்கள். இரண்டும் உளவென்னும் ஜகஜீவ வாதிகள் சித்துக்கும் சடத்துக்கும் உண்டாகிய சம்பந்தத்தை விவரிக்க நம்மாலாகாது, அது தெய்வச் செயலாய் நடக்கிற தென்று முடிக்கிறார்கள். (Vide, Outlines of Psychology, by James Sully, M. A.). இஃது எவ்வாறாயினும் சடப்பொருளே சித்துப்பொரு ளாயினும் சித்துப் பொருளே சடப்பொரு ளாயினும் இரண்டும் தனித்தனி யிருப்பினும், இந்த சம்பந்த விஷயத்தில் நமக்கு அளவில்லாத ஆச்சர்யம் விளைகின்றது. பரத்துவ மாகிய சிரப்பொரு ளில்லாது அநித்திய மாகிய அசித்தால் இவ் வினோத மெல்லாம் விளைவன என்று சொல்லல் மலடி பிள்ளை பெற்ற கதையாய் முடியு மல்லவா!

பிரகிருதி யாகிய அசித்துப் பொருள்களிடம் ஆகர்ஷண சக்தியானது எவ்விதம் ஒப்பற்றதாய் விளங்குகிறதோ, அவ்விதமே சித்துப்பொருளிலக்கணத்திலும் சம்யோக நியமம் (Law of Association) என்று ஒரு ஏற்பாடு காண்கிறது. இப்படிப்பட்ட இயல்பு நமது மனதில் அமைந்திருப்பதால் தான், நாம் பார்க்கிற உலகம் உலகமாய்க் காண்கிறது. நமது குழந்தைப் பருவமுதல் இந்த சம்யோக நியமமே ஒவ்வொரு தோற்றத்தையும் ஒழுங்குபடுத்துகிறது. முதலில், ஒரு வஸ்துவினால் நமக்குண்டாகிய சுக உணர்ச்சி காரணமாக அதனிடம் காணும் தோற்றங்களனைத்தையும் ஒக்கச் சேர்க்கிறோம். முதலில், இன்பம் தந்த ஒருகுணமே வஸ்துவினிடம் சார்ந்த, அதற்குப்பின் அதனிடம் தனித்தனி காணப்படும் வேறு குணங்களையும் ஒருங்கு கூட்டி வஸ்து பாவனை செய்கிறோம். அதன்பிறகு அந்த வஸ்து என்கிற பெயர் சொன்ன மாத்திரத்தில் எல்லாக் குணங்களும் ஞாபகத்திற்கு வந்து விடுகின்றன. இப்படியே நமக்குப் பிரபஞ்ச முழுவதும் தோன்றுகின்றது. நமது மனது இல்லாவிடின் உலகமேயில்லை. மனதின் இயக்கத்துக்கு அதிகாரியாயே மேற்சொன்ன சம்யோக நியமமே உலகத் தோற்றங்களை விமரிசைப் படுத்துவது. இதனா லன்றோ, நமது மன வாழ்க்கை முழுவதும் எண்ணங்களை ஒருங்கு சேர்த்தலின் அபிவிர்த்தியே என்று பால்ட்வின் என்பவர் தம்முடைய மனோதத்துவ சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறார். (Elements of Psychology by James Mark Baldwin p, 161.) இந்த மனோதத்துவ நியதியில், சமீபவஸ்து சம்யோக நியதி (Association by Contiguity) என்றும் உவமானவஸ்து சம்யோக நியதி (Association by similarity) என்றும் இருவகைப் பட்டன. ஒரு

சிநேகிதனைப் பார்த்த மாத்திரத்தில் அவனைப் பார்த்த இடம் முதலியவைகளை ஞாபகம் செய்வதும், ஒரு வஸ்துவைப் பார்த்த மாத்திரத்தில் அதைப்போன்ற வஸ்துவை ஞாபகம் செய்வதும், உதாரணங்களாம். இத்தகைய சக்தியாலேயே நாம் கைத்தொழில் சித்திரத்தொழில் சங்கீதம் முதலியவைகளில் விர்த்தியாக நேரிடுகிறது. அல்லாமலும் மனதின் ஞாபக சக்தியும், கற்பனா விஷயங்களுக்குப் பொருந்து மாறு நமக்கு வேண்டியவைகளைப் பொறுக்கிப் பின்னர் நம் இஷ்டப்படி ஒன்று சேர்த்துப் பாவித்த (Constrnctive imagination) லும் மிக அபூர்வமானவைகளே. இதனாலேயே கவிதா சாதுர்யமும், சாஸ்த்ராபி விர்த்தியும் பலவாறு விளைகின்றன. இதையே, நியூடன் பொறுமையான எண்ணம் (Patient thought) என்று கூறியது. இவைகளை யறிந்தும் கடவுளில்லை யென்பது மடைமையே.

௩-வது அத்தியாயம்.

சுற்றுச் சுழற்சியும் சற்று வெளிச்சமும்.

I.

ஞான வரம்பற்ற மஹா விஷயங்களை வரம்புடைய அறிவின ராகிய நாம் ஆலோசிக்கப் புகுந்தால், எப்பக்கம் பார்த்தாலும் சுத்த இருளாய்த்தா னிருக்கும்; எங்கும் கலக்கங்களும் மயக்கங்களும் மிகுந்திருக்கும்; ஓர் சமயம் துரியோதனனுக்குத் தோன்றினபடி, நிலமே ஜலமாயும் ஜலமே நிலமாயும் பலவிதம் மாறுபட்டுக் காட்டும். எத்திக்கும் தெரியாது மெத்த விழிக்கச் செய்யும் சுற்றுச் சுழற்சி (Labyrinth or Maze) யே இதற்கு ஒத்த உபமானமாகும். இதில் வந்த வழியை விட்டுச் சந்து சந்தாய்ச் சுற்றியும் சுழன்றும் எத்தனை வருத்தப் பட்டாலும், கை யோய்ந்து காலோய்ந்து, உற்சாகமும் மாய்ந்து பொழுதும் சாய்ந்தாலும், வெளியில் வருவதோ வீறிட்டழுதாலும் சுலபத்தில் ஆகாத காரியமே. இஃது இப்படியாயினும், அதன் அளவுகண்டு உளவறிந்த காட்சியினர் நாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் வெளியில் வந்து விடுகிறார்கள். மலைகளும் குன்றுகளும், அருவிகளும் கணவாய்களும், ஆறுகளும், அடவிகளும் எங்கெங்கும் நிறைந்து கிழக்கும் தெரியாது மேற்கும் தெரியாது, புதிதாய் வருபவர்களைப் பூர்த்தியாய் மயக்கிவிடும் பிரதேசங்களிலும், அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்து அவ் அடவியிலேயே சஞ்சரித்து, அவ் ஆற்றிலேயே முழுகி, அந்த மலைமீதும் மரங்கள்மீதும் பூவிலும் பழத்திலும் கொடியிலும் செடியிலும் தவழ்ந்த காற்றையே தமக்குச் சுவாசாதாரமாய்க் கொண்டு விளங்கும் சுதேசிகள் அப் பிரதேசங்களின் மூலைகளையும் முடக்குகளையும் நன்றா யறிந்திருக்கிறார்கள். பார்ப்பாரப் பிள்ளை நண்டு பிடிப்பது பரமகஷ்டமாயினும், செம்படப் பிள்ளை செம்மையாய் நீந்துதற்கு வாத்தியா ரொருவர் வரவேண்டுவ தில்லையே! இப்படியே உத்தமத்தில் உயர்ந்த தத்துவ விஷயங்களை உற்று நோக்குங்கால், எத்திசை நோக்கினும் கஷ்ட திசையாயே முடிகிறது: கண்ணை மூடுகிறது; கலக்கம் விளைக்கிறது: மயக்கம் காண்கிறது; மனதும் சலிக்கிறது. நாஸ்திகவாதம் நன்றாய்ஓங்கி நலம் பெறுகின்றது! இதனினும் பதின்மடங்கு கொடிய தாகிய சம்ஸயவாதம் துளிர்க்கின்றது! கடவுள் உண்டென்கிறார்கள் சிலர்; கடவு ளில்லவே யில்லை; இயற்கையே உண்டு, இறைவனும் அது தான், சடமும் அது தான்; சடமே தந்தை, சித்தே குழந்தை என்று சில்லோர் கூறுவர்! கடவுளைப் பார்த்தோமா கண்ணாலே யென்பர் சிலர்! ஐந்தும் ஐந்தும் பத்து என்பது போல், ஐயனுண் டென்றும் நாம் உய்வதற்கு அவனே வழியென்றும் அனுமானம்

கொண்டு யாவரே வருவர்? என்பார் மற்றுஞ் சிலர்! எங்கும் சந்தேகமே, எங்கும் அந்தகாரமே, எங்கும் மாயையே, எங்கும் அஞ்ஞானமே யாய், சித்த சமாதானம் போய், புத்தி நிலையற்று பேச வகையற்று விழிக்கின்றோம். நம்மைக் கவிழ்ந்து நாலு பக்கங்களிலும் மாயையாகிய மேகக் கூட்டம் ஓயாமல் சஞ்சரிக்கின்றது. * * * * இவ்விதம் எண்ணங்கொள்வதே இருக்கிற உயிரையும் போக்கடித்து விடுகிறது! நைந்த உடம்பை நாராக்கி விடுகிறது! இருட்டால் வந்த குருட்டுத்தன மல்லாமலும், எப்பக்கம் பார்க்கினும் துக்க சாகரமா யிருக்கின்றதே! தாயை யிழந்த சேய்கள் எத்தனை ஓயாது என்றும் ஒரே அழுகை விளைக்கின்றன; கணவனை யிழந்த கைம்பெண்கள் காலங் கழிக்கும் கஷ்டத்தைக் கூற கடவுளாலு மாகாதே! கையறுந்து வருந்துவார் ஒருபுறம்; காலொடிந்து வீழ்ந்தனர் மற்றொரு புறம்; மணக் கோலமே பிணக் கோலமாய் மாரடிப்பார் மற்றொரு புறம்; தலை நொறுங்கியும் உடல் நசுங்கியும் உடலி னின்றும் உயிர் நீங்காது, குற்றுயிரா யிருந்து சித்திர வதைப் படுவா ரெத்தனை பேர்! பிள்ளை பெற முடியாது பிணமாவா ரெத்தனை பேர்! நெருப்பால் வெந்தவர் தொகை எவ்வளவு! நீரில் முழுகி நிலை குலைந்தோர் கணக்கு எவ்வளவு! நோயால் வருந்துவோர் கணக்கிலர்! மனவேதை கொண்டு மரண மடைவோர் மாநிலத்தில் கோடா கோடிப் பேர்! அருளே வடிவம் பூண்ட ஐயன் ஆட்சியில், இவ்விதமான துன்பம்-இருப்பதேன் என்று ஐயுறுகின்றார், மஹா கீர்த்தி பெற்ற தத்துவசாஸ்திரியா ராகிய ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) (See his "Three Essays on Religion") * * * இச்சுற்றுச் சுழற்சியினின்றும் வழி காட்டுவது யாது மிலதா? இருளைப் போக்கும் அருள் வெளிச்சம் யாதேனு மில்லையா? துன்பம் துடைத்து இன்பம் தந்து, அடிபட்ட நம்மை அணைத்துக் கொள்ள யாவ ரேனும் வாராரா? மாயை போக்கி நேயம் கூற எதிரில் தோன்றுவா ரொருவரு மிலரோ?—இவ்வாறு தோத்திரக் கோவைகள் ஆத்திரத்தோடு, இறகு கட்டிப் பறந்து சென்று இறைவனிருப்பிடம் சேர்கின்றன * * * இதுகாறும் எங்கும் இருள் படர்ந்திருந்த இடங்களெல்லாம் சிறிது சிறிது கருமை நீங்குகின்றன! அருட்காற்றால் இருள் மேகம் உருண் டொழிகின்றது; அங்கு மிங்கும் பூக்கள் பொலிவுறக் காண்கிறோம்; மணங் கமழ்கின்றது; ஒளியே காணாது களிப்பற்ற கண்கள் காணும்படி, ஐயன் தன் அருட் சிம்மாதனத் திருந்து அழகிய கிரணம் அரி அரியாய்ப் பொழிகின்றன: "குழந்தாய்! சற்றுப் பொறு, அறிவினால் ஆராய்ந்து பார், நீ அறிந்து கொள்ளுவாய்; உணர்வு ததும்பி உண்மையில் என்னை நேசிக்கின், உண்மையாய் நீயும் நேசிக்கப்படுவாய்; நல்லது செய்வாய்; உனக்கும் நல்லது செய்யப்படும்" என்று அசரீரி மொழிகின்றது. "யாவர் விருப்பத்துடன் மோக்ஷ லோகத்தின் கதவைத் தட்டுகிறார்களோ, அவர்களுக்காக அஃது திறக்கப்படும்" என்று அவதாரபுருஷர் ஒருவர் கூறியதும் இங்கு வாஸ்தவமாய்க் காண்கின்றது. உற்ற சந்தேகங்கள் ஒழிந்து விடுகின்றன; இன்னுஞ் சந்தேகம் இருந்தபோதிலும், சங்கடம் நீங்கச் சமாதானம் தோன்றுகிறது.

II.

இது காறும் நாம் இயற்கை விநோதங்களைப் பற்றி வெகு சிறிது பேசி, அவைகளின் வழியாக தேவ சித்தம் இருக்கிற தென்பதை அநுமானித்தோம். இதற்கு இங்கிலீஷில் (Teleological Argument) என்று பெயர் கொடுத் திருக்கிறார்கள். இதையே, மீண்டும் Argument from Design என்று அநேகர் சொல்லிய போதிலும், Argument to Design என்று கூறுவது சரியானது என்று சிலர் அபிப்பிராயப் படுவதற்குத் தக்க நியாய மிருக்கிறது. இஃதெவ்வாறாயினும், இந்த தேவ சித்த வாதமென்பது எத்தகைத் தென்றால், பிரபஞ்ச விநோதங்களையும் மனவமைதிகளையும் மேன்மைகளையும் உற்றுற்று உணர்ந் துணர்ந்து, கடவு ளில்லாமல் இத்தகைய சித்திரங்கள் உண்டாகா என்று நிரூபிப்பதேயாம். பன்னெடுநாளாய் இவ்வாதமே வெகு சிரேஷ்டமென்று அநேக தத்துவ சாஸ்திரிகள் அநுசரித்து வந்திருக்கிறார்கள். நாம் முன் கூறிய ஜான் ஸ்டூவர்ட் மில் என்பாரும், கடவுள் சித்தத்தை ஸ்தாபிக்க இஃதே தக்கதோர் வழியெனக் கொள்ள இட மிருக்கிறது என்று ஒப்புக் கொள்ளுகிறார். ஆயினும் சின்னாட்களாய் கடவுளுண்டென்று ஸ்தாபிக்க இந்த நியாயத்தின் மீதே சாருதல் போதிய தன்று என்ற அநேகருடைய கொள்கை. மேற் சொன்ன தேவ சித்த வாதம் காரியானுமானமா யிருக்க—அதாவது, இயற்கை யாகிற காரியத்தி னின்றும் தேவ சித்த மாகிற காரணத்தை அநுமானித்தல்—(Aposteriori), நம் மனதின் இயற்கையாலேயே கடவு ளிருக்கிறா ரென்று முதலில் தெரிகிறது என்றும் அவ்வாறு தெரிந்து கொண்டதன் பின்னரே நாம் இயற்கை யாகிற காரியத்தி னின்றும் கடவு ளிருக்கிறா ரென்று நமக்கு முன்னரே உண்டாகிய சகஜ உணர்வை நிலைப்படுத்துகிறோ மென்றும் காரணானுமான (Apriori Argument: Ontological Proof) வாதிகள் கூறுகின்றார்கள். நம்மனதில் கடவுள் என்னும் எண்ணம் உதிப்பதற்குக் காரணம் யாது? கிஞ்சிஜ்ஞனாகிய நமது மனதில் சர்வஜ்ஞத்துவம், வரம்பற்றது, எல்லையற்றது முதலிய வெண்ணங்கள் உண்டா யிருக்கின்றனவே, கடவுள் இருக்கிறா ரென்பதை விளக்குகிறது. சுபாவமாய் நம்மனதில் கடவு ளிருக்கிறா ரென்கிற நம்பிக்கை உண்டாக; பின்னர் இயற்கை விநோதங்களை அறிந்து, கடவுள் சித்தம் கண்டு பிடித்தால், நாம் முதலிற்

கொண்ட எண்ணத்தை வலியுறுத்துகிறதென்று டாக்டர் கால்டேர்வூட், பால்பர் என்பவரும் அபிப்பிராயப் படுகிறார்கள். (Moral Philosophy by Professor Calderwood, LL. D., pp. 226-30, and Foundations of Belief by Balfour, 294, 96.) இஃதல்லாமலும், காரிய மெல்லாம் அறிவு விளங்க, காரணத்திலும் அறிவிருக்க வேண்டுமே; அறிவில்லாத சடமே அறிவுடைய சித்தை எவ்வாறு விளைக்கும்? என்பது போன்ற ஒருவித காரண வாத (Ætiological Argument) மும், கட்டுப் பட்ட அறிவுடைய நாம் எல்லை யற்ற பரம்பொருள் இருக்கிறதென்று; மாறி மாறிப் பிறந்து பிறந்து இறந்தொழியும் மாயைத் தோற்றங்களினின்றும் இவைகளை யெல்லாம் கடந்து அப்பாலாய் அப்பாலுக் கப்பாலாய் விளங்கும் ஸ்வாதீனப் பொருளை (Absolute Being) ஸ்தாபித்தல் எவ்வாற்றானு மியலாது; ஆயின் நம்மனதில் நல்லது என்றும் கெட்டது என்றும் பகுத்தறிவு விளைத்துப் பரம நன்மை தந்தருளும் பரமார்த்த ஸ்வரூபியாகிய மனச்சாட்சி யென்னும் அநுசைதன்ய மொன்று நிலைத் திருப்பதே தக்க ஆதாரமென்றும் இதைத் தவிர வேறு ஆதார மில்லையென்றும் முடிவுரை கூறும் காண்ட் (Kant) முதலிய பிரபல தத்துவ சாஸ்திரிகள் கொண்ட அநுசைதன்ய வாதமு (Moral Argument) ம், ஆக வேறு இரண்டு வழிகளுமுள்ளன. நாம் இதுவரையும் எடுத்துக் காட்டிய அத்தாட்சிகள் நால் வகைப் பட்டன: (1) இயற்கை வனப்புகளைக் கண்டு (அதாவது காரியத்தி லிருந்து) இறைவன் சித்தத்தை (காரணத்தின் தன்மையை) அநுமானிப்பதாகிய தேவசித்த வாதம் (Teleological Argument or Argument to Design)(2) காரணத்தி லில்லாதது காரியத்தில் தோன்றாது என்பதற்கிணங்க சித்துப் பொருள்கள் இயற்கையி லிருப்பதால், காரணத்திலும் சித்துப் பொரு ளிருத்தல் வேண்டும் என்னும் காரண காரிய வாதம் (Ætiological Argument); (3) சகஜ உணர்வாலேயே கடவுள் முதலாகிய மனுஷிக எண்ணங்கள் மனதில் தோன்றுவதால் கடவு ளிருத்தல் வேண்டும் என்று ஸ்தாபிக்கும் சகஜ உணர்வு வாதம் அல்லது காரண காரிய வாதம் (Apriori or Ontological Argument); (4) நம் மனதில் அநுசைதன்யம் (Conscience) விளங்குவதாலும், கடவுளும், நாம் நமது இப்பிறப்புக்குப் பிற்பட்டு இருத்தலும் இல்லையாயின் அது பொய்ப்பட் டொழிகிறதாலும், அவை கட்டாயம் இருக்கின்றன என்னும் நீதி வாதம் அல்லது அநுசைதன்ய வாதம் (Moral Argument)—என்பவையே. இவை நான்கனுள் ஒவ்வொன்றே விசேடமென்று ஒவ்வொரு கக்ஷியினரும் கூறுகிற்பர். ஆயினும் இவை நான்கும் நாம் எடுத்த காரியத்தை நிரூபிக்கத் தக்க சர்வோன்னத மானவை யென்று நமது அபிப்பிராயம். உற்று நோக்குமிடத்து, மேற்கூறிய நான்கு ஆதாரங்களும் உண்மையில் இரண்டு வகுப்புகளுக்குள் அடங்கிவிடு மென்று நமக்குத் தோன்றுகிறது. எவ்வண்ணமெனின், காரண வாதம் (Ætiological Argument) காரிய காரண வாதத் (Aposteriori or Teleological Argument) திலும், அனுசைதன்யவாதம் (Moral Argument) மற்ற இரண்டிலும் அடங்கிவிடு மென்று புலப்படுகின்றது. ஆக முக்கியமாய் வித்தியாசப் பட்டவைகள் காரிய காரணவாதமும், காரணகாரிய வாதமுமே. இவை இரண்டும் இன்றி யமையாதனவே. இதல்லாமலும் கடவு ளிருப்பதைப் பற்றி ரூபிப்பதற்கு அவரைப் பற்றி நம்மிடம் காணும் சுபாவ நம்பிக்கையே எல்லாவற்றிற்கும் மூலாதாரமாகும். இந்நில உலக முழுவதும் மிருகத்தன்மை வாய்ந்தவர்களும் மிலேச்ச இலக்கணம் பூண்டவர்களும் இழி தொழிலாளரும், அறிவிலாதவருமாகிய வெய்ய புன் மாக்களி னின்று மிகப் பெரிதும் கல்வி பயின்று நாகரீக மடைந்து, மேன்மை யுற்ற மனிதர்க ளீறாக நோக்கின், ஒவ்வொருவர் மனதிலும் கடவுள் என்கிற எண்ணம் உதித்திருக்கக் காண்கிறோம். இவ்விஷயம் இக்காலத்தில் மாத்திரம் தோன்றுகிற தென்ப தல்ல. மனிதர்கள் இப்பூமியி லுண்டான அன்று தொட்டு இன்று வரையும் எங்கும் எப்பொழுதும் எல்லா மனிதர்கள் மனதிலும் கடவுளைப்பற்றிய எண்ணம் உண்டென்று தேச சரித்திரங்களால் நாம் நன்கறிகிறோம். இஃதே மேற்கூறிய காரண காரிய வாதத்தின் பெருமையை விளக்குகிறது. கடவு ளிருக்கின்றனரா? என்று நாம் ஆலோசிக்கும் போது நம் மனதில் சந்தேகம் விளைகிறதேயன்றி, இயற்கையில் கடவு ளிருக்கிறா ரென்கிற ஒருவித சுபாவ உணர்ச்சி நம் மனதில் இடைவிடா திருக்கின்றது; ஆயின் இடையில் உண்டாகும் சந்தேக விபரீதங்களைப் போக்கி நம் மனதில் சுபாவமாய்த் தோன்றிய உணர்வு உண்மையே யென்று ஸ்தாபிப்பதற்கு மஹா உன்னதமான வழி நாம் முதலிரண்டு அத்தியாயங்களிலும் விவரித்த காரிய காரண வாதமே (Aposteriori or Teleological Argument) யென்று டாக்டர் கால்டெர்வூட் (Dr. Calderwood) ஒப்புக் கொள்ளுகிறார். ஆகாய முழுவதும் மேகங்கள் அலைந்து கொண்டிருக்கும் போது, சுந்தரம் நீங்கிச் சந்திரன் மங்கலாய்த் தோன்றுவது போல்; இயற்கையில் நம்மனத் தகத்துக் கடவுள் தோற்றம் நிகழ்கின்றது. தூர திருஷ்டிக் கண்ணாடியில் அச் சந்திரனையே அமைதியுடன் நோக்கும் போது, சந்திரன் தன் உண்மையும் உயர்வும் வண்மையும் வடிவமும் வெகு நன்றாய் விளங்குவது போல், இயற்கை வனப்புகளையும் அவைகளின் ஒழுங்குகளையும் உற்று ஆய்ந்து உணர்ந்தவருக்கு தேவன் உண்டென்பதும் அவன் மகிமையும் மாட்சியும் அன்பும் ஆதாரமும் புத்தியும் சக்தியும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளிதின் விளங்குகின்றது.

III.

நாம் இதுவரையும் பேசிக்கொண்டு வந்ததால், கடவுளுண்டென்று கைக்கொண்டோம்; எங்கெங்கும் புத்தியே வியாபித்திருப்பதால் சுத்த அறிவற்ற சடப்பொருளே பிரபஞ்சத் தோற்றங்கள் முழுமைக்கும் காரணமென்னல் சாலாது என்று மொழிந்தோம். இவ்வளவு தானே! எடுத்த காரியம் முடித்த பின்னர் ஏனின்னும் வளர்த்த வேண்டும் நமது வியாசத்தை என்று அனேகர் கேட்கக் கூடும்! உண்மையோ, அப்படியன்று. நாம் முன்னர் கூறியதற் கிணங்க, சுற்றுச் சுழற்சியி லகப்பட்ட நாம் சுளுவில் வெளிவந்து விடல் முடியுமா! சற்று வெளிச்சம் நேரிட்ட போதிலும் மெத்த வருத்தப் பட்டுத் தான் வெளிவர முடியும். சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம்! ஒன்று கூற ஒருவர் கிளம்பினால், ஒன்பது தடைகள் காட்டி ஒன்பது பேர் புறப்படுவது உலக இயற்கையன்றோ! உள்ளவர் நால்வ ராயினும், கொள்கை வேறுபாட்டால் கோடிப்பே ராவரே யன்றோ! சொல்வது ஒன்றே யாயினும் சொல்லும் வகையால் அல்லலெத்தனை விளைகின்றது! ஆகலின், நாம் விவரித்த விஷயங்களைப் பற்றி மாறுபடுவோர் ஆக்ஷேபங்களில் வெகு முக்கியமானவைகளை மாத்திரம் ஒன்றின்பின் ஒன்றாய் எடுத்துக்கூறி அவைகளை ஆராய்வோம்.

(1) உலகமென்பது அணுக் கூட்டமே. அணுக்களைத் தவிரப் பிரபஞ்சமில்லை. கணக்கற்ற ஒருவாறு அணுத் தொகைகள் கால நீதியில் அமைந்த கோலத்தாலன்றோ ஞாலமென்று நாம் சொல்ல நேர்ந்தது! இதையே ஆங்கிலர் (Fortuitous concourse of atoms) என்று கூறுவது. இதை யறியாது இறைவனுளனென்று இயம்புவது இழுக்கடைந்தது என்று சிலர் கூறுகின்றனர். இதைப் பற்றியே நாம் முன்னர் சிறிது விவரித்திருக்கின்றோம். அணுத்தொகைகள் அதிஷ்டச் சேர்க்கையால் அகிலமுண்டாயிற்று என்று அனுமானித்தல், புருஷனில்லாது பிள்ளை பெறுவார் பூதலத்தின் மாதரார் என்று புகலும் புத்திமான்கள் செயலேயாம். இந்தியாவில் குருடர்கள் நாலுமூலையி லிறைபட்டோர் சேனாசமுத்திரமாய் அணிவகுத்து தற்செயலாய்ப் பட்டணத்தில் சட்டமாய் நிற்பார் என்பது எத்தனை ஆபாசமோ, அவ்வாறே அணுக் கூட்டங்கள் கண்ணும் தெரியாமல் கணக்கும் தெரியாமல் விண்ணும் மண்ணும் விளைத்துக் கொண்டன என்பது வியப்பினும் வியப்பே! அஞ்ஞானம் போய்க்கொண்டே விஞ்ஞானம் எழுந்தது என்பது அதனினும் மயக்கே!! நல்லோ ராகும் எல்லோராலும் மெச்சும் புகழ் வாய்ந்த அச்சுக் கூடங்களி லுள்ள அச்செழுத்துக்களனைத்தையும் ஒக்கக் கொட்டி ஒருகோடி வருடம் சுற்றினாலும் சுழற்றினாலும் கலக்கினாலும் குலுக்கினாலும், தாமே, உம்பர் கொண்டாடும் கம்பர் கவிதை யாகுமோ? தற்செயலாய், அகஸ்மாத்தாய் உண்டாயின என்றால் ஒழுங் கற்றவைகளும் ஏற்பாடற்றவைகளும், இணக்கம் நீங்கியவையும் பிணக்குத் தாங்கியவையுமாக அன்றோ இருத்தல் வேண்டும்? நேற்று சுட்டது இன்று குளிர்தலும், நேற்று குளிர்ந்தது இன்று சுட்டுக்கொண்டும் தட்டுக் கெட்டுத் தடுமாறி யன்றோ தவித்துப் போக வேண்டும், ஒவ்வொன்றும்! விஞ்ஞானம் கற்றோரென்று வெளி வந்து அஞ்ஞானத்திற்கே அரசுரிமை கொடுப்பது அசம்பாவிதமென்பதில் யாது தடை? தற்செயல், ஒழுங்கற்றது (Chance) என்பது, ஏற்பாடு, ஒழுங்குற்றது (Law) என்பதுடன் முற்றிலும் ஒவ்வாதது. அவைகள் எதிரிடையான சொற்கள் (Contradictory expressions) உலகம் ஒழுங்கற்றதும் தற்செயலாய் உண்டாவது மானால் அதில் ஒழுங்கொன்றுங் கூடாது; நியதியேதும் காணலாகாது. விஞ்ஞானிகளென்போர் சிலர் உலகம் தற்செயலாய் அகஸ்மாத்தாய் உண்டானதென்கிறார்கள். ஆயின் அவர்கள் எந்த விஞ்ஞான சாஸ்திர வன்மையைக் கொண்டு மெத்தப் பேசிக் கத்துகிறார்களோ, அந்த விஞ்ஞான சாஸ்திரங்களே, உலகத்தில் ஒழுங்கும் நியதியும் எழிலும் ஏற்பாடும் உள்ளனவென்று கோஷிக்கின்றன. சடசாஸ்திரம் (Physics) சடப்பொருள்களின் ஒழுங்குகளைக் கூறுகின்றது; பூதத்துவ சஸ்திரம் (Geology) பூமியில் தோன்றும் நியதிகளை வகைப்படுத்திச் சொல்வது; மனோதத்துவ சாஸ்திரம் (Psychology) மனதின் இலக்கணங்களை வரையறுத்து விவரிப்பது. ஒவ்வொரு விஞ்ஞான சாத்திரமும் அதனதன் குறிப்பிற் கேற்ற வண்ணம் சமுதித (பொதுவான) உண்மைகளைக் கூறுகின்றது என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. இஃதிங்ஙனமாயினும், உலகம் நியதியற்றதாய் தற்செயலாய், அதிஷ்டவசமாய், இப்படி யுண்டாயிற்று என்று கூறுவதில் யாது பொருளிருக்கின்றது? எங்கெங்கும் ஒழுங்கும் உயர்வும் நியதியும் சட்டமும் விளங்கவும், அவைகளைக் கொண்டே உலகம் ஒழுங்கற்றதாய் நியதியற்றதாய் அகஸ்மாத்தாய்த் தோன்றியது என்பதில் யாது உண்மை கிடைக்கும்? நியதியையும் ஒழுங்கையும் கொண்டே நியதியற்றது ஒழுங்கற்றது என்று கூறுமா றெங்ஙனம்? உலகம் தற்செயலாய் உண்டாவதானால், ஸைன்ஸ்களாகிற விஞ்ஞான சாஸ்திரங்கள் கூடா; விஞ்ஞான சாஸ்திரங்கள் உண்மையாயின் உலகம் தற்செயலாய் உண்டானதன்று.

(2) " ஆயின்; ஒவ்வொரு காரியத்திற்கும் காரணமொன்று நாம் காண்கிறோம். காரணமில்லாமற் காரியங் கிடையாது. இதனால் நாம் அனுமானிக்க வேண்டியது யாதெனின், நம் அறிவின் எல்லைக்கு அப்புறப்பட்டு, ஒன்றின்பின் ஒன்றாய் அனந்த, முடிவற்ற, காரணங்கள் (Infinite Regress of Causes) இருக்க வேண்டுமென்பதே யாம். இதை

விட்டு ஏகமானதும் கேவல நிராதினமானதும் பிற்காலத்தையும் முற்காலத்தையும் நிகழ்காலமாய்க் கொண்டு நித்தியமா யுள்ளது மாகிய தத்துவப் பொருள், சச்சிதானந்த மானது ஒன்றே யிருக்கின்ற தென்று சொல்வது எப்படி?" என்று ஒரு கேள்வி யெழுதலும் கூடும். இக் கேள்வி வெகு சாதுர்ய மானதால் அதைப் பற்றி நாம் சிறிதேனும் பேசிச் செல்வது இன்றியமையாததா யிருக்கிறது. முடிவில்லாத அனந்த மாகிய, அநித்திய மான காரண காரியங்கள் உள்ளன வென்று பாவித்தற்கு நம் மனதின் இயற்கை சிறிதும் இடங் கொடுக்க வில்லை. அவ் விதமான எண்ணங் கொள்வதே நமது இயற்கைக்கு மாறுபட்ட தென்று நன்றாய் நாம் உணருகிறோம். இவ் விஷயத்தைப் பற்றி டாக்டர் - கால்டர்வுட் என்பவர் எழுதி யுள்ளதை அப்படியே மொழி பெயர்க்கின்றோம். "முன்னமே அறியப் பட்டுள்ள உள் பொருள் அளவுக்கு ஏது சொல்லப் போது மாகிய அநித்திய காரணத் தோற்றங்கள் (ஒன்றின்பின் ஒன்று இருப்பதாய்) வக்கிரித் திருக்கிறது என்று பாவித்தல் தர்க்க ரீதியாய் வெகு சுலபமான விடை யிறுத்த லாகிறது மன்றி, காரண வுரிமை நியதி (Law of Causality) ப்படி தார்க்கிக முறைக் கிசைந்த முதல் கேள்விகளுக்கும் திருப்தி செய்கிறது. தெரிந்த உண்மைப் பொருளை உண்டாக்குவதற்கு மாத்திரம் போதுமான காரணத்தை உத்தேசிப்பது, அறிவினுடைய தற்சமய நோக்கத்தைத் திருப்தி செய்கிறது. அவ்வண்ணமே, அந்த முடிவினுடைய உண்மையை நாம் ஒத்துக் கொள்ளலாம். அப்படி ஒத்துக் கொள்வதும் (நம்) நினைவின் இயல்புடன் அது இசைந் திருக்கிற தானதால் தான். (ஆயினும்) அத்தகைய காரணம் உண்மையில் இருக்கிற தென்னும் உத்தேசத்தைத் திடப்படுத்த வழி யொன்றும் கிடைக்க வில்லை. ஆகையால் இந்த முடிவானது பொதுத் தன்மை யுற்றது மாத்திரமாய் இருக்கின்றது. அது யாதெனின்—காரணத்தில் காரியத்தை உண்டாக்கக் குறைந்தது போதுமான சக்தி இருக்க வேண்டு மென்பது தான். ஆயினும், தர்க்க முறையில் உத்தேச மாத்திரத்தில் ஒத்துக் கொள்ளப் பட்டதே தீர்ந்த முடிவாகாது. முதல் கேள்வியை அவசியமாய் விளைத்த அறிவே, (ஒருதரம்) உத்தேசித்த காரணம் உண்டாவதைப் பற்றி மற்றொரு கேள்வி கேட்கிறது. அநித்யமான உள் பொருள்களை மாத்திரம் தர்க்க விதிக்கு முற்றிலும் இணங்க, உத்தேசிக்கிற வரைக்கும், இப்படியே (ஒன்றின் பின் ஒன்றாய், காரியத்திற்குக் காரணம் தெரிந்து) தொடர்ந்து செல்ல வேண்டி யிருக்கிறது. ஆகையால் இந்த வழியில், முடிவு தீர்ந்திருக்கக் கூடியதாயும், தர்க்கத்திற் கிணங்கியது மான துறைமுகம் கிடையாது; (ஒரு இடத்தில்) நிற்பதற்கும் அதற்கிணங்க அதிகார மில்லை

மேலும், இந்த மார்க்கத்தின் இரண்டாவது படி உத்தேச மாத்திரத்தில் நிற்பதாலும், * * * உண்மையாய் அஃதிருக்கிற தென்று கண்டு பிடியாமை யாலும், தர்க்க அவசிய மாகிற காரணத்தை முன்னிட்டே, ஒவ்வொரு காரணத்தின் காரணத்தை நாடிச் செல்ல வேண்டி யிருக்கின்றதே யன்றி (மேற்சொன்ன தர்க்க அவசியத்தை விட) உயர்ந்தது வேறொன்று மில்லை. ஆக, இந்தப் பிரகாரமாய், முடிவில்லாமல் தொடர்ந்து செல்வது நமக்கு அசாத்தியமா யிருப்பது போல், (காரண காரியங்களைப் பற்றி) எண்ணத்தின் ஒழுங்கு, பின் நோக்கியிருக்க வேண்டிய விதமாகவே, உள் பொருள் சரித்திரம் முன் நோக்கி வந்திருக்கிறது என்னும் நம்பிக்கை நமக்கு நிலைத்திருப்பது அசாத்தியமா யிருக்கிறது. இந்த காரணங்களால், முதலாவது யூகித் தறிகையில் (Reasoning) காணப்படும் தர்க்கத்தின் தகுதியை வஸ்து நிச்சயத்துடன் ஒருமைப் படுத்தக் கூடாது. இரண்டாவது உள்ள பொருள்களின் பல உருவங்களை அறியும் கருத்தினராய ஒவ்வொருவரும் தம் அறிவின் தகுதியில் மாறுபடுவ தாலும், ஒவ்வொருவரும் தத்தம் அறிவின் படித்தரத்திற்கு ஒத்திருக்க மாத்திரம் போதுமான காரணத்தைத் தர்க்கமுறையாய் உத்தேசிக்கக் கூடு மானதாலும், ஒவ்வொரு சங்கதியிலும், தர்க்க முடிவு மாறுபடுகிறது * * * * * மூன்றாவது, அநித்தியமான காரணங்கள் முடிவற்று ஒன்றின் பின்னொன்றா யிருக்கின்றன வென்று கொள்ளுதலில், 'முடிவற்றது' (அல்லது வரம் பற்றது, கணக்கிறந்தது Infinity) என்று உத்தேசிப்பது இன்றியமையா திருக்கிறது. இதை நிலை நிறுத்துவதற்கோ ஆதாரம் உத்தேசிப்பதற்குக் கூட முடிய வில்லை. தார்க்கிக முறைமையின் ஒவ்வொரு படியிலும், போதுமான காரணத்தை உத்தேசிக்கிறதற்கு வேண்டிய வரையறை யுள்ள வஸ்து அளவினதாய் இருக்கிற தென்று குறைந்தது உத்தேச மாத்திரமான ஆதாரமாவது இருக்கிறது. அறிவின் முறைமை அடங்கினதும், எப்பொழுதும் இந்த முறைமை யனுஷ்டித்துச் செல்ல நாம் அசக்தரா யிருக்கிறோ மென்பதையும், அதைப் போலவே, யாதாயினும் ஓர் நிலையில் தர்க்க வழியாய் தங்க இடம் காண்போம் என்று உறுதிகூற நாம் அசக்தரா யிருக்கிறோ மென்பதையு மாத்திரம் வற்புறுத்த நமக்கு அதிகார மிருக்கின்றது. பிரசினத்திற்குத் தக்க விடை காணாததால் உண்டாகும் அசௌக்கியத்தினின்றும் தப்புவதற்கு, அநித்திய மான காரணங்கள் முடிவற்று ஒன்றின் பின்னொன்றாய் இருக்கின்றன வென்று நாம் குறித்துச் சொன்னால், அப்படிச் சொல்வது நிர்மித்தமா யிருப்பது மன்றி அப்படிச் சொல்வதால் ஒரு புது பிரசினையை உண்டாக்குகிறோம்—எந்த காரணத்தினால் வஸ்துக்கள் முடிவற் றிருக்கிற தென்று நாம் கூறுவது? தர்க்க சாஸ்திர

அனுமதியின் குறிப்பு கடந்து உறுதிப்பாடு ஒன்றை உரைத் திருக்கிறோம். புத்தி கோசரப் படியே செல்வ தானது நம்முடைய சிந்தனை ஒரு அளவுக் குட் பட்டது என்பதைத் தெரிவிக்கிறதே யன்றி, வஸ்து உண்மையைப் பற்றி (யாதேனும்) உத்தேசம் செய்வதற்கு யாதொரு அஸ்திவாரமும் ஏற்படுத்த வில்லை. (Handbook of Moral Philosophy pp. 225-7) இதல்லாமலும், ஒவ்வொரு காரியத்திற்கும் நாம் கண்டு பிடிக்கும் காரணம், அதற்கு முன் வரும் ஒரு காரணத்தின் காரியமா யிருக்கிறதே யன்றி, உண்மைக் காரண மாகாது என்றும், வேறொன்றாலும் உண்டாக்கப்படாது தானே என்று மிருந்து மற்றவைகளை உண்டாக்குவதே உண்மைக் காரணமென்றும், அவ்வகைப்பட்ட காரணத்தைக் கருதினாலொழிய, காரணத்தின் பொருளே விளங்காதென்றும் டாக்டர் ப்ளின்ட் கூறுகிறார். (Theism by Dr. Flint.)

(3) "முதலில் யாதொன்று மில்லாது, கடவுளே எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று கூறும் கிறிஸ்தவ சமயத்திற்கு மேற் கூறியவைகளெல்லாம் ஒக்குமே யன்றி, ஒரே வஸ்து, பரப்ரம்ஹம் உள்ளது என்னும் அத்வைத வாதத்திற்கும், இயற்கையிலேயே சித் அசித் ஈஸ்வரன் என்னும் மூன்றும் நித்தியமாய் உள்ளன என்னும் விசிஷ்டாத்வைதத்திற்கும் கடவுள் காரண மென்பது பொருந்துமா றெங்ஙனம்?" என்று மற்றொரு வினா உண்டாவதற்கும் இட மிருக்கின்றது. இவ்விடத்தில் அத்வைத விசிஷ்டாத்வைத வாதங்களில் தலை யிட்டுக்கொள்வது இப்பொழுது ஆகாத காரியமாதலால், வெகு சிறிதே கூறி விடுகின்றோம்: அஃதாவது, உண்மையில் உள்ள ஒரே வஸ்து பிரபஞ்ச மாயா உருவங்களுக்கு மூல காரணமாயிருக்கிற தென்று அத்வைதப் பிரகாரம் சொல்ல நேரிடுவதாலும், என்றும் முப்பொருள் உளவாயினும் சர்வேஸ்வரனே தன் நிர்ஹேதுக கிருபையால் ஜகத் சிருஷ்டி செய்வதாய் விசிஷ்டாத்வைதக் கோட்பாடு காண்பதாலும், மேற்கூறிய இரண்டு தத்துவ முறைகள் படிக்கும் பரப்ரம்ஹத்தைக் காரண மென்று சொல்லத் தடையில்லை.

(4) மற்றுஞ் சிலர், "கடவுள் சர்வ சக்தியும் சர்வஞ்ஞத்துவமு முடையவனாயின், உலகத்தில் உள்ள அனேக ஏற்பாடுகளும் அங்க வகைகளும் குறைபாடுற் றிருக்கக் காண்பதேன்?" என்று கேட்கின்றனர். பெரும்பாலும் உலகத்தில் தோன்றும் ஏற்பாடுகளும் உறுப்பு அமைதிகளும் குறைவற்றுக் காண்கின்றன என்பது அவ்வவைகள் தத்தம் தொழிலைக் குற்றமற நடத்துகின்றன என்பதாலே போதரும். ஆயினும் சிலவற்றின் அழகையும் அமைப்பையும் காண நாம் தவறினோமாயின் அஃது நமது அறிவின் குறுகிய அளவைக் காட்டுமே யன்றி, கடவுள் பெருமையைக்

குறைக்காது. முக்கிய அவயவ மாகிய கண்ணின் கட்டைப்பற்றிக் குறை கூறிய ஹெல்ம்ஹோல்ட்ஸ் (Helmholtz) என்பவரே, உயிருண்டாய் பார்ப்பதற்கு ஏதுவாய் அது செய்யப்பட் டிருக்கிறதைப் பற்றி ஆச்சரியப் படுகிறார் என்று ப்ளின்ட் சொல்லுகிறார் (Appendix to Theism) "எல்லாம் படைத்த வல்லவன் கருணையங் கடவுளாயின், இவ் வத்தியாயத்தின் முதலில் நாம்கூறியபடி உலகில் ஏன் துன்ப மிருத்தல் வேண்டும்? அல்லல் எத்தனை எத்தனை யாயிரம்? அபாயம் எத்தனை எத்தனை வகை யுள்ளது? துயரங்க ளெங்கும் அயரக் காணுமே! இன்று பிறந்து இல்லாது துன்பப்பட்டு இறந் தொழிகிற குழந்தைகள் எத்தனை யெத்தனை! தூக்கமுங் காணாது ஏக்கமே பெரிதாய் உள்ளம் நொந்தும் உடலம் நைந்தும், அறிவைத் துறந்தும் ஆகாயத்திற் பறந்தும் எத்தனை பேர் வருந்துகின்றனர். ஐயன் மெய்யாக அருண்மாரி பொழிவதானால் ஏனோ இவ்வகை நானாவித நோயும் ஹிம்சையும், தோஷமும் துன்மார்க்கமும் தொல்லையும் துயரமும் அல்லலும் அவதியும் நாம் எங்கெங்கும் காண நேருகின்றது?" என்று சிலர் மாத்திர மன்று; எல்லோரும் கேட்கிறார்கள். இக் கேள்வியானது தேவ சாஸ்திர (Theology) த்தில் வெகு கலக்கம் செய்து இடக்கர் விளைக்கின்றது. இது வெகு கஷ்ட மானதும் சுலபத்தில் விடை கொடுக்கக் கூடாதது மென்று தத்துவ சாஸ்திரிகள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். உலகத்தில் துயரக் கணங்கள் ஊற்றுச் சுரத்த லென உண்டாவதற்கு, சமாதானங்கள் எத்தனை சரமாரியாய்ப் பொழிந்தாலும், அவைகள் நெறியிற் பிசகி குறிப்பைக் கடக்கின்றது. ஈஸ்வர வாதிகள் பக்கம் இச் சமாதானங்கள் பலஹீனப் பட்டது போல், நிரீஸ்வர வாதிகளிடம் இக் கேள்வி வெகு பல முற்றது. இக் கேள்வி இவ்வளவு கடின மானபோதிலும், இதற்குச் சமாதானம் பலவிதமாய்க் காட்டி யிருக்கிறார்கள். நமக்குத் துன்பமாய்த் தோன்று மவை அனேகங்களால் நன்மையே விளைகின்றது என்று சிலர் காட்டுகிறார்கள். இந்த கேள்விக்குப் பதில் கூறுவோரெல்லோரும், துயரம் உலகத்தில் தோன்றுவதற்கு கடவுள் காரண மன்று; கர்ம பலமாக அவ ரவர் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என்று ஒத்துக் கொள்கிறார்கள். நல்லது கெட்டது என்னும் பகுத் தறிவைக் கொடுத்து, அதாவது அவ ரவர்கள் சுயேச்சையாய் நடப்பதற்கு அனு குணங்களைக் காட்டி யிருக்க, நல்லதை விட்டுத் தீயதைத் தொடர்ந்தால், நம்மை நாம் நொந்து கொள்ள வேண்டுமே யன்றிக் கடவுளை நோவது எற்றுக்கு?

கடவுள் சர்வ சக்தி யுள்ளவ ராயின் ஏன் இவ்வகை மனிதர்கள் நல்லதை விடுத்துப் பொல்லாததைச் செய்ய வேண்டும்; நியாய வழியி னின்றும் பிசகி அநியாய வழியிற் பிரவேசிக்கிற வேளைகளில் தன் சர்வ சக்தி

யால் அவர்கள் எண்ணத்தை மாற்றியாவது, வேறெவ்விதமாக வாவது அவ்வாறு செய்வதைத் தடுப்பது தானே? தர்மம் அதர்மம், நல்லது தீயது என்னும் பாகு பாடுகளை ஏனோ உண்டாக்கல் வேண்டும்? ஏன். மனிதர்களுக்குச் சுயேச்சை கொடுத்தல் வேண்டும்? நல்லது கெட்டது என்று தெரிந்தும், ஒருவித சித்தசாபல்லியத்தாலும், மனதின் மருட்சியாலும், ஏமாந்து போகாத இடத்தில் இவர்களை நிலைக்கச் செய்வது தானே? என்று பலவிதமாய்க் கேள்வி யுண்டாகக் காண்கிறோம். இவைகளின் தாத்பரியம் என்னவென்றால், கடவுளைப் போல் நம்மையும் உண்டாக்குவது தானே, என்பதும், கடவுள் செய்கிற விஷயங்களுக் கெல்லாம் அவர் நமக்கு எதிர் நின்று உத்தரம் சொல்லவேண்டும் என்பதும் போன்றவைகளே. நாம் நமக்குத் தெரிந்த வரையில் நோக்குங்கால், எங்கும் அவரது அபூர்வ சர்வஜ்ஞத்துவமும், வாசா மகோசரமான மஹா கருணையும், வரம் பற்ற சக்தியும் விளங்குகின்றது. அனேக விஷயங்களில் துன்ப மிருப்பதாய்த் தோன்றினும் முடிவில் இன்பம் பயக்க வில்லை யென்று நாம் எப்படி சொல்ல முடியும்? ஒரு வீட்டில் நடக்கிற விவகாரங்க ளனைத்தையும் உற்று நோக்க வேண்டுவதாயின், "காதாற் கேட்பதும் பொய், கண்ணாற் பார்ப்பதும் பொய், தீர விசாரிப்பது மெய்" என்கிறபடிக்கும், "மெய்யுடை யொருவன் சொல்ல மாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே" எனவும் "பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" எனவும் கூறி யிருப்பதை நோக்கி, யாதொன்றையும் ஆரத் தீர ஒருதரத்திற்கு எழெட்டு தடவை விசாரிக்க வேண்டு மென்னும் முறைமைப் படிக்கும் வெகு சாக்கிரதை யுடனும் ஊக்கத் துடனும் விவகாரத்தை நடத்தினாலும், உண்மை யறியத் தவறிப் போய் விடுகிறோம். ஒரு ராசாங்க விவகாரங்களிலும் சிக்கற நியாயம் செய்வதென்றால், எளிதிலாக வில்லையே! மனப் பூர்வமாய் நன்மைக் கென்றே உழைப்போர்களும், தேவ ஆஞ்ஞைக்குப் பயந்து திருத்தமாய் நடந்துகொள்வோர்களும், புத்தி சாதுர்யம் மிக்கவர்களும் ஒருவர்க் கொருவர் மாச்சரிய மில்லாமலும், மனவெறுப் பில்லாமலும் விரோத மில்லாமலும் விகட மில்லாமலும், உண்மை விசாரிக்கப் புகுமளவில், ஒருவர் கொள்ளும் அபிப்பிராயம் மற்றொருவர் கொள்ளாது மாறுபாடு ஏன் உண்டாகின்றது? அவ் விராஜாங்கத்தின் விவகார மனைத்தையும், நோக்கம் முழுவதையும் தெரிந்து கொள்வதில் சிறிது பிழை பாடாயினும் நேரிட்டக்கா லன்றோ, நிச்சய மின்மையும், பொச்சாப்பு மிகுதியும், கட்சிகளும் கலக்கங்களும் உண்டாகின்றன. ஐயன் தன் ஆணைப்படி அமைந்துள்ள பிரம்ஹாண்டத்தில் எள்ளுமூக் கத்தனையும் ஏற்படாத ஒரு இராசாங்க விஷயத்திலேயே இவ்வளவு கஷ்டமுண்டாய் விடின், சர்வத்துக்கும் நியாமகனாய் சர்வாந்தர்யாமியாய், அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாய் ஆதியும் அநாதியு மான மூலப்பொருளின் அமைப்பு முழுவதையும் நா மெங்ஙன முணரக் கூடும்! நம் சிற்றறிவிற்குப் புலப்பட்ட வரையில் ஒத்த முடிவைக் கைக்கொண்டு தகாத விஷயத்தில் தலையிட்டுக் கொள்ள லாகா தென்று அமைதியுடன் அடங்கிப் போவதே அறிவினர்க்கு அழகாகும். இத்துணை, புத்தியும் சக்தியும் அமைந்த அற்புதன் மெத்தவும் கருணை பூண்டவனா யன்றோ இருத்தல் வேண்டும்! புத்தி கெட்டவர்க்குச் சக்தி யிருப்பின் அத்தனையும் வருத்தம் விளைவது இயற்கையே! உண்மையான புத்தி எவ்வண்ணம் இயம்பவும் முடியாதபடி அதிகரித்தவனிடம் குத்திர புத்தி விளையாமல், அன்பும் அருளும் இன்பமு மன்றோ இயற்கையில் காணப்படும்! ஆகலின், நாம் சில விஷயங்களைப் பற்றித் திருப்திகரமான பதில் கூறா விடின், அது நமது சிற்றறிவைக் குறிக்குமே யன்றி, உத்தமர்க் குத்தமனான ஒப்புயர் வில்லாதவன் உன்னதத்தை யொருபோதும் குறை கூறுவதற்கு இயையாது. இப்போது துன்பமாய்க் காணப்பட்டாலும் எங்கும் முடிவில் இன்ப மயமாய் இருத்தல் வேண்டு மென்பதை நாம் நிரூபிக்க முடியாவிடினும், நிரூபித்தலைப் போன்றே வெகு வலிவான உத்தேசம் நேரிடுகிறது. இது சம்பந்தமாய் அத்வைதக் கொள்கைப்படி, ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் சொல்லி யுள்ளதைக் காட்டி இவ்விஷயத்தை இதோடே முடித்து விடுகிறோம்: "குரூரங்களும் அநீதிகளும் உண்டா யிருப்பவைகளைக் கடவுள்மீது சுமத்திப் பேசக் கூடாது. ஏனென்றால் கடவுள் சுயேச்சையாய் நடக்கவில்லை. கடவுள் ஒன்றைச் சார்ந்தே, இந்த ஏற்றத் தாழ்வுள்ள உலகத்தைச் சிருஷ்டிக்கிறார். 'எதைச் சார்ந்து?' என்று கேட்பீராயின், தர்ம அதர்மத்தை யென்று பதில் கூறுகிறோம். சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மாக்களின் தர்ம அதர்மத்தைச் சார்ந்து சமமற்ற சிருஷ்டி உண்டாவது கடவுளின் குற்றமன்று. நெல்லும் கோதுமையும் உண்டாவதற்குப் பொதுவான காரணம் மழையாயினும் நெல்லும் கோதுமையும் என்கிற இயற்கை வித்தியாசங்களுக்குக் காரணங்கள் அவைகளின் தனித்தனி விதைகளின் மாறுபட்ட சக்திகளே யாகின்றனவோ; அப்படியே, தேவர்களையும் மனிதர்களையும் மற்றவைகளையும் சிருஷ்டிப்பதில் பொதுவான காரணம் கடவுளாயினும், அவர்களுடைய தனித்தனி ஆத்துமாக்களிற் படிந்த மாறுபட்ட செய்கைகளே, அவர்களுக்குள் காணப்பட்ட வித்தியாசங்களுக்குக் காரணங்களாகும்" (Sankaracharya's Comment on Sutra II. I. 34. Quoted in 'Indian Wisdom' by Monier Williams, M. A.)

IV.

இதுகாறும் நாம் பேசி வந்த விஷயங்களால், கடவு ளொருவ ருண்டென்பது விசத மாகிறது. சடப்பொருளே உலகத்திற்கு ஆதாரமாவது, சித்துப்பொருள் யாதொன்றும் முதலில் இருக்க வேண்டிய தில்லை என்று கூறுவது எவ்வாற்றானும் ஒவ்வாது. இந்த அரிய பெரிய சங்கதியை இங்கு வெகு குறிப்பாயும் சுருக்கமாயும் வரைய நேர்ந்ததே யன்றி, விவரமாகவும் சாஸ்திரப் போங்காயும் எழுதுவதற்கு இடமில்லாம லிருக்கிறதைப் பற்றி விசனிக்கிறோம். முன் கூறிவந்த விஷயத்திலும் அஃது தொகுக்கப்பட்ட முறையிலும் குறைக ளனேகம் காணக்கூடும். இவ்வியாசம் எழுதநேர்ந்த அவசரமும், கால மின்மையும் இட மின்மையும் இவைகட்கு மேற்பட்ட கூரிய அறிவின்மையும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து விளைக்கும் போரே அதற்கு அத்தாக்ஷியாவது. இவ்வாறு அதன் கண் குறைக ளனேகம் காணப்படினும், ஆங்காங்கு, குறிப்பாயேனும் காணப்படும் நியாய சல்லாபங்களால் பரவஸ்து நிச்சயம் பண்ணுவதற்கு சிறிதளவாயினும் இயையாது போகா தென்பது திண்ணம்.

கடவு ளொருவ ருண்டாக, அவர் ஏகமானவரும் ஸ்வாதீன மானவரும் ஆதிமத்யாந்த ரஹிதரும், எல்லையற்ற அகண்ட பரிபூரணரும், சுயம்புவும் நிர்மலரும், நிராமயரும், நிரஞ்சனருமாக இருத்தல் வேண்டு மென்பது பெறப்படும். ஆயின், ஸ்வாதீனமாய் அகண்ட பரிபூரணமாய் உள்ள பொருள் நமது வாக்குக்கும் மனதுக்கும் மீறியுள்ளதால் அதீனப் பட்டவர்களும் கண்ட ரூப முடையவர்களு மாகிய நாம் அவரை எப்படி அறிய முடியும்? அளவற்ற விஸ்வாதீதத்தை அளவுக் கடங்கிய ஆன்மாக்கள் அறிவார்க ளென்பது அசம்பாவித மன்றோ? கிணற்றுத் தவளை நாட்டு வளப்பமறியுமா? இதனா லன்றோ ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்யா ருளிட்ட அத்வைதிகளும் பரப்ரம்மத்தை நிர்க்குண வஸ்து என்பதும் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) ஆகிய மேற்புல விஞ்ஞானிகளும் அறியாதது, அறிய முடியாதது (The unknown and unknowable) என்று சொல்லுவதும். அப்படியே இந்நிலைமையில் பரப்ரம்மம் அறிய முடியாததாயினும், ஆன்மாக்கள் கடைத்தேற யாதாயினும் வழிவேண்டுமே! கடவுளிருப்பது கட்டாயமாயின் அடியரை யணைக்க வழியேதேனும் வரைந்திருக்க வேண்டுமே? கடவுளில்லையாயின், கடைத்தேறும் வழியைக் காணாமற் போவது இயற்கையா யிருப்பது மன்றி, அஃதை எதிர்பார்க்க நியாயமுமில்லை, அவசியமுமில்லை. ஆயின், கடவு ளிருக்கிறா ரென்று ஒத்துக் கொண்ட பின், மோக்ஷ மடைய முறையில்லை யென்பது ஆக்ஷேபத்திற்கு ஆளாகி அழிந்து போய் விடு மென்பதற்கு யாதொரு ஐயமு மில்லை. தருணத்தில்

காப்பது கருணையங் கடவுள் கடமையே யன்றோ! அக்திக்குத் தெய்வமேதுணை யென்று பழமொழியும் பறை யடிக்கின்றதே! ஆனையைக் ாத்தான், துரோபதையைத் துயர்தீர்த்தான் என்று புராணகோடிகள் புகழ்வதன் பொருளு மீதன்றோ? சர்வேஸ்வரன், தீனபந்து, பக்தவத்ஸலன், பரமதயாளன்; எங்கெங்கும் கரந்துறைந்து அங்கங்கே அருள் சுரந்து பொங்குதுயரம் போக்கடித்து அங்கை யபய மளித்தருளும் அருளாளன், என்றல்லவா அனைவராலும் கொண்டாடப் படுகிறான். நம் மனதுக்கும் வாக்குக்கு மெட்டாது, நம் மனதிலும் வாக்கிலும் மறைந்து நின்ற மாயவன் பெருமையைப் பேசுவதை 'மறை' யென்று கூறுவதில் யாதும் வழுவில்லை; மாயை விளைப்பானை மாயவன் என்று கூறுவதிலும் யாதும் குறையில்லை. உள்ளவனாய் இல்லவனாய், நல்லவனாய் பொல்லவனாய் எல்லாம் செய வல்லவனாய்ப் பலவகைப் பட்ட அலகிலாச் சோதியை வேதமே காணாத வீதியில் விழிக்க அற்பராகிய நாம் அவன் பொற்பை யெங்ஙனம் உணர்வோம்!

நாம் கடவுளை வழிபடுவ தாயின், நாம் இயற்கை நிலையி னின்றே அவனை யடைதல் வேண்டும். நம் ஆத்தும விளக்கமாகிய அரிய மனமே அதற்குக் கருவியாக வேண்டியது. மாசற்ற மனமே! உன்மகிமை யுரைக்க யாவரால் முடியும்! மண்ணும் விளைத்து விண்ணும் விளைத்து மாயம் விளைத்தனையே! சூரியன் காய்வதும், சந்திரன் நில வெறிப்பதும், அண்டங்கள் காணுவதும் நக்ஷத்திரங்கள் மின்னுவதும் எல்லாம் உன்னாலே! ணமாகிய என் மன்னவனே! நீ மறைந்தும் குறைந்தும் மழுங்கினையோ, உன்னிடம் பிறந்து உன்னிடம் வளர்ந்து உன் உப்பைத் தின்ற போதிலும் என்றும் நன்றி காட்டாது தானே தோன்றித் தலை துளிர்த்த தென்னத் தனித்துக் காட்டும் அநித்திய உலகம் அழிந்தொழிந்து போகுங்காண்! மரமும் காணாது மலையுங் காணாது, கொடியுங் காணாது செடியுங் காணாது! [illegible]! உத்தமர்க்குள் ரத்தினமே! உன்னை யாவர் அறிவார் காண்! உள்ளுக்குள்ளா யிருந்து உனக் குள்ளுங் காட்டி வெளியுங் காட்டி ஒளியுங் காட்டினையே! என்தன் இனமேயான மனமேகேள்! எல்லா வற்றையும் தனதே யென்னும் மனதேகேள்! நீ யில்லை யாயின், பிரபஞ்சமே யில்லை; நீ மறைவாய்—தீமறையும் வளிமறையும், நீர்மறையும் நிலமறையும், வான்மறையும் தான் மறையும்! நீ யுளையாயின் உலகமுண்டு; நீ யிலையாயின் உலகமில்லை. உன் யோகத்திற்கு அளவில்லை; வேகத்திற்கும் முடிவில்லை. நீ யிங்கிருப்பதுபோல் தோன்றுவாய், ஒரு நிமிஷத்திற்குள் உலகமெங்குஞ் சுற்றிவருவாய்! கண்மூடிக் கண் திறப்பதற்குள் காசினி யெங்கும் கடல் முழுதும் ந்தும் சுற்றியும் கணக்கிறந்த விநோதங்கள் காட்டுவையே! உன்னைக்

குரங்கெனப் பலரும் கூறினர்; யாமும் ஒரிடங் கூறினோம். நெஞ்ச மாகிய வஞ்சமே, நீ காலாகாலத்தில் கோலஞ் செய்வதையுங் கொடுந்தொழில் புரிவதையும் ஆலகால விஷமென அஞ்சியஞ்சி யோடினம். நீ கெடுதி செய்வதும் நல்லதற் கென்றே இப்போது தேறி உள்ளம் ஆறினோம். கடவுள் செய்கிறார் கெடுதி யென்பதுபோல், நீயும் தீயது புரிகிறாயன்றி, உண்மையில் கெடுதி பண்ணுகிறதேயில்லை. நீயே கொடுமை செய்தனை யாயினும், நீயே அந்த நோயைத் தீர்த்து நேயம் விளைக்க வேண்டுமே யன்றி, வேறு யாரும் விரைந்தும் பரிந்தும் வாரார்காண்! உனக்கு நீயே உறுதி காண்! சூட்டுக்குச் சூட்டைத் தந்து வாட்டந் தன்னை யோட்டு மாறு போல், உன்னால் வந்த வினைக்கு நீயே மருந்தாக வேண்டுங்காண். உன்னை விட்டாலும் வழியில்லை; வேறெங்குங் கதியில்லை. நீ குரங்கைப் போல் பன்முறை குதித்தும் எல்லா வற்றையும் மிதித்தும் கண்டதை உதைத்தும் அனர்த்தஞ் செய்யினும், வாஞ்சனையுற்ற ஆஞ்சனேயர் ஆவையே யன்றி, மரங்களிற் காணும் சாதாரண குரங்காகாய்காண்! நீ நவ வியாகரண பண்டிதன்காண்! ஆதவ னிடமே ஓதி யுணர்ந்த உத்தமன்காண்! நீ, கடவுள் தந்தை ஞானச்சுடர் விளக்கு! நல்ல வழிகாண நடுநின்று உதவி செய்யும் நாயகமே! தவித்து நின்றோர்க்கு அவித்தை போக்கும் தாயகமே! நீ, ய பிரபஞ்ச மாயினை; உன்மேற் போர்வை போக்கினையோ, நீயே பிரம்ஹமாவாய்காண்! எங்கும் பரந்தனை, உள்ளே யொடுங்கினை—என்ன வினோதம்! புண்ணியம் செய்யவும் புத்தி பெருகவும், புளியங் கொம்பாய்த் தோன்றிய நின்னை யாம் விடோம், விடோம்!! ஒருக்காலும் விடோம்!!! உன் இயல்பைக் கொண்டே உறுதி யடைய வேண்டியதால் உதவி நீயே புரிதல் வேண்டும்.

நம் மனதின் இலக்கணத்தைக் கொண்டே கடவுள் இலக்கணத்தை அறிய வேண்டுமே யன்றி, நமக்கு வேறுவழி யில்லை. கடவுளை முழுவதும் அறிவது கிஞ்ஜஞ்யானாகிய நம்மா லாகாதகாரிய மாயினும், அவன் இயல்பை நம் நிலையினின்றே சிறிதாயினும் யூகித்தறிதல் கூடும். (We cannot-comprehend, but apprehend, Him) அத்வைதிகள் கடவுளை அறிதல் ஆகா தென்பது இவ்வித நோக்கங் கொண்டே யன்றி, வேறன்று என்று தோன்றுகிறது. இன்றேல், கடவுள் சச்சிதானந்த சொரூப முள்ளவரென்று அவர்கள் சொல்லக் காரணமென்னவோ அறிகிலேம். விசிஷ்டாத்வைதிகள் கடவுளுக்குக் குணம் கூறுமிடத்து, முடிவற்ற சத்குணங்கள் ஒவ்வொன்றும் முடிவற்று, அளவிறந்து, நாம் காணாதவகை விளங்குகின்றன என்று கூறுகிறார்கள். மாக்ஸ் முல்லர் (Max Muller) என்னும் பிரபல வித்துவான், தான் எழுதிய அரிய பெரிய பாஷாதத்துவ நூலில்

(Science of Language) ஒரு பதமே பல பொருள்கள் கொண்டு பழுதற லாலன்றோ புலவாதங்களும் வழக்குகளும் ஓயா திருக்கின்றன என்று கூறுகிறார். சப்தஜாலமே (Logomachy) நம்மை ஜாலஞ்செய்கின்றது. ஆங்கிலத்திலேயே இவ்வழியானால், அளவும் காணாது முடிவும் தோன்றாது அனந்த அர்த்தங்களை அரையிற் கட்டி யுலாவும் நம் சம்ஸ்க்ருத தமிழ் பாஷைகளில் விகாதம் விளைவதற்குக் கேட்கவும் வேண்டுமோ! கடவுள் நிர்க்குணப் பொருள் என்று சொல்லி, அது சச்சிதானந்தம் என்பதற்கும் கடவுள் சகல கல்யாண குண முடையவ ரென்றும் ஆயின் ஒவ்வொரு குணமும் நாம் அறியாவகை விலக்ஷணம் உற்றிருக்கின்ற தென்பதற்கும் அவ்வளவு வித்தியாசம் எமக்கு விளங்க வில்லை. பாரித்த அறிவும் பூரித்த உணர்வு முடையவர்களாய் உற்று நோக்குவோர்க்கு, இவ்விரண்டு கொள்கைகளையும் இணக்கம் (Reconciliation) செய்விக்கலா மென்று தோன்றுகிறது. இவ்விடத்தில் நாம் இவ் விஷயத்தைப் பற்றிப் பேச இயலா தானமையின், இதோடே நிறுத்தி விடுகின்றோம். முடிவாய்க் கூறுவது யாதெனின், நாம் உய்ந்து உயர்வதற்கு, கடவுள் இயல்பை வெகு சிறிதாயினும் அறிகிறோ மென்பதும், அப்படிச் செய்வதற்கு நம் மனமே நமக்கு உற்ற துணை யென்பதும் தான்.

நம் மன மானது முத்தொழில் நடாத்துகிற தென்பது மனோ தத்துவ சாஸ்திர சித்தம். அவையாவன, எண்ணலும் (Thinking) உணர்தலும் (Feeling) கருமந் துணிதலுமே (Willing) யாம். ஹார்விக்ஸ் (Horwics) முதலிய சிலர் உணர்தலே முதன்மை யென்றும் லீப்னிட்ஸ் (Leibnitz) ஹாமில்டன் (Hamilton) ஹெர்பர்ட் (Herbert) முதலிய சிலர் சிந்தித்தலே முதன்மை யென்றுங் கூறுவாராயினும், அது வாஸ்தவமன்று: ஒரு வஸ்து இன்னதென்று சிறிதாயினும் தெரிந்தால் மாத்திரம் உணர்வு மிகுதி யுண்டாகு மன்றி, அறியப்படா திருக்கவும் ஒரு வஸ்துவினால் உணர்வுண்டாகு மென்பது வெறும் பொய்யா யொழியும். அன்றியும், உணர்வுக்கு, எண்ணுதல் காரணமென்று சொல்லலுமாகாது. ஏனெனின், நம் சிந்தனை அதிகமா யிருக்கும்போது உணர்வு குறைந்தும், உணர்வு அதிக மாகும்போது எண்ணம் குறைந்தும் ஒன்றுக்கொன்று விலோம விகிதத் (Inverseratio) தில் நடை பெறுவதே, உணர்வுக்கு அறிவு காரண மல்ல வென்பதை நன்கு விளக்கும். ஆக, மனதின் முத்தொழில்க ளாவன, (1) எண்ணல் (2) உணர்தல் (3) கருமந் துணிதல் என்பவையே. ஒவ்வொரு மனத் தோற்றத்திலும் இம் மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து காணப்பட்ட போதினும், இவை யொவ்வொன்றும் தனித்தனியே யாகின்றன.

இப்பொழுது நம் மனதின் தொழிலுக் கியைந்து கடவுளைத் தொழு

தல் வேண்டியதாயின் மூன்று வழி காணப்படும். இவைகளையே, நம்மனோர், ஞானம், பக்தி, கர்மம். அல்லது ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் என்று வகுத்ததாய்த் தெரிகிறது. ஞானத்தால் பகவானை நாடுவது ஒருவழி, பக்தியினால் அவன் பரமபதம் பெற முயலுதல் ஒரு வழி, கரும மேம்பாட்டால் கர்த்தனைக் காண நடத்தல் மற்றொரு வழி. இவை தம்முள், ஞானம், நம் மனதின் எண்ணல் தொழிலுடன் இயைந்தும், பக்தி, உணர்தல் தொழிலுடன் உறைந்தும், கருமம், கருமந்துணிதலுடன் கலப்புற்றும் விளங்குகிறதைப் பற்றி யாம் இங்கு வெகுவாய் விவரிக்க வேண்டியதில்லை. அத்வைதிகள் ஞானத்தை விசேடமாய்க் கொண்டும், விசிஷ்டாத்வைதிகள் பக்தியையே விசேடமாய்க் கொண்டும் பேசுகிறார்களென்றும் பன்முறை கேட்டிருக்கிறோம். அத்வைதக் கொள்கைக்கு அருங்கலனா யிருந்தவர் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள்; விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு, வித்தமர்க்குள் உத்தமரானவரும் ஸ்ரீபாஷ்யகாரரென்று திருநாமம்பெற்றவருமாகிய ஸ்ரீஇராமாநுஜர். இவர்களிருவரும், அவ்வக்காலத்தில் அபூர்வ சக்தி காட்டினார்களென்றும், தேவ அவதாரமே என்றும் கொள்ளப்பட்டார்கள். முற்காலத்தில் அவர்கள்செய்த அற்புதக் காரியங்கள் என்றும் பொன்றாது இன்றும் ஓங்கி இணையற் றிருப்பதே, அவர்கள் வல்லமைக்கு வாக்குமூலம் தருகின்றது; தேவ அருள் பெற்றவர்க ளென்பதைத் தெள்ளிதின் விளக்குகின்றது. இவர்களுள் யாவர் பொய் சொல்வார்? யாவர் மெய் சொல்வார்? எவர் மூடர்? எவர் ஞானி? இவ்விதமாகிய கேள்வியை நாம் கேட்டுக் கொள்ளுவதே வெகு அஞ்ஞானமான கேள்வி. அசாதாரண சக்தி விளக்கியவர்க ளென்றும் தேவ அருள் பெற்றவர்க ளென்றும் அவர்களை நாம் கொள்ளும் பக்ஷத்தில், அவ்வக் காலத்திற் கேற்றவண்ணம் ஒவ்வொருவாறு போதித்தார்க ளென்று கொள்ள வேண்டுமேயன்றி, ஒருவர்தான் உத்தமர், மற்றொருவர் அதமர் என்றும் ஒருவர்தான் ஞானி மற்றொருவர் அஞ்ஞானியென்றும் கொள்ளுதல் குருட்டுத்தன மாகு மென்பதிற் றடையில்லை. அவசர பேதத்தால், அவ்வக் காலத்திற் கேற்கவும் உலக நிலைமைக் கேற்கவும் சீர்திருத்தம் புரிந்த ஆரியரை அநியாயமாய்த் தூறுவது பெரும் பிசகு. ஒவ்வொன்றையும் அவர்கள் காலத்ததாயும் அவர்கள் தேசத்த தாயும் நோக்கல் வேண்டுமன்றி, பல்பெரும் வருடம் பறந்தொழிய அதன்பின் நின்று பலவாறு மாறுதலடைந்த நம் வழியால் அவைகளை நோக்கி நகை விளைத்தல் ஆதரிக்கத் தக்கதன்று. இவ்வண்ணமே சமயப் பொறுமை வளர்ப்பது: ஏசுவும், தேவனே; மஹம்மதும் தேவனே; கிருஷ்ணனும் தேவனேயென்று கொள்ள இசைகிறது.

இவ்விஷயத்தில், நம் மனதின் முத்தொழில்களும் ஒவ்வொன்றும் அவசியமானதே. அறிவினாலும், உணர்வினாலும், கருமத்தாலும் ஐயனை வழிபடுவதே அழகிய வழியாகும். ஒன்றிருந்து ஒன்றில்லாதது எவ்வாற்றானும் குறைபாடுற்றதே யென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. மூன்றும் ஒன்றாக்கி முதல்வனைத் துதித்தல் தான் அவனை முழுமனதுடன் துதித்தலென்று சொல்வதற்கு யோக்கியதை யுற்றது. ஒன்றின் சகாயம் அற்றாலும், மற்றொன்று வன்மைகுன்றும். இவ்வாறாயினும் சிலர் ஞானமே அதிகமென்றும், சிலர் பக்தியே அதிகமென்றும் சிலாகித்துக் கொண்டிருக்க, நீவிர் யாது மறுமொழி கொடுக்கின்றீர்? என்று நம்மைக் கேட்டக்கால், இரண்டும் அவசியமே யென்று மறுமொழி கூறலே நமக்கு ஒத்ததாய்த் தோன்றுகிறது. இப்படி சமதிருஷ்டியுடனே நாம் அனேகமாய்ப் பேசுவோமாயினும், கடவுளைத் தொழுவதில் சில காரணங்களை முன்னிட்டு பக்தியே சிறிது விசேஷமென்று புலப்படுகிறது. சாதாரண மனிதர்களின் நிலைமையை உற்று நோக்குங்கால், 'ஞானம்' என்பது வெகுசிறிது தூரமேபோகும். அதன் பலம் வெகுவாய் அதிகரித்ததல்ல. இயற்கை அகண்டாகாரத்தைக் கண்டு நம்மனம் துணுக்குறுகின்றது. பரப்ரம்ஹத்தின் இயற்கையைச் சிறிதேனும் நமக்குத் தெரிவிப்பது ஞானமாயினும், தெரிந்ததைச் சுற்றி வரம்புகடந்து நிறைந்து நிலையுற்ற அந்தகாரத்திற்கு முன் அதன் அதிகாரம் சிறிதாயினும் செல்லவில்லை. பரப்ரம்ஹத்தின் எதிரில் நமது ஞானம் பகலவன் ஒளிமுன் மின்மினி யாகுமேயன்றி அதற் கதிகம் காணாது. நமது ஞானம் அதிக துடிப்புடன் அளவு கடந்து போக முயன்றால் அடிபட்டுக் கீழே விழுகிறது; பறக்கலா மென்றால் இறகு காணோம். விவரணமாய்ப் பகுத்தறிகிற நியாயம் நம் பூமிமட்டத்தில் அலைந்தும் உலைந்தும் அவதிப்பட்டு, நேற்று சொன்னதை இன்று தப்பென்றும், தப்பென்றதைச் சரியென்றும் கலக்கம் விளைத்துக் கொண்டிருக்கும்: இதற்குமேல் அதற்கு வேறு சக்தி கிடையாது; நம்மைத் தூக்கிச்செல்ல அதற்கு வன்மை காண்கிறோமில்லை; வாசுதேவன் உளனென்று வன்மையுடனறிந்தாலும் வைகுந்தத்திற் சேர்க்க அதனிடம் வல்லமை காணோமே. ஞானமானது கப்பலுக்கு வழிகாட்டும் சுக்கானுக்கு ஒப்பிட்டால், கப்பலை யிழுத்துக் கொண்டுபோகும் பாய்மரத்திற் கொப்பாக பக்தியைச் சொல்லலாகும். பக்தியின் வன்மைக்கு அளவு கிடையாது. பக்தியே மானிடர்க்குப் பரம சாதனம்! பக்தியே திக்கற்ற உயிருக்கு ஒப்பற்ற துணையாவது! நம்மைத் தூக்கி நாதன்பால் பறந்து செல்வது பக்தியேயாகும்? ஐயன் தன்னோடு அன்பர் அணையச் செய்வதும் பக்தியே! அநித்திய ஜீவிகளாகும் நம்மை நித்தியப் பொருளோடு ஒத்துப்போகச் செய்வது பக்தியே யாகும்! பக்தியே முக்தி கொடுக்கும் யுக்தி மார்க்கம்! பரப்ரம்ஹத்

தைப் போலவே வரம்பற்றது நம் பக்திப்ரேமை யாகிய உணர்ச்சியே! இதனாலேயே போலும் தேவ விஷயங்களுக்கு, வெறும் ஞானத்தைவிட, ஞானம் பதிந்த உள்ளம் அல்லது இதயம் (Understanding Heart) அவசியம் என்று டிக்வின்ஸிப்புலவர் (Dequincey: see his Essay on Pope) இதயத்தை முதன்மையாய் எடுத்துக் கூறுவது அவர்க்குச் சம்மத மாவதைத் தெரிவிக்கிறார். சத்துவ விஷயங்களில் புத்தி (Head) யைவிட சித்தமே (Heart) பதின்மடங்கு உத்தம மானது.

மேற்காட்டியபடி பேசுவதால், ஞானம் அவசியமில்லை யென்று நாம் சொல்வதாய்க் கொள்ளலாகாது. ஞானமும் பக்தியும் நன்கமைந் திருந்தலே நல்ல சாதனமாகும். ஞான மில்லாமல் பக்தியே இருக்காது என்பது எம்முடைய கொள்கை. எப்படி, முன்சொன்னபடி ஒவ்வொரு உணர்வுக்கும் சிறிதாயினும் அறிதல் வேண்டுமோ, அப்படியே பக்திக்கும் பக்தி யாவரிடம் செலுத்த வேண்டுமோ அவரைப் பற்றியும் அவரியற்கையைப் பற்றியும் சிறிதாயினும் தெரிந்துகொள்ளுதல் அவசியமே. அல்லாமலும் எப்படி உணர்வுக்குக் காரணம் அறிவு ஆகாது என்று நிரூபித்தோமோ, அவ்வாறே, இங்கும் பக்திக்குக் காரணம் ஞானமே யாகாது என்று தெரிந்து கொள்ளுதலும் அவசியமே. உணர்வாகிய உன்னத முறாதவர்கள் ஞானம் என்பதற்கு மேற்சொன்ன குறிப்பே யன்றி, எந்நேரமும் பன்னிப் பன்னித் தத்துவ விசாரணை செய்வதே ஞான மென்றும், அஃதே போதுமான தென்றும் பலவாறு அபிப்பிராயப்பட்டு நடப்பார்கள். இவ்வாறு செய்வதில் இரண்டு கஷ்டங்களுள்ளன: (1) அபிப்பிராய பேதங்களால் கலக்க முறுகையும், நம் அறிவுக்கு மிஞ்சிய விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதால் நேரிடும் நிலையில்லாமையும், ஆபத்துகளும்; (2) முன்சொன்னமனோதத்துவப்படி, அறிவு அதிகரிக்க அதிகரிக்க உணர்வு குறைதலுமேயாம். இத்தகைய ஞானம் பெறுவதற்கும் தத்துவ ஆராய்ச்சி செய்வதற்கும் யாம் ஒரு ஆக்ஷேபனையுங் கூறவில்லை யாயினும், மேற்சொன்ன கஷ்டங்களுக்கு இடங்கொடாது இருத்தல் வேண்டும். இவையிருந்தும் பக்தி மேன்மை யில்லாவிடின் யாதொரு பயனுமில்லை யாதலால், இவை யில்லாத பக்தியே, பக்தியில்லாது இவைக ளிருத்தலினு மேதக்கது. இக் காரணத்தை முன்னிட்டன்றே, தாயுமானரும்.

"பூதலய மாகின்ற மாயைமுத லென்பர் சிலர்
  பொறிபுல னடங்கு மிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
  போனவிட மென்பர் சிலபேர்

நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர் சிலர்
  நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
  நாடிலரு ளென்பர் சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர் சிலர்
  பேசினரு வென்பர் சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர் சிலர்
  பிறவுமே மொழிவ ரிவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலால்
  பரமசுக நிஷ்டை பெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
  பரிபூர ணானந்தமே"

என்றும்,

" அதுவென்றா லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
  யாதலினா லதுவெனலு மறவே விட்டு
மது வுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
  மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
  படிக்கு நிரு விகற்பத்தாற் பரமா னந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
  கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்"

என்றும்,

"மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு
  வாயிலுடன் மதியகடு தோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த
  மணிமேடை யுச்சி மீது
முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
  முத்துமுத் தாய்க்குலாவி
மோகத்திருந்துமென் யோகத்தினிலை நின்று
  மூச்சைப் பிடித் தடைத்துக்
கைத்தல நகப்படை விரித்தபுலி சிங்கமொடு
  கரடி நுழை நூழை கொண்ட
கானமலை யுச்சியிற் குகையூ டிருந்துமென்
  காதலா மலக மென்னச்

சத்தமற மோனநிலை பெற்றவர்க ளுய்வர்காண்
ஜனகாதி துணிவி தன்றோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே"

என்றும் பல்விதமாகக் கூறியிருக்கிறார். இராமலிங்கப் பிள்ளை யவர்களும் இப்படியே அனேகம் கவிகள் செய்ததைக் காண்கிறோம்.

இதல்லாமலும், இதனினும் கலக்கம் விளைக்கக்கூடிய இன்னொரு கஷ்டமு முண்டு. இயற்கைக்கு மீறிய தேவத் தோற்றங்கள் அடிக்கடி உண்டாவன என்பதில் யாதொருதடையு மில்லை. உலகத்தில் அக்கிரமங்களை யொழித்து தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டுத் தாம் அவதரிப்பதாய் ஸ்ரீகிருஷ்ணன் பகவத் கீதையில் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். 'ஸைன்ஸ்' என்னும் மேற்புல விஞ்ஞானமும் கண்டுணராத அபூர்வ மானதும் அந்தரங்க மானதுமாகிய சில தோற்றங்கள் (Occult-phenomena) நேரிடுகின்றன வென்றும் நாம் பல விதத்தாலும் அறிகிறோம். இது பற்றியே போலும், "ஹொரேஷியோ, உன்னுடைய தத்துவ சாஸ்திரத்தில் கனவுகாணப் பட்டதைவிட அனேக விஷயங்கள் வானத்திலும் பூமியிலும் உளவென்று பொருள்படும் "There are more things in Heaven and Earth, Horatio, than are dreamt of in your Philosophy" என்னும் வாக்கியத்தை வரைந்தார், அகில மெங்கணுமுள்ள சகலராலும் வெகுவாய்ப் புகழப்பட்ட ஆங்கில காளிதாஸ ராகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் மேதக்க நாடகப்புலவர். இவ்வாறு தோற்றங்களுண்டாவன வென்பதை, மேஸன் (Masson) என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவாறு ஒத்துக் கொண்டும், அவைகள் எவ்வளவு தான் மேன்மையுற்றிருப்பினும், வெறும் ஆவிர்ப்பவ (Phenomena) மாத்திரமாய் நிற்பதால் முமுக்ஷுக்களுக்கு அத்தியாவசிய மானவை யல்லவென்று கூறுகிறார். (Recent British Philosophy by Masson.) இவர் சொல்வதில் உண்மை யுள்ளதும் உண்மை யில்லாததும் நமக்குக் காணப் படுகின்றன. இவ்வாறு அசாதாரணத் தோற்றங்களில் உண்மை யுண்டென்று நமக்குத் தோன்றிய போதிலும், அஞ்ஞானாந்தகாரத்தில் அழுந்தி யுழலும் அசடர்கள் அரை குறையாய்த்தெரிந்ததை அலங்காரப்படுத்தியும், ஆகாயத்திற் கோட்டை கட்டுவதென்னலாம்படி, யாதொன்றும் விநோதம் காணாதிருக்கவும் தம் மனப் போக்கைக் கனப்படுத்தும் எண்ணத்தையே கொண்டு பலவாறு பலபல பிதற்றுநிற்பர். ஆகையால் இவ்வித தோற்றங்களில் நாம் நம்பிக்கை வைக்கா திருக்க நேரிடுகிறது, நம்பிக்கை வைக்கா திருப்பதும் நல்லதென்று தோன்றுகிறது. இஃதன்றியும், நமது சாஸ்திரங்களில் கிரந்த

கர்த்தா அலங்காரப் போக்காய் எழுதிவைத்ததை சிலவேளை உண்மையென்று கொள்ளவும், ஒவ்வொருவர்க்கும் உண்டாகக் கூடிய அபிப்பிராய பேதங்களால் தத்தம் அபிப்பிராயங்களையும் கோட்பாடுகளையும் வலியுறுத்தற் பொருட்டு மோச வழியாய் இடையிடையே சொருகிய பாடல்களையுண்மை யென்று நம்பவும் பலவித கெடுதிகள் நேரிடுகிறது. ஆதலின், இத்தகைய விஷயம் நம் ஆலோசனைக்கு எதிர்ப்படும் பொழுது எண்ணலாகாத இடர் உண்டாகின்றது. அதைச் சரியானதென்று நாம் ஒத்துக்கொள்ளுகிறதா? அன்றி, அறிவுக் குறைவாலோ, மோச எண்ணத்தாலோ, பிடிவாதப் பெருக்கத்தாலோ கூறப்பட்டது, அல்லது வரையப் பட்டது என்று பிடர் பிடித்துத் தள்ளுகிறதா? இதனாலேயே, சுருதி, யுக்தி, அநுபவம் என்கிற மூன்றையும் நம்மனோர் மூன்று சுடர் விளக்காய் அமைத்தனர் போலும். பெரும்பாலும் இவ்வித அந்தரங்க விஷயங்களில் நம்பிக்கை யற்றிருப்பது சர்வோத்தமமே. அதிக பக்தியே அரசாளும் மனதிற்கு இவைக ளெல்லாம் வேண்டிய தில்லைதான். ஆயினும் அவைகளை நாம் முழுதும் நம்பவே கூடாது என்று சொல்லுதலினும், அவைகளை விவரிப்போர் எவரே யாயினும், எவ்வளவு கல்வி யொழுக்கங்களிற் சிறந்து நற்குடிப் பிறந்தோ ராயினும் அவர்களை யெல்லாம் மோசக்காரர் என்று முறை யிடுதலினும், மிக்கதாகிய வெறித்தனம் உலகத்தில் கிடையாது. அவர்கள் கொண்ட எண்ணம் பிழை யுற்றது என்று சொல்வது ஒன்று; அவர்கள் உலகத்தை யேமாற்றி வஞ்சத் தொழில் புரியும் கள்ளமாகிய உள்ளத்தின ரென்று உரைப்பது பிறிதொன்று. ஒருவர் கொண்ட அபிப்பிராயம் பிசகு என்று நியாய வாயிலாய்க் காட்டுவதற்கு அறிவுடைய ஒவ்வொருவருக்கும் சுதந்தர மிருக்கிறது. ஆனால் மோசக்காரர் என்று தக்க காரண மில்லாமல் சொல்வது வம்பர் செய்யும் வகைகெட்ட காரியத்தின்பாற்படுமே யன்றி, நன்மதியாளர் தமது நடை யொழுக்கத்திற் கியைந்ததல்ல. ஒரு தோற்றம் நேர்ந்ததாய் அறிவாளர் என்று மதிக்கப்பட்ட ஒருவர் சொல்லுங்கால், அஃது எவ்வளவு அசாதாரணமா யிருந்த போதிலும் நாம் அமைதியோடும் ஆத்திர மில்லாமலும் அதனுண்மை ஆராய்ந்து தக்கபடி ஒழுகல் வேண்டுமே யன்றி, கண்டபடி வைது காலங் கழிப்பது கற்றவர் செய்யுங் காரிய மல்ல. முமுக்ஷுக்களுக்கு அவ்வளவாய் இவ்விஷயங்கள் அவசிய மில்லை யென்று தோன்றினும், நம் முடைய ஞானத்தை யபிவிர்த்தி செய்வதும் ஒவ்வொருவருடைய இன்றி யமையாத கடனாகும். இதைப்பற்றியே, யாம், முன்னர், ஞானத்தைச் சுக்கானுக் கொப்பிட்டோம். பக்தியின் வன்மை ஞானத்திற் கிலதாயினும், ஞானத்துக்குள்ள ஒளிவு எங்கும் போகா தானமையின், பக்தியோடே ஞானத்தையும் அபி

விர்த்தி செய்வது ஒவ்வொருவருக்கும் இலக்கா யிருக்க வேண்டும். என்றாலும், ஞான மார்க்கத்தில் தோன்றும் கஷ்டங்களும் நஷ்டங்களும் பக்தி வழியில் கிடையாததால், இது வெகு சுலபமான தென்பதே அதனுடைய மேன்மையை விளக்குகிறது. (See, Lectures, on Bhakti Yoga, by Sri Swami Vivekananda and Three Paths by Mrs. Annie Besant.)

ஞானமில்லாத பக்தி 'மூடபக்தி' யென்னப் படுகிறது; நாம், பக்தியில்லாத ஞானத்தை 'உபயோகமற்ற உணர்வற்ற ஞானம்' என்று கூறலாகும். பக்தி மாத்திர மிருந்து ஞான மில்லாத மூடன் இவ்வுலக ஞானமில்லாததால் இங்கு இகழப்படுவானே யன்றி, பகவானுக்கு அவனிடத்தில் அருளுண்டாகு மென்பதில் யாதொரு சந்தேகமு மில்லை. பக்தியில்லாது ஞானம் மாத்திர முடையவ னென்பான், இவ்வுலக ஞானம் உடையவனே யன்றி வேறொன்றுமாய்க் காணாமையின், அவன் இங்கு நன்கு மதிக்கப்பட்டாலும், கடவுள் அருளைக் கனவிலும் பெறான். இவ்வாறு நாம் பேசுவ தாலேயே 'ஞானம்', 'பக்தி' என்பவை எவ்வெப்படி உபயோகப் பட்டு வருகிற தென்பது அறியலாகும். 'பக்தி' யென்பது உண்மைப் பக்தியாயின் 'மூட பக்தி' யென்பது கிடையாது, ஞானம் உண்மையான ஞானமாயிருப்பின், உணர்வற்ற ஞானம் என்று சொல்லுதலும் ஆகாது.

'கடவுளும் நானும் ஒன்று' என்னும் அத்வைத வாதிகளுக்கும் பக்தி உடன்பாடே யாகிறதென்று தெரிகிறது. அவர்களும் வியவஹார நிலையில், சகுணப்பிரம உபாசனை செய்கிறது மன்றி கடவுள் அவதாரச் சிறப்புகளையும் சௌலப்பியத்தையும் வியக்கிறார்கள். அவர்கள் தத்துவக் கோட்பாட்டிற் கிணங்க, மாயையை முற்றும் ஒழித்துப் பரப்பிரம்மத்தில் லயிப்பதற்குப் பக்தியாகிற உணர்வே பரமசாதன மென்று சொல்லுவதிலும் இழுக்குள தென்று எமக்குத் தோன்றவில்லை. ஆயின் இவ்வாதத்தில் இப்போது தலையிட்டுக் கொள்வது எமக்கு ஏலாது என்று முன் கூறியதையே மீண்டுங் கூறுகின்றோம். அன்றியும், அத்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் தத்துவ விஷயமாய் உண்டாகிற மாறுபாடுகளில் எல்லாவற்றையு மல்லாவிடினும் பெரும்பான்மையையாவது, சொற்போர் என்று கூறலாகுமென்று தோன்றுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

V.

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” என்பது பவணந்தியார் தமது தொன்னூலாகும் நன்னூலிற் கூறியது. இது இலக்கணங் கூறி முடித்த காலத்திற் சொன்னதாயினும், வேறு விஷயங்களுக்கும் நனிமிகப் பொருந்திய நியதி யாகும். ஒரு காலத்தில் அவசியமாகிய காரியமும் சொல்லவேண்டிய புத்தியும் செய்யவேண்டிய உபதேசமும், பிறிதொரு காலத்திற் பொருந்தாது போகினும் போகும். கிருதயுகத்தில் வேண்டியது கலியுகத்தில் வேண்டப்படாதும் கலியுகத்தில் வேண்டியது கிருதயுகத்தில் வேண்டப்படாதும், பலவகை மாறுபடுவது இயற்கையே! மண்டபமும் மாளிகையும் கோட்டையும் கொத்தளமும் இருந்த இடமே குட்டிச்சுவர் நிற்கவும், மட்டிக் கழுதைகள் வாழவும், பாம்பும் தேளும் நண்டும் நாயும் பலவித ஆபாசங்கள் நிறையவும் பாழ்பட்டுக் கிடக்கும். இதற்கு மாறாக, பாழடைந்த மூலைக்கு வாழ்வு வந்துவிடும். பிரபஞ்சத் தோற்றம் ஒரு நிலைப்பட்டதன்று. அதில் கடவுளே அவதாரம் செய்து ஒரு காலத்திற் கேற்றதுபோல் யாதேனும் செய்தனராயினும், அது பிற்காலத்திற் கொத்துக் கொள்ளாது போயின், கடவுள் மேல் குற்றஞ் சாராது. அசாதாரண சக்தி புலப்படுத்தி ஸ்ரீமத் சங்கராசார்யரும் ஸ்ரீராமானுஜாசார்யரும் ஸ்ரீ சைதன்ய ஸ்வாமிகளும் இன்னும் பிறரும் தத்தம் கொள்கைகளை வெளிப்படுத்தினது வாஸ்தவமாயின், அவர்களுக்குள் ஏன் மாறுபாடுகள் உண்டாதல் வேண்டும்? அப்படியும் வேற்றுமைகள் உண்டாகக் கூடுமோ? என்று பலர் நம்மைக் கேட்கக்கூடும். பிரபஞ்சத் தோற்றம் மாறி மாறி வெளிப்படும் தன்மையதாயின், அவ்விதமான வித்தியாசங்கள் நேரிடுவது சாதாரணமே என்பது நமது அபிப்பிராயம். ஞான சூன்யமாயிருந்த காலத்தில் ஞானமே அவசியமென்று எல்லாப் பெருமைகளை அதற்கே தந்தும், இந்த உபதேசத்தைக் கைக்கொண்ட அற்பராகிய பிற்காலத்தவர் அதன் போக்கையும் உத்தேசத்தையும் சிறிதேனும் நோக்காது பக்தியை மறந்து அறிவையே அபிவிர்த்தி செய்த காலத்தில் பக்தியே விசேஷித்ததென்று அதன் குணங்களையே மிக வெடுத்துக் காட்டியும் ஆத்துமாக்களை உஜ்ஜீவிக்கச் செய்வது ஆசார்யராக உற்பவிக்கும் தேவப்பிறப்பாளரின் காரியமாக விருத்தலில் தடையில்லை. பெரியோர் பணித்த அரிய கட்டளைகளின் சாராம்சத்தை விடுத்து, அவர்க்குப் பின் தோன்றுவோர் மெய்யைப் போக்கியும் பொய்யைப் போற்றியும் வழியினின்றும் நழுகுதல் உண்டு. இப்படியே கலிமுற்றிய காலங்களில் நலியச் செய்யாது எல்லாரையும் நல்லவராக்க அவ்வக்காலங்களுக்கேற்க தெய்வப் பிரயத்தனங்கள் பலவிதமாகத் தோன்றுவன வாதலால், அவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாய்க் காணப்பட்டபோதிலும், உண்மையில் முற்றும் விரோதப்படாது முடிவில் நன்மையே பயக்கும் என்பதை விட வேறு யாம் கூறுதலாகாது.

மனதின் முத்தொழில்களுக்கும் ஒத்தபடி முதல்வனைத் தொழுதல் உத்தமமென்றும் அதனினும் பக்தி நெறி பிடித்துப் பரந்தாமனைப் பாடு

தல் பரம உத்தம மென்றும் கூறினோமாக, அந்த பக்தியை நமக்குள் விர்த்தி செய்வது எப்படி யென்றும் அது ஓங்கி யெழுந்து வளர்ந்த காலையில் எப்படி யாகுமென்றும் அதற்கு இடையூறுகள் எவையென்றும் சிறிதாயினும் நோக்குவது இன்றி யமையாத தாகிறது. பக்தியானது நம் மனதின் உணர்வுத் தோற்றத்துடன் சம்பந்தப்பட்ட தானமையால், பக்தி பெருகுவதற்கு நம் உணர்வை நல்ல வழியில் உபயோகப்படுத்தி அது மீண்டும் மீண்டும் உண்டாகும்படி செய்தல்வேண்டும். அன்பும் அருளும், பொறையும் நிறையும், நேசமும் பாசமும், இரக்கமும் உருக்கமும், மேன்மேலும் பெருகுதலும், அவைகளின் வன்மைவழியாக, பற்பல சற்கருமங்களியற்றுதலும் இதற்கு வெகு அவசியமானது. துன்பப்பட்டோரைக் கண்ட காலங்களில் நாமும் துயருற்றுக் கூடிய வரையிலும் அதை நீக்கலும், பிறர் நோயின்றி மிடியின்றி மேன்மையுற்று விளங்கும்போது நாமும்மகிழ்வுறலும் போன்ற மன நிகழ்ச்சியே நம் உணர்வை யொரு நிலைப்படுத்தி உற்சாகத்தைக் கொடுக்கும். நம் வீட்டிலுள்ள உற்றோர் பெற்றோரை நேசித்தலும், பெரியோரைப் பூசித்தலும், காதலர் காதலிகள் ஒருவரை யொருவர் காதலித்தலும் ஆதரித்தலும், குழலினும் யாழினு மினிய மழலை பயின்று மேலே வீழும் பால் மணமருத மக்களை யன்போடு முத்தந்தந்து உச்சிமோந்து உள்ளங் குளிர்தலும், புதல்வர் புதல்விகளை அருமையாய்ப் பாவித்து அன்பு புரிதலும் நமக்குப் பரமசாதனமாய் முதலில் பாவிக்கவேண்டும். இஃதே மற்றவைகளுக்கு அஸ்திவார மாவது. இஃதே பக்தியாகிற பயிருக்குக்கொழு கொம்பு போல்வது. இஃதே உணர்வென்னும் நெருப்பு கொழுந்துவிட் டெரிய உற்ற நறு நெய்யாகும். இஃதே கடமையும் தர்மமும் கலந்த கதம்பப்பொடி! இஃதே குளத்தி லெறிந்த கல்லைப் போன்று தன்பால் நின்றும் சிறிது சிறிதே பெருகிப் பின்னர் பெரிதே யான வட்ட வடிவம்! இஃதே காரணமாய்த்தான், தருமஞ்செய்தல் வீட்டினின்றும் விளைவது என்று ஆங்கிலர் கூறுவதும் (Charity begins at home).

ஆனபோதிலும், இதனுண்மை யறியாது அனேகர் அநர்த்தஞ் செய்கிறார்கள். இந்திரிய நிக்கிரகம் செய்வதே உத்தம மென்று சொல்வது, நம் மனம் முழுதும் ஒரு வழிப்பட்டு ஒப்பற்ற பெருமானிடம் லயித்திருக்க வேண்டு மென்பதற் காகவே யென்று அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இது செய்வதற்கு வழியாது? அத்வைதக் கொள்கைகளைத் தப்பாயறிந்தவர்கள், பஞ்சேந்திரியங்களை யடக்கவேண்டு மென்பதால், தாம் கல்லுக் கொப்பாய் விடவேண்டிய தென்று கருதுகிறார்கள். எப்படியென்றால், பிறர் துன்பப் படும்போது நாம் என் அவரைப் பார்க்கவேண்டும்? பிறர் நோய் பொறாது வீறிட்டழுதால், நம் காதால் அதைக் கேட்கக்கூடாது.

இவைகளெல்லாம் மெய்யாய் பொய்யாகவே யிருக்கிறது. துன்பப் படுவது யாவர்? விலக்குவதும் யாவரோ? எல்லாம் அஞ்ஞானத்தால் விளைவது என்று அரைநிமிஷத்தில் ஆயிரம் நியாயம் பேசித் தமது காசைப் பத்துதரம் முடிபோடுவார்கள். தமது சுகத்துக்குச் சிறிதேனும் குறைவு வராது, இவர்கள் பார்த்துக் கொள்வதோடும், அன்பு அருளாதிய சற்குணங்களைத் தீர வொழித்து ஈகை இரக்கச்செயல் முதலிய சற்கருமங்களை யறவே விடுத்து, இருப்பது ஒன்று தான், மற்றத் தோற்றங்களெல்லாம் மித்தையே என்று கல்வினும் கடைகெட்டுப் போவது போன்று விளங்கி ஆத்தும விஷயத்தில் கஷ்டமும் நஷ்டமு மடைகிறார்கள். இந்திரிய நிக்கிரகம் செய்வதென்றால், கண்ணைக் குருடாக்கியும், காதைச் செவிடாக்கியும், மனதைக் கல்லாக்கியும் மாண்டொழிவதன்று. கெட்ட வழிக்குச் செல்லாமல், நமது இந்திரியங்களை நல்ல முறைமையில் நடாத்துவதால், பக்தி ப்ரேமையாதிய சற்குணங்களைப் பெற்று, அவை விர்த்தி அடைய அடைய உலகப் பற்றை முற்றிலும் ஒழித்து, தம் அன்பு முழுமையும் அவனிடத்தே அர்ப்பணஞ் செய்து ஜீவன் முக்தராய் விடுவதற்கு தக்கதோர் நெறி யேற்படும். மனதைக் கொண்டே மனதை வெல்லல் வேண்டும். பரப்ரம்ஹமும் கல்லன்று ; ஜீவன் முக்தரும் கல்லல்லர். தம் அறிவு முதிர்ச்சியாலும், அன்பின் மிகுதியாலும், உலகத்துள்ள ஒவ்வொரு உயிரையும் தாம் என்றே பேதமற நோக்கி தம்மைப் போலவே நேசித்துக் கருணை புரிவோர்தான் ஜீவன்முக்த ரென்னப்படுவார், மஹான்க ளென்று மதிக்கப்படுவார். அன்பும் ஆசையும் இரக்கமும் ஈகையும் நட்பும் நன்மையும் விளைத்துக் கொண்டே அதியுன்னத நிலையை யடைய வேண்டுமே யன்றி "மண்ணுண்ணி மாப்பிளையே, காவிறையே கூவிறையே உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி கன்னு பின்னு மன்னு தென்னு சோழரங்க பெருமானே" என்று கட்டை சுமந்தோன் பாடியதற்குக் கம்பர் கருத்துரைத்த வண்ணம், எடுத்த பாட்டிற்கு இருபது அர்த்தம் செய்து விடுவதனாலாவது, கண்ணைத் திறந்துகொண்டே குருடராகியும் காதை அடைக்காமலே செவிடராகியும் போவதா லாவது, இந்திரிய நிக்கிரகம் செய்வதும் உலகமாகிற மித்தையி னின்று விலகி உத்தமனை யடைவதும் ஆகவே யாகாது. இவ்வாறு மோக்ஷம் பெற விரும்பும் வாசாகயிங்கரியமே வழியென நாடுவோர், "அநித்யாணி சரீராணி அந்தரு சொம்மு மனகே ராணி" யென்ற பரமதயாளனை யொப்பர். "யாருக்கும் சுகதுக்கம் என்பது கிடையாது எனக்கு மாத்திரம் உண்டு" என்றும், "எல்லார் சொத்தும் மித்தை என் சொத்து மாத்திரம் சத்தை" என்றும் பல படியாலும் வாய்ப்பறை யடிப்பவர், ஒருவிதம் கல்லாயும் ஒருவிதம் சயலாப துரந்தரராயும் ஒழிவாரே

யன்றி உண்மையை ஒரு சிறிதேனும் உணர்ந்தவரே யல்லர். அத்வைதமென்பதும் இந்திரிய நிக்கிரக மென்பதும் இவ்வாறிருப்பின், மோக்ஷமடைய வழி தேடுவது இவ்வித மாயின், உலகம் மித்தை யென்று உண்மையை நாடுவது இவ்வித மாயின், ஒருவர் தற்கொலை புரிந்து கொள்வதே, இவைகட்குத் தக்க வழி யென்று தைரியத்துடன் உரைக்க வல்லோம். அந்தோ! அரிய புத்தியும் பெரிய நோக்கமும் மிகவும் கொண்ட மேன்மையாளராகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் தம் வாழ்நாள் முழுதும் தற்கொலையையா உபந்யஸித்தார்? ஒருக்காலு மிராது. காலபேதத்தால் உண்டாகும் கோலாகலங்கள் உண்மையில் கணக் கிறந்தவே! அந்தந்தோ! இது மிகவும் பரிதபிக்கத் தக்கது.

மேற் கூறியவை யல்லாமலும், இனிய நேசம் விளைவதற்கு இடையூறாக நிற்கும் ஆபாசம் மற்றொன்று முண்டு. உலகத்தில் தோன்றும் பலவித வேற்றுமைகளில் மத வித்தியாசமும் மதத் துவேஷமும் மிகக் கொடியது. சமரசஞான மென்பது வெகு சிறிது மின்றி தாம் தாம் கொண்ட எண்ணத்தைச் சாதிக்கவே கங்கணம் கட்டி விருது கூறி அல்லாசாமிப் பண்டிகையில் அதமர் சவாலிடுவது போல், அங்கு மிங்கும் அல்லல் விளைக்கும் அன்பர்களே, சிறிது செவி சாய்த்துக் கேண்மின்! "உலகத்திலுள்ள ஜீவராசிகளில் நாமே நல்லறிவாளர், நாமே சர்வ ஜீவ தயாபரக் கொக்குகள், நாம் பிறந்த இடமே சர்வோத்தம மான ஸ்தானம். நாம்தாம் உண்மையில் கடவுளை நேசிப்பதும் விஸ்வாசிப்பதும். கடவுள் குழந்தைக ளென்பார் நாமே! அவர் அருள் புரிவதும் நமக்கே! நம்முடைய சாஸ்திரமே உண்மைச் சாஸ்திரம். நாம் பெறும் பதமே பரம பதம்! மற்றையோர் அஞ்ஞானிகள், அவிவேகிகள், அவர்கள் புத்தி உலக்கைக் கொழுந்தே! அவர்கள் கடவுளின் குழந்தைக ளல்லர், பிசாசின் குழந்தைகள்! அவர்கள் அதமர்! அவர்கள் மிலேச்சர்! அவர்கள் நூல்கள் பொய் நூல்கள்! அவர்க ளடையப் போவது நரகமே" என்று பலவாறு ஒவ்வொரு தேசத்திலுள்ள ஒவ்வொரு மதத்தினரும் தம்மைத் தாம் புகழ்ந்தும் மற்றோரை யிகழ்ந்தும் போதருவார். இதை விடக் கர்வங் கொண்டதும், முட்டாள்தன மானதும், முறைமை கெட்டது மான அபிப்பிராயம் வேறொன்றுங் கிடையா தென்றும், புத்திசாலிக ளொருவரும் அதற் கிடங் கொடார் என்றும் அதி விவேகியான ரஸ்கின் துரை யவர்கள் கூறுகிறார். ("Sesame & Lilies" by Ruskin) வைணவ மதத்திற் பிறந்து விட்டதனாலேயே, வைணவம் பெரிதென்றும் சைவமதத்திற் பிறந்து விட்டதனாலேயே சைவம் பெரிதென்றும், அவரவர் தம் தம் பெருமை கூறுவதன்றி தாம் தாம் கொண்ட மதம் தவிர மற்ற மதங்கள் உபயோகமற்றவை யென்றும் உளறி ஊர்ப்போ ரெல்லாம் விலைக்கு வாங்கிக் கொள்வார் எத்தனையோ பேர். இது சுத்தப் பிசகான எண்ணம்! நன்மதியாளரே, இற்றை ஞான்றே, இத் துன்மதியை ஒழித்து விடுங்கள்! ஆரவாரம் ஒழித்து அடக்கத்தையே ஆபரணமாய் அணியுங்கள்! சண்டை விலக்கிச் சமாதானங் கொள்ளுங்கள்! கிருஷ்ணனாய், ஓரிடத்தில், கடவுள் அவதாரஞ் செய்வாராயின், கிறிஸ்துவாய் மற்றோரிடத்தில் அவர் ஏன் தோன்றுதல் கூடாது? கிறிஸ்துவாய் ஓரிடத்தில் தோன்றுவ ராயின், கிருஷ்ணனாய் பிறிதோரிடத்தில் விளங்கலும் அமையுமே? எம்மதமும் நமக்குச் சம்மதமே! பல சாதியர்களையும் பல மதத்தார்களையும் நாம் ஒப்பு வித்தியாசம் நோக்கிப் பரிசோதித்தலில், அவர்களிடம் ஒரு மேன்மை காணலாகும்; அஃது நம்மிடம் தோன்றா திருக்கவும் கூடும். அல்லது நம்மிடம் ஒரு மேன்மை தோன்றும்; அது அவர்களிடம் காணா திருத்தலும் கூடும். இப்படியே, புராணத்திற் கூறிய அன்னத்தைப் போன்று பாலைக் கொண்டு நீரைப்போக்கிப் பண்படைவதே ஒவ்வொருவர் நோக்கமாய் இருத்தல் வேண்டும். பட்சபாத மில்லாத பரம தயாளனுக்கு, எல்லோரும் குழந்தைகளே! எல்லோர் சுகத்திலும் அவனுக்குச் சமநோக்கே காணப்படும். அவ்வத் தேசத்தார் அவ்வந் நிலைமைக் கேற்ற வண்ணம், ஆங்காங்கே அண்ணலும் தோன்றி அருள் புரிகின்றனாகை, ஒன்றையொன்று இழித்துக் கூறுதலும் பழித்தும் பேசுதலும் பாவத்திற் கிடமே. 'தெய்வ மிகழேல்' என்று ஔவைப் பிராட்டியார் பொதுப்படக்கூறி, பின்னர் 'திருமாலுக் கடிமைசெய்' என்றும் 'சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு,' என்றும் மத பேத மில்லாது கூறியதை நம் அன்பர் நன்குணர்வாராக! கேவலம் யுக்தி அனுபவங்களுக்கு ஒத்து வராமல் சாத்திர வாக்கியங்களையே நேத்திரமெனக் கொள்ள லுமாகாது. ஏனெனின், அச்சில்லாத காலத்தில் அது பலபேர் கையாலும் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டும் குறைக்கப்பட்டும் பாங்கற்றுப் போயிருக்கலா மானமையாலும், சில பொய் யுற்பத்தி கூறிப் புறப்படும் நூல்களா யிருக்கக் கூடுமானமையாலும் தான். இதனா லன்றோ,

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகி
ரலைந்தலைந்து வீணே நீ ரழித லழகலவே"

என்றும்,

"சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம் விட்டறியேன்"

என்றும்,

'வேதாக மங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்னவலா லுண்மைவெளி தோன்ற வுரைத்தவில்லை
என்ன பயனோ விவை.'

என்றும், பலபடியாய், திருவருட் பிரகாச வள்ளலா ராகிய இராமலிங்கப் பிள்ளையவர்களும் கூறியுள்ளார்.

சின்னாட்களுக்கு முன் சென்னையில் நிகழ்ந்த மதப்போர் காரணமாக, வேற்றுமை நீக்கி ஒற்றுமை விளைப்பா னெண்ணங் கொண்டு ம-ா-ா-ஸ்ரீ, முத்துக் குமாரசாமி முதலியாரவர்கள், பி. ஏ., இயற்றிய "சமரஸ ஞான சந்திரிகா" என்னும் அரிய தொரு நூல் எமக்குக் கிடைத்தது. அவசரத்தால், விஷயங்கள் தொகுத்துக் கோத்தலிலும் வேறுசிலவற்றிலும் சிறிது குறை அதனிடங் காணப்படு மேனும், பொதுவாக, அஃது நைந்து படுத்தலின்றி, வெகு உற்சாகமும் வீரச்சுவையும் மலிந்த நடையி லெழுதப்பட்டிருக்கிற தென்பதை அறிவாளர் ஒத்துக் கொள்ளாது போகார். அதனிடம், மதத் துவேஷம் போக்கி, சமரசநிலை நோக்கி, சில வாக்கியங்க ளெழுதப் பட்டிருக்கின்றன. அவைகளின் உன்னதத்தை யாம் என்றும் மறவோ மாகலின், அவற்றை இங்கு பதிப்பிப்பதில் எமக்கு மிகவும் களிப்புண்டாகின்றது:

"யாவரும் யாவும் சிவமாய் விளங்கு மெமக்கு. உலக முழுவதும் ஹரியையே கண்டு களியா நிற்பர் ஞானிகள். எம்மதமும் சம்மத மெமக்கு. யாவரும் பெரியோ ரெமக்கு. அந்நியன் பத்நி தாயே யெமக்கு. வேசைத் தாசியும் சோதரியே யெமக்கு. எம்மனோர் வேசையைக் கடாக்ஷிப்பரேல், அன்றே, அப்போதே, அக்கணமே அவள் முமுக்ஷுவாய் நிற்பள். யாங்கள் படிப்பன யாவும் பரசிவ மந்திரம். யாங்கள் கருதுவ யாவும் நாராயண வடிவம். யாங்கள் காண்பன யாவும் எம்பெருமான் கண்ணன் றிருக்கோலம். யாங்கள் சாம்பவ மணிகளைக் காணில் அடியேம் சைவ ரென்போம். யாங்கள் ஸ்ரீபாகவத சிரோமணிகளைக் காணில் யாங்கள் வைஷ்ணவ பாததூளியே யென் றன்புட னறைவோம்: யாங்கள் மகம்மதியப்பெரியர் குழாம்சேரும் பள்ளிவாசலைக் கண்டால் சிவ சிவ என்பம். கிறிஸ்துவ ஸ்த்ரீ புமான்கள் குழீயிருந்த கிறிஸ்துவ தேவாலயங்களைத் தெரிசிப்போ மானால், ஹரி ஹரி என்பம். பிரஹ்மாகாரத்தை யாண்டும் எவரிடத்தும் தரிசியா நிற்பம். சர்வம் விஷ்ணுமயம் ஜகத். சர்வம் சிவமயம் ஜகத். எகமேவா த்விதீயம் பிரஹ்ம: சத்யமேவ ஜயதே!"

முற்காலங்களில் அவசர பேதத்தால் எவ்வெவை நடந்திருப்பினும், தற்காலத்தில் மததூஷணை யென்பது மிருகசேஷ்டைக் கொத்ததா யிருக்கிறது. இப்படி ஒருவருக்கொருவர் கலகம் விளைப்பது எதில் என்று யாம் ஆலோசிக்குங்கால், திருமண் இடுவதும் விபூதி பூசுவதும் விஷ்ணு என்பதும் சிவன் என்பதும் ஆகிய வெளிப்பகட்டு விஷயங்களிலும், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத விவகாரங்களில் சொற்போர் புரிந்து புஸ்தகப் பூச்சியே யென்ன யுக்தி அனுபவங்களை அறவே விட்டு, சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளையினும் குணங்கெட்டு, அடங்காப் பிடிவாதம் பூண்டு, தம் பிடிவாதத்திற் கேற்கச் சுருதிகளைக் கையாண்டு தம்தம் மனம்போன போக்கெல்லாம் போவதிலும் என்று நன்றாய்த் தெரிகிறது. புத்தி போயொழிந்தது; அவிவேகம் அரசாள்கிறது; பிடிவாதம் மேலிட்டது; மூட்டான் தனம் முதன்மையாய் நிற்கிறது. திருமண்தான் விசேடம் என்பார் ஒரு சிலர்; பூதிதான் புனிதமானது என்பார் வேறு சிலர். ஒருவர்க்கொருவர் நிந்தையாகிற சேற்றைப் பூசி நீசத்தனம் அடைகிறார்களே யன்றி, பக்தியாகிற பயிரைச் செழிப்புறச்செய்து பரிபக்குவமடைய வழிதேடுகிறார்களில்லை. சிவனைச் சண்டாளனென்றும் அவனை வழிபடுவோர்களை பாஷண்டர்களென்றும் கூறி, வகைகெட் டொழிவார் வைணவப் பதர்கள்! தடிராமனென்றும் சாப்பாட்டு ராமனென்றும் வைது வாயழுகிப் போவார் சைவச் சாம்பிராணிகள். தமிழறியும் பெருமாளிடம் அமிழ்தினு மினிய தமிழ்மொழி பகர வந்தோர் வழியிற் காணும் வினோதங்களிற் காலங் கழித்துத் தாம் உத்தேசித்த காரியத்தை ஒழித்து விழித்ததுபோல், இம்மத வைராக்கியர்களும் தம்மா லாகாத காரியத்தில் தலையிட்டுக் கொண்டு, ஆத்துமோஜ்ஜீவனத்தில் லட்சியம் வையாது, மருண்டு உருண்டு போகிறார்கள்.

முற்காலங்களில் ஒவ்வொரு வழக்கத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் அர்த்தமும் காரணமும் இருந்திருக்கலாம். இப்போது, அவ் அர்த்தமும் காரணமும் அவசியமும் நீங்கிவிட அனேக வழக்கங்களும் அனுஷ்டானங்களும் குருட்டுத்தனமாய் விட்டன. முன், திருமண் அணிவது, வைணவராகக் காண்பதற்கு ஒரு அறிகுறியா யிருந்தது. இப்போது ஒருவன் ஒரு குடும்பத்தில் பிறந்து விட்டதி னாலேயே, (அவனுடைய கொள்கை விசிஷ்டாத்வைதத்திற்கு முற்றிலும் மாறாக இருந்த போதிலும், அல்லது அவன் ஸர்வேஸ்வரனைப் பற்றி நினைத்தாலும் நினைக்கா விட்டாலும்) அஃது, அவனுக்கு இன்றி யமையாத ஆஸ்தி யாகிறது. இதுமாத்திர மன்று, ஒவ்வொரு மதசம்பந்தமான கருமத்திலும் காரியத்திலும், 'வழக்கம்' 'வழக்கம்' என்கிறார்கள். வழக்கம் என்னும் அரக்கன் நம்மை வருத்துகின்றானே யொழிய அதன் ஆத்துமா விலகிவிட உடம்புமாத்திரம் காண்கிறது. ஆயினும், வெளிவேடத்திற்குப் பெருமை யளிப்பது போல், மனத்தூய்மையை அவ்வ

லவு விசேஷமாய் நம்மவரில் அனேகர் மதிப்பதுகிடையாது. இவ்வாறு சொல்லும்போது, "இல்லை, இல்லை, யாங்களவ்வாறு இருப்பது இல்லையே" யென்று மறுமொழி கூறுவார்களே தவிர இயற்கையில் அது முதன்மையாய் இவர்கள் மனதி லுதிக்கா திருப்பதே, இவர்கள் கண்மூடி வழக்கத்திற் குட்பட்டவர்க ளென்பதை விளக்குகின்றது. இல்லையேல், எல்லாச் சட்டமும் திட்டமும் பேசும் இவர்கள், ஏன், எவ்விஷயத்திலும் மேன்மை யடைந்திராத ஒருவரிடம் பரம்பரைக் கிரமமாய் அவர் வந்திருக்கும் ஒரு காரணத்தை முன்னிட்டே, சமாஸ்ரயணம் என்னும் மததீட்சை பெற இசைகிறார்கள்? ஏன் புனிதனாகாத புரோகிதன், கல்யாண கருமாதிகளில் சடங்குகள் செய்வதை இவர்கள் விலக்குவதில்லை? அர்த்தமும் தெரியாமல் சிரத்தையு மில்லாமல், தூய்மையு மில்லாமல் வாய்மையு மில்லாமல், மிணமிணவென்று இவர் கொக்கரிப்பதை நிறுத்தி, பக்தியிற் சிறந்த பரம பாகவதர் ஒருவர் பிறப்பாற் சூத்திரரா யிருப்பவர், திருக்கரத்தாலும் அமுதவாக்கின் ஆசீர்வாதங்களோடும் ஒரு காரியத்தை நடத்த ஆரம்பித்தால், அப்பொழுது தெரியும் நமது தாதாக்கள் தடியெடுத்துக் கொண்டு வருவது! ஆயினும், காலமோ பெரியது! இக்குறைகளை யெல்லாம் காலத் தச்சன் கழிக்கவேண்டுமே யன்றி, நம்மா லெதுவும் நினைத்தவுடன் நிறைவேற்ற முடியாது. நம் கொள்கை யாதெனின், படாடோபஞ்செய்து பாதகரா யிருப்போரைக் காட்டினும், வெளிவேடமில்லாது உத்தமரானோரை உறு துணையாகக் கொள்வது உயர்ந்த தென்பதே யாம். பறையனைப் பணிந்த ராமானுஜர் பரம பாகவதராய் விளங்கினார். அவர் புத்தியும் சக்தியும் உதாரமும், இன்று பறையனைக் கண்ட மாத்திரத்தில் பத்து மைல் ஓடியும் பரம சண்டாளத்தனத்தி லாழப் பயப்படா திருக்கும் பாவிகளிடம் காண்கிறோமா? நல்லதையெல்லாம் விட்டுக் கெட்டதையே கொள்ளும் நெய்யரி போல்வா ரிவர்! இப்பொழுதும், ஒரு நிமிஷத்திலே ஒருகோடி பாக்களையும் ஒப்பித்துவிடும் சேவாகால மென்பதை நாம் அறிந்தே யிருக்கிறோம். "வண்ண மாடங்கள்" என்பார் ஒருவர்; "உறிவை முற்றது" என்பார் மற்றொருவர் தேங்காய் அரிந்து கொண்டே திவ்யப்ரபந்தத்தை ஓதிவிடுவார், அனேகர். இத்தகைய சேவாகாலத்தை நிறுத்திவிடின், அதற்குக்குறை கூறுவோர் நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பதுபேர். உண்மையாய்க் கடவுளை நேசிக்கின் அதுவே விசேடம் என்று உறுதி கூறுவோர் ஆயிரத்தி லொருவரும் அகப்படுவது அரிது. நம் மதங்களில் போர் விளைவது, இத்தகைய வழக்கங்களை யனுசரித்தாயினும் குருட்டு நம்பிக்கையைப் பற்றியாயினும் தோன்றுகிறதே யன்றி வேறன்று. இவ்வாறு சமர் விளைவது நேசம் போக்கிப் பகைபெருக்குமே யொழிய நன்மை யொன்றும் செய்யாது. எம்மதத்திலும் உண்மைகள் காணப்படும். அவைகள் நமக்குச் சம்மதமே யென்னும் சமரசபுத்தி யுண்டாக்குவதற்கு அத்துவித தத்துவமே ஊன்றுகோலா யிருந்தது, இப்போதும் இருப்பது. விரிந்த அறிவை விளக்காது, மனம் வெகுவாய்க் கட்டுப்பட்டு ஒரு மதத்தைப் பிறிதொரு மதம் தூஷித்து ஓயாக் கலகம் உண்டாக்கும் மதத்துவேஷத்தை அதப்படுத்தியது, அத்துவிதமே! அத்துவிதமாகிற அருமைக் கொள்கையே சமரச முண்டாக்கிய சாந்த மூர்த்தியாகும். அத்துவிதத்திற்கு மாறுபட்ட சில சித்தாந்தங்களிலும், படிப்படியாய் ஒற்றுமை யாகிற சத்துவம் காணப்படுகிற தென்பதை நோக்க மிகவும் களிப்புறுகின்றோம். ஒரு மதத்தில் வைராக்கியரா யொழுகுவோர், மாச்சரியம் போக்கி யிருப்பது மிகத் துர்லபமே! அப்படி யிருப்பாராயின் அது மிகவும் விசேடமே யென்பதில் ஐயமில்லை. உதாரணமாக வைஷ்ணவ மதஸ்தாபக ராகிய ஸ்ரீராமானுஜாசார்யர் மேதக்க குணமும் பெருமிதத் தன்மையும் வாய்ந்த அவதார புருஷர். ஆயினும் அவர் காலத்திற் சிறிது மதத் துவேஷம் காணப்பட்டது. அதன்பின் கிருஷ்ண னிடத்திலும் ராம னிடத்திலும் அபார பக்தி பூண்டு ஆசார்யரா யவதரித்த வைணவத் திலகர்களிடம் மதச் சண்டை அனேகமாய் மாண்டொழிந்தது. கடைசியாக, ஸ்ரீ சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரத்தில் சைவத்திற்கும் வைணவத்திற்கும் சமர் என்கிற பேச்சே கிடையாது. ஸ்ரீராமானுஜர் முதல் கௌரங்க ரீறாக, பறையனென்றும் மகம்மதிய னென்றும் சாதி வித்யாசங்களை நோக்காது, ஒவ்வொருவரையும் ஆண்டருளிய அளவிலாக் கருணையும் உய்யச் செய்த உதாரமும் நன்கு வெளியாகின்றது. பக்தி பெருகுவதற்கு சமரசமே வழியாவது எங்ஙன மெனின், ஒருவர்க்கொருவர் பகை விளைத்து ஒவ்வொருவர் மனதிலும் கெட்ட குணங்களுக்கு விதை போடாது, நட்பாகிய நன்மை யுண்டாக்குவதால் தான். இதை நோக்கியே, ஒவ்வொருவரும் தத்தம் ஒற்றுமைக் குணங்களை நாடி அன்பு கொண் டொழுகுதலே அரிய கடமை யாகு மென்றும், மாச்சரியத்தை விளைக்கத் தக்க வேற்றுமைகளை மறந்து விடுவது மஹோன்னத மென்றும் ரஸ்கின் (Ruskin) துரையவர்கள் கூறுகிறார். (See his "Sesame and Lilies")

பக்தியின் வளர்ச்சிக்கு முக்கியமான மற்றொன்று சங்கீத மாகும். சர்வ சமய சமரசத்தைப் போன்றே சர்வ மனோரஞ்சிதமாய் சங்கீதமும் இதற்கு இன்றி யமையாத தாகிறது. அனேகர் சங்கீதத்தை அற்பமாய் எண்ணுகிறார்கள். இது சுத்தப் பிசகான அபிப்பிராயம். பஜனை கீர்த்தனா வழிகளில் பகவானைத் துதிப்பது பலன் அதிகமாய்த் தருவது என்று பாகவதர் கொண்டாடுவதை நாம் அறிந்திருக்கிறோம். சங்கீதத்தை விரும்பாது

நல்லோரா யிருப்பார் சிலராயினும், சங்கீதத்தை விரும்பாதவன் மனம் பெரும்பாலும் பக்தியாகிய உணர்வுகட்குப் பண்பட வில்லை யென்று திடமாய்க் கூறலாம். சங்கீதத்திற்கு உருகாத மனம் கல்மனம், அஃது இரும்பாகுமே தவிர எளிதில் வளையும் பொன்னாகாது. இதை நோக்கியே, ஜகதலம் புகழும் ஷேக்ஸ்பியர் (Shakespere) என்னும் ஆங்கில நாடகக் கவிஞர், சங்கீதத்தில் லயிக்காதவன் கொலைத்தொழிலுக் கேற்றவன் என்று கூறுகிறார். (“The man that hath no music in himself, Nor is not moved with concord of sweet sounds, Is fit for treasons, stratagems and spoils”).

சங்கீதமானது, மனிதர்களுடைய சுகானுபவங்களுக்கு இயைந்தது என்று மில்டன் (Milton), கௌபர் (Couper) என்பவரும், சித்தபரிபாகம் செய்வதற்குச் சிறந்தது என்று ரோஜர்ஸ் (Rogers) என்பவரும், ஞானவிர்த்திக்கு மேன்மையான கருவியென்று ஷெல்லி (Shelly) என்பவரும் பக்திக்குப் பரம சாதன மாகு மென்று ட்ரைடன் (Dryden) என்பவரும், வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள். சங்கீதம் நமக்குக் கடவுள் கொடுத்த வெகு உன்னதமான சன்மானமென்றும் அதைத் தாம் கைவிடாரென்றும் லூதர் (Luther) கூறுகிறார். சங்கீதம் பிரபஞ்சத்திற்கு ஆன்மாவைத் தந்து மனதிற்குச் சிறகு கொடுத்து, கற்பனா சக்தி விர்த்தி யடையச் செய்கிறதென்றும், அது எல்லாவித நீதிகளுக்கும் நன்மைகளுக்கும், வனப்புகளுக்கும் நம்மைக்கொண்டுபோய் விடுகிறதென்றும் ப்ளேடோ (Plato) புகழ்ந்து பேசுகிறார். சங்கீதம் ஒவ்வோர் வேளைகளில் நாம் பரப்ரம்ஹத்தில் லயிக்கச் செய்கிறது என்று கார்லைல் (Carlyle) சொல்லுகிறார். சப்த ஸ்வரங்களினின்றும், சங்கீதத்தில் சமர்த்தனா யிருப்பான் ஒரு புதிய உலகத்தை உண்டாக்கி விடுகின்றது என்ன வினோதம், அப்போதப்போது தோன்றி இறந்துபோகும் நாகரீகக் கோலமும், உலக ஆசாரமும் என்று அதை நினைப்பது பிசகு; ஆயின் கடவுளிடமிருந்து நமக்கு நேர்ந்த கருணையே அஃதாகு மென்று அனுமானிக்கலாம் என்று நியூமன் (Newman) கூறுகிறார். ஹெல்ம்ஹோல்ட்ஸ் (Helmholtz) என்பவரும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார். சங்கீதத்தினால் இதுவரையில் உண்டான நன்மைகளை விட இனிமேல் அதிகம் உண்டாகும் என்கிற கோரிக்கை நாம் வகிக்கக்கூடும் என்று லப்பக் என்பவர் வெகு நன்றாக விவரித்திருக்கிறார். (See The Pleasures of Life, by The Right Hon. Sir John Lublock, Bart., M. P., F. R. S., D. C. L., L. L. D., Part II, pp. 121-141).

மேற்கூறியவை யல்லாமலும் சங்கீதத்தினால் பாஷாபிவிர்த்தியும் உண்டாக இடமிருக்கிறது. நாம் எழுதும் வாக்கியங்களில் இன்னோசை காணவும், ஒன்றுக்கொன்று சந்த நெறி வழாது ஆரோகண அவரோகணக் கிரமங்கள் அழகாய்ப் பொருந்தவும், அலங்கார விசேஷங்கள் அமைந்திருக்கவும், நமக்குச் சங்கீதமே ஒப்புயர்வற்ற உன்னதத் துணையாகும். குறுகிய வாக்கியங்களிருக்க வேண்டிய இடத்தில் குறுகிய வாக்கியங்களும், நீண்ட வசனங்களிருக்க வேண்டியஇடத்தில் நீண்டவசனங்களும், ஒவ்வொரு வாக்கியத்தின் ஒவ்வொரு பாகமும் மற்றொவ்வொரு பாகத்திற்கும் சாகசமாய்ச் சமப்படுத்தப்பட்டதாகவும், எழுத வேண்டிய தாயின் சங்கீதத்திற்குச் சத்துருவால் அஃதொருபோதும் ஆகாது. வெகு உற்சாகமாய் இறகு கட்டிப் பறந்து, நாலு பக்கங்களிலும் விசாலமா யுலாவி, மஹத்தான வாக்கியக் கோவைகளை மாயாத மாரியாய்ப் பொழிய அவசியமான காலங்களிலும், சங்கீத ரஸிகரா யில்லாதிருந்த குறையினாலே, வெகு புத்திசாலியான சார்லஸ் லாம்ப் (Charles Lamb) என்பாரும், காலில் விலங்கு பூண்டார் போன்று, குறுகிய வசனங்களையே வரைந்து மடங்கி அடங்கிப் போனாரென்று டிக்வின்ஸிப் புலவர் கூறுகிறார் (Vide Thomas Dequincey’s Essay on Charles Lamb).

இப்பொழுது சின்னாட்களாய் தென்னிந்தியாவின் திலக மாகும் சென்னையம் பதியில் பகவத் காலக்ஷேபங்கள் வெகு அதிகமாய் நடப்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே! இவைகளில் சில குறைகள் காணப்பட்டபோதினும், சங்கீதத்தை அபிவிர்த்தி செய்வதாகிற அபூர்வ நன்மை இவைகளால் உண்டாகின்றது என்பதை யாவரே மறுத்துக் கூறுவர்? மேற்காட்டியபடி சங்கீதத்தால் பற்பல அற்புதங்கள் நிறைவேறுவன வாயின் அதை யழிந்து போகவிடாது கட்டிக் காத்தல் நமது கடமை யன்றோ? வேறு குறைகள் காணப்படின், அவைகளைப் போக்கி, சிறப்பைக் கொண்டு அஃதை மென்மேலும் ஓங்கச் செய்வது உத்தமர் செயல். முன்னைக்காட்டிலும் இப்போது சங்கீதத்தில் நம்மனோர் மனம் தேர்ச்சியடைந்திருக்கிறதென்பதற்கு முன் கூறிய காலக்ஷேபவைபவங்களே முற்றிலும் சாட்சி பகரும். சங்கீதத்தை விர்த்தி செய்வதில், வெறும் கீர்த்தனைகளை மாத்திரம் உருப்போட்டு, மனோதர்ம விசேஷங்களைக் கற்பனா சக்தியால் காட்டுந் திறமையின்றி கிளிப்பிள்ளை சொல்வதுபோல் கண்டபாடம் செய்து ஒப்புவிப்பதைமட்டும் வியவாது, சங்கீத வித்வான்கள் தம் சாமர்த்திய சாகஸங்களால் எடுத்த ராகம் ஒன்றாயினும் ஒன்பது விதமாய் எட்டுமணி நேரமென்றாலும் இசைக்கும் திறமையை விரும்புதலே நாகரீகத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் மன மேன்மைக்கும் அடையாளமாகும். * இவ்வாறில்லாது சாமான்ய பாட்டுகளையே விரும்பு

---

* பட மெழுதுவதில் ரவிவர்மரைப்போன்று, தென்னிந்தியாவில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் மனதைச் சங்கீத வழியில் திருப்பிய சங்கீத வித்வ சிரோமணி பாலக்காடு அனந்தராம ஐயரவர்களால், இந்த விஷயத்தில் அனேக நன்மையுண்டாக்கக் கூடுமென்று நம்புகிறோம்.

வோர் மனம் தூய்மையடையவே யில்லையென்று வெகு சித்திர வசனங்களால் டிக்வின்ஸி (Dequincey) என்பார் விளக்குகிறார்.

சங்கீதம் இவ்வித சக்தியுள்ளதாயிருப்பதால், இது எல்லாச்சுபசடங்குகளிலும் பக்திக் கொண்டாட்டத்திலும் இன்றியமையாததாகிறது. பக்திக்கு ஊன்றுகோலாய் நாம் சங்கீர்த்தனம் ஏற்பட்ட காரணம் இதுவே! ஸ்ரீசைதன்யசுவாமிகளும் கீர்த்தன காலக்ஷேபத்தை வெகு முக்கியமாய்ப் பாவித்துவந்தார் என்பது பின் கதையினால் விவரமாகி நாம் கொண்ட கொள்கையை நிலைநிறுத்தும். முக்தியடைய பக்தியே பரம சாதனமென்றும், சமரசமும் சங்கீதமும் அதற்கு முக்கியமாய் வேண்டியவையென்றும் நாம் இதுவரையில் சொல்லிவந்ததால் விளங்கும். இந்தபக்தியே, விசேஷிக்கும்போது, கிருஷ்ணனிடம் ராதைக்குண்டான ப்ரேமைபோல ஒப்பற்று உயர்வடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதுகாறும் நாம் சுற்றுச் சுழற்சியிலுழன்றோம்; சற்று வெளிச்சமுமிருந்தபோதிலும், "சம்பவாமி யுகேயுகே" என்று, கடவுளே கண்ணனாகிற மாணிக்கமாய்த் தோன்றி ஜோதிப்ரவாஹம் உண்டாக்கி, பொய்மை போக்கி மெய்மை தேக்கச் செய்த திருவிளையாடலை ஒருமையான மனதுடனும் அருமையான அவாவுடனும் கருதிக் கடைத்தேற வருகிற அத்தியாயத்திற்குத் துரிதமாய்ச் செல்வோம்.

௬-ம் அத்தியாயம்.

மாணிக்கத் தோற்றமும் ஜோதி ப்ரவாஹமும்.

1

நல்லவர்க்கெல்லாம் நாயகமான வல்லவனொருவனிருக்கின்றனன்! அவன் ஆளுக்கேற்றது போலும் வேளைக்கிசைந்தது போலும் வேடம் போடும் நாடகக்காரனாயினும், கெட்டதொன்றும் பொட்டென விளைப்பதில்லை. ஆன்மாக்கள் உய்து ஆனந்தமடைவதே, என்றும் அவனுக்கு நன்றாகிறது. அவர்கள் நிலைமைக்கேற்கத் தலைமை பூண்டு, அற்புதம் புரியும் பொற்பினன், அவன். மீனாய்த்தோன்றி மிடிக்கொழித்தானொரு தரம்! கூர்மமாகி ஆர்வம் விளைத்தான் ஒருதரம்! பன்றியாய்ப் பாரிடந்து நன்றே விளைத்தான் பிறிதொருதடவை! பின்னர் அவனே மன்னிய சிங்கமும் மனிதனுமாகி, சிறியனைக் காத்துக் கொடியனைக் கொன்றான்! வாமனனாகிப் பூமியும் வானும் புகழ்பெற அளந்தான்! பரசுராமனாய்ப் பிறகு அரசராமனாயினன்!

இப்பொழுது ஒருநாள் அர்த்தராத்திரியாய்விட்டது! இரவினாலுண்டாகும் இருள் போதாது, மேகமும் மழையும் மின்னலும் இடியும் காணப்பட்டதால், இருளுடன் மருளும் இணையாய்த் தோன்றின. இவ் அகாதவேளையில் தகாத கோலம் பூண்டு, சுத்தசத்துவராகும் நற்றவரொருவர், சற்று முன் சனித்த சித்திரக் குழந்தையொன்றைக் கைத்தலத்தேந்தி அயலார்க்குத் தெரியாமல் வெளியே செல்ல முயலாது முயலுகின்றார்! அவரிருந்த இடமோ, அரணும் அரங்கமும் கோட்டையும் கொத்தளமும் காவலாளரும் ஏவலாளரும் சுற்றிலும் நின்று முற்றிலும் காத்த கொற்றவர் மாளிகையாயிருந்து! இவைகளைக் கடந்து எப்படிச் செல்வதென்று இல்லாததெல்லாம் எண்ணியெண்ணி இப்பெரியவர் ஏங்குகின்றார்! வாட்டமென்பதே இவர் நாட்டந்தன்னில் ஓட்டம்பெற்றிருந்தது! தேகம் வன்மையுற்றதாயினும், தாகம் ஏதோ இவர் மனதைத் தவிக்கச்செய்ததால் ஏகமாய் இளைத்துக் காட்டிற்று! காலிலே விலங்கும், கதவிலே தாழும்! சுற்றியும் காவல் மெத்தவும் தொந்தரை! இத்தனையும் தாண்டி எப்படிச் செல்வார் வெளியில்? இவ்வெண்ணம் எண்ணியும் எண்ணாததற்குமுன், காலின் விலங்கும் நாலாய் ஒடிந்தது! கதவின் தாழும் அதமாய்ப் போயிற்று! ஊக்கங்கொண்ட காவலாளர் எக்கம் பெரிதாய் நோக்கம் நீங்கித் தூக்கம் தாங்கினார்! இது தான் சமயமென்று, மெல்லப் புறப்பட்டார் நல்லவரும்! வெளியில் வந்தார், ஒளியும் கண்டார்! இருட்டையும் நோக்காது, பயமுங் கொள்ளாது, குழந்தையைத் தாங்கிச் செல்கிறார்! அந்தக் குழந்தையோ வெகு சுந்தரமானது! அதன் நிறம் நீல நிறமாயினும், ஒளியோ மெத்த

வும் சுத்தமாய் விளங்கிற்று! அதனுடன் ஆகாயத்திற்குப் போட்டி போட முடியாது மேகமாகிற போர்வை போட்டுக் கொண்டது! அப்பொழுதே இருந்து இருந்து கையையும் காலையும் அசக்குவதாலும் ஆட்டுவதாலும், மெய்யாக அக்குழந்தை செய்யாத துடுக்குகள் செய்யுமென்பது நன்றாய் விளங்கிற்று! அது சிறிது அயர்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்ததாயினும், நல்ல தூக்கமில்லையென்று சொல்லலாகும்! ஆயினும் அப்பெரியவர் அருமைக் குழந்தையை அங்கையிற் றாங்கிச் சென்றுகொண்டிருக்கிறார்! இரவும் முற்றிக் கொண்டே வர, இருளும் மிகுத்துக் கொண்டே வந்தது! உள்ள தொந்தரை போதாதென்று, ஊருக் கருகிலுள்ள ஆறு ஒன்றிலும் பூரணப் பிரவாகம் கோரமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இதை யெண்ணி அதிகம் வருந்தினராயினும், ஓயாத அவர் நடைவேகம் சாயவில்லை! * * என்ன ஆச்சர்யம்! ஐயன் செல்வதற்கு ஆறும் வழிவிட்டது! அவ்வழியாகவே போய், ஆயர்பாடி யடைந்தார்! அசோதையின் பிரசவக் கிரஹத்திற் பிரவேசித்து இக் குழந்தையை ஆங்கே வைத்தனர்; யார்க்கும் தெரியாது திரும்பினர். இந்த சந்திரப் பிரகாசசுந்தர வடிவினனே, ஸ்ரீ கிருஷ்ணன்!

என் இவ்வாறு நடக்கவேண்டும்? மேற்சொன்னவைகளில் எத்தனை மயக்கங்கள், எத்தனை தியக்கங்கள்! இவ்வாறு நடப்பதற்கு யாது காரணம்? சொல்லுமின் சொல்லுமின் என்று மெத்த அவசரம் எத் திசையிலும் காண்கின்றது.

அரக்கர் அம்சமுடையவனும், நல்லவருக்கு ஹிம்சை விளைப்பவனும், எல்லாரையும் தொம்ஸம் செய்பவனுமிருந்த பொல்லாத கம்ஸன் என்பவன் கண்ணனுக்கு மாமன். கண்ணனால் தனக்குத் துன்பம் உண்டாகுமென்றும் உயிருக்கே ஆபத்து உண்டாகுமென்றும் அவன் முன்னமே அறிந்திருந்ததால், எப்படியாயினும் அக் குழந்தை பிறந்தவுடனே அதைக் கொன்றுவிடல் வேண்டுமென்று இரவும் பகலும் ஓயாக் கவலை கொண்டிருந்தான். இதனாலேயே தான் கிருஷ்ணன் தந்தை தாயாகிய தேவகீ வசுதேவர் தங்கியிருந்த அறையைச் சுற்றிக் காவல் வைத்திருந்ததும். இவன் செய்த இந்திர சாலத்தைத் தந்திரமாய் மாய்த்துவிட்டு மஹேந்திர சாலம் புரிந்து மாயவனும் வேறிடம் போய்ச் சேர்ந்தான் * * கம்ஸனே பொல்லாத காதகன், பழிபாவத்திற் கஞ்சாத பாதகன், துயரஞ் செய்து தொல்லை விளைக்கும் தோதகன்! இவன் விழிகள் மிகச் சிவந்திருப்பவை, இவனுடைய கோரத் தொழிலைக் குறிப்பாய்க் காட்டுகின்றன. இவன் தடித்த உடலும், கறுத்தமேனியும், பருத்த உதடும், இவன் பயங்கரத்தை விளக்குகின்றன. மலைபோல் மூக்கு உயர்ந்திருக்கிறது; எந்

நேரமும் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டிருப்பான். இச்சண்டாள மிண்டாளன், பிறந்த குழந்தை மறைந்து போயிற்று என்றறிந்தவுடனே, துடித்தான் பதைத்தான், இரைந்தான் எழுந்தான்! கோபம் மீறித் தாபங் கொண்டான்! கோபாவேசம் கொழுந்துவிட்டெரிவதால், வாய் பேச வகையற்று நின்றான், திகைப்புற்றான், அலக்கணுற்றான்; உள்ளமெரிகின்றது; உதடு துடிக்கின்றது: சற்றுப் பொறுத்தான்: பூதகி சகடாசுரன் அகாசுரன் பகாசுரன் முதலானவர்களை யேவி அக் குழந்தையைக் கொல்ல வகைதேடினான். இதனால் இவர்களெல்லோரும் நாசமாயினரேயன்றி, குழந்தைக் கொன்றும் குறையில்லை.

இவ்விதமாய் எவ்வித அபாயத்திற்கும் உட்படாமல், சுக்கிலபக்கத்துச் சந்திரன்போல், ஸ்ரீகிருஷ்ணன் அதிசுந்தர லாவண்யத்துடன் வளர்ந்து வருகிறான்! இவன் சுந்தரமுகமும் சுயம்பிரகாசமும், முல்லையைப் பழித்த பல்லழகும், முத்தை யிகழ்ந்த முறுவலின் வனப்பும், ஒவ்வொருவரையும் மயக்கிவிட்டது. இவனை விட்டுப் பிரிவதென்றால், எவருக்கும் வருத்தமாயே யிருந்தது. இப்பொழுது கிருஷ்ணனுக்கு வயது பதினொன்றானது. ஆயினும் தந்தை தாயாரும் சிறு வயது தான் மைந்தனுக் கென்று அவனிடம் இடைவிடா நேசம்பாராட்டிவந்தார்கள். அவன் சிறிது வெளியே செல்வதென்றாலும், அவர்கள் பெரிதும் வருந்தி யுருகி விடுவார்கள். அவனுடைய நண்பரோ, தம் வயதுக் கிசைந்த இசையினனென்று அவனை எண்ணுவார்கள். பால்ய ஸ்திரீகள் தம் அழகுக் கிசைந்த வெகுசுந்தர சுகுமார யௌவன லாவண்ய மன்மதனென்று அவனிடம் மயக்கம் கொள்ளுவார்கள். ஞானிகள் அவனை ஞான ஸ்வரூபியென்று நவிலுவார்கள். துஷ்டர்கள் தம் 'வன்னல்' வெளியாகுமே யென்று கஷ்டங் கொள்ளுவார்கள்.

* *

சூரியனைக் காணச் சூரியன் புறப்படுகின்றனன்: ஸ்ரீகிருஷ்ணனுடைய கமல முகத்தின் விமலத்தையும் விலக்ஷணத்தையும் மலர்ச்சியையும் மகிமையையும் நோக்கி நோக்கி, தாமரையும் எவ்வளவு தான் மலர்ந்த போதினும், அதன் ஆயிரத்தி லொருபங்கும் அமையவில்லை. உதய வேளையில் எல்லோரிதயமும் மகிழும்படி அதியற்புத திவ்ய தேஜோமயானந்தத்துடன், கிருஷ்ணன் வெளி புறப்படுகிறதுண்டு. இவன் புறப்படுகிறானென்று மற்ற ஆயர் சிறுவர்கள் மாடுகளை யோட்டிக் கொண்டு தெருவில் தயாராய்க் காத்துக்கொண்டிருப்பார்கள். தன் அருமைப் புதல்வனை யெப்படி பிரிந்திருக்கின்றதென்று அசோதை அன்பாய்க் கொடுக்கும் முத்தம் பெற்றுப் பகவான் வெளிப்புறப்பட்டு விடுவார். ஸ்வாமிகளும் ஆயர் சிறுவர்களும் பகற்பொழுதெல்லாம் வனத்திலேயே ஆடுவதும் பாடுவதுமாக

விளையாடிக்கொண் டிருப்பார்கள். பொழுது போனதும் ஸ்ரீகிருஷ்ணன் ஓரிடத்தில் வெகு ஒய்யாரமாய் நின்றுகொண்டு, தன் முகத்தின் அழகுக் கொத்த இசையின் இனிமையை வெளிகாட்ட மூங்கிற் புல்லாங்குழலெடுத்துத் தம் அதரமாகிய மதுரக் கனியிடம் பொருத்திக் கீதமாகிற போதத்தை அனைவர் காதிலும் ஓதத் தலைப்படுவார்! ஹா ஹா என்ன சுகம்! என்ன மதுரம்! ஸ்வாமிகள் புல்லாங்குழல் ஊத ஆரம்பித்ததும், எங்கெங்கும் நிச்சப்தமே குடிகொண்டு விட்டது! நாலு பக்கங்களிலும் மேய்ந்துகொண்டிருந்த மாடுகள் கிருஷ்ணனைச் சுற்றி நின்றுவிடும்! புதர்களில் வசிக்கும் பாம்புகளும், மரங்களில் வசிக்கும் பறவைகளும், நீரில் வசிக்கும் மீன்களும், செடிகளும் கொடிகளும், சோலைகளும் சாலைகளும், எல்லாம் ஆனந்தமயமாய் சற்று முன் வதங்கியிருந்த பூக்களும் பொலிவு பெற்றுக் காண்கின்றன; நெருப்பு வீசிய காற்றும் குளிர்ந்து வீசுகின்றது! மாடே மயங்கிவிட்டதென்றால் மனிதர் மகிழ்வைக் கூறவேண்டுமோ! கோடைகாலம் நீங்கி மாரிகாலம் முடிவில் குளங்களும் ஏரிகளும் பூக்களும் இலைகளும் வெகு நன்னயத்துடனே உன்னதமடைந் திருப்பக் காண்பது இயற்கையே. கீதமாகிய நாத சுகத்தினால், குளத்தின் நீர் குளிர்ந்தும் பூவின் பொலிவு மிகுந்தும் இலைகள் பசுமையடைந்தும் விளங்குவது இன்றுதான் கண்டோம் என்று தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மனதிற்கிசைந்த மணமகனைக் கண்ட அனமெனு நடையாள் அகங்குளிர்வதுபோல், இயற்கை மாதின் இதயம் குளிரப் புயல்நிறப் புனிதன் தோன்றினதால் அவள் மகிழ்ச்சிமீறி செகிழ்ச்சி விளைத்தனள்! * * உடனே வத்ஸங்களையும் கோக்களையும் அழைத்துக் கொண்டு அனைவரும் வீடு சேருவார்கள்.

எல்லாத் தலங்களிலும் உல்லாச மமைந்த பிருந்தாவனத் தருகில் நதிகட்கெல்லாம் பதியாகிய யமுனையாறு இருக்கின்றது! அது அதிபுண்ய நதி; பக்தியே உருவங்கொண்ட சக்தியுடையது. அனைவோர் தாபத்தையும் பாபத்தையும் ஓர் கணத்தில் வேரறுத்துவிடும்! இந்த தீர்த்தத்தில் ஓர் நாள் நீராடி, சரசசல்லாபங் கொண்ட அரசிளங் குமரிபோல் ஒரு சுந்தரவதி சொகுசாய் நடக்கின்றனள். இவள் அழகை வர்ணிக்க யாவராலும் முடியாது! அதுகாறும், வானோருலகம் உள்ளதோ இல்லதோ என்று ஐயம்பூண்ட அனைவரும், தந்தம் சந்தேகங்களை யொழித்து இவள் தேவலோகத்துப் பாவையே பூமியில் வந்து புதுமை விளக்கின்றனள் என்னும்படி அழகும் அந்தமும் பொற்பும் புகழும் வாய்ந்திருந்தனள்! மின்னலைப் போன்ற நன்னிறம் பெற்றவள்; மேகம்போன்ற கூந்தலுடையவள்! பங்கயத்தைப் பழித்த இங்கித முகமும், தூநிலாப் பழித்த பூநிலா முறுவலும், மானை யிகழ்ந்த மருண்ட பார்வையும், கோட்டையை நகைக்கும் குணம்பெறு நாசியும், வள்ளையை யேசிய ஒள்ளிய காதும், முத்தே வந்து முத்து முத்தாடும் ஒத்த பற்களின் உன்னத வரிசையும், கொவ்வையைக் கோபித்துக் கோலங்காட்டும் செவ்விய இதழின் சிறப்பும், காந்தளாகும் கரதலப் பெருமையும்—பார்த்து மகிழாதவர் அங்கொருவருமிலர். இவள் நடையைப் பார்த்து அன்னம் அடங்கியது; பேச்சைக் கேட்டுக் கிள்ளையும் நாணியது; இசையைக் கேட்கின், நாமும் என்னுவமோ என்று குயிலும் ஏங்கியது. இவ்வளவு அந்த சந்தத்துடன் இவள் தோன்றிய போதிலும், இவள் முகத்தின் மோகனம் தெய்வீக மோகனமாயிருந்ததே யன்றி மனிதர்க் கொத்ததாய் இனிமை பயக்கவில்லை. இப்படி இவள் வந்துகொண்டிருக்கும் போது ஓர் விநோதங் கண்டாள்.

கடம்பமர மொன்றின்கீழ் அடங்கா ஆச்சரியம் விளைத்துக்கொண்டு நீல நிறம் பொருந்திய கோலந்தாங்கி, மாதர் மனதை மையலால் கொளுத்தும் வண்ணம், அதி சுந்தர மனோரஞ்சித மனமோஹன திவ்ய பால ஸ்வரூபம் ஒன்று, பால் வடிந்த முகத்தில் நகை யரும்பவும், மல்லிகை மலர் மாலை யணிந்த சிரத்தில் மயிர்கள் நீண்டு சுருண்டு மணங்கமழத் தொங்கவும், கல்லினும் வலிய நெஞ்சத்தைக் கணப்போதி லுருக்கும் கடைக்கண் பார்வை விளங்கவும், அழகுக்கு அழகு செய்யும் அமைதி யடைந்தும், அஞ்சா நெஞ்சர்களையும் வஞ்சனை செய்து வம்புக் கழைக்கும் பஞ்ச பாணங்களுடன் மன்மத னேவல் புரியவும் தட்டுக் கெட்டுத் தடுமாறிக் கடலில் விழுந்து கலக்கங்கொள்ளும் முட்டாள்களையும் கரைசேர்த்துக் கடைதேற்றற் கென்று, அவ்வுருவம் அலையின் கண் வலை வீசுவதுபோல் ஒய்யார சுகுமார உன்னதங் காண அந்த மரத்தின்மீது ஒயிலாய்ச் சாய்ந்திருந்தது. இவ்விதம் நின்ற கண்ணபிரானை ராதையும் கண்ணுற்றாள்; அன்பனும் அவளை யின்புற நோக்கினான். உடனே இருவர் மனதும் ஒருமை விளைந்தது; அன்பு பெருகி ஆனந்தமாகியது; காதல் மிகுந்துக் கண்ணீர் ததும்பிற்று; நேசம் பொங்கிப் பாசமாகியது. வீடு சேர்ந்தாள் ராதை; கண்ணன்மீதே காதலாகினாள்; எண்ணமெல்லாம் அவனிடமே யிருத்தினாள்; பக்தி யடைந்தாள்; பரவசமாகினாள்; ஊணும் உறக்கமுந் தவிர்ந்தாள்; பாயும் படுக்கையுமானாள், மெய்யும் மெலிந்தது; கையும் துவண்டது; கலையும் நெகிழ்ந்தது; வளையும் போயது; தியக்கங்கொண்டாள்; மயக்கமாகினாள்.

இரவானதும் கண்ணன் குழல்கொண் டூதினான்! அவ்வினிய ஓசை "ராதா! இங்கு வருவாய்! எனக்குக் கிருபை தருவாய்" என்பது போல் அவளுக்கு மாத்திரம் கேட்டது. அனைத்தையும் துறந்து, கணவனுதி

யோரையும் மறந்து, ராதா தன் தோழிகளுடன் குழலோசை வரும் வழியே சென்றனள்; யமுனைக் கரையில் ஜன சஞ்சாரமில்லாத ஓரிடத்தில் காதல் செய்த கண்ணன் ஆதரத்தோடு நின்றுகொண் டிருப்பதைக் கண்ணுற்றாள். அவ்விடம் மிகவும் மனோகரமா யிருந்தது. சல்லாபஞ் செய்யும் பொல்லாத மல்லிகையும், அல்லல் நீக்கித் தொல்லை போக்கும் முல்லை மலர்களும், நன்பார்க் குகந்த சண்பகப் பூவும், ராசாக்கள் மெச்சும் ரோசாக்களும், துன்மதியாளர்க்கும் நன்மதிகூறும் மன்மதபாணமும், அமுதமுந் தோற்கும் அருமையுற்ற குமதப்பூவும் எங்கெங்கும் விளங்குகின்றன. இளைப்புற்று வந்தோரின் களிப்பை நீக்க அளிக்குலம் பாடுகின்றன; ஒயிலுடன் மயில்கள் ஆடுகின்றன; கிள்ளைகள் சபாஷ் என்று புகழ்மாற்றம் கூறுகின்றன. “செல்விற் குவளை கண்காட்ட நீரிற் குமுதம் வாய்காட்ட, அல்லிக் கமல முகங் காட்டும்” கழனிகளுக்கு அவ்விடம் சிறிதாயினும் தோற்றிருக்கவில்லை. இவ்வித அழகும் அலங்காரமும் அரசாளும் அருமையான இடத்தில் ஆத்துமாவும் பரமாத்துமாவும் ஒன்றுவ தான உண்மைக்கு ஒரு சிறிதும் ஊனம் வராதபடி கண்ணனும் ராதாவும் களிப்புறக் கண்டனர். இவர்கள் வருகைக்கென்றே பலவித பூக்களால் இசைத்த பொற்புள்ள விமானத்தில் இருவோரும் இருத்தலும், இயற்கைமாதின் இலகிய முகத்திற்குத் திலத மிட்டதுபோ லாகியது. மன்னவ ரிருக்கும் மஹா மண்டபத்தில், எத்தனை விநோதம் எழிலுடன் காண்கினும், மன்னவர் வந்த பின்னரே மாட்சி யுண்டாவது போலவும் இங்கிதங்கள் தோன்றி இதயங்களிக்கத் திங்கள் எழுந்து திருத்தம் செய்வது போலவும், ஒவ்வொருவர் அழகும் ஒப்பற்றதே யென்ன உறுதி கூறிய, சுந்தரம் பெற்ற சந்திர ரிருவரும், ஒரே ஆஸனத்தில் வீற்றிருக்கக் கண்டு தேவர்களும் மூவர்களும் அளவில்லாக் களிப்பெய்தி, தேவகானஞ் செய்து பூமாரி பொழிந்தார்கள்.

இந்த சிறப்பைக் கண்ட ராதாவின் தோழியர்கள், ராதா கிருஷ்ணருக்கு மங்களம் பாடினர். கடைசியாய், ராதாவும், கண்ணனுக் கெதிரில் வணங்கி நின்றுகொண்டு, “என் இஷ்டத்திற் குகந்த ஸ்ரீகிருஷ்ணா! உனக்கு யான் கொடுக்கும் பரிசு யாதொன்று மில்லை; நீயே யென் பொருளாயினை; உன்னை யன்றி உற்றபொருள் வேறொன்றும் ஏழையாகிய எனக்குக் கிடையாது ஆகையால் என்னையே உனக்குச் சமர்ப்பிக்கிறேன். நீ என் பொருளாயினை; நான் உன் பொருளாயினன்! உனக்கோ, என்னைப் போல் பலரிருக்கக் கூடும்; எனக்கு உன்னைத் தவிர உற்றதுணை கிடையாது” என்று தன் அடங்காத அன்பையும், ஒப்பற்ற நேசத்தையும் இனிது விளக்கினள். பகவானிடத்தில் சேதனர்கள் எப்படி பக்தியையும் ப்ரேமையையுமே பரம சாதனமாய்க் கொண்டு முக்தியடைவது என்

பதைத் தெளிவாய் விளக்குவதற்கே, பரத்துவப் பொருளின் இருவகைத் தத்துவங்களாய் கண்ணனும் ராதாவும் காசினியில் அவதரித்தனர் என்று கற்றோர் யாவரும் மெத்தப் புகழ்கின்றனர். அன்றியும், ஒரு நாள் ராதா தன் தோழியர்களுடன் ரமணீயமாய் பிருந்தாவனத்திற் போகுங்கால் ஸ்ரீகிருஷ்ணன் அதி யுன்னத ஸ்ருங்காரத்துடன் எதிர் நின்று, பிருந்தாவனத்திற் பிரவேசிப்போர் கப்பணங் கொடுத்தே செல்லல் வேண்டும் என்று மறுக்க, ராதா தன் கையிலொன்று மிலது என்பதை விநயமாய்த் தெரிவித்துக் கொண்டாள். “கைப்பண மொன்று மில்லாவிடின், ராதா, உன்னையே அர்ப்பணஞ் செய்வது தானே, உன் உடல் பொருளாவி யனைத்தையும் எனக்கே தத்தஞ் செய்துவிடு” என்று கண்ணன் திருவாய் மலர்ந்தருளினன். இதனால் கடவுளை நேசித்துக் கடைத்தேற விரும்புவோர், உடல் பொருளாவியையும் முற்றத் துறந்து முதல்வ னாகிற தலைவன் தாளிலே சமர்ப்பித்து விடுதல் வேண்டு மென்பது இனிது விளங்குகின்றது.

ஒரு நாள் மாலை சூரியன் தன் கிரணங்க ளாகிற குடையை மடித்து தான் வந்த வேலை தீர்ந்ததே யென்று மெள்ள வீட்டிற்குச் செல்வான் போன்று குடகடல் மூழ்கி மறைந்தனன்! ரஸிக சிகாமணிகளுடைய மனதை ரமிக்கச் செய்யும் சந்திரனும் அனைவர்க்கும் வந்தனை செய்து நடன வரங்கத்தில் தோன்றுவது போல் வான முகட்டில் புறப்பட்டனன். அன்றே அவன் மறைந்தும் குறைந்தும் மழுங்கிக் கிடக்க வில்லை. பூரண வடிவமும் பூரண ஒளியும் பெற்று, மேகமாகிற பாவிகளால் மாசுபடாது அதி சுந்தரமாய் வெகு கம்பீரமாய்த் தோன்றினன். தன் அரசாட்சிக் குறிப்பாகிய வெண்கொற்றக் குடைக்குள் மனமோகன சர்வாலங்கிருதர்கள் அனைவரும் சுகசந்தோஷத்துடன் விளங்கலா மென்று தன்னுடைய கருணையாகிய கிரணங்களால் முரசறைந்தனன். பழுதற்ற அழகுடைய பாவையர்களும் பர்த்தாக்களுமாய்க் களிப்புற்றோர்க்கு, திருஷ்டி சுழற்றுவது போன்று, ஆகாய வாணியின் அருமைக் கரத்திலேந்திய பொன்வட்ட மின்னிலவே இன்னவகை நன்னய முற்றது என்று ஒவ்வொருவரும் மகிழும்படி யிருந்தது. பால் போல் நிலாக் காய்வதால் மல்லிகை முல்லை யாதி மலர்களும் தடங்களும் எல்லா இடங்களும் வெகு சோபிதமாய் விளங்கிற்று. இந்த சுந்தர சந்தர்ப்பத்தில், நந்தபாலன் குழலெடுத்து நன்றாய் இசை பாடினன்! இதைக் கேட்ட கோபிய ரனைவரும் உற்றாரையும் பெற்றாரையும் பர்த்தாவையும் துறந்து எல்லாவற்றையும் மறந்து, குழலோசை வழியே சென்று கோவிந்த னிடம் அடைந்தனர். இரும்பை இழுக்கும் காந்தமும் சுரும்பை யிழுக்கும் மலருமோ அவன்! இப்படியோடும் கோபியர்களி

லொருவர் இருவரை, ஓடாது தடுக்கத் தூணில் பிணித்துத் துயருறுத்தியக்கால், அவர்கள் உடலம் அங்கிருந்ததே யன்றி ஆத்துமா ஐயனிடமே நாடிற்று! இதென்ன அபார நேசம்; ஒப்புயர் வற்ற உளமகிழ்வு; களங்க நீக்கிய காதற் கடல்!

கிருஷ்ணன் "நீவிர் யாவர்? கண்மணிக ளாகும் பெண்மணிகாள்! இரவில் நீவிர் உறவின ரின்றி ஏனோ இங்கு நானாவிதமாய் அலைகின்றீர்?

கோபிகள்: "கீதம் கேட்டுப் போதம் பெற்று நாதனிடம் வந்தால்—"

கிருஷ்ணன்: நன்று! நன்று! அடாத வார்த்தை விடாது பேசுகின்றீரே! நாலுபேர் கண்டு நகையார்களா? அழியாத பழிக்கும் அடங்காத வசைக்கும் ஒழியாத நரகத்திற்கும் உறுதி தேடிக் கொள்ளுகிறீர்களே! இது உமக்குச் சரியன்று! சொன்னேன்! சொன்னேன்! முக்காலும் சொன்னேன்! கொண்ட கணவனை விண்டு வந்தால் எண்டிசையும் ஏளனம் புரியுமே! அது பெரிய அதர்ம மாகும்! சாஸ்திரத்திற்கும் சர்வ விரோதம்! சங்கடம் வரும்! வீடுபோய்ச் சேருங்கள்.

கோபிகள்: கிருஷ்ணா! நீ யிவ்வாறு சொல்வது சரியன்று: ஏழைகள் மனதைப் பாழ்படுத்தி இப்போது ஆழ்ந்த யோசனை கூறுகிறாயே! உனக்கிது தர்மமன்று. எமக்கு இன்பந் தந்து துன்பங் கூறும் அன்பா கேள்! மனதைக் கவர்ந்து மாயம் விளைக்கும் மன்னா கேள்! உற்றார் பெற்றார் என்று உளறுகின்றனை! உற்றார் யாவர்? பெற்றார் யாவர்? கணவன் என்று கதறுகின்றனை! கணவன் யாவன்? மனைவி யாவன்? இஃதெல்லாம் வெறும் பேச்சு! உலகத்துக் கெல்லாம் அலகற்ற முதல்வனாய்த் திலதம் போன்ற உன்னைப்பெற்ற யாம் உன்னுடைய அதிரேக மான்யமான தோற்றங்களிடம் ஏற்றங் கூற மனஞ் சகியோம். உன் மகிமை யாகிற ஜோதிப்ரவாஹம் எங்கெங்கும் விளங்கும் போது, அடுப்புத் தீயும் விளக்கி னொளியும் தனித்துக் காட்டுமோ? கடலின் பெருக்கால் காசினி யெங்கணும் நீர்மய மாகும் போது, கிணற்றுத் தண்ணீரும், குடத்து வெந்நீரும், கிளர்த்து நிற்குமோ! நன்று, நன்று, நீ கூறிய மாற்றம்! உள்ள புருஷன் ஒருவனே யாதலால், உன்னைப் புருஷோத்தம னென்று, உலகமெங்கும் பிரபலமாய் அழைக்கிறார்கள்! உன்னைத் தவிர மற்றையோ ரெல்லோரும் ஸ்திரீகளே! மாயாப் பிரபஞ்சத்தில் கணவனாய்த் தோன்றுவோருக்கும், உண்மைக்கணவன் நீ யாகலின், உன்னை யடுத்த கன்னியர்க்கு ஊனம் எவ்வகை நேரும்?

கிருஷ்ணன்: 'உலகத்தோடொத்துவாழ்' எனனும் பழமொழிக்கிணங்க, மெய்யே யாயினும் பொய்யே யாயினும், நடந்துகொள்வ தல்லவோ நல்லவர்க் கடையாளம்? அதைவிட்டு நால்வர் நகைக்கத் தக்க வழிகளிற் பிரவே

சித்து, கெட்ட பேரும் அபகீர்த்தியும் ஆஸ்தியாகச் சம்பாதித்து நட்டுக் கெட்டுத் தடுமாறி போவதேன்?

கோபிகள்: நேயம் விளைத்து மாயஞ்செய்யும் நேயா கேள்! ஆசையாகிற பாசத்தால் அனைவரையும் கட்டிப் பின்னர் மோசஞ் செய்து நாசம் விளைக்கும் நேசா கேள்! நாங்கள் ஏழைப்பெண்கள்! மோழைத்தனத்தில் முதன்மை யானவர்கள்! எதையும் மறந்தோம், அனைத்தையும் துறந்தோம்! உன்னிடமே மனது லயித்தது! எம் கண்ணுக்கு எங்கு பார்க்கினும் கண்ணனைக் காண்கின்ற தன்றி, வேற்றுப் பொருளின் தோற்றமே கிடைக்கவில்லை! உன் முத்தைப் பழித்த முறுவலில் பக்திரசத்தைப் பொருத்தினோம்; உன் கண்ணகத்தில் எம் எண்ணமெல்லாம் குடிகொண்டது; உன் பரந்த நெற்றியில் எமது விரிந்த அறிவும் அடங்கி விட்டது; உன் சுந்தரத்தில் எமது தோத்திர மந்திரங்கள், நேத்திரோத்ஸவமாய்த் தந்திரத்துடன் தங்கி விட்டன! உன்னைவிட்டு யாம் பிரியோம்! நீயே எமக்கு மோக்ஷவீடு! உன்னோடு நரகத்தி லிருந்தாலும் இருப்போமே யன்றி, நீ யில்லாத மோக்ஷம் நீக்குச்சமானம் தான்! எதுவரினும் வரட்டும்; உன்னையாம் விடோம். எமக்கு மானமும் இல்லை, அவமானமும் இல்லை; புகழ்ச்சியும் தோன்றாது, இகழ்ச்சியும் தோன்றாது; நல்லது மில்லை, பொல்லாதது மில்லை; உன்னை விட்டு நீங்குதலினும் வேறாகிய துன்பமுங் கிடையாது; உன்னுடன் ஒத்திருத்தலினும் பிறிதாகிய சுகமுங் கிடையாது. ஆதலால் எம்மிடம் நீ வஞ்சம் விளைக்கின் உண்மையில் உயிர் விடுவோம். ஹா! சுந்தரரூபா! சுயம் பிரகாசா! எம்மைக் கட்டியணைத்துக் கடைத்தேற்றுவது உனதுகடன்.

கிருஷ்ணன்: ஏ! புனித சித்தங்கொண்ட வனிதா ரத்நங்காள்! ரதியைப் பழித்த அதிமோகனமும், கலாமதி யென்ன நிலாப்பெறு வதனமும், உங்கள் சித்த சுத்தியும், உத்தம பக்தியும் மெத்த வியந்தேன்! நான் இனி உங்கட்கு அடிமை! "பத்துடை யடிவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" என்று உங்கள் கருணையாலேயே, ஒரு தன்னியர் என்னைப் பாடப்பெற்றேன்! என் உடல் பொருளாவியும் உமக்கே தந்தேன், மனமகிழ்ந்தேன், அகங்குளிர்ந்தேன், அல்லல் களைந்தேன், இன்று நல்ல நாளாய் விட்டது! இன்று யான் பெற்ற பாக்கியம் போலும் என்பால் உற்ற அன்பினர் போலும் என்றுங் கிடையார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் அத்யந்த ஆனந்தானுபவத்தில் அழுந்தி, கிரமம் நீங்கிய பரமபதத்தின் நித்யர்களும் முக்தர்களும் அத்தனோடு இத்தலத்தில் உற்றனரோ என்னும்படி, பரந்தாமனும் பக்தர்களும், பூவும் மணமும் போன்றும், ஊசியும் சரடும் போன்றும் பிருந்தாவனத்தில் உல்லாசமாய் உலாவிக்கொண் டிருந்தனர்.

சிறிது நாளாயிற்று! கோபியர் மனதில் கொஞ்சம் அகந்தை விளைந்தது. 'கண்ணபிரானை நமக்குக் கண்ணாளனாக, மண்ணுலகில் யாவரே நாம் மதிக்கற்பாலர்! எவரும் நமக்குச் சமயில்லை' என்று பலவாறு அவர்கள் தம்மைப் புகழ்ந்தும் பிறரை யிகழ்ந்தும் நடக்க நேர்ந்தது * * நேயம் புரிந்த மாயவன் ஓர் நாள் தேய மெங்குங் காணாது மாயமாய் மறைந்தான். இதனால் அம் மாதர்கள் தம் அறிவு கைவரப் பெற்று, அவர்கள் உயிர் ஊசலாடத் தொடங்கிற்று. உள்ளம் பதைத்தது, உடலம் துடித்தது, எங்கெங்கும் நங்கைக ளனைவோரும் நாயகனைத் தேடிக் காணாது, நடுக்கம் பூண்டனர். அவ்வேளை கோபியர் கொண்ட குறையையும் அடைந்த மனவருத்தத்தையும் கூற யாராலும் முடியாது. "மயிலே! மாயவனைக் கண்டாயோ?" என்பர். "குயிலே! கோபாலன் குழலிசையைக் கேட்டாயோ?" என்பர்; "மரமே! எம் மன்னவன் சேதி சொல்லாயோ?" என்பர்; கிருஷ்ணன் மீது கொண்ட காதற் பெருக்கத்தால், அவனைப் போன்றே அவர்கள் நடித்துக் காட்டுவர். இவ்வாறு பலவிதமாய்ப் பித்துப் பிடித்தும் புத்தி நீங்கியும் சொல் குழறியும் உடல் மெலிந்தும் கோபியர்கள் வருந்திக்கொண் டிருக்கும் சமயத்தில், முன்னினும் பதின் மடங்கு சுந்தரமாய் இன்பம் விளைக்கும் இசையூதி, கொஞ்சிக் குலவிக் கோபாலன் வந்து சேர்ந்தான். கைப்பொருளை யிழந்தோர் மீண்டும் அதைக் கண்டதுபோல் ஆனந்தக்கடல் மூழ்கி அளவு கடந்த புளகமெய்தி அம்புஜாக்ஷிகள் யாவரும் நம்பனைக் கட்டி யணைந்து விடமாட்டோம் என்றனர். "கிருஷ்ணா, நீ யிவ்வாறு ஏழைகளாகிய எங்களைக் கைவிடல் தருமமோ? உனக்காகவே, உன்னை நேசித்த எங்களுக்கு ஒருபோதும் ஊனம் விளைக்காய் என்றல்லவோ நம்பியிருந்தோம்" என்று கோபிகள் கெஞ்சிக் கேட்க, "எனக்காகவே, என்னை நேசித்த எவர்க்கும் நான் இடையூறு புரிவதே யில்லை! சிலகாலம் என்னைப் பிரிந் திருந்ததினாலே, உங்களுடைய பத்தியும் ப்ரேமையும் முற்றிலும் உத்தம மடைய வில்லையா? காதலர் பிரிந்தால் ஆதரம் அதிகமாகும் என்பதை நீவிர் கேட்ட தில்லையா?" என்று பகவான் பதில்கூறி அவர்களை மகிழ்வித்தனர்.

இஃதன்றியும், ஒவ்வொரு கோபிஸ்த்ரீக்கும் ஒவ்வொரு கோபாலனாக ஸ்வாமிகள் பிரசன்னமாகி, அனைவரும் மண்டலாகாரமாய் நிற்க, இடையிடையில், மின்னற்கொடிகள் பக்கத்தில் நீருண்ட மேகம் நிலைத்துக் காண்பதுபோல், தாமும் விளங்கி ராஸக்ரீடை யியற்றி யருளினர். இந்த ராஸக்கிரீடை ஜலக்கிரீடை முதலியவைகளால், கோபி ஜனங்களுடைய மனங்குளிர்ந்து, பரமபக்த சிகாமணிகளாய் பிரகாசித்தனர். ஸ்ரீகிருஷ்ணனும் ஒவ்வொரு கோபிகா ஸ்திரீயி னிடமும் எக்காலத்தும் தனித்தனி

யிருந்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியமாகும்படி சம்பாஷித்துக் கொண்டிருப்பார். சங்கீதத்தில் பிரியமுடையவ ளிடம், சங்கீதம் பாடிக் கொண்டும், தத்துவ விஷயத்தில் ஊற்ற முடையவ ளோடு தத்துவங்கள் பேசிக்கொண்டும், இப்படி பலவிதமாய் பகவான் தோன்றும் அற்புத மகாத்மயத்தை வியந்து மண்ணவரும் விண்ணவரும் பக்தி மிகுந்து பரவசமாகினர்.

III

ஹிம்சை செய்ய எண்ணியிருந்த கம்ஸனுக்கு, கடைசியாக, கண்ணனே தனக்கு நண்ணிய விரோதி யென்று புலப்பட்டது. இதனால் அவன் மல்ல யுத்த விளையாட்டு என்று ஒரு சிலம்பம் ஏற்படுத்தி ஸ்ரீகிருஷ்ணனை வரவழைத்தனன். ஸ்ரீகிருஷ்ணன் அங்கு வந்த போர்வீர ரனைவரையும் தொம்சம் செய்து, கம்சனையும் சம்ஹாரம் புரிந்து, உக்ர சேனனை அரசனாக நியமித்தனன். என்றாலும், எல்லா அதிகாரங்களையும் பகவான் தம்மிடமே வைத்துக் கொண்டனர்.

பிருந்தாவனத்தை விட்டுப் பெருமானார், மதுராபுரிக்குச் சென்றதும், பிருந்தாவனத்தில் ஒவ்வொருவரும் அடங்கா விசனம் பூண்டார்கள். அங்கே எங்கு பார்த்தாலும் துக்கக் குறிப்பாயே யிருந்தது. ஏனென்றால் அவ்விடத்தில் கண்ணபிரானை ஒவ்வொருவரும் கண்ணுக்குக் கண்ணாய் நேசித்தனர். இவர்களுக்குள் ராதா துக்க சமுத்திரத்தில் மூழ்கி, பிராணன் போகும் நிலைமை யடைந்தனள். கண்ணன் மீது உண்மையாய்க் காதல் கொண்டோர், இவளைப்போ லொருவரு மிலரென்று காசினி யெங்கும் முழக்க மாகியது. பகவானைச் சாஸ்திர வழியாய் உபாசித்து, பக்தி மாத்திரம் போதாதென்று பிருந்தா வனத்தோரை மனதில் இகழ்ந்து கொண்டிருந்த உத்தவ ரென்பவரை ஸ்வாமிகள் தமது க்ஷேம சமாசாரம் சொல்லி வரும்படி பிருந்தைக்கு அனுப்பினர். அவர் பிருந்தாவனம் வந்து பார்த்ததும் கிருஷ்ணன் பிரிவாற்றாமையால், விளைந்துள்ள கோலாகலத்தைக் கண்டு, அவர்கள் பக்தியை வியந்து, இதனா லன்றோ ஸ்ரீகிருஷ்ணன் இவர்களுக்கு வசமாயினர் என்று தம் எண்ணத்தை மாற்றி, ஸ்ரீராதையின் பாத கமலங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

கண்ணபிரான் இப்பொழுது மதுராபுரியில் மன்னவராய் விளங்கிக் கொண்டிருக்கிறார்! எல்லோரும் அவருக்கு மரியாதை செய்யினும் அது வெளிவேடம் மாத்திரமாய் நின்றதால் அவர்க்கு மகிழ்ச்சி விளையவில்லை. ஏழைகளாகிய பிருந்தாவனத்தோர் பக்தியே ஏற்றமுள்ளதாய் அவர்க்குத் தோன்றியது.

சிலநாள் பொறுத்து, கிருஷ்ண ப்ரேமை யாகிற தீ, ராதாவைக்

கொளுத்துதலால், ராதா உயிர்விடும் நிலைமையி லிருக்கிறா ளென்று தோழி கிருஷ்ண னிடம் முறையிட, அவர் மனம் நொந்து உடனே உண்மை அன்பினளை உபசரிக்கப் புறப்பட்டனர். பிருந்தா வனம் வந்ததும், தாமிருக்கும் அரச அலங்காரத்துடன், கிருஷ்ணன் ராதாவுக்கு காட்சி கொடுக்க, ராதா, அவ்வுடையைக் கழற்றி யெறிந்து, முன்போலவே தன்னொத்த நிலையினளாய் காதற் கண்ணளாய் விளங்கினா ளொழிய, அவரைத் தான் ஏறிட்டுப் பாரேனென்று கூறினாள். ஸ்வாமிகள் அவ்வாறே ராதாவின் அபீஷ்டத்தை நிறைவேற்றினர். ராதாவின் அபூர்வ நேசத்தின் மேன்மைக்கு அஞ்சிப் பெருமானார் அவள் காலில் விழுவதுமுண்டு என்று சொல்லப்பட் டிருக்கிறது.

மேற்கூறிய கதைச் சுருக்கத்தால் ஏற்படும் உண்மைகளைச் சின்னாட்களுக்கு முன்னர் நடாத்திக் காட்டினார், முக்கியமாய் ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகளாவார். கண்ணன் வழிபிடித்துக் காசினியி லவதரித்த கடவுள் தன்மையுடையோரைப் பற்றி வெகு சிறிது வருகிற அத்தியாயத்தில் கூறி முடிப்பது அவசியமா யிருக்கின்றது. புது மலர்களாக இவர்க ளவதரித்து வெகு மணம் வீசும் வண்ணம் பக்தி நெறிக்குச் சக்தி யளித்தது பரம ஸ்ரேஷ்ட மென்று பலராலும் கொண்டாடப்படுகிறது.

௫-ம் அத்தியாயம்.

புதுமலரும் வெகுமணமும்.

I.

ராமாநுஜர்.

முன் அத்தியாயத்தில் கூறியபடி பக்தியும் ப்ரேமையும் பரம சாதன மென்று மஹோபதேசம் செய்தருளி பிரபஞ்சத்தை வாழ்வித் தருளின ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் எழுவனைப் படுவர். இவர்களில் முதலாவார், ஸ்ரீபெரும்பூதூரில் அனந்தாழ்வான் அவதாரமாய் எண்ணூறு வருடங்கட்கு முன் தோன்றி ஸ்ரீபாஷ்ய மியற்றி யருளிய ஸ்ரீராமாநுஜாசார்யர். இவர் எதிராஜ ரென்றும் உடையவ ரென்றும் ஸ்ரீபாஷ்யகார ரென்றும் சொல்லப்படுவார். இவர் இந்தியா முழுவதும் வெகு பிரக்கியாதி பெற்று அசாதாரணத் தோற்றங்களால் தமது மஹாத்ம்யத்தை வெளிப்படுத்தி ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை நிலை நிறுத்தினார். இவர் திக்விஜயஞ் செய்து விசிஷ்டாத்வைதத்தை ஓங்கச் செய்தா ரென்றும், ஒரு சமயம் ஆயிரம் பணாமுடிக ளுடைய ஆதிசேஷனாய் விளங்கி அனைவரும் அதிசயிக்கப் பண்ணினா ரென்றும், டில்லியில் நவாப்பிட மிருந்த செல்வப்பிள்ளை யென்னும் திருநாராயண விக்ரஹம், இவர் அழைத்த மாத்திரத்தில் ஓடி வந்து மடியி லிருக்கப் பெற்றா ரென்றும், பலவகையாய் இவருடைய பெருமைகள் விவரிக்கப்பட் டிருக்கின்றன. சில்லரை பாஷ்யங்கள் நீங்கலாக, வெகு பிரக்கியாதி பெற்ற பாஷ்யம் மூன்றனுள் இவ ரியற்றிய பாஷ்யம் வெகு அருமை யானது என்று இப்போழ்தும் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. திருமலைக்கு வழிகாட்டிய பஞ்சமனை நெஞ்சு மகிழ்வோடும் அடிபணிந்த அதி சாத்வீக ஸ்ரேஷ்டர், இவர். தமக்கு நரகம் கிட்டினாலும் கிட்டட்டும் என்று ஆசார்யர் வார்த்தையை மீறி, கோபுரத்தின் மீது நின்று "பண்டைக் குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு கூறுதுமே" என்கிறபடி, சாதி மத வித்தியாசம் நோக்காது உண்மையை யுபந்யசித்த உத்தம புருஷர், இவர். இந்தியா முழுவதிலும் அதிலும் தென்பாகங்களில் முக்கியமாய் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஜகத்குரு இவரே என் அனைவராலும் கொண்டாடப் படுகிறார். தென்னிந்தியா முழுவதிலும் சித்திரை மாதத்தில் இவர்க்குச் செய்யும் திவ்யோத்ஸவ வைபவங்களைச் சொல்ல எம்மால் தரமன்று.

II.

ராமானந்தர்.

ராமானந்த ரென்பவர் முன்சொன்ன ராமானுஜா சார்ய ருடைய சிஷ்ய பரம்பரையில் வந்தவர். ராமானந்தர், தம் ஆசார ஏற்பாட்டுக்கு விரோதமாய்ப் பலர் பார்க்க உணவருந்தினார் என்கிற குற்றத்தை முன்னிட்டு, இவருடைய ஆசார்யர் கோபிக்க, இவர் தாம் கொண்ட எண்ணமே சரியான தென்று தம் அனுஷ்டானத்திற் கிணங்க, ராமானந்திகள் என்னும் வைணவ வகுப்பினரை யேற்படுத்தினார். இவரே ராமானந்திக ளெனப் படுவார்கள். இவர்கள் உணவிலும் உடையிலும் விசேஷ நிபந்தனை யொன்றுமிலாது அவரவர்கள் இஷ்டம் போலும் நடந்துகொள்ளலாகும். ராமானந்தர் சாதி வேற்றுமை யென்பதை அறவே யொழித்து, பறையர், அம்பட்டர் முதலானவர்களையும் தமது சிஷ்யராக்கிக் கொண்டார். பகவானே, மீனாயும் பன்றியாயும் பலவகை தோன்றினாராக, அவரடியாரும் பல சாதிகளிலும் தோன்றுவ தன்மையுமென்று, உண்மையே நோக்கி வண்மையே கொண்ட உத்தமர் இவர். ராமானந்தர் ஸ்ரீபாத வடுப்பட்ட கல்மேடை இப்பொழுதும் காசியில் பஞ்ச கங்காகடத் தருகிலிருக்கிற தென்று இவர் சம்பிரதாயத்தினர் சேவித்து வருகிறார்கள். இவர்கள் ஸ்ரீராமனை மிகவாய்த் துதிப்பவர். ராமானந்தர் சுமார் ஐந்நூறு வருடங்கட்கு முன் னிருந்தவர். இவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர் பிபா என்பவர். இவர் பெரிய வைராக்கியர். இவர் மனைவியைத் திருடர் தூக்கிக்கொண்டு போக ஸ்ரீராமச்சந்திரனே தோன்றி மீட்டுக் கொடுத்தான் என்றும், கோபங்கொண்ட ஒரு சிங்கத்திற்கு இவர் துளசி மாலை யணிவித்து, மந்திர உபதேசஞ் செய்து அதைச் சாந்தப் படுத்தினா ரென்றும் சொல்லப்படுகிறது.

III.

கபீர்தாஸ்.

இவரும் சுமார் ஐந்நூறு வருடங்கட்கு முன்னிருந்தவர். ராமானந்தருடைய சிஷ்யர்களில் மிகப் பெயர் பெற்றவர். இவர் சம்பிரதாயத்திற்கு வெளிவேடத்தில் அதிக பிடிப்பில்லை யாயினும், சிலர் கோபீ சந்தனமும், சிலர் ராமானந்திகளைப் போலவே, ஸ்ரீசூர்ணத்துடன் ஊர்த்துவ புண்டரமும் அணிகிறார்கள். வீணே சாஸ்திரவாதம் புரிவதிலும் பண்டிதர்களென்று பட்டம்பெற்றுப் பறைமுழக்குவதிலும் யாது பயனென்று, இவர், அவ்வாறு ஒழுகுவோரை யெல்லாம் பரிகாசஞ் செய்வதுண்டு. 'ராமனைத் தவிர வேறு அரசனை வணங்க மாட்டே' னென்று இவர் சொன்னதால் அரசன் கோபமுண்டு, இவரை ஆற்றிலிட்டான், இவர் முழுகிப்போகவில்

நெருப்பிற் போட்டான், இவர் எரிந்து போகவில்லை; யானையால் மிதிக்கச் சொன்னான், இவர் மிதிபடவில்லை. கடைசியாக, அரசனே யானைமீதேறி வந்து இவரைக் கொல்ல முயன்றபோது, இவர் சிங்கமாய் மாறி பயங்கரம் தந்து நின்றனராம். இவரை ஹிந்துக்கள் தம் மதத்திற் சேர்ந்தவ ரென்றும் மகம்மதியர் தம்மதத்திற் சேர்ந்தவரென்றும் ஒருவருக்கொருவர் போர் விளைத்ததும் உண்டாம். இவர் தம் யாக்கையை விட்டு மோட்சமடைந்த காலையில் மேற் போர்வை நீக்கிப் பார்க்க, தேகம் காணாது, பூக்கள் தோன்றின என்று சொல்லுகிறார்கள். கபீர் சம்பிரதாயஸ்தர்கள் அறத்தின் வழி நின்று மறத்தை கடந்த மஹா உத்தமர்கள் என்று ஐரோப்பியரும் கொண்டாடுகிறார்கள். (Vide Modern Hinduism by W. J. Wilkins p.67) கொடுந்தொழி லென்பதைக் கனவிலு நினையாது, 'கோன் பென்பது கொன்று தின்னாமை' என்னும் மேதக்க விரதம் அனுஷ்டிப்பவர்கள், இவர்கள். கபீர் சம்பிரதாயஸ்தர்களைப் போன்று காகிகள் என்றும், மாலுகிதாஸிகள் என்றும், தாது சம்பிரதாயஸ்தர்கள் என்றும், ராம்தாஸிகள் என்றும், சேந சம்பிரதாயஸ்தர்கள் என்றும் வேறுசிலரும் உண்டு.

IV.

வல்லபாசாரியர்.

மீராபாய்.

மத்துவாசாரியர்.

(1). வல்லபாசாரியர் நானூறு வருடங்கட்கு முன்னிருந்தவர். சாதி வித்தியாசத்தைப் பாராட்டாது வைணவ மதத்தைப் பரவச் செய்தவர், இவர். ராதாகிருஷ்ணனாகவும், சீதாராமனாகவும் தன்னைப் பாவித்துத் தொழுதல்போன்றே, பாலகோபாலனாகவும் உபாசிப்பதைப் பரவச்செய்ய வேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணனே இவர்க்குப் பிருந்தாவனத்தில் பிரசன்னமாய்த் தோன்றிப் போதித்தனர் என்று சொல்லுகிறார்கள். பிருந்தாவனத்திலும், அஜ்மீர் முதலிய வேறிடங்களிலும், பாலகோபாலன் சன்னிதிகளிருக்கின்றனவாம். உடலை வருத்தியும், உணவைத் தள்ளியும் பக்திசெய்வதைக் காட்டிலும் சகல சுகானுபவங்களோடே பக்தி செய்வதே உத்தமமென்று இவர் போதித்து வந்தனர். கங்கை யாற்றிற் புகுந்து, பகவானைத் தொழுது கொண்டே திடீரென மறைந்தன ரென்றும் அப்போது ஜோதி யொன்று தோன்றிய தென்றும் கூறுகிறார்கள்.

(2). மீராபாய் என்னும் ராணியார் ராஜபுதனத்தில் உதித்தவர். இவர் கிருஷ்ண பக்தியிற் பெரியோராய்; பக்தர்களை யெல்லாம் கெடுதிகளினின்று நீக்கியும் ஆபத்துக்கு ஆளாக்காமலும் காத்து வந்தனராம். பிருந்தாவனத்தில் ஸ்ரீகௌரங்க ஸ்வாமிகளுடைய சிஷ்யராகிய ரூப்கோஸ்வாமி

என்பாரைப் பார்க்க இவர் உத்தேசித்த போது, பெண்களைத் தாம் பார்ப் தில்லையென்று அவர் மறுத்தனராம். அதன் மீது மிராபாய் கோப கொண்டு, "கோஸ்வாமிகள் தம்மை புருஷரென்று பாவித்தால், பிருந் வனத்தில், அவருக்கு என்னவேலை? பிருந்தாவன தேவதைக்கு அ தெரிய வருமாயின், அவரை வெளியில் தள்ளிவிடுமே! என் அருமைக் கண்ணனைத் தவிரக் காசினியில் புருடர்கள் எவரே" என்று பதில் விடுப்ப, அதைக்கேட்ட கோஸ்வாமிகள் மிராபாய் பக்திக்குப் பெரிதும் வியந்து, அப் பக்த சிகாமணியைப் பார்க்க ஒத்துக் கொண்டாரென்று ஒரு சரித்திர முண்டு. மிராபாயின் அபார அன்பைக்கண்டு ஸ்ரீகிருஷ்ணன் அளவில்லா மகிழ்வுகொண்டு, தன் விக்ரஹ ரூபத்தைத் திறக்க, அதில் மிராபாய் புகுந்து மறுபடியும் வெளியில் வர வில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(3) மத்துவாசாரியர் சுமார் எண்ணூறு வருடங்கட்கு முன்னிருந்தவர். இவர் துவைத பாஷ்ய மியற்றியவர்.

V.

ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய ஸ்வாமிகள்.

இவர் சுமார் நானூறு வருடங்கட்குமுன் நவத்வீபத்தில் அவதரித்த பெருந்தகையாளர். அவ்வூரில் ஆரியர் மெச்சும் சீரியரா யிருந்த அத்வைதாசார்யார், இருள் தரு மா ஞாலத்தின் மருளைப் போக்கி அருளைக் கொடுக்கக் கண்ணன் கருணை புரியவேண்டுமென்று தினந்தினமும் இராப்பகலாய்ப் பிரார்த்தனை செய்துகொண் டிருப்ப, அதற்கிரங்கிப் பக்வானே ஸ்ரீகௌரங்கரா யவதரித்தனரென்று சித்தாந்தம். வங்காளத்தி லுள்ள வைஷ்ணவர்களிற் பெரும்பாலோர் ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் சம்பிரதாயத்தை யனுஷ்டித்து வருகிறார்களென்றும் அவர்கள் தொகை சுமார் எண்பது லக்ஷம் ஆகுமென்றும், அவர்கள் ஹிந்துக்களில் ஐந்திலொரு பங்கினர் என்றும் வில்கின்ஸ் கூறுகிறார். (Vide Modern Hinduism by H. Wilkins, p. 73) ஸ்வாமிகள் கண்ணன் திருவவதாரமே யென்று ஸ்வாமி அபயானந்தா (Swami Abhayananda) என்னும் மாது சிரோமணி யவர்கள் சென்ற ஜூலைமாதம் புரிந்த பிரஸங்கம் ஒன்று அமிர்த பஜார் பத்திரிகா (The Amrita Bazar Patrika) வில் பதிப்பித் திருந்தது. இம் மங்கை நல்லார் பிரஸங்க வன்மையால் சைதன்ய மதம் அதிகம் வியாபிக்கும் என்று மெயில் (The Madras Mail) பத்திரிகை கூறுகின்றது. ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம் சமஸ்க்ருதத்திலும் வங்காளபாஷையிலும் அநேக நூல்கள் முகமாய்க் காணப்படும். ஸ்வாமிக ளுடைய சரிதம் உலகெங்கணும் பரவ ஆங்கிலத்தில் இயற்றினார், அமிர்தபஜார் பத்திரிகா சிரியரான, கனம்பொருந்திய ஷிஷிர் குமார் கோஸ், அவர்கள், எம். ஏ. அவதார புருஷராகிய ஆசார்யர் வைபவம் பின் யாம் எழுதியுள்ள சரிதத்தால் வெகுவாய் விளங்கு மாகலின் கூற வேண்டுவன வற்றை மாத்திரம் ஈண்டுச் சுருங்கக் கூறி, எடுத்ததை முடித்து விடுகிறோம்.

ஸ்வாமிகள் இவ் வவதாரத்தில், தாமே ஒருவேளை கண்ணனாயும் மற்றொருவேளை ராதாவாயும் விளங்கி பகவத் பக்திக் கிரமத்தை யினிது விளக்கினார். ஞானத்தைக் காட்டினும் பக்தியே பரம சாதன மாகு மென்றும், ஜாதி மத பேதங்க ளில்லாது முக்திக்கு வழி காட்டுவது பக்தியேயென்றும், பலபடியாய்த் தம் அபூர்வ சக்தி காட்டி இவர் உபதேசஞ் செய்திருக்கிறார்.

மேற்சொன்ன பக்தியில் ஐந்து படித்தரங்கள் காணப்படுகின்றன: (1) சாந்தம் (2) இதனினும் உயர்ந்த தாஸ்த்துவம்—அதாவது யஜமான சேவக சம்பந்தமாய்க் காணப்படும் விசுவாசம் (3) இதனினும் மேம்பட்ட ஸ்நேகம்—மித்திரருக்குள் தோன்றுவது (4) இதனினும் பெருமை வாய்ந்த வாத்ஸல்யம்—பிதாபுத்திர சம்பந்தமாய் விளங்குவது (5) மாதுர்யம்: இது எல்லாவற்றினும் உயர்ந்தது: காதலனுக்காகவே அவனை நேசிக்கும் அன்பு முதிர்ச்சி; கிருஷ்ணனிடம் கோபியர் விளைத்த நட்பைப் போன்றது.

மேற்கூறிய பக்தி விளைவதற்குச் சங்கீதமே பலத்த காரண மாவது என்று கீர்த்தனை பாடியும் பஜனை செய்தும் பாகவதர் நடக்க வேண்டிய வகைகளையும் அதற்குப் பகவான் அருள்புரியும் அருமையையும், ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் தாமே உண்மையில் நடித்துக் காட்டினார். ராதாபக்தியின் ரம்யமும், கீர்த்தனையா லுண்டாகும் கிளர்வும், பின்வரும் சைதன்ய சரிதத்தால் நன்னயமாய் உணரல் கூடும்.

பாயிரம் முற்றுப் பெற்றது.

கலியுகத்தில் மோக்ஷ சாம்பிராஜ்யம்.

[அம்ருத பஜார் பத்ரிகா, ஜூலைமீ 10உ, 1902௵]

தமிழ் மொழிபெயர்ப்பு.

நாம் முன்னரே விளம்பரப்படுத்திய பிரகாரம், ஸ்வாமி அபயானந்தர் என்பவர் (விவேகானந்த ஸ்வாமிகளால் ஹிந்துமதப் பற்றுண்டாகப் பெற்ற அமெரிக்கா கண்டத்துப் பெண்மணி) "ஹரிடோகிபாகன் நாட்டிய மந்திரம்" என்ற சாலையில் மஹாராஜா சர் ஜோதீந்த்ர மோஹன டாகோர் பாபு ஹிரேந்திர நாது டத், பாபு நாலின் பேஹாரா சர்க்கார் முதலிய ஹிந்து ராஜவம்ச பிரதிநிதிகளுக்கும் அநேக கல்வித்திறம் வாய்ந்த புத்திமான்களுக்கும் முன் இரண்டாவது முறை பகிரங்கமாய் பிரசங்கஞ் செய்தனர். அவர் வழக்கம்போல் வாசாமகோசரமாய் சுத்தநற் றெளிவாய் பிரசங்கித்து ஜனங்கள் சுமார் ஒருமணிநேரம் வரையில் பிரமித்து உட்கார்ந்திருக்கும்படி செய்தார். அவர் வாயரும்பிய ஒவ்வோர் சொல்லும் மிகக் கவனமாய்க் கேட்கப்பட்டது. அவர் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைத் தர்க்க ரீதியாயும் சாஸ்திரப்போங்காயும் கையாண்டதால் அது கேட்போர் மனதை முற்றிலுங் கவர்ந்தது. இச் சுவாமியார் தந்நிலை மயங்கிய ஸ்திதியில் ஞாபகக்குறிப்புகள் ஒன்று மின்றியே வெகு தாராளமாய்ப் பிரசங்கம் செய்கிறார்; என்றாலும், தம் உபந்நியாச விஷயத்திற்கு அனுசரிப் பில்லாத ஒரு வார்த்தையுஞ் சொல்வதில்லை; நடுவில் தடைபட்டு சிறிதும் நிற்றலில்லை. சென்ற சனிவாரம் அவர் உபந்நியாசித்ததை மாறுபாடு சிறிதுமின்றி யவ்வாறே மேல் ஈங்கு விவரிக்கப்படுகின்றது:

ஒவ்வோர் மதத்திற் குரிய கிரந்தங்களும் பலவகையான நிலைகளினின்று பொருள் கோடற்பாலன. எக்கிரந்தத்தின் எப் பகுதியை யாயினும் எடுக்கின், அது முற்றிலும் வேறான இருவகைப்பொருள் தரும்படி படிக்கக்கூடும். அதன் சொற்போக்கினால் ஒருரையும் ஞான மார்க்கத்தினால் வேறோர் உரையும் கொள்ளக்கூடும். ஒருபொருளினின்றும் மற்றோர்பொருளைப் பிரிதுபடுத்தி யறிவதில் நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். உதாரணமாக நாம் நான்கு யுகங்களைப் பற்றிய கற்பனைகளைப்பற்றி கவனிப்போம். நாம் சத்திய, த்ரேத, துவாபர, கலி என நான்கு யுகங்கள் இருக்கின்றன என்று நம் சாஸ்திரங்களில் வாசிக்கின்றோம். இக் கொள்கையினையே சொற்பொருள் வழியாயும் ஆத்மார்த்தமாயும் இருவிதமாய் உணரலாம். சொற்போக்கினால் அதற்கு இவ்வுலகம் நான்கு கற்பங்களை யுடையது என்று

பொருள் கூறலாம். முதற் கற்பத்தில் எல்லாம் நன்மையும் மதப்பற்றுமே பொதிந்த தெய்வ உணர்வு நிரம்ப விருக்கின்றது. இரண்டாவது கற்பமாகிய த்ரேதா யுகத்தில் மனிதன் அவ் வுன்னத நிலையினின்றும் கீழிறங்குவதைக் காண்கிறோம். மறுபடியும் துவாபர யுகத்தில் இன்னும் அதிக இறக்கமும் கலியில் பின்னும் விசேஷ இறக்கமும் விளங்குகின்றது. சத்திய யுகத்தில் அந்த தெய்வ உணர்வினுக்கு நான்கு காலும், இரண்டாவது திரேதா யுகத்தில் பாக்கியாய் மூன்றே காலும், மூன்றாவதான துவாபரயுகத்தில் இரு காலும், கலியில் ஒரே காலு மிருப்பதை யறிகிறோம். இப்போது நாம் இதனையே ஞானமார்க்கமாய்க் கவனித்துப் பார்ப்போம். இதனால் உலகத்தினுக்கு இக்கற்பங்கள் ஆக்கத்தினுக் கேற்பட்டன அல்லது ஜீவிய ஸ்திதியை யறிவிக்கின்றன வென்று நம்புகிறோம். அக்கற்பங்களே மனிதனுடைய வளர்ச்சிக்கும் மனுக்குலத்தின் நடைக்கும் அதன் வெளிப்பாட்டுக்கும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அவை மனுக்குலம் எவ்வளவு தேற்றம் அடைந்திருக்கின்றது என்றும், மனிதன் எவ்வளவு மாறுதல் இன்றேல் வளர்ச்சி பெற்றிருக்கிறான் என்றும் தெரிக்கின்றது. இக்கலியில் நாம் முதலுங் கடையு மின்றி நடுஸ்திதியில் இருக்கின்றோம் என்பதை யின்று நான் உமக்கு விளக்குகின்றேன். நாம் உயர்ந்த ஸ்திதிக்கும் தாழ்ந்த நிலைக்கும் இடையிற்றான் இருக்கின்றோம்.

ஸ்ரீவிஷ்ணு வானவர் ஒன்பது முறை யவதரித்தனர். முதல் முதல் அவர் ஜீவராசிகளில் மிகக் குறைந்ததான மச்சமாய்ப் பிறந்தார். அவர் இரண்டாவது ஆமையாய்ப் பிறந்தார். அது படைப்பில் சற்று உயர்ந்ததாயிற்று. அவர் பூபாரம் அதாவது பூமியின் மேற்றரை யாகிற ஓடினைத் தம் முதுகில் தாங்குவதே தம் அவதார வேலையாய்க் கொண்டிருந்தார். பிறகு விஷ்ணு பன்றியாய்த் தோன்றினார் என்று அறிகிறோம். எம்பிரானுடைய இவ் அவதாரங்களைக் கவனிக்கும்போது அவ் வொன்பது அவதாரங்களின் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தெய்வ காரியத்தினை நிறைவேற்ற வேண்டியும் வெவ்வேறு கருத்தினை முடிக்கவேண்டியும் ஏற்பட்டது என்ற உண்மையை யறிய வேண்டும். அந்த அவதாரத்தின் கருத்து யாதெனில் ஒரு இராக்கதப் பேயினால் தாழ்த்தப்பட்ட இவ்வுலகத்தினை உயர்த்த வேண்டுமென்பதே. பிறகு இன்னும் ஒருபடி மேலானதாய் பாதி மனிதனும் பாதி மிருகமும் ஆகிய நரசிம்மாவதாரத்தைக் காண்கிறோம். அதன்பின் மனித வுருவினைச் சிறிது அரைகுறை யாகவே உணர்த்தும்படியான குறளுருவமான வாமனாவதாரம் வரப் பெற்றதை யறிகிறோம். அவருடைய அடுத்த அவதாரம் ராமாவதாரம்; அதனுள் மனித அவதாரத்தின் நிலை பூரணமாய் மலர்ந்திருக்கின்றது. ஆங்கே மனுக்குலம் தாழ்ந்த

ஜீவராசிகளைத்தாண்டி யுயர்ந்தது. விஷ்ணு ராமராய் வந்தது சத்துருவை ஜயிக்கும் முறையும் நம் புலன்களை யடக்கியாளும் வகையும் ஆகிய காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தான். இராமர் அம்பும் வில்லும் தாங்கி வந்தார். பின்னர் அவர் குருக்ஷேத்திரத்தில் அருச்சுனனுக்கு சாரதியாய் அதாவது ஸ்ரீ கிருஷ்ணாவதாரமாய்த் தோன்றியதைக் காண்கிறோம். எல்லா அவதாரங்களிற் சிறந்த திதுவே. இவ்வவதாரத்திய காரியம் மற்ற அவதார காரியங்களைவிட மிகப் பெரிதாயும் உன்னதமாயும் இருந்தது. இராமரைவிட கிருஷ்ண ஸ்வாமி மிகச் சிறப்பு வாய்ந்தவர். ராமர் தம் மனைவியைப் பெறுவதற்காகப் போர் செய்தார். அங்கு தாரம் என்பது மனிதனுடைய மனது தான்; மனிதன் ஆகிற ஆத்துமா திரும்பவும் மனதினை யடக்க முயல்கிறது.

நாம் கிருஷ்ண னுடைய காரியத்தைக் கவனிக்கும் போது, அது அதியுன்னத மாயும், பூர்த்திகர மானதாயும் பல்வகைப் பட்டதாயும், அதனால் மனிதன் தன் சிவகாலம் முழுவதிலும் மனதினால் நினைத்துணரக் கூடாததாயும் இருப்பதைக் காண்கிறோம். அவர் துவாரகையில் கர்ம யோகத்தையும், குருக்ஷேத்திரத்தில் ஞான யோகத்தினையும், பிருந்தாவனத்தில் அவர் கற்பித்ததில் மேலான தனி பக்தி யோகத்தினையும் விளக்குகிறதை யறிகிறோம். அவர் வாழ்க்கையில் துவாரகையில் இல்வாழ்வானாகவும், குருக்ஷேத்திரத்தில் போர்வீரனாகவும், பிருந்தாவனத்தில் அன்பின் மிக்க காதலனாகவும் ஒழுகினார்.

கிருஷ்ண ஸ்வாமி விஷ்ணு அவதாரத்தின் பூரண அம்சம் பெற்றிருந்தார். ஆதியில் வேர் உண்டாகி, மேன்மேல் சிறப்புற்றும் மேன்மே லுயர்ந்தும் ஆவிர்ப்பவிக்கும் ஒருசெடி வெளி கிளம்புவதை யவரிடம் காண்கின்றோம். நாம் பிருந்தாவனத்து ஸ்ரீ கிருஷ்ணனைக் கவனிக்கும்போது, அவர் வேதசாஸ்திரத்தினாலும், எவ்வித பரித்தியாகத்தினாலும், வேறு எவ்வகை சடங்குகளினாலும் அடையக் கூடாதவர் என்றும், ஆனால் பாசத்தினாலும், தோத்திரத்தாலும், கீர்த்தன வழியாலும், பக்தியாலும் அவர் எளிதில் அடையக் கூடியவர் என்றும் அறிகிறோம்; அவர் பிருந்தாவனத்தே கற்பித்த இதுவே எல்லாவற்றினும் சிறந்தது.

விஷ்ணு மூன்று யுகங்களிற்றான் அவதரித்தார் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. அவர் கடைசியாய் அவதரித்தது துவாபர யுகத்தில். அவர், முதன் மூன்று யுகங்களிற்றோன்றினாரே தவிர நான்காவது யுகத்தில் அவதரிக்க வில்லை யென்றும் ஸ்ரீ கௌரங்கர் அவதார புருஷரன்று என்றும், ஏனெனில் வேத சாஸ்திரங்களின் பல பாகங்களில் ஒரே விதமாய்க் கலியுகத்தில் அவதார மில்லை யென்று பிரதிபாதிக்கிறபடியால் அவதாரத்திற் கிடமில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ கௌரங்கர் விஷ்ணுவின் அவதாரமென்று நாம் சொல்வதற்கு என்ன நியாயம் என்று சற்று கவனிப்போம். விஷ்ணுவானவர் தம் அவதாரத்தின் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருகாரியத்தை நிறைவேற்ற வேண்டியிருந்ததாலேயே அவைகட்குத் தக்கபடி வரவர உயர்ந்த சரீரங்களை வகித்தார். அடுத்த அவதாரம் ஒவ்வொன்றிலும் அதற்கு முந்திய அவதாரத்தின் காரியத்தைவிட பெரிய முக்கியமான வேலையே அவர் செய்துமுடிக்க வேண்டியிருந்தது. அவர் ஜீவராசிகளில் அவதரித்த போதும் ஒவ்வொரு அவதாரத்திலும் அதற்கு முந்திய அவதாரத்தில் ஏற்பட்ட காரியத்தினைவிட மிக முக்கியமான வேலையிருந்தது. முதலில் மச்சமாயும் பின் கூர்மமாயும் விஷ்ணு அவதரித்ததேன்? ஏனெனில் மனுக்குலம் வரவர விர்த்தியடைந்து வந்தது. அவருடைய அவதாரம் பூரணம் பெற்ற எல்லையாவது அவர் உத்தமமான மனிதனாய் வந்த அவதாரமே. ஆகையாற்றான் அவர் ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்ததே எல்லாவற்றினும் சிறந்த அவதாரம் என்று நாம் சொல்லுகிறோம். இந்த பலவித அவதாரங்களே மனுக்குல விர்த்தியின் ஒழுங்கினை விளக்குகின்றன. மச்ச உருவினைவிட மேலானதை ஒருமனிதன் சிந்திப்பதற்கு முடியாதிருந்த காலமும் இருந்தது. அம்மனிதர்களுக்கு மச்சமே மேலான சகளமாய் இருந்தது. ஆகையால் அவர்களுடைய உணர்ச்சிகட்குத் தக்கபடி விஷ்ணு மச்சமாய்த் தோன்ற வேண்டி யிருந்தது. நாம் அவரைக் கிருஷ்ணனாகவே பாவித்து நாடிச் சென்றால் அவரும் ஸ்ரீகிருஷ்ணனாகவே நம்மை யணுகுவார். நாம் அவரைக் கோவிந்தரென மதித்து நாடினால் அவரும் கோவிந்தராகவே நம் கண்ணுக்குத்தோன்றுவார். நாம் அவரை சிவன் என நினைத்துச் சென்றால் அவரும் சிவனாகவே தோன்றுவார். நாம் அவரை கணேசர் என்று கொண்டால் அவரும் கணேசராகவே நம்மை நாடுவார். மனுக்குலம் எவ்வித மனோசக்திகளுக்கு பிரதிபலிக்கத் தக்கதோ அவ்வித சக்திகட்கெல்லாம் உறைவிடமாய் விஷ்ணு அவதரிக்கின்றார் என்றுமட்டும் இதனால் விளங்குகிறது. அதுவும் மனுக்குலம் மானஸ சக்திகளை எவ்வகை விர்த்தி செய்யத் தக்கதோ என்றதால் அறியவேண்டி யிருக்கிறது. மனுக்குலம் வளரும் வகையானே தெய்வ ஆவிர்ப்பவமும் வளருகின்றது. ஆனால் உத்தம புருஷரான கடவுளுக்கு வளர்ச்சி கிடையாது. நாம் விர்த்தியாய்க் கொண்டிருப்பதனாலும், நாம் அவரைப்பற்றி அம்மட்டே யறிய வல்லவராயிருக்கிறோம் என்பதனாலும், அவர் அவ்வித வேறுபட்ட வகைகளாய் ஒன்றிலும் மற்றொன்று விர்த்தியானதாய் நமக்குத் தோன்றும் வண்ணம் அவதரிக்கின்றார்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் கற்பிப்பது என்னவென்றால்,

நாம் அவரை நாடவேண்டிய முறை அவரை உபாசித்தும், நேசித்தும், அவர் நாமோச்சாரணஞ் செய்தும், அவர் நாமபிரசங்கஞ்செய்தும், ஹரி நாமத்தினாலுமே தவிர, யோகவழியானும், புஷ்ப அர்ச்சனை வழியானும் ராமசந்திரரைப்போல் வில்லும் அம்பும் தாங்கியும் அன்று; ஆனால் ஹரி நாமத்தை மட்டும் உச்சரிப்பதனாலும் "ஹரிபோல்" "ஹரிபோல்" என்று அடிக்கடி கதறுதலினாலும் "ஹரிபோல்" சொல்லியே பைத்தியக்காரனாவதாலும், கிருஷ்ணனை யாங்கணும் தரிசிப்பதனாலுமே அவரை அடைய வேண்டும் என்பதே.

ஸ்ரீகிருஷ்ணனுடைய அவதாரமே ஸ்ரீகௌரங்கர் என்று உலகினர் கொள்ளவேண்டியதேன் என்ற என் விஷயத்தினைத் திரும்பவும் எடுத்துக் கவனிப்போம். அவர் உலகத்தாருக்கு ஹரிநாம மாஹாத்மியத்தினைப் பற்றிப் பிரசங்கித்தற்கு அவதரித்தாராகலின் அவரைப்பற்றிய வேற்றுமைக்கொள்கைகள் ஒற்றுமைப்படுகின்றன. ஸ்ரீகௌரங்கர் விஷயமாய் நதியாவில் என்ன நடந்ததென்று பார்ப்போம். அவர் ஏதாவது வேறு ஒரு காரியத்தினை நிறைவேற்ற வரவில்லை யென்பதே அவருடைய தெய்வத் தன்மையை விளக்குகின்றது. அவர் ஸ்ரீகிருஷ்ணரே; ஆனால் பிறிதொரு காரியம் செய்யவந்தாரில்லை. ஸ்ரீகிருஷ்ணர் சுமார் ஐயாயிரவருஷங்களுக்கு முன் பிருந்தாவனத்தே விளக்கிய ரகசியங்களையே விவரித்து விளக்க அவர் வந்தார். அவர் பிருந்தாவனத்திற் செய்த காரியம் பரம ரகசியமாதலால் அதனை யணுகி யறிய நாம் துணிவதசாத்தியம். ஆகையால் கௌரங்கர் தம் உதாரணமுகத்தாலும் கட்டளைவாயிலானும் அக்காரியத்தினை விளக்கவே வந்தார். கௌரங்கர் கற்பித்தது பிரேமை அல்லது அன்பு வழியாற்றான். ஹரிநாமோச்சாரணத்தாலன்றி மானஸ பூஜையாலன்றி மனதை ஒருவழிப்படுத்துதலாலன்றி இக்கலியுகத்தில் மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தினை யடைதல் முடியாது என்று வியாசதேவரே சொல்லியிருக்கின்றார். வேதங்களைத் திரட்டியவரும் உங்களால் வியாசர் என்றழைக்கப்படுகின்றவரும் ஆகிய கிருஷ்ணத்வைபாயனர் வேதங்களிலும் அழகான நூல்களான சாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்ட கடன்கள் சடங்குகள் சட்டதிட்டங்கள் எல்லாம் கலியுகத்தினுக்குப் பொருந்தாதென என்று சொல்லியிருக்கிறாரென்று உங்களுக்குத்தெரியுமல்லவா? அவர் அனேக அழகான நூற்களை எழுதி வைத்தாரேனும் தாம் மனச்சஞ்சலத்திற் படிந்தும் சுகமின்றி வருந்தியும் இருப்பதேன் என்று தாமே யறியவில்லை யென்கிறார். அவர் தெரிந்துகொள்ளாத விஷயம் ஏதோ ஒன்றிருக்க வேண்டும். அவ்வல்க விநோதங்களை யியற்றினாரேனும், எல்லாவித தவங்களும் யோகங்களும் பயின்றாரேனும் அவர் ஒரு விஷயத்தில் குறைபட்டிருந்தார். அதுவே அன்பு. நாரதர் ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனரிடம் வந்து, "நீரேன் இப்படி விசனப்படுகின்றீர்?" என்று கேட்கவும், அவர், "நானும் வருத்தப்படுகின்றேன்; என் ஆத்துமாவும் நிம்மதியின்றி யுழல்கின்றது. நான் இந்த விநோத நூற்களை யியற்றினேன்; இருந்தாலும், நான் மிக விசனப்படுகிறேன்" என்று சொல்லினர். அதற்கு நாரதர், "நீரெழுதிய வெல்லாம் தாழ்ந்தபடிக்கே பொருந்திய வானதாலும், வேதங்களில் விதித்த சட்டங்களாலும் சடங்குகளாலும் மட்டும் மோக்ஷம் அடைய முடியா தாதலாலும் அவை வாசிப்போர்க்கு இடர் விளைக்கத்தக்கதா யிருக்கின்றது. வெறும் சடங்குகள் அந்தக்கரண சுத்திக்கே அவசியமானது; அன்றி ஆத்துமலாபத்திற் குதவாது. நீர் ஸ்வாமியின் பிரதாப விசேஷங்களைப் பாட மறந்து விட்டீர். இதில்லாமல் எவருக்கும் மன நிம்மதியிராது" என்று பதில் கூறினார். நமக்கு எது மோக்ஷ பதவியா யிருக்கிறதோ அது இதைவிடப் பெரிய பதவியன்றோ?

அப்போது கிருஷ்ணத்வைபாயனர் அதையறிந்துப் பின் ஸ்ரீமத்பாகவதத்தை எழுதினார். எம்பிரான் கீர்த்திப் பிரதாபத்தினை விரிக்கும் நூல் அதுவே. அதுவே ஹிந்து சாஸ்திரங்களின் மகுடத்தில் வைத்த வகுளமலர் (கரகோஷம்) புராணங்களுக்கே புஷ்பம் என்று சொல்லலாம். அது கலியுகத்தில் மோக்ஷமடையும் மார்க்கத்தினை கற்பிக்கின்றது. அது கலியுகத்தில் கிருஷ்ணனுடைய நாம சங்கீர்த்தனத்தால் அவனிடம் சேரும் வகையினை விளக்குகின்றது. அது ஸர்வ வல்லமையுள்ள கடவுளைப்பற்றி விவரிக்கின்றது. நாம் மனதை ஒருவழிப் படுத்துவதாலேயே அவனை அடையவேண்டும். அப்போதுதான் நாம் அவனிடம் உண்மையில் சேர்ந்தவ ராவோம். கலியுகத்தில் ஹரிநாம சங்கீர்த்தனத்தினால் மட்டும்தான் மோக்ஷமடையக் கூடுமென்பதற்கு என் புத்திக்கு ஒரு காரணந் தோன்றுகிறது. என்னவெனின், விஷ்ணு மச்சாவதாரஞ் செய்தபோது மனுக்குலம் அதனினும் மேதக்க உன்னதத்தை உணரக்கூடாததாயிருந்தது. இவ்விதமாய் கரடுமுரடாய் நெய்யப்பட்ட வஸ்திரம் போல் மனநுட்ப மறிந்திருக்கவில்லை. அதற்குப்பின் அவர் கூர்மாவதாரமெடுத்து வந்ததால் மனுக்குலம் கொஞ்சம் நுட்பவுணர்ச்சியும் உன்னதத்தினையும் அடைந்ததென உணரலாம். மனுக்குலம் உயர உயர வளர்வதினால் மனிதரின் மானஸ ஆத்தும தேக உணர்ச்சிகளும் சிறிது சிறிதே நுட்பமாகின்றன. நான் சொல்வது உமக்கு விளங்குகின்றதென நம்புகிறேன். அவதாரத்தின் உயர்ச்சியால் மனுக்குலத்தின் உயர்ச்சியினை அறியலாம். அவர் வரவர மேலான படியில் அவதரித்தலால் மனிதரின் மனசும் அந்தப்படியில் இயங்குகின்ற சக்தி

யடைந்தது என்று அறியலாம். நாம் உயரஉயரவரும்போது விஷ்ணுவின் அவதாரம் உயர்ந்த ஸ்திதியையே காண்கிறோம். ஆத்தும உணர்ச்சியும் மானஸ உணர்ச்சியும் தேக உணர்ச்சியும் அவ்வவற்றின் அபிவிர்த்திக்குத் தக்கவாறு பிரயோகப்படுவன. இக்காலத்தோ மனுக்குலத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேகத்துவமும் அதிவிசேஷமாய் அபிவிர்த்தியாகி யிருக்கிறது. நாம் மேலான ஸ்பரிச உணர்ச்சியையும் தேகமானஸ ஆத்தும உன்னத உணர்ச்சிகளையும் அடைந்திருக்கிறோம். நாம் ஹரி என்று சொல்வதாலும் கிருஷ்ணனுடைய பிரதாபத்தினைப் பாடுவதாலும் ஒருவித உன்னத நிலையினை யடைந்து அதனால் கிருஷ்ணனுடன் நேராய்க் கலத்தல் ஏற்படுகின்றது. ஆகையாற்றான் கலியுகத்தில் மனிதன் ஹரிநாமத்தினைச் சொல்லும்போதே தான் அடையக்கோரும் நிலையினை அடையலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

எவ்வளவு ஆத்துமவிஷயத்தில் அபிவிர்த்தியடைந்திருந்தபோதினும், சாதாரண காரணங்களுக்கும் ஆத்தும உணர்ச்சிக்கும் சாதாரண புத்தியனுபவத்திற்கும் முரண்படுகிறதாலேயே ஒரு மனிதன் ஒரு பசுவைக்கொல்லக் கூடாது. அது தாழ்ந்த படிக்குச் சேர்ந்தது; குருக்களால் கற்பிக்கப்படாதது. ஆனால் ஒரு மனிதன் விர்த்தியடைந்த பிறகு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஒரு ஜெந்துவி னுயிரையும் வாங்க மாட்டான். மற்றவரைக் கொல்வதால் உம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று எவரும் சொல்லமாட்டார்கள். மேல் நோக்குகிறதாகிய ஒரு விஷயமே நம்மைக் காப்பாற்றத் தகுந்ததே தவிர கீழ்நோக்குவதல்ல. முன் யுகங்களைக் காட்டிலும் இக்கலியுகத்தில் நாம் அவனுடைய நாமத்தினைச் சொல்வதால் மட்டுமே சுலபமாய் விர்த்தியாக முடியுமாதலால் "கலியுகமே பெரிது, சூத்திரரும் ஸ்திரீகளுமே சுகபுருஷாள்" என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். ஏனெனில் கடவுள் மேல் பிரேமையாய்ப் பாடுவதாலேயே நாம் அவரிடம் கலத்தற்கு இடமாகிறது. தாம் ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமியாக அவதரிக்கவில்லை யென்றும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு பக்தராகவே வந்தார் என்றும் தம் வாழ்க்கையாலும் தம் செயல்களாலும் நிரூபித்தற்கே ஸ்ரீகௌரங்கர் தோன்றினார். ராதாவும் கோவிந்தரும் ஒன்றாய்க் கலந்தமையை விளக்குவதற்காகவே அவர் அவதரித்தார். அவர் தாம் ராதாவே என்று சொன்னார். அவர் தம் ஆயுள்நாள் முழுவதும் பிரேமையாலும் கடவுளுடைய பிரதாபத்தைப் பாடுவதாலும் அவருடைய நாமோச்சாரணத்தாலும் அவரை யடைதல் எப்படி என்றே நமக்கு கற்பிக்கின்றார். இக்கற்பனையை நாம் கௌரங்கஸ்வாமி சரித்திரத்தின் முற்றிலும் காண்கிறோம். அவர் சிலவேளை ராதிகைப்போல் துக்கப்படுகிறார்; சிலவேளை தம் காதலனைத்தேடுவார்; அக் காதலனை யடையப் பிரார்த்தித்துக் கொண்டும் கண்ணீர் பெருக விட்டுக்கொண்டு மிருப்பார்; சில சமயம் அவர் கிருஷ்ணநாமம் தவிர வேறு ஒன்றும் பேசுவதில்லை; மற்றோர் சமயம் "ஹரி ஹரி என்று சொல்லுங்கள்; கிருஷ்ணன் பேரைச் சொல்லுங்கள்; கிருஷ்ணனைப்பணிந்து அவனைக் கீர்த்தனத்தால் பாடித் துதியுங்கள்; ஹரிபோல்ஹரிபோல்என்று சொல்லுங்கள்" எனச் சொல்வார். பகவான் கௌரங்கஸ்வாமியாக இவைகளைக் கற்பிக்கிறதற்கே அவதரித்தார். ஆகையால் அவர் அவதாரபுருஷர் அன்று என்றும், பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஐயாயிரவருஷங்களுக்கு முன்னர் கற்பித்தவைகளையே விளக்க வந்தார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் குருக்ஷேத்திர யுத்தபூமியிற்றோன்றிய ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றியும் துவாரகையில் கிரகஸ்தனாய்த் தோன்றிய ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றியும் அவர் ஒன்றும் சொல்லவேயில்லை. ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையில் கிரகஸ்தனாயிருந்து இல்வாழ்க்கையிலிருந்துகொண்டே ஒருவன் கிருஷ்ணனையடையும் விதத்தினைக் கற்பிக்கின்றார். ஆனால் ஸ்ரீகௌரங்கரோ இல்வாழ்க்கையிலிருந்து ஓடிப்போய் லோகப்பற்றுக்களை யொழித்து சன்னியாசி யாச்சிரம தர்மத்தினை மேற்கொண்டு ஒழுகுபவராகவே தோன்றுகிறார்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய அவதார காரியமே ஸ்ரீகௌரங்க ஸ்வாமிகளுடைய அவதார காரியமும்; இவ்விரண்டும் ஒன்றுதான்; ஏனெனில் ஸ்ரீகௌரங்கர் சங்கீத வாத்தியங்களுடன் பாடக் கற்றுக் கொடுத்த வண்ணம் பகவானுடைய நாமத்தினைப் பாடுவதாலும் உச்சரிப்பதாலும் பன்முறையோதுவதாலும் மட்டுமே இக்கலியுகத்தில் மோக்ஷ சாம்பிராஜ்யத்தினை யடையக் கற்பிக்கின்ற ஒரே அவதாரம் அதுதான். அதுவே ஸ்ரீகௌரங்கரின் மிகப்பெரிய கீர்த்திவாய்ந்த கற்பனைகளில் ஒன்றாகும். பிறகு அவர் அத்யந்த அன்பினால் ஆனந்த நர்த்தனஞ் செய்யும் விதத்தினையும் அவர் கற்பித்தார். ஏனெனில் ஹரி ஹரி ராதா கோவிந்தா என்று பாடும்போது மனது ஒருவழிப்பட்ட நிலையும் மானஸபூஜை செய்யும் நிலையும் அடைகிறோம்; மனது ஒரு வழிப்படுகையில் நம் முன்னைத் தியற்கை வெளிப்படுகின்றது. அவர் ஹரிபோல் ஹரிபோல் என்று மனதினுள்ளிடத்திருந்து சொல்வதைக் காண்கிறோம். அவர் எவ் விஷயத்தினும் ராதா கோவிந்தா என்று சொல்வதைக் காண்கிறோம். எந்த விஷயத்தில் நாம் மனதை ஒரு வழிப் படுத்துகின்றோமோ நாம் அதுவே ஆகின்றோம். நாம் ராதா கோவிந்தனைச் சிந்திக்கும்போது அப்படியே மாறிவிடுகிறோம். எதை நினைக்கின்றானோ மனிதன் அதுவே ஆகின்றான் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. நாம் எவ்வஸ்துவில் மனதை ஒரு வழிபடுத்துகின்றோமோ

அல்லது மானஸபூஜை செய்கின்றோமோ நாம் அவ் வஸ்துவே யாய்விடுகின்றோம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்; அல்லாவிடின் தெரிந்திருக்க வேண்டும். நாம் பகவான் பிரதாபங்களைப் பாடுகையில் நம் மனம் அப்பிரதாபத்தில் லயப்பட்டு அதனால் சமாதி என்று சொல்லும்படியான நிலையடைகிறோம். பகவான் பிரதாபங்களைப் பற்றிய சங்கீர்த்தனங்கள் மனக் குதூகலந் தோன்றி மனிதனை யெழுப்பி நர்த்தனஞ் செய்ய வாரம்பிக்கச் செய்கின்றது. நாம் பிறகு அக் கடவுளிடமே முற்றும் கலந்து விடுகிறோம். ஸ்ரீகௌரங்கர் நமக்குக் கற்பித்தது அதுதான். நர்த்தனஞ் செய்வதில் உள்ள மகிமையாற்றான் ஸ்ரீகௌரங்கர் சுமார் இருபது வருஷ காலம் சன்னியாசியாய் நேசம் மிக்க பகவானுடைய நாமத்தினைப் பாடியாடிக் கழித்தார். கீர்த்தன சங்கீதத்தின் தெய்வ அதிர்ச்சியே அவரதுடலை முற்றும் அசைவித்து அக் கிளர்ச்சி வசத்தே அவர் மறைந்து செல்லவாயிற்று. நம்மைக் கலியுகத்தில் காப்பாற்றத் தக்கது எம்பிரானுடைய பிரதாபங்களைப் பாடியாடுதலே யாதலால் அவருடைய நாமத்தினைப் பாடுங்கள்; திரும்பவும் போற்றுங்கள்; ஓயாது திரும்பவும் திரும்பவும் அதனையே உச்சரியுங்கள்; எக்காலும் அதனை யுச்சரிப்பதை நிறுத்தாதேயுங்கள். அப்போது நீர் நினைக்கு மொவ்வொன்றும் பார்க்கும் ஒவ்வொன்றும் ஸ்ரீகிருஷ்ணனாகவே தோன்றும். இதுதான் மோக்ஷம்: ஹரிநாம சங்கீர்த்தனமும், ஹரிபோல் கோஷமும், பக்திக் குதூகலத் தமர்ந்து நர்த்தனஞ் செய்தலுந்தான். (கரகோஷ ஆரவாரம்).

சென்னை "மெயில் பத்திரிகை," ஆகஸ்டு 27, 1902.

பத்திராசிரியர் குறிப்பு - மொழிபெயர்ப்பு.

சைதன்ய மதம் அதாவது சைதன்யரால் கற்பிக்கப்பட்ட வைணவ மதத்தைப்பற்றி விசேஷமாய் பிரசங்கித்து இங்கு உழைத்துவரும் அமெரிக்கா கண்டத்து மாதுசிரோன்மணி தாம் போகுமிடம் யாங்கணும் ஜனத்திரள்களை தம் வசப்படுத்துகின்றார் என்று கல்கத்தா வங்காள நிருபநேயர் ஒருவர் எழுதுகின்றார். அவர் முற்றும் சைதன்யமதத்தினரே ஆகி எப்போதும் அம்மதமே எல்லாமதங்களைவிட நன்மையானதும் மேலானதும் விவேகத்தோ டிசைந்ததுமாய் இருக்கிறதென்ற தம் கொள்கையை பலப்படுத்திக் கூறுகின்றார். மதத்தினுக்கே தம் ஆயுளைச்சமர்ப்பித்த வைஷ்ணவ ஸ்திரீ உடையை அவர் தரிக்கின்றார். சங்கீர்த்தனங்கள் அதாவது மத விஷயமான சங்கீத கோஷ்டிகளில் அவர் சிலவேளைகளில் கலந்து காலக்ஷேபஞ் செய்கின்றார்; அச்சமயம் பாடகர்கள் தாராளமாய் ஊற்றங்கொண்டாழுகும் நர்த்தனத்திலும் அவர் பிரவர்த்திக்கின்றார். ஸ்வாமி அபயானந்தர் என்று பெயர் வைத்துக்கொண்ட அவர் விநோதத்தையும் ஆச்சர்யத்தையும் விளக்கின்றார். ஆங்கிலேயபாஷையில் அவர் சைதன்ய ஸ்வாமி மத தத்துவத்தினைப் பிரசங்கிக்கும் வல்லமையே மற்ற ஹிந்து சமய பேதங்களைச்சேர்ந்த ஆங்கிலம் பயின்ற வங்காளச்சிறுவரி னின்றும் அந்த புதிய வைஷ்ணவ சமயகோஷ்டிக்கு அனேகரைக் கொணர்ந்து சேர்க்கும் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ

ஸ்ரீக்ருஷ்ணசைதன்யஸ்வாமிகள் சரித்திரம்.

முதலாவது அத்தியாயம்.

ஸ்வாமிகளினிளம்பருவம்.

அத்திமரத்திலே தொத்தியகனிபோலே சகலாண்டசராசரங்களும் யாரிடம் இடையறுதிருக்கின்றனவோ, எவனைப்பற்றி ஆணென்றும் பெண்ணென்றும் அலியென்றும், ரூபியென்றும் அரூபியென்றும், குணியென்றும் நிர்க்குண வஸ்துவென்றும், வரையறுத்துச் சொல்லமுடியாது "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்னுமேதக்க "ரகசியம்" அமைந்திருக்கின்றதோ அத்தகையபரம்பொருளின் காரியமாயுண்டான பிரபஞ்சத்தில் தற்காலம் கண்டுபிடித்திருக்கிற ஐந்துகண்டங்களிலும் மிகப்பெரியதாகிய ஆசியா (Asia) கண்டத்தில் நாம் வசிப்பதும் "பரதகண்டம்" என்றுபெயர்பெற்றதும், ஹிமாசலம் கன்னியாகுமரி யிவைகளைத் தனது வடக்கு தெற்கு எல்லைகளாகவும், வங்காளக்குடாக்கடல், அரபிக்கடல் இவைகளைக் கிழக்குமேற்கு எல்லைகளாகவும் கொண்டதுவுமாகிய இந்தியாவின் ஈசானியபாகத்தில் பிரக்கியாதிபெற்ற வங்காளதேசமிருக்கின்றது. அத்தேசத்தில் தீர்த்தமகிமையிற் சிறந்த பகீரதியென்னும் ஸ்ரேஷ்டநதியினிருபக்கத்திலும் நிலைபெற்றிருக்கும் நவத்வீபம் (நாதியா-Nadia) என்னும் நகரமொன்றுளது. "கற்கைநன்றே, கற்கைநன்றே, பிச்சைபுகினுங் கற்கைநன்றே" என்பது உண்மையில்

அந்நகரத்தில் ப்ரத்தியக்ஷபூர்வமாய்க் காட்டப்பட்டிருந்தது. நாம் சொல்லப்போகிற கதை நடந்த சுமார் 400 வருடங்கட்கு முன்னர் அந்த தேசத்தில் மகம்மதிய ஆளுகை தலைதளிர்த்திருப்பினும், நம் ஸம்ஸ்க்ருத பாஷாபிவிர்த்திக்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிப்பதிலும், அவ்வகையான சாஸ்திரங்களைப் புதிது புதிதாயுண்டாக்குவதிலும் அத்தேசத்தில் வசித்துக்கொண்டிருந்த நம் ஹிந்துசகோதரர்களுக்குச் சிறிதும் ஊக்கங்குறைந்திருக்கவில்லை. கல்விகற்க விரும்புவோரும், வேறிடங்களிற்படித்து பண்டிதபட்டம் பெறவேண்டுவோரும், தினந்தினம் ஆயிரக்கணக்காய் நவத்வீபத்திற்குப் போய்க்கொண்டிருப்பார்கள். குழந்தை முதல் கிழவர்பரியந்தம் உள்ள ஒவ்வொருவர் வாக்கிலும் கல்வியைப்பற்றிய விஷயங்களே விளங்கிவந்தன. "வெண்மையில்லைபல்கேள்வி மேவலால்" என்று கம்பர் கூறியிருக்கிறவண்ணம், கல்வி யபிவிர்த்தியினால் அஞ்ஞானமாகிற அந்தகாரம் நீங்கியிருந்ததால், பணத்தைப் பிணமென மதித்து, கல்வியுடைத்தாயிருத்தலையே பெருந்திரவியமாக அவ்வூர்ச்சனங்கள் பாவித்துவந்தார்கள். எவ்வண்ணமென்றால்; தன் புத்திரன் வித்துவானாவதையே தாய் வேண்டும்; தன்பதி பண்டிதனென மதிக்கப்படுதலையே சதி வேண்டும்; நண்பர் கற்றோராயிருத்தலையே நண்பர் வேண்டுவர். இதல்லாமலும் கல்வியபிவிர்த்தியினால் அந்நகரத்திற்கமைந்த பெரும்பலன் வேறொன்றிருந்தது. "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்றும், "கற்றதனாலாயபயனென்கொல் வாலறிவனற்றொழாஅ ரெனின்" என்றும் திருவள்ளுவர் கூறியபடி, அவ்வூரிலுள்ள பண்டிதர்களனேகருக்கு சாஸ்த்ரஞானம் கைகூடியதால், இது நித்யம (அதாவது, என்றும் அழிவில்லாதிருப்பது), இது அநித்யம் (அதாவது, எப்படியாயினும் அழியக்கூடியது) என்று பகுத்தறிகிற ஞானமாகிய "நித்யாநித்யவஸ்துவிவேகம்" உண்டாகி, இகசுகங்களைத் திரணமாய் மதித்து, பரந்தாமனொருவனே யென்று முள்ளோனவன் என்றுணர்ந்து துறவறம் பூண்டு தவஞ்செய்துகொண்டு வந்தார்கள்.

இவ்வாறு மேன்மை யுண்டாயிருந்த அப்பட்டணத்தின் பெரும்பண்டிதராயிருந்த ஜகந்நாதமிஸ்ர ரென்பாருக்கும், அவர் மனைவியும் பண்டித நீலாம்பரசக்கரவர்த்தியின் அழகுத்திருக்குமரியுமாகிய சசிதேவியம்மாளுக்கும் உற்பவமா யிருந்[illegible] உடனே உயிர்துறந்த எட்டுபெண் குழந்தைகட்குப்பின் பிற[illegible] விஸ்

வருபனுக்குத் தம்பியாய், சகாப்தம் 1407-க்குச் சரியான, கிறிஸ்துபிறந்த 1486ஆ பங்குனிமாதம் பௌர்ணமியாகிற சுபதினத்தில் மாலை சூரியன் அஸ்தமித்து சந்திரன் தனது பதினாறு கலைகளாகிற கைகளைப்பரப்பி சுகமென்கிற அமிர்தத்தை வாரி யனைவருக்கும் கொடுக்க வருவதுபோல் உதயமாகிற மனோரம்மிய சந்தர்ப்பத்தில், சைதன்யஸ்வாமிகள் திரு அவதாரஞ்செய்தார். அப்பொழுதுதான் சந்திரக்ரஹணம் பிடித்திருந்து மோக்ஷகாலமாயிருந்ததால், அது அனைவராலும் ஸர்வ பரிஸுத்தகாலமாய் மதிக்கப்பட்டு, வங்காள பாஷையில், ஹரியென்று கோஷஞ்செய்யுங்கள் என்று பொருள்படுவதான "ஹரிபோல்" என்கிற சப்தம் அந்நகரமுழுவதும் பரவினது. அவ்வோசையானது ஹரி அவதாரஞ்செய்தார் என்கிற உண்மைப் பொருளைக் குறிப்பாற் காட்டியது போலிருந்தது. மேலும் வங்காள தேசத்தில் பங்குனி மாதந்தான் மிக மனோகரமாதமாக அனுபவிக்கப்படும். அம்மாதத்தில் பௌர்ணமி நாளை யெவ்வளவு ரம்மியமாய் மதிக்கக்கூடும்! மனோரம்மியத்துடனும், கிரஹணமோக்ஷமாகிற பரிசுத்தம் கலந்திருந்தது தேனோடு பால் கலந்ததையொத்திருந்தது. இவ்வளவு அமைதியும் எம்பெருமானவதார காலத்திற்கேற்றதா யிருந்தது. இவ்வித சுபசுந்தர வேளையில் ஒரு "நிம்ப" மாத்தடியி லதற்கென்றமைத்த ஒரு குடிசையில் ஸ்ரீ சைதன்யஸ்வாமிகள் அவதாரஞ்செய்தார். அவதாரஞ்செய்த சிறிது நாழிகைவரைக்கும் அழுகை முதலிய குறிகளில்லாதிருந்ததால் தாய்தகப்பன் முதலானோர் மிகவும் மனச்சஞ்சலமடைந்து பரிதபித்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்சகாலம்பொறுத்து குழந்தைக்குண்டாகிய அழுகை முதலிய இயக்கங்களுண்டாகி எல்லோர் மனமாகிற தாமரைகளை மலரச்செய்தது. அக்குழந்தை "நிமை" யென்று தாயாராலும், "விஸ்வம்பர" ரென்று தகப்பனாராலும் "கௌராங்கர்" என்று உபநயன காலத்திலும் பெயரிடப்பட்டது. ஸ்வாமியின் பக்த கோஷ்டியாரால் ஸ்ரீ கௌராங்க ஸ்வாமியென்றே சொல்லப்பட்டு வந்தார். கௌராங்கரென்றால் வெண்பொன்னிறமுடைய தேகமுடையவரென்று பொருள். கடைசியாக இவருக்கு ஸ்ரீகிருஷ்ண சைதன்யரென்கிற பெயர் வழங்கி வந்தது. 'ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர்' என்பதற்கு 'மானிடர் மனதில் ஸ்ரீக்ருஷ்ணன்மீது பக்தியை யெழுப்புபவர்' என்று பொருள்.

இவர் 12 - மாதமுழுவதும் தாயார் கெர்ப்பத்திலிருந்து பதின்மூன்றும்மாதம் பிறந்ததால் மிகவும் ஸ்தூலித்திருந்தார். இவருடைய தேககாந்தி தங்கநிறத்தை யொத்திருந்தது. தாய் தந்தையரைவிட சுந்தரமுகமும், தங்கவடிவமும் கருணாநயன விலாசமும் பெற்றிருந்ததால் இவரைக்கண்டு மகிழாதவரொருவருமில்லை. இதல்லாமலும், அக்குழந்தையின் தாய்தந்தையர்க்கு எட்டு குழந்தைகள் பிறந்து அவைகளிறந்துபோய் பின்னர் பிறந்த விஸ்வரூபனுக்குப் பத்துவருஷம் இளைய ஒரு குழந்தையாய் கௌராங்கஸ்வாமி யவதரித்ததால், அதை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்ததோடு அக்குழந்தை தகாத நடத்தைகளைச் செய்தகாலத்திலும் அதைக் கண்டிக்கவாவது தண்டிக்கவாவது மனம்வராதவர்களாய் நடந்து வந்ததால், அக்குழந்தை தான் போன போக்காய்ப் போகவும் தடுத்துச்சொன்னால் எடுப்பது பிடிவாதமாயும் முரட்டுத்தனஞ் செய்ய நேரிட்டது. அது அழ வாரம்பித்தால், ஓய்கைப்படும்படி செய்வது துர்லபமாயிருந்தது; சிலகாலங்களில் ஓயாத அழுகையால் ஸ்மரணைகெடுவதும் களையடைவதுமாயிருந்தது. இவைகளெல்லா மிப்படியிருந்தாலும், எதற்கும் படியாத குழந்தைக்கு

நல்ல மருந்திம் மருந்து—சுக
நல்கும் நாரண நாம மருந்து

என்னலாம்படி, "ஹரி" யென்கிற நாமதேயமே யோர் மருந்தாய் விளங்கிற்று. எப்படியென்றால், இக்குழந்தை எதற்குமடங்காமல் ஓயாதழுதுகொண்டிருக்கும்போது "ஹரி" யென்கிற மந்திரத்தைச் சொன்னால் அனைவரும் ஆச்சரியப் படும்படி அந்த க்ஷணமே அழுகை நின்றுவிடும்.

இந்த தேவக்குழந்தை தவழக் கற்றவுடனே அதை அதிக சாக்கிரதையோடு பார்த்துக்கொண்டிருப்பது அவசியமாயிற்று. ஏனென்றால் யாருமில்லாத காலத்தில் தவழ்ந்துகொண்டே பகீரதி நதிக்கரைக்கு அக்குழந்தை ஓடிப்போகிறதுண்டு. அக்காலங்களில் யாராவது பின்வருவதாய் அதற்குப் புலப்பட்டால், தான் பிடிபடக்கூடாதென்று கையாலும் காலாலும் தவழ்ந்துகொண்டே யதிகவேகமா யோடிச்செல்லும். இத்திருக்கோலம் மிக வுன்னதமாயிருந்ததால் சசிதேவியம்மாள் தன் சிநேகிதர்களெதிரில் இக்குழந்தையை முற்றத்தில் விடுத்து

"துடர்சங் கிலிகள் சலார்பிலா ரென்னத் தூங்குபொன் மணியொலிப்பப
படுமும் மதப்புனல் சோர வாரணம் பையநின் றூர்வதுபோல்
உடன்கூடிக் கிண்கிணி யாரவா ரிப்ப வுடைமணிப் பறைகறங்கத்
தடந்தா ளிணைகொண்டு சாரங்க பாணி தளர்நடை நடவானோ"

என்று மெய்ம்மறந்து ஆநந்தபரவசராய் நின்றுகொண்டிருப்பார்.

தளர்நடைப் பருவங்கழிந்து, நன்னடைப் பருவம் வந்தவாறே, அவர்களுக்குண்டாகிய மனக்கலக்கத்திற் களவில்லை. வீதியில் கூட்டம் கூட்டமாய்ப்போகும் "கும்பு"களோடு கலந்து செல்வதும் பாம்பு முதலிய விஷஜெந்துக்களைப் பயமின்றிப் பிடிப்பதும் ஆகிய நடத்தைகள் அவர்பால் அதிகரித்துவிட்டன. ஒருநாள் "மேகமல்லி" யென்னும் திருடனொருவன், குழந்தை விலை மிக்க ஆபரணங்களைப்பூண்டு நிற்பதைக்கண்டு, அதைக் கொன்றுவிட்டு நகையை அபகரித்துக்கொள்ளும் ஆவலோடு அதைத் தூக்கிச்சென்றான். ஆயினும் சிறிதுநேரத்திற்கெல்லாம் எம்பெருமானது திவ்யமங்களவிக்ரஹ ஸ்பரிசத்தால், மெய்ஞ்ஞானமடைந்து

"கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன் கண்டவா திரிதந்தே னேனும்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன் சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தே னுடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலுநா னழைப்பன் நாராயணா வென்னும் நாமம்"

என்று அவர் மிக்க ப்ரேமையோடு நல்லவழியில் நடக்கப் பிரயத்தனப்பட்டு திருக்குழந்தையை வீட்டிற்குச்செல்லவிடுத்து அன்றைத்தினமுதல் பரிசுத்தராய் நாளடைவில் விர்க்தியாகித் துறவறம் பூண்டு மஹான்களிலொருவரென்று மதிக்கப்பட்டுவந்தார்.

சைதன்யஸ்வாமிகள் மிக்க அழகுவாய்ந்தவராயிருந்ததால் அவரையெடுத்தவர்களுக்குக் கீழேவிட மனது வருவதில்லை; பகற்போதெல்லாம் வருவார் போவார்களெடுத்துக்கொண்டு வைத்திருப்பதிலும், வெளியில் விளையாடப்போவதிலுமாய்க் காலஞ்செல்ல இரவுவேளையில் சிறிதுநேரம் தாயார் வைத்துக்கொண்டிருப்பதால் அத்தம்மாளுக்கு அதிக சந்தோஷமுண்டாய்க்கொண்டிருந்தது.

சைதன்யஸ்வாமிகள் அவதரித்ததுமுதல் இயற்கைக்கு மீறிய சிலதோற்றங்கள் உண்டாய்க்கொண்டேயிருந்தன. ஒவ்

வொருசமயத்தில் ஏதோவொரு சிறிய சந்திரன்போல் மார்பில் பிரகாசிக்கிறதுண்டு; மற்றோர்சமயத்தில் மின்சார வெளிச்சம் போன்ற ஜோதி அக்குழந்தையுடம்பு முழுவதும் கவிழ்ந்துகொண்டிருப்பதாய்த் தோன்றும்; இன்னொருவேளை ஸ்வாமியை வளர்த்திவைத்திருக்கும் அறைமுழுவதும் பிரகாசமான உருவங்கள்நின்றுகொண்டிருப்பதைப்பார்த்து சசிதேவியம்மாள்பயந்து தன் கணவனைக் கூச்சலிட்டழைக்கிறதுண்டு. குழந்தை நடந்துகொண்டிருக்கும்பொழுது காலிற் சதங்கையில்லாவிடினும் அவ்விதசப்தமுண்டாவதைக்கேட்டுத் தாய்தந்தையர் ஆச்சரியப்படுவார்கள். கோபாலகிருஷ்ணன் இக்குழந்தைவடிவத்திற் பிரகாசிப்பதனால்தான் இவ்விதசப்தம் உண்டாகிறதென்று தகப்பனார் சொன்னபோதிலுந் தாயாருக்குமாத்திரம் இவரைப் பேய்பிசாசங்கள் சூழ்ந்திருக்கின்றனவோ, அதனாலென்னகெடுதிவிளையுமோவென்கிறபயம் சதாகுடிகொண்டிருந்தது.

அவர் சயனிக்கும் அறையில் இவ்வளவுவிநோதங்களுண்டானபோதிலும், மற்றபிள்ளைகளைப்போலவே விளையாட்டுகளிற்பிரீதியுடைத்தானவரா யிருந்ததுமன்றி, அளவுகடந்தும் போய்விட்டார்: தாய்தந்தையர் படிக்கச்சொன்னால் படிக்கிறதுகிடையாது; தெருவிலோடிப்போய்க் கண்டாரோடெல்லாம் ஆடிப்பாடி உடம்பெல்லாம் புழுதியாக்கிக்கொள்வதனால் அவர் தாயார்க்குண்டாகும் விசனம் இவ்வளவென்று கூறமுடியாது. அவரைப் பிடிக்கச் சென்றால் மிகவேகமாயோடிப்போவார். இவ்விதமா யவர் தன் தாயார்சொற்கேளாது கண்டவாறெல்லாம் அபரிமிதவிளையாட்டுகளைச்செய்து அவர்க்கு மனவருத்தம் வருவித்தபோதிலும், அம்மாதரசியின் கண்ணிற் சிறிது நீர்த்துளிவிழக்காணின் மனம் தாள்கில்லாராய் அந்தம்மாள்மேல்விழுந்து களிப்பூட்டி மனத்துன்பம் ஆறிவிடச்செய்வார்.

இவர் தன்னிளம்பிராயத்தில் நடனஞ்செய்வதில் மிகச்சிலாக்கியம்பெற்றிருந்தார். அண்டை அயலாராகிய ஸ்திரீபுமான்களெல்லாரு மிவர்க்கு இனிய தின்பண்டங்களைக்கொடுத்து உற்சாகமூட்டி நிருத்தஞ்செய்யத் தூண்டிவிடுவார். இவருடைய திருநடனத்தைக் கண்டபொழுது,

தேவருமறியார் மூவரு மறியார்
திருநடப்பெருமை யாவரே யறிவார்

பாவரு முனிவர் பண்ணிசை யறியார்
பலகலை பயின்றோர் நாவெழ வியலார்.
மாவரு மானிடர் மனநசை குறியார்
மலர்தலை யுலகோர் மற்றென்றின் முயலார் (தேவ)

என்று ஒவ்வொருவரும் ஆனந்தமடைந்து, 'இது மனிதராலாகும் காரியமன்று; தேவப்பெருந்தகைமையே' யென்று மெய்ம்மறந்து நிற்பார்கள். வயது வந்தோர்க்கு இத்திருக்கோலத்தால் தெய்வபக்தி மிகுந்து ஆடுவதற்கு அவாவுண்டானபோதிலும், நாகரிகமுற்ற நடக்கைக்கு விரோதமாயது தோன்றுவதால் மிக்க வருத்தத்தோடு தம் அபிலாஷையை யடக்கிக்கொண்டாலும், அத்தெய்வச்சிறுவரைச் சூழ்ந்துநின்ற மனிதச்சிறுவர்கள் தம் விருப்பத்தை யடக்கிக்கொள்ளும் வன்மையிலராய்,—

"ஆடியாடி யகங்கரைந்திசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கியெங்கும்
நாடிநாடி நரசிங்காவென்று
வாடிவாடு மிவ்வாணுதலே."

என்று பெரியார் பணித்தவண்ணம், தம்மை மறந்து ஆடிப் பரமானந்தக்கடலில் மூழ்குவார்கள். இப்படியிருக்கையில், ஒருநாள் மிக்க அபிநிவேசத்தோடு தன்னொத்த வயதுச்சிறுவர்களுடன் மலர்மாலைகளணிந்து "ஹரி! ஹரி!" யென்கிற மஹாகோஷத்துடன் அவர் சதானந்தநடனஞ் செய்துகொண்டிருந்தனர் சுற்றிலும் நின்றோர், மெய்ம்மறந்தார்; உளங்களித்தார்; பரவசமானார்; பக்திமிகுந்தார்; அவித்தை யிகந்தார்; ஒரு சிறிய பொன்னுருவம் குற்றமற்ற சுந்தர கோலாகலத்துடன் சுற்றிவருவதையொழிய வேறொன்றும் கண்டிலார். இவ்விதசந்தர்ப்பத்தில், தன்னாலடக்க முடியாத ப்ரேமையோடு வயது முதிர்ந்தா ரொருவரும் இவ்வாடற் றிருக்கூட்டத்தாரோ டொருமித்து "ஹரி! ஹரி!" என்று பெருங்கூச்சலிட் டாடத்தொடங்கினார். இது அனைவருடைய ஆச்சரியத்தையும் பெருக்கிற்று. உடனே சசிதேவியம்மாளோடிவந்து தன் குழந்தையுடம்பைத் துடைத்துத் தூக்கிக்கொண்டு போய்விட்டார். தக்ஷணமே யனைவருடைய நிருத்தமு மோய்ந்தது; தன்னை மறந்தாடின விருத்தாப்பியர்க்குப் பிரஜ்ஞைவந்து "நாம் என்னசெய்தோம்!" என்று வெட்கிப்போனார்.

இவ்வித விஷயங்கள் கண்ணெதிரில் நடந்துகொண்டுவரவும், சசிதேவியம்மாளுக்குத் தன் புதல்வர்மீதுள்ள அதிக ஆசையால்

அவர்மீது சிறிதும் குற்றஞ்சாட்டாது இவையெல்லாம் அண்டை அயலார் பிள்ளைகளால் விளைவன வென்று எண்ணங்கொண்டார். ஆயினுந் தன்பிள்ளையை யொருவாறு கேட்டால் தெரியுமென்று, "என் அருமை 'நிமை'யே, நீ யிவ்வாறு செய்வது தகுமா? உன்னைப்பார்த்தால் பயித்தியம் பிடித்தவனென்று சொல்லார்களா!" என்று கேட்டபோது, " நான் பயித்தியம் பிடித்தவனல்லன்; என்னைத்தவிர மற்றையோரெல்லாரும் வெறிபிடித்தவர்" என்று கூறினார். நாலுவயது குழந்தை யிவ்வாறு கூறியதால் அத்தம்மாளுக்கு அதிக ஆச்சரியமுண்டாய் தன்கணவனையழைத்து நடந்ததைச் சொன்னார். சைதன்யஸ்வாமிகள் தகப்பனாகிய ஜகந்நாத மிஸ்ரருக்கு,—தன் பிள்ளைக்கு ஐந்து வயது நெருங்கினும், மற்ற பிள்ளைகளைப்போலே பள்ளிக்குச்சென்று படிக்கிறதில்லையென்கிற மனோவியாகூலமுண்டாகி ஒவ்வொருசமயத்தில் பிள்ளையைக் கோபித்துக்கொண்டபோதிலும், தன்னுடையமனதில் இடைவிடாது குடிகொண்டிருந்த புத்திரவாத்ஸல்யத்தால் அழகுக்குமரனை யழைமுட்ட எண்ணமில்லாராய் தாராளமாய் விட்டுவிட்டார். வழக்கப்பிரகாரமே சைதன்யருடைய பிடிவாதமும் மேலிட்டுக்கொண்டேவந்தது.

ஸ்ரீசைதன்யஸ்வாமிகளுடைய இந்த இளம்பிராயத்திலேயே, அவருக்கும் அவருடையதாயாருக்கும் மனவருத்தம் நேரிட்டுக்கொண்டிருந்தது. கழித்துவிட்டமட்கலங்கள் அவர்கள் சாதியாசாரமுறைமைப்படி அசுத்தமானவைகளென்று ஒருபுறம்வைக்கப்பட்டிருக்க, அவைகள்மீதுபோய் இவ்விளையபிரான் ஆரோகணித்தார். அதைக்கண்ட தாயார் "அப்பனே! நீயிவ்வாறுசெய்வது சரியல்ல; அசுத்தவஸ்துக்களை நீ தீண்டலாமா? நீ பரிசுத்த பிராமணகுலத்தவனாயிற்றே!" என்றுகேட்டதற்கு "அகத்தில் சுத்தமில்லாது வெளியில் சுத்தஞ்செய்கிறதென்கிற எண்ணம் பெரும்பிசகு" என்று ஸ்வாமிகள் பதில்கூறினார். மற்றோர்சமயம் தாயார் இனியதின்பண்டங்களை யருந்தக்கொடுக்கப் பெருமான் மண்ணைத்தின்றார். "ஐயகோ! இப்பேரிழவிருந்தபடியென்னே? நான் தின்பண்டங்களைக்கொடுத்தால், மண்ணைத்தின்பதேன்? ஏதேது ஈதென்னவோ? பயித்தியமோ அன்றிப்பேய்பிசாசம் பில்லிசூனியம் முதலியவையின் காரியங்களோ? தெரியவில்லையே!" யென்று தாயார்பரிதபிப்பதைக்கண்ட ஸ்வாமிகள் "என் அம்மா! நீ பரிதபிக்கவேண்டும்! நீகொடுத்ததின்பண்டங்களும், மண்ணின் ஒருவித சேர்க்கையாலுண்டாகும் மாறுபாடுதானே? அவ்வாறாக, மண்ணைத்தின்றாலென்ன, நீகொடுத்தபண்டங்களைத்தின்றாலென்ன,—எல்லாம் ஒன்றுதானே?" என்றார். இதைக்கேட்ட தாயார் "என் அருமைக்குழந்தாய்! அப்படியன்று; எல்லாம் பஞ்சபூதச்சேர்க்கைவேறுபாடுகளால் உண்டானவையாயினும், ஒவ்வொருவிதசேர்க்கை ஒவ்வொருகாரியத்திற்குபயோகமாகிறது—ஒருவித சேர்க்கை அதற்கியையாத ஒருகாரியத்திற்குபயோகப்படாதுபோம். எவ்வண்ணமென்றால், மண்ணையே குடமாகச்செய்தபோது சலம்வைக்க உபயோகப்படும்; அவ்வாறன்றி செங்கல்லாய்ச்சுட்டபோது சுவர்வைக்க உதவும்,—ஆக மண்ணே யிரண்டுக்கும் காரணமாதலால், குடத்தால் சுவர்வைக்கவேண்டுமென்றால் முடியுமா? அதேபிரகாரம், தின்பண்டங்கட்குதவுவதென்றும், உதவாததென்றும் தன்னடைவே வித்தியாசங்கள்நேரிட்டிருக்க, நீயதையோராது நடப்பது தகுமா?" என்று விவரித்துக்கூறவே, ஸ்வாமிகள் இவ்விஷயத்தில் மாத்திரம் சரிதானென்றொப்புக்கொண்டார். ஆயினும் அவர் பழையபிரகாரம் அசுத்தவஸ்துக்களைத்தீண்டல், அசுத்தமனிதர்களைத்தீண்டல் முதலியவைகளினின்று விலகவில்லை. இச்சந்தர்ப்பங்களில் தாயார் கோபித்துக்கொண்டு அடிக்கலாமென்று பிரம்பு முதலியவைகளை யெடுத்துக்கொண்டுவந்தால், ஸ்வாமிகள் ஓடிவந்து ஒதுக்கிவைத்த அசுத்த பழையமட்கலங்களாகிய கோட்டையிற் புகுந்துகொள்வார். ஒருநாள் ஒருநாய்க்குட்டியையெடுத்துக்கொண்டுவந்து வீட்டில்வைப்பார்; மற்றோர்நாள் பறையனைத்தீண்டுவார். "இப்படி 'அடாது செய்தால்படாதுபடுவாய்'" என்று தாயார்பயமுறுத்தின், "சுத்தம் என்பதும் அசுத்தம் என்பதும் வெளிவேஷத்தினால் உண்மையாய்விளங்குவனவல்ல" என்று ஸ்வாமிகள் கூறுவர். இவ்வகை யொருவர்க்கொருவர் கலகம் பலவிளைக்கினும், அவ்வுருவிற்சிறிய அறிவிற்பெரிய வள்ளலார் தன்னருமைத்திருத்தாயார் முகம்வாடாது அவ்வக்கணமே பாராட்டிவந்த உரிமையாகுமருமையென்னும் ஊற்றுநீர்க்கேணியால், அம்மாதாசியின் மனதின் கவலையென்கிற பாலைவனம் சிறிது குளிர்ந்திருந்தது.

இவ்வண்ணம் சின்னாட்கழிந்து அவருக்கு 5-வயது நிறைவதற்கு முன்னமே யோர்நாள் யாதொரு காரணமுமின்றி அழவாரம்பித்தார். அற்றைநாள், அவரிட்ட அழுகுரல்போல், அவர்தாய்

தந்தையரென்றுங் கேட்டிலர். "ஐயகோ! இஃதென்னை யின்றென்றுமில்லாத வழுகை! இன்று அதிகமாய் அழுவதால் வழக்கம்போல் கணைவந்து விடுமோ வென்னவோ" என்று தாய்தந்தையர் கதறிக் கலக்கமுற்று "அப்பனே! நீ யிவ்வாறு அசாத்திய பிடிவாதம் பூண்டு அழுவதற்குக் காரணம் யாது? ஒருநாள்போலிவ்வகை யெம்மனதை யிடர்ப்படுத்தி வருவது தருமந்தானோ? இதுதகுமோ? இதுமுறையோ? யாமென்செயற்பாலோம்? நினக்கு வேண்டுவ திஃதெனக்கூறினும், அதைப்பற்றி முயலன்மாட்டோம்; கூறுக" என்று பன்முறை கேட்டபின்னர், எம்மான் சிறிது முறுவல் பூத்து "பெற்றோரே! நம்மடுத்த வீட்டில் வசிப்போராகிய ஜகதீஸ்வரரென்பாரும் ஹிரண்யரென்பாரும் இன்று ஏகாதசித்தினமாதலால், கண்ணனுக்குத் திருத்தளிகை "முடநெய்பெய்துமுழங்கைவழிவார" அமிசைசெய்விக்கப்போகிறார்களாதலின் அத்தளிகை முழுவதும் எனக்குக்கொடுவந்து கொடுப்பின் அஃதே போதும்" என்று கூறி மறுபடியும் அழவாரம்பித்தார். இப்புண்ணியசரித்திரத்தைப் படிக்கும் புண்ணியசாலிகளே யோசியுங்கள்! இது முடிகிற காரியமா? இதைக் கேட்ட தாய்தந்தையர்க்குண்டான கலக்கத்திற்களவில்லை. ஒரு சிறிய குழந்தை இவ்வகை தேவபக்தி குன்றிய காரியத்தை யியற்றித்தரவேண்டுமென்கிற காரணத்தை முன்னிட்டு ஜகதீசரையும் ஹிரண்யரையும் போய்க்கேட்பின் நகையார்களோ? "நன்று! நன்று!! சாலவு நன்று!!! இளமதி யவ்வாறு கூறினும் நும்முதுமதி யாங்ஙனஞ்சென்றது? உலகமுண்ட பெருவாயனுக்கு யாம் உவந்து கொடுக்குமமுதை யெங்ஙனங் கேட்டீர்" என்றிகழாரா? கூறிப்பழியாரா? பொங்கிய கோபத்துடன் செங்கண் விழியாரா? இப்பேதையர் ஒழியாராவென் றெளிதின் மொழியாரா!" என்றேக்கமுற்று, அவ்வாறன்றித்தமதிளங்குமாரரையெவ்வாறடக்கமுடியும்; "தான் பிடித்த முயலுக்குமூன்றேகால்" என்பதவரியற்கையாயிற்றே! என்று பெரிதும்மனங்கலங்கி, ஒன்றுஞ்செய்யத்தோன்றாதவராய்,

"மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியே னறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோ ரிடத்தே
இருந்தறியே னறிந்தோரை யேத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்ற மெய்தவறி வேனோ

இருந்ததிசை சொலவறியே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே"

என்று புலம்பி யழுதுகொண்டிருக்குந் தருணத்தில், அண்டைவீட்டுக்காரராகிய அவ்விரண்டுவேதியரும் ஓடிவந்துசங்கதியெல்லாமறிந்து, கண்ணபிரானே இத்திருவுருவத்தின் சுந்தரமேன்மையைக்கண்டு வியந்து சைதன்யருடம்பிற் பிரவேசித்திருக்கக்கூடுமென்று நினைந்து, தாம் தளிகைசெய்து வைத்திருந்த சித்திரான்னங்களையெல்லாங் கொடுவந்து ஸ்வாமிகளெதிரில் வைத்து

"உண்ணுஞ்சோறும்பருகுநீர்த்தின்னும்வெற்றிலையுமெல்லாங்
கண்ணனெம்பெருமானென்றென்றேகண்கணீர்கள் மல்கி"

"அப்பனே! நீயமுதுசெய்தருள்க. உன்மூலமாய் கண்ணனே யமுதுசெய்தருள்வன்" என்றுகூறி மெய்சிலிர்க்க வெதிரில் நின்றனர். உடனே சைதன்யஸ்வாமிகளும் திருமுகமலர்ந்து அச்சித்திரான்னங்களைச் சிறிதுண்டு, மற்றையோர்க்கெல்லாம் விநியோகஞ்செய்து, மிகுதியாயிருந்ததை இறைத்துவிட்டுப்போயினர்.

இவ்வண்ணம் நிகழ்ந்தவைகளையெல்லாம் பார்த்திருந்த சசிதேவியம்மாளுக்குண்டான மனச்சஞ்சலம் கூறமுடியாது. நம் மருமைக்குழந்தைக்குப் பைத்தியம் பிடித்ததோ அன்றியதைப் பேய்பிடித்திருக்கிறதோ, என்னவோ வென்று விநாடிப்போது தோறும் "நாடி"யற்றவளாய், இவ்விஷயத்தைப் பதறிக் கதறி அண்டை அயலாரோடு சொல்லிப் பரிகாரந்தேடுவது சரியென்று தோன்றாதவளாய், தன் தங்கையை வரவழைத்து இவைகளையெல்லாம் குறைகூறி அவள் சொல்லும் ஆலோசனைக்கெதிர்பார்த்திருந்தனள். அந்தம்மாள் சிறிதுபோது யோசித்து, "நம் மண்டை யயலிலிருக்கும் வயதுமுதிர்ந்த பெருமாட்டிகளோடு பேசித்தான் ஒரு முடிவுக்குவரவேண்டும்" என்று சொற்றனள். அவள் ஆலோசனைப்பிரகாரமே யன்னோர்களை வரவழைத்து நடப்பவைகளையெல்லாம் விவரமாய்க் கூறியதன்மீதில், அவர்களெல்லாரு மஃது பூதபைசாசங்களின் காரியமாய்த்தானிருக்கவேண்டுமென்னுமோர் முடிவுக்கு வந்தனர்கள். இப்படிப்பேசிக்கொண்டிருக்குந்தருணத்தில் "நிமை" யாகிய தெய்வச்சிறுவரவ்வழிபோதரவும், அவரை நோக்கி அம்மூதாட்டிகள் "எம் குணரத்னமே! நீ யிவ்வாறெல்லாம் நடத்தல் தகுமா? உயர்குலமுதித்தோனாயிருத்தலின், அசுத்த வஸ்துக்களைப்பற்றிக் கனவிலு

நினையாது, 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்று பெரியோரைப் பணிந்தொழுகல் வேண்டாவா" வென்று கேட்க, எம்பெருமான் "யானா ஒருவரைவணங்குவேன்? எல்லோருமென்னை வணங்கல்வேண்டும்" என்று பேசிப்போயினர். இதைக்கேட்ட வங்காளமூதாட்டிகள் ஆச்சரியமாகிற தாம்பாற் பிணிப்புண்டு "சசிதேவியம்மாளே, நாங்கள் கூறியதுசரிதான். இது தூர்த்தேவதைகளின் காரியமேயல்லாமல் வேறொன்றன்று. இதற்குப் பரிகாரம், குழந்தைகளைப் பாதுகாக்கும் விரதமே மேற்பூண்ட சஷ்டியம்மனுக்குப் பூசை போடுவதுதான்" என்று சொல்லித் தத்தமிருப்பிடஞ்சென்றனர். அன்றுமுதல்சசிதேவியம்மாளுக்கு வேறுவித கவலை மனதில் புகுந்துகொண்டது. என்னெனின், அம்மனுக்கென்று திருவமுதியற்றி யெடுத்துக்கொண்டு போகுந் தருணம், எங்கு தம்பிளஞ்சிறார் பார்த்திருந்து, அது தனக்கு வேண்டுமென் றழைபிடித்துக்கொள்ளுகிறாரோ, எங்கு அதனால் அம்மன் விஷயத்தில் அபராதஞ் செய்பவராவோமோ, எங்கு அதன் காரியமாக தன் அருமைப் புதல்வருக்குத் தீங்கு நேரிடுமோ வென்பதுதான். இத்துன்பந் தனக்கு முன்னமே மனதிலுதித்திருந்ததால் தன்னால் கூடியவரையில் சாக்கிரதையாகவே அவருக்குத் தெரியாமல் பண்டங்களைச்செய்துகொண்டு, சந்நிதானத்தை நெருங்குகிறவேளை, "குறுகுதலைக் கிண்கிணிவாய்க்கோ" மகனாகிய சைதன்யஸ்வாமிகள் சொல்லிவைத்தாற்போலெதிரேவந்து தோன்றினர். இதைக்கண்ட சசிதேவியம்மாளுக்கு ஆச்சரியமும்,திகிலும் மேலிட்டு, "யானென்செயக்கடவேன்; இஃதென்ன விந்தை! நான் இவ்வளவு ரகசியமாய்க் கார்யங்களை முடித்துக்கொண்டு எவ்வளவோ சாக்கிரதையாயிருந்திருப்பினும், இப்பொல்லானும் இங்குவந்து நெருங்கினனே.

'காணினுமுள னேர்தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணினுமுளன் மாமேருக் குன்றினுமுள னிந்நின்ற
தூணினுமுளன் சொன்ன சொல்லினுமுள னித்தன்மை
காணுதி விரைவின் * * * *'

என்றெங்கனெதிரில் வந்தனனோ! .... அந்தோ!! ஈதெல்லாம் பெரும்பைத்தியம்" என்று கலுழ்ந் "என் அப்பனே! நீயேனிங்கு வந்தனை? வீட்டிற்குச் செல்க" என்றனள். இவ்வார்த்தையைச் செவிகொடுத்துக் கேளாதி அத்தெய்வசிறுவர் "அம்ம! நீ கையில்மறைத்தெடுத்துச்கொண்

டுபோவது யாது?" என்று கேட்டனர். அதை மறக்கடிக்கத் தாயார் எத்தனை நன்மொழிகள் கூறினும் கவனியாது, தான் கேட்ட கேள்வியையே வற்புறுத்திக் கேட்பாராயினர். அதன்மீது விதியில்லாது நடந்தவைகளையெல்லாம் தாயார் செப்பக் கேட்டு, அதியானந்தபரவசராய், "அம்ம! எனக்கு மிகவும் பசியெடுக்கிறது; ஆதலின் அம்மனுக்கென் றெடுத்துக்கொண்டு போகிற தின்பண்டங்களை யெனக்குக் கொடு" என்று ஸ்வாமிகள் பிடிவாதம் செய்யவாரம்பித்தார். தாயார் அதனாலுண்டாகும் கெடுதிகளனைத்தையும் சாங்கோபாங்கமாய்க் கூறினும், தன் பிடிவாதத்தையே மேற்கொண்டு ஸ்வாமிகள் அழவும், தாயார் மனவெறுப்புடன் அம்மனுக்கென்றெடுத்துச்செல்லும் திருவமுதை மகனுக்குக் கொடுக்க நேரிட்டது. கொடுத்ததை வாங்கித் தின்று ஸ்வாமிகள் ஓட்டம்பிடித்தார். சசிதேவியம்மாள் அம்மனிடம் சென்று வணங்கி, தன் மகன் செய்த நடக்கைக்குக்கோபித்து யாதொரு கெடுதியுஞ் செய்யாதிருக்கும்படி வேண்டி அபராதக்ஷமை செய்யும்படி கேட்டுக்கொண்டு இல்லம் வந்தனர்.

இப்படி நடந்துவரும் நாளில், அவ்வூரில் கங்காதாஸ் என்பவர்வைத்திருந்த கல்விச்சங்கத்திற் கலைபயின்று யோகவாஸிஷ்டம் முதலிய மஹத்தான தத்துவ சாஸ்திரங்களைக் கற்று அத்வைதியாயிருந்த முராரிகுப்தர் என்பவர், அத்வைத வாதமாகிற "கடவுளும் நானும் ஒன்று" என்கிற விஷயங்களைப்பற்றி பாரமார்த்திக வ்யவஹாரிக வைஷம்யங்களையோராது அனைவரும் மயங்கி மருளும் வண்ணம், ஒருநாள் வீதியில் தன் நண்பரொருவருடன் ஆவேசமாய்ப்பேசிக்கொண்டு போகிறபொழுது, இருந்தாற்போலிருந்து "கலீர்" என்று நகைக்கிற சப்தம் கேட்டது. அது என்னவென்று ஆச்சரியப்பட்டு, முராரிகுப்தர் திரும்பிப் பார்த்து பின்னால் கௌராங்கர்சிநேகிதர்களாகிய சிறுவர்களுடன் தன்னைப்போலவே அபிநயித்துக் கேலி செய்வதாய்த் தெரிந்து தனக்குதித்த கோபத்தை ஒருவகை யடக்கிக்கொண்டு தன் வாதத்தை நடத்திக்கொண்டுபோயினும், மறுபடியும் ஸ்வாமிகள் முன்போலவே சிரித்துக் கேலி செய்ய முராரி குப்தர் "இச்சிறுமைச்சிறுவன் சுத்த துஷ்டப்பயலாயிருக்கின்றனனே!" என்றனர். இதைக்கேட்ட இளையபிரான் "அப்படியா! ஆயின் நீயின்று போசனஞ்செய்யும்போது உனக்குப் புத்தி புகட்டுகின்

றேன்" என்று செப்பிப்போயினர். அன்று சிலநாழிகைபொறுத்து முராரிகுப்தர் போசனம்செய்யும்வேளையில் அகஸ்மாத்தாய் சைதன்யஸ்வாமிகள் எதிரில் வந்து நின்றனர். ஆச்சரியத்தாலும் கோபத்தாலும் அடங்கா மையல்பூண்ட குப்தர் விழித்து விழித்திருக்க, எம்பிரான் குப்தர் போசனபாத்திரத்தில் தம் ஸ்வாபிக பாதை நிவிர்த்திசெய்து நகைத்தனர். முராரிகுப்தருக்குக் கோபம் மிகுந்து பதைக்கும்போது, "நீ சர்வஜனங்களுக்கும் கெடுதி விளைக்கும்படியான தத்துவபோதனை செய்யாமல் சாக்கிரதையாயிரு" என்று கூறி எம்பிரான் மறைந்தனர். "ஐந்து வயது குழந்தை யித்துணை யறிவுடைத்தாயிருப்பது ஆச்சரியமாயிருக்கிறதே! இது சாக்ஷாத் கிருஷ்ணன் அவதாரமாய்த்தானிருக்கும்" என்று முராரிகுப்தர் உணர்ந்து ஜகந்நாதமிஸ்ரர் வீட்டிற்கோடிவந்து, தாயார் காற்பின் னொதுங்கி நிற்கும் சைதன்ய குழந்தையின் பதகமலங்களில் வீழ்ந்து மெய் சிலிர்த்து

"உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி யூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்கு தித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெ ழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் தக்கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்மனஞ்ச னுக்கெளி யையோ
* * * * *"

என்று பக்தி பாவசராய் நின்றுகொண்டிருந்தார். இதைப் பார்த்துவந்த ஜகந்நாதமிஸ்ரருக்கும் மற்றையோர்க்கும் ஆச்சரியமுண்டானதை விரித்துக்கூற வியலாதாயினும், ஜகந்நாதமிஸ்ரர் முராரிகுப்தரைநோக்கிப் "பெரியோர் சிறியோர் காலில் விழுந்தால் பின்னையோர்க்குக் கெடுதி விளையுமென்று நீவிர் கேட்டிலீரா? இச்சிறுவற்குக் கெடுதிவிளைக்க ஏன் எண்ணங்கொண்டீர். இப்படியும்செய்யலாமா?" என்று கேட்டனர். முராரிகுப்தர்வெகு அமைதியோடு "உம் குழந்தை கிருஷ்ணனேயென்று சிறிது நாளையிற் றெரியவரும்" என்றனர். அனைவரும் "விந்தை! விந்தை!" யென நின்றனர்.

இரண்டாவது அத்தியாயம்.

விஸ்வரூபர் விருந்தாந்தம் - சைதன்யர் உபநயன விசேஷம்- ஜகந்நாதமிஸ்ரர் தேகவியோகம்.

நாம் முன்னத்தியாயத்தில் ஸ்ரீகௌராங்க ஸ்வாமிகட்குத் தமையனாராய் விஸ்வரூபனென்பாரொருவர் பிறந்திருந்தனரென்று குறித்தோம். அவர், ஸ்வாமிகட்குப் பத்து வருடம் மூத்தோராயிருந்தனர். ஆக, இப்பொழுது விஸ்வரூபருக்குப் பதினாறு வயதும், ஸ்வாமிகட்கு ஆறு வயதுமாயிருந்தன. விஸ்வரூபர் கலாசாலையிற் பயின்று மிகப் பாண்டித்திய முற்றிருந்தனர்;—அத்வைத ஸ்வாமிகட்குச் சீடராய் உலகத்தின் நிலையில்லாமையைக் கண்டு அதில் சிறிதும் பற்று வையாதவராய், பக்தி, ப்ரேமை முதலிய குணங்களிற் சிறந்தோராய் விளங்கிவருநாளில், அவர் தாய்தந்தையராகிய சசிதேவியம்மாளும் ஜகந்நாதமிஸ்ரரும், தமக்குள் யோசித்து தம் ஜேஷ்டபுத்திரராகிய விஸ்வரூபர்தக்க வயதெய்தியிருத்தலின், அன்னாருக்குத் திருமணமுடித்தலே தம் கடமையென்றோர்ந்து பிரஸ்தாபித்துக்கொண்டிருக்க அதையுணர்ந்த விஸ்வரூபர் அக்காரியத்திற் சிறிதும் விருப்பமிலராய், உலகத்தைத்துறந்து சந்நியாசமேற்கொள்ளுதலே தக்கதொழில் என்னும் முடிவுக்கு வந்தனர். ஆயினும் அதனைத் தன் தாய்தந்தையரோடு கூறின், அவர்களால் அது தடுக்கப்படும் என்று நினைந்து யாருடனும் கூறாது தன் அத்யந்தப்ரியரும் அம்மான் குமாரருமாகிய லோகநாதரென்பவரைத் தனக்கு வழித்துணையாகப்பற்றி, ஒருநாளிரவில் விஸ்வரூபர் ஆற்றை நீந்திக்கடந்து, நாடெங்குஞ்சுற்றிச் சந்நியாசம்பூண்டனர். அவர் புறப்பட்டுச்சென்ற மறுநாள், விஸ்வரூபரைக்காணாது தாய்தந்தையர் மிகவருந்தி, மனம்நொந்து, உடல்தளர்ந்து, ஒருபுறம் தரையிற் புரண்டலறவும், உலகத்தில் எல்லாவற்றைக் காட்டினும் அவரை மிக்க அன்புடன் மதித்திருந்த கௌராங்கஸ்வாமிகள் கூற முடியாத மனோவியாதிகொண்டு புலம்பிக் களையடையவும், இதனைக்கண்டவ்நகரத்தோரெல்லாரும் மதிமயங்கி, அதிசுந்தராங்கரான விஸ்வரூபர் உலகத்தை வெறுத்து அலகிலானந்தமெய்

தக் கருதிப்போனவா றென்னையோவென்று துன்பமுற்றுக் கண்கலங்கவும், இவ்விதம் நவத்வீபமுழுதும் பெரிய 'அமளி'யாயிருந்தது. ஒவ்வொருவேளை தமையனாராகிய விஸ்வரூபர் தன்மீது வைத்திருந்த அன்பையும் ஆதரத்தையும் நினைந்து நினைந்து சாம்பிக்கூம்பி கௌரங்கஸ்வாமிகள் புலம்புகாலை, அவர் தாய் தந்தையர், தம்மனதில் எவ்வளவு ஆற்றாமையிருப்பினும், எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு ஸ்வாமிகளுக்குச் சமாதானங்கூறித்தேற்றுவர்; எங்கு ஸ்வாமிகள் மிகவழுதலால் அவருக்குவழக்கம்போன்று கலைவந்து விடுகிறதோவென்று, தம் ஆறாத்துயரத்தை யடக்கிக்கொள்வார். தாய் தந்தையர்படுந்துயரத்தைப்பார்த்த ஸ்வாமிகள் 'நீங்கள் யாதொன்றுக்கும் விசனிக்கவேண்டியதில்லை: நான் உங்களுக்குப் புத்திரனாயிருந்து தந்தைதாயர்க்கியற்றக்கடவ பணிவிடைகளைச் செய்யக்கடவேன்' என்று சந்தோஷப்படுத்துவர். விஸ்வரூபர் சந்நியாஸமடைந்ததைப்பற்றித் தாய் தந்தையர்கள் எவ்வளவு விசனித்தபோதிலும், விஸ்வரூபர் இல்லம்வந்து சேர்ந்துவிடுவதா லெவ்வளவு சந்தோஷமுண்டாகுமென்பதை யறிந்தபோதிலும், அன்னோர் தம்மகன் மோக்ஷவிச்சைகொண்டெடுத்த வோர் துறவொழுக்கத்தைக் கைவிடின் அவருக்கு எவ்வளவு கெடுதியுண்டாகுமென்பதை யோர்ந்து அதைச் சிறிதாயினும் விரும்பிலர்.

சந்நியாஸ மேற்கொண்ட இரண்டு வருடத்திற் கெல்லாம் விஸ்வரூபர் பண்டரிபுரத்திற்கருகில் மிக்கவற்புதகரமாய் மோக்ஷவீடடைந்தன ரென்று கூறப்பட்டிருக்கின்றது. அவருடைய சிஷ்யர்கள் சுற்றிலும் நின்றுகொண்டிருக்க, இருந்தாற்போலிருந்து கோடிசூர்யப்பிரகாசமாய், விஸ்வரூபருடைய ஆத்மா,

"சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ
சூழ்ந்ததனிற் பெரிய பர நன்மலர்ச் சோதீயோ
சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞான வின்ப மேயோ
சூழ்ந்ததனிற் பெரிய வென்னவா வறச் சூழ்ந்தாயே"

யென்று பரமாத்மப் பிரகாசம் தன்னை முற்றிலும் கவிய மோக்ஷவீடடைந்ததென்று அதைநேரில் பார்த்துக்கொண்டிருந்த சிவாநந்தரென்பவருடைய குமாரரான கர்ணபுரரென்பவரெழுதியிருக்கிறார்.

இஃதிவ்வாறாக விஸ்வரூபர் வீட்டையும் நாட்டையும் நகரத்தையும் விட்டுத் துறவறம் பூண்டபின்னர் ஜகந்நாதமிஸ்ரரும் சசிதேவியம்மாளும் தமக்கிருந்த ஒரேபுத்திரரான கௌரங்கரை மிக அருமையுடன் வளர்த்துக்கொண்டுவந்தார்கள். தகப்பனார் பிள்ளையை மடிமீதிருத்திக்கொண்டு பாடங்கற்பிப்பதையும், பிள்ளை அதைக்கவனித்துக்கேட்பதையும் சசிதேவியம்மாள் வேடிக்கையாகப்பார்த்துக்கொண்டிருப்பார்கள். இப்படி நடந்துவரும் நாளிலோர்நாள் தம்வீட்டுத்திருவாராதனைப் பெருமானுக்கமிசைசெய்வித்திருந்த வெற்றிலையை ஸ்வாமிகள் மென்றுதின்னவும், உடனே மூர்ச்சையாய்விட்டார். இவ்விதமிவருக்குக்கலைவருவது சகசந்தானேயென்று பயப்படாமல் தாய்தந்தையர் உபசரணை செய்யப்பெருமான் கலைதீர்ந்தெழுந்து தன்னை தன்தமயனான விஸ்வரூபர் எடுத்துக்கொண்டுபோயிருந்தாரென்றும், அவரைப்போல் தானும் சந்நியாஸமேற்றுக்கொள்வது நலமென்றுசொன்னாரென்றும், அதற்குத் தான் இளவயதினரா யிருப்பதால் 'சந்நியாஸம்' என்பதன் பொருளே தனக்குத் தெரியாதிருக்க அக்காலத்தில் அவ்வாச்சிரமத்தை மேற்கொள்ளல் சரியன்றென்று தான்கூறினதாகவும் அதன்மீது விஸ்வரூபர் அஃது அவ்வாறிருக்கினும் அவர் நமஸ்காரஞ் செய்கிறாரென்று தந்தை தாயர்க்குச் சொல்லச் சொன்னாரென்றும் திருவாய் மலர்ந்தருளினார். இதனைக் கேட்ட தாய் தந்தையர்க்கு விஸ்வரூபர் தங்களை மறக்கவில்லையென்று பேரானந்த முண்டாயது. நிமையும் நாளடைவில் நன்னடக்கை யுடையோராய்க் காணப்பட்டு வந்ததால், அவர்களுக்குண்டான மகிழ்வுக்கோ ரளவின்று. இஃது இவ்வாறாயினும், சசிதேவியம்மாள் கௌரங்க ஸ்வாமிகள் சொன்ன விஸ்வரூபர் விர்த்தாந்தத்தை மறந்தாராயினும் ஜகந்நாதமிஸ்ரர் மாத்திரம் அதை மறவாது நாள்தோறும் நினைத்துக் கொண்டேயிருந்தார். கல்வி, கல்வியென்று அதிகமாய்த் தாம் கற்றுக்கொடுத்ததனாற்றானே விஸ்வரூபருக்கு விரத்தியுண்டாகி இல்லம் நீத்தேகினர்; அவ்வாறு கௌரங்கர்க்கும் கல்வி பயிற்றினால் எங்கு விஸ்வரூபர் விருப்பப்பிரகாரம் துறவற மேற்க நேரிடுமோவென்று பயந்து கௌரங்கரைப் படிக்கவிடாது பள்ளிக்குச் செல்வதை நிறுத்தினர். அன்றுமுதல் கௌரங்கர் தம் நன்னடக்கையை மாற்றி பழையபிரகாரம் முரட்டாட்ட மாடத் தலைப்பட்டார். ஆற்றிற்குப் போவாரைத் தள்ளுவதிலும், அவர்கள் பூசைக்கென்று வைத்திருந்த புஷ்பங்களை யிறைப்பதிலும், அல்லது தன் பாதத்திற்கே பூசை செய்வதிலும், இன்னும்

இவைபோன்ற துஷ்டத்தனங்களிலும் அவர் கவனஞ்செல்ல வாரம்பித்தது. இவ்வாறு கண்டபடியாடினும், ஒருவருக்குந் தீங்கு விளையும்படியான காரியங்கள் அவர் செய்வதில்லை. ஊரிலுள்ளவர்கள் இக்குழந்தையின் அக்கிரமச் செய்கைகளைப் பொறாராய்த் தினந் தினம் சசிதேவியம்மாளிடம் வந்து குறைகூறிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு முறையிடுவோர்கள் மனம் நோகாதிருக்கும்படி சமாதானஞ் சொல்வதிலும், தன்புத்திரனையடிக்கடி கோபித்துக் கொள்வதிலும் சசிதேவியம்மாள் காலங் கழிந்துகொண்டே வந்தது. ஒருநாள் மனம் மிக நொந்து கோபமிகுந்து பிரம்பெடுத்துக்கொண்டு தன் மகனை யடிக்கப் போக, அவர் ஓடி (முன் நாம் கூறியிருக்கிற) பழைய மட்கலங்களாகிய அசுத்த கோட்டைக்குட் புகுந்து பாடவாரம்பித்தார். இதைக்கண்ட சசிதேவியம்மாள் யாதொன்றைச் செய்யவும் வன்மையற்றவராய் அழ, ஸ்வாமிகள் மனம் தாளகில்லாராய், "நீ ஏன் அம்மா விசனப்படுகின்றனை ? நல்லதென்றும் கெட்டதென்றும் தெரிந்துகொள்வதற்குக் கருவியாயிருக்கிற கல்வியெனக்கு அவசியமில்லையென்று நீக்கிவைத்தால், நான் என்ன செய்யக்கூடும் ?" என்று கூறினர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அண்டை அயலார்கள் "இஃது விந்தையினும் விந்தை, புதுமையினும்புதுமையே! அதிசயமான ஊரில் கொதிக்கிறமீன் சிரிக்கிறதென்பார்கள் ! அதுபோல், பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறேமென்றுசொல்கிறதே அரிது ; அங்கங்கே பிள்ளைகளை அடித்தும் வருத்தியும் பள்ளிக்கனுப்புகிறது வழக்கம் ! இங்கே கற்கவேண்டும் கற்கவேண்டும் என்றுதானே சொல்லிக்கொண்டிருக்கிற பிள்ளையைப் படிக்கவேண்டாமென்பது எங்குங்காணாத வேடிக்கையாயிருக்கின்றது !" என்றுபலவாறாய்ப்பேசி ஜகந்நாதமிஸ்ருடைய பிடிவாதமான எண்ணத்தைமாற்றிவிட்டார்கள். அப்புறம் எம்பெருமான் பள்ளிக்குச் சென்று படித்துவர உத்தரவளிக்கப்பட்டார். அவருடைய புத்திகோசரத்துக்கு வியவாதாரொருவருமில்லை. எதைக் கற்றுக்கொடுத்தாலும் அதை உடனே கிரகித்துக்கொள்ளும் சக்தி அவருக்கபரிமிதமாயிருந்தது. காரமுள்ள கர்ப்பூரமாயினும் கடுந்தீப்பிடிக்க கண்ணிமைப்பொழுதோ, அன்றிக் கைநொடிப்பொழுதோ செல்லினும், எவ்வாறு உலோகவ்ரசாகிய பொன் எளிதில் வளைந்தும் நிமிர்ந்தும், நீண்டுங் குறுகியும், மெலிந்தும் வலிந்தும் பல்வகையுருவங்

களடையவேற்றதா யிருக்கின்றதோ, அவ்வாறே சைதன்யருடைய மனோதர்மம், பார்ப்போர் கண்ணிற்கும், உணர்வோருணர்ச்சிக்கும் புலப்பட வியலாமல், வாயு வேகத்திற்கு மீறிய மனோவேகத்துடன், அனேக மஹா சாஸ்த்ரார்த்தங்களிலெல்லாமூடுருவிப் பாய்ந்து, பாங்கடையத்தக்கதாய் விளங்கிற்று. இஃது சர்வசக்தியன்றோ, மனுநீத புத்தியன்றோ, பெறற்கருஞ்சித்தியன்றோ!—அற்புதம் ! அற்புதம் !! இக்காலை பெம்மானுடன் நற்காலம் போக்கினர். பின் இவரால் யாதோ அசாதாரண மஹாத்மியத் தோற்றங்கள் உண்டாகுமென்று யூகித்திருத்தல் கூடும் ! ஆயினும் 'சந்தேகம்' என்னும் கண்மூடி மாக்கன் நம்மனத்தை மாயத்தால் கவர்பவனாதலின், கையிலுள்ளதைக் காட்டினாலும் கண்கட்டி வித்தையென்போம்; மயஞ்செப்பின், ஞாயமென்போம்; இவ்வாறு இடர்ச்சேற்றிலாழங்காற்பட்டுத் தவிக்கும் உலக இலக்கணத்தையே அன்னோரும் துய்த்திருந்தனரென்றுந் தெரிகிறது.

ஸ்வாமிகளுக்கு ஒன்பதுவயதானதும், அவருக்கு உபநயன மஹோத்ஸவஞ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அக்காலையில் அத்தெய்வச் சிறுவர்க்கு சௌளஞ் செய்வித்து தாஸவேஷமணிவித்திருந்தபோது அவரைப் பார்த்தால் பக்தியே ஒருவடிவுகொண்டுவந்ததுபோலிருந்தது. அங்கிருந்தோரனைவரும் "பாலகோபாலரே யிவ்விதம் அவதரித்தனர்போலும்" என்றுகூறினர். சடங்குகளெல்லாம் முறைப்படி நடந்துகொண்டுவந்து தகப்பனார் மந்திரத்தை ஸ்வாமிகள் திருச்செவியி லுச்சரித்தபோது, இருந்தாற்போலிருந்து ஸ்வாமிகள் ஓநகூச்சலிட்டுக்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தனர். அவர் தேகத்திலுள்ள ரோமங்கள் சிலிர்த்துக்கொண்டன; அவருடம்பைச் சுற்றியும் திவ்விய தேஜஸ் ஒன்று பிரகாசித்தது ; கண்ணினின்றும் தாரைதாரையாய் நீர்பெருகிற்று. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அனைவர்களுடைய மனதிலும் சொல்லமுடியாத கலக்கம்விளைந்தது. "இஃதென்ன? இப்பொன்னார்மேனியர்க்கு இன்னல்கள் நென்னலும் இன்றும், நாளையும் எல்லாவேளையும், விளைந்துகொண்டிருக்கக் காண்கிறோமே ! ஜகந்நாதமிஸ்ரர் முன்னாட்செய் தீவினையோ ? அன்றி, அன்னோர் மூதாதைகள் தெரிந்து யாதாயினுங் கொடுந்தொழில் புரிந்தனரோ ? ஒன்றுந் தெரியவில்லையே ! அப்பவசாகரம், இற்றைநாள் ஜகந்நாதரியற்றும் நற்கருமமாகிய வடவைக்கனலைத்

தோல்வியுண்முழுத்தி, அவர் வாழ்நாளி னூழ்நாளெனமீதூர்ந்து வருகிறதோ, என்னவோ! கடவுளே, காப்பாயாக" என்று வருந்தினர் ஒரு சாரார். "இல்லை ! இல்லை !! இஃது பூதபைசாசங்களின் காரியம் ! தக்க மந்திரத்தால் அடக்க முயல்வதே நல்ல வழி" என்று இரைந்தனர் ஒருசாரார். "அறிவில்லாப்பதடிகட்கு யாமென் சொல்லக்கூடும் ! கண்ணன் மணிவண்ணனே யிவ்வாறவதரித்தனன். இஃது தந்தை தாயார் செய்த தவப்பயனே ! இதைவிடுத்துக் கண்டபடி பிதற்றுகின்றனரே !" என்று கடிந்தனர் மற்றொரு சாரார். இவ்வாறு தாமரையிலைத் தண்ணீர் போன்றும், தேனில் விழுந்த ஈயைப்போன்றும், மனமென்னுங் கடலில் புத்தியாகிற மீகாணில்லாது, கண்டபடி தத்தளித்துக் கிடக்கும் சஞ்சலத்தோணி யுழல்வது போன்றும், அவர்கள் பலவகைத் துன்பமுற்று, சிறிது நேரத்தில் சாவதானமாய், ஸ்வாமிக்கு உபசாரஞ்செய்ய அவர் களைதெளிந்தெழுந்தனர்; அனைவர்களுடைய மனதிலும் பக்திவெள்ளம் பெருகிப் பாய்ந்தது. எல்லோரும் இது ஸ்ரீகிருஷ்ணாவதாரமே யென்றொப்புக்கொண்டார்கள். ஸ்வாமி, களைதெளிந்தெழுந்த பின்னர், நடந்ததைப்பற்றி யவரைக்கேட்க அங்கிருந்தோர் விரும்பினாராயினும், ஸ்வாமியைச் சூழ்ந்திருந்த தேஜஸாலும், அவருடைய முகக்கமலமடைந்திருந்த தெய்வத்தன்மையாலும், அச்சமடைந்துபேசாதிருந்தார்கள்.

உபநயனமானதுந் தனித்திருக்கவேண்டிய நாட்களெல்லாம் கழிய, அனைவர்களும் வழக்கப்படி ஸ்வாமிகட்கு வெகுமதிகள்கொடுவந்து கொடுக்கவாரம்பித்தார்கள். கையிலொன்றுமில்லாத ஏழையொருவன் வெறும்கொட்டைப்பாக்கொன்றைத்தர, ஸ்வாமி யதை மென்றுதின்றுகொண்டே, தாயாரைக்கூப்பிட்டனுப்பினார். தாயாராங்குவந்து திவ்வியதேஜஸைக்கண்டு மயங்கி அச்சமுற்று எதிரில்நிற்க, ஸ்வாமிகள் தாயாரைப்பார்த்து "நான் போகின்றேன். உன்பிள்ளையைச் சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். கொஞ்சநாள்பொறுத்து வருவோம்" என்றுகூறியவுடன் மூர்ச்சையாய்விழுந்தனர். தேகத்திலுதித்திருந்த திவ்வியதேஜஸும், அச்சந்தரும் திருமுகமண்டலவிலாசமும் மறைந்தன. களைதெளிந்தெழுந்தபின்னர் அவர் முன்போலவே சுயசாதாரணவுருவமாய்க் காணப்பட்டார். இங்கு நாம் கவனிக்கவேண்டியது யாதெனின், "பின்னர்வருவோம்" என்றுகூறியது பின்னர் வந்தே தீர்ந்தது என்பதேயாம். அஃது யாது? ஏன்வந்தது? என்னுங் கேள்விகட்கு விடைகள் சரித்திரப்போங்காலேயே யேற்படும்.

கௌரங்கர் வழக்கப்பிரகாரமே சுதர்சனபண்டிதரிடத்திலும் விஷ்ணுபண்டிதரிடத்திலும் கல்விபயின்றுவந்தார். அவர்கள் "இச்சிறுவரைப்போல் பெருமதியுடையோரை யாம் யாண்டுங் கண்டிலம்" என்றுசொல்லுகிறதுண்டு. இவ்விதம் கௌரங்கர் படித்துக்கொண்டும் மிகநல்லநடையிலொழுகியும்வருநாளில், அவருக்கு வயதுபதினொன்றாகியகாலத்தில், தன்தந்தையாருக்கு வயது முதிர்ந்து விஷசுரம் வந்தது. நோய் அதிகரித்து, கடைசியாக, அவர் மரணப்படுக்கையிலிருக்கும்போது மைந்தர்மன மிக நொந்து, அருகில வந்து அவர் தம்முடலைத்*தைவந்து "என் பிதாவே! இனி பிதா என்று யாரையழைப்பேன்" என்றலறியழவும், ஜகந்நாதமிஸ்ரர் "என் அருமைக் குழந்தாய் ! நானிறப்பதால் நீ மனவருத்தப்படவேண்டாம். கடவுளுன்னைக் காப்பாற்றுவாராக !" என்றுகூறித் தனயனையுந் தையலையும் தவிக்கவிட்டு வைகுந்தபதவி சேர்ந்தனர்.

மூன்றாம் அத்தியாயம்.

ஸ்வாமிகள் முதல்விவாகம் - கேசவன் கர்வபங்கம் - இரண்டாவது விவாகம்.

ஜகந்நாதமிஸ்ரரிறத்தலும், குடும்ப பாரங்களெல்லாம் சசிதேவியம்மாள் தலையில் விழுந்தது. தந்தையைப்பிரிந்த துயரம் மைந்தன் மனதில் விழவொட்டாமல் கஷ்டத்தோடும் நஷ்டத்தோடும் அந்தம்மாள் வீட்டுவேலைகளையெல்லாம் நிறைவேற்றி, தன் புதல்வனை நவத்வீபத்தில் இலக்கண சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்த கங்காதாஸ் என்பவரிடம் விடுத்து, "தந்தையில்லாத இப்பிள்ளையைக்காத்து கல்விபயிற்றுவது நின்கடன்" என்று பரிதாபமான குரலுடன் கூறலும், "இந்த 'நிமை' யைப்போன்ற மாணாக்கனைப்பெற்றது என்பெரும்பாக்கியம்" என்று கங்காதாஸ் அங்கிகரித்துக்கொண்டார். கௌரங்கரும் தேய்வதில்லாது வளர்வதேயாகிற சந்திரனைப்போன்று கல்வியில் மிக்க அபிவிர்த்தியடைந்துவந்தார். இவருடைய விவேகவிளக்கமும், கல்விக்களஞ்சியமும் ஒவ்வொருவரையும் வியப்பித்தன. சாதாரணமாய் அந்நாளில் வயதுமுதிர்ந்தோரே பள்ளிகளில் படித்துக்கொண்டிருந்தார்கள். தன்னோடுபடித்துக்கொண்டிருந்தவர்களைக் காட்டிலும் கௌரங்கர் மிகச்சிறியவயதினர். அலங்காரசாஸ்திரத்திற்றேர்ந்த கமலகாந்தர் என்பவரும் 'தந்த்ராசார்' என்னும் நூலை யியற்றின கிருஷ்ணானந்தர் என்பவரும் முன் நாம் குறிப்பிட்டிருக்கிற முராரிகுப்தர் என்பவரும் கௌரங்கஸ்வாமிகளுடனொக்கவாசித்த மாணாக்கர்கள். கௌரங்கஸ்வாமிகள் தன் கல்வித்திறத்தால் ஒவ்வொருவரையும் வாதுக்கழைப்பதிலும், அப்படி வாதுக்கு வந்தவர்களைத் தோற்கடிப்பதிலும் மிக்க இஷ்டமுடையவராய் நடந்துவந்தார். முராரிகுப்தரை அடிக்கடி வம்புக்காகிலும் வாதுக்கழைத்து அவரைத் தோற்கடிப்பார். வயதுவந்த பெரும்பண்டிதரான முராரிகுப்தர் பதினாலுவயது பிள்ளையால் தோற்கடிக்கப்பட்டார்! உடனே அவர் உடம்பை வேடிக்கையாய்த்தடவுவார்: இதனால் அவருக்கு அத்பாநந்தம் விளைந்து "இஃதென்னவோ தேவாவதாரம்!" என்று எண்ணி தனக்கும் மற்றவர்களுக்கும் அக்குழந்தையால் முன்னுண்டான தோற்றங்களை யெண்ணிக் கொண்டிருப்பார்.

இளையநம்பியார் இவ்வாறு எங்கு நமக்கு எதிரிகள் அகப்படுவார்களென்று தேடித்தேடித்திரிந்து ஒவ்வொருவரையுந் தோல்வியடையச் செய்துகொண்டுவந்தனர். ஒவ்வொருசமயத்தில் ஆற்றினொருகரையிலிருந்து மற்றொருகரைக்கு நீந்திச்செல்வதுமுண்டு. இவ்விதகோலாகலத்துடன் ஸ்வாமிகள், கங்காதாஸ்சிஷ்யராய், சம்ஸ்க்ருத இலக்கணத்திற்குப் பெரிய உரையொன்றெழுதினார். இது அதிகவிசேஷமானதென் றனைவராலுங் கொண்டாடப்பட்டது.

இலக்கணம் கற்றானதன்பின் தர்க்கசாஸ்திரங்கற்கவெண்ணி, அக்காலத்தில் தர்க்கத்தில் வல்லவராயிருந்த சார்வபௌமர் என்கிறவரிடத்திற்சென்றார். அங்கே அனேகாயிரம்பெயர் வாசித்துவந்தாலும், அவர்களுக்குள் ரகுநாதரென்பவர் மிகச்சமர்த்தர். ஸ்வாமிகளுடைய சமத்காரத்தைக்கண்டு ரகுநாதர் அவரிடம் நட்புபாராட்டினார். ஆயினும் தர்க்கசாஸ்திரத்தில் தனக்கு மிஞ்சினோரிலரென்று ரகுநாதருக்கு ஒரு அகங்காரமிருந்தது. ஒருநாள் இளையபிரான் அவர்வீட்டிற்கு பொழுதுபோகும் சமயத்திற் போயிருந்தகாலை ரகுநாதர் அப்போதுதான் சமையல்செய்யக் கண்டார். ஏன் அத்தனை நாழிகைபொறுத்து சமைக்கவேண்டுமென்றுகேட்டதற்கு, ரகுநாதர் தனக்கு உபாத்தியாயர் தர்க்கத்தில் யாதோ ஒருகேள்வி கொடுத்ததனையும் அதற்கு விடை கண்டுபிடித்தபிறகுதான் சாப்பிடுவதாய் தான் பிரதிக்ஞை செய்துகொண்டதாகவும், அதற்கு விடைகண்டுபிடிக்க அவ்வளவு நாழிகையானதாகவுங் கூறினார். அதன்மீது ஸ்வாமிகள் அக்கேள்வியாதெனக்கேட்டு ஒருநிமிஷத்தில் நகைத்துக்கொண்டே விடைபகர்ந்து "இதற்குத்தானா அத்தனைநாழிகையானது?" என்று நகைத்தார். ரகுநாதர் ஆச்சரியப்பட்டு 'இவர் கடவுளாயிருக்கக்கூடும்' என்று நினைந்துகொண்டார். இப்படிச் சிலநாள் கழிந்துவர கௌரங்கஸ்வாமிகள் தர்க்கசாஸ்திரமொன்று புதிதாய் எழுதினார். இதுதெரியாமல் ரகுநாதரும் 'திதீதி' யென்று ஒருதர்க்கசாஸ்திரமெழுதிவந்தார். ரகுநாதருக்கு இருந்த அவா யாதெனின், உலகத்தில் மிகப்பெரிய தர்க்கசாஸ்திரத்தை யியற்றினவரென்று தனக்குப் பெயர்வரவேண்டுமென்பதுதான். 'திதிதி' யெழுதினபின் ரகுநாதருக்கு கௌரங்கர் தர்க்கசாஸ்திர மெழுதுவதாய்த் தெரியவந்தது. அதன்மீது ரகுநாதர் கௌரங்கரெழுதினசாஸ்திரத்தைக் காண்பிக்கும்படி அவரைப்பிரார்த்தித்தார்.

அபார கருணையோடும் எம்பிரான் தானெழுதியதைக் காண்பிக்க, ரகுநாதர் தான் எழுதியதைக்காட்டினும் எத்துணை மேன்மைத்தாயஃதிருக்கிறதென்றோர்ந்து தன்னெண்ணம் பலியாது போகிறதேயென்று கண்ணீர்விட்டழுதனர். அவரது கருத்தையறிந்து ஸ்வாமிகள் தானெழுதியதை ஆற்றில் கிழித்தெறிந்தார். அதனால்தான் 'திதீதி' யென்பது ஸம்ஸ்க்ருதத்தில் மிகப் பெரிய தர்க்கசாஸ்திரமென்று இந்நாளிலும் வழங்கிவருகிறது.

தர்க்கம் பயின்றபின்னர் சைதன்யர் தானே யோர் கலாசாலைநியமித்தார். இவருடைய சமத்காரத்திற்கு மெச்சி மற்றெல்லா கலாசாலைகளைக் காட்டினும், இவர் பள்ளிக்கூடத்தில் அநேகாயிரம் மாணாக்கர்களிருந்தார்கள். இதனால் ஸ்வாமிகட்கு மாதாந்தரம் தனவரவு அதிகரிக்கவும், சசிதேவியம்மாள் தன் அழகுக் குமாருக்கு வல்லாபாசார்யர் திருக்குமரியாகிய லக்ஷ்மியென்கிற கன்னிகையுடன் திருமண முடிப்பான் நினைந்து;

"நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளைக் கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்க்
கோளரி மாயவன் கோவிந்த னென்றொரு
காளை புகுத"

வேண்டிய ஏற்பாடுகளெல்லாஞ் செய்து, சுபலக்னத்தில் விவாகச் சடங்கு ஆரம்பித்து நிறைவேற்ற,

"வெய்ய கனற்றலை வீரனு மந்நாள்
மையறு மந்திர முற்றும் வழங்கா
செய்யமை யாவுதி யாவையு நேர்ந்தான்
தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்."

என்கிறபடி, பெருமானும் லக்ஷ்மியின் திருக்கை பிடித்து நின்றனர். பின் ஓமக்கனலைச் சுற்றிவந்த திருக்கோலம்,

"இடம்படு தோளவ னேடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையன் மாறு பிறப்பின்
உடம்புயிரைத் தொடர் கின்றதை யொத்தான்."

என்பதுபோலிருந்தது. இத்திருமணம் மிக்க ஆடம்பரத்தோடு நிறைவேறாது அவர்கள் சக்தியானுசாரம் சாதாரணமாய் நடந்தேறியதால் அங்கு வந்திருந்தாரனைவருக்கும் சசிதேவியம்மாள் மிக்க உபசாரஞ் சொல்லி நடந்ததி லேற்றத்தாழ் விருப்பினும் மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டனள்.

கௌராங்கஸ்வாமிகள் பெருத்தபண்டிதராயிருப்பினும், தன்னிலைமைக்கேற்ற கௌரதாதோற்றத்தைவகியாது விளையாட்டு நடக்கைகளிலேயே படிந்திருந்தார். மற்ற பிள்ளைகளைப்போலவே ஆற்றில் நீய்வதும் சிரிப்பதும் விளையாடுவதுமாயிருந்தார். இவர் உயர்ந்தபட்டாடையுடுத்தி அரசகுமரன்போல் உலாத்திவருவதுண்டு. அந்த காலத்தில் ஒருநாள் ஒருஜோசியன், நவத்வீபபட்டணத்தில் அப்பொழுது அரசாண்டுகொண்டிருந்த முசல்மானை நீக்கி ஒரு ஹிந்துராஜன் பட்டமடையப்போகிறான் என்று கூறியிருந்தான். இதைநம்பியிருந்த அந்நகரத்தார் அப்படி யாராவது அரசராகவருவதானால் அவர் கௌராங்கராய்த்தானிருக்கக்கூடும் என்று கருதியிருந்தார்கள். அவ்வளவு முகவிலாசமும் தேஜஸ்ஸும் அமைந்தவராய், விலையுயர்ந்த பட்டாடையுடுத்திச் செல்வதனால், அவருக்கு விரோதிகளாயிருந்த சிலர், "இவனென்ன மஹா ராஜகுமாரன்போல் நடந்துசெல்கிறான்? இவன்தகப்பன் தாரித்திரியம் உலகமறிந்ததாயிற்றே" என்றும் "இவன் மஹாகர்வம்பிடித்தவன். இது கடவுள்பொறுக்கத்தகாதது. ஒருநாள் இவனைத் துன்பத்திற்கொண்டுவந்துவிடும்" என்றும் "இவன் 'மஹா' படித்தவனோ? இவன் கல்வி பயின்றவனாயின், இவ்வளவுசேஷ்டையேனிருக்கின்றது?" என்றும் பலவாறாய்க் கூறிவந்தாலும், கௌராங்கரெதிரில்மாத்திரம் யாதொன்றுஞ்செப்பத் துணிந்தாரல்லர்.

தன்பின்னால் பலவாறு பலபேர் பேசிக்கொண்டிருப்பதைச் சிறிதுங் கவனியாராய், கௌராங்கஸ்வாமிகள் வழக்கம்போலவே வேடிக்கைகளிற் காலங்கழித்து வந்தார். வைஷ்ணவ மதத்தில் யாராயினும் முற்றினாரென்று தெரிந்தால் அவர்களைக் கேலி செய்து அவமானப்படுத்துவதில் அவருக்கு மிக்க பிரியம்; ஸ்வாமிகள் வாக்கு வன்மையிலும் தர்க்க சாகஸத்திலும் மிகப் பெரியராதலால், அவரைக்கண்ட வைஷ்ணவர்களும், மற்றும் கல்விமான்களும் தப்பித்துக்கொண் டோடப் பார்ப்பார்கள். இவ்வாறு வைஷ்ணவ சீலராயும் ஸ்வாமிகளால் அடிக்கடி கேலி செய்யப்படுபவருமாகிய முகுந்ததத்தர் என்பவர் ஒருநாள் தன சிஷ்யர்களோடு வந்து கொண்டிருந்தவர், ஸ்வாமிகளைக் கண்டு ஒருபுறம் நழுவவும், ஸ்வாமிகள் "ஓகோ! ஏன் முகுந்ததத்தர் ஓடுகின்றார்? நான் நிரீஸ்வர வாதியைப்போன்றும் தேவ பக்தி குன்றியும் பேசுவதால் தப்பித்துக்கொண்டோடுகிறான். ஓய்!

முகுந்தனே, நானும் ஒரு நாள் வைஷ்ணவனாகப் போகிறேன்; ஆனால் உன்னைப்போல் மோசக்காரனாயிரேன். அப்பொழுது நீயும் என்பின்னால் நிழலைப் போல் தொடரப்போகின்றாய்” என்றுகூறி அனைவரையும் சிரிக்கவைப்பார். மற்றோர்நாள் கதாதரர் என்னும் தர்க்க வித்துவானை அவர் விருப்பத்திற்கு மாறாக வம்புக் கழைத்து கஷ்டமான கேள்விகளைக்கேட்டு மனம் கலங்கமுறப்பண்ணி அவரை யழச் செய்விப்பார். பிறகு, தன் தகப்பனாருக்கு நண்பரும் அத்வைத ஸ்வாமிகட்கு இரண்டாவதானவரும், வைஷ்ணவ பக்தருமாகிய ஸ்ரீபாஸர் என்பவரிடம் ஸ்வாமிகள் வர, அவர் “நீயேனப்பா இவ்விதம் வீண் வாதஞ் செய்துக்கொண்டு காலங்கழிக்கின்றனை? இதிலெல்லாம் யாது பிரயோசனம்? உன் தகப்பனாரைப்போல வைஷ்ணவமத பரிபாலனஞ் செய்து வந்தால் அது எவ்வளவு மேன்மை!” என்று கேட்க, அவர் தனக்கு தகப்பன் முறையிலிருந்தவரானபடியால், அவர் பேச்சுக்களையும் யாதொன்றும் ஹேளனஞ் செய்யாது, தலை குனிந்திருந்து, பின்னர் “பண்டிதரே, கேண்மின்; நான் மிக்க இளவயதிலேயே ஒரு பெரிய பண்டிதனானமையின் சிறிது நாள் இப்படி வேடிக்கையாய்க் காலங்கழிக்க வேண்டாவா? அப்புறம் தக்க வைஷ்ணவரை வரவழைத்து வைஷ்ணவனாகின்றேன். அவ்வழி திரும்பிவிட்டால், அப்புறம் பெரிய வைஷ்ணவனாயிருப்பேன்” என்று சொல்லி முடிப்பதன் முன்னம் அனேக நாழிகையா யடக்கிவைத்திருந்த சிரிப்பு வெளிகிளம்ப, அதனால் ஸ்ரீபாஸரும் சிரித்தாராயினும் அவர் மனதில் அதிக கஷ்டமுண்டாயது.

இந்த நாட்களிலோர்நாள் கிருஷ்ணபக்தியிற்சிறந்த ஈஸ்வர பூரியென்ற நாமதேய முடையவரும் இந்தியாமுழுவதிலும் பிரக்யாதி பெற்றிருந்தவருமாகிய சந்நியாஸிகள் ஸ்வாமியைப் பார்க்கும்படி நேரிட்டது. கௌராங்கர் திவ்யஸ்வரூபத்தைப் பார்த்து ஆநந்த பரவசராய், அவர், பாதாதி கேசம், கேசாதி பாதம், உற்றுற்றுப் பார்த்து, “இது எம்பிரான் வடிவமே! இஃதை மானிட உருவமெனக் கூறல் சாலப் பிழைபாடுற்றதேயாம். இந்த சுகுமார சுந்தர ரூபம் என் மனத்தைக் கொள்ளை கொள்கின்றதே! ஹா, ஹா! இத்திவ்விய ரூபோல்லாஸம் போன்று என் பிறப்புநாள் தொடங்கி யிதுகாறும் கண்டிலேனே! இனியும் வேறிடத்திற் காணேனே! இதைப்போல் மற்றியாராயினும் கண்டதாகவாயினுங் கேட்டிலேனே! இனிமேலுங் கேளேனே! இரும்பைக் காந்தமிழுக்கின்ற வாறென்ன வலியவிழுத்து மையல்பழுத்து தன்னருட் கடலிலழுத்தப் பார்ப்பது யாது? இவன் இந்திரனாயின், மேனிமுழுவதும் ஹானியடையச் செய்யும் விகாரங்க ளிருக்குமே யன்றோ! அஃது தானில்லையென்று நினைப்பினும், மானைக்காட்டி மானைப்பிடிப்பார்போன்று தானே பக்திப்பெருக்கை யுள்ளடக்கி, வெளிகாட்டிய கருணைவிலாசம் அவனிடத்தி லெங்ஙனம் நிகழும்! பிரமன் முதல் பிபீலிகை வரையும், சுகந்தம் தரும் அசோகம், குவளை, சூதம், முல்லை, அரவிந்தம் ஆகிய ஐந்து புஷ்ப பாணங்களாலும், மானிடர்க்கேயன்றி, கடவுளுக்கும் களிப்பைத்தரும், சந்திரனாகிற குடையாலும் தென்றல் தேராலும், அழகே யுருவகப்படுத்திய தன்னாலும் அனைவோர் மனத்தையும் அபகரிக்கும், சித்திரயௌவன லாவண்ய மன்மதனாயிருக்கலாகுமோவென்று நினைக்கவும் இடந்தருகின்றனில்லை. மதனனாயின், சற்றுப் போதின் மறைவதாகிய சிற்றின்பமன்றோ தோன்றல் வேண்டும்! அவ்வாறன்றி சதானந்தமாகும் பேரானந்தவீட்டை யடைவோர் வருக, வருக, என்னுந் தற்குறிப்பேற்றம் பெற்று, இவன் விழிகள் செழிக்கின்றனவே! ஆகலின், இவன் மதனன் தாதையேயென்பதில் சிறிதுமையமிலது. இவன் உடல் முழுவதும் ஜொலிக்கின் தாமரைப்பூக்கள் ஆங்காங்கு தோன்றிய பொன் விருக்ஷமோ? அஃதன்றியும். பெரியதொரு தாமரைப் பூவிலே சிறு சிறு தாமரைகள் பூத்த அதிசயம் யாவரேனுங் கண்டுளாரா! முகமாகிறதொரு அரவிந்தத்தில் இரண்டுகண்களாகிய புண்டரீகமும் கண்படுகின்றனவே! சந்திரனைக் கண்ட கமலம் கூம்புவதா யுலகுளோரறிந்திருக்க, இச்சுந்தரன்பால் ஒருக்கால் திருமுகம் சந்திரனும் மற்றொரு வேளை அஃதே தாமரையாயும் விளங்குகின்றதே! சந்திரனாய்த் தோன்றும்போதும் கண்களாகிய தாமரைகள் கூம்பாது பூத்திருப்பதே இவன் சர்வசக்தியை விளக்குகிறது. இவனது திவ்ய தேஜோமயத்தை எளியேன் வர்ணிக்க வியலுமா, அஃது என் மனதை கவர்கின்றதே, யான் என்செய்வேன், எவ்வகையுய்வேன்!

“பரியனாகி வந்த வவுண னுடல் கீண்ட வமரர்க்
கரிய வாதிப் பிரா னரங்கத் தமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்
பெரியவாய கண்களென்னைப் பேதைமை செய்தனவே.”

"ஆலமா மரத்தி னிலைமே லொரு பாலகனாய்
ஞாலமேழு முண்டா னரங்கத் தரவினணையான்
கோலமா மணியாரமும் முத்துத்தாமமு முடிவில்லதோ ரெழில்
நீலமேனி யய்யோ நிறைகொண்ட தென்னெஞ்சினையே."

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாய னென்னுள்ளங் கவர்ந்தானை
அண்டர்கோ னணியரங்க னென்னமுதனைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே."

என்று அநுபவஜந்ய ஞானத்தால் வாய்திறவாது நினைந்துக்கொண்டிருக்க, எம்பிரான் அவரைநோக்கி "நீவிர் ஏன் என்னை மருளமருளப்பார்க்கிறீர்? என்னையேன்பரிசோதிக்கிறீர்? வீட்டுக்குவாரும், சாப்பிடுவோம்’ என்றழைத்துக்கொண்டுபோனார். வெகுசீக்கிரத்திலிவர்களிருவருக்கும் அத்யந்தஸ்நேகமுண்டாகி, ராதாகிருஷ்ணபக்தியைப்பற்றி ஈஸ்வரபுரி யெழுதியநூலை ஸ்வாமிகள் பரிசோதித்தார். அப்பொழுது ஸ்வாமிக்கு வயது பதினெட்டு. ஈஸ்வரபுரி உடனே விடைபெற்றுச்சென்று, ஆறுவருடம்பொறுத்து ஸ்வாமியையடைந்து, அவர் லீலைகளில் முக்கிய சம்பந்தமடைந்தவரா யிருந்தார்.

சைதன்யஸ்வாமிகளுடையகலாசாலையும் நாளடைவில் விர்த்தியாய்க் கொண்டேவந்தது. ஆயினும் இருந்தாற்போலிருந்து அவருக்குப் பழைய மயக்கம் உண்டானது. அனைவரும் மிகப் பயந்து தவித்தாக்கொண்டிருக்கையில், ஸ்வாமியின் மேன்மைகளைக்கண்டு மனம்பொறாதவர்கள், அவரைப் பேய்பிடித்ததென்றும், பைத்தியம்பிடித்ததென்றும் பலவகைகூறி, அவருக்கு விலங்கிட்டுக் கஷ்டப்படுத்தினார்கள். சில வாரங்கள் கழிந்தவாறே, ஸ்வாமிகள் பூரணசுகமடைந்து, தன் பழையவிளையாட்டு மாதிரியினின்றும் நீங்கி, மேதக்கவழியி லொழுகிவந்தார்.

அவருக்குப் பதினெட்டுவருடம் நிறைந்ததும், கீழ்த்தேசங்களுக்குப்போக வுத்தேசித்துத் தாயாரிடம் விடைபெற்றுச்சென்று பத்மநதியைத்தாண்டி அந்நதியின் எதிர்கரையில் ஒரு கிராமத்தில் தங்கினார். ஸ்வாமியின் வைபவங்களெல்லாம் அவருக்குமுன்னாகவேசென்று, ஆயிரக்கணக்காய் ஜனங்களை யவர்பாலிழுத்துவந்தன. ஏன் கீழ்த்தேசத்திற்கு அவர்போனாரென்கிற காரணம்மாத்திரம் தெரியவில்லை. அவர் தன்பாடசாலைக்கு நன்கொடைப்பொருள் சம்பாதிக்கப் போனாரென்பது மாத்திரம் வதந்தி.

இப்படி யவர்பெருமை யந்நாடுமுழுதும் பரவிக்கொண்டிருக்கும்நாளில், அவ்வூரில் மிகத் தனவந்தரான தபனமிஸ்ரர் என்பவர், மிக்கவயதடைந்து, கடவுள்தன்மையைப்பற்றி யொன்றுமறிந்துகொள்ளாதவராய், எவ்வாறு அவரை யுபாசித்து வழிபடுவது என்னும் விஷயத்தில் ஊக்கமிருந்தும் சந்தேகசித்தராய் மயங்கிக்கொண்டிருக்க, ஒருநாளிரவு தன்கனவில் யாரோவொரு தேவவுருவம் தன்னெதிர்தோன்றி அவ்வூரிலப்போது வந்திருக்கும் நிமைபண்டிதர் கடவுளவதாரமானமையின் அவரையடைந்து போற்றிசெய்யின், தனக்கு நல்வழி கிடைக்கும் என்றுகூற அவரெழுந்து "என்னே! அருண்மகிமையிருந்தவா!" என்று ஓடிவந்து தன்மகன்போன்று வயதிற் சிறியோராயிருந்த ஸ்வாமிகள் பாதாரவிந்தம்பணிந்துநிற்க, ஸ்வாமிகள் உபதேசஞ்செய்து "நீ காசிக்குச்சென்று நானுன்னைவந்துபார்க்கும்வரையு மாங்கிருக்கக்கடவை" என்று பணித்தருளினார். அக்கட்டளையைத் தலைமீதேற்று, தபனமிஸ்ரர் தன்குடும்பத்தோடு காசிக்குச்சென்று அங்கு ஸ்வாமிகள் வந்துசேருவதற்கான பதினொருவருடம்வரையும் காத்திருந்தார்.

ஸ்வாமிகள் அத்தேசத்தில் கிருஷ்ணபக்தி யுபதேசஞ் செய்யாவிடினும், அங்கிருந்தாரனைவருக்கும், அவர் கடவுளரே யென்றும், அவர் திருவடிபற்றின் பிறவியாகிற கடலினின்றும் நீங்கன்மாட்டும் என்றும்,

" பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்"

என்னும் ஞானமுதித்துத் தம்மவர்களை யெல்லாரும் நோக்கி யொருவர்க் கொருவர், " ஸ்வாமிக ளடிக்கமலப்போதுகளைச் சென்னிக்கணியாகச் சேர்ப்பின் பேரானந்த சுகம்பெறலாம். காகம் முதலிய சில சாமான்ய ஜந்துக்களுமன்றோ, உண்ணத்தக்க வஸ்துவைக்காண்டுறும் போழ்து, தம்மினத்தவரை யன்புடன் கத்தியழைத்து ஒக்க வுண்கின்றன. 'மருந்தேயாயினும் விருந்தோடுண்' என்னும் மூதோர் வார்த்தையைக் கேட்டிலோமோ! நாம் முன்னரியற்றிய புண்ணிய வசத்தாலே, நமக்கிதுகாறுமுண்டாகிய பவவினைத் தொடர்புகளெல்லா மறுபட்டுப்போகச் சமயம் வாய்த்ததே! இதை நீவிரெல்லாருங்காணாது உன்மத்தம்பிடித்திருத்தலழகன்று. பேருளாளனாகிய பெம்மானே யின்று நம்பால் கருணைகொண்டு ஓர் பொன்னுருத்தாங்கி இச்சைதன்ய

ப்ரபுவர் மீண்டெழுந்தருளினர். போதும்! இவரை சாதாரண மனிதராய் நினைப்பது மடமையின் முதிர்ச்சியேயன்றி வேறன்று. 'அரிதரிது மானிடராதலரிது'; அதிலும் சொல்ல முடியாத அங்கப்பழுதுகளாகிய கூன், குருடு, செவிடு, பேடு முதலிய துன்பங்களை நீக்கிப் பிறத்தலரிது. கூடியவரையிலும் தேகவிகாரத் தோற்றங்களின்றி யாம் பிறந்திருந்தும் யாது பயன்! இன்று இப்பெரியோரைக் காணும்பொழுது கிருஷ்ணபக்தி போகம் ஆகிற அமிர்தபுஷ்கரணி மிகுந்து நிறைந்து பொங்கித் ததும்பி நிலைபெற்றிருக்கத்தோன்றுகின்றதே! அன்பர்களே, அறிவோரே, வாருங்கள்; நற்சமயம் வாய்த்தது பாருங்கள்; எம்பிரான் திருவருளென்றோருங்கள்; வழியிதேயெனத்தேருங்கள்" என்று தம்மைத்தாம் மறந்து பேசிப்பேசி, பக்தி மிகுந்து துக்ககாலம் எப்பொழுது வருமோ என்று பரிபக்குவமடைந்திருந்தனர்.

இந்த நிலைமையில், ஸ்வாமிகள் அத்தேசத்தைவிட்டு, நவத்விபஞ்சேர்ந்ததும், தன் பத்தினியாராகிய லக்ஷ்மி யிறந்த விசனகரமான சேதிகேட்டு துக்காக்கிராந்தராய்ப்பின் தேறினர். மற்றப்படி அவர் அப்பொழுது மிக்க சௌக்கியமான நிலைமையிலிருந்தனர். நாலுபக்கங்களிலிருந்தும் அவருக்கு நன்கொடைகள் வந்துகொண்டிருந்தன; அவைகளையெல்லாம் தாமொன்றும் தொடாமல் தன் தாயாரிடமே கொடுத்து வந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில், காஷ்மீர்தேசத்தில் மிகப்பிரக்கியாதி பெற்ற பண்டிதனான கேசவனென்பவன் திக்விஜயஞ்செய்து மிகவிறுமாப்புண்டு, நவத்வீபத்திற்குத் தன் யானை சேனை குதிரைகளோடு அதிக ஆடம்பரமாய் வந்திறங்கி "இவ்வூரில் யாரேனுங் கற்றவனுளனோ? இருந்[illegible] வந்து என்னிடம வாதிக்கக்கடவன்; நான் தோற்[illegible]னல் சொத்துக்களையெல்லாம் அவனெடுத்துக்கொள்ளலாம்; நவத்வீப பண்டிதர்கள் தோற்கின் அன்னோரென்வசமாவர்" என்று விருது கூறினன். நவத்வீபத்தில் மஹாபண்டிதர்களிருந்தாலும், கேசவன் சரஸ்வதியிடம் வரப்பிரசாதம் பெற்றவனென்று "புளி"யாயிருந்தபடியால் அவனிடம் வாதிக்க அனைவரும் பயந்து நின்றுவிட்டனர். "தடுத்தொன்றுஞ் சொல்லாவிட்டால் தம்பிசண்டப்பிரசண்டன்" என்கிறவண்ணம் எதிர்ப்போரொருவருமில்லாததால் மனம் களித்துச் செருக்குற்று, ஓர்நாளிரவு சந்திரன் வெண்ணிலவெறிக்கும்

உன்னத வேளையில் ஆற்றங்கரையில் சிஷகணத்தோடு வீற்றிருந்த சுவாமிகளைக்கண்டு அளவளாவிப்பேசவும் எம்மான் முதலில் மிக்க வணக்கமுடையோராய் நடித்து படிப்படியாய்க் கேசவனை வாதத்திற் கழைத்து கங்கை நதியை வர்ணித்துப் பாடக்கேட்டார். கேட்டதும் கேசவன் "வாசாமகோசர"மாய் நூறு ஸ்லோகங்களை வருஷிக்க, அங்கிருந்தோரெல்லாரும் அவன் வன்மைக்கு வியந்து "ஹரி" "ஹரி" என்று கோஷித்ததோடும், கௌராங்கருக்கு அவ்வளவு வன்மையிருக்குமோ வென்பதைப் பற்றிச் சந்தேகித்தார்கள். உடனே ஸ்வாமிகள் கேசவபண்டிதர் பாடிய ஸ்லோகங்களிற் சிலவற்றைப் பொறுக்கி "இச்சுலோகங்களுக்கு உரைவிசேடமும் அலங்காரவிசேடமு மின்னவெனக் கூறுக" என்று கேசவனைக் கடவியபோது, கேசவனுக்கு மஹதானந்தமுண்டானது. "நாம் மஹாவேகமாய்ப் பாடிவந்த ஸ்லோகங்களை நீர் எப்படி ஞாபகத்தில் வைத்தீர்" என்று கேசவன் ஸ்வாமிகளைக்கேட்க, ஸ்வாமிகள் "எப்படி சிலர் சரஸ்வதியனுக்கிரகத்தால் அதிதுரிதமாய்ப் பாடுகின்றார்களோ, அப்படியே நானும்

" வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் "

ஆகிய சரஸ்வதியினருளால் கேட்டதையெல்லாம் மறவாதிருக்க வரம்பெற்றவன்" என்று விடை பகர்ந்தனர். இதனால் கேசவன் ஸ்வாமியை "சுருதிதரர்" என்றுமதித்து, அவர்பால் முன்னிலும் மிக்க மதிப்பு பாராட்டி, அவர்கேட்ட ஸ்லோகங்களிலுள்ள சொன்னயம், பொருணயம், அலங்காரமேன்மை முதலியவைகளை யெல்லாமெடுத்துக் காட்டினன். இதைக்கேட்டு, பெருமான், "அலங்காரங் கூறியானபின், அப்பாடல்களிலுள்ள குற்றங்குறைகளைக் கூறல்வேண்டாவோ?" என்று சாவதானமாய்க்கூற, கேசவன், "நாம் பாடினதிலுங் குற்றங்குறைகளுள்ளனவோ?" என்று நகைத்தனன்; ஆங்கிருந்தோ ரனைவரும் ஒன்றுந் தோன்றாதவராய் விழித்தனர். ஸ்வாமிகள் அப்பாடல்களை எடுத்துக்கொண்டு ஐந்து குற்றங்களைக்காட்டிச் சமத்காரமாகப் பிரசங்கித்தார். கேசவன் கர்வம் முற்றிலு மடங்கியது; அவ்வூரில் ஸ்வாமிகள் புகழ்யாண்டும் பரவியது.

அன்றிரவு கேசவன் நித்திரையில்லாதவனாய், சரஸ்வதியைத் தோத்திரஞ்செய்ய, அம்பாள் பிரசன்னமாகி, "உன்னைத்

தோற்கடித்தவர் கிருஷ்ணவதாரரென்று நினைத்துக்கொள்; ஆதலின் நீ யொன்றுக்கும் விசனியாது அவரடிபணிந்து தவஞ்செய்போ" என்று கூறி மறைந்தனள். உடனே கேசவர் ஸ்வாமிகளடிபணிந்து நடந்ததைக்கூறி, தன் பொருள்களையெல்லாம் நவத்வீபத்திலிருந்த அதிதிகட்குப் பகுத்துக்கொடுத்து, சந்நியாஸக்கோலம்பூண்டு எந்நாளும் மனிதர் கண்ணிற் படாதுபோயினர்.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான்கொ லென்னுஞ்சொல்"

என்கிறபடி, கௌராங்கர் மஹாபண்டிதரென்கிறபெயர் வந்ததால் சசிதேவியம்மாளுக்குண்டான மகிழ்ச்சிக்கோரளவில்லை. ஆயினும் அவருக்கு மனைவியில்லாதிருந்ததே அந்தம்மாள் மனதுக்கொரு பெரிய குறையா யிருந்தது. அந்தம்மாள் ஆற்றிற்கு ஸ்நாநத்திற்குப் போகுங்கால், அங்கே விஷ்ணுப்ரியையென்கிற கன்னிகையைக் காண்பதுண்டு. அவ்வழகிளங்குமரியின் சுந்தரவொளியே சசிதேவி மனதையுங் கண்ணையும் ஒரு நொடியிற் கவர்ந்தன. நீண்டு சுருண்டு நெய்த்திருண்டு நீலநிறம் பொருந்திய மேகமோ, சந்திரவதனத்தைக் கவரத்தோன்றிய கரும்பாம்போ, அவள் கூந்தல்! காண்போர் கண்ணைப் பறிக்கும் அவளுடைய கண்கள், வேலோ, சேலோ, விழியோ! அதிசுந்தர, மனோரஞ்சித முகமும் தோற்றமும் தெளிவும், நகையும் மேன்மையும் மென்மையும், அன்னநன்னடையும் அருங்கிளி மொழியும், ஒன்றாய்ச்சமைந்த உத்தமவதியாள்! தனக்கேற்ற மணாளர் சைதன்யரையன்றி வேறொருவருமிலரென்று, அவர்மீதில் காதல்பூண்ட மனத்தை யுடையவளாதலின், சசிதேவியைக் கண்டவுடன் விஷ்ணுப்ரியை ஓடிவந்து அந்தம்மாள் திருவடி பணிய "நல்ல கணவனைப் பெறுவாயாக!" என்று அவர்கள் ஆசிர்வாதஞ் செய்வதுமுண்டு. ஒருநாளைப்போ லிவ்வண்ணம் நடந்துவரவும், அக்குமரியின் வடிவழகைக் கண்டும் நடையொழுக்கத்தை மகிழ்ந்தும் தன் மகனுக்கு மனைவியாய்க்கொள்ளின் சால நன்மை பயப்பதாம் என்று சசிதேவிக்குப் பேரவா குடிகொண்டிருந்த போதிலும், அக்குமரியின் தந்தை மிகத் தனவந்தராயும் குலமுறை யோசிக்குமிடத்துத் தங்களைக்காட்டிலும் சிறிதுயர்ந்தோராயுமிருத்தலின் தமதெண்ணத்திற் கியைவரோவென்று தனக்கு சந்தேகமிருந்ததால், சசிதேவியம்மாள் தனக்கு ஆப்தராகிய ஒருவரை விஷ்ணுப்ரியையின் தந்தையாரிடம் விடுத்து அவரெண்ணத்தை யாராய்ந்துவரச் சொல்லினர். ஏற்கவே விஷ்ணுப்ரியைக்கும் அவர் தந்தையார்க்கும் இவ்விவாக விஷயத்தில் பூரண சம்மதி யுதித்திருந்தது. கௌராங்கருடைய திவ்விய முகோல்லாசமும், கருணாநயனமும், கோடிபாஸ்கர தேஜஸும், காளிதாஸ பவபூதிசமான பாண்டித்தியமும் அவர்கள் மனதை முன்னரே கவர்ந்தன. இதனாற்றான் விஷ்ணுப்ரியை தினந்தோறும் சசிதேவியம்மாளை நமஸ்கரித்துக்கொண்டு வந்தது. அவர் தகப்பனருக்குப் பூரண விருப்ப மிருப்பினும், கௌராங்கஸ்வாமிகளுடைய "தான்தோன்றி" நடக்கையினால் நேரில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப் பெரிதுமஞ்சியிருந்தார். ஆயினும் சசிதேவியம்மாள் ஒருவரையனுப்பி, அவர்களெண்ணத்தை யாராய்ந்துவரச் சொன்னதால், அதுவே யவர்கட்கு நல்ல சந்தர்ப்பமானது. விஷ்ணுப்ரியையுடைய மனதோ, பூக்களைச் சுற்றித் திரிந்து மதுவுண்ணும் வண்டுபோன்றும், அறிவு பழுத்த பெரியோர்பால் சத்துவகுணம் உறைவது போன்றும், சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும், சைதன்யரிடமே அடைக்கலம் புகுந்திருந்தது. அவர்மீது அளவிறந்த அன்பும் காதலும் கொண்டவளாதலின், உண்பதும் வேண்டாது உறங்குவதுஞ் செய்யாது, விஷ்ணுப்ரியை நாளுக்குநாள் உடல் மெலிந்து பலங்குன்றி பித்தம் பிடித்தவள்போல் தோன்றினள். தன் தோழிகள் செய்யும் உபசாரத்தைச் சிறிதும் விரும்பாதவளாய் அவர்கள்மீது எரிந்துவிழுவாள்; தாய் தந்தையர் சொல்வதைச் சிறிதும் கேளாது, மௌனஞ் சாதிப்பாள். அனைவர் மனதையும் ரமிக்கச்செய்யும் சந்திரனே அவளுக்கு முந்தின விரோதி. ஒவ்வொரு சமயத்தில், தன் மனதை வருத்தும் ஆறா மையலால் தேகம் தகிக்கப்பட்டு வருந்த அதை நீக்கவேண்டி தோழிகள் தாமரைப் பூக்களாலும் பனிநீராலும் சைத்யோபசாரஞ்செய்ய, சுகந்த சீதவஸ்துக்களே கொடுந்தீயாய்க் கொளுத்தி அவளை யலறச்செய்தது; கைவளை மெலிந்தது; கண்ணீரிறைத்தது; கண்ணனைக் காண்பதெப்போவென்று கதறியது.

"ஆதியந்தங் காட்டாம லப்பரம்போ லெங்நிறைந்த
சோதி யருட்கடலைச் சேருநா ளெந்நாளோ"

என்று புலம்பிப் புலம்பி, ஜானகிப்பிராட்டியார் ஸ்ரீராமனைப் பிரிந்து மனம் புண்ணடைந்து ஆவிநீத்ததும் நீவாததுமாயலறிய கஷ்ட அசந்தர்ப்ப காலத்திலும், ராமநாம ஸ்மரணையாகிற ஜீவ

னமே செய்ததுபோல், விஷ்ணுப்ரியையும் சைதன்ய ஸ்மரணையே செய்துகொண்டிருந்தனள்.

விஷ்ணுப்ரியையின் தந்தையார் தன் புதல்வி படுந் துன்பத்தைக்கண்டு மனம் மிகவருந்தி "யானென்செயக்கடவேன்; நம்மாலியற்றக்கடவனவாகிய சௌக்கியங்களைச் செய்தும் நம் குழந்தை நாளுக்குநாள் மெலிகின்றதே! விளையாட்டுகளில் மனஞ் செல்லாது, இவ்வகை மருள் கொண்டிருக்கிறதற்குக் காரணம், சைதன்யர் மீதிலுண்டான காதலேயன்றி வேறன்றெனப் புலப்படுகின்றது;

'பந்தோடு கழல்மருவாள் பைங்கிளியும் பாலூட்டாள் பாவை பேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோ வென்றென்றே வளையுஞ் சோரும்
சந்தோகன் பௌழியன்ஐந் தழலோம்பு தைத்திரியன் சாம வேதி
யந்தோவந் தென்பகலேச் செய்தனக எம்மனைமீ ரறிகிலேனே'"

என்று பரிதபித்துக்கொண்டிருந்தவர் சந்தோஷத்துடன் சம்மதி கொடுக்க விவாகத்திற்கு வேண்டிய காரியங்களெல்லாந் தொடங்கிவிட்டன, முன் விவாகத்தைப்போ லல்லாது, இத்திருமணம் அரசிளங்கோக்களுக்கு நிகழும் சர்வோன்னத விதமாய் நடத்த மனம்வைத்து, கௌரங்கர் கலாசாலையிருந்த வீட்டுரிமையோரும், பெரிய காயஸ்தாதனவந்தருமாகிய "புத்திமந்தாகான்" என்பவர் செலவு முழுமையும் தானே கொடுக்க ஒப்புக்கொண்டார். "நான்கொடுக்கிறேன், நான்கொடுக்கிறேன்" என்று போட்டி போட்டுக்கொண்டு வந்த செல்வவான்களி லொருவரேனும் ஒரு காசுங் கொடுக்கவொட்டாது, புத்திமந்தாகான் தானே யனைத்துக்கும் செலவழித்தார்.

விவாகசடங்குகள் தொடங்கியதும், ஸ்ரீகௌரங்கரை யலங்கரிக்க வாரம்பித்தனர்: மண்ணில் விழுந்து புழுதியிற் புரண்டு நால்வர் நகைக்கத்தக்க காரியமாகிய நடனத்தை யியற்றியபோதே, அவர்முகவழகும், கண்வனப்பும் கண்டு அங்குளோர் மெய்ம்மறந்தனராக, இக்காலை அவரை யலங்கரித்துவிடவும், மாசுபடியாத கண்ணாடி போன்றும், குற்றமற்ற உத்தம சித்திரம் போன்றும், விளங்கினர். நல்லுணர்ச்சியோருக்கு அருவருப்பைத் தராதெக்காலமு மானந்தத்தையே பயக்கும், அவருடைய மார்புவிசாலமும், புயங்களின் கோலமும் செப்பமுடியாது. பூரணகிருஷ்ண சுந்தரம் பூண்ட எம்மான் மணக்கோல பவனி புறப்பட்டனர்.

சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

ராமசாமி கொண்ட கோலம் என்னால் சொல்லப்போமோ

அநுபல்லவி.

கோமிளிலே ராசன்முன் அனேககோடி மன்மதனே நிகர் ஆக (ராம)

சரணம்.

ஆகமீது உன்ன. வன்னம்
ஆணபணிகள் மின்ன பச்சை
மேகம்போலே காந்தி விளங்கும்
மேனியில்கலவை ஏந்தி
வாகுமந்தரகிரிமுறுக் குண்ட
வாசுகியெனமணிவடங் கொண்ட
நாகரீககேயூரப்ஒளி மண்ட
வீரகோ தண்ட (ராம)

என்கிறபடி ஸ்வாமிகள் சர்வாலங்கிருதராய் பவனிவர, அதைக் கண்ட சர்வ ஜனங்களும் தத்தம் நிலைதடுமாறி மயங்கினர். வீதியிற் செல்லும் மாதரார் தம்மைத்தாம் மறந்து சர்க்கரையை யீக்கள் மொய்ப்பதுபோன்று ஸ்வாமிகளைச் சுற்றிக்கொண்டு "ஹா! ஹா! இத்திவ்யசுந்தர பாலரூபம் யாதோ! மன்மதனையே யழகுக்குவமையாய் நூல்கள் கூறியிருக்கினும், அக்கருப்புவில்லியும் செருக்கு நீங்கித் தன்னெழில் விடுத்து ஓடச்செய்கின்றதே; இவன் 'மயிர்வனப்புங் கண்கவருமார்பின் வனப்பும்' உண்மையில் நமது கண்களைப் பறித்துக்கொண்டு போகின்றதே! இந்த அற்புதப் பொற்பினனை நற்புருடனைப் பெறுபவளே, பாக்கியசாலி! அவள் முன்னாட்செய்த நற்றவமே யவளுக்குக் கணவனை யிழுத்துக்கொண்டு வந்ததுபோலும்! அவளே மாதருண் மிக்கவள்! உயிர்வாழத்தக்கவள்: நாமிருந்துமென்! போயுமென்!" என்றேங்கியழுதார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் பரவசப்பட்டு,

"ஆடகலோகத்தமுதை யீக்கள்மொய்த்துக் கொண்டதுப்போல்
ஐயனைமொய்த்துக்கொண்டார் வெகுமாதர்

கோடைதனிலேதண்ணீ ரோடக்கண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்

ஆழியும்வளையும்செம்பொன் ஓலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடாமல்நின்றாள் ஒருமாது

கேள்விமுறையில்லையோ ஸ்வாமியுன் அம்பாலே
கிழிக்கின்றான்மாரனென்றாள் ஒருமாது
கண்ணுக்கோருருவாய் பார்ப்போர்கண்ணிலெல்லாம்தோன்றுமிவர்
கண்ணனேயாகுமென்றாள் ஒருமாது
மண்ணும் விண்ணுங் கடந்தானைக் கண்ணால் வளைத்துக்கொண்டாளே
வைதேகியேபெண் என்றாள் ஒருமாது"

என்கிற விதம் பகவத் ஸ்வரூபாநுபவத்திற் பந்தப்பட்டு நின்றனர்கள். சிலர், எம்பெருமானை யுற்றுப்பார்த்தோர், தாம் முதலில் நோக்கிய அவயவங்களிலேயே மனம் நிறுத்த நேரிட்டது.

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண்டாரை யொத்தார்."

என்று எம்பெருமான் திவ்ய தேககாந்தியில் ஈடுபட்டோர்கள் மனமுமொரு வழிப்பட்டு ஸ்தோத்திரஞ் செய்து கொண்டிருந்தனர். இவ்வாறாக ஸ்வாமிக ளெழுந்தருளி விவாகக்ருஹத்திற் பிரவேசித்தனர். அன்னையராகிய விஷ்ணுப்ரியையு மாங்கு அழைத்துவரப் பட்டனர். அவருடைய சுந்தரமுக விலக்ஷண்யம் கௌராங்கர்க்குச் சிறிதும் தோலாததா யிருந்தது.

"சங்கினை யுடைமையாலுந் தாமரைக் கோயிலாலும்
எங்கெங்கும் பரந்து வெவ்வேறுள்ளத்தி னழுந்திற்றென்ன
அங்கங்கே தோன்றலாலு மருந்ததி யனையகற்பின்
நங்கையு நம்பியொத்தா ளினிப் புகல்வ தென்னோ."

மேலும் அவருடைய அழகே பேரழகாயிருக்க, அவரை விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரித்தது,

"அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழமை யுடைத்து மாதோ."—

அமிர்தத்தைப் பின்னு முருசிப்படச் செய்வது போல் பயனற்றதாயிருந்தது. சாதாரண ஸ்திரீகட்கு, ஆபரணங்களால் அழகு செய்யின் பிரகாசித்த லில்லாது, விஷ்ணுப்ரியையின் உருவத்திற் படிந்து பணிசெய்யும் அழகை யவ்வாபரணங்கள் சிறிது மறைத்து வருகின்றது எனக்கூறின் அவ்வழகிருந்தவாறு யாம் கூறவேண்டுகிற்றிலதாகிறது.

இவ்வித மேன்மை யமைந்த தம்பதிகள் சர்வாபரண பூஷிதர்களாய், மறையவர் மந்திரங் கூறவும், மத்தள முரசு காகள தாளங்கள் கோஷிக்கவும், நல்லிசைப் புலவர்க ளின்னிசை பயிலவும், விவாகம் நிறைவெய்தப்பெற்றுத் தம்மனைவந்து சேர்ந்தனர்.

இக்காரணங்களால் சசிதேவியம்மாள் மனமெனுங் கடலை தன் புத்திரன் மருமகள் ஆகிற இரண்டு சந்திரர்களும் பௌர்ணமி சந்திரர்களா யிருப்பதைக் கண்டு ஓங்கியெழுந்து மலையுயரஞ் சென்றானந்த மடைந்தது. கௌராங்கர் வழக்கப் பிரகாரமே, விளையாட்டுடைய நடத்தையராய்க் காலங்கழித்துவந்தார். கையிற் பணமொன்றுமெடுத்துக்கொள்ளாமலே விலையுயர்ந்த வஸ்துக்கள் வாங்கப் புறப்பட்டு, தம் நண்பர்களையெல்லாம் "ஏன் வருவதுதானே! அப்படி....திரிந்து வருவோமே!" யென்றழைப்பர். "கையில் பணமொன்று மெடுத்துக் கொள்ளவில்லையே!" என்றவர்கள் கூறின் "தேவையில்லை; ஒவ்வொருவர் ஆசை எவ்வள விருக்கின்றது பார்ப்போம், வாருங்கள்!" என்று அவர்களை அழைத்துக் கொண்டு முதலில் ஒரு கடைக்குப் போவார். கடைக்காரனைப் பார்த்து "உன்னிடம் உயர்ந்த துணிகளிருக்கின்றனவா? எடு, பார்ப்போம்!" என்பார். அவன் நூறு, ஆயிரம், வராகன் பெறுமான துணிகளை எடுத்துக் காட்டும்போது, "பணமெடுத்துக் கொண்டுவர மறந்துவிட்டேன்" என்று மெள்ளக் கூறுவர். "ஆயினென்ன? தாங்கள் வந்து வாங்கிக்கொண்டு போகும் பாக்கியம் பெற்றோமே, கடனாக எடுத்துக்கொண்டு போவதுதானே" யென்றால், "நான்கடனாக வாங்குகிற வழக்கம் கிடையாது" என்று ஸ்வாமிகள் சொல்வர். கௌராங்கருடைய தேவவுருவத்தைக்கண்ட கடைக்காரன், பக்திமிகுந்து பரவசமாகி "என் ஐயனே! குடிமுழுதாண்டகோவே! உம்மைப் பார்த்தால் பாலகோபாலனே எதிர் வந்தாற்போலிருக்கின்றது! இந்த வஸ்துக்களை யெல்லாம் தாங்கள் எடுத்துப்போகலாம். எனக்குப் பணம் வேண்டுவதில்லை" என்றுகூறி, அவர் திருவடிகளிற் பணிந்து, அவர்கேட்ட பொருள்களையெல்லாம் கொடுத்து விடுவன். இப்படி ஒவ்வொரு கடையிலும் சென்று தன் தெய்வத் திருவுருவத்தின் உய்யச் செய்யுந் திருவருட் சக்தியாலேயே விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் காசு கொடாமற் பெற்றுப் போய்க்கொண்டிருக்கையில், தான் அடிக்கடி கேலி செய்துக்கொண்டிருந்ததனால் மனம் வருந்திப் புண்ணாயிருந்த ஸ்ரீ வைஷ்ணவராகிய ஸ்ரீவாஸரென்பவருடைய

கடையை நெருங்கி, "அப்பப்பா நீ பேராசைக்காரன்! சாக்கடையிற் போடத் தகுவனவாகிய உபயோகமற்ற உன் கடைச் சாமான்களுக்கு நூறு, ஆயிரம் என்று விலை கூறுவது உன் வழக்கம்!" என்று சும்மாவாயினும் ஸ்வாமிகள் கூறவும், "தயவு செய்து வேறுகடைக்குப் போகிறதுதானே! என் கடையில் வந்தேனிழவு கொடுக்கிறாய்! நான் மிக்க ஏழையாயிற்றே!" என்று மனம் வருந்தி ஸ்ரீபாஸர் கூறினார். உண்மைப்பக்தனென்று ஸ்ரீபாஸர்மீது பகவானுக்கு மிக்க அன்பிருந்ததாயினும், அதைக் காட்டிக்கொள்ளாது தன் கருணையையே கோபமாய்க் காட்டி, "அக்கக்கோ! உன் அறியாமைக்கு வியக்கேன்! நீ இவ்வாறு உன் கடைக்கு வந்தாரை யெல்லாம் அவதூறாய்ப்பேசி யனுப்பி விடுவதால்தான் உன் கடைக்கு ஆயிரக் கணக்காய் சனங்கள் வந்து விழுந்து, நீயும் தரித்திரத்தையொழித்து மிக்க தனவந்தனாயினை! போடா போ, பேயா!" என்றனர். ஸ்ரீபாஸருக்கு பொறுக்க முடியாத கோபமுண்டு "எல்லாருக்கும் வயததிகரிக்க அதிகரிக்க, புத்தியும் நன்னடக்கையும் பெருகிக்கொண்டே வரும்; உனக்கோ வயதாக ஆக, சிறு குழந்தையாகிறாய்" என்று கடுமையாக ஸ்வாமிகளை நோக்கிக் கூறவும், ஸ்வாமிகள் "வெகுநன்று! வெகுநன்று! வெகுநன்று!! நீ தினந்தோறும் கங்காதேவிக்குப் பூசைபோடுகின்றனையாவல்லையா? கங்கை தகப்பனாகிய எனக்கு நீயேனொன்றுங் கொடுத்திலை?" என்று கேட்டனர். (இந்த ஸ்ரீபாஸர், இன்னுஞ் சிலநாள் பொறுத்து ஸ்வாமிகளின் இடைவிடாத அன்படியராயினர்.) இப்படி லீலைசெய்து வீடு சேர்ந்து தான் கொண்டுவந்த பொருள்களுக்கெல்லாம் பணங்கொடுத்தனுப்பிவிட்டார். "இப்படியுந் திருவுள்ளமிருக்குமா!" என்றங்கிருந்தோரனைவரும் மிகவாச்சரியப்பட்டார்.

நான்காவது அத்தியாயம்.

ஸ்ரீகயாக்ஷேத்ர தர்ஸன பலன்.

நாளடைவில், ஸ்வாமிகட்குண்டாயிருந்த விரோதிகளும், அவருடைய குணாதிசயங்களாலும், வாத்ஸல்ய சௌலப்யத்தாலும், அவரை விரும்பினாராயினர். இவ்வாறு

"பத்துடை யடியவர்க்கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்புந மரும்பெறலடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடையாப்புண்
டெத்திற முரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே."

என்று பலபேர் துதிப்பார்களாகி, "ஸ்வாமின்! உன் அருட்பெருமை மலைக்குச் சமானமாயிருக்கினும், உலகிடைப் படிந்து விளையாட்டுகளில் சிறிய பிள்ளைபோலாடிவருகின்றனையே! உன் பெருமையிருந்தவாறறியேம்" என்று உள்ளுக்குள் வியந்துகொண்டிருந்தனர்கள். இப்படி நிகழும் நாட்களில், ஒருநாள் தன் தாயாரை நோக்கி ஸ்வாமிகள், "என் முதாதைகள் கடனைக் கழிக்க, ஸ்ரீகயா க்ஷேத்திரத்திற்குச் சென்றுவர அவாவுற்றுள்ளேன். ஆதலின் தடுத்தொன்றுங் கூறாது எனக்கு விடைகொடுத்தருள்க" எனக்கூறி விடைபெற்றுத் தன்னுடன் தனது சிறிய தாயார் கணவராகிய சந்திரசேகரையும் மற்றுஞ்சிலரையும் துணையாகப்பற்றி, நவத்வீபத்தினின்றும் புறப்பட்டனர். சுவாமி அவதரித்ததுமுதல் யாதொரு நோயுங் காணாத வுடலில் சுரங்கண்டது. சுவாமிகள்ஜீவதசையில் அவருக்குண்டாகிய தேகரோகமிஃதொன்றேயாம். சுரநிவாரணமானது முதல் அவருடைய நடை முற்றும் மாறியது. விளையாட்டுப் போக்குகளெல்லாம் போய் ஆலோசனையாலபகரிக்கப்பட்ட முகமும், பக்தியாகிற பெருவெள்ளம் பாய்வதனால் "அமுதகீதவலையாற் சுருக்குண்ட" தோற்றமும், அவரிடம் விசேடமாயுண்டாயின. கயா க்ஷேத்திரம் நெருங்கினர்; சொல்லமுடியாத ஆனந்தங்கொண்டனர்; பக்தியென்னு மமுதை வாரியுண்டனர்; கைகூப்பித் தெண்டனிட்டனர்; அவ்விடம் கண்ணன் சீர்பாதத்தைக்கண்டு பரவசராய்; அசைவற்றுச் சித்திரப்பதுமை

போல் நின்றார். தன் மனமாகிற புஷ்பத்தைக் கண்ணபிரானது திவ்விய திருவடிகளிற்றாவி அகந்தையையு மமதையையும் இகந்து ஜீவன்முக்தராகி விகசித்தராய்த் தோன்றினார். பக்திமஹாத்மியத்தில் பொன்னாலாகிய அருச்சாரூபமொன்று உயிர்தாங்கி அசலமாய் நிற்பதுபோல பெருமானார் ஆங்கு வந்திருந்த பக்தர்களுக்கிடையே ஸர்வஸ்ரேஷ்டராய் அஞ்சலி அஸ்தங்களுடன் நிற்க, அவர் பொன்மேனியிற்பதித்த பக்தி நவமணிகளும் அசாதாரண ஜாஜ்வல்ய கிரணங்களைப்பரப்பி இருள் தருமாஞாலத்தையொளிபெறச்செய்தது. ஸ்வாமிகள் மனதில் அதுகாறும் படிந்திருந்த பக்தியோ, உத்தம ரத்தினமாகிய மாணிக்கமேயாயினும், அதை மழுங்கச்செய்து கிடந்த மாயைச் சாயைபோயொழிய, தற்சிவிபொருளனும் கிட்டிலன்; இக்காலை எம்மான்றன், செம்மா நியமத்தாலேயே, கயாக்ஷேத்திர துல்லியகாரணமேற்படவும், நல்ல கல்லின் பொல்லாங்கொழிந்து, வில்விச நேர்ந்தது போலும்! “ சுடர்விளக்காயினும், தூண்டுகோலொன்று வேண்டு”வதுபோல், ஸ்வாமிகள் தம் தெய்வீக பக்தி மேன்மை புலப்பட, நல்ல சமயம் வாய்த்தது, கயா க்ஷேத்திரத்தின் தோற்றம் யாவு மேற்றமாகவே யவர்க்குத் தோன்றின: அவ்வூர்ச் சோலையும் சாலையும், வீதியும் நீதியும், பக்தியும் சத்தியும், கோயிலும் வாயிலும், கொடிகளும் படிகளும், பூசையும் ஓசையும், தூபமும் தீபமும், சத்துவ தத்துவங்களை யவர்க்குக் காட்டின. “கடல் ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும், கடல் ஞாலமாவேனும் யானே யென்னும்” என்று சடகோபமுனிவர் கூறியிருக்கும்வண்ணம், “சர்வம் விஷ்ணுமயம் ஜகத்” என்னும் உண்மை அவருள் ளூடுருவிப்பாய்ந்தது; கைகாலோய்ந்தது; முன்னடத்தைமாய்ந்தது; அந்தகாரமும் சாய்ந்தது. அவர் கண்களினின்றும், முதலில் ஒரு நீர்த்துளி விழுந்தது; அஃதே யொரு சிற்றாறுபோன்று முகத்தில்வடிந்தது; அரைநிமிஷஞ் சென்றது; மற்றொரு துளியெழுந்தது; அஃதும் யாறாய்வீழ்ந்தது. இவ்வகை பலதுளி பெருவெள்ளமாய், குறுமுனிவன் சிறு குடங் கவிழ்ந்து, அதிபுண்யநதியான புராணக்கொள்கைப்படி, அவர் யாக்கை முழுதும் நீர்ச்சேக்கையாயிற்று. துக்கத்தால் கண்ணீர் மிக்குப்பெருகின; உதடுகோடியும் முகம்வாடியும், கண்ணிடுக்கியும் கால்நடுக்கியும், தோன்றும் பல்வகைத்தாய அல்லல்போலிலாது, இங்கே பக்தியாங்கும் சக்திபூத்து: ஆனந்தக்கண்ணீர் வானந்தயமாகிப்போன்றாற்றலின் அவர் தம் பொன்பழுத்தநன்னாட்டில் ப்ரேமை முதலிய ஒப்பற்ற

சற்குணங்கள் மூப்போகம் விளைந்து செழுமையுறச் செய்தது. “என் அப்பனே! ஒப்பிலா மணியே! தேனினுமினித்துப்பாலினுஞ்சுவைத்த தெள்ளியவமுதே! எனக்குன் கருணை வாராதோ! பக்தியமுதம் தாராதோ! அடியாரோடெனைச் சேராதோ! என்மனம் ஓராதோ!” என்று கதறுவார் ஒருவேளை. “பொல்லேன் யான்! ஊனே, புடையே, புறக்கமே, வேண்டி அல்லும் பகலும் தொல்லையிலாழ்ந்து நல்லதென்றஃதையே நினைத்துப் புலைத்தொழில் பயிற்றும் புல்லியேன் யான்” என்று பதறுவார் ஒருவேளை. இவ்வாறு பலவகை புலம்பி, கடைசியாக, க்ருஷ்ணசுந்தரத்திலீடுபட்டு, பிரிவாற்றாமையாற் கலங்கி கண்ணீர் கம்பலையுமாய் நின்று,

“ஒப்பனை கடந்த அப்பனே வாராய்
அழகுக்கோ ரணியே யையனே வாராய்
குழலினி தூதிக் குழகனே வாராய்
மையலின் மயங்கி மனந்தடு மாறுமென்
இன்னல் தீர்க்க இறைவனே வாராய்
நன்னல மருள நாதனே வாராய்
அழகைக் காட்டி யகன்றது மேனோ
மனதைக் கெடுத்து மறைந்தது மேனோ
புன்னகைக் கோலமும் புனிதவொய் யாரமும்
இன்னிசைப் பாட்டு மினியநல் லாட்டமும்
விளங்கவே வாராய் விசனம தொழிப்பாய்
களங்கமு நீக்கிக் கடுகியே வாராய்.

ஈவிலாத தீவினைக ளெத்தனை செய்தனன்கொல்!
தாவிவையங் கொண்டவெந்தாய் தாமோதரா வென்றென்று
கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனிசோர நின்றால்
பாவிநீயென் றொன்றுசொல்லாய் பாவியேன் காணவந்தே,’”

என்று கூவித் தன்னை முற்றிலும் மறந்து, உலகத்தை வேருடன் துறந்து க்ருஷ்ணபக்தியாகிற கடலில் மிதப்புண்டு சர்வமூர்ச்சிதராய்க் கீழே விழ, அங்கு நின்றுகொண்டிருந்த (நாம் முன் பிரஸ்தாபித்துள்ள) ஈஸ்வரபுரியென்பவர் தாங்கிக் கொண்டார். பிறகு சிறிது களைதெளிந்தெழுந்து தாமிறங்கியிருந்த விடுதிக்குச்சென்று ஆங்கு ஈஸ்வரபுரிப் பெரியோருக்

குணவளித்துத் தாமுமுண்டு, அவரைத் தமக்கு ராதாகிருஷ்ண பக்தியாகிற உபதேசத்தைச்செய்யவேண்ட, அவரும்,

"பூணாதனலூர் தறுகண் வேழம் மறுக வளமருப்பைப்
பேணான் வாங்கி யமுதங்கொண் டுகந்த பெருமான் திருமார்பன்
பாணா வண்டு முரலுங் கூந்த லாய்ச்சியர் தயிர்வெண்ணெய்
காணா துண்டான் நாமஞ் சொல்லில் நமோ நாராயணமே.";

என்று உபதேசங்கூற, அன்று முதல் "கிருஷ்ணா! கிருஷ்ணா! என்னெதிரில் வாராயோ, என்னைத் திரும்பிப் பாராயோ,

'பாராயோ வென்னைமுகம் பார்த்தொருக்கா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே!'"

என்று கூச்சலிடுவதும், சுற்றிலும் நடப்பதை முற்றிலும் மறப்பதும் ஆகி, க்ருஷ்ண பைத்தியம் மேற்கொண்டனர். "ப்ருந்தாவனம்சென்று என் கண்ணனைப் பார்த்தாற்றான் என் கண் மகிழ்வெய்தும்" என்று கூறி எழுந்தனர். புறப்பட்டு வரும்போதே தன் அருமைக் கண்மணியைத் தன்னிடம் சாக்கிரதையாய்க் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று சசிதேவியம்மாள் பன்முறை கூறியிருந்ததால், அங்கிருந்தோர், ஸ்வாமிகளைப் பக்குவமாய் நவத்வீபங் கொண்டுவந்து சேர்த்தனர்.

ஸ்வாமிகள் நவத்வீபம் வரும் சங்கதி கேள்வியுற்று அவ்வூரிலுள்ளோரனைவரும் வந்து பார்க்க, அவர் மனதில் யாதோவொருகவலை புகுந்துகொண்டிருப்பதையும் அதனால் அவர் முகவிலாஸமடைந்திருக்கும் மாறுதலையும் முன்போல் விளையாட்டுப் "பராக்கி" யில்லாது, மனங் குவிந்திருப்பதையுங் கண்டனர். சசிதேவியம்மாளும் இதைப்பார்த்து, "உலக வாழ்க்கையிற் களிப்புண்டு நம்மையெல்லாம் மகிழ்வுறுத்துவன் என்று நாம் எதிர்பார்த்திருக்க, இவ்வாறாயினனே! நம் குழந்தை யென்று பாவிக்க இடமில்லையே!" என்றுள்ளுக்குள் குழைந்தனர். சதாசிவர் ஸ்ரீமானென்பவர்களையும், முராரியையும் தான் என்னவோ சமாசாரம் சொல்லவேண்டுமென்று கௌராங்கர் அழைத்திருந்தபடியால் அவர்களெல்லாரும் வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகளும் தான் கயாவுக்குச்சென்ற கதையைச் சொல்ல வாரம்பித்து, அதிக சமத்காரமாய்ப் பேசிக்கொண்டு வந்தவர் "ஸ்ரீகிருஷ்ண ஸ்ரீபாதத்தைப்பார்த்தேன்" என்று சொன்னமாத்திரத்தில் தன்னைமறந்து மூர்ச்சிதராயினர். மயக்கமிருந்தகாலத்திலும் "கிருஷ்ணா!" "கிருஷ்ணா!" என்று சொல்லமுயன்றதால் "இஃது அளவுகடந்த கிருஷ்ணபக்தியே!" யென்று அனைவரும் நினைத்தார்கள். களைதெளிந்தபின், அனைவரும் மறுநாள் சுக்லாம்பார் வீட்டில் வந்து சந்திக்கும்படியாய் ஸ்வாமிகள் கூறினர். அங்கும் ஸ்ரீபாதத்தைப்பற்றிப்பேசுமளவில், முன்போல் மயக்கமுண்டாகி மாறியக்காலும், கண்ணீர் தாரைதாரையாய்ப்பெருக, "ஆராவமுதே! அருட்கடலே! சுந்தரவடிவே! சுயம்பிரகாசமே! உன்னைப்பிரிந்து யான் ஆவிதரிக்கேன்," என்னும் பாவனை நிகழ,

"கங்குலும் பகலுங் கண்டுயி லறியாள் கண்ணநீர்க் கைகளா லிறைக்குஞ்
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்புந் தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனந் தரிக்கே னுன்னைவிட் டென்னு மிருநிலங் கைதுழா யிருக்கும்
செங்கயல் பாய்நீர்த் திருவரங்கத்தா யிவள்திறத் தென்செய்கின் றாயே"

யென்று அங்கிருந்தோரனைவரும் அத்யாநந்தபரர்களாய் "இவ்வளவு விசேஷபக்தி யாண்டும் யாம் கண்டதில்லை; இது சர்வேஸ்வரன் மகிழத்தக்கதே," யென்று பிரார்த்தித்தனர்கள்.

அன்றிரவு பள்ளியறையில் விஷ்ணுப்ரியை வந்ததும், ஸ்வாமிகள் அதுகாறு மடக்கிவைத்திருந்த கண்ணீர், காதன் மனைவியைக்கண்டது மடங்கப்பொறுதாய், யாறுபோற்பெருக, வயதிளஞ் செல்வியாகிய விஷ்ணுப்ரியை மனந்தாளவில்லாது நடுநடுங்கி, "வெளியில் போயிருந்து பன்னெடுநாள் கழித்து வந்தவர் நம்மிடம் கொஞ்சிக்குலவி முத்துமுத்தாடியிருத்தல் நீங்கி இவ்வாறு துன்பச்சைகைகளால் நம்மனதை யிடர்ப்படுத்துகின்றனரே!" என்று ஒன்றுந் தோன்றாதவராய் தன் மாமியை நோக்கி "அம்மா! இப்படிவந்து பார்க்கவேண்டும்" என்றுகூற, சசிதேவியம்மாள் ஓடிவந்து, "என்னருமைமகனே! உனக்கென்ன இடர்நேரிட்டது?" என்று ஸ்வாமிகளைப்பன்முறைகேட்கவும், இவையெல்லாங் காதில் நுழையாது பேசாதிருந்து, கடைசியாக, அவர், "என் அருமைத்தாயே, யாரோவொரு சுந்தராங்கன் என் கனவில் தோன்றி மறைந்தனன்; அவன் கன்வனப்பும் முகவனப்பும் என்னால் வருணிக்கத் தரமில்லை: அவன் கண்கள், கருணைக்கண்களே; முகமும், நகை

பூத்த முகமே; திருவாய், அருள்வாயே; நாதமும், கீதமே: அப்பேரழகினன் என் மனதைக் கவர்ந்து என்னை யல்லலில் விடுத்துப்போயினன்! யான் என்செய்கேன்! அதுமுதல் என் மனம் அவன் பின்னரே போகின்றது; மற்றைப்படி வேறொன்று மில்லை," என்று கூறினர். மாமியும் மருமகளும் "இது கிருஷ்ணபக்தியே" என்று நினைந்தனர்.

கௌரங்கரிவ்வாறு கிருஷ்ணபக்தியால் தன்னை மறந்து தலைவன்றாள் வணங்குவதை ஸ்ரீமான் மூலமாய் ஸ்ரீபாஸர், கதாதரர் இவர்களெல்லாரு முணர்ந்து ஆனந்தபரவசரா யிருந்தனர்கள்; ஒருநாள் ஸ்வாமிகள் தனது உபாத்தியாயராகிய கங்காதாசரைக் காணச்சென்றனர். அவர் தன் சிஷருக்கு ஆசிர்வாதம்செய்து, "நீ யேனப்பா இன்னும் கலாசாலையைத் திறந்து, உன் மாணாக்கர்களுக்குப் பாடங் கற்பியா திருக்கின்றனை? அவர்களெல்லாரும் உன்னிடம் படித்தால் படிக்கிறதே யல்லது வேறு யாரிடத்திலும் படிக்கிறதில்லை யெனப் பிரதிக்கினை பூண்டுளார். ஆதலின் நீ யுடனே பள்ளிக்கூடம் வைத்து அவர்கட்குப் போதிக்கின் அவர்கள் படித்ததை மறவாதிருக்கக் கூடுவதுமன்றி உன் கல்வியும் நிலைபெறும்;" என்று சொல்ல அவ்வாக்கினையைச் சிரமேற்று மறுநாள் பள்ளிவைத்தனர். அன்று வழக்கப்பிரகாரமே பிள்ளைகள் படிக்க வாரம்பிப்பதற்கு முன் "ஹரி, ஹரி" யென்றனர்கள். இச்சொற்கள் தனது காதில் விழுந்தமாத்திரத்தில், கௌரங்கஸ்வாமிகள் தன்னை மறந்து "ஹரி" யென்கிறசப்தத்தின் தாத்பரியத்தைப் பற்றியும், திவ்ய கல்யாணகுண விசேஷங்களைப்பற்றியும் ஞானத்தைக் காட்டிலும் பக்தியே அதிகவிசேடமென்றும் அஃதே முத்திக்கு மார்க்கமென்றும் பிரசங்கம்செய்து அன்றைப்பொழுதெல்லாம் போக்கிவிட்டனர்; பொழுதுபோனதும் தான் தன்னை மறந்து செய்தகாரியத்திற்காக மிகவும்வெட்கி, அதையொருவாறு சமத்காரமாய் மறைத்து, "இன்று முதற்றின மாதலால் இவ்வாறு பகவத்விஷயமாய்ப் பொழுதைப்போக்கினது நன்மையே! நாளைத்தினமுதல் பாடங்களைப் படிப்போம்," என்று கூறினர். மாணாக்கர்களும் சரியென் றொப்புக்கொண்டார்கள். மறுநாள் பாட மாரம்பிக்கும்போது முன்னாள் கதையேயானது. இப்படி சிலநாள் பார்த்து மாணாக்கர்கள் பொறாது, "நாம் இத்தனை நாள் படிக்காதிருந்தும் நம்முடைய ஆசிரியர் வந்தவுடன் எல்லாவற்றையுஞ் சேர்த்துப் படித்துவிடக் கூடுமேயென் றெதிர்பார்த்திருக்க, இவர் க்ருஷ்ணனைப் பற்றியும், ஹரி பக்தியைப் பற்றியும் உபந்நியாஸஞ் செய்கின்றாரே, நாம் என்செய்வோம்! இதை இவராசிரியராகிய கங்காதாஸிடமாவது கூறுவோம்," என்று ஒருமுடிவுக்கு வந்து கங்காதாஸிடம் சென்று நடப்பதைக் கூறினர். அவர் கௌரங்கரை யழைத்து "நீ யிப்படி செய்வது சரியன்று! நீ பக்திமானான விஷயத்தில் எனக்கு மிகவுஞ் சந்தோஷந்தான்; ஆயினும் உன்னுடைய சமத்காரம் கல்வியில்தவிர எதில் வெளியாகிறது? உன் மாணாக்கர்களோ உன்னை விட்டு வேறெங்கும் போய்ப் படியார்களென்று உறுதி கூறுகிறார்கள்; இப்படி யிருக்கையில் நீ நாளைமுதலாயினும் பாடங்களைச் சரியாய்க் கற்றுக்கொடு" என்று புத்தி கூற, கௌரங்கரும் எப்படியாவது மறுநாள் முதல் மனவுறுதியுட னிருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு இல்லஞ் சென்றனர். மறுநாள் அதேபிரகாரம் பாடங்களையாரம்பித்து மிகச்சமத்காரமாய்ப் போதனைசெய்துகொண்டிருக்கும் ஸ்வாமிகள், ராதாகிருஷ்ண பக்தியைப்பற்றிக்கூறும் ஸ்ரீபாகவத ஸ்லோகத்தை ரத்னகர்ப்பரென்பவர் சொல்லிக்கொண்டிருக்கக்கேட்டு தன்னை மறந்து "கிருஷ்ண! கிருஷ்ண!" என்று மூர்ச்சித்து விழ, அங்கிருந்த மாணாக்கர்கள் மனம் மிகநொந்து ஒன்றுஞ் செய்யத் தோன்றாது விழித்திருந்தகாலை, கதாதரர் ஓடிவந்து தான் முன்னே யிவ்வித தோற்றங்களுண்டான போது நிகழ்ந்தவைகளை நன்றாய் நோக்கியிருந்தவராகலின், ஸ்வாமிகளுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யவும், ஸ்வாமிகள் களைதெளிந் தெழுந்தார். அந்த ஸ்லோகத்திற் பொதிந்த கிருஷ்ண பக்தியாகிற அமிர்தத்தையே யுண்டு ஜீவனம் செய்தலின் நயத்தை யநுபவித்தவராதலின் ஸ்வாமிகள் அந்த ஸ்லோகத்தைக் கூறும்படி மீண்டும் மீண்டுங் கேட்டலும் கேட்டு மனஞ் சோர்வதுமாகிநிற்க, கடைசியாக அந்த ஸ்லோகத்தைக் கூறவேண்டாமென்று கதாதரர் ரத்னகர்ப்பரை வேண்டிக்கொண்டார். ஸ்வாமிகள் தனக்குண்டாகிய அள

வில்லா ஆகாரத்தினோடும் ரத்னகர்ப்பரைக் கட்டியணைத்துக் கொள்ள, தெய்வத்தகைமையாரின் பரிசம்பட்ட வக்கணமே ரத்னகர்ப்பருக்குப் பக்தி மிகுந்து அன்றுமுத லிறுதிகாறும் கௌரங்கர் வசமாயினர்.

மறுநாள் பள்ளியில் வந்து, ஸ்வாமிகள் மாணாக்கர்களை நோக்கி, "என்னருமைமக்காள், என்னால் நுங்களுக்கு யாது பயனுண்டாகின்றது? பாடங் கற்பிப்பதைவிட்டுக் கிருஷ்ண காதையைப்பேசுகின்றேன்போலும்! இது என்னபைத்தியமோ என்னவோ! ஆதலின் நீவிர் இன்னும் யாரிடமேனுஞ்சென்று அவரிடம் கற்பின், பயன்பெறுவீர்" என்று சொற்றலும், மைந்தரார் வணங்கி "ஸ்வாமின்! நீவிர் கூறியவண்ணமே பாடங் கற்பிப்பதை விடுத்து, க்ருஷ்ணபக்தியிற் படிகின்றீர். ஆயின் நுமது திருவாய்மொழிகளைச் செவியுற்றுக் கேட்குமிடத்து, சாதாரணமனிதர் பேசுவதுபோல் தோன்றுகின்றில. சாக்ஷாத் கிருஷ்ணனே யவதரித்து எம்மிடரெல்லாந் தீர்ப்பான், இவ்வுருக் கொடுவந்தனன்போலும்! இன்றோடே படிப்பை விடுவோமேயன்றி, வேறொருவரிடமும் கல்லோம்", என்று கூறித் திருவருளைச் சிந்தித்துக் கண்ணீர்கம்பலையுமாய் நிற்க, சைதன்யரும் மனந்தாளகில்லாராய் வெய்துயிர்த்து வெம்பியழுது, ஒவ்வொரு குமரராய்த் தன் மடிமீதிருத்தி முத்தமிட்டுக் கடைசியாகப் பிரிவாற்றாமையால் மனம் புண்ணாகுமேயென்று வருந்தி யொருவாறு தேறி "நாமனைவரும் பிரிவோமாயினும், யாது நேரிடுவதென்று நுமக்குச் சிறிது சொல்லாவிடின், எனக்குத் திருப்தியிராதாதலின், யானொன்று கூறவேண்டியிருக்கின்றது. அஃது யாதெனில்,—

'பொருத்த முடைய நம்பியைப் புறம்போ லுள்ளுங் கரியானைக்
கருத்தைப் பிழைத்து நின்றவக் கருமா முகிலைக் கண்டீரே
அருத்தித் தாரா கணங்களா லாரப் பருகு வானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.'

கரியமேகம் ஒன்று தாமரைக்காடு பூத்ததுபோல் ஜகன்மோகன சர்வாலங்க்ருத ஸம்ப்ரம திவ்ய பாலரூபம் என்னெதிரிற்றோன்றி என்னை மயக்குகின்றது. சுகந்த மலர்மாலையணிந்து, அந்த சந்தத்துடன் தலைமயிரைத் தொங்கவிடுத்து, மனிதரேயன்றி மாடுகளும் மயங்கும்வண்ணம் இனிய கீதம்பாடி, தேவ

நடமாடி, அச்சுந்தரன் என்மனதைக் கொள்ளைகொண்டனன்

'வலங்கா தின்மேல் தோன்றிப் பூவணிந்து
மல்லிகை வனமாலை மௌவல் மாலை,
சிலங்கா ரத்தால் குழல்தாழ விட்டுத்
தீங்குழல் வாய்மடுத் தூதியூதி,
அலங்காரத் தால்வரு மாயப் பிள்ளை
யழகுகண் டேன்மக ளாசைப்பட்டு,
விலங்கினில் லாதெதிர் நின்றுகண்டீர்
வெள்வளை கழன்று மெய்மெலி கின்றதே.'

இதனாற்றான் யானென்னை மறந்து கண்ணன்வசம் நண்ணுகின்றேன். நாமிப்போது பிரிந்திருக்க நேரிட்டிருப்பதால், ஒரு கிருஷ்ணகீர்த்தனை பாடுவோம்" என்று ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினார். உடனே ஸ்வாமிகள் நடுவில் வீற்றிருக்க, சுற்றிலும் மற்றையோர் உட்கார்ந்துகொண்டனர்; ஸ்வாமிகள் கரதாளம்போட்டுக்கொண்டு,—

"திருத்தாய் செம்போத்தே
திருமா மகடன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்
திருத்தாய் செம்போத்தே",

என்று பக்திரசமாய்த் தன்னை மறந்து இனிய கீதத்துடன் பாடவும், மற்றையோரும் தத்தம் நிலைமறந்து பக்தியறிந்து ஏகோபித்து,—

"கரையாய் காக்கைப்பிள்ளாய்
கருமாமுகில் போனிறத்தன்
உரையார்தொல்புக ழுத்தமனைவரக்
கரையாய் காக்கைப்பிள்ளாய்.
கூவாய் பூங்குயிலே
குளிர்மாரி தடுத்துகந்த
மாவாய்கீண்ட மணிவண்ணனைவரக்
கூவாய் பூங்குயிலே.
கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார்பூங்குழல் மாதவனைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி.
சொல்லாய் பைங்கிளியே
சுடராழி வலனுயர்த்த

மல்லார்தோள்வட வேங்கடவனைவரச்
சொல்லாய் பைங்கிளியே,
கோழிகூ வென்னுமால்
தோழிநா னென்செய்கேன்
ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று
கோழிகூ வென்னுமால்",

என்று திவ்யகானஞ்செய்யவும் ஸ்வாமியின் முதல் கிருஷ்ண கீர்த்தனை நிறைவேறிற்று. இவ்வானந்த கோஷத்தைக்கேட்ட அக்கம்பக்கத்தாரெல்லாரும் ஒருங்குவந்து பக்திவெள்ளத்திற் படிந்ததோடு உடலைவருந்தித் தவஞ்செய்து அதனால் கடவுளருளைப்பெறுவது அசாத்தியம்; அன்றியும், தத்துவஞானத்தாலேயே மோக்ஷம்பெற விரும்புவதும் ஆகாத காரியமாம்; பக்தியென்கிற தெப்பமே பரந்தாமன் பாதத்திற் சேர்க்கவமைந்தது என்று கௌரங்கர் மாணாக்கர்களிற் பலர் உணர்ந்து,—

"காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்கா லமைந்து,
தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா
திருமார்பனைச் சிந்தையுள்வைத்து மென்பீர்,
வாயோது வேதம் மலிகின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்திர கூடஞ் சென்றுசேர் மின்களே",

என்று பெரியோர் பணித்ததைச் சிரமேற்கொண்டு, 'உலகத்தில் தகாதவழி நடந்து காலங்கழித்தோமே' யென்று பரம பக்திமான்களாயினர்கள்.

ஐந்தாவது அத்தியாயம்.

இவ்வாறு ஸ்ரீகௌரங்கர் தன்னைத்தான் மறந்து தலைவனடியையே விரும்பிவிரும்பிப் போதரு நாளில் அவருக்கு விரோதிகளாயிருந்தார் பலரும் அவருக்குப் புத்தி தடுமாறி விட்டது, பேயனாய்ப் போயொழிந்தான் என்று பல இழிபுரை கூறி வைது சசிதேவி யம்மாளுக்கு மஃதெலாந் தெரிவித்துக்கொண்டு மன மகிழ்வடைந்தனர்கள். இதனால் சசிதேவி யம்மாளுக்கு இன்னது செய்வதெனத் தோன்றாது, தன் கணவனாருக் கத்தியந்தம் பிரியரான ஸ்ரீபாஸனை வரவழைத்து, அவனை யாலோசனை செய்ததில் கௌரங்கருக்குண்டானது சித்தப் பிரமை யன்று, உள் விளைத்து மீதூர்ந்த ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமையே யாகுமென்று தெரியவந்தது. ஆயினும், விஸ்வரூபனைப்போ லெங்கே துறவறம் பூண்கின்றனரோ வென்னவோ வென்று மாத்திரம் அப்போதைக் கப்போது சசிதேவி யம்மாள் மனதி லிடுக்கண் விளைந்துகொண்டிருந்தது.

தெய்வத் தகைமையோர் தான் முன் நடந்துகொண்டிருந்த படாடோபவிளையாட்டு வழிகளையெல்லாம் விடுத்து, அடியருக்கடியராய், கண்ணபிரானது ரஞ்சிதமுகமும், குஞ்சிதபதமும், இன்குழலோசையும், புன்னகையாசையும், தன்னை மயக்கலின், தன்னைத் தான் மறந்து, "என்னைப் புத்தியற்றவனென்றாவது, பித்தம்பிடித்தவனென்றாவது, பேசுவார் பேசியொழிக. ஏழை யென்கண்ட ஆழியான் கோலத்தைப் பொய்யுலகினர் தெரிந்திலர்; பக்தி புரிந்திலர். பித்தம்தான் பிடித்திருப்பினுமென்ன? அடியாரைக் காக்கும் அப்பன் திருவடிகளை விரும்பித்தொழுதும், அழுதும், ஆடியும், பாடியும், நைந்தும், நொந்தும் நால்வகை யென்மனம் அலைப்பாய்கின்றது.

'பேயரே யெனக் கியாவரும் யானுமோர்
பேயனே யெவர்க்கு மிதுபேசியென்
ஆயனே யரங்காவென் றழைக்கின்றேன்
பேயனா யொழிந்தே னெம்பிரானுக்கே' ".

என்று பகவத்பக்தியில் விசேஷித்திருந்ததோடும், தன்னையொரு புல்லினுமிழிவாகிய வஸ்துவாய் மதித்துச் சொல்ல முடியாத அடக்கத்தையும் ஆதாரத்தையுமே யாபரணமா யணிந்திருந்தனர். முன் வித்யா கர்வமென்னுஞ் சேற்றி லுள்ளங்காலழுந்தியிருந்த கௌரங்கரே யிப்பொழுது இவ்விதம் மாறியிருக்கிறா ரென்பதைப்பார்க்க அனைவர்க்கும் ஆச்சரியமாயிருந்தது அவ்வூரில் பிரதம வைஷ்ணவகுருவும் பக்திமானாயுமிருந்த அத்வைத ஸ்வாமிகட்கு இந்த சமாசாரங்களெல்லாந் தெரியவந்ததின்மீது, அவரும் "இதில் ஏதோ உண்மையிருக்கின்றது; கௌரங்கர் முகத்தைப் பார்க்கும்போதே தேவதா தோற்றம் விளங்குகின்றது;—இஃதல்லாமலும் ஸ்ரீமத் பகவத்கீதையில் ஒருவாக்கியத்தின் பொருளெனக்குத் தோன்றாதிருந்ததால்,பகவானைத்தோத்திரஞ்செய்து எனக்கு அவ்வாக்கியத்தின் சரியான அர்த்தத்தை யுபதேசிக்க வேண்டு மென்று பிரார்த்தனை செய்தேன்; அதன்மீது பகவானிரங்கி யென் கனவில் பிரஸன்னராய், மிகவும் பொருத்தமான வ்யாக்யானத்தைக் கூறியதோடும், 'அத்வைதா! உன் வேண்டுகோளை வியந்து நானே யவதாரஞ் செய்திருக்கிறேன்' என்று சொல்லி மறைந்தனர்; உடனே நானெழுந்து பார்க்க எதிரே 'நிமை' நிற்பதாய்த் தோன்றியது; இதெல்லாம்சித்தப்ரமையாலுண்டாகிய பொய்த்தோற்றங்களோ என்னவோ! ஆயினும் பகவானிவ்விதம் அவதாரஞ் செய்திருக்கிறது உண்மையானால் அவர் என்னிடம்போந்து தான் பகவான் என்பதை என்மனதின் சந்தேக விபரீதக்கலக்கங்கள் நீங்கும்வண்ணம் நிரூபிக்கவேண்டியது அவர் கடமையாகும்" என்று சொல்லிக்கொண்டிருந்தனர்.

அனேகநாளாய் அத்வைத ஸ்வாமிகளைச்சேவிக்கவேண்டுமென்று கௌரங்க ரெண்ணங்கொண்டிருந்தார்; ஒருநாள் புறப்பட்டு கதாதரரை யுடனழைத்துக்கொண்டு, அவரிருப்பிடஞ் சென்று அவர் தோற்றங் கண்ணிற் பட்டவுடன், பக்தி மிகுந்து மூர்ச்சித்து விழுந்தனர். அத்வைத ஸ்வாமிகள் கௌரங்க ஸ்வாமிகளுடைய திருமுக விலாசத்தைக் கண்டு,

அஞ்ஞானத்தை விண்டு, "அக்கக்கோ! நான் இன்றுதான் பொன்றலில் பீடுபெற்றனன், வீடுமுற்றனன், பாடுமற்றனன்! என் அறிவுக்கண்ணைக் கவிந்து சிதாகாசத் தோற்றங்களைக் காணவொட்டாது கடுமை நடத்தும் அஞ்ஞான திமிரத்தைச் சமரில் நிமிரவாட்டி, மெஞ்ஞானக் கதிரொளி பரப்ப விஞ்ஞானபாஸ்கரன் ஈண்டு எழுந்தருளினன் போலும்! இச்சுந்தரனை, மைந்தனா ரென்பதும், மதலையா ரென்பதும், மானிடனென்பதும் மயக்கினனென்பதும் சாலப்பிழையுற்றதே! இவன் தெய்வத் தன்மையைக் கண்டுய்ய வகையற்று, வேதமும் விழிக் ின்றது ! சொல்லுக்கும் அடங்காது, மனதிற்கு மொடுங் ாது, அதீதமுற்ற ஹேதுவற்ற நாதன்மற் றிவனேபோலும்! அணுவுக்கு அணுவாகியும், மலைக்கு மலையாகியும், உலகெங் ும் நிலவொளிபரந்து, தன்சர்வசக்தியாகிய மாயாகாரியத் ாலும், அற்புத விளையாட்டாலும், தோற்றமும் தானே தோற்றுவிப்பானும் தானே, உள்ளதும்தானே, இல்லதும் ானே, மெய்மையும் தானே, பொய்மையும் தானே, உற்ற தும்தானே, அற்றதும் தானே, சொல்வதும்தானே, சொலப் டுவதும் தானே, செய்வதும் தானே செய்ப்படுவதும் ானே, ரூபியும் தானே அரூபியும் தானே, காரணமும் தானே ாரியமும் தானே—இவ்வகைப் பலவகைப்பட்ட எதிரிடை யெண்ணங்களால் நம்மனதைக் கலக்கமுறப் பண்ணுவதும் ானே யாகிவிளங்கும் தூய மாயப் பரம்பொருளே நம்மைக் ாக்க இம்மைக்கோலங்கொண் டெம்மெதிரில் வந்தனன் கால்! ஐயனே! அப்பனே! ஆரமிர்தே! அருமருந்தன்ன திரு ருட்பெரியோய்! சாதிசமயச்சழக்ககற்றிக் கோதிலன்பளிக் ும் கொற்றவனே, நற்றவனே, மாதவனே! நீவிர் கடவுளரே ாம்; இல்லையேல்; இவ்வளவு சுயம்பிரகாச மெங்கிருந்து வந் து!" என்று பலவாறாகச் சிந்தித்து வந்தித்து;

மறந்தாயு மொத்தி மறவாயுமொத்தி மயலாரும் யானு மறியேன்
துறந்தாயு மொத்தி துறவாயுமொத்தி யொருதன்மை சொல்ல வரியாய்
பிறந்தாயு மொத்தி பிறவாயுமொத்தி பிறவாம னல்கு பெரியோ
யறந்தா னிருத்த லரிதாசவாரிவ் வதிரேக மாயை யறிவார்,'"

என்று அவரை ஸ்தோத்திரஞ் செய்து, அவர்திருவடிகளுக்கு வைஷ்ணவமதக்கிரமப்படி தூபதீபார்ச்சனை முதலியவைகளியற்றி மெய்மறந்து நின்றுகொண்டிருந்தனர். கௌரங்கரும் சிறிது மூர்ச்சை தெளிந்தெழுந்து, ஆசார்யஸ்வாமிகளடி பணிந்து “என்பவபந்தத் தொடர்பறுக்கவந்த தோன்றலே! என் பாவங்களையெல்லாங் களைந்து கண்ணனை யடையச்செய்வது உன்கடன்” என்று பிரார்த்தித்துத் தன்னிருப்பிடமடைந்தனர். இதைக்கேட்டவுடன், அத்வைதஸ்வாமிகள் மனதில் பெருத்த கலவரங்களுண்டாய்விட்டன. “இஃதென்ன விந்தையாயிருக்கிறது! கண்ணனே யிவ்வாறு அவதரித்திருப்பின், நம்மிடம் இவ்வாறு ஏன் நடக்கவேண்டும்; என்னவோ, நாம் பெருத்த முட்டாள்தனஞ் செய்துவிட்டோம்: நம்மை நால்வர் பழியாரா?” என்று பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீ சைதன்ய ஸ்வாமிகள் களைதெளிந்தெழுந்து அத்வைதாசார்யர் திருவடி தொழுது, “பெரியீர்! என்னைக் கடைத்தேற்றுவது நுமது கடனே! அருமறை முழுவதுந் திரிபறவுணர்ந்த தேவரீரே, யேழையேன்பால் அருள் நோக்கஞ் செய்யாவிடின், எனக்கு வேறுகதி யாதுளது! ஐயன்மீர்! பக்தியே முக்திக்குக் காரணமாதலின், ஸ்ரீகிருஷ்ணனிடம் என்னைச் சேர்த்தற்கு வேண்டிய முயற்சி உம்மாலேயே நிகழ்தல் வேண்டும்! உலகத்தில் பல்லோர்மனம பரிபக்குவமடைந்திருக்கும்; எவ்வண்ணம், காங்கைப்படு முன்னரே வெண்ணெ யுருகத் தொடங்குமோ, உபகாரஞ்செய்ய வொருவர் உத்தேசங் கொண்ட நிமிடமே, அஃதைப் பெற்றார், நல்லோர் நன்றிபாராட்டுவரோ, சேயைக்கண்டபோதே தாய்முலையிற் பால் சுரக்குமோ, அவ்வண்ணமே தீவிரதர பக்குவமுடையவர்கள், காக்கையுட்காரப் பனம்பழம் விழுமாறு உத்தமநிலை யடைவார்கள். அடியேன் அவ்வாறு மேன்மை யடையாதிருப்பினும், தங்கள் தெய்வத்தன்மையின் வன்மையாலேயே, கண்ணன்பால் நண்ணல் வேண்டியிருப்பினும், என்னைக் கரைகேற்றுவது நுமது பாரம்! இஃதே யெனது நீரம்” என்று உண்மை நோக்கம்

காட்டி வேண்டிக் கொண்டனர். இதைக்கேட்ட ஆசார்யஸ்வாமிகள் ஒன்றுந் தோன்றாது விழித்திருந்தனர்; கௌரங்கரும் கதாதரரும் திரும்பிவந்துவிட்டனர்.

நடந்தகாரியங்களை நினைந்து நினைத்துப்பார்க்கவும், அத்வைதாசார்யருக்குச் சொல்லமுடியாத கலக்கங்களுண்டாய்விட்டன. “ஏன், இவர் கடவுளராயிருப்பின், நம்மை யிவ்வாறு வேண்டிக்கொள்ளல் வேண்டும்? ... ஆம்! ஆம்! இவர் கடவுளல்லர்! * * * ஹா, ஹா, நாம் என் செய்தோம்! குருபீடத்திலிருக்கும் யாம், நால்வர் அருவருக்கத் தக்க காரியத்தை யியற்றினமே! நன்று நன்று, நம் புத்தியிருந்தவா!” என்று முதலில் நினைத்தார். சற்றுப்பொறுத்து இவ்வெண்ணம் மாறிவிட்டது. ‘கௌரங்கர் கடவுளராயே யிருத்தல் வேண்டும்! நாம் முன்னினைத்தது தப்பெண்ணமே, அவர் மனிதராயின், அவரை யாம் பார்த்தகாலையின், எம்மையே யாம் மறக்கவேண்டிய நிலைமையாண்டிருந்து வந்தது? கண்ண நீர்பெருகிற்று, உள்ளமுருகிற்று, புளகம் வந்தது, பக்திதந்தது நான் பூலோகப்பிரவேசமாய் இதுகாறு மித்தகைய அனுபவ மடைந்திலேனே! இனியும் ஒருக்கால் அடைவேனென்று எதிர்பார்க்கவும் துணிந்திலேனே! சூரியனது கடுமையால் உடலம் வெந்து உள்ளம் நைந்து வியர்வை மிகுந்து பகலெல்லாம் வருந்துவோர்க்கு, பொழுதுபோனதும் வானமுகட்டில் பௌர்ணமிப்போதெழும் பொன்வட்டமின்னிலவு தாபமனைத்தும் போக்கி யெவ்வகைச் சுகந்தருமோ, அவ்வாறே, உலகமாகிற கலகச்சந்தையில் உழன்று, முன்னும் பின்னு மிடியுண்டு, கைகாலோய்ந்து மனோதைர்யமும் மாய்ந்து புத்தியும் சாய்ந்து தேய்ந்துபோகும் நிலையிலிருந்த எனக்கு, கௌரங்கதரிசனத்தால் பெருத்தசுகமுண்டானது: தாமரையைக் கூம்பச் செய்யும் இழிவும், களங்க [illegible] விரவிநிற்கும் குறைவும் போக்கலாலும், முகம் மாத்திரமேயிராது, உடலம் முழுவதும் அதற்கியைந்த இலக்கணங்களுமுடைய மேன்மையுற்றிருத்தலானும், சாதாரண இகசுகம் போலப் பரசுகம் தரும்கருணை விளங்கலானும், சந்திரனைத் தோற்கச்செய்யும் கௌரங்க சுந்தரரென்னெதிர்ப்

பட்ட வேளையே, என்மனதிற் குடிகொண்டிருந்த மும்மலங்களும் நீங்கின; பிறவித்துன்பங்களும் இடந்தெரியாதோடியொளித்தன. இவ்விதசக்தி விளங்கும் உத்தமனைக் கடவுளென நினைப்பதில் யாது குறை? என்று சிறிது போது ஆலோசித்தார். சற்றுப்பொறுத்து சைதன்யர் கடவுளரல்லரெனச் சங்கித்தார். மறுபடியும் கடவுளரே யென்றார். இவ்வகை, தேனில் விழுந்த ஈயைப் போன்றும், வலையிற்பட்ட மீனைப்போன்றும், சிறுவர்கையிற் சிக்கிய அற்பஜெந்துக்கள் போன்றும், படைத்தலைவனிறந்து பரதவிக்கும் சேனைபோன்றும், மழைமுகம் காணாத பயிரைப்போன்றும், கொம்பில்லாதலையும் செடிகொடி போன்றும், நள்ளிருட்போது கானகத்திடைக் கலங்கிவருந்தும் முடவன்போன்றும், அத்வைதாசார்யர் பெருந்துன்பப்பட்டு "அப்பனே, ஐயனே, ஆரமிர்தே, அடியார் துயர்போக்கும் அருட்கடலே! நான்செய்யுமாறறியேன், சொல்லுமாறறியேன், நினைக்குமாறறியேன், துதிக்குமாறறியேன், என்கலக்கத்தைப்போக்கி யென்னை யாள்வது, நின்கடன்" என்று துதித்திருந்தனர்.

அவர்களுக்குள் உண்டாயிருந்த ஏற்பாட்டின்படி கௌரங்க ஸ்வாமிகள் தினந்தோறும் பொழுதுபோனவுடன் ஸ்ரீபாஸர் வீட்டிற்குப் போவார். அவ்விடம் கதாதரர், முராரி, முகுந்தர், ஸ்ரீமான் முதலிய நண்பர்கள் கூட்டம் சேர்வார்கள். கௌரங்கர் சாதாரண மனிதர்போலிராது, தேவத்தோற்றங் காட்டுவார் போன்றிருந்ததால், அவர்பால் என்னவிநோதங்கள் நிகழ்கின்றன வென்றும் அவையே வழியாக முத்தியடைய யுக்தி புலப்படு மென்றும் அன்னோர்க்கு அதிக ஆவலிருந்தது. அவர்களனைவரும் வந்து உட்கார்ந்தவுடன் தன் மனதிலிருக்கும் ரகசியத்தை ஸ்வாமிகள் சொல்லமுயன்றார். தக்ஷணமே, முன்போல் மயக்கம்கண்டு விழுந்தனர்; அங்கிருந்தோர் களை தீர்க்கவும் எழுந்திருந்தார். இவ்வாறு அவருக்கு மயக்கம் பல்கால் நேர்ந்திருப்பதையும் தக்க பரிகாரந் தேடின் அஃது விலகுவதையும் அங்குள்ளோர் பார்த்திருக்கின்றனராகலின், அவர்களெல்லோருக்கும் அஃதோ ராச்சரியமாய்ப் புலப்படவில்லை.

ஸ்வாமிகள் களை தெளிந்தும் தெளியாததுமாயிருந்த சந்தியில், "கண்ணனைப் பார்த்தேனே, கணத்திலே தோற்றேனே என்னுயிரையும் நீத்தேனே" என்று தன் விதியைநொந்து மனம்நைந்து கண்ணீர் சொரிந்து மிகவும் பரிந்து பதறிக்கதறிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். இப்பரிதாபநிலையைக்கண்டவெல்லோர் மனதிலும் பக்தித்தோற்ற முண்டாயிற்று. அத்திருமொழிகள் கற்கண்டோ, சர்க்கரையோ, பாலோ, செழுந்தேனோ, கல்மனத்தையுங் கரைக்கநேர்ந்த கனிரசத்தைக் காதலுறார் யாவர்! கண்ணுற்கண்டு, காதல்கொண்டு கௌரங்கர் தொண்டு பூண்டவராதலின், கண்ணனைப் பிரிந்தகாலையே கணவனைப் பிரிந்தவண்ணம் அவர்கலங்கியழுத மெய்த் தோற்றச் செய்கை அனைவர்க்கும் பக்திவிளைத்துப் பரமானந்தம் அளித்தது. ஸ்ரீமத் பாகவதத்தைப் படித்த பெரியோர்க்கு, எப்படி, ஓர்நாள் ராதை ஸ்நானஞ்செய்து திரும்புசாலை, கண்ணனைக்கண்டு காதல் கொண்டாள் என்கிற சரித்திரம் தெரிந்திருக்கலாம். குவளைபோற் கண்ணும், பவளம்போல் வாயும், நீலமேனியும் கோலச்செய்கையும் பெற்ற சுந்தர நந்தபாலன், ராதையைக் கண்டபோது, முத்தன்னமுறுவல் பூத்து, இனித்துக்களித்துக் குளிர்ந்து தளிர்ந்த கண்ணோக்கமாகிற பேரானந்த வலைவீசி, அவள் மனதைக் கரைத்துத் தன் பக்கலஃதை யிழுத்துக்கரை சேர்த்தனர். அவ்வாறே, பெருமானுடைய இந்த அவதாரத்திலும், பக்தியமுதமூட்டி மோட்சவீட்டைக் காட்டக் கங்கணம் பூண்டிருந்ததால், ஸ்ரீகௌரங்க ஸ்வாமிகள் ஒருவேளை தானே பக்தனாகவும், மற்றொருவேளை தானே கண்ணனாகவும் நடந்து, தன் பாலிருந்தோரை அத்யானந்த பரவசத்திலழுந்தச்செய்து வந்தனர். கௌரங்கருடைய முகவிலாஸமும், கருணாநயனமும், விநாடிப் போதிலேயே மாறிமாறிப் பலவுருவ மடைகின்ற மேகம் போன்று, பலவாறு விளங்கின. அல்லாமலும்ராதையினிடத்து, பக்திக்கியைந்த தோற்றங்கள் எட்டு மாத்திரமே (அழுதல், சிரித்தல், மெய்நடுங்கல், புளகித்தல், மூர்ச்சித்தல் வியர்வைகொள்ளல் முதலாயின) கண்டிருக்கவும் 'இங்கு, சைதன்யரிடம் கணக்கிலாத தோற்றங்களுண்டாயின. முதலில்

ஒருவிததோற்றங்காணின், அடுத்து, அதற்கெதிரிடைத் தோற்றம் உண்டாவது அவரிடம் வழக்கமாயிருந்தது. முதலில்அவர் தேகம்யாரொருவராலும் அதைச் சுமக்கமுடியாத அவ்வளவு பாரங்காட்டின், அடுத்து, காற்றிலடித்துச்செல்லும் பஞ்சுபோல் இலேசாய் விளங்கும். முதலில், எத்தனைகுடம் நீர்பெய்தும் குளிராத அவ்வளவு அனல் அவர் தேகத்திலெழும்பும்; அடுத்தாற்போல், மரணகாலத்தில் காட்டும் குளிர்ச்சி யென்னலாம்படி அவர் தேகம் சில்லென்று குளிரும். ஒருக்கால், சூறவளி யென்னப் பெருமூச்செறிவர், சற்றுப் பொறுத்தலும், உஸ்வாஸநிஸ்வாஸ மென்கிற சந்தடியே கிடையாது போகும். ஒருக்கால் அழுவர்; ஒருக்கால் சிரிப்பர். கண்ணனைக் கண்டேனே யென்பா ரொருவேளை; அன்னவனை விண்டேனே யென்பார் பிறிதொருவேளை.

இவ்வாறு இவரிடம் தேவத்தோற்றம் விளைந்து கொண்டிருந்ததால், ஸ்ரீபாஸர் முதலிய அன்பர்களெல்லோர்க்கும் பூரணபக்தியுதித்து, ஸ்வாமிகளுடன் ஸ்ரீபாஸர் வீட்டில் அனைவரும் தம் இரவு வேளையைக் கழிப்பார்கள். விரோதிகளாயிருப்பார் முதலில் வராதிருந்தால் நன்மையென்று நினைத்து, இவர்கள் தம் பக்திக்கொண்டாட்டத்தை ரகசியமாகவே நடத்திவந்தார்கள். உள்ளே யாவரும் வராதிருக்க வேண்டி கதாதரர் வாசல் காக்கும் வேலையைப் பெற்றுக் கொண்டார்.

வெளிக்கதவை யொருதரம் சாத்திவிட்டால் பொழுது விடிகிறவரைக்கும் மறுபடி திறப்பது கிடையாது. வீட்டுக்குள் அனைவரும் சந்தித்தவுடன், சைதன்யர் தானே பக்திக்கடலிலமிழ்ந்து அன்பர் யாவருக்கும் அறிவூட்டிவிட, ஒவ்வொருவரும் தம்மைத் தாம்மறந்து, எவ்வகை யாசையுந்துறந்து, க்ருஷ்ணனே, க்ருஷ்ணனே யென்றுகதறிப் பிரிவாற்றாமையாற் பதறி, "அப்பனே, ஐயனே, எம்மைக்கரைதேற்றாது, இவ்வகைத்துன்பப்படுத்துவது உனக்கழகாமா! எல்லாம் தெரிந்த வல்லவனு முனக்கு யாம் என் சொல்லக்கூடும்! என்றுகதறுவர். ஸ்வாமிகளும், பக்தியமுத முண்டு,

கருணையங் கடலே காரொளி விளக்கே
கற்பகக் கனியே அற்புதப் பெரியோய்!
பக்தியு மெமக்குப் பரிந்தரு ளளித்தனை;
அழுதும் தொழுதும் ஆடியும் பாடியும்
ஆனந்த வாரியி லழுந்தின மாயினும்,
காணா துன்னைக் கலங்கினம் ஐயா!
வீணை நாதமும் வியன்முழ வொலியும்
வெட்கிட நின்றன் வேணுவைத் தாங்கி
மாடும் கன்றும் மகிழ்ச்சியி லாழப்
பாம்பும் புலியும் பறவையு மெல்லா
மலையும் செடியும் மண்ணும் விண்ணும்
கொம்பும் கொடியும் தம்நிலை மறந்து
திருவருள் விளக்கம் திருத்தமாய்ப் பெற்று
உய்யவே வாராய்! உறித்தயி ருண்டு
உலகம் புரந்த உத்தமா வாராய்!
அலகிலா னந்த வாசனே வாராய்!
கலகம் விளைக்கும் கண்களைக் காட்டிக்
காத தூரம் கடந்ததும் சரியா!
நகையெல்லாம் வெட்கும் நகைதனைக் காட்டி
நாழிகை தூரம் நடந்ததும் சரியா!
அன்னமு நாணு மருநடை காட்டி
அரைமைல் தூரம் அகன்றதுஞ் சரியா!
மஞ்ஞையு மருளு நாடம் காட்டி
மாதவா மறைந்தனை மனந்துய ரடைந்தேம்
ஆதலி னிப்போ தருகினில் வந்தால்
அன்பர் யாரும் இன்ப மடைவேம்",

என்று பக்தி மிகுந்து பரவசமாய்க் கொண்டிருந்தார். இவ்விதமான கொண்டாட்டங்களால், அங்கிருந்த அனைவருக்கும் உண்டாகிய பக்திக் களவில்லை. இருப்பது பொய், போவது மெய் என்கிற ஞானமுண்டாகி, சுற்றிலுமிருப்பதை முற்றிலும் மறந்து, எல்லாம் கண்ணன் ஸ்வரூபமே என்று பாவித்து, அவர்களெல்லோரும் சகல துக்க நிவாரணராய்,

கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும்,
கடல் ஞால மாவேனும் யானே யென்னும்,
கடல் ஞால முண்டேனும் யானே யென்னும், என்கிறபடி,

ஆனந்தக்கடலிலமிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இவ்விதமாய், ஸ்வாமிகளுடைய நடக்கையாலேயே அவ்வூரிலுள்ள அனேகருக்குப் பக்தியின் பெருமை தோன்றிவந்தது. பக்தியுண்டாக வேண்டுமென்று விரும்புவோர்க்கு, அதிக ஆற்றாமையுடன் பெருமானார் பக்தியமுத மூட்டிவந்தார். ஒருநாள் கதாதார், தனக்குப் பக்தியளிக்க வேண்டுமென்று ஸ்வாமிகளைப் பிரார்த்திக்க, ஸ்வாமிகளும் “ஹே! கதாதரா! நாளைக்குக் கங்காஸ்நானஞ் செய்யச்செல்லும்போது உனக்குத்தன்னடைவே பக்திவிளையும்! விசனப்படாது சந்தோஷமாயிரு” என்று திருவுள்ளம் பற்றினார். இவ்வாறு பெருமானார் கூறியது விளையாட்டன்று; ஏனெனில், மறுநாள் ஸ்நானஞ்செய்து ஸ்வாமிகளும் பக்தர்களும் வீற்றிருந்தபோது, கதாதரர் கள்ளுண்டு தள்ளாடி வருவார்போன்று, தேகம் புளகிக்கவும், ஆனந்தக்கண்ணீர் அருவிபோற்சொரியவும், அங்கமெலாம் தங்கநிறமாகிய அற்புதவடிவம் பெற்றும் ஸ்வாமிகளிடம் வந்து அவர் பொன்னடி போற்றினர். கௌரங்கரும் கதாதரரை நோக்கி, “அப்பா, நீ வேண்டியதைப் பெற்றனையா?” என்றுவினவ, கதாதரர் வாய்திறந்து பேசல் முடியாது, “மோனமென்பது ஞானவரம்பு” என்கிற வண்ணம் மௌனஞ்சாதித்து, தன்கண்ணீரால் பெருமானார் திருவடிகட்குத் திருமஞ்சனமாட்டினர். இக்காலமுதல், எவ்வெச்சமயங்களில் கௌரங்கர் பக்திப்பெருக்கால் நடனமாடுகின்றாரோ, அவ்வக்காலங்களிலெல்லாம் கதாதரருக்கும் தன்னடைவே பக்திவிளைந்து அவரொருபக்கம் கூத்தாடிக்கொண்டிருப்பர்.

கதாதரரல்லது, சுக்லாம்பரரென்பார் மற்றொருவர். இப்பெரியவர் முதலில் கோரதபஞ்செய்யும் வழக்கமுடையவராயிருப்பினும், கௌரங்கருடைய சேர்க்கையால், ஞானத்தைக்காட்டிலும் பக்தியே பகவானையடைவதற்குச் சுலபமார்க்கம் என்று நாளடைவிலுணர்ந்து, சைதன்யர்பால் இடைவிடாத நேசங்காட்டிக்கொண்டிருந்தார். சைதன்யர் தன்னைமறந்து, தரையில் விழுந்து உருண்டு புரண்டு பக்தியாவேசம் கொண்டிருக்கும்

வளைகளிலெல்லாம் ஆங்காங்கிருந்து அவர் தேகத்திற் படி ளவாகிய தூசு மாசுகளை யெல்லாம் போக்குவதும், அவர் ண்களினின்றும் விண்மாரியெனப் பொழியும் நீர்த்துளிகளைத் துடைப்பதும்போன்ற உபசாரங்களையெல்லாம் சுக்லாம்பார் புரிந்துவருவார். தான் அதுபரியந்தம் செய்துகொண்டுவந்த தபோபலனாகத்தனக்கு யாதொன்றும் கிட்டாததால், மனம் மிகவருந்தி, சுக்லாம்பார், ஸ்வாமிகளைநோக்கி, “என்குறையை நீவிர் தவிர்க்கொணாதா? நான் பன்னெடுநாளாய், துவாரகை, மதுபுரி முதலிய பலதிவ்யஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தும், திவ்யநதிகளிற் படிந்தும், எடுத்துக்கொண்டமுயற்சிக்கும் கஷ்டத்திற்கும், யாதொரு பலனும் எனக் கிதுகாறும் நேரவில்லை. திவ்யதேசயாத்திரையால் எனக்குண்டாகும் பெருங்கஷ்டத்தையும் நினையாது, மேற்கூறிய துவாரகை மதுபுரி முதலிய இடங்கட்குப் போயுள்ளேனாதலின், எனக்குப் பக்தியமுதம் பிரசாதித்தருளல் வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

சுக்லாம்பார் மற்றவிஷயங்களில் எவ்வளவுநல்லவராயிருந்தபோதிலும், தான் யாத்திரை செய்தானென்கிற அகந்தை யவரை விட்டகலவில்லை யாதலின், அக்குறையைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி, ஸ்வாமிகள், “என், சுக்லாம்பாரே, துவாரகையிலும் மதுபுரியிலும் எத்தனை நாய்களும் நரிகளுமிருக்கின்றன; அங்கேயே வசிக்கும் அவைகட்கெல்லாம் பக்திகொடுத்த பின்னரேயன்றோ, நினக்குத் தரவேண்டும்” என்று கூறினார். இதைக்கேட்டவுடனே சுக்லாம்பார் கர்வபங்கமடைந்து தன்கடத்தைக்காக மனம்மிகவருந்தி, “அன்பிற்கரசனே! என்னை நீ யாதரிக்காவிடின் யாரென்னைக் கண்ணோக்கஞ் செய்வர்! பஞ்சமாபாதகரிற் கடைகெட்டவனானாலும் முகாலோபனஞ் செய்யத்தகாத எனக்குப் பக்திதகாது. அகந்தையையடக்கமுடியாத எனக்குன் னருளையடைய எவ்வகை முடியும்? முடவன் கொம்புத் தேனுக்காசைப்படுவது போலவும், சித்திரக்குள்ளனா பிருப்போன் எட்டாப் பழத்தை நினைத்துக் கொட்டாவிவிடுவது போலவும், ‘கான்மயிலாடக் கண்டிருக்க

வான்கோழி, தானு மதுவாகப் பாவித்து,' நடனஞ்செய்வது போலவும், நான் பாத்திரனல்லாத விஷயத்திலாசைவைத்தது என் அறியாமையையே விளக்குகின்றது" என்று தன்னைத் தான் பலவாறு நிந்தித்து வருந்திக்கொண்டனர். ஸ்வாமிகள் அதன்மீது சுக்லாம்பாருக்காக மிகவும் இரங்கி, அன்னவர்க்கும் பக்தியளித்து ஆட்கொண்டனர்.

இப்படியே ஸ்வாமிகளை யடுத்திருந்த ஒவ்வொருவருக்கும் பக்தி பெருகிக்கொண்டே வந்தது. ஸ்ரீபாஸர் வீட்டில் இராத்திரிப்பொழு தெல்லாம் கழித்துக்கொண்டு வந்தார்கள். ஊரிலுள்ள மற்றஜனங்களுடன் தங்களுக்கு யாதொரு சம்பந்தமில்லாததுபோல், இப்பக்தர்கள் ஒருபுறமாய் தம்பக்திக் கொண்டாட்டங்களில் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறதும், தம் வேலையைத் தாம் பார்க்கிறதுமேயொழிய இதரவிஷயங்களிற் பிரவேசிக்கிறதில்லை. வெளியார் யாது நடப்பது என்று பன்முறை கேட்கினும், இன்னோர் விடையளிப்பதின்று.

இதனால் அவர்கள் கோபாவேசமடைந்து, "செய்யத்தகாத துஷ்கிர்த்தியங்கள் ஸ்ரீபாஸர்வீட்டில் நடக்கின்றன. பக்திபரவசமாய் நடக்கிறகாரியங்களாயிருந்தால் அதற்கு மறைவேன்? மறைவாய் நடக்கிற காரியங்களெல்லாம் நம்பத்தகாதன." என்று வீண்புரளி செய்துவிட்டார்கள். ஆயினும் கௌரங்கருக்கு நாளடைவில் நூற்றுக்கணக்காய் சிஷ்யர்களேற்பட்டு அனைவரும் பக்தியமுதமூண்டு "ஹரிபோல்," "ஹரிபோல்" என்று கோஷஞ்செய்வதிலும் கீர்த்தனைபாடுவதிலுமாய்த் தங்களிரவை ஸ்ரீபாஸர் வீட்டிற் கழித்துவந்தார்கள். வெளியார் யாதுநடப்பது என்றவர்களைக்கேட்டால், அசுத்தஜனங்களுக்கு தெய்வவிஷயங்களைப்பற்றி யாதொன்றுங் கூறல்கூடாது என்று மௌனஞ்சாதித்தார்கள். இதனால் அவர்கள் விரோதிகளுக்கு அதிககோபமூண்டு வங்காளத்து நவாப்பாயிருந்த ஹுஸேன்ஷா என்பவன் கௌரங்கருடையவும் கௌரங்கர் சிஷ்யர்களுடையவும் துன்மார்க்கநடத்தைகளை யடக்கப் பட்டாளமனுப்பியிருக்கிறானென்று கதைகட்டிவிட்டார்கள். இவர்கள் செய்யுஞ்சதியாலேயே ஹுஸேன்ஷாவும் பட்டாளமொன்றை யனுப்ப

நேரிட்டது. இந்த சங்கதிகளை யெல்லாங்கேட்ட பக்தர்கள் மனம்புண்ணாகி, தேகபலங்குன்றி, மெய்வருந்தியிருந்தார்கள்.

ஏதோ தேவரகசியம் வெளிவரப்போகிற தென்றும் கௌரங்கர் சாதாரண மனிதரல்லரென்றும் அவர்கள் பல நாளாய் நினைத்துக்கொண்டிருந்தும், அதுகாறும் யாதொன்றுங் காணாததால், அவர்கள் மனம் வருந்தினார்கள். ஸ்ரீகௌரங்கர் விஷ்ணுவினுடைய அவதாரமென்று நினைக்கவும் இடந்தரவில்லை; ஏனென்றால், அவர் மற்றமனிதர்போலவே உண்பதும் உறங்குவதும், அழுவதும் தொழுவதுமாகவே காணப்பட்டார். அல்லாமலும் கலிமஹாராஜ்யகாலமாகிய இந்நாட்களில் பகவான் அவதாரஞ்செய்வாரென்று யோசிக்கவும் நியாயமில்லை; கிரேத, திரேத, துவாபரயுகங்களில் பகவானவதரித்தாரென்றால் அக்காலத்தில் தர்மமே தலைதுளிர்த்து, அதர்மப்பூண்டே காணக்கிடையாததாய், பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்கவும், யானையுஞ் சிங்கமும் மித்திரராகவும் பலவித மேன்மை பெற்றிருந்ததால் மனிதரும் கடவுளும் எதிரெதிர் கண்டு அளவளாவிப் பேசநேர்ந்தது. இக்காலத்திலோ, கணக்கில்லாத கொடுமைகளும், அநீதிகளும், அக்கிரமங்களும் அதிகப்பட்டிருக்கின்றன. எவ்விதம் சுகந்தம்மிகுந்த பூச்செடிகளை யமைக்க நந்தனவனம் ஏற்படுத்தி, அதற்கியைந்த காவலாளர் ஏவலாளர் எத்தனையோபேர்தான் நியமிக்கப்பட்டு வேலைநடந்துவரினும், அனேக நறுமலர்ச்செடிகளும், புதுமைசேர் பூக்களும் உலர்ந்து புலர்ந்து வாடி வதங்கி விழுந்து அழிந்து போகின்றனவோ, அவ்விதமே இக்காலத்தில் நற்கருமமொன்று செய்ய எவ்வளவோ சாக்கிரதைப்படினும் அஃது பொற்பழிந்து கற்பழிந்தமாதர்போல் பயனின்றிப்போகின்றது. காட்டுச்செடிகளுக்கும் மரங்களுக்கும் நீர்ப்பாய்ச்சுவாரொருவருமில்லாவிடினும் அவைகள் ஓங்கியெழுந்து பாங்குடன் பெருத்து நீண்டும் குறுகியும் நிமிர்ந்தும் வளைந்தும் சுற்றியும் தொத்தியும் ஓடியும் ஒதுங்கியும் படர்ந்தும் தொடர்ந்தும் பல்வகைவிர்த்தியடைகின்ற வண்ணம், தீயகருமங்களென்றால் அவைகட்கு யாதொருதீங்கும் நேரிடாது அபிவிர்த்தி யடை

கின்றன. இத்தகைய கொடிய கலிகாலத்தில், பெருமா னவதரிப்பாரென்று யார்தாம் நினைப்பர்? மேலும், பெருமானவதாரங்களைப் பற்றிப் பேசும் சாஸ்திரங்களும் கௌரங்கர் அவதரிப்பாரென்று கூறவில்லை; கற்கியவதாரம் இனிமேல் நிகழப் போகிறதென்று சொல்கின்றதேயன்றி இத்தகைய பக்தி ஸ்வரூபம் ஒன்றுண்டாகு மென்கிற பேச்சே யவைகளில் கிடையாது.

தேவ்தோற்றம் கௌரங்கர் மூலமாய் உண்டாகுமென்று அவர்களெல்லாரு மெதிர்பார்த்திருந்தும் அதுவரையிலொன்றும் நடக்கவில்லை. இவ்வாறு பக்தர்கள்மனதில் இடரென்னுமிராக்கதன்புகுந்து அவர்களை வருத்துங்கால்,—ஒருநாள் அவர்களெதிர்பார்த்திருந்த பெருந் தோற்றமுண்டாயது. ஆதவன் அன்பென்ப தனுவளவேனுமின்றி, ஊழிக்கனலெனக் காய்ந்து உயிர்களைத் தவிப்பிக்கிற வைஸாகமாதத்தில், ஒருநாள் பகல் ஸ்ரீபாஸர் ஸ்நாந முடித்துக்கொண்டு, திருவாராதனை செய்ய உத்தேசித்து,

"பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி பெறலாமே
பச்சை மரத்தாணிபோலே பதிந்து மனம் நாடி
* * * * *
இச்சை யொழிந் தைம் புலன்க ளைந்துகளும் வாடி
ஏகரசமானபரி பூரணத்தைத் தேடி" (பக்தி)

என்று பூஜாக்ருஹத்தில்பிரவேசித்தவுடன் தெருக்கதவை யாரோதட்டுவதாய் அவருக்குக் கேட்டது. "கதவை யார் தட்டுகிறது?" என்று ஸ்ரீபாஸர் உரத்திக் கேட்டார். "நீயெந்த ஏகரசமான பரிபூரணத்தைத் தேடுகின்றனையோ, அதுதான் கதவைத் தட்டுகின்றது" என்று பதில் வந்தது. "இஃதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே!" யென்று ஓடிவந்து கதவைத்திறந்தனர். கோடிபாஸ்கர ப்ரகாஸ திவ்ய ஸ்வரூபமொன்று உள்ளே பிரவேசித்தது. ஸ்ரீபாஸருக்கு ஒன்றுந்தோன்றாது, எங்கு பார்த்தாலும் ஒரு ஜோதிமயமாயிருக்க, பேசநாவெழாதாராய்,

"பெற்ற வட்கே தெரியு மந்த வருத்தம் பிள்ளை
பெறுப் பேதை யறிவாளோ பேரானந்த

முற்ற வர்க்கே கண்ணீர் கம்பலை யுண்டாகு
முறாதவரே கன்னெஞ்ச முடையராவார்"

என்கிறபடி எம்மான் திவ்ய மங்கள விக்ரஹம் தன்னெதிர் தோன்றுவதால் ஸ்ரீபாஸர் ஆநந்தக் கண்ணீர் பெய்து "இஃதென்ன! நாம் கனவு காண்கின்றோமா! விழித்திருக்கின்றோமா! நான் விழித்திருப்பதாய் எனக்கு ப்ரக்ஞையிருக்கிறதே! இல்லை; இது கனவு அல்ல, உண்மையே. உண்மையானாலித்தகைய தெய்வத் தோற்ற முண்டாகல் கூடுமோ?" வென்று பலவாறும் ஸ்ரீபாஸர் நினைந்து தேகஞ் சிலிர்த்திருந்தனர். அசாதாரண அதி ப்ரகாஸமொன்றுதவிர, உருவத்தில் கௌரங்கராகவே ஸ்ரீபாஸருக்கு ஸ்வாமிகள் தோன்றினார். பெருமான் வீட்டிற் புகுந்ததும், பூஜையறைக்குட்சென்று, ஸ்ரீபாஸருடைய விக்ரஹங்கள் வைத்திருந்த சிம்ஹாஸனத்தின்மீது ஸ்வாமிகள் வீற்றிருந்தருளி, "ஸ்ரீபாஸனே! பார்த்தையா! யான் வந்தனன்" என்று கூறினர். கௌரங்கர் கடவுளவதாரமென்று ஸ்ரீபாஸர் மனதிலுதித்தது; கண்ணுக்கு நேருங்கண்டார். ஸ்வாமிகள் வீற்றிருந்த அறைமுழுவதும் "மத்தாப்புகள்" கொளுத்துங்காலுண்டாகும் ப்ரகாஸம்போன்று, அவர் தேககாந்தியினால் ஜோதி வ்யாப்தமாயிருந்தது. ஸ்ரீபாஸருக்குப் பேச நாவெழாத [illegible]மானஸபூஜையாகவே,

"புகழுநல் லொருவ னென்கோ பொருவில்சீர்ப் பூமியென்கோ
திகழுந்தண் பரவை யென்கோ தீயென்கோ வாயுவென்கோ
நிகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டு மென்கோ
இகழ்விலிவ் வனைத்து மென்கோ கண்ணனைக் கூவுமாறே.
கூவுமாறறிய மாட்டேன் குன்றங்களனைத்து மென்கோ
மேவுசீர் மாரியென்கோ விளங்கு தாரகைகளென்கோ
நாவியல் கலைகளென்கோ ஞான நல்லாவியென்கோ
பாவுசீர்க் கண்ணனெம்மான பங்கயக்கண்ணனையே.
பங்கயக்கண்ண னென்கோ பவளச்செவ் வாயனென்கோ
அங்கதி ரடிய னென்கோ வஞ்சன வண்ண னென்கோ
செங்கதிர் முடிய னென்கோ திருமறு மார்ப னென்கோ
சங்குசக்கரத்த னென்கோ சாதிமா ணிக்கத்தையே.
சாதிமா ணிக்க மென்கோ சவிகொள்பொன் முத்த மென்கோ
சாதி நல் வயிர மென்கோ தவிவில்சீர் விளக்க மென்கோ

ஆதியஞ் சோதி யென்கோ வாதியம் புருட னென்கோ
யாதுமில் காலத் தெந்தை யச்சுத னமலனையே.
அச்சுத னமல னென்கோ வடியவர் வினைகெ டுக்கும்
நச்சுமா மருந்த மென்கோ நலங்கட லமுத மென்கோ
அச்சுவைக் கட்டி யென்கோ வறுசுவை யடிசி லென்கோ
நெய்ச்சுவைத் தேற லென்கோ கனியென்கோ பாலென் கேனே.
பாலென்கோ நான்கு வேதப் பயனென்கோ சமய நீதி
நூலென்கோ நுடங்கு கேள்வி யிசையென்கோ விவற்று ணல்ல
மேலென்கோ வினையின் மிக்க பயனென்கோ கண்ண னென்கோ
மாலென்கோ மாய னென்கோ வானவ ராதி யையே.
வானவ ராதியென்கோ வானவர் தெய்வ மென்கோ
வானவர் போக மென்கோ வானவர் முற்று மென்கோ
ஊனமில் செல்வ மென்கோ ஊனமில் சுவர்க்க மென்கோ
ஊனமின் மோக்க மென்கோ வொளிமணி வண்ணனையே.
ஒளிமணி வண்ண னென்கோ வொருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ நான்முகக் கடவு ளென்கோ
அளிமகிழ்ந் துலக மெல்லாம் படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனை மாய னையே.
கண்ணனை மாயன் றன்னைக் கடல்கடைந் தமுதங் கொண்ட
அண்ணலை யச்சு தன்னை யனந்தனை யனந்தன் றன்மேல்
நண்ணிநன் குறைகின் றானை ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன் யாவையு மெவருந் தானே,
யாவையு மெவருந் தானா யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்குஞ் சொலப்படா னுணர்வின் மூர்த்தி
ஆவிசே ருயிரி னுள்ளால் யாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடி லவனையுங் கூட லாமே.”

என்று ஸ்தோத்திரஞ்செய்து மெய்ம்மறந்து நின்றனர். பெருமான் அவர் இவ்வளவுப்ரேமையைச் சகியாரென்று நினைந்து, அவர்கவனத்தை வேறுவழியிற்செலுத்த யோசித்து, “எனக்குத் திருமஞ்சன மாட்டுக” என்று ஆக்ஞாபித்தனர். உடனே ஸ்ரீபாஸர் தெருவிலோடிவந்து ஒரு கூச்சலிட்டனர். அதைக்கேட்ட அவருடைய சகோதரர்களும் வீட்டு ஸ்திரிகளும் “திகிர்” என்றுநடுங்கி வெகு ஆவலுடன் அவரிடம் ஓடிவந்து சேர்ந்தனர். “ஸ்வாமிகள் திவ்விய ஸ்வரூபத்துடன் சேவைசாதிக்கிறார். அவர்க்குத் திருமஞ்சன மாட்டவேண்டும். தீர்த்தங்கொண்டுவருக” என்று ஸ்ரீபாஸர் கதறினார். அங்கிருந்தோ ரெல்லோரும் “இஃதெதுவா யிருக்கலாம்? இவர்க்குப் பைத்தியமா யிருக்கக்கூடுமோ? அப்படி யொன்றுந் தோன்றவில்லையே! என்னவோ விசேடந் தெரியவில்லை” என்று ஓடிப்போய் தீர்த்தங்கொண்டுவந்தனர். மெய்யடியார்களெல்லோரும் வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகள் வீற்றிருந்த பூஜையறையைச்சுற்றித்தடுக்குச்சுவரமைத்திருந்ததால், வெளியினின்றும் பார்ப்போர்களுக்கு ஜோதிக்கிரணங்கள் அத்தடுக்குகளின் சந்துகள் மூலமாய்த் தெரிந்துகொண்டே யிருந்தன. அவைகள் ஸ்வாமியின் தேககாந்தியினின்று முண்டாவது என்பதையு மறிந்தார்கள். திருமஞ்சனத்திற்காக ஸ்வாமிக ளவ்வறையினின்றும் வெளியிற் போந்தார். உடனே யவரை யொரு தவிசில் வீற்றிருக்கச்செய்து,

“கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடமுதைத்து
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்த பிரானே
மஞ்சளும் செங்கழு நீரும் வாசிகையு நாறு சாந்தும்
அஞ்சனமுங் கொண்டு வந்தே னழகனே நீராடவாராய்”

என்று பிரார்த்தித்துத் திருமஞ்சனஞ் செய்வித்தனர். மஞ்சநீரோடுவதிலும் தகதக வென்று ப்ரகாஸங் காணப்பட்டது; ஸ்வாமிகளைத்துடைத்த குட்டை முழுவதும் ப்ரகாஸமானது. திருமஞ்சனமான பின்னர், ஸ்வாமிகள் பூசையறையிற் பிரவேசித்து, விக்ரஹங்களை வைத்திருக்கும் ஸிம்ஹாஸனத்தின்மீது உட்கார்ந்தார். உடனே யெல்லாரையும் மயக்கும்படியான குழலோசை கேட்டது.

“இடவணரை யிடத்தோ ளொடுசாய்த்
திருகை கூடப் புருவநெரிந் தேறக்
குடவயிறு படவாய் கடைகூடக்
கோவிந்தன் குழல்கொ டூதின போது
மடமயில்க ளொடு மான் பிணை போலே
மங்கைமார்கள் மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழ வோர்கையாற் றுகில்பற்றி
யொல்கி யோடரிக்கண் ணோட நின்றனரே”

என்கிறபடி அக்குழலோசை கேட்டமாத்திரத்தில அனைவருந் தம்மை மறந்து பிரம்மானந்தத்தி லழுந்தினர்கள். நாதஸ்வரூபியான நாதனாலேயே கீதசுகம் ஏற்படின் அதை வர்ணிக்க யாவர்தாம் உரியர்! உலகத்தில் சாதாரணமனிதர்களால் பாடப்படுவனவே மனதிற்குத் தூய்மையும் சுக ஆரோக்கியங்களையும் விளைக்குமாயின், அத்விதியனான ஸர்வேஸ்வரனே அத்தொழிலை யேற்றுவரின் அதன் பெருமை யளவிட்டுச்சொல்ல யாவரால்முடியும்? கனிந்தமனமும், பக்திரசமும், நல்லுணர்ச்சியாதி மேன்மைகளும் விளைக்கத்தக்க துணைக்கருவி சங்கீதமென்பது அனைவராலு மொப்புக்கொள்ளக்கூடியதே! இதனாலேயே எல்லாச் சுபகாலங்களிலும், உத்ஸவச்சம்ப்ரமங்களிலும், பக்திக்கொண்டாட்டங்களிலும், சங்கீத மின்றியமையாததாகிறது. இவ்வெண்ணத்தை யுட்கொண்டு, பக்தர்கள் மனதை நயப்படுத்தித் தன்வயப்படுத்த அவா மேற்கொண்டு ஸ்வாமிகள் குழலூதத்தொடங்கினதும், அங்கிருந்தோரனைவரும் தம்மைத்தாம் மறக்கவும், அவர்தம் பவபாசங்கள் அடியோடே பறக்கவும் நேரிட்டது. அக்காலை அவர்களும் பரப்ரம்ஹமும் ஒன்று கலந்து, மோக்ஷசாம்பிராச்சிய வைபவத்தை யனுபவிப்பதென்று சொல்லலாம்படியான மனோலய நிலையை யடைந்தார்கள். பக்தர்கள் மாத்திரமன்று, இவ்வுலகில் ஊர்வன நடப்பன பறப்பன நிற்பன வாகிய எல்லா சராசரப்பொருள்களும் அக்காலை ஓர்வித தேவத்தோற்றம் பெற்றிருந்ததாய்த் தோன்றின. இவ்வாறு குழலூதியான பின்னர், ஸ்வாமிகள் தன்னைப் பள்ளியறைக்கழைத்துப்போக ஆக்ஞாபித்தனர். உடனே பஞ்சணை பரப்பி, ஸ்வாமிகளை யழைத்துக்கொண்டுபோயதின்மீதிருத்தினர். ஸ்வாமிகளுடைய தேககாந்தி சூரிய கிரணத்தைத் தோற்கடிப்பதுபோலிருப்பினும், அவர்கள் கண்களுக்குக் கஷ்டங்கொடுக்காது குளிர்ச்சியையே கொடுத்துக்கொண்டிருந்தது. பக்தர்கள் சந்தனங்கொடுவந்து,

> "இந்திரனோடு பிரமனீச னிமையவ ரெல்லாம்
> மந்திரமாமலர் கொண்டு மறைந்தவராய் வந்துநின்றார்
> சந்திரன் மாளிகை சேருஞ் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்
> அந்தியம்போ திதுவாகு மழகனே காப்பிட வாராய்"

என்று திருமார்பிலுந் திருக்கைகளிலும் ஆரப்பூசி,

> "அண்டத் தமரர்கள் சூழ வத்தாணி யுள் ளங்கிருந்தாய்
> தொண்டர்கள் நெஞ்சி லுறைவாய் தூய்மலராள் மணவாளா
> உண்டிட் டுலகினை யேழுமோ ராலிலையிற் றுயில் கொண்டாய்
> கண்டு நானுன்னை யுகக்கக் கருமுகைப்பூச் சூட்டவாராய்"

என்று மலர்மாலை யணிவித்து, கற்பூரதீபங் காட்டி சாமரை வீசினர்கள். ஸ்வாமிகள் அவர்கள்செய்த சைத்யோபசாரங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனையுங் கூறாமல் மௌனமாயிருந்தார். கடைசியாக அங்கிருந்தோரை நோக்கி "என் பக்தர்களே! நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். ஹூஸேன்ஷா என்னும் அரசன் சேனைகளையனுப்பி யுங்களையெல்லாங் கொன்றுவிடுவதா யுத்தேசத்திருக்கிறான் என்று கேள்வியுற்று நீங்களெல்லாந் துன்பமடைந்தீர்கள். உங்கள் அச்சத்தைத் தீர்ப்பதற்காகவே யானிந்தத் திருவுருவத்தோடுங்களெதிரில் பிரசன்னமாயினேன். இந்த என்னுடைய அவதாரத்தில் ஒருவரையுந் சிட்சிக்கிறதில்லை யானபடியால், எவரெவர்கள் என் பக்தர்களுக்கு விரோதிகளா யேற்படுகிறார்களோ, அவர்கள் மனதிற்புகுந்து அவர்கள் கொண்ட துர் எண்ணத்தை மாற்றிவிடுவேன்" என்று ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளி, ஸ்ரீபாஸர் வீட்டிலிருந்த ஒரு நாலுவயதுள்ள நாராயணி என்னும் பெண் குழந்தையைப்பார்த்து "குழந்தாய்! உனக்குப் பக்தியுண்டாகட்டும்!" என்று ஸ்வாமிகள் சொன்னமாத்திரத்தில் அக்குழந்தைக்கு விசேஷபக்தியுண்டாகி, "கிருஷ்ண! கிருஷ்ண!" என்று கூறி நிருத்தஞ்செய்யத் தலைப்பட்டது. ஸ்வாமிகள் மறுபடியும் அங்கிருந்த பக்தர்களை நோக்கி "அன்பர்காள்! பார்த்தீரா? நான் இப்படித்தான் இவ்வவதாரத்தில்செய்ய உத்தேசித்திருக்கிறேன். உங்களை வதைக்க முசல்மான் அரசன் எண்ணங்கொண்டிருப்பனேல், அவன் மனதிலும் புகுந்து அவ்வாறு செய்யவொட்டாது அவனெண்ணத்தை மாற்றிவிடுவேன். ஆக, உங்கள்பயத்தைத்தீர்க்க நினைத்து தான் சேவைசாதித்தேன்" என்று கூறலும் ஸ்ரீபாஸர், "ஸ்வாமிகாள், தங்கள் திருவுருவத்தைக்காணும் பாக்கியம் பெற்றவெங்

கட்குப் பயமெங்கிருந்துவரும்?" என்று சொல்லிவணங்கி நின்றனர். இத்தருணத்தில் வெளியில் நின்றுகொண்டிருந்த அவ்வீட்டு ஸ்த்ரீகள், "நாங்கள் ஸ்வாமியைச் சேவிக்கவேண்டாமா? பண்ணிய பாவத்தால் பெண் ஜன்மமெடுத்தாலும் இப் புண்ணியமும் பெறக்கூடாதா?" என்று கதறினர்கள். இதைக்கேட்ட ஸ்வாமிகள், "அனைவரையும் உள்ளேவரச் சொல்லுங்கள்" என் றாச்ஞாபித்தார். அவ்வண்ணமே யம்மாதுசிரோன்மணிகள் தங்கள் "முகமூடி" யைச் சிறிதுநீக்கி, ஸ்வாமியைத்தரிசித்து அவர் பாதம் பணிந்து திருவடி தலையிற் றீண்டவணிந்து நிற்கவும், ஸ்வாமிகள் அவர்களையாசீர்வதித்து "என்னிடம் உங்கள் மனம்படிந்து நிற்கக்கடவீ" என்றுகூறினர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் "நான்போய் மறுபடி வருகிறேன்" என்று முன் உபநயனகாலத்திற் சொன்னபிரகாரமே, சொல்லி மூர்ச்சையாய் விழுந்தனர். மூர்ச்சைதெளிந்தெழுந்து, "நான் இங்கு எப்படி வந்துசேர்ந்தேன்? ஏதாவது பிதற்றினேனு" என்று அங்கிருந்தோரை ஸ்வாமிகள் கேட்டார். "அதெல்லாமென்றுமில்லை" என்று அங்கிருந்தோர் சமாதானஞ் சொல்லினர். வழக்கப்பிரகாரமே, "கிருஷ்ண, கிருஷ்ண!" என்று ஸ்வாமிகள் கதறிக்கொண்டிருந்தார்.

ஸ்வாமிகள் தன் ஸ்வரூபத்தைக் காட்டும்பொழுது தனக்கிணையுலகத்தில் யாருமில்லாததுபோற்பேசுவர்; அந்த ஸ்வரூபத்தைமறைத்திருக்கும்பொழுது, மிக்கவணக்கமாயும், "நாயினுங்கடையேன்" என்றும் தன்னைமிகத்தாழ்மைப் படுத்திப்பேசுவார். அவர் தன் தேவ ஸ்வரூபத்தை மறைத்தபின், அதற்கு முன் யாது நடந்தது என்று ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை. ஆயினும் நடந்ததைப்பற்றிச் சிறிது கவனமுமிருப்பதென்றும் காட்டிக்கொள்வார். சைதன்யர் தம் இடைவிடாத அன்பால் பக்தர்களுக்குப் போதனை செய்துவந்தது மிக்க ஆச்சரியகரமானதே! தாம் குழந்தைப்பருவத்தினராய் செங்கீரையாடியும் சப்பாணி கொட்டியும் போந்தகாலத்தில், ஒருகணமேனும் ஓரிடத்தில் நிற்காது அங்குமிங்கும் அலைந்தும் திரிந்தும் அற்புதம் புரிந்துகொண்டிருந்தார். அவர் தம் பாலப்பருவத்தில்

மாணாக்கராயிருந்து தம்தேக மனோ தத்துவங்களை விர்த்தி செய்துகொண்டுவந்தார். இக்காலம் கழிந்தவுடன், ஸ்ரீகிருஷ்ணனை உபாசனைசெய்யும் விதத்தை மனிதர்க்குக்காட்டத்தானே பக்தியைவளர்த்திக்கொண்டுவந்தார். கடைசியாக, இந்தவுபாஸனையின் பலன் கடவுளைப்பெறுவதேயென்பதையும் நிரூபித்தார்.

ஆறாவது அத்தியாயம்.

நித்யானந்தர் வருகை—ஹரிதாஸர் பக்திமேன்மை.

ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் பலராமர் ஸ்வாமிகட்குத் தமையனாராயவதரித்திருந்தாரென்று நாம்படித்திருக்கிறோம். ஸ்வாமிகளின் இவ்வவதாரத்தில், நித்யாநந்தர் பலராமராகவும் கௌரங்கர் கிருஷ்ணராகவும் தோன்றினார்களென்று சொல்லப்படுகின்றது. பீர்பூப் ஜில்லாவில் எக்சாகா என்னுமிடத்தில் நித்யானந்தர் பிறந்து, அவர்க்குப் பன்னிரண்டாவது வயதில் உலகத்தைத்துறந்து ஸந்நியாஸம் பூண்டனர். கௌரங்கர் தமையனாராகிய விஸ்வரூபர் ஒரு சந்நியாசிவேஷம் பூண்டு நித்யானந்தரைத் தனக்குக்கொடுக்கும்படி அவர்தாய்தந்தையரைவேண்ட அவர்கள் அதற்கிணங்கி நித்தியானந்தரையச் சந்நியாஸிக்குக் கொடுத்துவிட்டனரென்று வதந்தி. நித்யானந்தர் இருபதுவருஷகாலம் பிருந்தாவனத்தைச் சுற்றியிருந்த காட்டில் ஸ்ரீகிருஷ்ணனைத் தேடித் திரிந்துகொண்டிருக்கும்போது முன் கயாக்ஷேத்திரத்தில் கௌரங்கஸ்வாமிகட்குபதேசம்பண்ணினதாய் நாம்கூறின ஈஸ்வரபுரி ஸ்வாமிகள் அங்கிருந்து "ஏன்! நித்தியானந்தரே, ஸ்ரீகிருஷ்ணரை யிங்கு தேடுகின்றீர்? அவர் இப்பொழுது நவத்வீபத்தில் ஸ்ரீகௌரங்கராக அவதரித்திருக்கிறார். நீர் அங்கேசெல்லும்" என்றுகூற, அதைக் கேட்ட நித்யானந்தர் நவத்வீபஞ்செல்லப் பிரயாணமாயினர். நித்யானந்தர் நவத்வீபம்வந்து சேருவதற்கு மூன்று நாள் முன்னமே ஸ்வாமிகள் தன்பக்தஜனங்களைப் பார்த்து "நம்மைத்தேடிக்கொண்டு ஒருபெரிய மஹாத்மாவருகிறார்" என்று சொல்லிக்கொண்டிருந்தார். நித்யானந்தர் பலராமர் அவதாரமாகையாலும், பலராமர் கிருஷ்ணபக்தியாகிற கள்ளையுண்டிருந்தபடியாலும், ஸ்வாமிகள் "எனக்குச்சாராயங்கொடுங்கள்" என்றார். இதையுணர்ந்த ஸ்ரீவாஸர் "ஏன், ஸ்வாமிகளே! கிருஷ்ணபக்தியாகிற சாராயம் உங்களிடம் அபரிமிதமாய்க்கிடக்க, எங்களையேன் கேட்கிறீர்?" என்றனர்; ஸ்வாமிகளுஞ்சரிதானென்றொப்புக்கொண்டார்.

நவத்வீபம் வந்து சேர்ந்த நித்யானந்தஸ்வாமிகள் ஸ்வாமியிடம் நேராய்வாராது, நந்தன ஆசார்யர் என்கிறவர் வீட்டிலிறங்கினார். ஸ்வாமிகள் இதையறிந்து தன் பக்தர்களை நோக்கி, "நண்பர்காள்! நான்சற்றுமுன் சொல்லிக்கொண்டிருந்த மஹாநுபாவர் இப்பட்டணத்தில் வந்திருக்கிறார். அவரைப்பார்க்க என்மனம் பெரிதும் வேண்டுகின்றது. ஆதலின் நீவிர் உடனே சென்று அவரையழைத்துக்கொண்டு வந்தால் நலம்" என்று சொன்னார். அவர்களும் பட்டணமெங்குஞ்சுற்றி அம்மஹாநுபாவரகப்படவில்லையென்று வந்து சேர்ந்தார்கள். ஸ்வாமிகள் "நான்கூடவருகிறேன்; போய்வரலாம், வாருங்கள்!" என்றனைவரையு மழைத்துக்கொண்டு நேராக அனைவரும் ஆச்சரியப்படும்படி நந்தன ஆசார்யரிருப்பிடத்திற்குச் செல்ல அங்கு நித்யானந்தரிருப்பதை யனைவருங் கண்டார்கள். நித்யானந்தரும் கௌரங்கரும் யாதொன்றும் பேசாது மௌனமாயிருந்தார்கள். ஸ்வாமிகள் தன்னுடைய திவ்ய சர்வசக்தியால் நித்யானந்தரைத் தன் வசப்படுத்திக் கைதியை யழைத்துச் செல்வதுபோல் தன்னிருப்பிடங் கொண்டுவந்து சேர்த்தனர். உடனே தாயாரைப்பார்த்து, "என் அம்மணி! இவர் என்னுடைய தமையனாரனபடியால், இவரைச் சர்வசாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு மிக்கபட்சத்துடன் நடத்திவரவேண்டுமென்று கூறினார்.

சசிதேவியும் நித்யானந்தரை யுற்றுப் பார்க்க, அவர் விஸ்வரூபரைப்போலவே காணப்பட்டனர். உண்மையில் விஸ்வரூபருடைய ஆத்துமா நித்யானந்தருடம்பில் பிரவேசித்திருந்தது. எவ்வண்ணம் தேக காங்கைப் பரிசோதனைக் கருவியில் சூடேறச் சூடேற அதிலுள்ள ரசத்தை மேலெழச்செய்து வெளிகாட்டுகிறதோ, அவ்வகையே சசிதேவிமனதில் ஆனந்த முதித்ததால் அஃது அவர் மனமகிழ்ச்சியைவளர்த்தி, அவர் தம் முகக்கமலத்தைமலர்த்தியும், முத்தன்னபற்களுக்குப்பேரொளி

தந்தும் நகைவிளைத்தும் உற்சாகப்படுத்தியது. உடனே மகிழ்வுப்பெருக்காலும், அன்பு மிகுதியாலும் நாவசைக்க முடியாது பேசவும் கூடாது, கண்ணீர் தாரைதாரையாய்ப்பெருக, "இழந்த புத்திரனைப் பெற்றோமே!" என்று களிகூர்ந்து நித்யானந்தருடலைத்தழுவி யுச்சிமோந்து, "என் விஸ்வரூபனே! குழந்தாய்! குதலைப்பேசி மகிழ்வுறுத்திய மதலாய், பின்னரென்னை பிரிந்து வருத்திய மகனே! தம்பாவோ! வந்தனையா! எனக்கு மகிழ்ச்சி தந்தனையா! தனியே கிடந்து அநியாயமெல்லாம் புரியும் உன் தம்பி வெம்பியழியாது அவனுக்குத் துணை புரிக" என்று சசிதேவியம்மாள் கூறினர். ராமனை நினைந்து நினைந்து, மனம்புண்ணாகி எதிர்பார்ப்போ மென்கிற யோசனையுமில்லாது வருந்திய சனகிக்கு ராமன்மோதிரம் கிடைத்தது போலும், அந்த தயரதன் மதலைக்குச் சீதை சூடாமணி கிடைத்தது போலும், கடல்யாத்திரை செய்வோனொருவன், கப்பலுடைந்ததால் கடலில் விழுந்து ஒவ்வோர் கணமும் பிணமாக நேருங்கால் எதிரில் ஒரு நாவாயைக் காணுதல் போலும், பாலைவனத்தகப்பட்டு முன்னும் பின்னும் இப்புறமும் அப்புறமும் எப்புறமும் தங்க நிழலிலாது களைகாணாது தாகவிடாயாலும் ஆகார விருப்பாலும் தவிப்போனுக்கு, சாலையும் சோலையும் முப்பழங்களும் நற்றடங்களும் நேர்வது போலும், கைப்பொருளையிழந்து அஃதகப்படு மென்று எதிர் பாராதானுக்கு அதேயகப்பட்டது போலும், நித்யதரித்திரனாய் உண்டியே யுடையே, காசேபணமே, அன்னமோ ராமச் சந்திரா என்று அலலும் அவதியும் தொல்லையும் துயரமும் பட்டு உண்ண வுண்டியும் உறங்கத்திண்ணையு மற்று வுருள்பவனுக்கு தனக்குவை கிடைத்தது போலும், சசிதேவிக்கு எதிர்பாராத மனமகிழ்ச்சி யுண்டானது.

மேற்சொன்ன விஷயங்கள் நிகழ்வதற்கு முன்தினம், ஸ்ரீ கௌரங்கஸ்வாமிகள் ஓர் உன்னதக்கோலமேற்று நித்யானந்தருக்குப் பிரஸன்னமாயினர். இருகைகளிலும் கோதண்டமுமம்புமுடையவராயும், வேறிரண்டுகைகளிலும் குழலெடுத்தும், மற்றுமுள்ள இருகரங்களிலும் தண்டகமண்டலந் தாங்கி

யும், ஆக, ஆறு திருக்கைகளுடன் நித்யானந்தருக்குச் சேவைசாதித்து, முன்னொருகாலத்தில் ராமச்சந்திரனாக அவதரித்ததும் தானே, பின்னர் கிருஷ்ணனாக அவதரித்ததும் தானே, இப்பொழுது கௌரங்கராக அவதரித்திருப்பதும் தானே என்பதை ஸ்வாமிகள் தெரிவித்தார். துஷ்டஸம்ஹார சிஷ்டபரிபாலனார்த்தம் ராமனாகவும், வாத்ஸல்ய சௌலப்ய குணங்களை விளக்குவதற்குக் கிருஷ்ணனாகவும், பக்தியுபாஸனை யின்ன விதமாய்ச் செய்வதென்று ஆத்மகோடிகளுக்குத் தானே நடந்து காட்ட ஸ்ரீகௌரங்கராகவும் பரப்ரம்ஹம் அவதரித்திருக்கிறதாய்த் தெரிகிறது. கௌரங்கஸ்வாமிகள் நித்யானந்தரை நோக்கி, "மூத்தநம்பியாரே! நீவிர் உம் இஷ்டப்பிரகாரம் இருள் தருமா ஞாலத்தி லழுந்திக் கிடக்கும் சர்வ ஜனங்களுக்கும் பக்தியையும் ப்ரேமையையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கவேண்டும்." என்றுகூறி தமையனும் தம்பியும் தராதலத்துள்ள மக்கட்கெல்லாம் பக்திக்கொடை யளித்துவந்தனர்.

இவ்வாறு நடந்துவரு நாட்களிலோர்நாள், ஸ்வாமிகள் ஸ்ரீபாஸருடைய தம்பியாகிய ஸ்ரீராமரையழைத்து "கடவுளாகிய நான் அத்வைத ஆசார்யரையும் அவர் மனைவியாரையும் அழைத்துவரச்சொன்னதாய்க் கூறி உடனே யழைத்து வருக, அன்றியும், அவர் வேண்டுகோளுக்கிரங்கி யவதரித்ததுள்ளே னென்றுஞ் சொல்லுக" என்று கூறியனுப்பினர். அத்வைத ஆசார்யர் வைஷ்ணவர்கட்கெல்லாம் பிரதமகுருவாய் ஒரு அரசனையும் தன் சிஷ்யனாக்கிக்கொண்ட வல்லமையுடையவராய் மிக்க புத்திகூர்மையுள்ள சாஸ்திரபண்டிதராயிருந்ததால், தான் முன்னம் கண்டிருந்ததும் கேட்டிருந்ததும் நம்பியிருந்ததும் பல்லாயிரங் கோடியாயினும், சுலபத்தில் நீடித்த பக்தியையும் நம்பிக்கையையும் "நிமை" விஷயத்தில் வைக்க அசக்தராயிருந்தனர். கௌரங்கர் ஸ்ரீபாஸர் வீட்டில் கடவுளாய் பிரஸன்னமாயின ரென்று அப்பொழுது வங்காள தேசமுழுதிலும் வதந்தியாயிருக்கினும், அதையவர் சிறிதும் நம்பவில்லை. "நேற்று நம் வீதிகளில் கோவணங்கட்டித் திரிந்துகொண்டிருந்த 'நிமை'ச்சிறுவன் இன்று கடவுளாய் விட்டானா? இதை

நான் நம்பிவிட்டால் என் கல்வியெல்லா மென்ன பிரயோசனப்படுவது!" என்று அத்வைத ஆசார்யார் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் ஸ்ரீராமர் ஆசார்ய ரெதிர்வந்து நின்றனர். ஸ்ரீராமரைப்பார்த்து ஆசார்யர் சிறிது நகைத்து "உங்கள் கடவுளாகிய கௌராங்க ரும்மையனுப்பினரோ?" என்று கேலிசெய்து கேட்கவும், அதையொன்றும் மதியாது ஸ்ரீராமர் ஸ்வாமிகள் கூறியதெல்லாம் சொன்னார். உடனே இருந்தாற்போலிருந்து, ஸ்வாமிகளுடைய வன்மையால் அத்வைதாசார்யர் மனதிலுதித்திருந்த சந்தேகங்களெல்லாம் சூர்யனைக்கண்ட பனிபோல் விலகவும், தன்மனைவியை யழைத்துக் கொண்டு அக்கணமே நவத்வீபத்திற்குப் போவதற்குப் புறப்பட்டனர். நவத்வீபம் வந்து சேர்ந்ததும் பழைய பிரகாரம் ஆசார்யர் மனதில் சந்தேகமுதித்தது. "கௌராங்கர் கடவுளரா! இது என்னபைத்தியமா யிருக்கிறதே! நாம்மறுபடியும் புத்தி கெட்டோமே!" யென்று நினைந்து ஸ்ரீராமரைநோக்கி "அத்வைதாசார்யர் பிடிவாதமாய் வரமாட்டேனென்று சொன்னாரென்று சொல். நீங்கள் சொல்லுகிறபடி அவர் கடவுளரானா லென்ன செய்கிறார். நான் வந்திருக்கிறதைத் தெரிந்துகொள்ளுகிறாரா பார்ப்போம்" என்று அத்வைதாசார்யர் சொல்ல, ஸ்ரீராமர் "ஐயோ, பாவமே யிஃதென்ன பைத்தியமா? இது விஷயத்திலின்னும் பைத்தியமா?" என்று சொல்லிப்போயினர். ஸ்ரீராமர் புறப்பட்டுச் சென்றவுடனே மறுபடியும் அத்வைதாசார்யருக்குக் கடவுளருளால் சந்தேகமாறி, "நெஞ்சேனுந்துணைவ! நீதுணைவனல்லைகாண்! உன்னையே நம்பினோர் மண்குதிரையை நம்பி நட்டாற்றி லிறங்கினர் காண்! நல்லதும் உன்னாலே! பொல்லாதும் உன்னாலே! குடிசையைக் கோபுரமாக்குவை, கோபுரத்தைக் குடிசையாக்குவை! எட்டாப்பழத்தை நினைத்துக்கொட்டாவி விடுவாயும் நீயே! குடியரிடமிருக்கும் உறுதிப்பாடு உன்னிடமே காணப்படும்! ஆசையும் நேசமும், நன்மையும் தீமையும், வாழ்வதும் தாழ்வதும், செய்வதும் வைவதும், கொடுப்பதும் செடுப்பதும், அடிப்பதும் பிடிப்பதும் எல்லாம் உன்னாலே! எட்டினாற்குடுமி,

எட்டாவிடிற் கால் என்பதே யுன்கொள்கை! ஆவா! சை! சை! மனமே! உன்மதியொழிந்ததோ! இவ்வாறு நீ வீண் ஆடம்பரஞ் செய்து பலவாறு சஞ்சரிப்பதால்தான் உன்தொழிலுக்கு "மனோராச்சிய" மென்றொரு பேர் கற்பித்தது மன்றி, உன்னைக் குரங்குக் குவமானப் படுத்துகின்றனர்கள். எவ்வாறு குரங்கு ஒரு மரத்தினின்று பிறிதொரு மரத்திற்கும் அதனின்றும் மற்றொரு மரத்திற்கும் பாய்ந்து குதித்துக் கூத்தாடுகின்றதோ, அவ்வாறே, ஏ! மனமே! நீயும், பூமியிலிருந்து வானிற்கும் வானிலிருந்து வைகுந்தத்திற்கும் ஓடிப்பாடுகின்றனை! இஃது உனக்கழகாமா! 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்றார் ஒரு பெரியர்!" என்று பலவிதமாய்ப் பேசினார். பின்னர் மனந்தேறி மனைவியை யழைத்துக்கொண்டு ஸ்வாமிகள் ஸ்ரீபாஸர் வீட்டிலிருந்த விடத்திற்குச்செல்ல முயன்று உடல் நடுங்கித்தன்னைமறந்து, தரையில் விழும்சமயத்தில் அங்கிருந்தோர் தாங்கிக்கொள்ள, பின்னர் சிறிது தைரியத்துடன் ஸ்வாமிகளிருந்த அறைக்குட் பிரவேசித்தனர். பலகோடிசூர்யப்ரகாஸமாய் ஸ்வாமிகள் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறதையும் அவ்வீட்டிலிருந்த ஒவ்வொரு வஸ்துவும் ஸ்வாமியின் தேஜோமயவ்யாபகத்தால், பளபளப்பாய் பிரகாசிக்கிறதையும் பலதேவதைகள் அவ்வறை முழுவதும் நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ் செய்வதையும் கண்டு ஆசார்யஸ்வாமிகள் திடுக்கிட்டு ஒன்றுஞ் சொல்லத்தோன்றாதவராய் நின்றனர். தன்னுடைய சர்வசக்தியைக் காட்டும் ஸ்வரூபத்தால் அத்வைதாசார்யார் மதிகலங்கி திடுக்கிட்டு நிற்கிறார் என்பதையறிந்து, ஸ்வாமிகள், அவ்வுருவத்தை நீக்கியொரு சுந்தர பாலவுருவத்தையேற்று, தன்னுடம்பினின்றும் நாலுதிசைகளிலும், ஜோதியைப் பெருக்கவிடுத்து ஆசார்யரை யருகிலழைத்து, "நும்வேண்டுகோளுக்கிரங்கி யாம் அவதரித்துள்ளோம். அனைவர்க்கும் நும்விருப்பப்படி பக்தியையும் ப்ரேமையையும் பகிர்ந்து கொடுப்பீராக" என்று கூறினர். ஆசார்யர் அதுவரையில் தன்னைவிடாது பிடித்திருந்த திகில் நீங்கப்பெற்றோராய் பக்திரசங்கனிந்த மனதுடையோராய்,

"'தவம்புரியேன் றவம்புரிந்தார் தமைப்போல நடித்துத்
தருக்குகின்றே னுணர்ச்சியிலாச் சடம்போல விருந்தேன்
பவம்புரிவேன் கமரினிடைப் பால் கவிழ்க்குங் கடையேன்
பயனறியா வஞ்சமனப் பாறை சுமந் துழல்வேன்
அவம்புரிவே னறிவறியே னன்பறியே னன்பால்
ஐயாநின் னடியடைந்தார்க் கணுத்துணையு முதவேன்
நவம்புரியு முலகிடைநா னேன்பிறந்தே னினது
நல்லதிரு வுளமறியும் ஞானநடத் திறையே'

என் அப்பனே! உன் அருண்மகிமை யறியாது பலவகை பிதற்றின மடையன் யான்? எனக்கும் நின்திருவருளியைந்ததோ! என் ஒப்பிலாமணியே; என் தவத்தால் நீ யீண்டெழுந்தருளினையென்று சொல்வது வியக்கத்தக்கதே! உன்னருண்மகிமையாலென்னையொத்த மூடஜனங்களைக் கரையேற்ற வீண்டவதரித்ததுமல்லாமல், பாவிகளிலும் பாவியாகிய எனக்கு வெகுமதி தந்தது சரியோ? இது தகுமோ, இது முறையோ, என்னரசே! ஆயினும் உன்கிருபைக்கு நான் பாத்திரமானதால், என் பவபாசங்களெல்லாம் இன்றோடே 'நீரினிற் றூசாகும்' அல்லவோ! என் பாக்கியமே பாக்கியம்! எவர்க்குண்டிந்த ஸ்லாக்கியம்!" என்று பலவாறு ஸ்தோத்திரஞ் செய்தனர். ஸ்வாமிகள் "அஃதிருக்கட்டும், உமக்குவேண்டும் வரத்தைக் கேட்பீர், யாம் மனமகிழ்ந்துகொடுப்போம்" என்று ஆசார்யர்க்குக் கூறலும், ஆசார்யர் "சாதிமத பேதங்களில்லாது, அனைவர்க்கும் பக்தியளிக்கவேண்டுமென்பதே யாம் கேட்கும் வரம்" என்றனர்; ஸ்வாமிகள் "தந்தோம்" என்றனர்.

அத்வைதாசார்யர் உடனே புறப்பட்டு சாந்திபுரமாகிய தன்னூர்க்குப்போய்ச் சேர்ந்தார். மறுபடியும் அவர் மனதைச் சந்தேகங் கவர்ந்துகொண்டது. "இஃது என்ன ஜாலவித்தையோ; அன்றிச் சித்துவிளையாடலோ? அல்லது கௌராங்கர் உண்மையில் கடவுளோ? நாம் ஏமாந்தோமோ? நம்மை நால்வர் நகைப்பாரோ!" என்றின்னன கலக்கங்களும் ஐயங்களும் அவர் மனதிற் புகுந்துகொள்ள, ஆசார்யர் "கௌராங்கர் உண்மையில் அவதாரமானால், ஸ்ரீக்ருஷ்ணஸ்வரூபத்தை நமக்கேன் காண்பிக்கின்றிலர்? ஜாலம்முதலிய வித்தைகளால் கிருஷ்ணஸ்வரூபத்தைக் காட்டமுடியாது. பரப்ரம்ஹும் அவ்வாறு நிகழ விடமாட்டார். இதுவே நமக்குச் சரியான பரிசோதனை" என்று மனதைத்தேற்றிக்கொண்டு சாந்திபுரத்தினின்றும் உடனே புறப்பட்டு நவத்வீபத்திற்குவந்து சேர்ந்தனர். அங்கே ஸ்ரீபாஸர் வீட்டிற்குப்போகவும், எம்மான் ஆசார்யரைக்கண்டு "ஸ்வாமிகாள்! முன்தடவை வெகு சீக்கிரமாய்ப்போய்விட்டீர்களேயென்று பரிதபித்துக்கொண்டிருந்தேன்; இவ்வளவு சீக்கிரத்தில் மறுபடியுந் தங்களைக் காணும் பாக்கியம்பெற்றேனே" என்று அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். இதற்கிடையே, அத்வைதாசார்யர் ஸ்ரீபாஸர்காதில் சிலவற்றைக்கூற, ஸ்வாமிகள் "எனக்குத்தெரியக்கூடாதோ?" வென்றனர். அதன்மீது ஸ்ரீபாஸர் "ஆசார்யருக்குத் தாங்கள் கிருஷ்ணஸ்வரூபமாக விருந்து சேவைசாதிக்கவில்லையாம்; அதனால் அதைப்பார்க்க விரும்புகிறார்" என்று கூறினர். ஸ்வாமிகள் "என்னால் யாது முடியும்? அவ்வாறு தேவதூஷணை பொதிந்த வாசகங்களை யெப்பொழுதேனும் என் மயக்கத்தில் உளறியிருப்பினும், நீங்கள் அதை யுண்மை யென்றெடுத்துக்கொள்ளலாமா?" வென்றனர். "ஆயின் தாங்கள் நித்யானந்தருக்கு க்ருஷ்ண ஸ்வரூபமாகி சேவை சாதித்தீர்களே! அஃதெப்படி?" என்று ஸ்ரீபாஸர் வினவவும், ஸ்வாமிகள் "அஃதென்னவோ? எனக்குத் தெரியாது. அப்படியிருக்கும் பக்ஷத்தில், கண்மூடிக்கொண்டு மனனஞ்செய்து கொண்டிருக்கும் பக்தர்களுக்கு சாக்ஷாத் கிருஷ்ணன் பிரசன்னமாவதற்கு யாது தடை?" என்று கூறினர். உடனே அத்வைதாசார்யர் கண்ணைமூடி மனனஞ் செய்து கொண்டிருந்தார். சிறிதுநேரத்திற்கெல்லாம் அவர்உடல் சிலிர்த்து மூர்ச்சையாய் விழுந்தார். அனைவரும் ஆச்சரியப்பட்டு ஸ்வாமிகளைக் கேட்க, அவர் "ஒருவேளை கிருஷ்ணன் பிரத்தியக்ஷமாயிருக்கலாம்" என்றனர். அதன்மீது ஸ்ரீபாஸர் தாங்கள் அத்திருவுருவத்தைக் காணக்கொடுத்து வைக்கவில்லையா! ஆயினும் தங்கள் சாதாரண உருவத்தைத் தரிசித்துக் கொண்டிருக்கும் பாக்கியமே யெங்கட்குப் போதும். ஆசார்யருக்கு ப்ரஞ்ஞை வரும்படி

பண்ணவேண்டும்" என்று ஸ்வாமிகளை வேண்ட, அவர் "என்னாலென்ன முடியும்? காலம்வந்தால், எழுந்து விடுகிறார்" என்று பதில்கூறினார். உடனே சற்றுநேரத்திற் கெல்லாம் ஆசார்யர் தூங்கி விழித்தாற்போ லெழுந்திருக்க அனைவரும் அவரைநோக்கி, யாது நிகழ்ந்ததெனக் கேட்க, அவர் "எல்லாம் எதிரில் ஒன்றுந்தெரியாதது போலிருக்கும் 'நிமை' யினுடைய மகிமைதான்! என்மனம் புகுந்து கண்ணாறாய்ச் சேவை சாதித்தனன்" என்று செப்பலும், ஸ்வாமிகள் "இஃதென்னை? நான் பேசாது உட்கார்ந்திருக்க, என்மீது பழிசுமத்துகிறீர்" என்றனர். ஆசார்யார், "ஸ்வாமிகளே? அப்படியா? நீவிர் என் மனதில் புகுவதை நன்றாய்க் கண்டேனே" என்று சொல்லி, "இவர் கடவுளவதாரமே. அதற்குத் தடையொன்று மின்று! இவர் என்மனம் புகுந்து என் விருப்பப்படி சேவைசாதித்தார். இவரடி பணியாதிருப்பின் அஃது பெருத்த குறையேயாம்;

'ஊனில் வா ழுயிரே நல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன னெம்மான்
தானும்யானு மெல்லாந் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யுங் கன்னலு மமுது மொத்தே,'"

என்று அங்கிருந்தாரனைவர்க்கும் பறையறைவித்து, முழு நம்பிக்கையோடு தம்மிருப்பிடஞ் சென்றனர். ஆயினும், சந்தேகம் நாளடைவில் அவர் மனதைக்கவர்ந்து கொண்டே வந்தது.

அத்வைதரல்லாமலும், மிகத் தனவந்தராயிருந்த புண்டரீகரென்பவரும் ராமனந்தரென்பவரும், ஸ்ரீகௌரங்க ஸ்வாமிகளுடைய சிஷ்யர்களாகினார்கள். இப்படி ஸ்வாமிகளுடைய மகிமையாலேயே யவர்பால் பலபேரிழுக்கப்பட்டு வந்தனர்கள். அவர்கள் சரிதங்களை யெல்லாம் விவரித்துக்கூற இங் கிடங் கிடையாது. ஆயினும் அவர்களுள் ஹரிதாசரென்பவருடைய சரித்திரத்தைமாத்திரம் சிறிதாயினுங் கூறவேண்டுவது அத்யாவஸ்யமா யிருக்கின்றது. ஹரிதாஸர் என்பவர் ஒரு முசல்மானாயிருந்து, ஹரிபக்தியிற் சிறந்தவராய்த் திரும்பினார்

இவர் எந்நேரமும், "ஹரி! ஹரி!!" என்றே கோஷமிட்டுக் கொண்டிருப்பார். 'ஹரி' யென்கிற சப்தத்தைக் கேட்டமாத்திரத்தில் மிருகங்களும் பாவனமடையும் என்று கருதியே யிடைவிடாது ஹரி ஹரி யென்று கோஷித்துக் கொண்டிருப்பார். இவர் மகம்மதிய மதத்தைவிடுத்து, ஹிந்துமதத்தை யனுசரித்தாரென்பதை அத்தேசத்து மகம்மதிய அரசன் அறிந்து இவரைப் பிடிக்கச்சொல்லி ஆக்ஞாபித்தான். ஹரிதாஸரைப்பிடித்த மகம்மதிய கவர்னர் இவருடைய மதப்பற்றையும் பரோபகார சிந்தையையும் வியந்து இளகின மனதினனாயினும் அவனிட மிருந்த பிரதம உத்தியோகஸ்தனான கோரையென்னும் மூடபக்தியுடைய துருக்கன் இவரைச் சும்மாவிட்டால் ராச்சியத்திலிருப்பவர்களுக் கெல்லாம் படமற்றுப்போகும்; அன்றியும் பார்ப்போர்க்குக் கேலிக்கிடமாவதுடன், மகம்மதிய மதத்திற்கும் பேரிழிவுவிளையும் என்று கூறி வற்புறுத்தினதால், கவர்னரும் இணங்கவேண்டியதாயிற்று. எடுத்தாற்போல் கொலைசெய்கிறதென்று தண்டனை விதிப்பது பயனற்றதாய் முடியும் என்றும், சித்திரவதை செய்தால்தான் நோய் பொறாராகி ஹரிதாஸர் மஹம்மதிய மதத்தில் மறுபடி சேருவாரென்றும் ஒரு முடிவுக்குவந்து கடைத்தெருவுகளில் ஹரிதாஸரை யழைத்துக் கொண்டுபோய் சதை பீறிட்டுக் கொண்டு வரும்படி யடித்தல் வேண்டுமென்று தீர்மானித்து, அத்தீர்மானத்திலடங்கிய குரூரங்களை ஹரிதாஸர்க் கெடுத்துக்கூறி, உடனேயவர் ஹரியென்று சொல்வதை விடுத்து மஹம்மதிய மதம்சேர்ந்தாலொழிய அவ்வாக்கினையினின்று மீளார் என்பதைக் கரதலாமலகம்போ லெடுத்துக்காட்டினர்.

அவர்கள் என்னசொன்னபோதிலும்பிரகலாதர்போன்று மனம் சிறிதும் சஞ்சலப்படாராய், "நம்மையடிப்பதனால் இப்பாவிகளனைவரும் நரகத்திற்குப் பாத்திரர்களாகின்றனரே" யென வருந்தி அவர்களுக்கு யாதுசொன்னபோதிலும் முரட்டுத்தனமாயவர்கள் கேளாதிருந்ததால், ஹரியே சரணமெனநம்பி ஹரிநாமங்களைக்கோஷித்தனர். துஷ்டர்கள்கண்டவாறு கைசலிக்க அடித்தும் தாஸருக்கு உடம்பில் ஒரு சிறிதும்உறைக்காது,

"வேதத்தானு நல் வேள்வியினாலும் மெய்யுணர்ந்த
போதத் தானு மப்பு றத்துள வெப்பொரு ளாலும்
சாதிப்பார் பெரும் பெரும் பதம் தலைக்கொண்டு சமைந்தே
ஞேதிக்கேட்பன பரம்பொரு ளின்னமொன் றுளதோ" என்ற
"காமம் யாவதுந் தருவது மப்பதநங் கடந்தாற்
சேமவீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
வோம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவ
னும மன்னது கேண்மோ நாராய ணுய" என்றும்
"மூன்றவன் குணங்கள் செய்கை மூன்றவ னுருவ மூன்று
மூன்றுகண் சுடர்கள் சோதி மூன்றுதன் னுலக மூன்று
தோன்றனு மிடையு மீறுந் தொடங்கிய பொருள்கட் கெல்லாம்
சான்றவ னிதுவே வேத முடிவது சரதம்"

என்றும் அனைவர்க்கு போதனைசெய்துகொண்டே சலியாது நின்றனர். அன்றியும், அங்கிருந்து தம்மை வருத்துவோர்களை நோக்கி ஹரிதாஸர், கூறமுடியாத ஆற்றாமையுடன், "நண்பர்காள்! வீணிலேன் என்னை வருத்துகின்றீர்கள்! உங்கட்கிது நல்லதன்று! நான் உடல்வருந்தி யிவ்வாறு சொல்கின்றேனென்று மாத்திரம் நீங்கள் கனவிலும் நினைக்கவேண்டியதில்லை. என்னை வருத்துவதினால் பின்னருங்கட்குக் கெடுதிநேருமே என்று என்மனம் பெரிதும் வருந்துகின்றது! யான் என்செய்வேன்!" என்று பலவிதமாய்ச் சொல்லியும் கொடியோர் தஞ்செய்கையினின்றும் விலகினாரல்லர். பின்னரும் ஹரிதாஸர் மனந்தாளகில்லாராய், கோவென்றழுது, பரப்ரம்ஹத்தை நோக்கி "ஆதியும் அந்தமும்கடந்த அரும்பெரும் சோதியே! மனக்கவலைமாய்க்கு மணிவண்ணா மன்னாவே! குற்றங்கடிந்து உத்தமஞ்செய்யுங் கோளரியே கோவிந்தா! இவ்வறியார் செய்யுங் குற்றங்குறைகளைத் தாம் மனதில் வைக்காது இவர்களைக் காத்தருளல் வேண்டும். 'சிறியார்செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பது கடனே' என்பது தங்கள் மாட்டன்றே விளங்கல்வேண்டும். ஏழையேன் துன்பத்தைச் சிறிதுங்கவனியாது, எனக்குத் துன்பஞ்செய்வோர் துன்பத்தைத் துடைத்தருளல் வேண்டும்! இன்னோர் தங்கொடுஞ்செய்கையாலெங்கு நரகானுபவ மெய்துவரோ வென்பதே எனக்குச்

சாலத்துன்பம் விளைக்கின்றது. அவர் துன்பம் நீங்கப்பெறின், அதைக்காட்டினு மெனக்கு மகிழ்ச்சிதரக்கூடியதுவேறியாதுளது?" என்று பலவாறுப்பிரார்த்தித்தனர். ஒரு கன்னத்திலடித்தோர்க்கு மற்றொரு கன்னத்தையுங்காட்டுக வென்று ஓர் மஹான் சொல்லியிருக்கிறவண்ணம், தன்னைச் சித்திரவதை செய்வோர்க்கு உத்தமபதவி தேடப்புகுந்த ஹரிதாஸர் பரோபகாரசிந்தை யெவ்வளவு மேன்மையமைந்தது என்பதை அனைவருமுணர்ந்து ஆச்சரியமடைந்தார்கள். அங்குபார்த்திருந்தோரெல்லாரும் பரிதவித்து 'இப்பாதகத்தைக் கடவுள் பொறுக்காது' என்று கதறினார்கள். அடிக்கும் சேவகர்யாது செய்யக்கூடும்? அவர்கள் அடியாது நிறுத்தினாராயின், அவர்கள் தலைபோவது திண்ணம்! இப்படியடித்துக்கொண்டே யவர்கள் கையுமோய்ந்தது. ஹரிதாஸர் தன்னை வருத்துவோர்க்கு நற்பதங்கொடுக்கல் வேண்டுமேயன்றி நரகத்துய்க்கக் கூடாதென்று கடவுளை வேண்டிக்கொண்டே ஆனந்தக்களிப்பினால் மூர்ச்சையடைந்தனர். இது தான் நல்லசமயமென்று, அடிக்கும் சேவகர்கள் ஸ்வாமியுயிர்துறந்தனரெனப் பாசாங்குசெய்து ஆற்றில் விட்டுச்சென்றனர். ஹரிதாஸர் ப்ரஞ்ஜை வந்தவுடனெழுந்து ஆற்றில் நீந்தி அக்கரைசேர்ந்தனர். அவருடம்பில் சிறிதும் காயமில்லை. அவரைச்சேவிக்க ஜனங்கள் ஆயிரக்கணக்காய் அவரெதிர்வந்து அவரையழைத்துச்சென்றனர். மஹம்மதிய காஜியும் இதைக்கேள்வியுற்று, அவரிடம்வந்து வணங்கி தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டனன்.

முன்னொருநாள் ஹரிதாஸருடைய பக்தி யெவ்வாறிருக்கிறதென்றறியவேண்டி, சுந்தரவதியான ஒரு தாசிப்பெண்ணையவரிட மனுப்பி யவரை மயக்க முயன்றனர். ஹரிதாஸர் திவ்ய ஸ்வரூப மப்பெண்ணின் கண்ணிற் பட்டதும், அவள் மிகப்பக்தி யுடையோளாய் நிற்க, தாஸர் தன்னிருப்பிடத்தை யவட்குக்கொடுத்து "நீசுகமே வாழ்ந்து கொண்டிரு" என்று போய்விட்டார்.

இவ்வாறு பல பக்தர்களும் கௌரங்கர் ஸந்நிதான மகிமையாற் பெருகிக்கொண்டேவந்து, ஸ்வாமிகள் சிஷ்யர்களாய்

விட்டார்கள். ராமக்ருஷ்ணாதி யவதாரங்களிற் போன்றே, இவ்வவதாரத்திலும் ஸ்வாமிகளின் அபாரகருணா மஹாத்மய லீலைகளை யுடனிருந்து நிறைவேற்ற இந்த பக்தர்கள் அவதரித்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஏழாவது அத்தியாயம்.

மஹாப்ரகாஸம்-ஸ்ரீராமதரிசனம்-முகுந்தர்வைபவம்.

ஸ்வாமிகள் தன் சுயம்பிரகாஸத்தைத் தோற்றுவிக்கிற வேளைகளில் தவிர, மற்றவேளைகளிலெல்லாம் கண்ணன் மீதே காதலராய், "என்கண்ணன் என்கண்ணெதிரி லெப்பொழுது நண்ணுவனோ! இன்னும் வரக் காணேனே!

'ஊரெல்லாந்துஞ்சி யுலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாந் தேறியோர் நீளிரவாய் நீண்டதால்
பாரெல்லா முண்டநம் பாம்பணையான் வாரானால்
ஆரெல்லே வல்வினையே னாவிகாப்பா ரினியே!'

என் அருமருந்தே! நீ வந்தென்னிடர் தீராயாயின், யானேது செய்வேன்" என்று மனதுருகி மூர்ச்சிப்பதும் சிறிது நாழிகை தாழ்த்து,

"கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீ ரெல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடிநின் றாடிப் பரந்து திரிகின்றனவே"

என்று கண்ணனைக்கண்டதாகப் பாடி யாடுவதுமா யிருந்தார்.

ஸ்ரீகௌராங்கருடைய தோற்றங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுபட்டுக்கொண்டே யிருந்தன. ஒருவேளை கிருஷ்ணனுடன் கலந்தும், மற்றொருவேளை அவரைவிட்டுப் பிரிந்தும், பிறிதொருவேளை தானே கடவுளாகவும் பலவித அனுபவங்களைக் காட்டிக்கொண்டே வந்தார். அவர் மற்றமனிதர் போன்று தன் ஸ்வாபிக நிலையி லிருக்கும்போது, மிக்க சாவதான முள்ளவராய், குழந்தைபோல் குற்றமற்றும், தாயைப் போல் தண்மையுற்றும், வினையற்ற வினையாளர் தொழில் மேன்மைகாட்டியும் விளங்கினார். அப்பொழுது ஸ்வாமிகள் தன்னைப் புல்லினு மிழிவாய் மதித்து, அடியருக்கடியாராய் நினைத்து,

மற்றோரை வெகு வுயர்வாய் நினைப்பர். அக்காலங்களில் விநோதப்பேச்சுகளிலும், பரிகாசவார்த்தைகளிலும் அவர்க்குப்பிரியம்; அவருடைய நகை பூரண சந்திரனுடைய கிரணங்களையும் தோற்கடிக்கும். ஆயின், இவ்வித சாதாரண நிலைமையில் அவரிருப்பது நாளுக்கு நாள் துர்லபமாய்க்கொண்டே வந்தது. மேற்சொன்ன நிலைமைகளல்லாமலும், சிலவேளைகளில், அக்ரூரர் போன்ற சிலரைப்போல் ஆவேசங்கொண்டு நடிப்பதுமுண்டு. அனேகமாய் அவர் இரவும் பகலு மெப்பொழுதும் பரமானந்த சுகாதீத நிலைமையிலேயே யிருப்பார். கிருஷ்ணன் தன்பக்க லில்லாதிருக்கும்பொழுது, தாயைப்பிரிந்த சேயைப்போல், பெருந்துன்பப்பட்டுக் கதறிப்பதறிக்கொண்டிருப்பார்:

ஐயனே யென்பா ரண்ணலே யென்பார்
ரகிலமுண் டுமிழ்ந்த வரசனே யென்பார்
மெய்யனே யென்பார் மேகனே யிறத்து
மேவுவா வென்பார் வேதியா வென்பார்
கையிற் குழலாய் காரொளி வண்ணனே
கண்ணனே யென்பார் களங்கமே லென்பார்
ஐயனே வாராய் பரமனே யென்பார்
பதறுவார் வீழ்ந்து கதறுவார் தாமே.

இவ்வாறு சொல்லமுடியாத துக்கக்கடலில் ஸ்வாமிகள் அமிழ்ந்திருக்கும்போது அவரிடமுண்டாகும் குரூரத்தோற்றங்களால் எங்கு அவர் இருதயம் வெடித்துப்போகுமோ என்று அனைவரும் பயங்கொள்ளுவர். தம் நண்பரைப்பார்த்து, "என் அருமைத்தோழர்காள்! கண்ணன் பிரிவாற்றாமை யென்னைக் கொல்கின்றதே! யான் என்செய்கேன்! என்னைப் பிழைப்பிக்க தம்மால் முடியுமா! என்னைச் சாவதானமா யிருக்கும் படி கூறுகிறீர்கள். அவ்வாறிருக்க எவ்வாறாயினும் யான்முயன்றாலும் என்மனம் கேளேனென்கிறதே! என்னைவிடுங்கள், விட்டு விடுங்கள்! கண்ணனைப் பார்த்தால் பார்க்கிறேன்; அன்றேல், செத்தால் சாகிறேன்" என்று ஸ்வாமிகள் விசையாய்க் கண்ணன்பால் செல்வதற்குப் புறப்பட்டு எழுந்து, அக்கணமே

களைகொண்டு விழுந்து சிறிது நேரமிருப்பர். உடனே கண்ணனைக்கண்டதாய்க் களைவிண்டு களிகொண்டு ஆனந்தக் கூத்தாடுவார். அப்போது அவர் அனுபவிக்கும் மகிழ்ச்சிப்பெருக்கை வர்ணிக்க யாவரால் முடியும்? மழைத்துளிதுளிக்கப்பெற்ற நெற்கதிர் விளங்குமாறும், காவதங்கள் பலகடந்து பன்னாள்பிரிந்து மீண்டும் வந்தணைந்த காதலனைக் கண்ட காதலி வதனம் சொலிக்குமாறும், வீடென்றும் வாசலென்றும், மாடென்றும் மரமென்றும், ஒன்றுங்கவனியாமல் பிரளயகாலருத்திரன்போல் வாயுவேகத்துடன் அனைத்தையும் ஒழித்தும் அழித்தும் ஒடித்தும் அடித்தும் தள்ளுகிற வாடையோ, அன்றிச், சூறுவளியோ, ஓய்ந்து மாய்ந்து, தென்றற்சுகம் நன்றாய் வருவது போன்றும், அசுணப் புள்ளும் இனியகீதச் செவிபடைத்தோரும் நனிமிக வருந்தப் பறையறை யோய்ந்தபின்னர் இன்குழலோசையால் சுகத்தோற்றம் நேர்வது போன்றும் அவர் திருமுக விலாசத்தில் மகிழ்ச்சிக் குறிப்புண்டாகும்; தேகமுழுவதும் ஒரு வித வொளி யுண்டாகும். ஸ்வாமிகள் கண்ணினின்றும் நீர்பெருகி பூமியை நனைத்துவிடும். அவர் நாயகநாயகி பாவத்தால் அதியானந்தமுற்று, தன் கணவனாகும் கண்ணனை நாடிச்செல்ல, மிக்கவிநோதமான உடைகளையுடுத்து நடனமாடினர்; அக்காலை அண்டாண்ட பகிரண்டமனைத்தும் அவருடன் நடனமாடுவது போன்றது.

முதலில், ஸ்வாமிகள் பிரஸன்னமாவதற்குமுன் சில குறிகள் உண்டாய்க்கொண்டிருந்தன. தான்தான் கடவுளென்று அவர் கூறும் பெரியதன்மையை யடைவதற்கு முன், தன்னை முற்றிலும் மறக்கும்படி ஸ்மரணையற்றிருப்பார். பிறகு சில சோதியுடன் கலந்த தோற்றங்களுண்டாகும். ஆயின் நாட்செல்லச்செல்ல, ஸ்வாமிகள் வெகு சுலபமாய்ப் பிரஸன்னமாய்க்கொண்டிருப்பார். சில சமயங்களில் ஒருநிமிஷம் கடவுளாய்த் தோன்றி உடனே பழைய நிலைமையை யடைவார். சில சமயங்களில் அனேக நாழிகைபரியந்தம் பிரஸன்னமாயிருந்து விநோதங்க ளியற்றிக்கொண்டிருப்பர். இவைகளில் "மஹாப்ரகாஸம்" என்று கூறப்பட்டு, இருபத்தொருமணி

ப்ரியரான முகுந்தரும் இப்படியே வெளியிலுட்கார்ந்திருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்வாமிகள் ஸ்ரீதரரையழைத்து வரச் சொல்லி தக்க அடையாளங்களைக்கூறித் தன் பக்தர்களை யனுப்பினர். அவர்கள்போய் ஸ்ரீதரருக்குச்சமாசாரங்களைச் சொல்ல ஸ்ரீதரர் ஆனந்தக்கடலில் மூழ்கி, தன்னைமறந்து மூர்ச்சையாய் விழுந்தனர். அவரைத்தூக்கிக்கொண்டு, ஐஸ்வர்யவான்களாகிய சிலபக்தர்கள் தெருவில் ஓடிவருவதை அவ்வூரிலுள்ள மூடஜனங்கள்கண்டு "இந்த ஸ்ரீதரனென்னும் நித்யதரித்திர வர்த்தகனை இவ்வளவு பணக்காரர்களெல்லாரும் தூக்கிக்கொண்டோடுகின்றனரே! இவர்கள் பேதைமை வரம்புகடந்ததே!" யென்று பரிகாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவற்றையெல்லாங் கவனியாது,பக்தர்கள் ஸ்ரீதரரைஸ்வாமிகள்முன் கொண்டுவந்து விடுத்தனர். ஸ்வாமிகள் "ஸ்ரீதரா" வென்றழைப்பிட்ட மாத்திரத்தில் ஸ்ரீதரர் ஆனந்தக்களை தெளிந்தெழுந்து பரமனடி பணிந்துநின்றனர். பரந்தாமன் பக்தரைப் பார்த்து, "அன்பரே! உம் கடையிலிருந்ததெல்லாம் நாம் முன் எடுத்துக்கொண்டு வந்தால், உம்முடையதெல்லா மெமதென்பதை யப்பொழுது நிரூபித்தோம். இப்போது உமக்கு வேண்டிய வெல்லாம் கேளும், எம்முடையவெல்லாம் உம்முடையதென விப்போது நிரூபிப்போம்; இவ்வுலகமுழுதையும் ஒருகுடை நிழலிலாக செலுத்தும் ஏகசக்ராதிபத்தியத்தைக் கேட்பினுங்கொடுப்போம்" என்றனர். ஸ்ரீதரர், பகவானைப் பார்த்து, "பதிதபாவனா! நான் பெரும் மூடன்; தாங்கள் எங்களுக்குத் தகப்பன் என்று கூறினதின்பொருளை நானறியாமற்போனேனே! இப்பொழுதன்றோ அதன் பொருள் நன்கு விளங்குகின்றது! ஏகசக்ராதிபத்தியமும் வேண்டாம், வேறொன்றும் வேண்டாம். மண்டலம் புரந்து எண்டிசை புகழ் பரப்பிய மன்னவர் என்னபயன்பெற்றார்?" என்று சொல்லி, இவ்விருள் தரு மாஞாலத்துள் பிறவியென்னும் திரைக்கடலில் தத்தளிக்கும் பிராணிகோடிகளை நோக்கி ஆறுத்துயரத்தோடு "[illegible] பகவத்குணங்களைச்சிந்தியாது பாழிலழுந்திப் போகின்றீரே!

‘மத்தயானையேறி மன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தவுள்ள மாற்றவேண்டா வம்மின்மனத்தீரே
யத்தர் கோயி லெதிர் கொள்பாடியென்ப் தடைவோமே’
‘தோற்றமுண்டேன் மரணமுண்டு துயர மனை வாழ்க்கை
மாற்றமுண்டேல் வஞ்சமுண்டு நெஞ்ச மனத்தீரே

* * * *

என்னராஜயோகம்படைத்திருப்பினு மொருநாளழிய வேண்டுவதுதானே! ஆதலின் நீர் பிறவித்துயரற ஞானத்துள் நின்று பக்திசெய்யுங்கள் "என்று பரிதபித்தனர். பின்னர் எம்பெருமானை நோக்கி,

"‘ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே’
‘கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து
இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்
தம்பமாய் நிற்குந் தவமுடையே னாவேனே’

என் அப்பனே! ஒப்பிலாமணியே! உன்மீது எந்நேரமும் இடையறா வன்பிருக்க வரம் தந்தருளல் வேண்டும். இஃதன்றி, அஷ்டைஸ்வர்யங் கொடுக்கினும் யான் வேண்டுகின்றிலன் என்று ஸ்ரீதரர்கூற, பெருமான் வியந்து, "ஸ்ரீதரா, நீ பெரிய ஏழையாயிருக்கினும், செல்வத்தை யொரு பொருட்டாக மதிக்கிலை, என்மீது பக்தியையே வேண்டினை யென்பதை யுலகத்தாருக்குத் தெரித்தற் பொருட்டே யானிவ்வா றியற்றினன்" என்று சொன்னார்.

ஸ்ரீதரர்க்குப் பின் ஸ்வாமிகள் முராரியை யழைத்தார். முராரி சீதாராமபக்தரானமையால் ஸ்வாமிகள் அவரைநோக்கி, "என்னைச்செம்மையாகப்பார்" என்று கூறவும், உற்றுப்பார்க்க சீதாசமேத ராமனாகக் காணப்பட்டார். "ஹா! ஹா! ராமசவுந்தர்ய மித்தகைத் தெனக்கூற யாவரால் முடியும்! பத்தரைமாற்றுத் தங்கத்தை யுருக்கிவார்த்ததுபோல் பளபளப்பான அவர்

மேனியும், கண்ணாடியையும் தோற்கடிக்கும் அழகிய கபோலமும், சதகோடி மதிகளையும் பழிக்கும் அவரது மங்களமலர் முகக்கோலமும், தன்னை யடைந்தார்க்கு வேண்டிய பதிகளையும் நிதிகளையும் வாரிக்கொடுக்கும் கருணாநயன விசாலமும் யாவரால் செப்பத்தரம்!" என்று முராரி ராமசவுந்தர்யத்தி லீடுபட்டுகின்றார். ஸ்வாமிகள் முராரியைப்பார்த்து "அப்பா, நீ தத்துவ பரிசோதனையில் வீண்பொழுது போக்காதை" என்றனர். "ஏன்? அது நல்லதல்லவா?" என்று முராரி ஸ்வாமிகளைக்கேட்க, ஸ்வாமிகள், "அஃது நல்லதாயினுங் கெட்டதாயினும், கடவுளிடத்திற் பக்தியையுண்டு பண்ணாது" என்றனர். அப்படி யெனக்காரும் அச்சாஸ்திரங்களைப் போதிப்பாரிலரே! என்று முராரிகூற "நன்று! நன்று! ஏன் அத்வைதாசார்யரிலரா?" என்று ஸ்வாமிகள் சொற்றனர். இதனால் அத்வைதா சார்யருக்கிருந்த சிறிது கர்வமும் போயது.

இதற்குப்பின் ஹரிதாசரையழைத்து, "எனக்காக நீயெவ்வளவோ பாடுபட்டனை? உன்மகிமை யனைவர்க்கும் தெரிவதற்காகவே யான் அப்பொழுது பேசாதிருந்தேன். ஆயினும் உன்மீது அடிவிழவொட்டாமலென் மார்பிலுன்னை யணைத்துக் காத்ததுனக்குத் தெரியாதா" வென்று ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்ததைக்கேட் டானந்த மடைந்து ஹரிதாஸர் ஆடிப்பாடிக் குதித்து "ஐயனே! என்மீதி லுமக்கருளிருக்கும்போ தெனக்கென்னகுறை?" என்றனர். "உமக்கென்னவரம் வேண்டும்?" என்று ஸ்வாமிகள் ஹரிதாஸரைக் கேட்டதும் தாஸர் "உமது அடியார்க்கடியனா யென்றென்றைக்கு மிருக்க வரந்தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

"'அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை
ஆரிரு ளுய்த்துவிடும்'

என்கிற நியாயத்தை அனைவரும் உம்மிடந்தான் கற்கவேண்டும்" என்று ஸ்வாமிகள் கூறினார். ஹரிதாஸர் ஆனந்தக்களிப்பால் தரையில் புரண்டுகொண்டிருந்தனர்.

இவ்வாறு அனைவரும் இகசுகத்தைச் சிறிதும் நாடாது பரசுகமாகிய பெருங்களிப்பில் வதிந்திருக்கினும் ஸ்வாமிகள் மனதையும் மற்றையோர் மனங்களையும் தனது இனிய கீதத்தால் மகிழ்வித்து உண்மையடியாராயிருந்த முகுந்த ரென்பார் மாத்திரம் தன்னை ஸ்வாமிகள் கூப்பிடவில்லையே யென்று துக்காக்கிராந்தராய் அறையின் வெளியில் தாழ்வாரத்தில் ஒருபுறம் அழுது கொண்டிருப்பதைப்பார்த்து அங்கிருந்தார் முகம் வாடின. ஸ்ரீபாஸர் ஸ்வாமிகளைப்பார்த்து, "ஏ! பரமகருணாநிதே! தம்முடைய முகுந்தர் வெளியிலேயழுதுகொண்டிருக்கவிட்டீரே! தாம் அவரைக்கூப்பிடலாகாதா?" என்றுகேட்டனர். "என்னுடைய முகுந்தனன்று! அவர் மிகவும் படித்தவராயிற்றே" என்று ஸ்வாமிகள் பதில்கூறினர். அங்கிருந்தோர் தடுத்தொன்றுஞ்சொல்ல முடியாராய் வருத்தம்பூண்டு நின்றனர். முகுந்தர், "நான் பாவியாதலால், எனக்கிந்த தண்டனை தகும். கருணாநிதியாகிய எம்மான் என் விஷயத்தில் மிகவும் அன்பு பூண்டவர்தாம்" என்று உண்மையாகப்பேசி, "ஸ்ரீபாஸரே! நானெப்பொழுதாவது ஸ்வாமியைக் காண்பேனா வென்று அவரைக்கேளுங்கள்" என்று கூறினர். அவ்வாறே ஸ்ரீபாஸர் கேட்டதற்கு, பகவான் "நூறுலக்ஷம் ஜன்மமெடுத்ததின்பின், முகுந்தன் என்னைப்பார்க்கும் பாக்கியம் பெற்றவனாவான்" என்றனர். இதைக்கேட்ட அனைவர்க்குந் துக்கம் பெருகியது. நாலடியிலிருக்கும் கடவுளைப்பார்க்கக் கொடுத்துவையாது, நூறுலக்ஷம் ஜன்மங்களெடுத்தபின் கடவுளைப் பார்க்க வேண்டியிருக்கிறதே; முகுந்தர் தௌர்ப்பாக்கியமிருந்தவா வென்று பதைபதைத்தார்கள்.

"'காசிக்குச் சென்றாலும் தன்பாவம் தன்னோடே' யென்று மூத்தோர்கள் சொல்வது மிகவும் உண்மையே! 'ஆசைக் கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டியாளினும்' என்றுதாயுமானார் கூறியதில் என்னபொய்யிருக்கின்றது? அந்தோ! ஆசை! வீணாசை!! இஃதால் உலகில் என்னென்ன கெடுதி விளைகின்றது! ஆசை என்பதே ஒன்றில்லாவிடின், உலகில் சுகம் ஆனந்தமென்பதே எக்காலமும் குடிகொண்டிருக்கும்! ஆயிரம் வராகன் வந்தாலும் பதினாயிரம் வராகனுக்காகப் பாடுபடுவதால், மற்றுமுள்ள சுகங்களையெல்லாம், பானைப்பாலையும் ஒருதுளி

மோர் கெடுப்பதுபோல், இவ்வாசையே பாழாக்கிவிடுகின்றது! அக்கக்கோ! இஃதென்ன கொடுமை! இம்முகுந்தர் நம்முடன் பழகினர், தம் அபூர்வசங்கீதவித்தையால் நம்மனதையும் பெருமான் மனதையும் மகிழ்வித்தார். இவர் பெரியார், நற்குணமுடையார், நம்மனதுக்கிசைந்தார், நட்பினராயிருந்தார், இனிய கீதம் பயின்றார் என்கிற உரிமை நம்பாலன்றி, இவரும் நாம் பெற்ற சுகமேன்மையடையாரா, நம்மோடருகினில் வாராரா, பெருமானை நாம்கண்டதுபோற்பாராரா, பரசுகம் சேராரா என்கிற ஆசை நம்மை வருத்துகின்றது! பெருமானோ கடுஞ்சித்தமுடையார்! * * * சை! சை! மனமே யாதுநினைத்தோம்! எல்லாப்பொல்லாங்குந் தணந்து அன்பு அருளாதிய பெருங்குணங்களை மணந்து பெரியர்க்கும் பெரியனாய், நீர் நிலம் தீவளியெங்கும் பரந்து ஆன்மாக்களிலும் அமர்ந்து அற்புதம் புரியும் பொற்பினனாய் எல்லார்க்கும் நல்லவனாய் எல்லாஞ்செயவல்லவனாய், எல்லாமுணர்ந்த அறிவனாய் விளங்கும் பெருமானாரவ்வாறிரார், ஒருக்காலுமிரார்! அவர்க்குத் தெரியாததுமொன்றுளதா! 'ஆசையிருக்கிறது தாசில்செய்ய, அம்சையிருக்கிறது கழுதைமேய்க்க' என்பார்கள்: அஃதேபோல், நம் ஆசையால் நாம் கெடுகிறோம்! தோட்டிநிலையிலிருப்போர் தொண்டமானாகவும், தொண்டமான் பதவிபெற்றோர் தொடுகடலுங் கைக்கொள்ளவும் அவ்வாறு தான் மேன்மையுறினும் அமராபதிக்கு மரசனாகவும் தொலையாத ஆசைகொள்ளுவார்! இஃதே யுலக வியற்கை! * * * ஆயினும் இம்முகுந்தர் ஸ்வாமிகளைத் தரிசிக்கவுங்கூடவா கொடுத்து வைக்கவில்லை! ஸ்வாமிகள் இவ்வளவு கருணை காட்டக்கூடாதா! ஐயோ, துன்பமே! முகுந்தர் கோடி ஜன்மமெடுத்தபிறகு தான் பெருமானைக்காணப்போகிறாராமே! பரிதாபம்! பரிதாபம்!!" என்றுபக்தர்களனைவருந் துயரக்கடலிலமிழ்ந்தார்கள்.

ஆயினும் அதி சுந்தரரும் கருணாநிதியுமான பகவானுக்குக்கிருபையில்லையென்று எவ்வாறு சொல்லமுடியும்! இவர்களிவ்வண்ணந்துயரடைந்து தளருங்கால், முகுந்தர் ஆனந்தக் கடலிலழுந்தி, "எப்படியாயினுங் கடவுளைக்காணும் பாக்கியம்

பெற்றேனே! கடவுள் வாக்குத்தத்தஞ்செய்தனரே! என்னைப் போல் பாக்கியசாலிகள் யாவர்! நூறுலக்ஷம் வருஷங்களானாலென்ன! எப்படியும் பார்ப்பே னென்பதே யெனக்குப்போதும்" என்று நிருத்தஞ்செய்து கொண்டே கண்களில் ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினர். "பெருமானுக்கு என்மீதிருந்த கருணை விளக்கம் இத்தகைத்தா! நான் செய்தபுண்ணியத்தைப் போல் யாவர்செய்தனர்! நான்பெற்ற பாக்கியத்தைப்போல் யாவர்பெற்றனர்! எனக்கிப்போது விளைந்த மகிழ்ச்சிபோல் யாவர்க்கு விளையும்! ஸ்வாமிகள் என்மீது வைத்தநட்பே நட்பு; அன்பே அன்பு; அருளே அருள்; அவர்கள் எனக்குக்கொடுத்த பரிசே பரிசு! முகுந்தா! நீயே பாக்கியசாலி! நீயே யோகசாலி! கோடி ஜன்மம் விநாடியிற்போகாதா! என் அப்பனே! அருமருந்தே! நீ யிவ்வாறு தகாதவர்கட்கெல்லாம் தகுதி காட்டுவதால் தான் உன்னைத் தீனபந்துவென்கிறார்கள்; பக்தர்களை நேசிப்பதால் ஆஸ்ரிதஜனவத்ஸலன் என்கிறார்கள்! உன்பெருமை யாவரால் செப்பத்தரம்! இவ்வளவு நேசம் நீகாட்டத்தகாத பாவியேன் செய்த நற்கருமம் யாதோ! என்ன புண்ணியஞ்செய்தேனோ! எவர் துன்பத்திற் கைகொடுத்தேனோ! எப்பெரியோர்க் குதவி புரிந்தேனோ! * * * இஃதெல்லாம் வீண்பேச்சு! நான் சண்டாளரிற் சண்டாளன்; லோபியில் லோபி; பாவியில் பாவி! உன் கருணையாலேயே யென்னைக் கரையேற்றினை! எனக்கு இது அதிருஷ்டமேயன்றி, நான்செய்த புண்ணியத்தின் பலனன்று!

வான்முகி னோக்கி நோக்கி வயிறனை பயிரே யென்ன.
வயங்குமுன் கருணை வெள்ளத்
தேன்முகிற் காண்பா னின்று திருத்தவ மியற்று மேலோர்
திகைத்தொரு பலனுங் காணார்
கானில்வீழ் நிலவாம் வண்ணம் கடுகிவந் தெனக்குன் னன்பாற்
கருணையுந் தந்தாய் காத்தாய்
ஆநிரை மேய்த்த வன்பனே வாழி யப்பனே வாழி
ஐயனே வாழி வாழி"

என்று முகுந்தர் ஆடிப்பாடி ஆநந்த நிருத்தஞ்செய்தார்.

இவ்வபார பக்திக்கு வியந்து அவரையழைத்து ஸ்வாமிகள் "அப்பனே! உன்னைப்போ லன்பன் யாரென்றுங் கண்டிலன். நான் குற்றத்தைமன்னித் தருள்செய்பவனே யன்றி, குற்றங்கண்டுபிடித்துக் கடிகிறவனன்று. உன்பெருமை யிவர்களனைவருமின்று கண்டனர். ஏ! முகுந்தா! என் நண்பா! என்தோழா! என்னுயிரே! உன் பொறுமையே யுனக்குப் பெருமைதந்தது! 'பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்' என்பது பொய்யோ! என்மனதுக்கினிய மன்னவனே, பக்தாள் ஒருவிஷயத்திலெனக் கடியராயின் அவர்களுக்கும் யானும் தொண்டனே! அவர்களெண்ணத்திற்கு மெதிரெண்ணமுண்டோ! அவர்கள் விருப்பத்திற்கு மாறு விருப்ப முண்டோ! என்னுடல் பொருளாவி மூன்றும் அவர்களுடையவே! யானும் அவர்கட்கு அடியனே, அன்பனே! உன் பொறுமையின் மேன்மையையும், அளவிறந்த ஆசைகொள்ளாது வந்ததைக்கொண்டு திருப்தியடையும் பாங்கினையும் அனைவர்க்கும் விளக்கும்பொருட்டே யானிவ்வா றியற்றினன்! பொறுமையோ பெரிது, பெரிது, கடலினும் பெரிது; வந்ததைக்கொண்டு வாழ்ந்துவரும் மனநிறைவாகிய திருப்தியோ வதனினும்பெரிது; இவ்விரண்டும் உன்பால் பூவில் மணம் போன்றும், மணியில் ஒளிபோன்றும், குணியில் குணம் போன்றும் ஒத்து ஒருமித்துப் பிரியாது பிறழாது விளங்குகின்றது. இவ்வாறு யான் யாரிடங்காண்பேன்! எவர் என்னை யிவ்வகை மகிழ்விப்பார்! முகுந்தா உன்னைப்போ லொருவனுமிலன்! நீ யென்று மென்னருட்குப் பாத்திரனாயினை. நாமெப்போதும்போலே ஸ்நேகிதராயிருப்போம் வா" என்று ஸ்வாமிகள் சமாதானங்கூறி முராரியைச் சந்தோஷிப்பித்தனர்.

அத்வைதாசார்யர் ஸ்வாமிகளின் விஸ்வரூபத்தைக் காட்டவேண்டுமென்று அவரைவேண்டினர். ஸ்வாமிகளும் அவ்வாறேயாகுகவென்றனுக்ரஹித்ததின்மீது, பலதேவதைகள் ஸ்வாமிகளைத்தொழுவது முதலாகிய கோலாகலங்களை அத்வைதாசார்யர் கண்டனர். பலநாழிகை பரியந்தம் அத்தோற்றத்தைத் தாங்குஞ் சக்தி சாதாரணமனிதர்கட்கில்லாததால் ஸ்வாமிகள் உடனே தாம் முன்னிருந்த ஸ்வரூபத்தை யேற்றுக்கொண்டார்.

இச்சமயம் ஸ்வாமிகள் ஸர்வாங்கசுந்தரராய்த் தோன்றியனைவர் மனதையுங் கவர்ந்தார். "ஸ்வாமியைக் காணுவதாகும் பலனைக் கண்கள் பெற்றதனால் இன்றுதான் கண்டோம்; ஸ்வாமியின் திவ்யதேகத்திலுண்டாகும் பரிமளத்தை யனுபவிப்பதாகிய மூக்கின் பலனுமின்றுதான் கண்டோம் என்று பக்தர்களனைவரும் பேரானந்த மெய்தினர்கள். ஸ்வாமிகள் ஒவ்வொருவராயருகிலழைத்துக் கட்டியணைத்து முத்தமிட்டனர். இப்பொழுது தான் அவர்கட்கு 'கடவுளும் நானும் ஒன்று' என்னும் வேதவாக்கியத்தின் அர்த்தம் செம்மையாய் விளங்கிற்று "தலையின் பய னின்றல்லவோ கண்டோம்! சகலாண்டசராசரத்துக்கும் தலைவனை வணங்குவதன்றோ தலையெனப்படும்! ஐயகோ! பாவமே! இவ்வுலகத்தில் எத்தனையோ மதியிலார்கள் 'நாளைபற்றி நமக்கென்னயோசனை? இருந்தமட்டும் உண்பதும் உறங்குவதும், தின்பது திரிவது மாயிருந்தாற் போதும்' என்று தவப்பொழுதை அவப்பொழுதாக்கி, அதற்காகச் சிறிதும் வருந்தாது, விட்டிற்பூச்சி அட்டகாசஞ்செய்து முட்டாள்தனமாய் நெருப்பிற் சுட்டுப்போவது போலும், கொலையாளன்கை யகப்பட்ட ஆடுகள் தமக்கு வருங்கதி யோராது, துள்ளிக்குதித்துத் தொப்பென்று விழுவதுபோலும், அன்றன்றைய வருவாயை யவ்வக்கணமேயொழித்துக் கடனும் பட்டு அப்புறம் துடித்துப் பதைத்துத் தூர்த்தர் துயருறுவது போலும், பின்தமக்குச் சேர்த்துக்கொள்ளவேண்டிய ஆத்மஸ்திதியைப்பற்றி யொன்றும் வழிதேடாது, குட்டைகட்டி, வட்டிவரும்படி சம்பளம் முதலிய பணத்தைச் சம்பாதிக்க மேல்தூக்கிச்செல்வதே தலையென நினைத்திருக்கின்றார்கள்! இஃது தலையாமா? மடைத்தலை யென்றல்லவா, இதைக் கூற வேண்டும்! மூக்கின்பய னின்றன்றோ கண்டனம்! மல்லிகை முல்லை இருவாட்சி, சண்பகம் பாரிசாதம் சாமந்தி முதலிய மலர்களை மோந்த நாசி யென்ன வாசனை கண்டது? அச்சுகந்தப் பூக்களைப் படைத்த பெருமானிடமிருந்து எத்தகைய வாசனையுண்டாகும்! அதைக்கொள்வதல்லவா நாசி! மற்றதெல்லாம் நாசஞ்செய்யும் 'நாசி' யென்றல்லவோ சொல்லல்

வேண்டும்! கண்ணன் பெருமையைக்கேளாத காது ஆகாது. அவனை யருசிக்காத கையே கைமை யெனப்படுவது" என்று பக்தர்கள் நினைத்தனர்.

ஆயினும் ஸ்வாமிகளுடைய சுந்தரத்தை யனுபவிக்க முடியாது, 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்னும் பழமொழிக்கேற்ப, பக்தர்கள் இளைப்படைந்து, ஸ்வாமிகள் தம் ஸ்வாபீக நிலைமையடையும்படி வேண்டினர்கள். ஸ்வாமிகள் இத்தருணம் இருபத்தொருமணி நேரம் பிரசன்னமாயிருந்தனர்; முன்தினம் காலை எட்டுமணிக்குப் பிரசன்னமானது, இப்பொழுது மறுநாள் உதயாத்பூர்வம் சுமார் ஐந்து மணியாயும், மாறவில்லை. பக்தர்கள் வேண்டிக்கொண்டதும், "இதோ! போகிறேன்" என்று சொல்லி ஒருகூச்சலிட்டுத் தரையில் மயக்கமாய் விழுந்தனர். இவ்வாறு இவர் மயக்கமாய் விழுவதும், மறுபடி எழுவதும் அடிக்கடி பார்ப்பதனால் பக்தர்களுக்கு மனம் தைரியப்பட்டிருந்தும், ஒவ்வொருதரமும் ஸ்வாமிகட்கு மயக்கம் நேரும்போதெல்லாம், அவர்கள் அதைரியப்படுவார்கள். அப்பொழுது சிறிது பஞ்செடுத்து ஸ்வாமிகள் நாசித்துவாரத்தண்டை வைக்கின் அது அலைந்தால், அவர் உயிருடனிருக்கிறார் மூச்சுவிடுகிறார், என்று நினைத்து பக்தர்கள் தைரியப்படுவார்கள்! இவ்வேளை அவ்வாறு பஞ்சுவைத்துப் பார்க்கவும், அதனிடத்து அத்தகைய சலனம் சிறிதுமுண்டாகவில்லை. அவர் தேகத்தில் உயிர்ச்சூடு கொஞ்சமிருந்ததே யன்றி, பிழைத்திருக்கிறாரென்பதற்கு வேறு யாதொருகுறியும் கிடையாது! போட்டகால் போட்டகையாய்ச் சிறிதும் அசையாதிருந்ததினாலும், அவர்கள் வழக்கமாய்ப் பார்த்து மனத்திருப்தியடையும் குறிகளும் பிசகிவிட்டதனாலும், பக்தர்களுக்கு இப்பொழுது நிகழ்ந்த மனத்துயரம் இவ்வளவவ்வளவல்ல! "ஸ்வாமிகள் நம்மைவிட்டுப் பிரிந்து செல்வதற்காகவே இருந்தாற்போலிருந்து இவ்வளவு கோலாகலம் காட்டிவிட்டனர்! இவர் நம்மை விட்டுப்போயின், நம்முயிரும் உடலை விட்டுப்போக யாது தடை?" என்று கதறுவார் சிலபேர்; "யாம் தரிக்கோம், தரிக்கோம்! இவ்வாறு

மோசஞ்செய்வது நமக்கடாது; பிரிவாற்றகில்லாமற் சாவோம் சாவோம்" என்று பதறுவார் சிலபேர். "அப்பா; இஃதுனக் கழகோ! அருமருந்தே! கேளாயோ! உன் அரவிந்த முகமும் திருப்பவளச் செவ்வாயும், முத்தன்ன பல்லும் முறுவலுமா யெதிர்நின்று, எம்மை வஞ்சித்து எம்மனதைச்சூறையாடி, பாறையாய் நின்ற பாழ்நெஞ்சைப் பண்படுத்தி யிப்போது புண்படுத்தப்பார்க்கின்றனையா!" வென்று வருந்தினர் வேறுசிலர். இவ்வகையவர்களுக்கு வருத்தமிருந்தபோதிலும், முன்தடவைகளிலெல்லாம் மயக்கம் நீங்கி ஸ்வாமிகள் எழுந்திருந்திருப்பதால், இத்தடவையும் அவ்வாறு நடக்கும் என்னும் கோரிக்கை யவர்கள் மனதை விட்டகலவில்லை. ஒருமணி நேரமாயிற்று, இரண்டுமணிநேரமாயிற்று, சூரியன் நன்றாய்ச் சுடவாரம்பித்தான். ஸ்வாமிகள் அப்பொழுதும் எழுந்திருக்கும் தோற்றங் காட்டவில்லை. எல்லோரும் சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று. பசிதாக இளைப்பினாலும் கவனமொரு வழிப்பட்ட அலுப்பினாலும் ஒவ்வொருவரும் தள்ளாடிக்கொண்டிருந்தாலும், ஸ்வாமிகள் களையுற்று அவ்வாறு படுத்துக்கொண்டிருக்கும்போது யாவர்தாம் அவரைவிட்டுச்செல்வார்! இப்படி பகலெல்லாம் கழித்து ஒன்பதுமணிநேரமாயிற்று. இதன் மீது, ராதையையெழுப்பும் பாகவத பாட்டைப் பாடினால்நலம் என்று ஒருபக்தர் உத்தேசப்பட்ட அவ்வாறே செய்தனர். இதனால் ஸ்வாமிகள் உடம்பில் புளகமேற்பட்டு சிறிது போதுக்கெல்லாம் விழித்தனர். எழுந்ததும் யாது நடந்தது என்றும் தான் அங்கு வந்திருக்கும் காரணம் என்னவென்றும் பக்தர்களை விசாரித்தார். நடந்ததை யொருவாறு மறைத்து அவர்கள் பதில்சொல்ல, ஸ்வாமிகள் மனம் வருந்தி "நேற்று முதல் வீணாக நான் காலங்கழித்ததுமன்றி யுங்கட்கும் எவ்வளவு கஷ்டங்கொடுத்தேன்." என்று கூறினர். பிறகு அனைவரும் ஸ்நாநஞ்செய்ய நதிக்குச் சென்றனர். அப்பொழுது வழக்கப்பிரகாரம் ஸ்வாமிகள் சாதாரண மனிதராய் அனைவோர் நடுவிலும் விளங்கினர்.

எட்டாவது அத்தியாயம்.

ஜகை மாதை.

"வேதநூற் பிராயம் நூறுமனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகு நின்றதிற் பதினை யாண்டு
பேதைபாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டே னரங்கமா நகரு ளானே," என்று

நமக்கிருக்கும் ஸ்வல்பநாட்களையும் வீணில் கழிக்காது, பகவத் பக்தி பரர்களா யிருத்தல் வேண்டுமென்று, பக்தர்களனைவருமாலோசனைசெய்து, இரவு கீர்த்தனைபோதாதென்று பகற்போதிலுங் கீர்த்தனை பாட வாரம்பித்தார்கள்.

சைதன்யருக்கும் அவர் பக்தர்களுக்கும் எவ்வளவு நேசமுண்டாயிருந்த தென்பதை முன்னர் யாம் கூறியிருக்கிறோம். ஒருவர்க்கொருவர் மாலை மாற்றிக் கொள்வதும், மேலாடை மாற்றிக்கொள்வது மான அத்யந்த ஸ்நேகம் காட்டிக்கொண்டு வந்தார்கள் என்பதும் குறிப்பித்திருக்கிறோம். இவ்வகையான அன்பு அருள் முதலிய சத்குணங்களை வளர்த்து, பக்திப்ரேமை யுண்டாக்கி முக்திக்கு வழிகாட்டவேண்டியே சைதன்யர் அவதரித்தனரென்பதும் தெரிந்த விஷயமே! இக் கீர்த்தனை காலத்திலும், மேற்கூறிய ஆசைநேச பாத்தியதைகள் அவர்கள்பால் விளங்கிவந்தன. சைதன்யரும் அவர் பக்தர்களும் உயிரொன்றும் உடல் பலவுமாய் நடந்து வந்தார்கள். "நமக்கு இயைந்த பொருத்தத்தை யென்னென்று சொல்வோம்! இப்பொருத்தம் யாவர்க் கமையும்! என்கண்ணே! கண்மணியே! கற்பகமே! கனியே! கனிரசமே! கார்முகிலே! என்னை நீ யாட்கொண்ட அழகையும், என்பால் நீ வைத்த கருணையையும் நினைக்கும்போதெல்லாம், என் மனதிலுண்டாகின்ற மகிழ்ச்சிக்கு உவமை யாதுசொல்வேன்! என்தேகம் சிலிர்க்கின்றது; என்மனம் தித்திக்கின்றது; ஆசைபொங்குகின்றது; ஆனந்தமேலிடுகின்றது. ஐயா வென்கிறது! அப்பா வென்கிறது! அரசாவென்கிறது! உன்னைக் கண்ணேயென்பனோ, கருத்தேயென்பனோ, விண்ணேயென்பனோ, வீராவென்பனோ! உன்னை யெவ்விதமாயழைத்தபோதிலும் [illegible] ஆசை மேலிடுகின்றதேயன்றிக் குறைந்த பாடில்லை! எம்பால் நீயு மிதேவண்ணம் அன்பு காட்டுகின்றனையே! எம்மானந்தம் இருந்தவா சொல்லவழியேம்" என்று ஒவ்வொரு பக்தரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருப்பார்.

கிருஷ்ணனிடத்தில் தமக்கிருக்கும் ஆரா மையலையும், கிருஷ்ணன் கௌராங்கஸ்வரூபமாய்த் தம்மிடம் வைத்திருக்குமடங்காவன்பினையும் நினைத்து நினைத்து,

"எனக்குமுனக்கு மிசைந்தபொருத்த மென்ன பொருத்தமோ
இந்தப் பொருத்த முலகிற் பிறருக் கெய்தும் பொருத்தமோ

என்ன துடலுமுயிரும் பொருளு நின்னதல்லவோ
எந்தாயிதனைப் பெறுக வென நா னின்று சொல்லவோ
சின்னவயதி லென்னை யாண்ட திறத்தை நினைக்குதே
சிந்தைநினைக்கக் கண்ணீர் பெருகி யுடம்பை நனைக்குதே. (எனக்கு)

அரசேயுன்னை யணைக்க வெனக்குள் ளாசைபொங்குதே
அணைப்போமென்று முன்மையாலென் றுவிதங்குதே .
விரைசேர் பாதம்பிடிக்க வென்கை விரைந்து நீளுதே
மேவிப்பிடித்துக் கொள்ளுந் தோறு முவகையாளுதே. (எனக்கு)

அப்பா நின்னையன்றி யெங்கு மணைப்பாரில்லையே
அந்தோ நின்னையன்றி யெங்கு மருள்வாரில்லையே
இப்பாலவர்க்கு நின்னை யன்றி யிறைமை யில்லையே
எனக்கு நின்மேலன் றியுலகி லிச்சையில்லையே. (எனக்கு)

என்னையாண்ட வண்ணமெண்ணி யுள்ள முருகுதே
என்னை விழுங்கியெங்குமின்ப வெள்ளம் பெருகுதே
உன்னையுள்ள மனமுமுயிரு முடம்பு மினிக்குதே
உன்னோடென்னை வேறென்றெண்ணின் மிகவும் பனிக்குதே.(எனக்கு)

உன்பேரருளை நினைக்குந்தோறு முடம்பு பொடிக்குதே
உண்பசிதீர்ந்தாற்போல் காதல் மிகவுந்துடிக்குதே
அன்பேயமையு மென்றபெரியர்வார்த்தை போயிற்றே
அன்பேரளவு மில்லாவெனக்கிங்கருளலாயிற்றே. (எனக்கு)

நினைக்க நினைக்கத் தித்திப்பெனது நினைவிற் கொடுக்குதே
நின்பா லன்றிப் பிறர்பாற் செல்ல நெஞ்ச மொடுக்குதே
எனைத்துன்பொழித்தாட்கொண்ட நின்னை யன்னை யென்பனோ
எந்தா யன்பிலே நின்னடிக்கு முன்னை யன்பனோ. (எனக்கு)
உன்னை மறக்கி லெந்தா யுயிரென் னுடம்பில் வாழுமோ
உன்பாலன்றிப் பிறர்பா லென்ற னுள்ளஞ் சூழுமோ
என்னைக்கொடுக்க வாங்கிக்கொண்ட தென்ன கருதியோ
எந்தாய்நின்னைக் கொடுக்க வென்பா லின்று வருதியோ. (எனக்கு")

என்று பக்தர்கள் ஸ்வாமிகளைத் தம் நடுவில் வைத்துக் கொண்டு, கீர்த்தனஞ்செய்துகொண்டிருப்பார்கள். இப்படி நடந்துவருநாளில், நவத்விபபட்டணத்தில் சில தெய்வத் தோற்றங்களுண்டாய்க்கொண்டே வந்தன. அவ்வூரில் அனேகர் ஸ்வாமிகளின் பக்தர்களாய்க்கொண்டே வந்தார்கள். பரம சண்டாளர்களாயிருந்தோர்களனேகர் தங்கள் பாவங்களை யொழித்துப் பரமசாதுக்களாயினர்கள். இவ்வாறு நடந்துகொண்டேவரினும், அந்நகரத்திலிருந்த பிராமணர் அனேகர் தங்கள் கொள்கைகளுக்கும் அநுகூலத்திற்கும் ஸ்வாமிகளுடைய போதனையும் நடத்தையும் மாறுபட்டனவாயிருந்ததால், பகைமை பாராட்டினர்கள். ஆயினும் நாளுக்குநாள் அவர்கள் விரோதமும், ஸ்வாமியின் மகிமைபுலப்படுதலால், குறைந்துகொண்டேவந்தது.

சபலகோபால னென்பவன், ஸ்ரீபாஸரை யொருகாரணமுமின்றிக் கண்டபடிவைது இகழ்ந்தான். அடுத்த மூன்றுநாள் அவனுக்குக் குஷ்டரோகம் சம்பவித்தது. ஐந்து வருடம் வரையில் ஸ்வாமியை மதியாதிருந்தான்; பிறகு ஸ்வாமிகளை வணங்கி அபராதக்ஷமை கேட்டுக்கொள்ள, ஸ்வாமிகள் "என்னாலொன்று மாவதில்லை; நீ ஸ்ரீபாஸரிடஞ்சென்று, அவரை வணங்குக" என்றனர். சபலகோபாலனும் அவ்வாறேசெய்து ஸ்ரீபாஸரருள்பெற்றுத் தன் நோய் தவிர்ந்தனன். வேறுசில தோற்றங்களாவன: ஒருமகம்மதியன் தெருவிற்போய்க்கொண்டிருப்பவன், ஸ்வாமிகளைச் சேவைசெய்ய அகஸ்மாத்தாய் நேரிடுவதும், அது முதல் பைத்தியம் பிடித்தவன்போற் பிதற்றி,

'கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக் கினியனைக் கண்டோம்' என்று கூறித்திரிவதும், பிறகு சிலநாள் பொறுத்து ஸ்வதந்திரமாகி, பின்ஸ்வாமியையடைந்து பெரியபக்தனாவதுமுண்டு; விஷ்ணுப்ரியையின் சகோதரராயிருந்த மாதவாசார்யர் என்பார் ஸ்வாமியின் ஸ்வாமித்வத்திற் சிறிதும் நம்பிக்கையிலராயிருந்து, பின்னர் ஸ்வாமியைக் கண்டமாத்திரத்தானே, யவர்தம் முண்மை யடியாராயினர்; தெருவில் யாரோ வொருவன் போய்க்கொண்டிருப்பவன், மயக்கமாய் விழுவதும் "ஹரி ஹரி" என்றெழுந்திருப்பதும், பக்திமானாவது முண்டு; கைக்குழந்தைகள் அகஸ்மாத்தாய் "ஹரி ஹரி" யென்றலறியழுது பக்தியாபரணம் பூண்டிருப்பது முண்டு.

இவ்வாறு அந்நகரமுழுவதும் அசாதாரணத் தோற்றங்களுண்டாகி ஸ்வாமிகள் பெருமையும் பரவிக்கொண்டே வந்தது. ஸ்வாமிகள் ஒருநாள் நித்யானந்தரையும், ஹரிதாஸரையும் நோக்கி, "அன்பர்களே! கிருஷ்ண பக்தியென்பதே சிறிதுமின்றி வீண்போது போக்குகின்றனர்கள், இந்நகரத்திலெத்தனை யாயிரம்பேர்! கண்ணனென்னும் நாமமே யவர்கள் நெஞ்சை நாடுகின்றிலது. அச்சோ! அவர்கள் அறியாமையை யானென்னென்று சொல்வேன்! சற்றுப் போதாயினும் உத்தமபக்தியிற் படியாது வாணாளை வீணாக்கிப் பாழ்படுகின்றார்களே! ஐயகோ! அவர்தம் அறியாமையிருந்தபடியென்! மனத்திலுள்ள மலத்தையகற்றி அகத்தூய்மையாகும் சுகத்தையடையாது, வீடு சதமென்றும் வாசல் சதமென்றும் மாடுசதமென்றும் மக்கள் சதமென்றும் பொன்னே நிலையென்றும் பொருளே நிலையென்றும்பெண்ணே வேண்டியும் பேழையே வேண்டியும் நல்லதைக் கடிந்தும் அல்லதிற்படிந்தும் நாசமுறுகின்றார்களே! இன்னோர்களுக்கு என்றுதான் நல்லறிவுச்சுடர்கொளுத்த நேருமோ! என்று தான் அந்தகாரத்தைவிலக்க ஐயன் கருணை சாருமோ! தெரியகில்லேனே! இவர்கள் இழவைக்கண்டு அதைத்தொலைக்க வகையறியாது என்மனமேங்குகின்றதே! இவர்கள் படும்பாட்டைக்கண்டு என்னுள்ளம் பதைக்கின்றதே! இப்பாவிகள் துடுக்கைக்கண்டு என்னாவி துடிக்கின்றதே! இக்கொடியோர் செய்

கை யென்னைக் கொல்கின்றதே! யான் ஏது செய்வேன்! அவர்களுக்கு யானேதேனு முபதேசஞ் செய்யலாமென்று நினைப்பினே, 'கிருஷ்ண' 'கிருஷ்ண' என்கிற நாமம் என் காதிற்பட்ட வக்கணமே, மூர்ச்சையாகின்றனனாதலால், இவ்வுலகைக் கவிழ்ந்திருக்கும் அந்தகாரத்தைப்போக்க நான் பாங்குடையே னல்லேனே! கண்ணனே வந்ததை விலக்குவா னென்று லவனையுங் காணேனே!

'ஆவிகாப்பா ரினியா ராழ்கடல் மண் விண்மூடி
மாவிகாரமா யோர் வல்லிரவாய் நீண்டதாற்
காவிசேர் வண்ணனென் கண்ணனும் வாரானாற்
பாவியே நெஞ்சமே நீயும் பாங்கல்லையே,'"

என்று வருந்தி "இப்புண்ணிய காரியஞ்செய்ய நான் பாங்கல்லேனாகலின், என் பக்தசிரேஷ்டர்களிலிருவரான நித்யானந்தரும் ஹரிதாஸருமாகிய நீவிர்தானதற்குத் தக்கவர். இல்லந்தோறுஞ் சென்று கிருஷ்ணபக்தியை விர்த்திசெய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தனர். அதன்மீது ஹரிதாஸரும் நித்யானந்தரும், ஸ்வாமிகள் பணித்ததைத் தலைமேற்கொண்டு, வீடுவீடாகச்சென்று வாசற்படியண்டை நின்று, வீட்டுள்ளாரைவிளித்து "நண்பரே, கிருஷ்ணனைவணங்குக" என்று கூறுவர். ஹரிதாஸரும் நித்யானந்தரும் பிச்சைக்காரர்களென்றெண்ணி, வீட்டுரிமையோர் சிறிது அமுதுபடி கொண்டுவந்து அவர்களுக்கீயப்புகுந்தருணத்தில் அவர்கள் "எங்கட்கிஃதொன்றும் வேண்டாம்; கிருஷ்ணனிடத்தில் நீங்கள் பக்திசெய்வதே யெங்கட்கு வேண்டும்" என்று சொல்லிப்போவர்கள். அவ்வூரிலுள்ளோரிற் சிலர் "இத்தகைய வெறியரு முலகத்திருக்கின்றனரா! இவர்கள் திருடுவதற்குத் தொடங்கி முன்னரே யடையாளம் பார்த்துச்செல்ல வந்தனர்போலும்" என்பர். வேறுசிலர், "இவர்கள் புத்திகெட்டவர்கள்; மனிதனைக் கடவுளாக மதித்து, நமக்குச்சாஸ்திரம் போதிக்கவந்தார்போலும்!" என்பர். வேறுசிலர், "இவர்கள் யாதோவொரு காரியத்தை யுத்தேசித்துத் தானிவ்வகை வேடம் பூண்டிருத்தல்வேண்டும். மற்றாபோ

பகாரசிந்தையோடு நம்மைக் கூண்டோடு கரையேற வந்த உத்தம புருஷர்போலும்! திருட்டுப்பயல்கள்! துர்மார்க்க சிகாமணிகள்! யாதோவோர் சுயகாரியமில்லாது இவ்வண்ணம் நடவாது; இப்படித்தான் சில சைவர்கள் தவவேடமணிந்து செய்வதெல்லா மிடக்கராயிருப்பர்; பார்வைக்கு மாத்திரம் இந்தப்பூனையும் பால்குடிக்குமா என்று புலியானது பசுத்தோலைப்போர்வைகொண்டு சாந்தமடைந்ததுபோல் சுத்தாத்வைத சாத்வீகத்தில் மூழ்கியிருப்பார்கள்! தும்மினால் 'சிவ' என்றும் இருமினால் 'ஹர' என்றும், எவ்விடமும் எக்காலமும் பரசிவநாமோச்சாரணத்தில் மனதைச்செலுத்துவதாய் வேடங்காட்டிப் பிறரைவஞ்சிப்பதிலும் பிறருக்குத் தீங்கிழைப்பதிலும், விதண்டாவாதமேற்கொண்டு கோர்ட்டு கொத்தளமேறி லாயர் வக்கீல்களுக்குப் பணம்வாரிக்கொடுத்துப் பாழ்படுத்துவதிலும், பிறர்மனை நயந்து இச்சகம்பேசி துன்மார்க்கஸ்வரூபமாய் விளங்குவர்! 'உலகமென்பது உயர்ந்தோர்மாட்டு' என்பது ஆன்றோர் மொழியாயினும், அவ்வுயர்ந்தோரென்பார் வெகுசிலரே! ஆக, உலகம் சர்வாந்தகாரமாயிருக்கிறது. உள்ளத்தூய்மையைச்சிறிதும் நினைக்காது உத்தமனென்பது ஒருபடி சாம்பல்பூசுபவனென்றும், அதமனென்பது ஒன்றுமின்றித்திரிபவனென்றும், ஒருக்கால் பொருளிருந்திருக்கலாமாயினும் இப்போதுபொருள் நீங்கிய வெளிவேடத்தையே வற்புறுத்தி அதற்கேயெல்லாப் பெருமையையும்மரியாதையையுந் தருவதால், எல்லா அஞ்சா நெஞ்சுபடைத்தோரும், நஞ்சுபோன்ற வஞ்சமுடையோரும் பஸ்மதூளிதராய் ருத்ராக்ஷதாரணராய் விளங்கித் தீங்கிழைக்கின்றனர்கள். இன்னோர் கையில் சபமாலைபிடித்து கக்கத்தில் கன்னக்கோல் தாங்குவதும் வாயிற்புராணம் பேசுவதும் மனதில் பொல்லாங்கு நாடுவதுமாக, "உள்ளே மனமெரிய உதடு பழஞ்சொரிய" என்னுமாப்போலே உலகத்தையேமாற்றித்திரிவார்! இவர், அம்மம்ம, நஞ்சினுங்கொடியோர், பரம சண்டாளர்; விஷத்தால் மிகக்கொடியபாம்பை நல்லபாம்பு என்பது போல, அசைவராகுமிவரைச் சைவரெனக் கூறலே யிழிபுடைத்து!

‘இரவெலாங் காமக் கணிகையர் முயக்கி லின்பமுற் றியற்பகலெலாங்
குரவரா யணிவெண்ணீற் றுருத்திராக்கக் கோலமார்ச் சாலமாங் குழையும்
பாவுபா வனையுந் தேவதார்ச் சனைதாம் பண்ணல்போ லருப்பல பரப்பி
விரவுமா மணிதொட்டாட்டலும்பார்க்கின்மிகக்கொடிதிவர்வஞ்சவேடம்’

அப்பப்பா! இவர்கள் வேடத்தைச் சிறிதும் நம்பலாகாது. இப்படியே சிலவைஷ்ணவர்கள் பட்டைநாமஞ் சாத்தியுலகத்தை வஞ்சிக்கிறார்கள். ஹா! ஹா! இஃதென்ன உலகம்! “நன்றுற்றார் முறுவலிப்பல்லுற்றார்கரைந்தேங்க, என்றுறுத்துயர் விளைக்கு மிதென்னவுலகியற்கை!” உலகமேவிந்தைமேல்விந்தையும் புதுமைமேற்புதுமையுமாகி விளங்குகின்றது! ஒரு திருமண்குறியிருந்தாற் போதாதென்று உடம்பெல்லாம் துவாதசநாமம் சாத்தி, சீர்க்காவியுற்ற ஆடைகளையும் உயர்ந்த பட்டாடைகளையுமுடுத்து, துளசிமணி தாமரை மணிமாலைகளணிந்து, இக்கோர வைஷ்ணவர்கள், எங்குசென்றால் தனிகைகள் நேருமோ என்றும் கைங்கர்யத்திற்கென்று பரிபாஷைகள் பேசி தம் வீட்டு கைங்கர்யத்தை முதலிற் பார்த்துக்கொண்டு ஆயிரம் வந்தால் அரைக்காசை யெம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க மோச எண்ணங்கொண்டு எவர் ஏமாறுவரோ என்றும், நினைத்து நினைத்து அதேவேலையாய்த் திரிந்து, அப்படி யெவ்வளவோ வருவாயிருந்த போதிலும், அப்போதும் கருப்புகாலத்திலே காகம் அலைவது போல, பின்னும் அலைந்தும் உலைந்தும் அளவில்லாத களவு செய்துகொண்டு போதருவார். வழக்கம், வழக்கம் என்னுஞ் சேற்றி லுள்ளங்காலாழ்ந்து, நியாயமும் தெரியாது, விவகாரமுமறியாது, அறிவுமில்லாது, புத்தியுங் கிடையாது, வஞ்சத்தொழிலை மாத்திரம் நெஞ்சிற்பதித்து, “தான் பிடித்த முசலுக்கு மூன்றேகால்” என்று அடங்காப் பிடிவாதம் பூண்டு, அர்த்தந்தெரியாமல் பிரபந்தத்தையாண்டு வீண் படாடோபஞ் செய்வார்கள்! இஃதாயினும் ஒருவகை! எத்தனைபேர் கடவுள் புருவம்வைத்ததே திருமண்காப்பு அகல அளவுதெரியவே யென்னலாம்படி, நெற்றி முழுவதும் திருமண் ஸ்ரீசூர்ணத்தால் மறைத்து, பொய்கொலைகளவு காமாதிகளில் பிரவேசித்துச் சொல்லமுடியாத கொடுமை விளைக்கிறார்கள்! இவர்கள் வேடமே ஜனங்கள் ஏமாறுவதற்கும், துன்மார்க்கர்கொண்ட எண்ணம் கைகூடுவதற்கும் பெருத்த உதவியாயிருக்கிறது! ‘அடியேன்’ என்றும் ‘தாஸன்’ என்றும் இவர்கள் பேசுவதும், இவர்கள் குனிவதும் நிமிர்வதும் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்வதும், அப்பப்பா! முழுமோசம்!

‘தூசுநீர்க் காவி யுறப்புனைந் தணிந்து துளசிதா மரைமணி தோண்மே
லாசின்மூப் பிளமை சாதிவேற் றுமைக ளகன்றெவர்க்காயினுமடியேன்
தாசனென் றிறைஞ்சிப் பிறர்பொருள் கவர்ந்துச் சீவியா நிற்பவ ரென்றும்
மாசிலா தவர்போ லிருந்தன ரிவர்போல் வஞ்சனை யாவரே வல்லார்,

இத்தகைய கொடியர்களாகுமிவரும், தூயமனத்தினர்போன்று நமக்குப் பாடம்படிக்கின்றனர்” எனவும் பலவகையாய் வதந்தி பரவிக்கொண்டிருந்தது. இதன்மீது ஹரிதாஸரும் நித்யானந்தரும் “இஃதென்னே? நம்மை யிவ்வேவலுடனனுப்பினாரெம்பெருமான்! ஆயினும் அவர்க்குத் தெரியாததொன்றுமில்லை. ஸ்வாமிகள் ஓரிருட்டறையில் தன் மகிமைகளை யெல்லாங் காட்டிக்கொண்டிருப்பின் அஃதை யுலகமெவ்வண்ணம் அறியும்! நம்மைப்பார்த்து நால்வர் நகைத்துப் பரிகாசஞ் செய்வதே நாம் செய்தொழிற்குப் பயனானதன்றி, வேறொன்றையுங் கண்டிலேம்” என்று பேசிக்கொண்டு மனம் புண்ணாகியிருந்தனர்கள்.

இக்காலத்தில் ‘ஜகை’ யென்றும் ‘மாதை’ யென்றும் பெயர்பூண்ட இரண்டு பிராமணச்சிறுவர்கள், நவத்வீபத்திற்குக் கொத்தவால்களாயிருந்தார்கள். அவர்கள் பேருக்குமாத்திரம் மகம்மதிய காஜியின் கீழ்ப்பட்டிருந்தோராயினும், உண்மையில் அவர்களே நவத்வீபத்திற்கு அரசர்களாயிருந்தார்கள். இவர்கள் தகாத நடக்கையிற் பிரவேசித்து, கணக்கு வழக்கில்லாது குடித்து தம்மைப்போலொத்த துன்மார்க்கர்களையே பொறுக்கியெடுத்து அவர்களைத் தம் ஒத்தாசைச் சைன்னியமாக நியமித்து, ஜனங்களைக் கொள்ளையடித்து, பெண்கள் கற்பழித்து, தர்மம் அதர்மமென்று சிறிதுங் கவனியாதாராய்க் கொலைத்தொழிற்பயிற்றிக்கேட்பார் மேய்ப்பாரொருவருமில்லாது, ஹிரண்யனும் ஹிரண்யாக்கனும் போன்று மனிதர்களைக்கஷ்டப்படு

த்தி வந்தார்கள். இவர்கள் செய்யுங் கொடுமைக்கஞ்சி, அவ்வூருள்ளோர் தனியே வெளிபுறப்படாது, கும்பல் கும்பலாய்ச் சேர்ந்து போய்க்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட துன்மார்க்கருக்குக் கிருஷ்ணபக்தியுண்டாக்கினால், நல்ல பயனுண்டாகுமென்று நித்யானந்தருக்கும், ஹரிதாஸருக்குந் தோன்றியது. "இப்பாதகர்கள் கட்டாயம் போய்ச் சேரவேண்டிய ரௌரவாதி நரகங்கட்கு அவர்களைச் செலுத்தாது, முக்தியடைவிப்பதுமன்றி, இவ்வூர்ச்சனங்கட்குள் பீதியைத்தவிர்த்து, ஸ்வாமிகள் பெருமை யினிது விளக்கி, யனைவரும் கிருஷ்ணபக்தியைப் பெறுவார்கள்—இத்தனை நன்மையும் இந்த துன்மார்க்கர்களை நல்வழிக்குத் திருப்புவதனா லுண்டாவது" என்று நித்யானந்தரும் ஹரிதாஸரும் பேசி அவ்வாறே யவர்களிடஞ்சென்று கிருஷ்ணபக்தியை யுபதேசித்தலே சால்புடைத்து என்று முடிவுக்குவந்து, அவர்களை நோக்கி, "அன்பர்களே! கிருஷ்ணபக்தி யுங்கட்குண்டாவதாக!" என்று சொன்னமாத்திரத்தில் ஜகைக்கும் மாதைக்குஞ் சொல்லமுடியாத சினமூண்டு "ஊரையெல்லா மேமாற்றித் திரியும் மோசவைஷ்ணவப்பயல்களே! இங்குவந்து பெரிய ரிஷிகள் போன்று எங்களுக்குபதேசஞ் செய்யத் துணிந்தீர்! மறுபடி இங்கு வந்தால் உங்கள் காலையொடிப்பதுமன்றி, உங்களைப்போன்ற மற்ற வைஷ்ணவர்களையும் பூண்டில்லாமலே யழித்துவிடுவோம்" என்று வைது ஹரிதாஸரையும் நித்யானந்தரையும் துரத்தினர். இவர்கள் துரத்தப்பட்டும், பாவிகளுடைய பரிதாப நிலைமையைச்சகிக்கலாற்றாதவராய், அவர்களை யெப்படியாயினுங் கரையேற்றவேண்டுமே யென்னும் அவா இவர்களை முன்பிடித்துந்தலால், மறுபடியுஞ்சென்று முன்போலவே பாதகர்க்குப் போதித்தனர். ஜகையும் மாதையும் இத்தரம் தங்கள் கோபத்தை யடக்கச் சக்தியற்றவர்களாய், ஹரிதாஸரையும் நித்யானந்தரையு மடித்துக்கொல்வதே சரியென்று வெறிகொண்ட நாய்கள் போலோடி வருவதைக்கண்ட பக்தர்கள் ஓட்டம்பிடிக்க நேரிட்டது. நித்யானந்தர் நன்றாயோடச் சக்தியுடையோராயிருந்தாலும், ஹரிதாஸர் அவ்வாறு ஓடமுடியாது விழிப்பவரானபடியால், அவரையும் பிடித்திழுத்துக்கொண்டு நித்தியானந்தர் ஓடிவருவதைக்கண்ட அவ்வூரார், "நன்று! நன்று!! சாலவுநன்று!!! இம்மோசப்பதடிகட்கு இன்று நல்ல வெகுமதி கிடைத்தது! இவ்வூரில் இவர்கள் பெரிய குருமார்போலிருந்து வீண்டம்பமும் மோசமுமியற்றி வருகின்றனர்கள். நன்றாயுதைபடாது போயினரே!" என்று பரிகசித்தார்கள்.

ஸ்வாமிகளும் பக்தர்களும் தினந்தோறும் கீர்த்தனஞ் செய்யுமிடத்திற்கருகில் ஜகையும் மாதையும் தங்கள் கூடாரத்தை நாட்டியிருந்தார்கள். ஏற்கவே வைஷ்ணவர்களென்றாற் பெரிதும் விரோதம்பாராட்டிவந்த ஜகைக்கும்மாதைக்கும், தினந்தினம் பக்தர்கள் விசேஷசப்தமிட்டுக் கிருஷ்ணகீர்த்தனைபாடுவது நடுச்செவியில் நாராசத்தைக்காய்ச்சி விடுவதுபோலாகி, அவர்கள் கோபத்தை விர்த்திசெய்துகொண்டேவந்தது. இதனால் பக்தர்களுக்குப் பெரிதும் பயமும் கலக்கமு முண்டாய்க்கொண்டேயிருந்தது; ஆயினும், கௌரங்கருடைய ஸ்வாமித்வத்தை யவர்களறிந்திருந்தபடியால், அவர்கள் பயங்கொள்ளுவதற்கு ஏதுவில்லாமல், தைரியத்தைப்பெற்றிருந்தார்கள். நித்யானந்தர்க்கும் ஹரிதாஸர்க்கும் மாதைஜகையென்பார் விஷயத்தில் பெரிதுமிரக்கமுண்டாகி, அவர்களை யெப்படியாயினும் ஈடேற்றவேண்டு மென்று கருணைபிறந்திருந்தபடியால், நடந்தவைகளையெல்லாம் ஸ்வாமிகளிடத்தில் விண்ணப்பித்துக்கொள்ள, ஸ்வாமிகளும் அதியானந்தமடைந்து, "பக்தர்களாகிய உங்களருள்பெற்றதனால் அத்தீயோரும் பக்தர்களாவதற்கு யாது தடை? நாமனைவோருங் கீர்த்தனை செய்துகொண்டே புறப்பட்டுச்சென்று மாதையையும் ஜகையையும் நம்வசப்படுத்துவோம்" என்றுசெப்பினர். நித்யானந்தரும் ஹரிதாஸரும் தம்மெண்ணம் நிறைவெய்திற்றென்று அதியானந்தபரர்களாய் நின்றனர்.

ஸ்ரீகௌரங்கஸ்வாமிகள் தம்முடைய பக்தர்களை முக்கியமாய் கீர்த்தனைச் சுகத்தாலும், பக்திநடனத்தாலுமே தான் வசப்படுத்தினார். ஹரிகீர்த்தனை யென்பது பெருமானுடைய திவ்ய நாமங்களையுங் கல்யாண குணங்களையும் நிரைபடக் கோத்து

அவைகட்கு ராகதாள மமைத்துப் பாடத்தெரிந்தோர் பாடவும், அதற்கிசைய மிருதங்க தாளங்கள் ஒலிசெய்யவும் ஸ்ரீபட் பதியை பஜிப்பதாகிற கொண்டாட்டம். ஸ்வாமிகள் இத்தடவைதான் கீர்த்தனை கோஷ்டியுடன் வீதிவழிப் புறப்பட்ட முதல்தரம்! அவர்தம் திருவுள்ளம் இத்தகைத்து என்பதையறிந்த பக்தர்களாகிய கற்றவரும் மற்றவரும், ஐயனெண்ணத்திற்கு அட்டியு முண்டுகொல் என்று சந்தோஷசித்தராய், ஒன்றிய மனத்தாராய், அன்புதுளும்பிய அகத்தாராய், கொடியோரும் அடியோராகட்டு மென்கிற கோரிக்கையாராய், கூட்டமாய்வந்து சேர்ந்தனர். கீர்த்தனைக் கொண்டாட்டம் தொடங்கினது; அக்கணமே அனைவருடைய அகந்தை யடங்கினது சூரியனைக்கண்ட பனி தலை துளக்குமா? விவேகம் செங்கோலோச்சும் நாட்டில் அவிவேகம் யாங்ஙனம் நுழையும்! பூனை காட்டில் எலி யெவ்வண்ணம் தங்கும்! காற்று வீசுமிடத்த கொசுகு காலட்சேபம் நடக்குமோ! கையிற் பணமிருந்தால் கறிக்கென்ன குறைவு! பக்தர்கள் வெளிவேடத்தில், மாத்திரப் பக்தராய்த் தோன்றாது, அவர் மனதிலே உண்மைப் பக்தி படிந்திருந்ததால், அவர் முகத்தில் விளங்கும் தெய்வீகத்தையுங் கண்களிற் பொழியும் கருணையையும், அவர் தம்மைத்தாம் மறந்து பகவத்குணானுபவத்திலழுந்தி யானந்தக் கூத்தாடுவதையும், அதனுடன் காலிற் சதங்கை “கலீர்” என்பதையும், கண்ட யாவரே அத்திருவிழாவை யிழித்துக் கூறுவர்! ஆயினும், கீர்த்தனை யுத்ஸவத்தின் முதலில் அனேகர் அக்கூட்டத்தாரை யவமதித்து நகைத்தும், அவர்களிற் பலரைப் பகைத்தும், முட்டாள்களென்று பேசியும் பதடிகளென்று ஏசியும் போந்தனர். ஏனெனில் உலகச் சாதாரண வழக்கத்திற்குமீறி நடப்பவர்களெல்லோரையும், “எல்லப்பசெட்டி லக்க ஏகலக்க” என்று பைத்தியக்காரர் என நாமம் போடுவது அறிவினர் என்று தம்மைத்தாம் நினைக்கும் உலகப் பைத்தியக்காரர் இயல்பு. அவ்வாறே, இங்கும், நாலுவேதமும் படித்த நல்லறிவோர் எத்தனைபேர், தர்க்கம் பயின்ற சாஸ்திரிகள் எத்தனைபேர், இலக்கணங் கற்ற இசையினோர் எத்தனைபேர், இவரும் இவர்போன்று

வேறுகலைகளிற் புகழ்வாய்ந்த மற்றையோரும், ஆசார்யர்களும் குருமாரும் துறந்தவரும் துறவாதவரும், அவிவேகிகள் போன்ற சாதாரண மனிதருடன் ஆடிப்பாடிக் குதித்துக் கூத்தாடுவதென்றால், உலகினரெவர்தான் அதை நன்கு மதிப்பர்! ஆரம்பத்தில் இவ்வாறு சிறிது நிகழ்ந்தாலும், கொஞ்சநேரத்திற்கெல்லாம் பக்தியுண்மையே யனைவரையுங் கவிந்து அந்தகாரத்தைப் பறக்கடித்தது! ஜனங்கள் செய்யும் கேலிக்கும் துணிந்து பக்தர்கள் கீர்த்தனையாரம்பித்ததே, அவர்களுடைய மனவுறுதியையும் அகத்தூய்மையையும் விளக்குகிறது. செய்த ஏற்பாட்டின்படி, பக்தர்களனைவோரும், ஸ்வாமிகள் நடுவில் நின்றுகொண்டிருக்க, தாளங்கள் மிருதங்க சகிதமாய்,

“ வண்டுணு நறுமலரிண்டைகொண்டுபண்டைநம்வினைகெடவென்றடிமேல்
தொண்டரு மமரரும் பணிய நின்றங் கண்டமெடகலிடமளந்தவனே
ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே
அண்ணல்செய்தலைகடல்கடைந்ததனுட்கண்ணுதல்நஞ்சுண்ணக்கண்டவனே
விண்ணவரமுதுண வமுதில் வரும் பெண்ணமுதுண்ட வெம்பெருமானே
ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே ”

என்று பாடிக்கொண்டும், “ஹரி” “ஹரி” “கிருஷ்ண” “கிருஷ்ண” என்று கோஷஞ்செய்து கொண்டும் ஜகையும் மாதையுமிருந்த கூடாரத்தை நெருங்கினார்கள். துஷ்டர்கள் முன்னவிரவு கண்டபடி குடித்துக் களியாட்டமர்ந்திருந்தாராதலின், அத்தருணம் தூங்கிக்கொண்டிருந்தார்கள். கீர்த்தனைகோஷ்டியிற் சேர்ந்தார்கள் யாதொன்றையுங் கவனியாராய், நித்யானந்தர் முதலிலும், ஸ்வாமிகள் நடுவிலுமாக, அனைவரும் அதியானந்தபரர்களாய், நிருத்தஞ் செய்தும் பாடியும் சென்றுகொண்டிருக்குஞ் சந்தடியைக்கேட்டு தங்கள் நித்திரைக்குப் பங்கம் வருவதால் பஜனையை நிறுத்தும்படி தம் ஏவலாளரை யனுப்ப, அவர்கள் வந்து தடுத்தார்கள். பக்தகோஷ்டியிலிருந்தோரெவ்வொருவரும் பரமானந்தத்திலழுந்தி யிருந்ததால், ஏவலாளர்கூறியமாற்றத்தைச் செவியிற்கொள்ளாது, அவர்கள்

கீர்த்தனையை நடத்திக் கொண்டிருந்தார்கள். ஏவலாளர் சென்று "ஐயன்மீர்! நாம்தடுத்துச் சொல்லியும், அவ்வைணவர்கள் செவிகொடுத்துக் கேட்கிலார்; இப்பொழுது இரட்டித்துக் கூவுகின்றனர். யாமென்செயக் கடவோம்?" என்றனர். கேட்ட மாதையும் ஜகையுங் குபிதர்களாய், தூங்கிக்கொண்டிருந்தவர்கள் அவிழ்ந்திருந்த வஸ்திரத்தை யவசரமாய்ச் சுற்றிக் கொண்டு, "வைஷ்ணவப் பூண்டில்லாமல், இன்று ஹதஞ் செய்யக் கடவோம்" என்று விருதுகூறி, ஆயுதங்களை யெடுத்துக்கொள்ள மறந்து தம்சேனை பின்னால்வர முன்னோடி வந்தார்கள்.

அவர்கள் வந்தவேகத்தையும் அவர்க்கிருந்தகோபத்தையும், அவர்களை ஆகாசத்திலேற்றுவித்த ஆங்காரத்தையும் நோக்கின், இன்னோர் ராவணகும்பகர்ணரோ, அன்றி ஹிரண்ய ஹிரண்யாக்கரோ என்று நினைக்கஏதுவிருந்தது! இச்சண்டாளமிண்டாளர் கோரத்தொழிலிற் சூரன் இரண்டுருவமெடுத்துவந்தனனோ என்று எண்ணவும் நியாயமிருந்தது. பொய், கொலை, களவு, காமம், மதுவருந்தல்முதலாகிய தீயதொழில்களொவ்வொன்றிலு மிவரே முதற்பரிசுபெற்றோர்! பஞ்சமாபாதகர், கடைகெட்டகாதகர், தொலையாப்பழிபூண்டதோதகர்! வாயில் வராத வம்புபேசுவதிலும், கைகூசுங்காரியங்களியற்றுவதிலும் குடிப்பதிலும் கொல்வதிலும் அடிப்பதிலும் அறைவதிலும் அனைத்திலும் இவரே அரசாட்சிபெற்றவர்! அலகிலாக்கடவுள்படைத்த உலகத்திற் பெண்களாகிற நந்தனவனத்திற்பூத்த சுந்தரமலர்களைத்தாமே திருடித்திரியத்துன்மதிகொண்டு அவ்வாறே இயன்றவரையும் செய்து போதருவார்! இக்கொடியோர் கேட்பார் மேய்ப்பாரொருவருமிலாது, "நான்பிடித்தமுசலுக்குமூன்றேகால்" என்றுதாம்நினைப்பதே நியாயமாகவும், தாம் விளம்புவதே வேதமாகவும், தாம்சாதிப்பதே சட்டமாகவும், தடுத்தொன்றும் சொல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்கிறவண்ணம் இவர்கள் ஆரவாரமே யதிகமாயிருந்ததால், தம் ஆக்கினை கடந்தோரை எவ்வெவ்விதம் ஆட்டுவிக்க அவர்கள் அபிப்பிராயங்கொண்டிருப்பார்கள்! தம் ஆணைமீறிச்

சென்ற அசடரைச்சித்திரவதைசெய்து, அவர்கள் சதைத்துணுக்கைகளைக் காகம்பருந்து கழுகு கருடன்முதலிய பறவைகளுக்கிட்டினு மவர்கட்கப்போதிருந்த கோபமடங்கியிராது! "நவத்வீபபட்டணத்தின் நாயகராகும் நாம் நித்திரை செய்யும் வேளையில்இத்தரித்திர வைஷ்ணவர்கள்நம்மீதுபடையெடுப்பது போல் கும்பல் கூடிவந்ததேபெரும்பிசகு! வந்ததும்சாதாரணமாகவாவந்தனர்கள்! அவர்கள் சட்டமும்திட்டமும், வேஷமும் கோஷமும், ஆட்டமும் பாட்டமும் அவர்கள்செய்தசந்தடிகாதடைத்துக்கொண்டுபோனதே! யானைகொழுத்தால் தன்தலையில் தானே மண்ணைவாரிக்கொட்டிக்கொள்வதுபோல், அகங்காரத்தின் அவதாரமும் அறியாமையின் ஸ்வரூபமுமான இவ்வைஷ்ணவப்பதடிகள், சந்தடிசெய்யவேண்டாமென்று யாம் விடுத்த கட்டளையாகிற மட்டுகள்தாண்டி, 'கழுதைக்குபதேசம் காதிலேசொன்னாலும், அவயக்குரலன்றி யங்கொன்றுமில்லை' யென்கிறவண்ணம், குரங்குக்கானந்தம் வந்ததுபோல்குதித்துக் கூத்தாடுகின்றனரே! முட்டாள்கள்!" என்று தமக்குள் பேசிக்கொண்டே தம்கோபச்சுவாலைக்கு நெய்யாகுதிவிட்டு வளர்த்தார்கள். எதிர்வருகிறபக்தர் பட்டாளத்தையுற்றுப்பார்த்தார்கள்! நித்யானந்தர் முதலில்வருகிறார்! இதைக்கண்டதும், கொடியோர்களுக்குக் கோபமாறி, வெறிகொண்ட நாய்கள்போல்பித்தம் பிடிக்கப்பெற்றனர். கோபத்தைக்காட்டினும் ஒருபடியுயர்ந்த உன்னத ஸ்தானமாகிற வெறிநிலைமையில் தங்கியவெறியர், "ஹா! ஹா! இந்த முட்டாள் வைஷ்ணவன்தான் இதற்கெல்லாம் காரணம் போலும்! ஏழைப் பார்ப்பானை நம்புதல் பசு சாந்தமாயிருக்கிற தென்று அதைநம்புகிறதையே யொக்கும்! இத்துன்மார்க்கப் பதரும் இன்னொருவனு மன்றோ முன்னர் நம்பால் சடாயுசம்பாதிபோல் வந்திறங்கி உபதேசம் செய்யத்தொடங்கினர். நமக்கு உபதேசஞ் செய்யச்சொல்லி, நாம் தாம்பூலம் வைத்தழைத்ததுபோல், இச்சள்ளைச் சருகுகள் என்னென்ன கொள்ளைவிளைத்தன? அப்போதே இக்கலகப்பூண்டுகளைக் கையார அடித்துக் காலாரவுதைத்துக்கொன்று மென்று தின்றுவிட்டிருந்தால், இப்போது இவ்வளவு தூரத்திற்கு ஏன் வரு

கின்றது?" என்று, கூறி, "ஆயினும் இவனை முன்னரடித்து எமனுக்கு விருந்து செய்யக்கடவோம்" என்று அண்டகடாகம் வெடிக்குமோ வென்றும், நட்சத்திரங்கள் புல புல வென்றுஉதிருமோ வென்றும் அனைவரும் திடுக்கிட்டு நடுநடுங்க ஓடிவந்தனர்.

" விண்கீழுற வென்றோ படிமேல் கீழுற வென்றோ
எண்கீறிய வுயிர் யாவையும் யமன் வாயிட வென்றோ
புண்கீறிய குருதிப் புனல் பொழிகின்றன புரையக்
கண்கீறிய கனலார் முனிவியா தென்றயல் கருதேம்"

அண்டகடாகங்கள் நடுங்கும்படி அட்டகாசஞ் செய்துகொண்டு வந்த சகோதரர்கள், அதிகுபிதராய், அடிக்கவருவதைக்கண்ட நித்யானந்தர், "அன்பர்காள்! கோபிக்கவேண்டாம்; நாங்கள் உம்மிடம் சண்டைபோட வீண்டுவந்தோமல்லோம், உம்மை நற்கதிக்குய்க்க விரும்பி வந்தோமாதலின், நீவிரும் கிருஷ்ண பக்தியைப்பெறுக" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மாதையென்பவன் அங்கு உடைந்திருந்த பீங்கான் ஓட்டையெடுத்து அதியுக்கிரமாய் நித்யானந்தர் தலையில் வீச உதிரம் பெருகியது. நித்யானந்தர் அடிபொறுக்கமாட்டாது, தவித்து தன்கையால் தலையை மூடிக்கொண்டு ரத்தம் பெருக வொட்டாமல் தடுத்துக்கொண்டிருந்தார். அங்குகிடந்த மற்றோர் துண்டினால் நித்யானந்தரை யடித்துக் கொன்றுவிடுவதே சரியென்று தீர்மானித்துப் பிரயத்தனப் பட்டதைக்கண்ட ஜகை, தன்சகோதரன் கையைப்பிடித்து 'நிரபராதியான மனிதனை நாம் என் வீணில்கொல்லவேண்டும்?' என்று தடுத்தனன். இரண்டு சகோதரர்களும் அதி துன்மார்க்கர்களாயினும், மாதை அதிக பலசாலியும் ஜகை சிறிது இளகிய மனதுடையோனுமாயிருந்ததால் ஜகை யவ்வாறுதடுக்க நேரிட்டது. ஆயின் இருவோர்க்கும் வைஷ்ணவப் பூண்டுகட்கு இடங் கொடுக்கக்கூடாது என்கிற கெட்ட எண்ணம் விசேஷித்திருந்தது.

நித்யானந்தர்க்குக்காயம்பட்டதைக்கேட்டு எம்பெருமான் கண்திறப்பதற்குமுன் ஓடிவந்து, கோபமும் துக்கமும் கலந்த மனத்தினராய், முதலில் நித்யானந்தர் சிரத்தில் கைவைத்த மாத்திரத்தில் உதிரப்பெருக்கை நிறுத்தி, துஷ்டர்களை நோக்கி

தேளுக்குக் கொடுக்கிலும் பாம்பிற்குப் பல்லிலும் நஞ்சிருப்பின், அயோக்கியதையின் அவதாரமாகிய உங்கட்கு உடல் முழுவதும் விஷமாகவேயிருக்கிறது! எந்நாளும் இவ்வாழ்வே சதமென்று எண்ணி அளவில்லாத பாவங்கள் பண்ணி யிங்கும் அல்லல் விளைக்க நண்ணிய கண்ணியப் பதர்களே! காதுகொடுத்துக் கேளுங்கள்! உங்கட்குக் கல்லினும் வலியநெஞ்சம், பாம்பினுங் கொடியவஞ்சம், கொலையும், களவும், குடியும், புலையும், பொய்யும், பொச்சாப்பும் உங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கின்றன. ஏ! சண்டாளரையும் சாதுக்களாக்கும் மிண்டாளர்கள்! பழிக்கஞ்சாது இழிதொழிலே செய்யும் பாமரர்காள்! தங் நலங்கருதிப் பிறர் பொருட் கவரும் பித்துடையீர்! யான் சொல்வது கேண்மின்! நீவிர்தாம் இவ்வுலகத்திற்கெல்லாம் முழுமுதலென்று நினைத்திரோ! நம் சுகத்திற்கென்றே யொவ்வொரு பூவுங்கொடியும் மாவும் மரமும் பணமும் பண்டமும் நிலைபெற்றது என்று உம்விருப்பப் பிரகாரம் அவைகளைப் பாழ்படுத்தத் துணிந்தீரோ! உம்மைக்கண்டால் பாவமு மஞ்சுகின்றது; பழியுமேங்குகின்றது! இவைகளே யிவ்வகை நடுங்குவன வாயின், உத்தமகுணங்கள் ஒரு காதமன்றோ வோடிவிடும்! எத்தனை கொலைபுரிந்தீர்! எத்தனைபேரைக் களவாடினீர்! எவ்வெவரை வழிமறுத்தீர்! எத்தனைபேர் பணம் பறித்தீர்! உமது கொடிய செய்கையைக் கூறலென்றால், நாவு மசைகின்றிலது! இக்கொடுங்கோலரசு எப்பொழுதும் நடவாதென்று சிறிதேனு நினைத்தீரா? உம்விருப்பப்படி நடவாதகடலும், மலையும், காற்றும், மழையும் எங்குநின்றும் தோன்றின வென்னும் கேள்வியைக் கேட்டுக்கொண்டீரா? அவைகட்கெல்லாம் அரசன்யாவன்? உம்முடலை நோயிலாது பாதுகாக்கவும், எமன் வாயகப்படாது ஏமாற்றிவிடவும் உமக்கு வலியிலதென்பதைப்பற்றிச் சிந்தித்தீரா? இதனுமும்மையும் மற்றையோரையும் பம்பரம்போலாட்டுவிக்கும் பரம்பொருளொருவ னுளனென்றறிந்தீரா? சகலாண்ட சராசரங்களுக்கும் முதல் தனிவித்தாகியும், இளமை மூப்பு முதலாகிய பேதரகிதனாயும், ஆதியு நடுவு மந்தமுங் கடந்த அற்புதனாகியும்,

வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத பண்பினனாகியும், நல்லார்க்கு நல்லவனாகியும் பொல்லார்க்குப் பொல்லவனாகியும் இயற்கை யறிவினனாகியும் விளங்கும் என்னப்பனை நீவிர் நினைந்திராயின்; இப்பழிதொழில்களுக்குப் பாத்திரராகீரே! உம்மைச்சித்திரவதை செய்தாலுங் குற்றமிலது! கழுவேற்றி காகம் பருந்து கழுகு முதலிய பறவைகள் கொத்தித்தின்ன விடினும் குற்றமில்லை! உமக்குநன்மை தேடிய நற்றவர்க்குத் தீமையிழைக்கும் தீயராகுமுங்களைத் தீயில் வீழ்த்தினாலென்! வாளாலறுத்துச் சுடினுமென்? கொடியீர், செய்யத்தகாதன செய்தீர்! உமக்கு நித்யானந்தன்யாது கெடுதிசெய்தனன்? எற்றுக்கு அவனை யடித்தீர்? இவ்வாறே, நீவிர் தீமையேயியற்றிப் போதருகின்றீர்! உமக்குத் தெய்வபக்தி சிறிதுங்கிடையாது! பாவிகாள்! உம்மைவதைக்கமனந் துணிந்திருக்கின்றேன்" என்று கடிந்தனர்.

ஜகையும் மாதையுஞ் அந் நகரத்துக் கொத்தவால்களாயும், ஏற்கவே துன்மார்க்கர்களாயு மிருந்தனரானமையின், அவர்கள் ஸ்வாமியையும்வது சிறைச்சாலைக் கழைத்துப் போகமுயன்றிருக்கலாமாயினும், ஸ்வாமிகள் பேசும்பொழுது, துஷ்டர்கள் கைகாலசைக்கச் சக்தியிலராய் நாவையசைக்கவும் முடியாது மரம்போலே நின்றனர். ஸ்வாமிகள் துஷ்டநிக்ரஹஞ் செய்வதே சரியென்றெண்ணித் தனது சக்ராயுதத்தை வரவழைக்க உத்தேசிக்கவும் சக்கரத்தாழ்வான், கோடிசூர்யப்ரகாசம் போன்றும் வடவைக்கனல் போன்றும் கொடியோரை நோக்கி வருவதை யங்கிருந்தோரனைவரும் கண்டனர். "இஃதென்னை! பாதகர்களைக் கடைத்தேற்ற நினைத்து நாம் களிப்படைந்திருந்தால், எம்பெருமான் இவ்வாறு திருவுள்ளம் பற்றுகின்றனரே!" என்று நித்யானந்தர் மனங்கலுழ்ந்து, ஸ்வாமிகளின் திருவடிக்கமலங்களில் விழுந்து, "க்ருபை செய்யவேண்டும்! க்ருபைசெய்யவேண்டும்!!" என்றுபல முறை கதறினும், ஸ்வாமிகளவை யொன்றுக்கும் செவிகொடாது, அன்பர்க்குக் கஷ்டம் வருவித்த துஷ்டரைச் சிக்ஷைசெய்வதே தருமமென்று ஆவேசத்துடனிருந்தனர். நித்யானந்தர் மீண்டும் ஸ்வாமிகளைப்பார்த்து, "என் அருமருந்தே! பிறப்பிறப்புத்துயர் நீக்கிய பெம்மானே! தாம் இவ்வவதாரத்தில் ஆயுதமொன்றுந் தொடாமலேபக்தியைமூட்டிச் சேதனோஜ்ஜீவனஞ் செய்வதாய்ச் சொல்லிப்பொழுது சக்கரப்படை தொட்டீரே! தங்கட்கு இன்று நேர்ந்த கோபத்தைப்போல் நாங்களென்றுங் காணவில்லையே! அன்பினாலும் அருளினாலு மெம்மைக் கரையேற்றுவதாய்க் கூறி, ஏழைக்காக இவ்வளவு கோபங்கொண்டால் எளியோர் எவ்வண்ணம் பிழைப்பர்! நாங்கள் இவ்வளவு துன்பப்பட்டதும் துயரமடைந்ததும் துன்மார்க்கரைச் சன்மார்க்கம் கொடுவந்து திருத்தற் பொருட்டேயன்றி, வேறல்லவே! தங்கட்குத் தெரியாதது ஒன்றுமில்லை யாயினும், எங்கட்காக விவ்வேழைகளைக் காத்தருளல் வேண்டும். தாங்கள் என் நெற்றியிற் பட்டிருக்குஞ் சிறிய காயத்தைப் பார்த்து மனந்தாளாதாராய் இக்கோபங் கொண்டிருப்பதாயடியேனுக்குத் தோன்றுகிறது. இம்மாதவனெனக்குக் கெடுதிவிளைக்கவேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு ஓட்டை யென்மீதெறிந்ததாய்த் தோன்றவில்லை. ஆகலின் இவ்வேழைகள்மீது தயவுகூர்ந்து, அவர்களுக்குப் பக்தியமுதமூட்டிக் காத்தருளல்வேண்டும்" என்று கூறினார். அதற்கும் ஸ்வாமிகளொன்றுஞ் சொல்லாது, துஷ்டரைச் சம்ஹரிப்பதே சரியென்றுயத்தப்படுகையில் நித்யானந்தர் மீண்டுமோடிவந்து "ஏழையடியார்க் கிரங்கு மெம்மானே! இந்த ஜகைதான் என்னைக் காப்பற்றினவன். அவனை யாவதுகொல்லா திருத்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். பெருமானும் மனதிரங்கி, "ஜகை உன்னைக்காப்பாற்றினனா?" என்று சந்தோஷப்பட்டு, ஜகையைச் சேர்த்துக்கட்டினார். உடனே அவன் பக்தியுதிக்கப்பெற்று, "ஐயையோ! என் வாணாளை வீணாளாக்கிக் காலங்கழித்தேனே! ஆங்காலமெல்லாம் அநியாயம்செய்து சாங்காலத்தில் சங்கார சங்கரா வென்றலக்கண்படுதல் போலவும் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரஞ் செய்வது போலவும் எனக்கு இப்போது தான் புத்திவந்தது! என் இடர் எவ்வண்ணம் நீங்கும்! என்பாவம் எவ்வகை பறக்கும்! என்துயரம் எவ்விதம் தொலையும்! என்னை மன்னிக்குங்

கரையேற்றிய என்னப்பன் தயாளத்தையானென் னென்றுரைப்பேன்! கொடியோரிற் கொடியோனும், பாவிகளிற் பாவியாய், சண்டாளரிற் சண்டாளனாகிய கடையேனை, நாயினுங் கடைகெட்ட நரப்பேயைக் கூவியழைத்துத் தாவியணைத்து அருளைத்தந்து பொருளைக்காட்டி ஆட்கொண்ட அன்பை யானென் னென்று சொல்வேன்! இவரே கருணைக்கடல், இவரே காதற் களஞ்சியம், இவரே முதல்தனிவித்து; இவரையே ஞானிகள் நாடுவது, இவரையே பக்தர்கள் பாடுவது, இவரையே மோனர்கள் தேடுவது, நல்லார்யாருங் கொண்டாடுவது! இவ்வுளவறியாது என் மனதைக் களவுகொடுத்தேனே! எத்தனைபேர் பொருளைத் திருடினேன்! எத்தனைபேருடலை வருத்தினேன்! எத்தனைபேர் மனம் நோகச்செய்தேன்! எத்தனைபேர் மனைவி மகளிரைக் களவாடினேன்! வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களுக்கும், கடலிலுள்ள நீரிற்கும், ஆதன் பாலமையும் மணல்களுக்கும், உலகத்தோற்றத்திற் கின்றி யமையாத அணுக்களுக்கும் கணக்கு ஏற்படினும், யான்செய்த பாவத்தொழில்களுக்கு யாதொரு நியதியுங் கிடையாது; எவ்வாறாயினும் என்னை யாட்கொள்ளல் நின்கடன்.

"வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினாரிறந்தால் நமன்றமர்பற்றி
யெற்றிவைத் தெரியெழுகின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ
தழுவென மொழிவதற் சஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்"

என்று தன் பூர்வநடத்தையை நினைந்து வருந்தி, ஸ்வாமிகள் திருவடியே கதியென்று தன்னைமறந்து மூர்ச்சித்து விழுந்தனன்.

இதை யெல்லாம் பார்த்திருந்த மாதைக்குப் பயமதிகமாயுண்டாகி, புத்தியும் வரப்பெற்று, பெருமான்றிருவடி பணிந்து, "நான்செய்த பிழைகளைப்பொறுத்தருள்வாயாக! என்னறி

யாத்தனத்தால் செய்தகுற்றங்களை மனம்வையாது என்னைக் கடாட்சித்தருளல் வேண்டும்" என்று ஸ்தோத்திரஞ் செய்தனன். எமபிரான் அவனைநோக்கி "தீங்கென்பதே யோருருவமெடுத்து வந்ததுபோல இங்குத்தோன்றி இணையில்லாத தீமை யிழைத்த இழுதையே! பரம சாதுக்களைப்பழித்து அவர்கள் மனோலயத்தை யழித்த பழுதையே! கன்னியர் கற்பழித்துக் களவாதிகளிலுழன்ற கழுதையே! உன்னை மன்னிக்க வேண்டியதாயின், உலகத்தோற்றமே மாறவேண்டும்! குணதிசையுதிக்கும் கொற்ற வெய்யோன் குடதிசையிலன்றோவுதித்தல் வேண்டும்! பனிக்கட்டி சுடுதலும், கனல் குளிர்தலும், காற்றுதெரிதலும், ஊர்வன நடத்தலும், நடப்பன பறத்தலும், பறப்பன நகர்தலும், இன்று சுடுவதே நாளைக்குக் குளிர்வதும், குளிர்வதே சுடுவதும், கண்ணே கேட்பதும், காதே பார்ப்பதும், மூக்கே யுண்பதும், வாயே முகர்வதும், வானகத்துழலும் தாரகைக்கணங்கள் பூமியில் நடந்தும், பூமியிலுழலும் மானிட ஜனங்கள் வானகத்தலைந்தும், ஒன்றும் வழிதுறையிலாது, சிருஷ்டிக்கிரமமும் ஸ்திதிவகையும் தலைகெட்டுத் தடுமாறிப்போயினன்றோ யானுனக் கருள் புரிவது! ஏ! துன்மார்க்கப்பதரே! அயோக்கியஸ்ரேஷ்டனே! அற்பர் சிகாமணீ! அசடர் அரசனே! நீசெய்தகாரியங்கள் ஒன்றுஞ் சரியானதன்று. ஆகையால் உன்விஷயத்தில் மன்னிக்கமுடியாது" என்று கூறினர். மாதவன் மனம் வருந்தி "'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே' என்கிற நியாயம் தங்கட்குத் தெரியாததா! என்னைக்கடைத்தேற்றுவது தங்கட்குப் பாரமா! யான் சொல்லொணாத தீங்கிழைத்ததும் நிசமே! கொலை புரிந்ததும்நிசமே! அன்பரை யடித்ததும் நிசமே! ஆரவாரம் புரிந்ததும் நிசமே! என்மனம் கருங்கல்லை நகைத்துத்துருக்கல்லைத் தோல்வியுண்முழுத்தி வைரத்தினும் வன்மையுற்று இடக்கரே புரிந்து அடக்கமே விடுத்து அகங்காரம் பூண்டிருப்பதே! ஆயினும்நீயே யென்னைக் கைவிட்டால் யாவரே என்னைக்காப்பவர்? சண்ணனே கருணை காட்டாவிடின் காசினியில் யாரென்னைக் காத்தருள்வார்! ஆதலால், என்னைக்

காப்பது உன்கடன் இஃதேயெனக்குந்திடன்! என் அப்பனே, நீ தந்தையாகலானும் உன்னுடையமை யானாகலானும், என் பிழைகளை யோராது ரக்ஷிப்பவர் உன்னைக்காட்டிலும் யாருளர்?

'அருக்கலோனருள் கடுங் கனை வயிரச்சூழ்கலோவெனக்
காழ்கொளுமனத்தேன்
தருக்கலாணவக் கருக்கலோ டுழல்வேன் சகத்தைராவெனப்
பந்த முற்றலைவேன்
திருக்கெலாம் பெறுவெருக் கெனப்புகுவேன் தீயனென்பெரும்
பேயனை யுணர்ந்தான்
உருக் கலா ததற் கென்செயக் கடவேனுடைய வாவெனை
யுவந்துகொண் டருளே'"

என்று பிரார்த்தித்தனன். இதற்கும் ஐயன் மனமிரங்காததால், மாதைமுன்னைக்காட்டிலும் பதின்மடங்கு நொந்த வுளத்தனாய், "ஸ்வாமிகாள்! தங்கள் விருப்பப்படியே நடக்கச்சித்தமுள்ளவனாயிருக்கிறேன். நான்செய்தபிழைகட்கு எவ்வளவு தண்டனை செய்யினும் போதாததேயாம்! அவைகளை யெல்லாம் அநுபவிக்க எனக்கு மிகவுஞ் சந்தோஷந்தான். ஆயினும் எத்தனை நாள் பிறகாயினும் முத்தியடைந்து நான் கடைத்தேறுவதற்குரிய மார்க்கத்தை யெனக்குபதேசித்தருளி யென்னைத் தண்டித்தருள்க" என்றனன். இதைக்கேட்டதும் சைதன்யருக்குண்டான மகிழ்ச்சியைச் சொல்லமுடியாது. இதுவரையிலும் கோபாவேசத்தால் அவர் திருமுக மண்டலம் ஏறிருந்த உக்கிரத்தோற்றம் மாறியது. வழக்கப்பிரகாரம், கன்னெஞ்சத்தையும் கரைவிக்கும் கருணை மாரி அவர் முகத்திற் பொழிந்து நகையை வருவித்து இனிமை தந்தது. மாதை செய்த கொடுந்தொழிலோ இவ்வளவ்வளவல்ல; அவைகளை யெல்லாம் மன்னித்து அவனைத்திருத்திப் பணி கொள்ள நித்யானந்தர் நல்லெண்ணங்கொண்டு வந்தால், அவரை யவமதித்துத்துரத்தியது அவன் செய்த அக்கிரமங்கட் கெல்லாம் பதினாயிரமடங்கு அதிகம்; கடைசியாக, அதையும் நெஞ்சில் நினையாது, பகவானிடத்தில் முறையிட்டு, அவரருளை முன்னிட்டு, அவர் வருகையையுடன்பற்றி, வரும்போதும், ஸ்வாமி

கள் முன்னரேயே நித்யானந்தரை யடிப்பது எத்துணைத் தகாத காரியம்! இவ்வகைக்கொடியனான மாதையைத்தக்க தண்டனைக்குட்படுத்த வேண்டுமென்று, ஸ்ரீ சைதன்யருக்கு அதிக கோப முண்டானது. தன்னெதிரிலேயே தன்பக்தனை யடித்த தப்பு அவர் மனதைத்தவிக்கச் செய்தது. இக்காரணத்தால் ஸ்வாமிகள் திருமுகம் அடைந்திருந்த பயங்கரத்தோற்றத்தைக் கண்டோர் நடுங்கினர். இவ்வித கோரத்தோற்றத்தைப்பக்தர்கள் என்றுங்கண்டிலர்; எவ்வெப்போதும், அவர்களுடன் ஆடியும் பாடியும், அழுதும் தொழுதும் விளங்கிய ஸ்வாமிகள் இற்றைப்போது ருத்திரன் போன்று நிற்பதைப்பார்க்க முடியாதாராய் பரதவித்தனர். மாதை அவ்வளவு தப்புகள் செய்திருந்த போதிலும், இப்பொழுது அவன் உண்மையில் நல்லவனாகினைந்தது, ஸ்வாமிகளுடைய கோபத்தணலை யொரு நொடியில் அவித்தது. உடனே அவர் முகம் நகை பூத்தது; ஆனந்த மேற்றது; அருள் காட்டியது; பயமோட்டியது. எப்பொழுதும் பூரண சந்திரன் போன்று பிரகாசங்கொடுக்கும் அவரது திருமுகத்தில்சிறிது வருத்தமாகிற கிரஹணம் படிந்து நீங்குங்கால் கோபமாகிற சுவாலை வீச, சந்திரத்தோற்றம் மாறி வெய்யவன் கொடுமை காட்டிற்று; பின்னர் மாதவனிடத்தெழுந்த ஆர்த்தியாலுண்டாகிய மகிழ்ச்சி மாரி அத்தணலைக் கெடுக்கச்சந்திரனுண்மை யுருவிளங்கிற்று. உடனே, மாதையை நோக்கி, ஸ்வாமிகள் அத்யந்த சந்தோஷத்துடன் "அப்படியா? ஆயின் நீ கடைத்தேறுவதற்கு வழியொன்றிருக்கின்றது. நீ நித்யானந்தன் விஷயத்தில் அபராதியானபடியால், அவனிடம் போய் உன்னை மன்னிக்கும்படி அவனை வேண்டிக் கொள். அவன் உன்னை மன்னிப்பனாயின், உனக்கு அதுவே நல்வழிக்கேதுவாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே மாதவன் சென்று நித்யானந்தரடிபணிய, அவர் எப்பொழுது இவ்வித கட்டளை ஸ்வாமியிட மிருந்து வருமோவென்று காத்திருந்தவராதலால், உடனே "மாதை குற்றமனைத்தையும் மன்னித்தது மன்றி, அவனை யெனக்குரிய நண்பராய்க்கொண்டனன்" என்று அங்கிருந்தோ ரெல்லோருங்

கேட்கும்படி யுரத்துக்கூவி, மாதையை யழைத்துத் தன்தோளிறுகப்புல்லிக்கொண்டார். நித்யானந்தர் தேகஸ்பரிஸம் பட்மாத்திரத்தில் மாதை மூர்ச்சையாய்த் தரையில் விழுந்தனன். ஜகையையும் மாதையையும் அங்கு விட்டு, ஸ்வாமிகள் திருக்கூட்டத்தாரோடு வீட்டிற்குத் திரும்பிவந்தனர்.

வீட்டிற்குவந்து அனைவரு மிளைப்பாறிக்கொண்டிருந்த சிறிதுநாழிகையில், யாரோ தெருக்கதவைத்தட்டுவதாய்க்கேட்டது. உடனே, வந்தவர்கள் ஜகையும் மாதையுமென்று தெரியவந்தது. உள்ளே யவர்களை யழைத்துவரும்படி முராரிக்குஸ்வாமிகள் ஆக்ஞாபித்தனர்கள். மாதையும் ஜகையும் உள்ளே வந்து, ஸ்ரீகௌரங்கரைத் தரிசித்தலும், மூர்ச்சையாய் விழுந்தார்கள். ஸ்வாமிகள் நித்யானந்தரைநோக்கி “உனக்கு இவ்விருவரையுங் காக்க வேண்டுமென்னும் விருப்பமிருந்து என்னிடமிருந்தும் பெற்றபடியால், நீயே யிவர்களை யழைத்துக்கொண்டு கங்கைக்குச்சென்று, ஸ்நானஞ்செய்வித்து ஹரிநாமமந்தர முபதேசிக்கக்கடவை!” யென்று கூறினர். உடனே நித்யானந்தரும், மாதை ஜகை யென்கிற இருவரையுமழைத்துக்கொண்டு, வழியெல்லாம், அளவளாவிப்பேசி “நண்பர்களே! உங்களுக்கின்றைக்கு ஹரிமந்த்ர முபதேசிக்கப்போகின்றேன். மாதவனே, நீ யென்னை யடித்ததை மனதிலெண்ணி யெண்ணி வருந்தாதை! நீ யென்னை யடித்தற்குப் பதிலாக உனக்கு இன்றைக்கு ஹரிமந்த்ரமுபதேசித்து ப்ரேமை யுண்டாக்குகின்றேன்! அன்பனே! நீ சிறிதும் வருந்தாதை! நீ இவ்வளவு கொடுமை-விளைத்தாய் என்று மனங்கலங்காதை! என்னையடித்ததற்காக மனமேங்காதை! என்னைவைது வசைகூறிய வாய்க்கு கிருஷ்ண நாமோச்சாரணஞ் செய்யும் பலன்கொடுக்கிறேன்; என்னை அடித்த கைகட்கு அவனைப் பூசைசெய்யும் மேன்மைதருகிறேன்! என்னை யுதைத்த காலுக்கு, அவன் பால் செல்லும் சிறப்பு செய்விக்கிறேன் என்று சந்தோஷப்படுத்தினார். கங்கையாற்றில் பக்தர்களெல்லோரு மொன்றுசேர்ந்து, விளையாட்டாய் குதித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும் ஒருவர் மீதொருவர் ஜல மிறைத்துக்கொண்டும் இருந்தார்கள். இந்த

சந்தர்ப்பத்தில் ஸ்ரீகௌரங்கரெழுந்தருளி அனைவரையுங் கூவாதிருக்கச் சைகைசெய்தவுடன், எல்லவரும் மௌனமாயிருந்தார்கள். அப்பொழுது நித்யானந்தரை நோக்கி, ஸ்வாமிகள், “அன்பனே!

‘குலந்தருஞ் செல்வந்தந்திடு மடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினு மாயினசெய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்,’

என்று சர்வத்ராளும் ஸ்ரீஹரிநாம மஹிமையை யறிந்துய்யுமாறு மாதைக்கும் ஜகைக்கும் அந்த நாமத்தை யுபதேசஞ் செய்தருள்க” என்று உரத்தகுரலாற் சொல்லினர். அஃதான பின்னர் ஜகையையும் மாதவனையும் நோக்கி ஸ்வாமிகள், “நீவிர் பிறந்தித்தனை நாளாய் கணக்கு வழக்கில்லாமல் செய்துகொண்டுவந்த பாபங்களையெல்லாம், தக்ஷணையாகிற செப்பு நாணயத்துடனும், துளஸி தளத்துடனும் கங்கா ஜலத்துடனுமெனக்குத் தத்தஞ் செய்துகொடுத்துவிடக் கடவீர்” என்று கூறினார். அதற்கு அவர்கள் சிறிதும் சம்மதியாது, “நாங்கள் செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்துப் பிராணபிக்ஷை தந்தருளிய எம்மானுக்கு வெகுமதியாக நாங்கள் செய்த பாவங்களை யெல்லாங் கொடுத்தால், அஃதைவிட வேறுபாவ மெங்கேனு முண்டா? யாங்கள் செய்தபாவம் போதாதா! ‘பாம்புக்குப், பால் வார்க்கவார்க்கப் படுவிஷத்தைக்கொடுப்பது’ போலும், தீயில்விழுகின்ற தேளை வெளியெடுத்து விடுகின்றவரையே அஃது கொட்டுதல் போலும், உபகாரஞ் செய்வோர்க்கு அபகாரந் தேடித்திரியும் அதமர் போலும், உண்டவீட்டுக்கு இரண்டகஞ் செய்யும் மிண்டர் போலும், கொடிய சண்டாளர்களாகிய எங்களுக் கிவ்வளவு மேன்மைதந்து மிடிதீர்த்த மேலோனுக்கு, இவ்வுபகாரந்தானா செய்யல் வேண்டும்? இதுதானா கைம்மாறு? இவ்விஷயத்தில் பெருமானுத்தரவுக்கு யாமிணங்கோம்! ஒருக்காலும் நாங்களவ்வாறு செய்யோம்” என்று சொல்லி மறுத்தனர். எம்பெருமான் அதற்குச்சிறிதும் காது கொடாது, மீண்டும் தான் கேட்

டதையே கேட்டுக்கொண்டிருக்கவும், நித்யானந்தர் அவ்விரண்டு சகோதரர்களையும் பார்த்து, ஸ்வாமிகள் விருப்பத்திற்கு தடைகூற வேண்டியதில்லை யென்றும், ஸ்வாமிகட்கு எவ்வாறு நடக்கவேண்டு மென்று நன்றாய்த்தெரியுமாதலால், அவ்விஷயத்தில் கிஞ்சிக்ஞர்களாகிய தங்களாக்ஷேபனை சிறிதும் பயன்படாதென்றும் அப்பாவங்களெல்லாம் ஸ்வாமிகளது திவ்ய தேஜோமயமாகிற "தீயினிற்றூசாகும்" என்னும் எடுத்துக் காட்டியதன்மீது, மாதையும் ஜகையுமொப்புக்கொண்டார்கள். ஸ்வாமிகள் கேட்டபிரகாரம், ஜகையும் மாதையும் தங்கள் பாவங்களைக் கூண்டோடே ஸ்வாமிக்குத் தத்தஞ்செய்து கொடுக்க, ஸ்வாமிகளும் அதை மனமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார். வீடு திரும்புகாலை, ஸ்வாமிகளுடனிருந்தோர், அவர்தேகம் கறுத்திருக்கக்கண்டனர்கள். இஃது மேற்படி இரண்டு சகோதரர்களி பற்றிய பாவங்களை ஸ்வாமிகள் அங்கீகரித்ததற் கேற்றவறிகுறியாமென்று அனைவரு முணர்ந்தனர்.

ஜகையும் மாதையும் தங்களிருப்பிடஞ் செல்லாது ஸ்ரீ பாஸர் வீட்டிலேயே தங்கியிருந்தனர். பக்திப்ரேமை யளவு கடந்து மீதூர்ந்திருத்தலின் அவர்கள் கீர்த்தன சந்தர்ப்பங்களில் தம்மை மறந்து நடமிட்டார்கள். அவர்களைப்பார்த்த சகலரும், "இஃதென்னை விநோதமாயிருக்கிறதே! ஜகைதான் சிறிது இளகினமனமுடையோனாதலின், அவன் நிருத்தனஞ்செய்வதையுமொருவாறு சாதாரணமாய்க்கொள்ளலாம். ஆயின் கன்னெஞ்சம் படைத்துக்கண்டோரைத் துண்டந் துண்டமாய் வெட்டிக்கொண்டிருந்த சண்டாளனாகிய மாதையும் உண்மையடியானாய்த் தன்னைமறந்து ஆடிப்பாடுகிறானே! ஐயன் மகிமையை யாவர்தானறிவர்?

'உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவரன்னவர்க்கே சரணாங்களே' "

என்று துதிசெய்து போருவார்.

மாதையோ, "யான் என் செய்வேன்! வீணாரவாரம் விளைத்து அங்குமிங்கும் எங்கும் துன்மார்க்கத் தொழில் செய்து, எத்தனை பேரைக்கொன்றும், எத்தனைபேரையடித்தும் உதைத்தும் வதைத்தும், ஈனத்தொழில் புரிந்தேன்" என்று புலம்புவான் ஒருவேளை! "எனக்கு ஊணும் வேண்டாம், உடையும் வேண்டாம், உறக்கமும் வேண்டாம்! யான் எவ்வெவருக்குக்கெடுதி விளைத்தேனோ, அன்னோ ரெல்லாரும் ஒவ்வொருவரா யென்னெதிர் தோன்றுகின்றனரே" யென்று அலறுவான் ஒருவேளை! எனக்குப் பெருமானா ரருள்புரிந்தாராயின், அதனாலென்ன! நான் செய்த பாவத்தொழிலே யென்னை வருத்துகின்றதே! யான் போசனங்கொள்ளேன் கொள்ளேன்" என்று அழுவான் ஒருவேளை.

இவ்வாறு ஸ்வாமிகள் திருவருளைப் பூரணமாய்ப் பெற்றிருப்பினும், மாதவனுக்கு, தான் முன்னர் செய்த தீவினைகளே பெருவினையாகி அவன் கவனத்திலடிக்கடி தோன்றி அவனைவருத்திக்கொண்டு வந்தது. அவன் எந்நேரமும் உண்ணாமலும் உறங்காமலும் கண்ணீர் பெருக்கிக் கதறி யோலமிட்டழுதுகொண்டிருப்பான்; யாவர் சமாதானஞ் சொல்லினுங் கேளான். இவ்வகை உடலிளைத்து என்புதோன்றி நெக்கு நெக்குருகி மாதை வருந்துவதைக்கண்ட நித்யானந்தர் மனந்தாளாதவராய், ஸ்வாமிகளிடம் நடந்த சங்கதிகளை விண்ணப்பித்து முறையிட, ஸ்வாமிகள் மாதையைநோக்கி "அன்பனே! நீயேன் மனம் வருந்துகின்றனை? உன் பாவங்களையெல்லாம்மன்னித்துநானேற்றுக்கொண்டிருக்க உனக்கேனின்னும் துயரம் பெருகிக்கொண்டிருக்கின்றது? நீயிவ்வாறு உண்ணாமலு முறங்காமலும் வருந்துவதால் நித்யானந்தனுக்கு மனவேதையுண்டாயிருக்கின்றதே" யென்றுகூறினர். மாதை பெருமானடி பணிந்து, "பெருந்தகையீர்! எம்குறை கேட்பீர்! சண்டாள சண்டாளனாகிய கொடும்பாவியேன் மீது, நுமது தண்ணருள்மாரிபெய்து பாவனனாக்கினும், நும் அன்பே யென்னை வருத்துகின்றது! சொல்லிமுடியாத மேற்படி துஷ்கிருத்தியங்களையியற்றின நான், மூவுலகையும் படைத்தளித்தழிக்கும்

முதல்வனாகிய நும்மருளைப் பெறுவதற்குப் பாத்திரனே!" என்று பலவாறு பிதற்றி, ஸ்வாமிகளெதிரில் அவர்கட்டளையைத் தடுத்துக் கூறமனம்வராது, தன்துயரத்தை யெல்லாமொருவாறடக்கிச் சிறிதுபோசனஞ் செய்தனன்.

ஆயினும் மாதையுடையதுயரம் நாளுக்குநாள் விர்த்தியாகிக்கொண்டேவந்தது. தன் துன்பத்தைப் பொறுக்கவன்மையற்றவனாய், மாதை ஓர் நாள் தன்குருவாகிய நித்யானந்தரை நோக்கி, "பவபந்தமாகிய கடலினின்றும் என்னைப்பிழைப்பித்தருளிய பேரருளாளரே! என் மனக்குறையை யெவ்வாறு சொல்லியாற்றுகேன்! ஸ்வாமிகள் திவ்யகருணா விலாஸம் என்மேற் படனும், நான் முன்செய்த தகாநடக்கை யெல்லாம் என்கண்ணெதிரில் விசதமாய்த்தெரிகின்றது. எத்தனை பெண்டிரைக் கற்பழித்து, இணங்காதவரை வதைசெய்தேனே! எத்தனை சிசுஹத்தி செய்தேனே—ஆ ஹா ஹா எத்தனை பிரமஹத்தி கோஹத்தி! அவைகளெல்லாம் சிலமறைந்தும் சிலவிவரமாயும் என் மனக்கண்ணிற் புலப்படுகின்றன. அவர்களிடம்சென்று, அவரடி பணிந்து, அவர் என் மீது விதிக்குந் தண்டனையேற்று, அவர் என்னை மன்னிக்கும்படி அவரை யிரந்து, அவர் என்னை மன்னித்த பின்னர்தானென்மனம் கடைத்தேறும்; ஆயின், நான் இன்னாரை வருத்தினேன் என்று செம்மையாய் என் ஞாபகத்திற்குவாராததால், இவ்வூரிலுள்ள கங்கையாற்றின் ஸ்நானகட்டத்திற்குச்சென்று, அங்கு ஸ்நானத்திற்கு வருவோரடிபணிந்து அவரருள் பெறுவேன்" என்று கூறி நித்யானந்தருத்தரவுபெற்று, ஸ்ரீபாஸர் வீட்டைவிட்டு ஆற்றிற்குப் போகும் வழிதொடர்ந்து ஸ்நானகட்டத்தை நோக்கிச் சென்றனன்.

மாதையென்னும் புலியால், அவ்வூர்ச் சனங்களாகிய ஆடுகள் பெருங்கிலியடைந்திருந்தாராதலின், அவன் இப்பொழுது சுத்த சாத்விகமும் மிக்கபுத்தியும் ஏற்றிருந்தாலும், அவனை நெருங்கிச்செல்ல அனைவோரும் பயமுற்றிருந்தனர். அருகிற்போகும் வரையும் எங்கு "பரமதயாளக்கொக்கு," போன்று கண்மூடி மௌனம் பூண்டு, தன்கைக்கெட்டின மாத்திரத்தில் பிடித்து வதைப்பனோ என்று பலர் அஞ்சினர். ஆயினும் சிக்கிரத்தில் மாதவனுடைய உண்மை நிலைமை யனேகருக்கு வெளியானது. யாவராயினுமொருவர் மாதவன் மீது கல்லெடுத்துப் போட்டால், "நாம்செய்த பாதகத்திற்கிஃது சரிதான்" என்று புன்சிரிப்புடன் மகிழ்வுறுவன். ஸ்நானத்திற்குவருவோரடிபணிந்து "ஐயன்மீர், நானிவ்வூர்க்கொத்தவாலாயிருந்த மாதவனென்போன்; யான் உங்களுக்கேதாயினுந் துன்பமியற்றினேனோ இல்லையோ யாதொன்றுந்தெரிகிலேன். என்னை யாது தண்டனைக்குட்படுத்தவேண்டுமோ அதற்கு யான் பூரணமனதுடன் உடன்படுவேன்; என்மீது நும் திருவடித்தாமரைகளைப்பதித்து என்னை மன்னித்தல் வேண்டும். ஸ்வாமிகள் எனக்கருள் சுரந்திருப்பினும், நீவிர் என்னை மன்னித்தோ அல்லது தண்டித்தோ அல்லது கண்டித்தோ, என்மனதில் விளைந்திருக்கும் கஷ்டத்தை நிவிர்த்தி செய்தால்தான் என்மனம் மகிழ்வெய்தும்" என்று கெஞ்சிக்கேட்பன். இவ்வாறு நடந்துவருவதைக்கண்டு அந்நகரத்தோர் பெரிதும் ஆச்சரியமடைந்து, மாதையை வருத்துவதை நிறுத்தினர். மாதையும் பக்தியாகிற விதையை விதைத்து, அனேகரைக் கடைத்தேற்றிக்கொண்டு வந்தனன். மாதை தன்கையாலேயே மண் வெட்டியெடுத்து, "மாதவகட்டம்" என்றோர் ஸ்நானவமைப்பிடம் ஏற்படுத்தினன். மாதையுடைய வம்சஸ்தர்கள் இப்பொழுதும் ஸ்ரீகௌரங்க ஸ்வாமிகளைப் பணிந்துகொண்டு உயிர் வாழ்கின்றனர்.

ஒன்பதாவது அத்தியாயம்.

காஜிகர்வபங்கம்.

ஜகையையும் மாதையையும் நல்வழிக்கிழுத்து, பக்திமான்களாக்கிய பின்பு, ஸ்வாமிகளுடைய மகிமை யெங்கும் பரவிவந்தது. நாலு மூலைகளிலிருந்தும் ஸ்வாமிகளைச் சேவிக்க ஆயிரக் கணக்காய் ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். தீராப்பிணியாளரை நோய் தீர்வித்தும் சிலகாலங்களில், செத்தோரை யெழுப்பியும், சாருந்தருணத்திலிருப்போரைப் பூரண சௌக்கியமடையச்செய்தும், ஸ்வாமிகள் தன் சர்வ சக்தியை வெளிப்படுத்திக்கொண்டுவந்தார். ஆயினும் சாதாரணமாய் நோய் தீர்க்கும் வேலையை ஸ்வாமிகளே கவனியாது, அதைத் தன்னுண்மையடியார்க்கு நியமித்திருந்தனர். ஸ்வாமிகளைத்தெரிசிக்க விரும்பினோர், ஸ்வாமிகளிருந்த கிரகவாயிலினிருபக்கலிலும் வரிசையாயுட்கார்ந்து கொண்டிருப்பார். ஸ்வாமிகள் ஸ்நாநத்திற்குச்செல்ல வெளிவரும்போது, அவர் திருவடித்தாமரைகளிற் பணிந்து பிணியாளர் தம் குறை நீங்கிச்செல்வர்.

ஸ்ரீகௌராங்கஸ்வாமின், தன்னடியார்கள் பக்குவமடைந்திருப்பதற் கேற்ப முறையே சுலபவிஷயங்களையும், கடினவிஷயங்களையும் போதித்து வந்தார். ஸ்வாமிகள்திருவருள் பெற்று, பக்திப்ரேமை யென்பவைகளைப்பற்றி அவரடியாராகிய பெரியோர்கள், தத்துவ சாஸ்திரங்களெழுதி யிருக்கின்றனர்கள். அவைகளில் விளக்கியுள்ள புத்திநுட்பங்களைப் பார்க்கின், இப்பொழுது ஒவ்வொருவரும் ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

பக்தியென்பது நவத்வீப பட்டணத்தைப் படையெடுத்துத் தன்வசமாக்கியதால், ஸ்வாமிகளுடைய பக்தர்கள் அந்நகரத்திலனேகரேற்பட்டு, எங்குபார்த்தாலும் கீர்த்தனைகோஷ்டிகள் உண்டாகி, சமுத்திர இரைச்சலுந் தோற்கும்படியான நாதத்தை விளைத்து வந்தது. அந்த பட்டணத்தில், ஸ்வாமியின் பக்தர்கள் எண்ணிறந்தோரிருப்பினும், அனேகம் பேர்களுக்கு ஸ்வாமியின் மகிமை தெரியாமல் ஊனக்கண்ணடைந்திருந்தனர். மாதையும் ஜகையும் கடைத்தேறியகாலத்தில் நிகழ்ந்த அற்புதங்களை யனேகர் பார்த்திருக்கினும், அவரினும் பதின் மடங்காகிய மானிடர் அவைகளைக்கண்டிலர்; கேட்கினும் நம்பினாரில்லை. எவ்வளவோ விசேஷமாய்ப் பலபேர் ஸ்வாமிகளைப்பற்றிப் பேசுவதைக்கேட்டு பரிசோதிக்கலாமென்றாயினும் அவர்பால் நெருங்கியிருப்பின், அவர் மகிமையைப் புலனோடு கண்டுணர்ந்தறிந்து வழிப்படலாகும். அன்னோரவ்வாறு செய்தாரல்லர். பொச்சாப்பென்பதையே தாம்மெச்சும் அணிகலனாய்ப் பூண்டிருந்ததாலும், அவர்களிலனேக பிராமணர் (தற்காலத்தைப்போன்றே அப்பொழுதும்) ஏழைசனங்களை வஞ்சித்துப் பிணம் பிடுங்கும் கழுகுபோன்று அவரிடம் காசு பறித்து, ஜீவித்திருப்பதற்கு ஸ்வாமிகள் பெருந்தடையாயிருந்ததாலும், ஸ்வாமிகள் பக்தியமுதத்தை பிராமணர் மாத்திரமேயன்றி,

> “பாதியா யழுகிய கால் கையரேனும்
> பழிதொழிலு மிழிகுலமும் படைத்தாரேனு
> மாதியா யரவணையா னென்பராகி
> லவரன்றே யாம் வணங்கு மடிகளாவார்
> சாதியா லொழுக்கத்தால் மிக்கோரேனும்
> சதுமறையால் வேள்வியாற் றக்கோரேனும்
> போதினான் முகம் பணியப் பள்ளிகொள்வான்
> பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே”

யென்கிறபடி சண்டாளராயினும் பகவத்பக்தி யுடையோராயின், பெறலாகு மென்று போதித்துவந்ததால், பிராமணர்களுக்கு சாதிவிசேஷ கௌரவம் குறைந்ததாய் தோன்றியபடியாலும், அவர்கள் அந்நகரத்தில் மகம்மதியகவர்னராயிருந்த காஜியிடம் சென்று, கௌராங்கஸ்வாமிகள், ஹிந்துமதத்திற்குவிரோதமாய் துர்ப்போதனைகள் செய்கிறாரென்றும், நகர் முழுதிலும் காதடைபடும்படி கீர்த்தனை கோஷ்டிகள் சேர்ப்பித்து, சனங்

களுக்குக் கஷ்டம் விளைக்கிறாரென்றும், பலவாறு பொய்பேசி அவனுக்குக் கோபம் மூட்டினர்.

ஏற்கவே ஹிந்து மதவிஷயத்தில் மிகப்பிரியமாயிருக்கும் மகம்மதிய அரசனிடம் ஹிந்துக்களை கோட்சொல்ல வாரம்பித்தது, அவனுக்கு நல்லசந்தர்ப்பமாகி, தன்னேவலாளரிற் சிலரையனுப்பி கௌரங்கருடைய கீர்த்தனைகளை நிறுத்தும்படி கட்டளை செய்தனன். ஒருபுறத்தில் கீர்த்தனை கோஷ்டிகளையடக்கினால், மற்றோர் புறத்தில் கிளர்வதும், அங்குசென்று அதையடக்கினால், இன்னுமோர் பக்கத்திலுண்டாவதுமாகி யடங்காதிருந்ததால், ஸ்வாமிகட்கு விரோதிகளாயிருந்தோர் மறுபடியும் காஜியிடம் சென்று இவ்விஷயத்தில் அதிககவனம் வைக்கும்படி அவனைத் தூண்டினர். அவன் அதற்கிணங்கி ஆயிரக்கணக்காய், துருக்க சிப்பாய்களை யழைத்துக்கொண்டு வந்து பக்தர்களை யடித்தும், தாளங்களைப் பிடுங்கியெறிந்தும் ம்ருதங்கங்களை யொடித்தும் பலவாறாகத் துன்பப் படுத்தினான். (ம்ருதங்கம் (கோல்) ஒடித்த இக்காரணங்கொண்டே அப்பட்டணத்தின் ஒரு பாகத்திற்கு 'கோல்பங்க்' என்று பெயர் வழங்கிக்கொண்டுவருகிறது) ஆயினும் ஸ்வாமியின் பரமபக்தர்கள் அவன்பாலகப்படவில்லை. இவ்விதம் துன்பப்படுதலால், பக்தர்கள் பெரிதும் மனங்கலங்கி, ஸ்வாமிகளிடம் முறையிட, அவர் பக்தர்களைநோக்கி "அன்பர்காள், நீவிர் முழுநம்பிக்கையுடன் ஸ்ரீ கிருஷ்ணன் திருவடி பணிந்தால், உம்மைக்காப்பது அவர்கடனாயிற்றே!" என்று தைரியஞ் சொல்லினர். இதனால் உற்சாகமூட்டப்பெற்ற மெய்யன்பர், ஆனந்தக்கடலிலாழ்ந்து,

> "எந்நா ளெம்பெருமா னுன்றனக் கடியோமென் றெழுத்துப் பட்ட
> அந்நாளே யடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்தது காண்
> செந்நாடோற்றித் திருமதுரையிற் சிலைகுனித் தைந்தலையப்
> பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே யுன்னைப்பல்லாண்டு கூறுதுமே"

என்று கீர்த்தனஞ் செய்ய, இதைக்கேட்டவிந்த காஜி யதிகுபிதனாய், முன்போலவே ஆயிர மாயிரக்கணக்காய் துருக்க சிப்பாய்களை யழைத்துக்கொண்டு பக்தரை வருத்தக், கூற்றம் வருவதுபோலவரெதிர் தோன்றினன். ஆயினும் பக்தர்கள் பயந்தெதிர் பார்த்த வண்ணம் பெருந்தீமை விளைக்காதவனாய், அவன் ஊக்கமில்லாதவன் போல் மனம் மாறுபட்டு நடந்து, வெகு சொற்பகெடுதி செய்து நீங்கினன். இரண்டாந்தரம், காஜிவந்து வருத்தியதால், அன்பர்கள் மனம்புண்ணாகி வருந்தி, ஸ்வாமிகளிடஞ்சென்று அவர் திவ்யசரணாரவிந்தம்பணிந்து, நடந்ததைக்கூறி,

> "நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
> எண்ணாராத்துயர் விளைக்கு மிவையென்ன வுலகியற்கை
> கண்ணாளா கடல்கடைந்தா யுனகழற்கே வரும்பரிசு
> தண்ணாவா தடியேனைப்பணிகொண்டாய் சாமாறே"

என்று ஒவ்வொருவரும் பிரார்த்தித்தனர். இஃதைக்கேட்ட மாத்திரத்தில் ஸ்வாமிகள் திருமுகமண்டலம், எல்லோரும் பார்த்தச்சப்படும் படியான பயங்கர ஸ்வரூப மடைந்தது; அவர், பக்தர்களை நோக்கி, "கீர்த்தனை நிறுத்தக் காஜி முயல்கின்றனனா? ஆகட்டும், நானே யின்றிரவு கீர்த்தனைக்குப்புறப்படுகின்றேன். நீங்களொவ்வொருவரும் தீவர்த்திமாத்திரம் எடுத்துக்கொண்டுஇன்றுபகலிங்குவந்து சேருங்கள். நானின்று கீர்த்தனைக்கு நேரில் புறப்படுவதாய் இந்நகர் முழுதும் பிரசித்தஞ் செய்யுங்கள். இன்றைக்கு நான் காஜியையடக்குகின்றேன்" என்று பணித்தனர்.

அக்கட்டளையைச் சிரமீதேற்ற பக்தர்கள் மற்ற அனைவருக்கும் அதை விளம்பரப்படுத்தப் புறப்பட்டுப்போனார்கள். அன்றுமாலை நாலுமணிக்குள் அந்நகரமுழுவதும் எங்குபார்க்கினும் இச்சமாசாரமடிபட்டு, நாலுதிக்குகளிலிருந்தும் ஜனங்கள் ஸ்வாமிகளிருப்பிடத்திற்கு வந்துகொண்டேயிருந்தார்கள். வந்தவர்கள் ஒவ்வொருவரும் மார்பிற் சந்தனம்பூசி மலர்மாலையணிந்து, கரத்தில் விளக்கொன்றைப்பற்றிக்கொண்டு தோன்றினர். தகப்பனாயினும் பிள்ளையாயினும், ஒவ்வொருவர் கையிலும் விளக்குமாத்திர மில்லாமலிருக்கவில்லை. செல்வவந்தர்கள் விளக்குப்பிடிப்பதற்கென்று, ஆயிரக்கணக்காய் ஏவலாளரைக் கூலிக்கழைத்துக்கொண்டு வந்தார்கள்.

ஸ்வாமிகளுடைய விரோதிகட்கு இந்த விளம்பர யிருந்தாலும், கௌராங்கர் புத்திசாலியாதலால், காஜியை திர்ப்பதாலுண்டாகு மபாயங்களைக் கவனியாது வெளிபுறப்ப மாட்டார் என்கிற முழு நம்பிக்கை யவர்கள் மனதிற் குடிகெ ண்டிருந்தது. ஆயினும் ஸ்வாமியின் அடியார்களுக்கு மா திரம் இவ்விஷயத்தில் யாதொரு சந்தேகமுமில்லை. அவ கள், அன்று பகற் பொழுதெல்லாம், பக்தியெண்ணங்களி காலங்கழித்து, மார்பிற் சந்தனம்பூசி மலர்மாலை யணிந்துகெ ண்டு, கீர்த்தனயுத்தத்திற்கு கையில் விளக்குடன் தயாராய் கொண்டிருந்தனர். அந்நகரத்து ஸ்த்ரீகளும் அச் சந்தோட காலத்திற்கியைவனவாகிய, நல்லுடைகளை யுடுத்துக்கொண்டனர். ஸ்வாமிகளே யன்று கீர்த்தனகோஷ்டிகளுடன் காஜியை யடக்குவான், வெளிப்புறப்படப்போகின்றன ரென்கிற சந்தோ டத்தைக்குறிக்க, ஒவ்வொருவரும 'போட்டி'யிட்டுக்கொண்டு, தெருக்களையும் வீட்டுவாயில்களையும் தீபங்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கத்தொடங்கினர்.

"தோரணநடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரணகுடமெங்கும் புனைதுகில் புனைவாரும்
காரணிநெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் கின்னமுதடுவாரும்
அன்னமென் னடையாரும் மழவிடையனையாரும்
கன்னிநன்னகர் வாழை கமுகு கொடிநடுவாரும்
பன்னரு நிரைமுத்தம் பரியனதெரிவாரும்
பொன்னணி யணிவாரும் மணியணிபுனைவாரும்"

ஆக எங்கு பார்த்தாலும் நிறைந்தியங்கி, வாழை கமுகு மு லியமரங்களை வீதி முழுவதும் சாலைகளாக நிறுத்தி நவத்வீப பட்டணத்தை யமராவதிக் கொப்பிடச்செய்தனர்.

நவத்வீபத்தில் ஸ்வாமி விஷயத்தில் பக்தி வைத்திருந்தவர்கள் தொகை சந்தேகிகளைப்பார்க்கிலும் அதிகமாயிருந்ததால், பக்தர்கள் தங்கள் வீடுகளை யலங்கரிக்கலாயினபோது, சந்தேகிகளும் தம்மைத்தாம் மறந்து தம் வீடுகளையு மலங்கரித்தனர். அன்றியும் தகப்பன் விரோதியாயிருந்தால், புத்திரன் பக்தனும், புத்திரன் விரோதியாயிருந்தால், பிதாபக்தனும்,

மூத்த சகோதரன் விரோதியாயிருந்தால் இளைய சகோதரன் பக்திமானும், இளையோன் விரோதியாயிருந்தால் மூத்தோன் பக்திமானும், கணவன் விரோதியாயிருந்தால், மனைவி பக்தியுடையோளாயும், மனைவி விரோதியாயிருந்தால், கணவன் பக்திமானும்,—இப்படி ஒரு குடும்பத்திலேயே ஒரு நிலையில்லாது பலவகைப்பட்டிருந்ததால், ஒருவரும் பெரும்விரோதம் பாராட்டவியலாது நிகழ, நவத்வீப பட்டணமுழுவதும் அலங்கரிக்கப்பட்டு லக்ஷ்மிவாஸமாயிருந்தது.

பகற்பொழுது முடிந்துகொண்டே சூரியனஸ்தமிக்குந் தருணத்தில் ஸ்வாமிகள் வீட்டருகில் வந்து சேர்ந்த ஜனங்களுக்குக் கணக்கு வழக்கு கிடையாது. வீட்டிற்குள் இடம் போதாமையால், வீட்டின் வெளியில் ஆயிரமாயிரக்கணக்காய், ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் அதிக மகிழ்ச்சியால் "ஹரிபோல்", "ஹரிபோல்" என்று கோஷஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

ஸ்வாமிகள் வீற்றிருந்த அறையில், கதாதரர், நரஹரி, இன்னுஞ் சிலரும் அவரை யலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகள் மணப்பெண் மாதிரியாய்க் கண்ணாடி யெதிர் உட்கார்ந்திருக்க, அவருக்கு கிருஷ்ணகொண்டைகட்டி, சந்தனம் பூசி, வெகு சுந்தரமான நீண்ட மலர்மாலை யணிவித்தார்கள். இத்தனைநாழிகை பரியந்தம், வெளியினின்றும் "ஹரிபோல்" என்கிற சப்தம் கேட்டிருக்க இப்பொழுது வீட்டிற்குள்ளிருந்து "ஹரிபோல்" என்கிற சப்தம் உண்டானதை வெளியிலிருந்தோர் கேட்டார்கள். இதனால் ஸ்வாமிகள் புறப்பட்டுவிட்டாரென்று அவர்களுக்குத் தெரியவந்தது. ஸ்வாமிகள் வெளியில் வந்ததும் ஒருபெரிய ஹுங்காரம் செய்தார். அனைவரும் யாதொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லையென்று தைரியஞ் சொன்னதாக அஃது தோன்றியபடியால், பயமென்னும் ஐயத்தினின்றும் எழுந்து பக்தர்களனைவரும் ஆனந்தகோஷஞ்செய்தனர்.

உடனே தீவர்த்திகளெல்லாங் கொளுத்திவிடவும், அது இரவென்று யாவருக்குந்தோன்றாது பகலாகவே காணப்பட்

டது. கீர்த்திகளாகிற சூரியனால் ஸ்வாமிகள் திருமுகத்தாமரை விகசித்து, மன்மதன் வெருண்டோடும்படியான அழகுடன் கோபக்குறியமைந்திருந்தது. அவ்வூரா ரெல்லோரும், "இஃதென்னமோ தேவகாரியமாயிருக்கிறது! தோற்றமும் தேவத்தோற்றமே! கௌராங்கர் கடவுளர் தாமோ" வென்று நினைத்தனர். வேறு சிலர், "இஃதென்னே? மனிதராலாகுங்காரியமா? இத்தனை மனிதர்களை யாவர் கொண்டுவந்து ஒன்று சேர்க்கக்கூடும்?" என்று துதித்தனர். ஸ்வாமிகளுடைய விரோதிகட்கும் புத்தி வந்து, "தகாத காரியத்திற் றலையிட்டுக்கொண்டோமே! சசிதேவியின் குமாரர் காஜியை யெதிர்க்கவாவது, புறப்படவாவது, என்று நகைத்தோமே! ஜனங்கள் கூடிக்கொண்டிருந்தது இப்பொழுது சரியாய் நிகழ்ந்ததே! இங்கிருக்கிற லக்ஷக்கணக்கான ஜனங்களைக் காஜிதானென்ன செய்யக்கூடும்? அவனுடைய போர்வீரர்கடா னென்ன செய்யக்கூடும்?" என்று சிந்தித்துக்கொண்டிருக்க, அவர்களும் ஸ்வாமியின் அபாரகருணா மாஹாத்ம்யத்தால் பக்தர்களாகி கோஷ்டியிற்கலந்து சென்றனர்.

முதலில், ஸ்வாமிகள் நான்கு கீர்த்தனை கோஷ்டிகளை நியமித்தார். முதலாவது கோஷ்டிக்குத் தலைவராக அத்வைத ஸ்வாமிகளையும், இரண்டாவதற்கு, ஸ்ரீபாஸரையும், மூன்றாவதற்கு ஹரிதாஸரையும், அமைத்து, நான்காவது கோஷ்டியை ஸ்வாமிகள் தன் வசத்திலேயே வைத்துக்கொண்டார். பிறகு, நூற்றுக்கணக்காய் கோஷ்டிகள் ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொரு கோஷ்டியிலும் இரண்டு ம்ருதங்கங்களும், சுமார் பன்னிரண்டு பாடகர்களுமிருந்தனர்கள். முதலில் அத்வைதர் கோஷ்டி பாடிக்கொண்டே சிறிது நகர்ந்ததும், ஸ்ரீபாஸர் கோஷ்டியந்த விடத்தில் வந்தது; அது சிறிது நகர்ந்ததும் ஹரிதாஸர் கோஷ்டியாங்கு வந்தது; அது போன பின்னர், இருபத்துநான்கு வயதான அதிசுந்தர ஸ்வாமிகள், உயர்ந்த பட்டாடையுடுத்து மலர்மாலை யணிந்து, பார்ப்போர் கண்ணிறையும்படிப் பாடிக்கொண்டே புறப்பட்டனர். கத்தி முதலிய ஆயுதபாணிகளாயிருந்த ம்ருகங்களுக்கொப்பான துருக்கப் போர்வீரரை யெதிர்க்க, மலர்மாலை பக்தி சித்சக்தியாயுதங்கள்பூண்டு ஸ்வாமிகளும் அடியாரும் சென்றனர்!

ஸ்வாமிகளே நேரில் புறப்பட்டுக் கீர்த்தனை செய்யப் போகிறாரென்று அவர் சத்துருக்கள் நம்பாதிருந்ததால் அந்த விஷயத்தை அவர்கள் காஜிக்குத் தெரிவிக்கவில்லை. "இந்த பைத்தியம்பிடித்த போலிப் பக்தர்களும் அவர்கள் தம் கடவுளென்று மதித்திருக்கிற கௌராங்கரும் இன்று நல்லகாலமாய் காஜி வசப்பட்டுத் துன்ப மனுபவிக்கப்போகிறார்கள். 'பட்டால் தான் தெரியும் பறையனுக்கு' என்கிற விதமாய் இவர்கள் அடியுண்ட பின்னர் தான் புத்திபெறுவார்கள்" என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆயினும் நூறாயிரக் கணக்காய் ஜனங்கள் விளக்கேற்றிச்செல்வதையும், ஸ்வாமிகளுடைய திவ்ய தேஜஸையுங் கண்டு, நாம் முன் சொன்னபடி ஆனந்தப்பட்டு, பக்தி பரவசராய் தாமும் கோஷ்டியில் கலந்தனர்.

கோஷ்டியிலிருந்த பக்த ஜனங்கள் தம்மைத்தாமறந்து,

"மைபறவி லாதுகடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுகெடு நாட்டு
ஐயர்மிக வுய்யும்வகை யப்பர்வினை யாட்டு
ஆடுவதென் றேமறைகள் பாடுவதுன் பாட்டு
ஐயருட் சோதியர சாட்சியென தாச்சு
ஆரணமு மாகமமும் பேசுவதென் பேச்சு
எய்யுலக வாழ்விலெனக் கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு
ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்
எதிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடமேத் தெய்வமணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்
வதுசொன்ன பேர்களுக்கு வந்ததுவாய்த் தாழ்வு
மற்றவரைச் சேர்ந்தவர்க்கும் வந்ததலைத்தாழ்வு
வதுபுச மாடகம்பால் வந்ததருள் வாழ்வு
மற்றநமைச் சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல் வாழ்வு
அம்பலத்தி லெங்களைய ராடியாடல் லாட்டம்
அன்பொடு துதித்தவருக் கானதுசொல் லாட்டம்

வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமன்றி வந்ததுபல் லாட்டம்
நாத்திகஞ்சொல் கின்றவர்தம் நாக்குமுடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவது நாறியபிண் ணுக்கு
கீர்த்திபெறு மம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திரு வாக்கு,"

என்று ஸ்வாநுபவத்தைக் கீர்த்தனையாகப் பாடிச்சென்றனர். ஸ்வாமிகள் நிருத்தஞ்செய்வதும், சிறிது நேரம் மூர்ச்சையாய் விழுவதும், மறுபடியு மெழுந்து பாடியாடுவதுமாக பக்தி யமுத மனைவர்க்கு மூட்டிச்சென்றனர். இக்கீர்த்தனா சந்தர்ப்பத்தில், ஒருவர்முக மொருவர்க்குத்தெரியாத அயலோர்கள் ஒருவரையொருவ ரணைத்துக்கொள்வதும், சிலர் உட்கார்ந்துகொண்டு ஓயாம லழுவதும், சிலர் உடம்பெங்கும் மண்ணைத் தடவிக்கொண்டு அதுவே க்ருஷ்ணனுக்குப்பிரீதி யென்றானந்தப்படுவதும், சிலர் சிரமீது கைகூப்பிக் கூத்தாடுவம், சிலர் கண்டோர் காலிலெல்லாம் விழுந்து நமஸ்கரிப்பதுமாக அப்பட்டணமெங்கு மானந்தமயமாயிருந்தது.

வேறு சிலர்க்குப் பைத்தியம்போலுண்டாகி, மரங்களின் மீதேறி, கைகாலொடியுமே யென்னுங் கவனமிலராய்க் குதிப்பது முதலாகிய செய்கைகளை யியற்றிக் கொண்டிருந்தனர்கள். "ஸ்வாமிகளிங்கு வந்திருந்ததால், யமன் நம்மை யென்ன செய்யக்கூடும்!" என்று சிலர் யமனைப்பிடிக்க வோடுவார்கள்.

இப்படியனேகர் தாங்கள் போகும் காரியத்தை மறந்தாராயினும், சிலர் மாத்திரம் அதை மறவாதாராய், மரக்கிளைகளை யொடித்துக்கொண்டு, அதனால் தம்மெதிரிகளை யடித்துக்கொல்லத் தீர்மானித்து, வீராவேசமாய்ச்செல்வார்கள். இவர்களிற் சிலர் எதிரிகள் தம்மெதிரிலிருப்பதாய்ப் பாவித்துத் தாம் கையிற்றாங்கி யிருக்குங் கிளைகளாற் றரைமீது மோதுவர். வேறு சிலர், "எதிரிகளை விலங்கிட்டு ஸ்வாமிகளெதிரிற் கொடுவந்து விடுவோம்" என்று முன் போவர்.

ஸ்வாமிகளுடைய விரோதிகளா யிருந்தோர், நடப்பதையெல்லாம் பார்த்து, "நாம் மூட்டாள் வேலை செய்தோமே; இனியென் செய்யக்கூடும்?" என்று வருந்தினர்கள்; ஸ்வாமி விஷயத்தில் தங்களுக்குசித்த பக்தியல்லாமல், அவர்கள் பந்துக்களும், சிநேகிதர்களும் ஸ்வாமி விஷயத்தில் அத்யந்த பக்தியுடையோரா யிருப்பதைக்கண்டு, "எல்லோர்க்கும் கஷ்டம் வருவித்தோமே" யென்று மனம் நொந்தார்கள்.

இவ்வாறு ஸ்வாமிகள், அலங்கரித்துள்ள திருவீதிகளின் வழியாய் பார்போ றெல்லோரும் பல்லாண்டு பாடச் சென்றனர். முரட்டுத்தனம் பிடித்த துருக்க சிப்பாய்கள் ஆயுதம் பூண்டவராயிருந்ததால், தமக்கு என்ன கெடுதி நேரிடுமோவென்று சிறிதும் பயப்படாதவர்களாய், பக்தர்களனைவரும் ஒரே மனதாய்ச்சென்றனர். காஜி வீட்டிற்குப்போகும் பாதையில் ஸ்வாமிகள் திரும்பினவுடன், அனைவர்க்கும் தாமெந்த எண்ணத்தைக்கொண்டு அங்கு போகிறார்களென்று ஞாபகத்திற்கு வந்தது. அவர்கள் மனம் ஸ்வாமிகள் விஷயத்தில் அதிக பக்தியுடன் ஈடுபட்டிருந்ததால், தம்மைமறந்து "காஜியை யடியுங்கள்" "காஜியை யடியுங்கள்" என்று கதறினர்கள்.

ஸ்வாமிகளியற்றிய மஹா அற்புதங்களில், காஜியைப்பிடிக்கச்சென்ற கீர்த்தனை விஷயமும் ஒன்று தான். காலையில் சில பக்தர்களுக்குத்தான் கீர்த்தனா கோஷ்டியுடன் ஸ்வாமிகள் புறப்படுவாய்த் தெரியவந்தது. அவ்வளவு சீக்கிரத்தில் நகர் முழுவதும் எப்படி யலங்கரிக்க நேரிட்டது? அன்று பகற்போதிலேயே நூறாயிரக் கணக்காய் எப்படி வந்து சேர்ந்தார்கள்? இஃதெல்லாம் மனிதராலாவதற்கு அசாத்தியமான காரியங்களாதலால், ஸ்வாமிகளின் அற்புததிவ்ய திருவருட் சக்தியாலேயே நடந்திருக்க வேண்டுமென்று யூகிக்கற்பாலது என்று ஸ்வாமிகள் திவ்யசரிதை யெழுதிய பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

இவ்வித ஏற்பாடுகளுண்டாகி, கீர்த்தனை கோஷ்டியுடன் ஸ்வாமிகள் தன்னைநோக்கி வருவாரென்று காஜி கனவிலும் நினைத்தானல்லன். ஸ்வாமிகளுக்கு விரோதிகளாயிருந்த ஹிந்துக்களும், இவ்விதம் நடக்கப்போகிறதென்று சந்தேகியாதிருந்தபடியால், அவர்களும் காஜியிடம் இதைப்பற்றிப்பேச

சாவகாச மில்லாமற் போய் விட்டது. அன்றிரவு சுமார் 9-மணிக்கு தன்வீட்டிற்கு நேரே தீவர்த்திகளைப் பிடித்துக்கொண்டு கணக்கு வழக்கில்லாமல் பெருங்கூட்ட மொன்று திரண்டுவருவதைக்கண்டு, அது யாராவது ஒருபெரிய தனவந்தனது மணக்கோலமா யிருந்திருக்கக் கூடுமென்று காஜி நினைத்தனன். இவ்வாறு கணக்கெடுக்க முடியாதவிதம் பலலக்ஷம் ஜனங்கள் ஒன்று சேர்ந்து, ஒரு நிலைமையான பக்தி பூண்டு அனைவரும் ஆச்சர்யப்படும்படி காஜி வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்! எங்கு பார்த்தாலும் தீவர்த்தி வெளிச்சம், ஆட்டம் பாட்டம்! பக்தியே யனைவர் மனதையுங் கவிந்து ஆனந்தத்திலழுத்தினது! அச்சமயத்தில் அங்குண்டான நாதமும் கீதமும், சமுத்திர இரைச்சலையும் மட்டடக்கி அஃதை யொருபுறம் ஓட்டிவிடும் என்னலாம்படியிருந்தது! பட்டாடைகள், மலர்மாலைகள், அலங்காரம், ஸ்ருங்காரம், அளவில்லாத அற்புதங்கள், சொல்லொணாச்சிறப்புகள், எங்கெங்கும் விளங்குகின்றன! வைகுந்தமே, பூலோகத்துக்கு விருந்தாய் வந்ததோ! அமராபுரியேயிஃதை யழைத்துக் கொடுபோக வந்ததோ! அன்றி அளகாபுரி பொருளையும், வைகுந்தம் அருளையும், அமராபுரி அலங்காரத்தையும் கொடுக்க ஒன்று சேர்ந்து இந்நிலவுலகின் கண்ணிழிந்தனவோ! இவ்வாறு வைதிகரோர்ந்து நடப்பினும், அஃதறியாத லௌகீகர்கள் மேற்கூறிய மூன்று நகரங்கட்கும் ஓரதிபதியாய்த் தேர்ந்தெடுத்தனரோ வென்று நினைக்கத்தக்க சுந்தரரூபமும், செல்வப்பெருந்தகைமையும், கருணைக் காட்சியும் ஒன்றிணைந்து ஸ்ரீ கௌரங்கர் நடுவில் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆனந்தமாய் வருகிறார்!

காலக்ஷேபம் காஜி வீடுநெருங்கினது! சந்தடி கேட்டான்! கூட்டத்தையும் பார்த்தான்! உற்று நோக்கினான்! சற்று நிதானித்தான்! தான் இருக்கும் இடந்தேடி, இரவு 9-மணிக்கு அவ்வளவு பெருத்தகூட்டம் வருவதுயாது எனச்சிந்தித்தான் "நிமை பண்டிதன்தான், நம்மை அவமதித்து, நாம்விடுத்த கட்டளை மீறிக் கடுகென விரைந்து இவ்வளவு லக்ஷக்கணக்கான ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு நம்பால் வருகின்றனன்

போலும்! நான் நினைத்தது வாஸ்தவமாயின், அப்பேயனை யென் கூரியவாளுக்கிரை கொடுத்து, இன்னே இக்கலகத்தை மாய்ப்பேன்" என்று காஜி யெழுந்தனன். மீண்டும் உற்றுப்பார்த்தான், தான்நினைத்ததே சரியென்று திடன் கொண்டனன்! அங்குள்ள தன் ஏவலாளரையும் வினவினன். அவரும் 'ஆம்' என்றனர்.

காஜிக் கப்போ துண்டான கோபத்திற்கு அளவில்லை. கோபமே பாபத்திற்குக்காரணம்! கோபமே, ஆபத்தை விளைக்கு மருமைத்தாய்! கோபமே, கொலையாதிய கொடுமைகள் செழிக்கச்செய்யும் கொழுகொம்பு! தவத்தைத் தாரைவார்ப்பதும், தானத்தைக் கெடுப்பதும், மானம் போவதும் மரியாதைகெடுவதும், எல்லாம் கோபத்தாலேதான்! கோபங்கொள்வார் குணசாலிகளல்லர்! கோபங்கொள்வார் குடியர்க்குச்சமானர்! அன்றேல், குடியரிலும் கடைகெட்டார்! கோசிகன்கெட்டதும் கோபத்தாலே, கொடியர்கள் மாய்வதும் கோபத்தாலே! கொழுநனைக்கொல்லும் குணசாலிகளுக்கும், மனைவியைவதைக்கும் மாண்பினர்க்கும், இவர் வழிபிடித்துக் கிளைவழிபாயும் இருளர்க்கும் கோபமேகுருபீடம்! குரைத்தலேமேளவாத்தியம்! அடித்தலே ஆனந்தம்! அழித்தலே அற்புதம்! அறிவினர் பகைப்பதும் கோபத்தையே! அறியார் விரும்புவதும கோபத்தையே! * * * ஹா! ஹா! கோபத்தால் என்னென்னகெடுதி விளைகிறது!

இத்தகைய கோபத்திற்கு இடங்கொடுத்தான் காஜியும்! கீர்த்தனைக்கோஷ்டியைப் பார்க்கப்பார்க்க இவன் கோபம் விர்த்தியாகிறதே யொழிய அடங்கினபாடில்லை! பல்லை நறநறென்று கடித்து, ஒரு கூச்சலிட்டு தன் சிப்பாய்கள் சிலரைக்கூப்பிட்டான்! அவர்கள் வந்து வணங்கி நின்றனர். "நீவிர் போய் இக்கலகத்திற்குக் காரண பூதர்களைக்கட்டியடித்து இழுத்துக்கொண்டு வம்மின்!" என்று காஜி உத்தரவு செய்தனன். அவர்கள் புறப்பட்டு வந்தார்கள்! எங்கும் பக்தர்கள் கூட்டம், பகவான் மீதே நாட்டம்! இப்பெருங்கும்பலிற் புகுந்தசிப்பாய்கள் ஒருவரை யொருவர்விடுத்து, ஒருவரையொருவர்கண்டு

பிடிக்க வகையற்று வாளா மறைந்தனர்! காஜி ஒவ்வொரு நிமிஷமும் அவர்கள் வருகையை யெதிர் பார்த்தான்; அவர்கள் வருதல் காணோம்! மனங்கலங்கினான், திடுக்கிட்டான், உடல் வருந்தினான், உள்ளம் துடித்தான்;என் செய்வான் பாபம்! மறுபடியும், வேறுசில சிப்பாய்களை யழைத்தான்; அவர்களுக்கும் மேற்கூறிய ஏவலையே விடுத்து அனுப்பினான்; அவர்கள் கதியுமஃதேயானது. மீண்டுஞ்சிலரையேவினான்! அன்னோர்பாடு மதுவேதான்!

* * * * *

ஆச்சுது! கீர்த்தனை கோஷ்டியும் காஜிவீட்டிற்கு வெகு அருகில் வந்து விட்டது! போன சிப்பாய்கள் கதியென்னதென்று காஜிக்குத் தெரியவில்லை! "கௌரங்கர்மீது வீண்விரோதம் பாராட்டி, இஃதென்ன ஆபத்தாய் முடிந்ததே, அல்லாவோ!" என்று கையைப்பிசைந்து கால் நடுங்கி, "நம்வாழ்நாள் இன்றோடே முடிந்தது! இது தேவகாரியமாயிருக்கிறதே யன்றி மனித காரியமாய்த் தோற்றவில்லையே! கௌரங்கர்மனிதரானால் இத்தனை பேரையு மொருங்குசேர்த்துக்கொண்டுவரும் திறமை அவருக்கெங்கிருந்து வந்தது!" என்று பலவாறுகச்சிந்தித்து சிந்திக்கவும் நாழிகிடையாது வருந்தினான்!

கீர்த்தனைக் கூட்டத்தில் முதல்வரிசையிலிருந்தோர் பலர் அடாவடியாய் காஜிவீட்டுத் தோட்டத்திலிருந்த மரங்களை யொடித்தும், பூக்களைப்பறித்தும், செடிகொடிகளை முறித்தும் ஆரவாரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். காஜி நடுநடுங்கி, தன் வீட்டு ஸ்த்ரீகளையாவது காப்பாற்றிப் பிராணன் விடலாமென்று வீட்டுள்ளே சென்றான்.

தமது கீர்த்தனை கோஷ்டியின் முதலில் இருந்த மூடர் சிலர் தகாதபடி ஆரவாரஞ் செய்கிறார்களென்பதை யறிந்த ஸ்வாமிகள், ஒரு ஹுங்காரத்தால் அவர்களைக் கண்டித்து மேற்படி செயல்களை நிறுத்தினர். ஸ்வாமிகள் யாதோ ஆஜ்ஞை செய்கிறாரென்று, அனைவரும் வாய்திறவாது, கைகட்டி வாய்பொத்தி நிற்கவும், அச்சமயம் நிச்சப்தமாயிருந்தது! ஸ்வாமிகள் திருவுள்ளம் எப்படியோ வென்பதை யறிய பக்தர்களனைவரும் ஏக சித்தாய் நின்றுகொண்டிருந்தார்கள்! உடனே சைதன்யரும், காஜியை வெளியே வரும்படி யழைத்து, அவன் யாதொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை யென்பதையும் தெரிவித்தார். காஜிக்கும் பூரண ஆபத்திலே முழுகியிருப்பதாய்த் தோன்றி, வெளியிலே யிருந்தாலும் உள்ளேயிருந்தாலும் எல்லாம் ஒன்றுதான் என்று வெளியே வந்தனன். வந்ததும் ஸ்வாமிகளைத் தரிசித்தான்! இவர் பரப்ரம்ஹ ஸ்வரூபமே யென்பதை யுணர்ந்தான். பேசாமெ மூரது நிற்கிற காஜியை நோக்கி ஸ்வாமிகள் "ஏன் * மாமா! என் கீர்த்தனைக்குப் பங்கம் தேடினீர்! அப்படி செய்வது நியாயமா! எவரெவர்களுக்கு, கடவுளை யெப்படி யெப்படித் துதிசெய்ய வேண்டுமென்று தோன்றுகின்றதோ, அவ்வாறு செய்யின், அதனா லுமக்கென்ன குறைவு? ஏன் மாமா, தாங்கள் அப்படித் தகாத உத்தரவியற்றினீர்?" என்றுகேட்டார். காஜி கௌரங்கரடிபணிந்து "என் மருமகனே! உம்மை மருமகனென்று யான் சொல்லக்கூடாது. கடவுளவதாரமே நீவிர் என்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமே யென்றுதான் எனக்கும் தோன்றுகிறது! எல்லார்க்கும் ஒரே கடவுள்தான். அவரை ஹிந்துக்கள் நாரணன் என்று சொல்லுகிறார்கள். அவ்வவதாரம் நீவிரானபடியால உம்மைக் "கவுர்-ஹரி" என்று கூப்பிடுவேன்" என்று பலவிதமாய் உபசாரஞ் செய்தனன். "மருமகன் மாமனார் வீட்டிற்கு வந்தால் மாமனார் உள்ளே போய் ஒளித்துக்கொள்ளலாமா? வெளியே வந்து மருமகனை யழைத்துக்கொண்டு போவது முறையாயிருக்க, நீவிரிவ்வகை செய்தல் கூடாதே" யென்று ஸ்வாமிகள் வேடிக்கையாய்க்கேட்டனர். அதன் மீது காஜி, "யானென்ன செய்வேன்! கீர்த்தனை கோஷ்டியில் வந்த சிலர் செய்த ஆரவாரத்தால் யானொளிக்கும்படி நேரிட்டது; என்னை மன்னிக்கவேண்

கௌரங்கர் தாயார் சசிதேவியம்மாள் தகப்பனாராகிய நீலாம்பரரும் இக்காஜியும், மிக்க நண்பினராயிருந்தார்கள். நீலாம்பரரை காஜி சிற்றப்பா என்று "ஒப்பாரி" முறையிட்டழைப்பது வழக்கம். இதனால், கௌரங்கருக்கு காஜி மாமன் முறையானது காண்க.

டியது” என்றனன். “அது எவ்வகையாயினும், கீர்த்தனையை நிறுத்த நீர் ஏன் பிரயத்தனப்பட்டீர்! அவ்வாறு செய்தல் சரியல்லவே” யென்று ஸ்வாமிகள் கூறினர்.

ஏற்கவே, ஸ்வாமிகளின் பெருமையைப்பற்றி அனேக விஷயங்களைக் காஜி கேட்டிருக்கிறான். எத்தனையோ மகமதியர்கள், ஸ்வாமிகளுடைய சக்தியால், ஹிந்து மதத்தை யனுசரித்திருக்கிறார்கள். எத்தனையோ மகமதியர்கள், ‘கிருஷ்ண’ ‘கிருஷ்ண’ என்று பஜனஞ் செய்துகொண்டிருந்தார்கள். கௌராங்கரைக் கிருஷ்ணாவதாரரென்று அனேகர் சொல்லவும் காஜி கேட்டிருக்கிறான். இதனால் ஸ்வாமி விஷயத்தில் அவனுக்கு அதிகமதிப்பு ஏற்பட்டிருந்தது. இப்பொழுது நேரில் பார்க்கவும் அவர் சாதாரண மனிதரன்று; ஓர் தேவனே யென்று நினைந்தான். காஜி, சைதன்யர் திருவடிக்கமலங்களில் விழுந்து, “நான் கீர்த்தனையை நிறுத்தும்படி உத்தரவு செய்தது, ஹிந்துக்களிற் பலரே பலவிதம் கலகம் செய்து கீர்த்தனையை நிறுத்தும்படி வேண்டிக்கொண்டதனாலேயே யன்றி வேறன்று. என் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்! நான் இனிமேல் கீர்த்தனையை நிறுத்தேன்” என்று பலவாறு வேண்டிக்கொண்டான். அப்பால், ஸ்வாமிகள் கூடவே தானும் வந்துவிடவேண்டுமென்று முயன்றான். ஸ்வாமிகள் அவ்வாறு செய்யக்கூடாதென்று காஜியைத்தடுத்ததால், அவன் கீர்த்தனைக்கொண்டாட்டங்கட்கென்றே தன் ஆஸ்தியில் ஒரு பங்கு ஏற்படுத்தி, தன் விருப்பப்பிரகாரம் தன் சந்ததியார் நடத்தவேண்டியதென்று ஏற்பாடுகள் செய்தான். ஸ்வாமிகளின் பக்தனாயிருந்து, பின்னர் நவத்வீபத்திலேயே சமாதிவைக்கப் பெற்றான். இப்பொழுதும் நவத்வீபத்திற்குச் செல்லும் யாத்ராபார்கள், மேற்படி காஜியின் சமாதியைச் சேவிக்காது செல்வதில்லை.

கீர்த்தனா யுத்தத்தால் காஜியை வசப்படுத்தினது ஸ்வாமிகளியற்றிய அபூர்வ அற்புதங்களிலொன்றென்று மதிக்கப்படுகிறது. ஒரு பகற்பொழுதுக்குள் அவ்வளவு சனங்களைச் சேர்த்து, ஒரு அரசனை யெதிர்த்துசெல்ல ஒரு ஏற்பாடு மில்லாமல் நிகழ்விப்பது, சாதாரண மனிதர்களால் ஆகுங்காரியமல்லவே!

பத்தாவது அத்தியாயம்.

செத்த குழந்தை பேசுதல்.

ஸ்வாமிகளும் பக்தர்களும் ஒவ்வொருதினமும் பொழுது போனவுடன், ஸ்ரீபாஸர்வீட்டிற் சந்தித்துப் பக்திக்கொண்டாட்டங்களை நடத்திவருவது வழக்கம். சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருக்கும்போதே வொவ்வொருவராய் ஸ்ரீபாஸர் வீட்டிற்கு வந்துசேர்வார்கள். இவ்விதமே ஸ்திரீகளனேகரும் அவர்களுக்கென்றமைத்த பிரத்தியேகமான இடத்தில் வந்துட்கார்ந்துகொண்டிருப்பார்கள். பொழுதுபோனதும் தெருக்கதவைத் தாழிட்டு விட்டால், அப்புறம் உள்ளே யாரையும் விடுவதில்லையென்பது அவர்களுக்குத்தெரிந்த விஷயமாதலால், அங்கு வர விரும்பும் பக்தர்கள் முன் சாக்கிரதையாகவே பொழுதுபோவதற்குமுன் வந்துசேர்ந்து விடுவார்கள்.

ஒருநாள் மாலை, கீர்த்தனைக்கென்று வந்துகொண்டிருந்த ஸ்திரீகள் சற்றுவிழித்து, உள் நுழையாது திரும்பிவிடுவாராயினர். ஏனென்றால், அன்று ஸ்ரீபாஸர்க்கிருந்த ஒரேகுழந்தைக்கு வாந்திபேதிகண்டு அவர் வீட்டுஸ்திரீகளுக்கு மனக்கலக்க மேற்பட்டிருந்ததால்தான். இதனால், அவர்களுக்கு சந்தடிசங்கடம் ஏன் விளைவிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடே அயல்வீட்டு ஸ்த்ரீகள் போய்விட்டார்கள்.

ஆயினும் ஸ்ரீபாஸர்க்கு கீர்த்தனை நிறுத்தச்சிறிதும் சம்மதியில்லை. அவர் பக்தியமுதமுண்டு, எல்லாப்பாரத்தையும் கண்ணன்மீதே வைத்தவரானமையின் தாம் செய்யக்கூடுவனவாகிய வைத்தியரை யமர்த்துதல், செலவுசெய்தல் இவைகட்கு மேற்பட்டது செய்ய மனிதரால் தரமில்லையென்று நினைத்த உண்மையடியார். தன் ஒருகுழந்தைக்காக, ஸ்வாமிகள் பக்திக்கொண்டாட்டத்தையும் மற்ற அனைவருடைய ஆனந்தத்தையுங்கெடுக்க விரும்பிலார். தன்மனமும் அவன் பால் நண்ணிய

கண்ணிய வுணர்வுடையவரானமையால் தானும் பக்தி செ
திருக்க அவருக்குச் சரிப்படவில்லை. கருப்பையினுள்ள
டைக்கும் கல்லினுள்ளதேரைக்கும் கடலினுள்ள பலஜீவ
கட்கும்," படியளக்கும்" பரமபுருஷன், தம்குழந்தையை
பார்க்கமாட்டானோ வென்று, பகவான் விஷயத்திலீடுபட்
ஸ்வாமிகள் வந்தவுடனே கீர்த்தனாரம்பம் செய்துவிட்ட
ஸ்ரீபாஸரும் மற்றையோர்போலவே சிறிதுஞ் சஞ்சலமிலா
நடனமாடிக்கொண்டிருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில், வீட்டிலுள்ள வேலைக்காரி யொருத்
யோடிவந்து ஸ்ரீபாஸர்க்குச் சைகைகாட்டி யழைத்தாள், ஏ
வே ஸ்ரீபாஸருக்குப் கூப்பிட்டகாரணந் தெரிந்திருந்ததா
உடனே சென்று பார்க்க, தன் அருமந்தப் புதல்வன் செத்
கிடக்கிறான்! அவர் மனம் என்னமாயிருந்திருக்கலாமென்
நினைக்கிறீர்கள்! அவர் மனஞ் சிறிதுஞ் சஞ்சலப்படவேயில்லை
கவலை யென்பது காதவழி யோடிவிட்டது! பயமென்பது பற
தேவிட்டது! ஆனந்தம் மேலிட்டது. "என் ஐயன் நம் வீ
டில் ஆனந்த நடனம்புரியுங்காலத்து வானகம் புகுத நேர்ந்
என்பாலகன் செய்த தவப்பேறே பேறு! இம்மேதக்கநிலை நே
மாவென்று சனகசனந்தன சனத்குமாரால் தவம்புரியா நி
பார். இத்தகைய உன்னத பதவிபெற்ற உத்தமப் புதல்வனை
பெற்ற என் பாக்கியமே பாக்கியம்!" என்று சந்தோஷ மெ
தினர். வீட்டிலுள்ள ஸ்த்ரீகள் மனவருத்தமுற்றுக் கத
ஆரம்பித்தார்களைக் கையமர்த்தி, "நம் குழைந்தைக்கு நேர்ந்த
பாக்கியம்போல் யாவர்க்கமையும்! சந்தோஷப்படுவதை விட்டு
துக்கப்படுவது முட்டாள் தனம்! ஆயினும் 'எண்ணறக்கற்று
எழுத்தறப்படிக்கினும் பெண் புத்தி யென்பது பெரும்பேதை
மைத்தே' யென்கிற வண்ணம் உங்கட்கு மனோதிடமில்லாதிருக்
கினும், சற்றுப்பொறுக்கவேண்டும். என் ஐயன், ஆழாழி
த்துயர் நீக்கும் அருமருந்து, அன்பர் பவம்போக்கும் அச்சு
தன் தன் ஆனந்தத்திற்கு யாதேனும் தடைநேரின், யான் கட
லில் விழுந்து உடல் மறைப்பது நிச்சயம்" என்றுகூறி யனை
வரையும் அழாது நிறுத்தினர். தான், ஸ்வாமிகளுடனும் ப

தர்களுடனும், மனக்கவலை சிறிதுமில்லாது பக்திக் கடல் மூழ்கி நடமிட்டுக்கொண்டிருந்தார்.

இந்த சமாசாரம் யாருக்கும் தெரியக்கூடாதென்று ஸ்ரீபாஸர் வேண்டிய ஏற்பாடு செய்திருப்பினும், அஃது மறைவதொன்றன்றாதலால், மெதுவாய் ஒரு பக்தர்காதிற் கெட்டிற்று. அவர் ஆச்சரியப்பட்டு "இஃதென்னை! தன் ஒரேயொரு அருமைப்புதல்வனை யிழந்தும் ஸ்ரீபாஸர் ஆனந்தக் கடலிலழுந்தி நிருத்தஞ்செய்கின்றாரே! இவர் பெருந்தன்மையிருந்தவா!" என்று நினைத்து, மறுபடியும் விஷயங்களை விசாரித்ததில் ஸ்ரீபாஸருக்குத் தன்குழந்தை மரண சமாசாரம் தெரியுமென்றும் தெரிந்தும் அது பெருமானுக்குத் தெரிந்தால் பக்திக்கொண்டாட்டம் எங்குதடைபடுமோ வென்று வெளிவராதிருக்க ஸ்ரீபாஸர் ஏற்பாடு செய்தாரென்றும், மேற்சொன்ன பக்தருக்குப் புலப்பட்டது. மீண்டும் ஸ்ரீபாஸர் முகத்தையுற்று நோக்கினார். மேதக்க குணங்கள் பொதிந்த அவர் முகமாகிற வானத்தின் நிட்களங்கத் தோற்றத்தை கவலை சஞ்சலம் முதலாகிய மேகங்கள் சிறிதேனும் மறைக்கவில்லை. இப்படியிருக்கும் பொழுதே இச்சங்கதி ஸ்வாமிகட்குந் தெரியவந்தது. அவர் ஸ்ரீபாஸர் உண்மைப் பக்திக்குப்பெரிதும் வியந்து, "ஏன்! ஸ்ரீபாஸரே' தமது ஒரே குழந்தை யிறந்து கிடக்கவும் அதை மறந்துவிட்டு, இங்கு நடமாடுகின்றீரே! இது சரியா?" என்று கேட்டனர். ஸ்ரீபாஸர் ஸ்வாமிகளை நோக்கி, "அது விஷயத்தில் உங்களுக்கில்லாத கவலை யெனக்கென்ன? எறும்பு முதல் பிரமனீறாகவுள்ள சகலருக்கும், இச்சீவராசிகளுக்குக் கீழடங்கியபுல்பூண்டுகட்கும் உணவளித்துக் காத்துக் கடைத்தேற்றுகிற ஜகத்பிதா நீரிங்கிருக்க, இவ்விஷயத்தில் நானேன் கவலை வைத்துக்கொள்ள வேண்டும்? எல்லோர்க்குந் தந்தை எல்லோர்க்கும் அரசன் எல்லோர்க்குந்தாய் எல்லோர்க்கும் குருவாய் விளங்கும் பரப்ரமஹமே யென் வீட்டில் ஆனந்த நடமிடுங்கால் ஐயன் பதஞ் சேர்ந்த என் அருமைப் புதல்வனைபோல் பாக்கியசாலிகள் யாவர்! அவனைப்போல் யோகசாலிகள் யாவர்! அவனே முக்தன், பக்தஸ்ரேஷ்டன்" என்று சொன்னார். ஸ்வாமிகள் வியந்

து "ஸ்ரீபாஸரே! நீர் உண்மையில் கண்ணன் திருவருட்குப் பாத்திரராயினீர்! உம்மைப்போல் வேறுபக்தனைகாணப் பெற்றிலேன்! ஆயினும் உமது இறந்த குழந்தையைப்பார்க்கவேண்டாவா!" என்றனர்.

உடனே அக்குழந்தையை ஸ்வாமிகளெதிரில் கொண்டுவந்து வைத்தனர். அவர் அக்குழந்தையைப் பேசவாக்ஞாபித்து "நீயெங்கு செல்கின்றனை?" யென்றுகேட்க' "நான் இப்பிறவியினும் மேம்பட்ட வாழ்வு துய்க்கப்போகின்றேன்"! என்று பதில்பேசி மறுபடியும் கண் மூடிக்கொண்டது. அனைவரும் துக்கமாறி ஸ்வாமிகள் பெருமையையும் வன்மையையும் வியந்து துதித்தனர். அக்குழந்தைக்குச் செய்யவேண்டிய காரியங்களை நடத்தி, ஸ்வாமிகள், குழந்தையின் தாய் தந்தையராகிய, ஸ்ரீபாஸர் மாலினி யென்பாருக்குத் தான் பிள்ளையாயிருக்கிறதாய் வாக்குக்கொடுத்துக் களிப்பூட்டினார்.

பதினோராவது அத்தியாயம்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி லீலை.

ஓர் நவீன நாடகம்.

நிமைஸ்வாமிகள் பித்துப்பிடித்த குழவியன்று என்றும், தெய்வப்பெருந்தன்மை வாய்ந்த சிறுவர் என்றும் உலகத்தில் பொதுஜனங்கள் பலரும் ஒத்துக்கொள்ளப் போதுமாய விசேஷங்களை நடத்தினரன்றோ! அந்நகரக் கொத்வால்களைப் பக்தர்களாக்கி யாட்கொண்டதும் இறந்த குழந்தையைப் பேசுவித்ததும் காஜியையடக்கியதும் போதியசான்றும்.

கௌரங்கஸ்வாமிகள் இவ்வாறு பக்தியெனு நல்விதையை நாடோறும் விதைத்துவருங்காலையில்

"நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறு வன்புனக் கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே"

என்ற பெரியோர் கருத்தினைப் பல்லோர்க்கும் நன்குவிளக்குவான் எண்ணங்கொண்டவராய், "ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி லீலைகளை யோர் நாடகம்போல் நடித்துக்காட்டுவோம்" என்று ஒருநா ளிருந்தாற்போலிருந்து தன் பக்த கோஷ்டிகளைப் பார்த்துச் சொன்னார். ஹிந்துக்கள் ஆதிகாலந் தொடங்கி நாடகங்களில் பழகிவந்தார்க ளாதலால் ஸ்வாமிகள் "நாடகம்" என்று சொன்னதில் அவர்கட்குப் புதுமை யொன்றுந் தோன்றாவிடினும் ஸ்ரீகிருஷ்ணனது லீலைகளை நாடககாவியமாக வெவருஞ் செய்யப் பிரயத்தனப் பட்டதாகக் கூட கேள்விப்பட்டதில்லை யானதுபற்றி அங்குநின்ற பக்தர்கட்கெல்லாம் ஆச்சரியம் மேலிட்டு ஸ்வாமிகளது எண்ணத்தினைச் சிறிது மறியகில்லார்களாகி ஸ்வாமியை நோக்கி, "இதுவரையிலும் நடிக்கப்படாத கிருஷ்ணலீலைகளை யெவ்வாறு நாங்கள் நடிக்கக்கூடும்? அவ்வாறு நடிப்பதில் பயன் யாது விளையற்பாலது?" என்று

பலவகையாய் வினவினர். அதற்கு ஸ்வாமிகள் "அவ்வாறு நடித்தலாற்றான் பகவானதுலீலைகளின் மகிமைகள் மானிடர் பல்லோர்க்கு மினிது புலப்படும்; மேலும் சர்வேஸ்வரனும் பக்தவத்ஸலனுமான பெருமானின் பரம ஸ்நேகத்திற்குப் பாத்திரர்களாவதற்கு அதுவே பரமசாதனமாக விருக்கும். நாம் பிறப்பதும் இறப்பதும், வாழ்வதும் தாழ்வதும் எல்லாம் ஒருவித நாடகமே. உலகத்தில் மனித ரியற்கைச் செயலே ஒரு பெரிய நாடகமாய் விளங்குகின்றது. இந்தஞாலம் இந்திரசாலமென்று சிறிதும் நினையகில்லார்களாகி, வாழ்க்கையில் மகிழ்ந்தும், துக்கத்தில் துயருற்றும் நாளை வாளா கழித்து வகைகெட்டுப் பாழ்படுவர் எத்தனையோபேர். இவர்களுள் தாம் செய்வதே சரியென்றும், தாம் நினைப்பதே நியாயமென்றும், தாம்புகல்வதே போதனையென்றும் எண்ணியெண்ணி, தம்மைத் தவிர மற்றையோர் செய்வதும் நினைப்பதும் புகல்வதும் பிசகென்றும், அவர்களுக்குப் புத்திகெட்டதென்றும், பேய்பிடித்ததென்றும், மூளை கலங்கிற்றென்றும் பற்பலயோசனை புரிந்து தொல்லையுண் மூழ்கி அகங்காரமடைந்து பரகதிவழிகடந்து போவார் ஒவ்வொருவரும்! இஃதெவ்வகையாயினும், மேற்கூறிய ஒவ்வொருவரும் நடர்களே! பரம்பொருளாகிய சூத்திரதாரியின் அற்புதமாயைக் குட்படிந்து, உலகமாகிற அரங்க மேடையின்கண், இன்னோர் தமக்கியைந்த வேடத்தை நிறைவேற்றும் பொருட்டே நடித்துப் போதருவார். மானைக்காட்டி மானைப்பிடிப்பதும், குழந்தைகட்குச் சர்க்கரைகாட்டி மருந்தளிப்பதும் எப்படிப் பயனுள்ளதோ, அவ்வாறே எக்காலமும் நடமியற்றுவோர்க்கு நாடகமே வழியாக நாரணன் பெருமை தெரித்தல் நலமன்றோ?" என்று கூறினர். பின்னர் காயஸ்தா ஜமீன்தாரான புதிமுந்தகான் என்பவரையும், சதாசிவகவிராயர் என்பவரையும், நாடகத்திற்குவேண்டிய வேற்பாடுகளைச் செய்யப்பணித்தார். ஸ்வாமியின் அம்மானாகிய சந்திரசேகரர் வீட்டில் நாடகம் ஆடப்படும் என்று நிச்சயஞ் செய்யப்பட்டது.

ஆனால் பக்தர்கள் மனது பலவிதசந்தேகங்களாலும் நாடகமாடுதலின் அதற்குரிய வேற்பாடுகளைப் பற்றி யனைத்து மறிய

வேண்டுமென்ற அவாவினாலும் ஆயாசப்பட்டுக் கொண்டிருந்தது. ஏனெனில், சாதாரணமாய் ஓர் நாடகமானது சொல்வல்லோனொருவனால் எழுதப்பட்டு பின் நடர்களாவோர் அவரவர்க்குரிய உரைகளை நெஞ்சினில் நிறுத்திய பின்னரே நடிக்கப்படுவது; மேலும் நடர்கள் தாங்களே முதலில் அறையிலாடிப் பார்த்துப் பழக்கிக்கொண்டு தான் பின்னர் அம்பலத்திலாடுவார்கள். அன்றியும், ஓர் நாடகமென்றால் அது அங்கங்கள் களங்களாகப் பகுக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கு கிருஷ்ணலீலைகளையாடுவதற்கு இவ்வித வேற்பாடுகள் ஒன்றுமில்லை. அதைப்பற்றி ஸ்வாமியை வினவினால் அவர் நாடகமாடும்போது எல்லாந் தெரியவரும் என்றும் அனைவோருமவரவர் பாகத்தினையப்போதேயறிந்து கொள்வார்களென்றுஞ் சொல்லினர். இது எவ்வாறு சாத்தியமென்று வினவியபோது "அன்பர்களே! நீங்கள் மனச்சஞ்சலப்படுவது எற்றுக்கு? நாடகமாடுங்காலையில் உங்களை யெல்லாம் வேறொருவன் 'பொம்மலாட்டம்' போலாட்டுவிப்பான்; நுங்கட்குச் சிறிதும் வருத்தந்தோன்றாது" என்று ஸ்வாமிகள் கூறினர்.

அவர்கட்கு அந்த நாடகமியற்றும் விஷயமாய் மேலும் மேலும் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற அவாவினால் ஸ்வாமிகளைப் பலவிதமாய் வினவியபோது அவர் தானே ராதாவேஷம் போடுவதாயும், காதாதரர் * லலிதாவேஷமும், நித்யாநந்தர்* பாரைவேஷமும், ஹரிதாசர் தேவலோகத்து கோத்வால் வேஷமும், ஸ்ரீபாஸர் * நாரதர் வேஷமும் போடவேண்டுமென்றுஞ் சொன்னார்.

பிறகு அத்வைதர் என்பவர் தனக்கு எந்தவேஷம் ஏற்பட்டது என்று கரங்குவித்து ஸ்வாமிகளைக் கேட்க, ஸ்வாமிகள், "நீர்தான் அனைவரையும் வேண்டியபடி ஆட்டுவிக்கவேண்டும்.

---

* லலிதா, பாரை - என்ற இருவர்கள் ராதாவின் தோழிப்பெண்கள்.

நாரதர் - ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியின் ஆப்த சிஷ்யர்; மகரிஷி; உலகத்தில் கோபித்தல் மூடத்தனம் என்பதை விளக்குவதற்கென்றே ஜனங்களைக் கலகஞ் செய்து சண்டைபோடச்செய்பவர்; மொத்தத்தில் எல்லா மனிதர்க்கும் அதில் முக்கியமாய் இளைத்தவர்க்கும் சிநேகிதர்.

நீரே ஸ்ரீகிருஷ்ணனாகமாறிவிட வேண்டும்." என்றார். மேலும் இவர் சொல்லிய விவரணங்களனைத்தையுங் கேட்டும் பக்தர்கள் திருப்தியடையாதவராய் மேலும்மேலும் கேட்க அதியாவல் கொண்டிருப்பதை யுணர்ந்து ஸ்வாமிகள் பின்வருமாறு சிங்கார வசனங் கூறலாயினர்! "நல்வழி யடைந்த நண்பர்களே! கேண்மின்கள்! நானே ராதாவேடம்பூண்டு நடிக்கவிருப்புறேன்! அதற்கியைந்த அற்புத ஆடையும் அணிகலனமைதியும் நகை முகநாட்டமும் நடைப்பெருங்கோலமும் நனிமிகவிளங்க நானேவருவேன்! 'நடனசிங்கார நடையழகி' யாகும் என்னைக் கண்டதும், நீவிர் உம்துபுலன்வலி யழிந்து காமப்பேய் பிடித்துக் கலக்கமுறுவீர்! அதற்கென்றே நான் அழகே யுருவெடுத்து வருதல்போல் நடன வரங்கத்திற் றோன்றுவேன்!

மின்னென வொளிர்ந்து மீனென விழித்து; வில்லினைப்
    பழித்த வியன்பெறு புருவம்
பொன்னெனத் தழைத்த பூநிகர் முகத்துப் பொற்பினைப்
    புகன்று அங் குதித்தது போலும்!
அன்னநன் னடையோ தத்தையின் மொழியோ அளிகளி
    னிசையோ மயிலின நடமோ!
கன்னியர் தாமும் கலங்குவா ளெசிந்து கவின்பெற
    யானே வருகுவன் காண்பீர்!
பொறிபுலன் களைந்து புண்ணியம் புரியும் பூசுர ராயினும்
    புனிதரே முதலாம்
அறிவின ரரிய தவத்தின ரிருடி யாரிய ராயினும்
    அன்பரே யடியார்
நிறைவின ரேனும் நின்றவென் வனப்பைக் கண்டுளம்
    பதைத்து நிலைகுலைந் திடுவரே
அறைவிடம் யாங்க ளுருவதன் பெருமை யுணருவீ
    ருணருவீர் மனத்துயக் குற்றே"

தான் ராதா வேஷம் தரித்தற்குப் பெண்கட் குரிய வாடைகளை யுடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், தான் அவ்வாறு உடுத்து வரும்போது மிக்கசௌந்தரியம் வாய்ந்தும் பார்ப்போர் மனதை முற்றிலுங் கவரத் தக்க அன்ன நடையுடை பாவனைகளுமமைந்தும் ரூபவதியாய்த் தோன்றுவ ராதலின், தன்னை அப்போது காண்போர்கள் தமது புலன்களையடக்கி வென்றவராயினும் காமப்பேய்பிடித்து வருத்தமுறுவர் என்றும் வேடிக்கையாய்ச் சொன்னார். அத்வைதரும், ஸ்ரீபாசரும் "எங்களது புலன்களை நாங்கள் அடக்கி வென்றிலோமாதலின் நாடகத்தினையாடும்போது நாங்கள் வராதிருத்தலே உத்தமம் என்று எண்ணுகிறோம்." என்றனர். இதனைக்கேட்ட ஸ்வாமிகள் சிறிது வருத்தமுற்றவராய் "அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை; என்னையும் என்னுடைய அந்தத்தினையும் பார்த்து மோகிக்காதிருத்தற்கு வேண்டிய தைரியம் உங்களுக்குத் தருகின்றேன்" என்று கூறினர்.

உடனே நாடகமாடுவதற்கு வேண்டியவேற்பாடுகள் செய்யப்பட்டன. ஆடைகள், பொய்மயிர்கள், மீசைகள், மரக்கிளைகள், செடிகொடிகள், புஷ்பங்கள் முதலிய பலவித சாமான்கள் தருவிக்கப்பட்டன. சந்திரசேகரர் வீட்டுவாசலே அரங்கமேடை யாக்கப்பட்டது. நடர்கள் உடுத்துக்கொள்ள ஒரு தனியறை யேற்படுத்தப்பட்டது. முற்றத்தில் வேடிக்கை பார்க்க வருபவர்க்கு ஜமக்காளங்கள் போடப்பட்டன. ஸ்திரீகளுக்குத்தனியே யிடம் அமைக்கப்பட்டது. ஸ்வாமிகளின் பக்தர்கள்மட்டுமே வரக்கூடுமென்று அறிக்கை யிடப்பட்டது. பக்தர்கள் தாம் வரும்போது தங்கள் வீட்டுஸ்திரீகளையும் அழைத்து வந்தார்கள். அதனாலேயேதான், சசிதேவியம்மாள், விஷ்ணுப்பிரியை, ஸ்ரீபாஸர் மனைவியான மாலினிதேவி, முராரியின்மனைவி முதலியோர்களும் வந்தார்கள். ஆதியேற்பாடுபோலவே ஆரம்பஞ்செய்யவேண்டிய காலத்துக்குச்சரியாய் வாயிற் கதவுகளைச்சாத்தித் தாழிட்டு கங்காதாசரை வாயிற் காப்போராக வைத்தார்கள். நடர்களைதகுந்தபடி யுடுத்தற்கென்று வாசுதேவாசார்யர் ஏற்படுத்தப்பட்டார். புண்டரீக வித்யாநிதி, 'சந்திரசேகரர், ஸ்ரீபாஸர், அவருடைய மூன்று சகோதரர்களும் பாடுபவரென்று நியமனமாயிருந்தது.

முதலில் வாத்தியகோஷத்திற் கனுகுணமாக ராதாகிருஷ்ணன்பேரில் ஸ்தோத்திரமாக ஒருபாட்டு பாடப்பட்டது. அதைக்கேட்ட ஜனங்கள் அனைவரும் பக்தி விசேஷத்தாற் பரவசப்பட்டவராய் 'ஹரிபோல்' என்று பன்முறை புகன்றனர், அச்

சமயம் ஹரிதாசர் தேவலோக கோத்வாலாகவந்தனர். ஓர் பெரியபோர்வீரன் போற் றோன்றும்படி பெரிய மீசைகளை முகத்திற் கட்டிக்கொண்டும் ஓர் பிரம்மாண்டமான தடியைத் தோளில் சாயப்பற்றிக் கொண்டும் வந்த அவர் தம்மிருகரங்களிலும் வைத்திருக்க மலர்களால் சபையை வணங்கித் தொழுதார். பின்னர் எழுந்து நின்று ஜனங்களைப்பார்த்து “சகோதர்களே! நுங்கள் தூக்கத்தினை யொழித்து எழுந்திருங்கள். அற்பமான வாணாளை வீணாக்காமல் மோக்ஷசாம்பிராச்சியத்தை யடைதற்குரிய சாதனங்களைத் தேடுங்கள்.

‘வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசி நோய் செய்த பறிதான்
றாழாதறஞ் செய்ம்மின்;’

மேலும், ஸ்ரீகிருஷ்ணபகவானை யிடைவிடாது தொழுதற்கு ஐம்புலன்களையும் வென்று,

“கேசவனையே செவிகள் கேட்கத்திரு வரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக-நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர் கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய்”

என்ற மூதோருரையாற்றானொழுகி நற்கதியை யடையுங்கள்” என்றுரைத்தார்.

இவ்வாறு கடவுள் வணக்கமும் சபைவணக்கமும் முடிந்த பிறகு, ஹரிதாசர் கோத்வால் வேஷத்தை யொழித்து நாடக சூத்திரதாரராகவந்து நின்று சபையாரைப்பார்த்து “நான் பிரமலோகம் போயிருந்தபோது அங்கு நாரதமகரிஷியைப் பார்த்தேன். அவர் ஸ்ரீகிருஷ்ணனதுலீலையை நாடகமாகச் செய்து நடிப்பதைப்பார்க்க மிக்க வவாகொண்டவரா யென்னை யியற்றும்படி கேட்டுக்கொண்டார். ஆகையால் இப்போது அவர் எண்ணத்தைப் பூர்த்திசெய்வேன்” என்று சொல்லித் திரும்பிப்பார்க்க தனக்கு உதவிசெய்வதற் கென்று நின்ற முகுந்தரைப்பார்த்து “நாரதஸ்வாமியின் கட்டளையை நிறைவேற்றுதற்கு ஏற்பாடுசெய்வாய்” என்றார்.

முகுந்தர்—நீர் சொல்வதென்ன விந்தையா யிருக்கின்றதே! இப்பிரபஞ்சத்தில் நாரதஸ்வாமியே முதன்மையான

மகரிஷி. முநீஸ்வரர்கள் தவமகிமையாலும் யோகப்பயிற்சியாலும் பரப்ரம்மத்தை யடைந்து பேரானந்த மநுபவிப்பர். அப்படியிருக்க நாரதர்க்கு, ஸ்ரீகிருஷ்ணன் மானிடஜென்மம் வகித்து பிருந்தாவனத்தில் இயற்றிய லீலைகளைத் தரிசனஞ் செய்வதில் எப்படி யானந்தமிருக்கும்? மேலும் அஞ்ஞான விருளிலழுந்தி யுழலுமாந்தர்கட்கே ஸ்ரீகிருஷ்ணனை பிரபஞ்சத்திற்கு முற்காரணனாக மதித்துத் தொழுவது அசாத்தியமென்று அவரை ஓர் மானிடராக நினைத்து ஆராதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க இம்மூடவழிகளில் அம் முநீஸ்வரர் நடப்பானேன்?

ஹரிதாசர்.—நீர் ஸ்ரீமத் பாகவதம் வாசித்ததில்லையோ? அதனுள், பெரிய யோகீஸ்வரர்களும் முநீஸ்வரர்களும் ஸ்ரீகிருஷ்ணன் மனிதனாக வியற்றிய லீலைகளைத் தரிசிப்பதில் சித்தப்பிரமை கொண்டிருக்கிறார்களென்றும், தேவனை சிருஷ்டிகர்த்தாவென்றாவது சித்ஸ்வரூபமென்றாவது அகண்டாகாரமென்றாவது ஆனந்தஜோதியென்றாவது வைத்து தியானிப்பதைப் பார்க்கிலும் பரமசுந்தரன் கருணாகடாக்ஷன், தீனபந்து, ஸ்ரீகிருஷ்ணன் என்று நினைத்துப் பக்தி செய்தலால் அதிசுலபமாய் முக்தியைப் பெறலாம்என்றுங் கூறப்பட்டிருக்கின்ற தல்லவா?

இச்சந்தர்ப்பத்தில் இதனை நன்கு விளக்க த்வைதவாதிகட்கும் அத்வைதவாதிகட்குமுள்ள மாறுபாட்டிற்குக் காரணமாகிய சிலவிஷயங்களை யெடுத்துச் சொல்வாம். அத்வைதவாதிகள் கடவுளும் ஜீவனுமொன்றே யென்ற கொள்கையினராய் தவத்தாலும் யோகத்தாலும் அந்த ஆனந்த ஜோதியுட்கலத்தற்கே பிரயத்தனப்பட்டு வருகின்றார்கள்; த்வைதிகளோ, ஜீவாத்மா பரமாத்மா வென்பவை வேறுபட்டவை யென்ற நம்பிக்கை வைத்து பரமாத்மாவை மனோரம்மிய திவ்ய சுந்தரரெனவும், பரமானந்த ஸ்வரூபியெனவும், ஜீவகாருண்யமுடையவரெனவும் பாவித்து பக்தி, பிரேமை, அன்பு முதலிய உணர்ச்சிகளாலடைந் தானந்திப்பர். இவ்விருதிறத்தாரும் ஆனந்த மடைவரேனும், அத்வைதிகளடையும் ஆனந்தம் இயற்கையாய் வரத்தக்கதல்ல; ஏனெனில், அது சுபாவமாய் மனிதனுக்

குரிய வாசைகளைச் சுட்டறுத்து மிகவும் குரூரமான யோகப் பயிற்சியால் அடையவேண்டியிருக்கிறது. ஆனால் மனிதன் உள்ளபடி இகசுகங்களை யனுபவித்து இயற்கையாய் தனது சுற்றத்தார் சகோதரர், தாய்தந்தையர் நாயகன் நாயகி இவர்களுக்கு உரிய அன்பையே கடவுளிடத்தும் பாராட்டி அவ்வன்பின் மிகுதியாலே யிப்பிரபஞ்சவாழ்வை யொழித்து மோக்ஷத்தை யடைவது துவைதியின் சித்தாந்தம். இதுநிற்க.

ஹரிதாசர்—இந்த லீலையை நடாத்தற்குரிய எனது பெண்கள் பிருந்தாவனத்திற்குப் போய்விட்டார்கள். அங்குள்ள அபாயங்களை நினைக்கும்போது, பேதைமையும் இளமையும் வாய்ந்த இவர்கள் எவ்வாறு அவைகளினின்றும் தப்பித் திரும்பி வருவார்கள் என்று என்மனம் சஞ்சலப்படுகின்றது.

முகுந்தர்.—என்? அவர்கள் பாரை என்ற கிழவியுடனன்றோ போயிருக்கிறார்கள்; அவள் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளமாட்டாளா?

ஹரிதாசர்.—பாரையா? அவள் வெகு தள்ளாத கிழவியாயிற்றே! அவளால் என்னமுடியும்?

(அச்சமயம் நாரதர் வீணைசகிதமாய் வருகின்றார்.)

நாரத வேஷந்தரித்தது ஸ்ரீபாஸர். அவர் தன்வேலைக் காரனாக சுக்லாம்பரரை யழைத்துவந்தார். இங்கு தான் நாடகம் சரியாய் ஆரம்பிக்கின்றது. அப்போதே சபையோர் ஓர் அற்புதத்தைக் கண்ணுற்றார்கள். எப்படியென்றால் நடித்தற்கென வாரம்பித்தவையனைத்தும் சத்தியமாய் முடிந்தது. சபையோர்கள் போலி லீலைகளைப்பார்க்க வெண்ணிவந்தனரேனும் அங்கு கண்டவையனைத்தும் நிஜலீலைகளே. பக்தர்கள் தாங்கள்முதலில் ஆடிப்பழக்கிக்கொள்ள வேண்டுமேயென்று ஸ்வாமியினிடஞ் சொல்லியபொழுது அவர் பழக்கம் ஒன்றும் வேண்டியதில்லையென்றும் கிருஷ்ணலீலைகளை நிறைவேற்றிய தேவலோகத்தவரே அங்கும் வந்திருந்து நடத்திவிடுவார்கள் என்றுஞ் சொன்னார். புராணங்களுள் கூறியிருக்கப்பட்ட பெரியமுனீஸ்வரரான நாரதஸ்வாமிகளும் ஸ்ரீபாசரும் நடக்கையில் ஒத்திருந்தனர். ஆகையால் நாரதமுனிவரே ஸ்ரீபாசர்மீது ஆவேசித்தார். ஸ்ரீபாஸர் நாரதவேடத்துடன் அரங்கமேடையில் வந்தபோது சபையார் அதுவரையில் தங்களையும் சுற்றியிருந்தவர்களையு மறிந்திருந்தார்கள். எப்படியென்றால் அச்சமயம் சசிதேவியம்மாள் ஸ்ரீபாஸர் மனைவியாகிய மாலினியைப் பார்த்து "நாரதராக வந்திருப்பவர் உன்நாயகன் அன்றோ?" என்னவும், அவர் "அனைவரும் சொல்வதைக் கேட்கின், அப்படித்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கலாமேயொழிய இவரைப் பார்த்தால் என்னாயகன் என்று யாவராலு மறியமுடியாது" என்றார். சற்று நேரத்திற்கெல்லாம் சபையினரும் நடர்களும் தங்களை மறந்தவர்களாய் உண்மையிலேயே பிருந்தாவனத் திருப்பதாய [illegible]ர்கள். ஸ்ரீபாஸர் தன்னைமறந்து நாரதராக வெண்ணினபொழுது மற்றவர்களும் எதிரினின்றவர் ஸ்ரீபாஸர் என்றதைமட்டுமறந்து நாரதரே யிங்குவந்தார் என்று நம்பினார்கள்.

நாரதர்—(தன் வேலைக்காரனான சுக்லாம்பரரைப்பார்த்து)—நான் இங்கு கிருஷ்ணலீ[illegible] நடிக்கப்படும் எனக்கேள்வியுற்று அவைகளைத்தரிசிக்கலாம் என்று [illegible]ந்தேன். ஆனால் இங்கு ஒன்றையும் காணேன்.

அத்தருணத்தில் சில கோபிஸ்திரீகள் வருவதைப் பார்த்து "ஸ்திரீகளே! நீங்கள் யாவர்?" என்று நாரதர் வினவினார்.

கோபிஸ்திரீகள்—நாங்கள் பிரஜாவைச் சேர்ந்தவர்கள்; சிவனை வணங்கச் செல்கின்றோம். தேவரீர்யார்?

நாரதர்—நான் ஸ்ரீகிருஷ்ண பக்தர்களிற் கடையேன்-என்னை நாரதர் என்று சொல்லிக் கொள்வார்கள்.

(ஸ்திரீகள் முனீஸ்வரருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கின்றார்கள்).

அந்தஸ்திரீகளில் மூத்தவளாக வந்த சுதாகரர் என்பவர் உதயகாலத்திய பூரணச்சந்திரனை விட்ட அதிசுந்தரமாகத் தோன்றி நாரதரை நமஸ்கரித்துக் கண்ணீர் பெருகவிட்டு "நீரே நாரதஸ்வாமிகளாயின் எனக்கோர் வரமளித்தல் வேண்டும். ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தற்காலம் நவத்வீபத்தில் சசிதேவியம்மை

புத்திரராக அவதரித்திருக்கின்றாராம். அவர்மீதே யென் விருப்பஞ்செல்கின்றது; காதல்படிகின்றது; அவரது சீர் பாதங்களை யெனக்குச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும்." என்று சொன்னார்.

நாரதர்—உன் எண்ணத்தை நிறைவேற்றுகிறேன்; ஆனால் நீங்கள் அனைவரும் பிரஜாவைச் சேர்ந்தவர்களாயிற்றே! உங்கட்குப் பரத நாட்டியம் நன்றாய்த் தெரிந்திருக்குமே. உங்களில் யாராயினுமொருவர் சற்று நாட்டியம் பண்ணுங்கள் பார்ப்போம்.— இவையெல்லாம் ஆனந்தத்திற் கறிகுறியென்றுனக்குத் தெரியாதா? கதாதரர் பிருந்தாவனத்து கோபிஸ்திரீயா யப்பொழுது மிக ரம்மி[illegible] யிருந்தார். அவர் அத்யந்த வானந்தத்தின் மூழ்கி தன்னை மறந்து வா[illegible] நாட்டியமாடுகிறார்! ஹரிதாசர் கையினின்று [illegible] டித்து அந்த வாசல் முற்றிலும் குதித்துக் [illegible] சுற்றி வந்து ஜனங்களைப்பார்த்து "கிருஷ்ணனை [illegible] கிருஷ்ணனையே நினையுங்கள்; கிருஷ்ணனுடைய [illegible]களையே பேசுங்கள்; காலம்விரைந்து செல்கின்றது; கிருஷ்ணனே அன்பே யோருருக்கொண்டு வந்ததென்னலாம் படி பிரகாசிக்கின்றான்" என்று பலவாறுரைக்கிறார்! எதிரில்ஸ்ரீ கிருஷ்ணனைப் பஜித்து அவனுடைய கிருபைக்குப்பாத்திரரான ஒருவரைப்போன்று கதாதரர் நடித்து நிற்பதால் ஜனங்கட்கு ஹரிதாசர் சொற்களின் பயன் நன்கு தோன்றியது.

மற்றோர்தோழி யச்சமயத்தில் கதாதரரான கோபிஸ்திரீயைப்பார்த்து "வெகுநேரமாயிற்று. நாம் பிருந்தாவனத்திற்குப் போக வேண்டுவதில்லையோ?" என்னவும், அவள் நடித்துக்கொண்டே போயினாள்.

சுக்லாம்பரர் (நாரதரைப்பார்த்து)—நாமும் அவர்களுடன் பிருந்தாவனத்திற்குச் சென்று கிருஷ்ணலீலைகளைத் தரிசிப்போம்.

நாரதர்—ஏன்! இது பிருந்தாவனமன்றோ?

சுக்லாம்பரர்—ஸ்வாமிகளே! நீர் என்ன பைத்தியம் பிடித்தவர்போல் பிதற்றுகின்றீர்! இதைப் பிருந்தாவனம் என்றெப்படி நினைப்பீர்?

நாரதர்—நீரேசரி. ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தன்பக்தர்களை யெல்லாம் பரமானந்தத்தால் பித்தர்களாக்குகின்றார். நாம் பிருந்தாவனம் போகலாம். எனக்கு வழிகூடத் தோன்றவில்லை யாதலால் என்னை யழைத்துப்போம்.

(இஃது நாரதஸ்வாமி கண்ணீர்ப்பெருக்கத்தால் குருடனைப்போல் வழிகாணாது திகைப்புற்றதாலென்க) அப்போது அவரைப்பார்க்க வெகு கம்பீரமாயிருந்தது.

சுக்லாம்பரர் (கோபத்தோடு)—என்ன ஸ்வாமி! இப்படி நகர்ந்து நகர்ந்து நாட்டியமாடினால் நம்மால் பிருந்தாவனம் போக முடியாது.

நாரதர்—ஏன் அவ்வாறு சொல்லுகிறாய்?

சுக்லாம்பரர்—தேர் அசைவதும் ஆமை நகர்வதும் தேவையில்லையே! ஒரு அடி யெடுத்துவைத்து ஒருமணிநேரம் நாட்டியமாடினால் நாம் அந்த திவ்யதேசத்தைச் சேருவதற்குப் பல்லாண்டு செல்லுமே!

நாரதர்—என் அன்பரே கேட்பீர்! நாம் இப்பொழுது எங்கு செல்கின்றோம்! பிறப்பு இறப்பு ஆகிய கடலில் எழுந்தும் விழுந்தும் தத்தளிக்கின்ற ஜீவகோடிகளின் துன்பத்தைத் துடைத்து அவரவர்க்கு வேண்டிய மனோரதத்தையீடேற்றி அழியா நிலைமை யாகிற மோக்ஷ வீட்டை யடையச் செய்கிற ஸ்ரீகிருஷ்ணன், அவன் பரமகருணா நிதி! எக்காலத்திலும் எவ்விடத்திலும் அவன் சுந்தரமுகமும் மந்தகாசமும் குழலினோசையும் அழகு வார்த்தையும் யாரைத்தான் மயக்கவில்லை! எவர்தாம் அவர் வசப்படார்! இரும்பை யிழுக்காத காந்தமும் சுரும்பை யிழுக்காத தாமரையும் எங்கேனு முண்டா! அத்தகைய கண்ணன், மணிவண்ணன் வாழ்விடமாகிய பிருந்தாவனம் சென்று அவனைத்

தரிசிக்கப் போகிறோம், இப்பிறவியை யிழக்கப் போகிறோம், இறப்பைத் தடுக்கப்போகிறோம், ஆனந்தமடையப் போகிறோம் என்கிற பரம சந்தோஷம் அங்குசெல்வதற்கு முன்னரே என் மனத்தில் பொங்குகின்றது! வீட்டைத்துறந்து காட்டையடைந்து காற்றைப்புசித்து கடுந்துன்பப்பட்டாலும் பரப்ரம்ஹமாகிற அவன் நம்பாவிரங்குகின்றானில்லை! இஃதிவ்வாறாயினும், பக்தியினால் பெருமானைப் பூசிக்கும் கோபஸ்திரீகளுக்குப் பிருந்தாவனத்தில் ஸ்ரீக்ருஷ்ணனாகக் காட்சிகொடுக்கிறார்! பிரம்ஹாதி தேவர்கட்கும் சனகாதி தபோதனர்கட்கும் அரியன், பக்தர்களுக்கு எளியன்! இவ்வுளவறிந்து நான் பிருந்தாவனஞ் செல்லுங்கால், ஆனந்தக்களிப்பால் ஆடாமற் போவேனோ!

* * * * *

இருந்தாற் போலிருந்து இதுவரையும் காணாத நிச்சப்தம் விளைகின்றது! நின்ற மாடுகள் நின்று கொண்டேயிருக்கின்றன! மரமும் ஆடவில்லை! செடியும் அசையவில்லை! இதுகாறும் மங்கி மணமற்றிருந்த பூக்கள், புதிதாய் ஏதோ பொலிவுபெற்றிருக்கிறதாய்த் தோன்றுகின்றன! வாடி வதங்கியிருந்த இலைகளும் தளிர்களும் பசுமை பூண்டு விளங்குகின்றன! சிறிது முன்னர் நெருப்பு வீசிய காற்றும் தன் கொடுமை நீங்கி மந்தமாருதமாய் வீசுகின்றது! ஓடியமான் நின்று விட்டது; ஆடியமயில் அடிபெயர்க்கவில்லை; கூவியகுயில் குரலெடுக்கக் காண்கிலோம்: ஒவ்வொருவர் மனதும் லயித்திருப்பதாய்த் தோன்றுகின்றது: சந்தடிமாத்திரம் காணோம்: இவ்விந்தை யென்னாயிருக்கலாம்!

இவ்வகை எங்கும் நிச்சப்தமாயிருந்த போதினும், மெல்லிதாய் வீசும் காற்றிற்கலந்தும், செடிகொடிகளில் நுழைந்து அவைகளைப் பசுமையுறச்செய்தும், பூவிற்படிந்து மணம்வீசியும், வெகுநுண்ணிய சரடுபோன்ற இனியநாதம், இயற்கையமைதியையே ஸ்ருதியாதாரமாய்க் கொண்டு, நாரதர் பால் நெருங்கிவருவதை அவர்கவனித்தார்; இஃதோ, அப்போது நிகழ்ந்த ஓசையின்மைக்குக் காரணமா யிருக்குமென்று மறிந்தார். சிறிது போதுக்கெல்லாம், அந்நாதகீதம் வரவரநெருங்கி சோலைகளையும் சாலைகளையும் பூந்துணர்நிறைந்த பொற்பமரிடங்களையும் தடங்களையும் நிறைத்துப்பூரிக்கச்செய்து விளங்கிற்று. இதுமாத்திரமா! அங்கிருந்த ஜீவராசிகளின் மனமாகிற பூக்களும் மலர்ந்து அசைவற்றிருந்தன.

நாரதர்—

"பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்து சூழ்ந்து
படுகாடுகிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பறப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்
செவியாட்டகில்லாவே"

"மருண்டுமான் கணங்கள் மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லுங் கடைவாய் வழிசோர
இரண்டுபாடுந் துலுங்காப்புடை பெயராவெழுதி
சித்திரங்கள்போல நின்றனவே"

"மரங்கணின்று மதுதாரைகள் பாயு மலர்கள் வீழும்
வளர் கொம்புகள் தாழும்,
இரங்குங் கூம்புந் திருமால் நின்ற பக்க நோக்கி
யவை செய்யுங்குணமே"

என்றின்ன பலவகை யற்புதங்களை விளைவித்த ஸ்ரீகிருஷ்ணனுடைய குழலோசை எனக்குக்கேட்கின்றது. இதனாலேயே கண்ணன் வருகை நிச்சயம் என்று நம்பலாம். இப்போதே என்னை யான் மறந்து மெய்தடுமாறுகிற ஏழையேன் நேரில் கண்ணனைப்பார்த்தால், முற்றும் அவர் வயப்பட்டு அவருடைய லீலைகளைப் பார்க்க முடியாமற் போய்விடும். சாதாரண வெளிச்சத்தால் கண்தெரிவதும், அளவுகடந்த ஒளியால் கண்மங்குவதும் கண்டிலோமா? ஆகையால் நான் இங்கு அருகாமையிலேயே மறைந்து நின்று பார்ப்பேன்.

இவ்வாறு நாரதர் சொல்லிப் போகவும், ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தம்நண்பர்களான ஆயர்ச் சிறுவர்களுடன் வந்தார். பாலகிருஷ்ணவேஷம் 76-வயதாகிய அத்வைதரால் போடப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணனே யவர்சரீரத்தினுட்புகுந்ததால் அவ

ருடைய கிழத்தன்மை முற்று மறைந்தது. மாத்திரமே யன்றி கண்ணனுடைய சுந்தரக்கோலமும் சுயம்பிரகாசமும் அவர்பால் உண்மையிற்றோன்றின. தேஜசும் தோன்றிற்று. அவனது பவளச் செவ்வாயினையும், தாமரைமுகத்தினையும், இரண்[illegible]ள்களையும், மந்தகாசத்தினையும், கம்பீரநடையையும் பார்த்து அனைவரும் ஆனந்த மடைந்தனர்.

ஸ்ரீகிருஷ்ணன் (ஸ்ரீதமன் என்ற இடையனைப்பார்த்து)—இப்பிரபஞ்சத்தினுள்ளே பிருந்தாவனத்தைப் போன்ற, இன்பத்தைத்தரத்தக்க இடங்கண்டிலேன். இவ்விடத்தில் புஷ்பங்கள் தங்களதியற்புத வர்ணத்தினால் [illegible]போர் கட்புலனுக்கு அத்யந்த விஸ்மய விளைவிப்பதல்லாது மூக்கினுக்கும் தங்கள் சுகந்தத்தினால் பரம சுகத்தை யுண்டு பண்ணுகிறது. பக்ஷிசாதிகள், தமதினிய கானத்தினால் கேட்போர் செவிக்கபரிமித மகிழ்ச்சியை யுண்டாக்கும்; தென்றற்காற்று உடலில் ஸ்பரிசித்தலால் அளவிலா ஆனந்த மளிக்கும்; எல்லாப்பக்கங்களிலும் மனோரம்மியமேகுடிகொண்டு அதனால்விளைவிக்கப்படும் இன்பத்தினுக்கு ஒருவிரோதமுமின்றி யிருப்பதால் இந்தவிடம் அவ்வளவு சுகமாயிருக்கிறது.

ஸ்ரீதமன்—ஆமாம்! பிருந்தாவனம் வெகுசுகமாகத்தானிருக்கிறது. குயவனிட மகப்பட்ட மண்போல் உம்மிடம் தவிக்கும் இச்சடப்பொருள்களே இவ்வகை விநோதஞ்செய்யின் நீரும் நும்முடைய லீலைகளும் பதின்மடங்கதிக சுகமாயிருக்குமென்று சொல்வதில் என்னதடை?

ஸ்ரீகிருஷ்ணன்—மாது மங்களன் எங்கே? அவனை யிங்குகாணவேயில்லையே! [மாது மங்களர் என்பவர் ஸ்ரீகிருஷ்ணனைப் பலவிகடங்களால் உத்ஸாகப் படுத்தும் விதூஷகராகிய பிராமணச் சிறுவர்.]

(மாது மங்களர் வருகின்றார்.)

மாது மங்களர் (மேல் மூச்சுவாங்கிக்கொண்டே வந்து கிருஷ்ணனைப்பார்த்து) அன்பரே! ஒருசமாச்சாரம் கேட்டீரா!

(தன்னைச்சுட்டிக் காண்பித்துக்கொண்டு) இந்தப்பார்ப்பானைச் சற்று நேரத்தில் கொன்றுவிட்டிருப்பார்களே! உங்களுடைய ஆசீர்வாதத்தினாலல்லவோ பிழைத்தேன்! என்னெதிரே மிகத் தள்ளாத கிழவியொருத்தி சில ஆயர்சிறுமியர்களையழைத்து வரக்கண்டேன். அக்கிழவி சூன்யக்காரியென்பதற்குச்சந்தேகமேயில்லை. அவள் பலியிடுவதற் கென்று பர்ப்பாரப்பையனைத் தேடித்தான் வந்திருக்கவேண்டும். நான்அவளிட மகப்பட்டுக் கொண்டிருந்தால் என்னைச் சிவனுக்குப் பலி யிடுவதிலென்ன தடையிருக்கும்! ஆனால் நானகப்பட்டேன் என்று நினைக்கிறீர்கள்! ஒரே ஓட்டமாய் ஓடி யிங்குவந்து சேர்ந்ததால் தப்பித்துக்கொண்டேன்.

ஸ்ரீகிருஷ்ணன் (சுபலன் என்ற இடைப்பையனைப்பார்த்து)—இந்த மந்தி சொல்வதில் யார் வந்திருப்பார் என்று நினைக்கிறாய்?

சுபலன்—ஒருவேளை ஸ்ரீராதா தன் தோழிகளுடன் அவ்வழியே வந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

மாது—அப்படியா! வருவது ராதாவாயின் அவள் ஸ்ரீகிருஷ்ணனுடைய வலையிற் சிக்கிக்கொள்வாள் என்பதற்கு யாது தடை? இவர் தாம் எச்சிறுமியர் ஏமாறுவரோ வென்றும், எவரைத்தம் வயப்படுத்தி விடலாமோ வென்றும், தூண்டில்போட்டுத் திரிகின்றாரே! அதற்கிணங்க, இவருக்கு அழகையுமா தெய்வங்கொடுக்கவேண்டும்! தாமரைமுகமும், திலதநன்னுதலும், கொவ்வையிதழும் குறுமந்தகாசமும் எவரைத்தான் மயக்காது! போதும் போதாதென்று கீதமும் அணிந்து வாதம் செய்கின்றாரே!

(ஸ்ரீராதாவும் தோழிகளும் வருகின்றார்கள்.)

கௌரங்கஸ்வாமிகள் ராதாவேஷமும் நித்யாநந்தர் பாரை வேஷமும் கதாதரர்முதலியவர் தோழிகள் வேஷமுந் தரித்து வந்தனர். கௌரங்கஸ்வாமி தான்முந்தி அத்வைதருக்கு வேடிக்கையாய்ச் சொல்லியிருந்தபடியே ஒரு தெய்வலோகத்து ஸ்திரீயைப்போல் தோன்றவும் சபையிலுள்ள ஜனங்கள் சித்

தங் கலக்கமுற்றார்கள். அந்த வேஷத்தைபார்த்து "இவர்பண்டிதர் நிமையேயாம்" என்று எவராலுஞ்சொல்ல முடியாதபடி ஸ்வாமிகள் மாறிவிட்டனர். அவர் குரலில்கூட ஆண்குரல் தன்மைபோய் பெண்குரல்தன்மை வந்திருந்ததால் உண்மைத் தோற்றம் பெற்றிருந்தனர்.

முன்தான் வருவதாய் வர்ணித்துள்ளதில் ஒன்றும் பொய்யாகாதபடி முற்றிலும் அவ்விதமே தோன்றினார். அங்கிருந்தார் மனம்திகைப்புற்றது! உள்ளங் கலங்கிற்று! கௌரங்கரேயிவ்வகை வேடம் பூண்டிருக்கிறாரென்பதை யொவ்வொருவரும் மறந்தார்; ராதாவின் அதிசுந்தரலாவண்யத்தில் மனம் லயிப்புற்று, வேறெவ்வகை நினைவையும் துறந்தார்.

அழகும் அற்புதமும், பொற்பும் புன்னகையும் பெற்று பூங்கொடியெனத்துவன்று, மாங்குயிலென இசைபயின்று அன்னமும் நாண அரும் நடைநடந்து ஸ்ரீகௌரங்கர் ராதாவாய்த் தோன்றினார்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

கிருஷ்ணலீலை நாடக முடிவு.

பலவகைப்பட்ட உலக நடைகளில், அவைபாற்படிந்தும் படியாதும் ஆத்ம லாபத்தையும் மோக்ஷசாம்பிராச்சியத்தையும் அடைய விரும்புவர்களுக்கு மூன்று வழிகளுள்ளன வென்றும், அவைதாம் ஞானம் பெறுதல, பக்திபுறுதல், சற்கருமஞ்செய்யல் என்பனவாமென்றும் மூதோர்கள் கூறியுள்ளார். இவ்வரும் பெரும் விடயத்தைப்பற்றி யீண்டுவிரிக்க வியலாது; ஏற்கவே முற்பாயிரத்தில் அளவுக்கு விஞ்சியே அஃது கூறப்பட்டிருத்தலான். ஆயினும், சுருக்கமாக, இங்கு கூறவேண்டுவது யாதோவெனில், ஸ்ரீகிருஷ்ண காதையில் பிரசித்தமாயுள்ள பிருந்தாவனம், துவாரகை, வடமதுரையாகிற மூன்று திவ்ய ஸ்தலங்களுள், பிருந்தாவனத்தில் பக்தி யிலக்கணங்களையும், வடமதுரையில் ஒருவாறு ஞானத்தையும் துவாரகையில் இல்லற நற்கருமங்களையும் பெருமானார் விளக்கியுள்ளாரென்பதேயாம்.

துவாரகையில் அவருக்கு 16,000 நாயகிகளென்றால் ஸ்ரீகிருஷ்ணனை தர்மஞ்செய்து கடைத்தேறியடைய விரும்புபவர் அந்த எண்ணினர், அதாவது மற்ற விருவழிகளால் கடைத்தேறுவோர் இதைவிட மிகக்குறைந்த வெண்ணினர் என்று அறியவேண்டும். நாயகிகள் இத்தனைபேரில் முதன்மையானவள் ருக்மணிதேவி. அவள் ஒரு ராஜகுமாரி, அவள் சகோதரன் அவளை சிகபாலன் என்ற ஓராசனுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று எண்ணினான். ஆனால் ருக்மணி ஸ்ரீகிருஷ்ணனுக்கே தன்னை யர்ப்பணஞ்செய்து விட்டாளானபடியால் தான் ஸ்ரீகிருஷ்ணனாகிய தன்னாயகனுக்கு ஒரு காமக்கடிதம் எழுதி ஒரு பிராமணன் மூலமாய் அனுப்ப ஸ்ரீகி

ஷ்ணன் வந்து பலாத்காரமாய் ருக்மணியை யெடுத்துப்போய் விட்டார். இக்கதை பாகவதத்திலுள்ளது. அதில் காமக்கடிதம் ஏழு ஸ்லோகங்களால் வரைந்துள்ளது. நிமைஸ்வாமிகள் அரங்கமேடையில் நடப்பனவொன்றுந் தெரியாமல் அங்குவருவதற்கு முன்னரே அத்வைத ஆசார்யரால் உடுக்கப்பட்டிருக்குந் தருணத்தில் ருக்மணியாக மாறித் தனது நகத்தினால் தரையில் ருக்மணி கிருஷ்ணனுக்கு கெழுதியதாக ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ள ஸ்லோகங்களை யெழுதுபவராய் சுற்றியிருந்தவர்கட்கும் தமது பேச்சுகளினாலும் நடக்கையாலும் ருக்மணியாகவே மாறினதாகத் தெரிவித்தார். இதன்றியும் ருக்மணி பிராமண தூதனைப்பார்த்துப் பேசியதுபோலவேஸ்வாமிகளும் எதிரில் பிராமண னொருவனு மில்லை யாயினும் பேசுவாராயினர்.

ஸ்வாமிகள் தம் காதலுக்குரிய கண்ணனுக்கு ருக்மணியாய்க் கடிதமெழுதுஞ் சந்தர்ப்பத்தில் ஸ்வாமிகள் பின்வருமாறு எழுதுவதாய் அங்குள்ளோர்க்குத் தோன்றியது. "ஹா! என்மனதைக் கொள்ளைகொண்ட அதிசுந்தரரூபனே! கிருஷ்ணா! உனக்கிது தகுமா? புவனமேழும் புகழத்தக்க உன் அழகைக் கண்டோ அல்லது வருணிக்கக் கேட்டோ, வேறெவ்வகையிலாயினும் அறிந்தோ வுள்ள யாவரே உன்மீது காதல்கொள்ளாதிருப்பர்! என் அறிவையும் மனதையும் நாணத்தையும் அறவே கொள்ளைகொண்ட அதி யற்புத ரூபனே, அரசர்களாலும் அமரர்களாலும், துறந்தவர்களாலுந் துறவாதவராலும் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாத காதற் களஞ்சியமே! வர்க்குக்கும் மனதுக்கும் வயப்படாது, வருடங்களோ அன்றி யுகங்களோ தவம்புரியுந் தன்மையர்க்கும் கிட்டாத பொருளே! நீயே யெம்பால் நெருங்கி, எம் மனத்தில் கரந்துறைந்து, காதல் விளைத்துக் கலக்கம் புரிவது முறையா! அவ்வாறு செய்தும் நேரில் தோன்றி யெம்மை யாட்கொள்ளாது மறைந்து வருத்துவதும் சரியா! நீ நாடு நகரெங்கும் வெண்ணெய் திருடினாய், பால் திருடினாய், தயிர் திருடினாய் என்று உன்னைவசை கூறி வைது-

திரிகின்றார் எண்ணில் பெயரிருக்க, அரசகுமரியாயினும் உன் தன் வனப்பையும் வார்மையையும், சிறப்பையும் சீர்மையையும் கேட்டுக்கேட்டு உன்மீதே மனமாகிற மாலைவீசி காமக்கண் பொருத்தி உன்னை யெப்போது காண்போம் என்று ஏங்கியழுது தேங்கித்திகைத்து, உள்ளம் நைந்து உடன் மெலிந்து ஒரு ஏழைப்பெண்ணை வருந்தச் செய்யின், அப்பாதகமும் பழியும் உன்னைவிட்டென்று மகலாது. ஏ! கண்ணா! இக்கணமே யிங்குவந்து ஏழையேனைக் கொண்டேகாவிடின் யான் உயிர் துறப்பேன்! இது நிச்சயம்! இது சத்தியம்!

சத்தியமே கேளிதனைச் சராசரங்க ளவையாவும்
    தழைத்து மோங்க
நித்தியமே யருள்புரியு நின்மலனே நின்பெருமை
    நிகழ்த்த வாரார்
புத்தமுதே பொன்மணியே புவனமெலாம் பொறிகலங்கும்
    பொற்பின் மிக்க
உத்தமனே யுயிர்துறப்பே னிக்கணமே யுவந்தென்னைக்
    கொள்ளாக் காலே
அழகினானை யிடயாரே யவதரித்தார் தொல்புவியி
    லறைவாய் சற்றே
பழுதறுநின் னிளநகையு முகவொளியும் பங்கயக்கட்
    செவ்வி தானும்
தொழுதகுமாற் குணக்கடலு மருட்பெருக்குந் தூயவிதழ்
    தூங்குங் கீதப்
பழச்சுவையு மெனைத்தூக்கிப் படித்ததுவே யாங்குன்பால்
    பரமா கேளாய்.

இப்படி நாணமச்சமில்லாமைக்கு என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் உலகத்தில் உன்னைப்பார்த்து மோகங்கொள்ளாத ஸ்திரீயார்? நாயேன் எனது சிரசை உனது சீர் பாதங்களில் வைத்துக் கடைத்தேறும்படி மாத்திரம் அனுக்கிரகஞ்செய்ய வேண்டும்." இவ்வாறு பாவனைதோன்ற எழுதி யிருகண்களில் நீர்பெருகவும் இறைஞ்சி மனதுருகவும், கண்ணீர் வீழ்தலால் எழுதியவையனைத்துங் கலைந்தழிந்து போக மறுபடியும் மறுபடியுமெழுதுவாள். அப்போதே பிராமண தூத

னைப்பார்த்துச் சொல்வாள் "பிராமணகுல சம்பன்னரே! நீர் கிருஷ்ணனிடஞ்சென்று என்னைப்பற்றி யெல்லாவற்றையுந் தெரிவியுங்கள். என்னிலை யுமக்குத் தெரியுமல்லவா? ஒரு சிறுகடிதத்தில் எல்லாமெழுதித் தெரிவித்த லசாத்தியம். மேலும், நான் சிறுபெண்தானே! இயற்கை நாணத்தினைத் தவிர்த்து அச்சத்தினை யொழித்து மனதிலிருப்பனவற்றை யெல்லாஞ் சடிதத்திலும் எழுதுவது முடியாதல்லவா? ஆனால் நான் நாடோறும் மனத்துயரினால் பலங்குன்றி உயிர்துறக்கு நிலையடைந்தேன் என்று சொல்லும். ஊணுமின்றி யுறக்கமுமின்றித் துயருறுகின்றேனெனக்கூறும். அவருடைய பாதகமலங்களை நாடுபவருக்கு அபயங்கொடுத்தலே விருதாகக் கொண்டிருப்பவர் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியே யென்று நூல்கள் கூறுவது சத்தியமாயிருப்பின் உடனேவந்து என்னையழைத்துப்போகும்படி கேளும்."

ஸ்வாமிகள் இவ்வகை பித்தம் பிடித்தவர்போல் பிதற்றிக்கொண்டிருந்தபோது ஸ்ரீகிருஷ்ணவேடந்தரித்த அத்வைதர் இசைத்த குழலினிசை காதிற்படவும் ருக்மணியாயிருந்த ஸ்வாமிகள் அந்தக்ஷணமே ராதாவாக மாறிவிட்டனர், பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் புள்ளாங்குழல் இசைத்து ராதாவைக் கூப்பிட்டதை ராதா ஒருத்தியே கேட்டு கிருஷ்ணனிருந்த ஏகாந்த விடத்தை நாடித் தன் தோழிகளுடன் சென்றாள். அதுபோல்வே யிங்கு குழலிசை கேட்டவுடன் ராதாவான ஸ்வாமிகள் சுற்றிநின்றவர்களைப் பார்த்து "தோழிகளே! ஸ்ரீகிருஷ்ணனுடைய மனோகரமான குழலோசை நுங்கட்குக் கேட்கின்றதோ? கீதத்தால் போதஞ்செய்யும் நாதன் என்னையழைக்கிறான்; அவன் நேசத்திற்கு இஷ்டமுள்ளவர்கள் என்னுடன் கூடவந்தால் எல்லோரும் போகலாம். ஆனால் நான் சுவாதீனத்தை யிழந்தவளானேன். என்னால் யாருக்காகவும் காத்திருக்கமுடியாது" என்று சொன்னார்; உடனே எழுந்து வாராதிருந்த பெண்களைப்பார்த்துக் கோபித்தவராய் "நீங்கள் வருவீர்களா? இல்லையா? ஏன் யோசிக்கின்றீர்கள்? நீங்கள்

லௌகிக கார்யங்களை யொழித்துச் சற்று வாருங்கள்; ஏனென்றால், அப்படிப் பற்றுக்களை முற்றுமொழித்துவிட்டு அவரை நாடி வருபவர்களையே ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ரட்சிப்பார்" என்றுரைத்துக்கொண்டே பிருந்தாவனத்தை ஸ்ரீகிருஷ்ணனை நாடினவராய் கதாதரரும் நித்யானந்தருமாகிய லலிதா, பாரை என்ற தோழியர்களும் மற்றவர்களும் பின்தொடர்ந்து வரவும் ஸ்ரீமான் பண்டிதர் ஓர் தீபம்கொண்டு வழிகாட்டவும், அரங்கமேடைவந்து சேர்ந்தார்.

இவ்விதமாய் அரங்கமேடையில் வந்து நின்ற ஸ்வாமிகளினதிசுந்தர முகவிலாசத்தையும், பவளச்செவ்வாயினையும் முத்தன்ன மூரலையும் இந்திர நீலத்தின் ஒளியைப்பழிக்கும் நாசியையும் அன்னநடையின் மேன்மையையும் ஸவர்ணமயமான திவ்யதேஜஸையும் பார்த்து மயங்காதார் ஒருவருமில்லை. அங்கு தோன்றிய அவரும் மற்றவர்களும் தேவலோகத்தவர்களாகவே காணப்பட்டார்கள். அதனால் வேடிக்கை பார்க்க வந்த ஜனங்களனைவரும் திப்பிரமைகொண்டவர்களாய் சற்று மௌனஞ்சாதித்து பின் ஆநந்த மிகுதியால் கரகோஷஞ்செய்து நல்வரவு கொண்டாடினார்கள்.

ராதாவும் தோழிகளும் வருவதைப்பார்த்து மாதுமங்களர் ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி, "நாம் இங்கு மறைந்து நின்று இப்பெண்கள் என்ன செய்கிறார்கள் பார்ப்போம்" என்று சொல்லவும் எல்லாரும் ஓர் செடிமறைவில் ஒளிந்து கொண்டார்கள்.

ராதா (நிமைஸ்வாமிகள்)—லலிதாவைப்பார்த்து சொல்லுவது—என் பிரியசகி, நாம் சிவபிரானைப் பூஜிக்க எல்லாம் கொணர்ந்தோம், புஷ்பங்கள்மட்டும் வாடிப்போகும் என்று கொண்டுவரவில்லை.

லலிதா (கதாதரர்)—அதற்கென்ன? பிருந்தாவனத்தில் பூவிற்கு என்ன பஞ்சமா? கற்பக விருக்ஷத்தினடியில் கஞ்சிக்கழுவானேன்?

ராதா—ஆம், பூவுக்கு என்னவோ குறைவில்லை; ஆனால் நாம்

தங்கியிருக்தல்லவோ பூப்பறிக்கவேண்டும். இங்குதிரியும் கொடுங்கழுதைகளை நினைக்க உடல் நடுங்குகின்றதே.

மாதுமங்களர் (மறைவாக ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து)—அன்ப! இப்பெண்களின் கர்வத்தைக் கவனித்தீரா? இவர்கள் ஊர்திரிவதுமன்றி நமக்கும் வைத்தார்கள் சொட்டு.

ஸ்ரீகிருஷ்ணன்—எனக்கு ஒன்றும் தெரியவில்லையே.

மாதுமங்களர்—நான் சொல்லுவது உமக்குத்தெரியவில்லையா? நியாயம்தான், உம்மைப்போல் இப்பிரபஞ்சத்தில் வேறு மூடாத்துமா உண்டோ? இல்லாவிடின், நீர் ஏன் மாடுமேய்த்தற்றொழிலை வகித்தீர்? உம்மடியார்களான எங்களையிப்பேதையர் மரியாதையின்றி காட்டுக்கழுதைகள் என்று சொல்லுவது நியாயமல்ல. எங்களைத்தவிர வேறு யாரைச்சொல்லியிருக்கக் கூடும்? தெரியாததுபோல் நடிக்கிறீரே! நீரும் காரியவாதிதான்!

ராதா (லலிதாவிடம்)—நாம் இங்கு நின்று மல்லிகைப்பூ பறிப்போம்.

பாரை (ராதாவைப்பார்த்து)—குழந்தாய், அப்படிச் செய்யாதி, ஏனெனில் நீ கிருஷ்ணன் கையில் அகப்பட்டுக்கொள்வாய். கிருஷ்ணன் அப்பூவுக்குப் பிராணனை விடுகிறானென்பதுனக்குத்தெரியாதோ? மல்லிகைப்பூவில் மதுவுண்ணும் வண்டாயிற்றே அவன்!

லலிதா—நம் சகி (ராதா) ஸ்ரீகிருஷ்ணனிடம் அகப்பட்டுக்கொண்டால் உம்மை யீடாகவைத்து விடுவித்துக்கொள்வோம்.

இவ்வாறு பூக்கொய்துக் கொண்டே யிவர்கள் உல்லாசமாய் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில், ஒரு தேனீ ராதாவின் முகத்தை ஓர் நறுமலரென்று நம்பி மொய்த்தது. அவள் அதற்குப்பயந்து தன்வலது கையினால் தடுத்துக்கொண்டே லலிதாவைப்பார்த்து: “இத்தேனீ என்னை மிக வருத்துகின்றது. என்னைக்காப்பாற்று” என்று கூறினாள்.

லலிதா—நீர் ஆபத்திலிருந்தால் ஸ்ரீகிருஷ்ணனை யழையும் அவர்தான் வருந்துபவர்களுக் கபயங்கொடுத்து ரட்சிப்பார். காலால்வந்தால் நாழியாகுமென்று காற்றாய்வருவார்! (ராதா நாணுகிறாள்.)

மாதுமங்களர் (ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து)—நண்பரே! நீர் அவர்கள் முன்போகிறதற்கு இதுவே நல்லசமயம், ஏனெனில் உம்மை ஒரு விதமாய் அழைத்து விட்டார்கள் நேராயழைக்க யாவரே வல்லார்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும்!

ஸ்ரீகிருஷ்ணன்—அன்ப! நீரப்படி சொல்லுவது மடைத்தனம். ராதாவின் கமலமுகத்தினழகை யுட்கொள இம்மறைவிடமன்றோ தகுந்தது? இதைக் கெடுத்தலிற் பயனில்லை. தேனீ தொந்தரைசெய்வதால் அவள் வதனம் நூறு மடங்கு அதி சுந்தரமாயிருக்கின்றது. நான் எதிர் சென்றால் இம்மனோரம்மியமான காட்சி பறந்துபோமே * * * ஆனால் நான் திடீரென் றெதிர்போய் நிற்பதால் அவள் முகமாறுதல் இன்னம் நன்றாக விருக்கும்! ஆகையால் இதோபோகிறேன்.

இவ்வாறு சொல்லி எதிர்சென்று லலிதாவைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுவது—நீங்கள் யார்? உங்களைப்பார்த்தால் பெண்கள்போல்தான் தோன்றுகிறது. பெண்களா நீங்கள்! ஆனால் நாணம் அச்சம் இல்லாமைக்கு ஆச்சரியப்படுகிறேன். உங்கள் முகத்தில் களங்கமில்லாவிடினும், நடத்தை மிகத்துணிகரமாயும் கண்ணியமற்றதாயுமிருக்கின்றது. இங்கு நீங்கள் பூக்கொய்வது யார் அநுமதியால்? பூக்கொய்வதல்லாமல், செடிகொடிகளை நீங்களே சொந்தக்காரர்போல் சின்னபின்னப்படுத்திக் காலால்நசுக்குகின்றீர்கள். இருங்கள், உங்களுக்குத் தகுந்த சிக்ஷைசெய்கிறேன்.

பாரை—கிருஷ்ணா! நீ எப்போதும் ஓர் நிலையற்ற வாலிபன் ஸ்த்ரீஜாரன்! ததிசோரன்! உன் நியாய வநியாயம் இன்னவை என மானிடராகிய எங்களுக்குப் புலப்படவில்லை.

உன்னையார் இப்பிருந்தாவனத்துக்கு அரசனாக்கினர்? இவ்வனம் உனக் கெவ்வளவு சொந்தமோ அவ்வளவு சொந்தம் எமக்கில்லையா? சமுத்திரத்தீரத்தில் ஐந்து வேலி சொந்தமென்பதுபோல் பேசுகிறாயே!

மாதுமங்களர்—அடி, கிழவி! உனக்குப் புத்திமழுங்கிப்போயிற்று. நீயிந்தசிறுமியர்களுக்கு நற்புத்தி சொல்லி இவ்வாறு அதிக்கிரமியாதிருக்கச் செய்வது போக, நீயே, இவர்களைத் தூண்டிவிடுகிறாய்! ஆவதும் அழிவதும் பெண்களாலாயினும் முக்கால்பங்கு இந்த கிழப்பிணங்களால்தான்!

பாரை—ஆம், நான் கிழவிதான், நீரும் வாலிபர்தான்! நீர் பிராமணராயிருந்தும் உமது புத்தி கழுதை புத்திதான்.

லலிதா (மாதுமங்களரை நோக்கி)—அடே, கிழப்பிணமே! உன்னையிங்காரழைத்தார்கள்? இவ்விஷயங்களிலெல்லாம் நீ ஏன் தலையிட்டுக் கொள்ளுகிறாய். அழையாவீட்டுக்கு நுழையாச் சம்பந்தி நீதான்!

மாதுமங்களர்—நான் கீர்த்திபெற்ற பிராமணன்? பிருந்தாவனத்துக்கு ராஜன் ஸ்ரீகிருஷ்ணன்! நான் அவருக்கு மந்திரி, புரோகிதர்! இதுதெரியாமல் வீணாய் ஏன் பேசுகிறாய்?

பாரை—கிருஷ்ணா! பிருந்தாவனம் கோபியரது. உண்மையாய் இந்த புஷ்பங்களின்மேல் உனக்குப் பிராணனிருப்பின் அதைப்பற்றி சண்டை செய்வதில் யாது பலன்? நான் சொல்வதைக்கேள். ராதாவின் பாதங்களில் விழுந்து பூவையிரந்துகேள். அப்போது உனக்கு கிருபைசெய்து புஷ்பங்கொடுப்பாள்! அவள் கருணைக்களஞ்சியம்! சமாதானத்திலாவது சண்டையிலாகாது என்றுனக்குத் தெரியாதா! என்று சொல்லிக்கொண்டு ராதா கையைப்பிடித்து அவள் கையிலிருந்த புஷ்பங்களை ஸ்ரீகிருஷ்ணன்மேல் போடும்படி செய்தாள்.

ராதா—புன்சிரிப்புடன் நாணினவளாய் பாரையை நோக்கி, "என்னருமைமாதே! ஏன் செய்தீர்? சிவனைப் பூஜிக்க இப்பூக்கொய்தேன். அதை என்ன கெட்ட உபயோகஞ் செய்தீர்"

பாரை—நாம் வீட்டுக்குத் திரும்பிப்போவோம்! அவர்களோ இங்கு பலசாலிகள்! அவர்களுடன் சண்டைக்கு நிற்க நம்மால் முடியாது!

ராதா—நாம் சிவனைப் பூஜிக்க வெண்ணிவந்து சும்மா போகலாமா?

மாதுமங்களர்—ஆனால் நீங்கள் அப்படிவந்தது ஒன்றுக்கு; நடப்பது வேறொன்றாய் முடிகிறதே, போக முடியுமா? இந்த பிருந்தாவனத்தினுட் புகுந்துவிட்டு கப்பணங்கொடாமல் போகவிடுவார்களா?

பாரை—கப்பணமா? என்னகப்பணம்? அதுயார் ஏற்படுத்தினார்? கைப்பணமிருந்தாலன்றோ கப்பணங் கொடுக்க முடியும்?

ஓர் இடைப்பையன்—இவ்வனத்துக்குத் தலைவர் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியாயிற்றே! அவர் இங்கு வருபவரொவ்வொருவரும் வரிகொடுத்துவிட்டே போகவேண்டுமென்றுத்தரவு செய்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? கப்பணம் இல்லாவிட்டால் ராதா தன்னையே அர்ப்பணஞ் செய்வதுதானே!

இவ்வாறு சற்று வாக்குவாதமானபிறகு வெட்கப்பட்டுத் தலைகுனிந்து நின்ற ராதாவைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் "நீ எனக்கு கப்பணங் கொடுக்கவேண்டுமல்லவா? கொடு" என்று கேட்கவும், ராதா தான் பரம ஏழையென்று சொல்லவும் ஸ்ரீகிருஷ்ணன், "அப்படியாயின், உன்னையே கொடுத்துவிடு" என்று சொல்லி ஸ்ரீராதாவைப் பிடிக்கப்போவதற்குள் பாரை நடுவில்வந்து தடுப்ப, அவளைத் தள்ளிவிட்டு ராதாவையெட்டித்தொடவந்த தருணத்தில் ஒரு விநோதந் தோன்றியது.

இதுகாறும் சந்திரசேகரர் வீட்டில் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி முதலியோர்களே தேவலோகத்தினின்றும் வந்திருந்து நடித்தார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் ராதாவைப் பார்த்துப் பேசும் பாகம் மிகத் தெய்வத் தன்மை வாய்ந்ததால் அனைவருடைய கண்ணுக்கும் தோற்றுவித்தற்குத் தகுந்ததன்றென்று தெய்வ

லோகத்தினின்று வந்தவர்க ளனைவரும் திரும்பித் தேவலோகஞ் சென்றார்கள். அதாவ தென்னவென்றால் அதுவரையில் தெய்வலோகத்தவர்கள் அங்கிருந்த பக்தர்கள் சரீரங்களினுட்புகுந்து அவர்களுக்கு தாங்கள் செய்த செய்கைக்கும் பேசின பேச்சுகட்கும் காரண மென்னென் றறிய வொட்டாதபடி பம்பரம்போ லாட்டுவித்து அத்தருணத்தில் விட்டுவிட்டுத் தங்களிருப்பிடமாகிய தேவலோகஞ் சென்றனர்.

ஆனால் கௌரங்கஸ்வாமி மட்டும் ராதாவாகவே யிருந்தார். அவர் அரங்கமேடைக்கு வந்தபோது ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரிய நாயகியாக வந்தார். இப்போதும் ராதாவாகவே யிருப்பினும், பிரபஞ்சத்திற் கெல்லாம் மாதாவாய்த் தோன்றினர்.

அப்போது ஸ்வாமியைப்பார்த்த வனைவரும் எதிரினின்றவர் தந்தம் தாயார் என்றே நம்பினர். தாங்கள் வயதுமுதிர்ந்த மனிதர் என்பதைக்கூட மறந்தவர்களாய் தாய்க்குமுன் சிறு குழந்தைகள் நிற்பது போலவே யெண்ணி நின்றார்கள். "அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்" என்றார் ஔவைப்பிராட்டியார். தாய் தந்தையரிருவரிலும் தாயே அதிகம் என்று காட்டுவான் "அன்னையும்" என்று முன்னர் அமைத்தனர் என்று அறிவினோர் கூறுகின்றனர்கள். தந்தையாரிடத்தில் சிறிது அச்சம் புதல்வருக்கிருக்க, தாய்மாட்டோ அவர்களுக்கு அளவிறந்த ஆசையும் ஆதாரமும் அச்சமின்மையும் பெருகிக் காட்டுகின்றன. "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்பது மூதோர் மொழியாக, தாய் பாலன்றித் தண்மையுமில்லை என்று சொல்லுதலும் உண்மையுறுதி பெற்றிருப்பதேயாம். தாயே தயைக்கிருப்பிடம்! தாயே தண்மைக்குறைவிடம்! தாயின் அருளே தருமத்திற்குக் காரணம்! தாயின் மொழியே இன் சொல்தருவது! தாயின் கொள்கையே தருநலம் பயப்பது! ஓர் நற்றாய் தன்மனதாரத் தன்மகவை யெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து உடல்தடவி உள்ளம் நெக்குநெக்குருகி, பல கோடிமுத்தினும் விலைமதித்த ஒரு முத்தம் தருவளேல், அதன் மின்சார வன்மையையும், "சக்ஷுதீக்ஷை" யென்னலாம்படி, வாய்திறவாது பார்த்த மாத்திரத்திலே அருளுபதேசம் செய்யும் அமைப்பினையும் குழந்தைப்பருவத்திலே யறியாதார் யாவர்! அதையறியார் அறியாரே! அதையடையார் வறியாரே! இதை நோக்கியன்றோ குலசேகரப்பெருமானும்,

"அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவள்தன்
அருள் நினைத்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே"

என்று அருளிச்செய்தார். இவ்வகை, ஸ்வாமிகளே தாயின் தயையைவிளக்க வந்தாராயின், அதன் மேன்மையையும், அது இயற்கை வேறுபாட்டுகளின் குறைவுகளை யற்றிருக்கும் பெருமையையும் யாவரேசொல்ல வல்லார்!

உடனே ராதாவாகிய ஸ்வாமி சந்திரசேகரர்வீட்டு பூஜா மடத்தில் தனது பக்தர்களாகிய குழந்தைகளோடு பிரவேசித்து ஸ்வாமிக்கென்று வைத்திருந்த பீடத்திலுட்கார்ந்து சுற்றி நின்ற வன்பர்களை மாதா வாத்ஸல்யத்தோடு பார்த்தார். அனைவரும் ஸ்வாமியைப் பலவாறாய் ஸ்தோத்திரஞ் செய்தபின் ஸ்வாமி எதிரேநின்ற ஹரிதாசரை, தாய் தன்குழந்தையை யெடுக்கும் பாவனையாக, எடுத்து மடியில் வைத்துக்கொண்டார்.

அவர் இவ்வாறு தாயார்மடியினின்று பக்தியெனும் பாலையருந்திப்பசிதீரவும் மற்ற குழந்தைக ளிதைப்பார்த்துப் பொறுராகித் தங்களையும் எடுத்துப் பாலூட்ட வேண்ட, அப்படியே ஜெகன்மாதாவாகிய ஸ்வாமிகள் அனைவோர்க்கும் அன்பெனுந் தேவாமிர்தத்தை யுண்பித்துக் களிப்படையச்செய்தனர். அப்போது சூரியன் வானத்திலுயர்ந்து தோன்றி சிலநாழிகையாயினும் அவனது கிரணங்கள் செடிகளால் மறைக்கப்பட்டிருந்தனவாதலால் இவர்கள் அதனைக்கவனியாதிருந்தனர். என்றாலும் அங்கு நாடகத்தினை நன்கு ஆட்டிவைத்த சக்திகுன்றிவிடவும், ஒருவர் முகத்தினை மற்றொருவர்பார்த்து மதிமயக்கங்கொண்டவர் போ னின்றார்கள். பின்னர் இதுவரையில் தேவேந்திர

லோகத்து அத்யந்த சுகத்தை யனுபவித்துக் கொண்டிருந்தாற் போலிருந்த தோற்றம் நீங்கினதால் மனவருத்த முற்றார்கள்.

ஸ்வாமிகள் சந்திரசேகரர் வீட்டினின்றும் புறப்பட்டுப் போயினர். என்றாலும், தான் அங்கிருந்தது அனைவருக்கும் புலப்படுமாறு, மின்னொளியே ஆகாயத்தினின்றும் பூமியில் சஞ்சரித்து விளையாடவந்திருந்த தென்னும்படியாக வவ்வறையிலோர்வித பிரகாசம் எழுதினம் தங்கி யிருக்கும்படி செய்து போயினர் என்று கூடவிருந்து ஆனந்தித்த பக்திமான்கள் எழுதி வைத்திருக்கின்றனர். அங்கிருந்த பிரகாசம் அவ்வறையிற் சென்றோர் கட்புலனை மழுங்கச் செய்யும்படியான வவ்வளவு விசேஷித்திருந்ததாகவும் பலரால் கூறப்பட்டுள்ளதால் கௌரங்க ஸ்வாமிகளின் அவதார மகிமையை யனைவரும் ஒத்துக்கொள்வதற்கு இதுவே வோர் சான்றாகும்.

பதின்மூன்றாவது அத்தியாயம்.

சாந்திபுர விஜயம்.

ஸ்வாமிகள் ஓர்நாள் நித்யாநந்தரை விளித்து, "அன்ப! அத்வைதரும் ஹரிதாசரும் லீலாநாடக மாடியவுடன் தம் மூருக்குப்போன அன்றுதொட்டிதுகாறு மவர்களைக்கண்டு அளவளாவாது என் மனம் ஏங்குகின்றது! ஆனமையின் நாம் புறப்பட்டு சாந்திபுரம் சேர்ந்தாயினும் அப் பெரியோரைத் தரிசித்து உரையாடி வரலாம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். ஸ்வாமிகளது அதியாப்த சிநேகிதரானவரும் அவரது கூற்றினுக்குச் சிறிதும் எதிர்மாற்றம் பகராது அதை நிறைவேற்றுவதே கருமம் என எண்ணங்கொண்டவருமான நித்யாநந்தரும் ஆமோதித்து சசிதேவியம்மாளுக்கு மிக்க விநயமாய்த் தெரிவித்து அவருடைய அநுமதிபெற்றபின் இருவருமாகப் புறப்பட்டார்கள். சாந்திபுரமானது நதியாவைப் போலவே பகீரதி நதிக்கரையில் சுமார் பத்துமைல்கள் அதற்குக் கீழாக வுள்ளதோர் சிறுநகரம். அப்பட்டினத்தை நோக்கிச் சிறிதுதூரஞ் சென்றகாலை யிவர்கள் லலிதபுரம் என்ற ஊருக்கு வெளிப்புறத்தே தனி நின்ற ஒரு குடிலைநெருங்கி யாங்கு வசிப்போர்யாவர் என ஸ்வாமிகள் வினவவும், நித்யாநந்தர் "அதனுள் ஒரு சன்னியாசியும் அவர் இல்லாளும் வசிக்கின்றனர்" என்று தான் முந்தியே யறிந்ததை யுரைத்தார். உலகப்பற்றுகளை முற்றிலும் துறந்தவர்களே துறவிகள் எனப்படுவாராக மனைவியுடன் வாழுமவரும் சன்னியாசியாவரோ என்ற சங்கைகொண்டவராய் ஸ்வாமிகள், "நீத்தாரொருவர் [illegible] காதலியுடன் உயிர் வாழ்தல் பெருவிந்தையே! நாம் அந்த பக்திமானைத் தரிசித்துப் போவோம்" என்றுகூறி வாயில் திறந்துநின்ற அவ்வில்லினை நண்ணினர்.

நித்யாநந்தர் தாமும் ஒரு துறவியாய் அவ்வாச்சிரமத்திற்குரிய உடையே தரித்திருந்தாராதலின் அத்துறவியார் இவரையுடன்பிறந்தார்போல் பாவித்து மிக்க அன்போடு முகமன்கூறித் தம்முடன் ஓர் வேளையேனும் அன்னம் புசித்துப்போக வேண்டினர். நித்யாநந்தரும் தம்மை யாவரேனும் உணவருந்த வழைப்பின் சாலாது என்று சொல்வதில்லை யாதலான் அவ்வேளை அங்கு போசனஞ்செய்ய விசைந்தனர். ஆயின் ஸ்வாமிகளுக்குமட்டும் அவ்வளவு திருப்தியில்லாதிருப்பினும் மனக்குறையாகவே அங்கே யிருக்கவேண்டி யிருந்தது.

நித்யாநந்தருக்குப் பின்போன ஸ்வாமிகள் அந்நீத்தாரை யணுகித் தக்கபடி வெகுவணக்கமாய் நமஸ்கரித்தார். அதற்குத் துறவியார்: "கல்வியும் செல்வமும் செவ்வியான மனையாளும் பணிவான புத்திரர்களும் நினக்குக் கடவுள் அநுக்கிரகிப்பாராக!" என்று ஆசிகூறினர். அதைக்கேட்டு ஸ்வாமிகள் சிறிது அதிருப்தியுற்றவராய் "துறவியாய நீவிர் இன்னும் மேலான ஆசி கூறுவீர் என்றன்றோ எண்ணினேன்!" என்று மரியாதையாகவே செப்பினர். இம்மொழியைக்கேட்ட சந்நியாசியார் அதி கோபங்கொண்டவராய் ஸ்வாமிகளை ஏறவிறங்க நோக்கினர். ஆயின் ஸ்வாமிகள் வதனம் ஒரு சிறிதும் தமதியற்கையான சுத்த சாத்விகமும் குற்றமில்லாத தன்மையும் இழக்காது இருபத்துமூன்று வயதுக்குரிய இளமையும் சால வழகும் வாய்ந்து தோன்றினமையால் அப்பெரியோர் தமது கோபந்தணிந்து, "யான் கூறிய ஆசிமொழிக்கேன் மாறுகொள்கின்றீர்? மனிதருட் பல்லோரும் காமுறுவனவற்றையன்றோ உனக்கு கிடைக்குமாறு சொற்றேன்" என்று பகரவும், ஸ்வாமிகள், "நீர்க்குமிழியையும் மின்னலையும் ஒத்த நமதுடல்—இப்பிரபஞ்சத்திலுயிர் வாழ்தல் சின்னாளேயாகலான் அதற்குரிய இகசுகத்தான் மட்டும் திருப்தி யடைவதற்கு ஏலாது—ஜனநமற்றி தம்மைப்போன்ற மஹான்களிடமிருந்து இகபர சுகங்களுக்கெல்லாம் மூலமானதும் சிறந்த தெய்வப் பெருஞ்செல்வமானதுமான தெய்வபக்தியையே அடைய வெண்ணினேன்" என்றார். அந் நீத்தார் நோ

வெஞ்சினத்தராய் "இந்துசமுத்திரந்தொட்டு இமாசலபரியந்தமாகவுள்ள திவ்யதேசங்கள் யாவையும் சேவித்தும் புண்ணிய தீர்த்தங்களி லாடியும் வந்த எனக்கோ எனது கருமம் யாதெனக் கற்பிக்கப்போகின்றனை? சிற்றறிவுடைய வாலிபனாகிய நினக்கேன் இவ்வகந்தை!" என்று கடிந்தனர். இவ்விருவர் இன்னணம் வார்த்தையாடுதலை நோக்கி நித்யாநந்தர் மெல்லக் குறுக்கிட்டு வந்து, "ஸ்வாமீ! நீரேன் இச்சிறுவன் அவனது மடமையாற் பிதற்றுவதைச் செவிமடுக்கின்றீர்? உம்முடைய குணமேன்மையையும் வரம்பிலாஞானத்தையும் அடியேனறியேனோ?" என்று சொல்லவும், அவர் சிறிது தாபந்தீர்ந்து நிதை ஏதோ தன்காரியமாக இவ்விளைஞனை "சொக்குபொடி" தூவி, தன் வயப்படுத்தி அவன் நாட்டை விட்டு வரும்படி மயக்கி யழைத்துப்போகி றுன்போ லிருக்கிறது என்று நினைத்து அந்த தர்க்கத்தினை யம் மட்டே தாழ்த்திப்போய் சில கனிவர்க்கங்களைக் கொணர்ந்து விருந்தினர் முன் வைத்து கொஞ்சம் ஆநந்தமும் அருந்துவீரோ என்று நிதையை வினவினர். அத்தருணம் அவர் மனையாள் அவரைவிளிக்கவும், நல்லசமயம் வாய்த்தது என, ஸ்வாமிகள் ஆநந்தம் எனின்யாது என்று நிதையைக்கேட்கவும் அவர் புன்னகைபுரிந்து உண்பவருக்கு ஆநந்தம் விளைப்பது மதுவன்றோ வென்றனர்.

"ஹா! ஹா! இதென்ன விந்தை! விந்தையினும் விந்தையே! புதுமையினும் புதுமையே! இக்காலும் இப்படியே முநீஸ்வரர்களும் யோகீஸ்வரர்களும் ஸ்வாமிகளுமெத்தனையோ வாயிரம்பேர் பகுத்தறியாத பொதுஜனங்களை யேமாற்றி வஞ்சநெஞ்சப் புலையராய் தஞ்ச மடைந்தோரையும் வஞ்சித்து வாழ்வதும் அன்னமிடுவோர் வீட்டிலும் கன்னம் வைத்து வருத்துவதும் மேம்பாடுற்ற கருமமெனக் கைக்கொண்டு திரிவர்! உண்மையாகவே முற்றுந்துறந்த முநிவரொருவர் பின்வருமாறு தாம் உறுதியாய்க் கடைப்பிடித்த கோட்பாடுகளையும் ஆசாரங்களையும் பல்லோரும் அறிவரென்றேசொல்லினர்:

"சுற்றமுந் தொடர்பு நீத்தேந் தன்பமு மின்பமற்றேம்
வெற்றுடன் மானந் தீர்ந்தேம் வெறுக்கை மேல் வெறுக்கை வைத்தேம்

செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் தீவினை யிரண்டுந் தீர்ந்தேந்
தற்றுறவர் சடையான் கோலங் காட்டி யாட் கொண்டவன்றே,
தந்தைதாய் குரவ ஞான சங்கர னிராசை யெண்டிர்
மைந்தர்பல் லுயிருஞ் சுற்ற மாசிலா வீச னன்ப
ரந்தமில் பிறவி யேழு மடிபகை யென்ப தோர்ந்தே
யெந்தையார் கருணை காட்டி யெம்மையாட் கொண்டவன்றே.
ஊரெலா மட்ட சோறு நம்மதே புவனி சூழ்ந்த
பாரெலாம் பாய துன்னற் கோவணம் பரிக்கு மாடை
சீரெலாஞ் சிறந்த சாந்தர் தெய்வநீ றணி பூண் கண்டி
நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனுட் கொண்டவன்றே."

சந்நியாசியாச்சிரமதர்ம மிவ்வாறாக, இத்துறவிப்பெரியார் அப்பெயரையும் உடையையுமே தரித்தாரே யன்றி கிரகஸ்தனைப்போல் மனைவியுடன் ஒருசுகமான வீட்டில் வசித்தும், கிரகஸ்தனும் தவிர்க்கும் மதுபானத்தை யேற்று மொழுகுகின்றார்!" என்று ஸ்வாமிகள் நினைத்து வருந்தினர்.

'மது' வென்ற சொல்லைக் கேட்டபோது ஓர் யாளியினிடம் அல்லது பூதத்தினிடம் தான் அகப்பட்டுக்கொண்டவர் போல ஸ்வாமிகள் பயந்தவராய்த் தம்முன் இட்ட வுண்டியை யங்ஙனே விட்டுச் சரேலென்று எழுந்து நித்யாநந்தரையும் வரும்படி சைகை காட்டிவிட்டு ஒரே ஓட்டமாய்க் குறுக்கே குதித்துப் பாய்ந்து நீந்துவாராயினர்.

செய்யத்தகாத காரிய மேதாவ தொன்றைச் செய்யும்படி ஒருவர் தம்மைத் தூண்டுவாராயின் அவரருகில் சிறிதேனும் நில்லாது அவரிடத்திருந்து ஒரே ஓட்டமாய் ஓடித் தப்பிப் பிழைப்பதே சற்கருமமென லெல்லோரும் அறியவேண்டும் என்ற கருத்தினாலேயே ஸ்வாமிகள் இவ்வாறு ஓடினர் என்று அவர் சிஷ்யர்கள் கூறுகின்றனர். மேலும், அவர் குருவினை தமக்குப் பின் சன்னியாசி மதுவேகத்தில் ஓடி வரக்கூடும் என்று எண்ணினா ராதலாற்றான் நேர்வழியே ஓடாது குறுக்கே யாற்றினுக்கோடி அதில் வீழ்ந்து அதிவேகமாய் நீந்தினர்போலும்! சாந்திபுரம் போவதற்கு இன்னும் பாதிவழி யிருப்பதால், அதையாற்றிலேயே கடக்க வேண்டுமென்று சொல்லி, தனது அப்பிரான

நித்யாநந்தரோடும், அவ்வாற்றினுள் ஏராளமாய் சஞ்சரிக்கும் முதலை முதலிய பல துஷ்டஜெந்துக்களுக்கும் சிறிதுமஞ்சாமல், நீரோட்ட வழியே செல்ல வேண்டியிருந்ததால் அதிதுரிதமாய் நீந்திச் சென்றனர்.

இவ்வாறு நீந்துகையில், "ஆத்துமா உஜ்ஜீவித்தற்கு பக்தியை விட ஞானமார்க்கமே உயர்ந்ததென்றல்லவோ அத்வைதர் தன் சிஷ்யர்களுக்கு போதிக்கின்றான். இன்று அவன் மடைமையைப் பறக்கடிக்கிறேன்!" என்று ஸ்வாமிகள் சொல்லவும், நித்யாநந்தர் திரும்பி அவரைப்பார்க்க அவர் இயற்கை வடிவினைத்தவிர்த்து ஜோதியோடு பிரகாசித்ததையறிந்தார். மேலும் ஸ்வாமிகள் திடீரென்று புறப்பட்டு சாந்திபுரம் போவதற்குக் காரணம் இதுதான் என்று அறிந்து, அத்வைதர் என்ன பாடு படுவரோ என்று நித்யானந்தர் உள்ளத்தில் ஆசங்கை கொண்டார்.

நீர்வாழ் ஜெந்துக்களைப்போல் நீந்துதலிற்பயின்ற இவ்விருவோரும் சீக்கிரமே அத்வைதர் ஸ்நாந கடத்தைச் சேர்ந்து கரையேறி கனவேக நடையாய் அவரில்லம் அணுகினர். அப்போது ஆங்கு ஹரிதாசர் முதலான சிஷ்யர் குழாத்தின் நடுவிருந்த அத்வைதர் இவர்கள் வரவையறிந்து வந்தனை வழிபாடு செய்ய ஆரம்பித்தார். ஸ்வாமிகள் அதனைச்சிறிதும் கவனியாது அவரை நோக்கி "முத்தி எய்துதற்கு எவ்வழி சிறந்தது? பக்தியோ? அன்றி ஞானமோ?" என்று வினவினர்.

அத்வைத ஸ்வாமிகள் தான் லீலா நாடகத்தில் ஸ்ரீ கிருஷ்ண வேஷந்தரித்து ஆடியவை யனைத்தும் தன்னை மறந்து செய்தவை யாகையால் அவர் ஸ்வாமிகளின் மதக் கோட்பாட்டினைக் கொண்டாரில்லை. நிஜ ஸ்வாமிகள் எதிரில் தான் நினைப்பதும் செய்வதும் எப்போதும் அப்படியே தனக்கு விரோதமாய் இருந்ததால் அவர் அச்சமயங்களில் ஏதோ மந்திரவசத்தால் கட்டுப்படுவதாய் ஸ்வாமிகள் எதிரில்லாதபோது நினைத்தார். மேலும், தாம் சின்னஞ் சிறுவயதுமுதல் ஞானமார்க்கமே யனுசரித்து வந்தாராதலால் அதைமுற்றிலும் மாற்றிவிடுவது அவருக்கு அவமானமாயிருந்தது.

அத்வைதாசார்யர் தமக்குள்ளே பின்வருமாறு எண்ணிக்

சொன்னார்: "இஃதென்ன ஆச்சர்யம்! உங்களைப் பேய்பிசாசு பிடித்துக்கொள்கிறது என்கிறீர்களே. ஓர்வேளை நாம் அஞ்ஞானத்தால் வருந்துகிறோமோ என்னவோ அறியக்கூடவில்லையே! இவ்வாலிபன் ஞானமடையும்போது அப்படி ஏன் நாம் மாறியிருக்கவேண்டும்! அல்லது ஒருக்கால் அது [illegible] சிறுவனால் செய்யப்பட்டிருக்கலாம்; ஏனெனில், அவன் மனுஷாதீதமான சக்தியுடையவனும், மாயவித்தைக்காரனுமாயிருக்கின்றான். நாம் எத்தனையோ தரம் அதுபோல் அவனெதிரில் [illegible] நடக்கவும் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டிருந்தும் அவனெதிரில் அத்தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாமலே வருந்தப்பட்டிருக்கின்றோம். ஆம் ஆம். அச்சிறுவன் ஒரு சூன்யக்காரன் அல்லது பெருவித்தைக்காரனுந்தான் இருக்கவேண்டும். அஃதிருக்க, நம்மைப்போல எழுபது வயதுள்ள ஞானவான் ஒரு சிறுவனால் இப்படி மதிகெட்டு சிஷ்யர்களிடமே தாம் இதுவரையிலும் போதித்து வந்தவைகளெல்லாம் பிழைபாடுள்ளன என்று சொல்லி ஞானமார்க்கத்தைத் தப்பிக்கப்புகுந்தால் அவர் எல்லாரும் நகைத்து நம்மை அவமதிக்கவும் கேட்பானேன்! ஆகையால் எப்படியும் இச்சிறுவனுக்கு நாம் பயந்து அடங்கிப்போகக்கூடாது" என்று இவ்விதமெண்ணங்களால் சிறிது மனவலிமைபெற்று ஸ்வாமிகளைப்பார்த்து, "இல்லையே! அதற்கென்ன சந்தேகம்? பக்திமார்க்கத்தினும் ஞானமார்க்கமே பெரிது" என்று சொன்னார்.

ஸ்வாமிகளிதைக் கேட்டு கோபித்து, "ஆசார்யரே! ஆமாம்; உம்முடைய அபிப்ராயம் அது என்று தெரிந்ததனாலேதான் நான் உமது மடைமையைப் போக்க இங்கு வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே ஆசார்யர்மேல் விழுந்து தமது கைகளால் நன்கு புடைப்பாராயினர்.

இதைக்கண்ட சிஷ்யர்கள் ஸ்வாமிகள் திடீரென்று வந்து உடனே ஆசார்யரை அப்படி அடிப்பதால் பிரமித்து ஒன்றுஞ் செய்யத் தோன்றாமல் விழித்துக்கொண்டிருந்தனர்கள். ஆனால் அடிகள் விழுவதைக்கேட்டு ஆசார்யர் மனைவியாகிய சீதாதேவியார் உள்ளேயிருந்து வந்து பார்த்து, "ஆ! ஆ! இதென்ன அநியாயம்!

அவரை யேன் அடிக்கவேண்டும்? அவருமக்கென்ன செய்தார்? ரு பிராமணவயோதிகரை இவ்வாறு அடிப்பதில் உமக்கு வெட்க ல்லையா? பகவான் மீ தாணை. நிறுத்தும்; நிறுத்தும். இன்னு டித்தால் ஆசார்யர் இறந்துவிடுவார்; அதற்கு நீரே உத்தரவாத ாக வேண்டும்" என்று சொல்லியும் ஸ்வாமிகள் செவிடன் கா ல் சங்கூதினதுபோல் அவர் பேச்சுகளை சிறிதுங் கவனியாமல் சார்யரை அடித்துக்கொண்டேயிருந்தார். தேவியார் சிஷ்யர்க ப் பார்த்து, "சை! சை! என்ன சிஷ்யர்கள்! உம்மெதிரேயே ப்படி ஆசார்யரைக்கொல்வதைப்பார்த்தும் அவரை காப்பாற்றப் ரயத்தனப்படாமல் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்களே, உமக்குவெ கமில்லையா? இவ்வளவு நாள் வேதம் படித்தும் தர்க்கம்பயின்றும் ஞானநெறி யுணர்ந்தும், அவைகளெல்லாம் காட்டி லெறித்த நிலவும் கடலிற் கரைத்த புளியும் ஆய்விட்டனவே! ஆசார்ய பக்தியென்பது உங்களுக்கு அணுவளவேனு மிருப்பின், இந்த அவதியைப் பார்க்க மனஞ்சகிப்பீரா! ஆசார்யர் அடிபடவும், சிஷ்யர்கள் வெட்கங்கெட்டுக் கைகட்டி நிற்பதுமாகிய திருக்கோலமிங்குதான் யான் கண்டேன்! கற்றறி மோழைகாள்! உங்கள் அறிவு கெட்டதுமன்றி, தைர்யமும் குலைந்து பார்ப்போர் நகைக்கத்தக்க பரிபக்குவ மடைந்தீரே, போதும் போதும்" என்று கூறினர்.

ஆனால் இத்தருணம் அவர்கள் எல்லாரும் ஓரதிசயத்தைக் கண்ணுற்றார்கள். என்னவெனின், அடிமேலடி வீழ்வதைக் குறித்து ஆசார்யரும் வருந்தாமலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அடிகளைத் தடுக்காமலும் ஏதோ அவைகளால் தமக்கு நன்மை விளைவது என்று எண்ணினவர்போல் குனிந்து கொடுத்து நின்றார். அதனாலேயே அனைவரும் ஆச்சர்யத்தால் கட்டுண்டு பிரமித்திருந்துவிட்டார்கள். அத்வைதருக்கு அவ்வடிகள் நன்மை பயக்க வேண்டும் என்றும் அவைகள் இன்றியமையாதன வென்றும் எம்பிரானால் கொடுக்கப் பெற்றவைபோல் அவருக்கு அத்யந்த ஆனந்தத்தை விளைத்தன. அதனால் இடையிடையே "ஹா! ஹா!! என்ன தாரம்!" "இது எம்பிரான் கருணையே!" "ஸ்வாமீ! உம்முடைய ருளின் மேன்மையும் அன்பின் [illegible] இப்போதுதான்

எனக்குத் தெரிகிறது" என்று பலவாறாய் தம்மானந்தத்தினை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

அதெப்படியென்றால், சர்வேஸ்வரனைத் தரிசிப்பதின் பயனை யறிந்த ஒரு பக்தர்,

"உள்ளங்குழைய வுடல்குழைய வுள்ளிருந்த
கள்ளங்குழைய வென்று காண்பேன் பராபரமே"

என்று வருந்தினர். பகவானுடைய தரிசனமே அவ்வகைப்பயனை விளைப்பிக்குமெனின், அவர் ஸ்பரிச மகிமையை யாரே புகழக்கவல்லார்! ஆகையால் ஸ்ரீகிருஷ்ண ஆவேசங்கொண்ட கௌரங்கஸ்வாமிகள் ஆசார்யரை ஒவ்வொருதரம் ஸ்பரிசிக்குந்தோறும் அவர் மனதில் பக்தியானந்தம் ஜனித்து அதன்விசேஷ அளவினால் தன்னை மறக்கச்செய்ததுமன்றி எழுந்துநின்று தன திருகரங்களையும் சிரமீதுயர்த்திக் குவித்த வண்ணமாய் நர்த்தனஞ்செய்யவும் காரணமாயிற்று. ஸ்வாமிகளும் தாம் சிக்ஷைசெய்ததுபோதும் என்றறிந்து அதனால் மிக அயர்ந்தவராய்த் தோன்றி வெளியேசென்று தாழ்வாரத்தி லுட்கார்ந்து இருந்தார். ஆசார்யர் நடனம் ஆடிக்கொண்டே, "கருணையென்று சொல்லத்தக்கது இதுவே! எல்லோரும் வந்து இக்கருணையின் விசேஷத்தைப் பாருங்கள்! நான் எம்பிரானை விட்டு நீங்கி வந்தேனாயினும் அவரென்னை விட்டாரில்லை. நான் அவரை மறந்த பாவியானேன். அவரோ எனக்கு ஞாபகமூட்டி என்னைத் தன்வசப்படுத்த என் வீட்டினுக்கே தேடிவந்தார். இக்கருணை யவரிடமன்றி வேறு யாவரிடம் காணலாம்! [illegible] வீடு தேடி யிருந்தாலும் இதற்கிணையாகுமா! அறிவால் பெருத்தவனென்று என்னையானே மதித்திருந்த அறிவழிந்த எனக்கு அறிவு தந்த அதிசயம் அளவுகடந்ததே. ஆங்காங்கு, காடென்றும் மலையென்றும், கல்லென்றும் முள்ளென்றும் எதையும் நோக்காது, காயிலைதின்றும், காற்றைப் புசித்தும் கடுந்தவம் புரிவோர் கணக்கிலராக, எதையுஞ்செய்யாது இறுமாந்திருந்த ஏழையேனைத் தேடி வந்து இன்னமுதமாகும் பக்தியமுதம் தந்தனையே, உன் அன்பும் ஆதரவும் யாதென்னென்று சொல்வேன்! பார்ப்போர் பதைக்கும்படி கண்ணை அடி[illegible] என்னை அணைத்துக்கொண்டனை

யே! கடிவதுபோல் கட்டிக்கொண்டனையே! "அழ அழச்சொல்கிறவர்கள் பிழைக்கச் சொல்வார்கள்" என்னும் பழமொழியும் இங்குப் பாழ்த்துப் போய்விட்டதே! அருகி லிருப்போர் அழுதாலும். அடிபடுவேனை ஆனந்தத்துள் அழுத்தியே அன்புவிளைத்தனையே! அன்பிற்கரசனே, ஆராவமுதே, சுந்தரப்பெருக்கே, சுடரொளி விளக்கே, என்னைமுழுவதும் ஆட்கொளல் உன் கடைமையே" என்று பலவாறாய் ஸ்வாமிகளைத் தோத்திரஞ்செய்தார். இவற்றைக் கேட்ட ஆசார்யர் மனைவியும் திகைத்து நின்றார். அப்போது வெளியிருந்தே ஸ்வாமிகள், அனைவரும் கேட்கும் வண்ணம் "இப்படி ஞானத்தையே கொண்டு முத்தியடைய விரும்புகிறவன் ஸ்ரீமகாவிஷ்ணுவை அவதாரஞ் செய்துவரும்படி வேண்டியதேன்?" என்று சொல்லவும், ஆசார்யர் அவரிடம் ஓடிவந்து அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். அச்சமயம் ஸ்வாமிகள் ஆவேசநிலைமை மாறிவிடவும் அவரைச் சுற்றிவிளங்கிய காந்தியும் குன்றியது. ஸ்வாமிகள் தன்னிலையினின்றபோது ஆசார்யரை வந்தன வழிபாடுசெய் துபசரிப்பதே வழக்கமாயிருந்ததால் ஆசார்யர் தன்னைச் சேவித்ததைப்பற்றி மனவருத்தங் கொண்டவராய் இனித் தம்மை எப்போதும் இவ்விதமாய் மரியாதைசெய்து மனச்சஞ்சல மடைவிக்கா திருக்கும்படி ஆசார்யரை வேண்டிக்கொண்டார். இதனாலேயே ஸ்வாமிகள் ஆவேசம் நீங்கி தன் சுயநிலைமையை யடைந்தாரென்று தெரிந்து ஆசார்யர் அவர் பாதங்களை விட்டெழுந்து நின்றார். அப்போது ஸ்வாமிகள் ஏதோ கனவுகண்டு விழித்துக் கொண்டவர்போல் தோன்றி வெகு பணிவாய் ஆசார்யரைநோக்கி தாம் ஏதேனும் குற்றமான நடவடிக்கை செய்தாரோ என்று வினவினார். ஆசார்யரும் நித்யாநந்தரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைபுரிந்து அப்படி யொன்றும் செய்யவில்லை என்று தெரிவித்தும் ஸ்வாமிகள் தாம் ஏதோ குற்றமாய் நடந்து கொண்டதாகவே நம்பி, "ஆசார்யரே! நீர் உம்முடைய குமாரனாகிய அச்சுதனையும் அடியேனையும் வேறானவர்கள் என்று நினைக்கவேண்டாம். என்னையும் வாசித்தறியாத பேதையான புத்திரன் என்றெண்ணி யான்தவறி நடக்குங்கால் கண்

டித்து நன்னடக்கை கற்பிக்க வேண்டுகின்றேன்" என்றார். ஆசார்யரும், "ஆமாம்! ஆனால் உன் உடம்பு எல்லாம் மண்படிந்திருக்கிறது. ஆகையால் நீ ஸ்நானஞ் செய்யவேண்டும். நமக்கும் ஸ்நானவேளையாயிற்று. எல்லாரும் கங்கைக்குச்சென்று நீராடி வரலாம்" என்று பெரியோர் பேச்சுமுறைமை கொண்டு பேசினார். உடனே எல்லாரும் எழுந்துபோக, எதிர்நின்ற சீதாதேவியை நோக்கி, "என்தாயே! நான் பசியால் மிக வருந்துகின்றேன். நீர் சீக்கிரமே கிருஷ்ண ஆராதனையை முடித்துவிட்டால், நாங்கள் வந்தவுடன் பிரசாதம் அருந்தலாம்" என்று சொல்லினர். அத்தேவியாரும் தாம் சிறிது நேரம் முந்திபேசின கடுஞ்சொற்களை மறந்தவராய் ஸ்வாமிகள்மீது நெடுநாளாய் வகித்த புத்திரவாஞ்சையே மேலிட்டு அதிவசரமாய் சமையல் வேலைசெய்தனர்.

அது நிற்க, மேற்குறித்த செய்தியால் நாம் அறிய வேண்டியதைப்பற்றி சற்று கவனிப்போம். லீலா நாடகத்தில் தாம் பித்தம் பிடித்தவர்போல் நடந்துகொண்டதாய் நம்பிய ஆசார்யர் அது முதல் ஸ்வாமிகள் ஒரு அவதார புருஷர் என்ற நம்பிக்கையையே விட்டு அவருக்கு விரோதமாகவே தமது சிஷ்யர்களுக்கு ஞானமார்க்கத்தினைப் போதித்து வந்தார். தமது விருப்பத்தின்படி பல்லோருக்கும் இச்சாமாத்திரத்தாலேயே பக்தி யூட்ட வல்லவரான ஸ்வாமிகள் ஆசார்யருக்கு அவ்விதஞ் செய்வதற்கு முன் தம்மைப் பற்றி அவருக்கிருந்த அவநம்பிக்கையைப் போக்கி அவர் மனதில் பக்தி ஜனித்தற்கேற்ற பரிபக்குவமடையச் செய்யவேண்டியிருந்தது. காஜி விஷயத்தில் அவருடைய ஒருவிரலைத் தம் கையினால் ஸ்பரிசித்ததினாலேயே ஸ்வாமிகள் அவரைப் பக்திமானாக்கியதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காஜியைவிட பதின்மடங்கு திடசித்தமுடையவரும் சாஸ்திர விசாரணையையும் விசேஷ பாஷாஞானத்தையும் நிலைபெற்ற அபிப்பிராயங்களையும் உடையவருமான அத்வைதாசார்யர் விஷயத்தில் ஸ்வாமிகள் சாதாரணமாய் ஸ்பரிசித்தல் போதாதென்றெண்ணி அவ்வாறு நடந்திருக்கலாம். அதெப்படியாயினும், அடிவிழுமுந்தி அவதாரத்தில் சிறிதும் நம்பாமலிருந்த ஆசார்யர் பிந்தி எழுந்துநின்றபோது முழுநம்பிக்கை யுடையவரானார்.

நித்யாநந்தர், ஹரிதாஸர், அத்வைதாசார்யர் முதலானவர்களோடு ஸ்வாமிகள் கங்கைக்குச்சென்று அதில் ஸ்நானஞ்செய்து திரும்பி வருகையில் வழியில் இருக்கும் ராதாகிருஷ்ணஸ்வாமி கோவிலுள்போய் ஸ்வாமி சன்னிதானத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தார். அதைக்கண்ட அத்வைதர் ஸ்வாமிகள் பாதங்களில் தம் சிரசு தொடும்படி சேவித்தார். அவருக்குப்பின் அதே மாதிரியாக ஹரிதாசரும் கும்பிட்டார். இவ்விநோத காட்சியைக்கண்ட நித்யானந்தர் "பிருந்தாவனஞ் சேருதற்கு இதுவே தகுந்த காலம்" என்றுரைத்தார். இதைக்கேட்டறிந்த ஸ்வாமிகள் சரேலென்று எழுந்து தமது பாதம்பற்றிச் சேவித்த அத்வைதரை வணங்கி "என்ன அபசாரம்! என்ன அபசாரம்!" என்று சொல்லி ஏங்கினர்.

சாந்திபுரத்திலிருந்து நதியாவுக்கு வரும்போது அத்வைதரும் ஸ்வாமிகளோடு போயினர். ஆனால் அங்கிருக்கும்போது ஒரு விநோதம் நடந்தது. ஸ்வாமிகள் ஓர் நாள் திடீரென்று கௌரிதாஸர் என்ற ஓர் பிரபல ஸந்யாசி பண்டிதர்முன் போய்நின்று "நான் சாந்திபுரத்தினின்று உம்மைத்தேடியே வந்தேன். உங்களுக்கு இந்த துடுப்பைக் கொணர்ந்தேன்" என்று தாம் தோளில் தாங்கியெடுத்துப்போனதும் ஓடம் தள்ளுவதற்கு உபயோகமாகத்தக்கதுமானதொரு துடுப்பை வாங்கிக்கொள்ளச்சொன்னார். கௌரிதாஸர் ஸ்வாமிகளைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தும் அவரைப் பார்த்ததுமில்லை; தாம் கேள்விப்பட்டதை முழுதும் நம்பவேண்டுவனவா அன்று என்றறியவும் பிரயத்தனப்பட்டாருமில்லை. ஆகையால் சுந்தரரூபமும் கம்பீர பார்வையுமுடைய ஸ்வாமிகளைக்கண்டபோது ஒன்றுந் தோன்றாதவராய் "துடுப்பேன்?" என்றார். ஸ்வாமிகள், "ஜனங்களையெல்லாம் அக்கரை சேர்ப்பதற்குத்தான்" என்று கொடுக்கவும், அதை வாங்கத் தைரியமில்லாது நின்று "துடுப்பை வாங்கிக்கொள்ளுதல் சாமானியமான காரியமல்லவே! அதற்குரியனவற்றைச் செய்ய எனக்கு சக்தி கிடைத்தாலல்லவோ நான் வாங்கலாம்!" என்று சன்யாசிகளுரைக்கவும், ஸ்வாமிகள் தாமே அதற்கு வேண்டிய சக்திகொடுப்பதாய்ப் பகர்ந்தார். கௌரி

தாசர் ஆச்சரிய மேலிட்டு, "இப்படி வீரம் பேசுவதற்கு நீரார்? என்னைப் பணியச் செய்பவராகிய நீர் எவ்விடமிருப்பவர்? தயவு செய்து சொல்லும்" என்று சொன்னார். தாம் நதியாபண்டிதர் நிமை என்பவர் என்று ஸ்வாமிகள் தெரிவித்துக்கொள்ள, கௌரிதாசர் பணிந்து துடுப்பை வாங்கிக்கொண்டு அவரையே ஆசாரியராகக் கொண்டார். அதுமுதல் அவர் அந்த 'ஒரிஸ்ஸா' தேசம் முழுவதையும் ஸ்வாமிக ளடியார் களாக்கப் பாடுபட் டுழைத்தார்.

இப்படியே கௌரங்க ஸ்வாமிகள் வெகு ஜனங்களைத் தம்வசப்படுத்தி வைஷ்ணவ மதத்தைப் பரவச்செய்தார். ஒரு மனிதனைத் தன் மதத்தை விட்டுப் பிறமதத்தை யடையச்செய்து விடுவது வெகு அரிது. அதனிலும் அம்மனிதன் கேவலம் பாவத்தொழில்களிலேயே உழன்று வருபவனாகவாயினும் அல்லது நிரம்ப வாசித்து கூரிய புத்தியும் உடையவனான நாஸ்திகனாகவாயினும் இருந்தால் அவனை மாற்றவே முடியாது. அப்படிப்பட்டவர்களை யெல்லாம் ஸ்வாமிகள் தம் ஒரு பார்வை அல்லது ஸ்பரிசம் இவைகளால் முற்றும் மாற்றினதுமன்றி அப்படி மாறினவர்கள் இன்னும் பல்லோரையும் மாற்றி விடும்படிக்குஞ் செய்து வந்தார். இப்படிச் செய்வதற்கு ஒன்றான சர்வேஸ்வரனே வல்லவன் என்று சொல்லத் தடையுண்டோ!

பதினான்காவது அத்தியாயம்.

ஸ்வாமிகள் விரகம்.

ஸ்வாமிகள் ஆரம்பத்தில் கீர்த்தனங்கள் நடத்தும்போது தம்முன் வரத்தகாதென்று தெருவாயிலை மூடிவைத்தே வீட்டினுள் பாடித்தொழுவது வழக்கமாயிருந்தது. ஏனெனில், அவ்வகை எம்பிரானை யாராதிப்பது அபூர்வமாயும் எவரும் கண்டிராததாயும் கண்டவர் நகைத்தற் கிடமானதாயும் இருந்ததாகையால் மதத் துவேஷிகள் கூட்டங் கூடிவந்து தொழுவோர்களைத் தடுத்து ஹிம்சை செய்யக்கூடும். மேலும், பகவானைத் துதிப்பதற்கு மனது சிறிதும் சலனமில்லாமல் அவனிடமே ஏகோபித்து நின்றால்தான், பக்தி பெருகி, துதித்தலின் பலனைக்கிட்டுதற்கு வழி யுண்டாகும். இது காரணம் பற்றியே யோகிகள் நிர்மானுஷ்யமான காட்டை யடைந்து தவம் செய்வது. ஆனால் கீர்த்தனை பாடுவதில் பல்லோர் அருகேயிருப்பினும் அவர் மனமெல்லாம் ஒருமித்து ஒன்றினிடமே பற்றி ஒரேவிதச் செய்கைகளில் நாடுவதால் அவ்விடத்திலும் யோகப்பயிற்சி செய்து பக்தியுண்டாகச் செய்யக்கூடும். ஏனெனில் முதலில் சங்கீதமே ஆத்துமாவைச் சாந்தப்படுத்தி மனதை ஒரு நிலைப்படுத்தும்; கானத்தின் சக்தி விசேஷத்தை ஸ்ரீகிருஷ்ணன் குழலூதி கேவலம் ஓரறிவுயிர்களையும் மெய்ம்மறந்து ஆனந்தமடைவித்ததாலே யறியலாம். இவ்வாறு பக்தியடைவதற்கு முக்கிய சகாயமாயிருப்பதாலல்லவா கோயில்களில் உத்ஸவாதி விசேஷங்களிலும் சங்கீதமின்றி நடத்தக்கூடாதென்ற ஏற்பாடு செய்திருப்பது. ஆகையால் கீர்த்தனைபாடுவது பக்தர்கள் தம்மைமறந்து இன்பநுகர்ச்சி செய்வதற்காம். ஆனால் ஒத்த வுணர்வும் ஒரே நம்பிக்கையும் இல்லாதிருப்பவர் அவ்விடம் சென்றால் கீர்த்தனம் செவ்வனே நடத்த முடிவதில்லை. எப்படி யெனில் ஸ்ரீபாஸர் வீட்டில் ஸ்வாமிகள் கீர்த்தனை பாடுவதற் காயத்தமாகையில் ஒரு

நாள் ஸ்ரீபாஸர் தாம் பக்திமானென்று நன்றாய் அறிந்த ஒருவரை உள்ளே யாருமறியாதபடி சேர்த்துக்கொள்ள, ஸ்வாமிகள் ஆட வாரம்பித்தவர் திடீரென நின்று, "அஃதேன்! இன்று நர்த்தனஞ் செய்வதற்கேற்ற உடற் கிளர்ச்சியும் புளகமுந் தோன்றவில்லை? ஸ்ரீபாஸரே! நீர் ஒருக்கால் வெளியார் ஒருவரைச் சேர்த்தீரோ?" என்றார். ஸ்ரீபாஸர் ஸ்வாமிகளை வணங்கி தாம் செய்ததைத் தெரிவித்து, "ஸ்வாமீ! அப்பெரியோர், பால் அன்றி, அன்னம்முதலிய வேறொரு ஆகாரமும் புசியாதவர் என்றும் மிக்க பக்திமான் என்றும் நான் அறியாதிருந்தால் நான் விட்டிரேன். ஆகையால் அடியேனை க்ஷமித்தருளும்" என்றார். அதைக்கேட்ட ஸ்வாமிகள் புன்னகை செய்து, "உம்முடைய பக்திமானை வேறு எங்கே யாவது போகும்படி சொல்லும்.

'காயிலை தின்றுங் கானிலுறைந்துங் கதிதேடி
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்காள்!
தாயினு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே'

என்று பெரியோருங் கூறியுள்ளாராகையால் பாலே யருந்தி பகவானை யடைவோம் என்பவர்க்கிடமிங்கில்லை" என்று சொல்லவே, அவ்வடியார் வெளியே செல்ல நேர்ந்தது. என்றாலும், அதனால் அவர் துன்பப்பட்டாரில்லை. ஏனெனில் அவர் கண்ட காட்சியே அவரை மெய்ம்மறக்கவும் அத்யந்த ஆனந்தம் அனுபவிக்கவும் செய்தது. உள்வரும்போது சுத்த வைதீகராக மட்டு மிருந்த அவர் வெளியிற்சென்றபோது ஸ்வாமிகள் மகிமையில் பூரண நம்பிக்கை வைத்தவராய் பக்தி நிரம்பப்பெற்ற பக்திமானானார். ஸ்வாமிகள் உடனே அவரைத்திரும்ப அழைத்து வரும்படி சொல்ல, அவர் உள்ளே அநுதாபத்தோடு வந்து ஸ்வாமிகளைச் சேவித்து தன் பிழையைப் பொறுத்து ரக்ஷிக்கும்படி வேண்டினர். ஸ்வாமிகளும், "பக்தரே! நீர் பக்திமான் என்பதற்கு என்ன சந்தேகம்? பாலன்ன மட்டும் புசித்தல் முதலிய கேவலம் வெளி நடக்கையாலேயே பிறவிக்கடல் நீந்தி மேலான பதவி யடையலாம் என்று நினைத்தல் அசம்பாவிதம் என்று எல்லாருக்கும் தெரிவிக்க

வேண்டும் என்றே உம்மை வெளியே போம்படி சொன்னேனே தவிர வேறொன்றினுக்கு மல்ல" என்று சொல்லினர்.

ஸ்வாமிகள் கயாக்ஷேத்திரத்தினின்று திரும்பிவந்த காலையில் அவர் தம் நடக்கையில் முற்றும் மாறியிருந்தமையால் பார்ப்போரனைவரும் அவரைப் பித்தர் என்றே எண்ணினார்கள். அதனால் அவர் விரோதிகள் அவரைத் தூரிப்பேச இடம் அதிகமாயிற்று. ஏனெனில், அப்போது அவர் தம்மை மறந்து,

"அன்னையிலாச் சேய்போ லலக்கணுற்றேன் கண்ணார
வென்னகத்[illegible]றாய்போ லிருக்கும் பராபரமே"
"உற்றுனினைக்கிற்றுயர முள்ளுள்ளே செந்தீயாய்ப்
பற்ற நொந்தேன் என்னை முகம்பார் பராபரமே,"

என்றவாறு ஈசனை விட்டுப் பிரிந்தார்போல் வருத்த முற்றவராய் இருந்தும் பின் சிறிதுசிறிதே தேறினவர்போல் மாறியும், தினந்தோறும் தம் சிஷ்யர்கள் நடத்திவந்த சங்கீர்த்தன காலக்ஷேபங்களிலும் சேராது தனியே யிருப்பதுமாக விருக்க, இவர் போசனம், நித்திரை, ஸ்நாநம் முதலாகிய செய்கைகளிலும் குடியன் அல்லது வெறியன் உன்மத்தன் போலவே காணப்பட்டார். இப்படியே ஸ்வாமிகள் பக்திமேலிட்டு ப்ரேமையும் விரகமும் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமியினிடம் வைத்தவரானார்.

எப்படியென்றால் ஸ்ரீ கிருஷ்ணன் என்ற பேரை யாராகிலும் சொல்லக்கேட்டால், ஸ்வாமிகள் கோவென்று கதறுவார்; தரையில் வீழ்வார்; பேச்சு மூச்சும் தவிர்ந்து செத்தவர்போல் கிடப்பார்; கண்ணீர் ஆறாய்ப்பெருகவிடுவார்; சிறிதுபோது சென்று மீண்டும் தெளிந்தெழுவார். இப்படிப் பலவகை மாறி மாறி யிருக்குமோர் நாள் இவர் தன்னிலையிலிருப்பதாய் நினைத்து, சசிதேவியம்மாள், "என்னருமை நிமையே! நீ ஏன் ஒருவாறாய் இருக்கிறாய்? உனக்கென்ன குறை?" என்று கேட்டார். ஆனால் இப்பேச்சுகள் ஸ்வாமிகள் செவி பற்றவேயில்லை யாகையால் அவர் மறுமொழிசொல்லாதிருக்க, அவர் தாயார் நாளுக்குநாள் தம்மகனைப் பற்றி ஏக்கங்கொண்டார். ஸ்வாமிகள்மீது எம்பிரான் ஆவேசமாய் வருதல் வழக்கமான பிறகும், அவர் இவ்வித நிலைகளை யடை

ந்து பிரேமையால் வருந்தி தம் சிஷ்யர்களுக்கு அதன் அநுபவங்களை யெல்லாம் தெரிவித்துக்கொண்டிருந்தார்.

ஸ்வாமிகள் தினந்தோறும் கீர்த்தனை காலக்ஷேபத்தில் கலந்து நடத்த இயலாதிருந்தும், அவர் சிஷ்யர்கள் அதனை நிறுத்திவிடாது நடத்தியே வந்தனர். ஸ்வாமிகள் வராதபொழுது அவருத்தரவின்படியே அத்வைதாசார்யர் தலைமையாயிருந்து நடத்தி வருவார். அப்படி யிருக்கையில் ஓர் நாள், ஸ்ரீபாஸர் வீட்டில் அத்வைதாசார்யர் சங்கீர்த்தனமும் இரவெல்லாம் நடத்தி மறுநாள் சூர்யன் உதயமாகியும் நிறுத்த மனமில்லாமல் ஆடிப் பாடிக்கொண்டே யிருந்தார். அன்று கீர்த்தனத்தால் அவர் பித்தம் பிடித்தது போலாகி மயங்கி கீழே வீழ்ந்து புரளுவதும், கொடுந்துன்பத்தால் வருந்தி யோலமிடுவதுமாக விருந்து, "ஸ்வாமீ! என்னை க்ஷமித்தருளும்," "என் அவநம்பிக்கையைப் பொறுத்தருளும்," "நம்பி யிருப்பவரன்றோ சுகிகள்?" "உம்மிடத்து நம்பிக்கை யுண்டாகும்படி செய்யமாட்டீரா?" என்றனேகவிதமாய் கதறிக்கொண்டிருந்தார். உச்சிகாலம் வந்தபோது தாமே யொருவாறு தேறினவராய் ஆசார்யர் தாம் பின் வருவதாய்ச் சொல்லி சிஷ்யர்களை ஸ்நாநஞ் செய்ய அனுப்பினர். மறுபடியும் தமக்கு துயரம் மேலிட்டு "ஸ்வாமி! என்னைக்காப்பாற்றும்" என்று சொல்லிக்கொண்டே, கீழே வீழ்ந்து அங்கேயே கிடந்தார்.

அக்காலையில் ஸ்வாமிகள் தம் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து வழக்கம்போல் முற்றும் மறந்தவராயிருந்தார். ஆனால் அவர் மாயத்தாலோ வேறு எவ்வகையாலோ ஆசார்யர் ஓலஞ்செய்வதை யறிந்தார். உடனே தம் ஞாபகம் வந்து எழுந்து ஒரே ஓட்டமாய் ஸ்ரீபாஸர் வீட்டினுக் கோடிச்சென்று ஆசார்யரைக்கண்டு அனுதாபப் பட்டவராய் அருகே உட்கார்ந்து அவருடலைத் தடவிக் கொடுத்து தாம் வந்திருப்பதை யுணர்த்தினர். அவ்விருவர் கண்களும் சந்தித்தன. உடனே ஸ்வாமிகள், "ஆசார்யரே! ஏன் துன்பப்படுகிறீர்! நீர் அழைத்தமையால் நான் வந்தேன். என்ன வேண்டுமாயினும் கேளும்" என்று திடமாய்ச் சொல்லினர். ஆசார்யர் எழுந்து நின்று, யாது கேட்பது என்றறியாராய் விழிக்க, ஸ்வாமிகள், "நுமக்கென்ன குறையோ, சொல்லும், நீர் வேண்டியவையெல்லாம் பெற்றீரென்றல்லவோ நான் நினைத்தேன்" என்றனர். அத்வைதர் சிறிது தைரியங் கொண்டவராய், "ஸ்வாமீ! இன்னும் எனக்குப் பூரணமாய் உம்மிடம் நம்பிக்கை உண்டாகவில்லை, என்மனம் உம்மையே தஞ்சமென் றடையக்கூடாமையால் நிலை மாறிமாறி யுழல்கின்றது. உம்மை நம்பியடைய நான் விரும்பினும், என்மனம் என்வசப்படவில்லை. அதனால் ஆறாத்துயரத்தில், நான் அழுந்திக்கிடக்கின்றேன். உம்முடைய மற்ற சிஷ்யர்கள், பக்தர்கள் எல்லாரும் உம்மை நம்பி சந்தோஷித்திருக்க, நானொருவனே சந்தேகக்கடலில் மூழ்கித் தள்ளாடுகின்றேன்" என்றுரைத்தனர். ஸ்வாமிகள், "நீர் திருப்தியடைவதற்கு மார்க்கமேதேனும் தட்டுப்படுகின்றதா? யோசித்துச்சொல்லும்" என்னவும், உடனே ஆசார்யர், "ஓர்வழி யுளது. நீர் எனக்கு விஸ்வரூப தரிசனம் செய்வியும். அதனால் நான் கடைத்தேறுவேன்" என் றிரந்துரைத்தார். ஸ்வாமிகள் அத்தருணம் எம்பிரானுவேசம் பெற்றநிலையி லிருந்தாராதலால் உடனே ஆசார்யரையு மழைத்துக்கொண்டு ஸ்ரீபாஸரின் பூசையறைக்குட்சென்று நின்று

"மாயிரு ஞாலமெலாம் வெளியாயொளிர் மரகதசோலையுறப்
போயிருபாலும் வளைந்துவளைந்தெதிர் பொருமனைவெம்படையோ
டாயிரமாயிர மக்கைபுறப்பட வண்டருமாதவரும்,
பாயிரநான்மறை பாடிவியந்து பணிந்து"

புகழும்படி விஸ்வரூபங்காட்டினர். இப்படி ரூபம் சிறிதுசிறிதே வளர்ந்து பெரிதாகியதைப்பார்த்த அத்வைதர் பயமுண்டாகி வருந்த ஸ்வாமிகள், "வீணாய் பயப்படவேண்டாம்; நன்றாய்ப்பாரும்" என்று தைரியங்கூறினர். அப்போது நித்யானந்தரும் அங்கு வந்து விஸ்வரூபத்தைப்பார்த்து பீதியடைந்து மூர்ச்சையாகி கீழே விழுந்தருணத்தில் ஸ்வாமிகள் தம் சாதாரண சுந்தர வடிவத்தைப் பூண்டனர். ஆசார்யர் இப்போது நம்பிக்கைப்பெற்றுப் பேரானந்தமனுபவிக்க, நித்யானந்தரும் அவரும் கைகோத்துக் கொண்டாடிக் களித்தார்கள்.

ஸ்வாமிகள் பின்னர் தம்மில்லம் சென்றபோது தன்னை முற்றும் மறந்த நிலைமையிலேயே யிருந்தார். நாளுக்குநாள் பிரேமை

மேவிட்டதால் அவர் ராதாதேவியானார்; அத்தேவியாரைப்போலவே ஸ்ரீகிருஷ்ணன் ஆற்றங்கரையில் குழல் பிடித்து நிற்கும்போது அவரைப்பார்க்க நேரிட்டு அதனால் மிக வருந்தினர். ஸ்வாமிகள் இப்படி மாறியது அவர் அப்போதைக்கப்போது பேசும் பேச்சுக்களினால் எல்லாரும் தெரிந்துகொண்டார்களே தவிர அவர் தாமே யொருநாளும் நேராய்த் தெரிவித்ததில்லை.

"என்னாயகரான ஸ்ரீகிருஷ்ணன் எங்குப்போயினன்!" "அவரையார் என்னிடமிருந்து அபகரித்தனர்!" "என் காதலரை விட்டுப் பிரிந்து நான் எப்படி உயிர்தரிப்பேன்?" "அவரின்றி உலகமே பாலைவனப்போல் வெட்டவெளியாய்த் தோன்றுகின்றதே; நான் என்செய்வேன்!"

"கல்லாமதியே கதிர்வாணிலவே
செல்லாவிரவே சிறுகாலிருளே
எல்லாமெனையே முனிவீர்நினையா
வில்லாளனையாதும் விளித்திலிரோ?"

"அடியேனை எப்படியாயினும் நாயகனிடம் சேர்க்கவல்ல நண்பர் யாருமிலரோ?" "என் மனோரஞ்சிதமே! பூவே! என்னை ஏன் இப்படி வருத்துகின்றாய்? என்னை ஸ்ரீகிருஷ்ணன் தவிர்ந்துபோன துனக்குத் தெரியாதா? அப்பரமரை யடைந்து களித்து வாழும் பாக்கியசாலிகளிடம் போ. அன்னோரே உன்னைப்பார்த்துக் களிக்கத்தக்கவர்."

"மலையேமானே மயிலேகுயிலே
கலையேபிணையே களிறேபிடியே
நிலையாவுயிரே நிலைதேறினிர்போய்
உலையாவலியா ருழைநீருரையீர்."

"பெண்ணுக்கணிகலம் பேதைமையாயினும், இன்று என்பா பேதைமையும் வாதனையும் மிகுத்தனவே! என் கண்ணனாகிய கள் ன் நீலவண்ணத்தைப்பார்த்துப் பேராசைகொண்டு அஃதே போல் பாவனைபண்ணிய ஏ! வானமே! உன் நீலநிறம் என் அ பன் மேனி முன் னிற்குமா! உனக்கே னிவ்வாசை! உனக்கே னி யென்ன பகைமை! பொல்லாய்! பேதையாகிய என்னை வெருட்

ருட்டி. வானத்துக்குள் எழுந்த இச்சூது புரிந்தனையோ! கொடியாய்! "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் ாவித்து" ஆடுவது எவ்வளவு விகாரத்தோற்றங் காட்டுமோ அதனிலும் பதின்மடங்கதிக சுந்தரமாய் விளங்குகின்றனையே! "நல்லோரைக் காண்பதுவும் நன்று * * * அவரோடு இணங்கி யிருத்தலும் நன்று" என்றும் "தீயோரைக் காண்பதுவும் தீதே * * * அவரோடிணங்கி யிருத்தலும் தீது" என்றும் கல்விப்பெருமாட்டியார் கூறியது சாலப் பெருந்தகைமைத்தே! உனக்குப் பன்னெடுநாளாய், எமக்குப் பெரும்பகையாகிய கடலுடனே உறவு நேரிட்டிருப்பதை யான் கவனித்துள்ளேன். நீவிருவரும் காதலன் காதலி யென்ன ஒத்து ஒருமித்து முத்துமுத்தாடி, என்றும் பிரியா அன்புபூண்டு வாழுகின்றீர்கள்! என் மனதிற் இனிய மன்னவன்மீது மையல்பூண்டு அவனைப்போன்று வேடங் ட்ட முயலும் அவ் ஆர்கலிப் பேய்பாவினின்றும் இத்துர்க்குண ற்றனைபோலும்! துன்மார்க்கப்பதரே, என்னைத் துன்பத்துள் ழுத்தாதி. நும்மிருவர் நடுவில் அருமைப் புதல்வனென்ன விளங் தும் அந்த சந்திரப்பாவியோ உம்மினுங் கொடியன்! அவனோ ஆளுக் கேற்றதுபோலும் வேளைக் கிசைந்ததுபோலும் வேடம் போடுகிற விஷப்பூச்சி! "இங்கி குளிர்ந்துங் கொளும்" என்கிறபடி, அனைவோர் தாபத்தையும் போக்குவது போன்று வான முகட்டில் எழுகின்ற பொன்வட்ட மின்னிலவாயினும், அவனால் விளைகின்ற துன்பங்களுக்கோ ரளவின்று. பாம்பையும் பயம் தெரியாது பிடிக் ம் குழந்தைகள் தான் அவனைச் "சந்தமாமா" என்று அவனு ன் விளையாடுவார்கள். அடா, சந்திரப்பயலே, துப்பாக்கி வயற்றி ன்றும் பீரங்கி பிறந்ததுபோல் என்றும் அடாவடியே செய்து னர்த்தம் விளைக்கும், உன் தந்தைதாயரினும் நீ கொடியை காண்! நிரபராதிகளான என்னையும் என்போல்வாரையும் தழலெனக் காய்கின்றனையே! இந்திரனாகிய தந்திரனும் இடக்கர் புரிந்தன்றோ, மேனிமுழுவதும் ஹானியடைந்தனன்! அவனுக்குத் துணைபுரியும் உனக்கும் அங்கமுழுவதும் மங்கு படாக் கேட்பானேன்! மதம் பிடித்துழன்ற மதனன் உருவழிந்தனனென்பதும் தெரிந்திருந்

தும், நீயும் தகாவழி நடந்து தலைவரையும் போக்கடித்துக் கொண்டனையே! உன்னை தலைக்கும் மாதம்மாதம் ஆபத்தாய் முடிந்திருக்கிற போதும், ஊருக்கெல்லாம் கெடுதி விளைத்து உழல்கின்றாயே! எம் போன்ற பேதையர்க்கே யன்றி, மற்றும் பிறர்க்கும், வாதமுதலிய பல்வகை ரோகமும் உன்னால் உண்டாகின்றன வென்று வைத்திய நூல்கள் முறையிடுகின்றனவே!" என்று முறையிடுவார்.

இப்படிப் பலவாறு பேசிக்கொண்டே இரவும் பகலும் கழிப்பார். இப்படியே கங்கைக்கரை யுட்கார்ந்து, அது யமுனைநதி என்றும் அக்கரை மதுரை என்றும் மயங்கி "கிருஷ்ணஸ்வாமி இவ்வழி செல்வரோ" என்று உற்று நோக்குவர். எவராயினு மொரு நண்பர் எதிர்படின் அவர் தோளைக்கட்டி விசனித்து, "அன்பரே! என்னாதர் கருணைவடிவினர்; தீனரக்ஷகர்; மற்றவரெவரும் துன்பப்படுதலைப் பார்க்கச் சகியார். நான் அவரை நன்றாய் அறிவேன். அவரைப்பற்றி இப்படி நான் உயிர்விடுகின்றேன் என்று அறிந்தால், அவர் வராமலிரார்" என்று சொல்வார். ஒருவேளை எம்பிரான் கன்னெஞ்சினர் என்று கோபித்து, "நீரே என் மனதைக் கவர்ந்தீர். பின் நான் காப்பாற்றுவாரிலாது தவித்தலைப் பார்த்து என்னைத் துறந்தீர். இது உமக்கு அடுக்குமா? உம்மை மானிடர் கிருபைக் களஞ்சியம் என்றும் பரமதயாளனென்றும் அல்லவோ சொல்லுகின்றனர். உண்மையில் உம்முடைய நெஞ்சம் கல்லினுங் கடிது, தீயினுங் கொடிது. உம்மையடைந்த நான் அன்றோ மூடன்" என்று வெறுத்துக்கொள்வார்; மற்றொருவேளை தாம் கடிந்து கூறினவற்றை நினைந்து வருந்தி, ஹரியைத்துதித்து, "ஐயனே, அபயம் அபயம்; நான் பேசுவது என்னவென்று எனக்கே தெரியவில்லை; அப்படி நான் மெய்ம்மறந்து வருந்துகின்றேன்; ஏனெனில் உம்மைப் பிரிந்தால் நான் அறிவழிகின்றேன்" என்று அபராத க்ஷமை கோருவர்.

ஸ்வாமிகள் பலபல வார்த்தைகள் விபரீதமாயும் பித்தரைப் போலவும் பேசிக்கொண்டு நிலைகுலைந்து விளங்கவும், அவர் தாயாரும் மனைவியாரும் மற்றவரும் மிக்க ஆயாசம் கொண்டவராய் எப்

படியாயினும் அவரைத் திருப்பவேண்டுமென்று பலவகை பிரயத்தனப்பட்டார்கள். இவர்கள் பிரயத்தனமெல்லாம் வீணாய் முடிந்தது. ஆனால் ஒரு வேடிக்கையான காரியத்தால் அவர் தன்னிலைக்கு மாறினர்.

அதெப்படியெனில், கங்காதாசர் இலக்கணப்பாடசாலையில் ஸ்வாமிகளுடன் ஒன்றாய்க் கற்றவர். கிருஷ்ணானந்தரென்றொருவர் அங்கு கற்கக்கூடிய வித்தைகளெல்லாம் கற்றபின்பு தாந்திரிக மதத்திற்சேர்ந்து அவர்களுக்கெல்லாம் தலைவராய் பெருங்கீர்த்தி பெற்றிருந்தார். அந்த மதம் ஒன்றினுக்கொன்றொவ்வாத பல வகைக் கோட்பாடுகளைக் கொண்டும், மதுபானம் முதலிய அநேக துர்ச்செய்கைகளை முத்தியடைய இன்றியமையாதன என்று ஸ்தாபித்தும் இருந்தது; அதனால் ஸ்வாமிகள் மதத்தினுக்கு தீர்க்க விரோதமானதாயும் இருந்தது. மேலும் இவ்விருமத ஸ்தாபனர்களும் ஒருவரையொருவர், கௌரங்கர் தேவ ஆவேசம் பெற்ற நாளாய்ச் சந்திக்கவில்லை. தாந்திரிக மதத்தலைவரும் சமயம் வாய்த்த போதெல்லாம் ஸ்வாமிகளை நிந்தித்துக்கொண்டே யிருந்தார். இப்படி யிருக்கையில் ஓர்நாள் கிருஷ்ணானந்தர் ஸ்வாமிகள் மதத்தைப்பற்றி அவருடன் வாதிட்டு அவரை வென்று வரவேண்டுமென்று ஒருவித எண்ணங்கொண்டு அவர் வீட்டினுக்குச் சென்றார். ஸ்வாமிகள் அத்தருணம் சிஷ்யர்கள் சூழ உட்கார்ந்திருப்பதைப்பார்த்து, தாந்திரிகர், "ஆஹா! இதுவும் நல்லதேயாயிற்று. ஸ்வாமி ஸ்வாமியென்று பல்லோரை ஏமாற்றி வருபவனை, அவன் மூட சிஷ்யர்முன் வாதிட்டு வென்றால்தான் தலைகாட்டாதோடிப்போவான்" என்று தமக்குள் எண்ணி விரைந்து சென்றார். ஸ்வாமிகள் சிறுவராயிருந்து வலிய சண்டைக் கிழுப்பதற்கும் தொடுவழக்கிடுவதற்கும் முன்னிற்பதற் கேற்ற கடுமுகத்தையுடைய போது அவரை அத்தாந்திரிகர் பார்த்ததே தவிர பின்பார்க்கவில்லை. ஆகையால் இத்தருணம் ஸ்வாமிகளைச் சந்தித்தபோது அவர் முகத்தில் சிறிதுங் கடுமையிலாது குழந்தை முகம்போல் குற்றமுங் குணக்கேடும் இன்றி அன்பும் அமைதியும் பொருந்தியிருப்பதைக்கண்டு ஆச்சர்யமடைந்து, அவரை வாதுக்கு வலித்

தல் அடாதது என்று எண்ணி, சிறுபிள்ளைக்குப் புத்தி சொல்வது போல் கொஞ்சம் பேசினார். ஸ்வாமிகள் மற்றவர்கள் பேசவந்த பொழுது எல்லாம் மெய்ம்மறந்திருந்தாலும் இத்தாந்திரிகத் தலைவர் பேசினவற்றைக் கேட்டறிந்தார். ஆனால் தம்மை ராதாதேவியாராகவே பாவித்திருந்தார். அப்படியே எதிர் நின்றவரையும் மதுரையிலிருந்து வந்தவர் என்றும் கிருஷ்ணனுடைய வேலைக்காரன் என்றும் நினைத்து, "நீர் உம் எசமானனிடமே போம். ஸ்ரீகிருஷ்ணனை யினி ஒருபோதும் நம்பியடைவதில்லை யென்று நான் தீர்மானித்தேன். என்னை அழைத்துப்போகலாம் என்றல்லவா நீர் வந்தீர்! நான் வருவதில்லை, ஸ்ரீகிருஷ்ணனினும் கொடியன் உலகில் யார்!" என்று சொன்னார். இதைக்கேட்ட கிருஷ்ணானந்தர் ஸ்வாமிகள் ராதாவாய் நின்று பேசின திது என்று அறியாமல், எம்பிரானை நிந்திக்கின்றாரென்று நினைந்து, "பண்டிதரே! என்ன காரியம் செய்தீர்? சாக்ஷாத் ஸ்ரீ ஹரியை நிந்திக்கலாமா? ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்து அபசாரப்பட வேண்டாம்" என்று கோபித்துப் பேசினார். அவருக்கு **தாம்** என்ற அகங்காரம் தலைக்கேறி யிருந்தமையால் ஸ்வாமிகளுடன் நேராய் மதவிஷயமாய் தர்க்கிக்க முடியாமற் போனதற்கு மாறாக இவ்விஷயமாகவேனும் அவரைக் கண்டித்துப்பேச வாய்ந்ததே என்று குதூகலித்திருந்தார்.

இது நிற்க, தம் நாயகனான ஸ்ரீகிருஷ்ணனைக் கவர்ந்து சென்றார் மதுராபுரியினர் என்று நினைத்திருந்த ஸ்வாமிகள் கிருஷ்ணானந்தர் அங்கிருந்து வந்தவர் என்றும் எண்ணினாராகையால் ஏற்கவே அவர் மீது கோபங்கொண்டிருந்தார். ஆகவே அவர் அப்போது தம்மைப் பெரியோர் போல் பாவித்துப் பேசினது எரியுந் தீயினில் நெய் வார்த்திட்டதுபோல் ஸ்வாமிகளது சீற்றத்தினை யதிகப்படுத்திற்று. ஆகையால் உடனே யருகினிருந்த வோர் தடியினைக் கையேந்தி, "நீர் ஓடிப்போனால் தப்பினீர். இல்லாவிடின், உம்மை யிக்கோலால் புடைத்துத் துரத்துவேன்" என்று அதட்டிப்பேசினார். அது கண்டு கிருஷ்ணானந்தர் திடுக்கிட்டுப் பயந்து உயிர் தப்பினாற் போதும் என்று நினைத்தவராய் ஓடிப்போய் விட்டார்.

ஸ்வாமிகளிட மிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிச்சென்ற கிருஷ்ணானந்தர் தம் சிஷ்யர்களிடம் நடந்த விருத்தாந்தத்தை யெல்லாஞ் சொல்லி முறையிடவே, அவரெல்லாரும் ஒருங்கு கூடி ஸ்வாமிகளை எவ்விதத்தால் தண்டித்து புத்திவரும்படி செய்யலாமென்று ஆலோசித்து சமயம் வாய்த்தபோது அவரைத்தனியே வருங்காலையில் பிடித்து அடித்து ஹிம்சிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். இதை யறிந்த ஸ்வாமிகள் துயரக்கடலில் ஆழ்ந்து நித்யானந்தரை யழைத்து, "நிதையே! இவ்வூரில் அவர்கள் என்ன செய்ய யோசித்திருக்கிறார்கள் தெரியுமா? என்னை அடிக்கப் போகிறார்களாம். இது சங்கதி கேள்விப்பட வில்லையா?" என்று கேட்க, அவர் அதைப்பற்றிக் கேட்டிருந்தாராதலால் பதில் ஒன்று முரைக்காமல் துக்கத்தால் தலைகுனிந்து நின்றனர். ஸ்வாமிகள் திரும்பவும் "ஆமாம்; என்ன தீர்மானித்திருக்கிறார்கள் என்றும், அதற்கு முதற்காரணம் இன்னாரென்றும் எனக்குத் தெரியும்: இதற்காக நான் என்ன செய்கிறது! நான் ஒரு யோசனைசெய்திருக்கிறேன். என்னவெனில், நான் உலகத்தினை விட்டு நீங்கிச் சன்னியாசி யாகி எனக்குத் தீங்கிழைக்கத் தயாராயிருப்பவர் வீட்டினுக்கேபோய் யாசகம் கேட்கின்றேன். அதனால் அவர் மனம்முற்றும் மாறிப் போம். மேலும், அவர் என்மேல் வைத்த வஞ்சத்தினையும் விடுவார்; எம்பிரானையும் நாடிக் கடைத் தேறுவார்" என்று சொன்னார். நித்யானந்தர் ஸ்வாமிகள் தாம் தமக்குள் ஏற்பாடு செய்துகொண்டதாலேயே, இம்மாதிரி தன்னைக் கேட்கின்றார் என்றறிந்து அத்யந்த மனக்கவற்சி கொண்டவராய், "ஸ்வாமிகளே! எங்களைத் துறக்கவேண்டாம். உமது திருவுடம்பினுக்குத் தொந்தரை செய்ய நினைத்தவர் பகுத்தறிவில்லாக் கழுதைகள்: அவர்களைக் குறித்து பரிதபிப்பதிற் பயனில்லை: எங்களையும் உமதன்னையாரையும் பற்றியாகிலும் துறவியாகிச் செல்லவேண்டாம். நீர் எங்களை விட்டுப்போனால், உமது சிஷ்யர்கள் எல்லாரும் பிரிவாற்றாது உயிரை விடுவார்கள்" என்றார். ஸ்வாமிகள் சிறிது புன்னகை புரிந்து, "என் நடத்தைக்கு மாறுகொள்பவர்களை என் நிந்திக்க வேண்டும்? நானோ ராஜபோகத்தில் வாழ்கின்றேன்; என் உடையோ விலையுயர்ந்த பட்டாடை; என் உண்டியோ பலவகை சித்

திரான்னங்களும் வெகு ருசிகரமான பணியாரங்களும்; இன்னும் புவி யரசரும் கண்டிராத இச்சுகங்களையும் நான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். என்னைபோல் உயிர் வாழ்பவ னொருவனிடமிருந்து பொது ஜனங்கள் ஹரிநாம மகிமையைக் கேட்டறிந்து கடைத்தேறுவது அசாத்தியம்; மனிதரின் சுபாவமே அப்படியிருக்கின்றது. அது தெரிந்திருந்தும் நான் இல்வாழ்க்கையிலிருந்ததேனெனில்; முதலில் தருமநெறியினின்று இல்வாழ்தலினால் பக்தியும் பிரேமையும் அடைய முடியாமற் போகாது என்று அனைவருக்கும் நிரூபிக்க வேண்டியும்; இரண்டாவது சிஷ்யர்களாலும் நட்பினர்களாலும் உலகில் எவரும் கண்டறியாத அவ்வளவு விசேஷமாகப் போற்றப்பட்டு வந்த நான் அவர்களையெல்லாம் திடீரென்று விட்டுப்போய் அதனால் துன்பப்படுத்துவது நன்றி மறத்தலாகும் ஆனதுபற்றியுமே: அதனாலேயேதான் நான் இதுபோல் சமயம் எப்போது நேரும் என்று எதிர்பார்த்திருந்தேன். நான் இல்வாழ்க்கையிலிருப்பதால் சிலர் இன்னும் ஹரிநாமத்தினைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் இவ்வாறே இருந்து உங்களைச் சந்தோஷப்படுத்திக் கொண்டிருப்பது நல்லதா? அல்லது உங்களுக்கு கொஞ்சம் வருத்தமுண்டாகும்படி துறவியாய் மற்றவர்களையும் கடைத்தேறும்படி செய்வது நல்லதா? சொல்லும்," என்று சொன்னார்.

நித்யானந்தர் இவ்வினவினுக்கு விடைகூற முடியாது மௌனஞ் சாதித்தார். ஸ்வாமிகள் தாம் சொல்லியவாறு எப்படியும் நடந்து விடுவார் என்று அவருக்கு நன்றாய்த்தெரியும். அவர் எங்குச் சென்றாலும் தான் அவரைப்பிரியாது தொடரவேண்டுமென்று முன்னமேயே தீர்மானஞ் செய்திருந்தார். என்றாலும், ஸ்வாமிகள் சசிதேவியாரையும் விஷ்ணுப் பிரியையையும் பரிதபிக்க விட்டு கௌபீனமட்டுந் தரித்து தமக்கென்று ஒரு வீடுவாசல் உற்றார் பெற்றார் ஒன்றுமிலாது யாவையுந் துறந்த சன்னியாசி யாதலை நினைக்க அவருக்கு மனந் தாளவில்லை. ஆனால் இச்செய்தியை எவர்க்குந் தெரிவியாது இரவும் பகலும் அதையே நினைந்து வருந் கொண்டிருந்தார்.

பதினைந்தாவது அத்தியாயம்.

துறவியாதற்கு அனுமதி பெறுதல்.

மேற்கூறிய விதமாய் ஸ்வாமிகள் தமது மனோபீஷ்டத்தை நித்யானந்தருக்குச் சொல்லி இரண்டு மூன்று நாளாவதற்குள் ஓர்நாள் காலையில்ராதாதேவியாரைப்போல் கிருஷ்ணனைப் பிரிந்ததால் விரகதாபம் மேலிட்டு மிக வருந்துவா ராயினர். அவருடைய துக்கத்தின் கொடுமையை எவராலும் வர்ணிக்க முடியாது. அன்புமுதிர்ந்த காதலன் காதலியாகு மிருவரி லொருவர் பிரிந்தகா லுண்டாகுந் துன்பத்தைப் போன்றுள்ள மனவருத்த முடையராகி, ஸ்வாமிகள்,

> " விழுதல் விம்முதன் மெய்யுற வெதும்புதல் வெருவ
> லெழுத லேங்குத லிராமனை யெண்ணி:
> தொழுதல் சோருத றுளங்குத லயருழந் துயிர்த்த
> லழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள் "

என்றவாறெல்லாம் வருந்திப் பார்ப்போர் மனமுற்றும் எங்கும் வண்ணம் பற்பல சொற்களைச்சொல்லிக் கதறுவாராயினர். அவர் பின்வருமாறு சொல்வார், "நான் ஏற்கவே மிக வருந்தினேன்; இன்னும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரிந்து உயிர்வைத்திரேன்" "நான் பிருந்தாவனம் போவேன்; அப்படியாகிலும் என்னாயகனை அடைந்து கடைத்தேறுவேன்" "அவனை ஒருமுறை கண்டாற்போதும்; அதுவுமன்றி யாவிதரித்திரேன்" "ஐயோ! என்னாதனை நான் எப்போதும் காணமாட்டேனோ?" பின் கிருஷ்ணனைக் கூவி, "நாதா! என்னைச் சற்று கடைக்கண்ணால் பார்த்து ரக்ஷிக்கமாட்டீரா? என் மனம் உம்மையே நாடுகின்றது. உமது சேவை கிட்டாதாயின் என்னுயிர் நில்லாது" என்பர்.

சற்றுப்பொறுத்து, "என் மனதிற்கிசைந்த மன்னவனே! நீ இவ்வகை செய்வ துனக்கடாது. நீ கொடியரிற்கொடியன்! உன் களங்கத்திற்கு அளவு ஏற்படாததினாலன்றோ உன் நிறம் கருநிறமாயிற்று. பலபேர் சொத்துக்களை யெல்லாம உளவறிந்து

களவாடிச்செல்லும் பரமபாவிகளென்று இகழப்பட்ட திருடர்களே யோக்கியர்கள்! ஆ! ஆ! அவர்கள் நற்குண வாய்மையுட செய்கையின் தூய்மையும், உண்மைத் திருடனாகிய உனக்கெங்கிருந்துவரும்? அன்னோர், தாம் களவாடிய பொருளைத் தம்முடனெடுத்தாவது போகிறார்கள்; கடின சிந்தையும், தூர்த்த ஞானமுமுடைய நீயோ பெரும்பாவி—அடா, பாவி, அனைவர்க்கும் துன்பம் விளைக்கும் நீ பெரும் துரோகி—ஏழைகளாகிய மோனமுட பெண்களின் மனதைத் திருடினாயே: அவர்களை உன்னுடன் எடுத்துச் சென்றாயா, அல்லலில் விடுத்துச் சென்றாயா! வழியிற்கண்டு விழியைக்காட்டினையே; பின் வாவென்றழைத்தனையா, போவென்று பழித்தனையா! குழலைக் கொண்டு குறிஞ்சி பாடினையே: இப்போது அழகுடன் அன்புப் இதோவென நாடினையா, தழலால் வெந்து தவியென ஓடினையா! மூடத்தை யிகழும் முறுவல் தந்தனையே: வித்தையான் றிப்போ விலகிநடந்தனையா, வினைகள் தீர்க்க விரைவினில் வந்தனையா! என் மனச்சாட்சி [illegible] ருத்தும்: உன்னைச் சாரனென்றும் சோரனென்றும், இடையனென்றும் மடையனென்றும், பொய்யனென்றும் வையனென்றிய நால்வர் பழிக்கிறார்களென்றால், இவ்வித நடையுடையோனை, அடம் பூண்டோனை, அல்லல் விளைப்போனை, திருட்டுக்கு நவமணியை, களவுக்குக் களஞ்சியத்தை, பொய்க்குப் பொக்கிஷத்தை, சூதுக்குச் சுறுசுறுப்பை, வாதுக்கு வல்லமையை யாவர் தான் வியந்து பேசுவர், நல்லவனென்று கூறுவர்! சட்டியில் வெண்ணெய் திருடினமட்டியென் றிகழ்ந்து குட்டும் பட்ட உனக்குத் திட்டு என்பது தூட்டு போல்வதல்லவோ!" என்று நிந்தாஸ்துதி செய்வர். சிறிது நேரஞ் செல்ல, தான் முன்னர் செய்த நிந்தைகளை நினைந்து மனம் புண்ணாகி நெக்கு நெக்குருகி, தன் நாயகனாகிய கண்ணனிடத்தில் அபராத க்ஷமை கேட்டுக்கொள்வர். அப்புறம் கண்ணன் மீதே காதலராய், "என்நேசமே! என் அன்பே! என்காதலே! என் கற்பகமே! யான் இவ்வாறு வருந்த இங்குவிட்டு நீ செல்வதுனக் கடுக்குமோ! "கெண்டை போட்டு வராலிழுப்பது" போல் உன் கண்களை யென்பால் நீட்டி, என் மனதைக் கவர்ந்து கொண்ட

ரயே! நீண்டு பரந்து செவ்வரியோடிய உன் திருக்கண்கள் தாமரைபோன் றிருப்பதா லன்றோ, உனக்குப் "புண்டரீகாக்ஷன்" என்கிற பெயர் கொடுத்திருக்கிறார்கள்! "தாமரைக்கண்ணனுலகு" என்று தமிழர் கூறுவதும் நின்னையே யன்றோ! உன் கண்கள், கருணைக்கண்களே; ஆயினும் அவைகள் கருநிறமேற்றுக் கொலைத் தொழிலும் கலகத் தொழிலும் நிறையப்பெற்று விளங்குகின்றன. நானிவ்வகை சொல்கிறேனென்று, என் நண்பனே, நீ முனிந்து செல்லுதல் ஆகாது. தீவினையைக் கொல்லுதல் உன் தொழிலல்லவோ! நீ உன் திருக்கண்களால் ஒருதரம் பார்த்த மாத்திரத்தில் உன் அடியார் பவபாசங்க ளழிந்துபோதல் மெய்யன்றோ! நீ கலகத்தில் நாரதனென்று சொல்வதிலும் யாதுதடை? உன் அன்பர் மனதில், நற்குணங்களும் தீயகுணங்களும் ஒத்திராது, முன்னவை பின்னவைகளுடன் விருது கூறிப் பொருது அவைகளை யடக்குதல் கரதலாமலகமே யன்றோ! அதற்கு நீயே காரணமல்லவோ. அன்று உன்னைக் கண்டமுதல் உன்மீதே யென்மனம் நாடி விட்டதே! முல்லையரும்பு போன்ற உன் பற்கள் சிறிது வெளிதோன்றவும் கொவ்வைப் பழத்தையு மிகழ்ந்த உன் அதரங்கள் சிறிது நீளவும் நகைபுரிந்த அதிசயத்தைப் பகைவர் கண்டாலும் பரிந்து வருவார்கள்; கோபிகள் பார்த்தாலும் குழந்தைபோல் பேசுவார்கள்! அந்த புன்சிரிப்போ மின்சாரம்போல என் மேனியிற்பாய்ந்து அன்புவிளைத்ததே! அஃதே இப்போது அவதி விளைத்து அனர்த்தஞ் செய்கிறதே! என் ஆவியே, அருமருந்தே, என் நாயகமே, தாயகமே! இவ்வகை துன்பம் கொடுப்பது அன்பன் காரியமா" என்று பதறுவார் ஒருவேளை. பின்னுஞ் சில நேரம் பொறுத்து, பெருமூச்சு விட்டெழுந்து, கண்ணீர் தாரைதாரையாய் பெருக ,அங்கமெல்லாம் அக்கினி தாக்கினதுபோல் மிகப் பெரிதும் அயருழந்து மெய்தடுமாறி, வியர்வை முத்துப்போல் அரும்பவும், கண்சிவந்து கலக்கங்கொள்ளவும், மெய் சோர்ந்து கை சோர்ந்து கண் சோர்ந்து கால் சோர்ந்து, எழுந்தும் விழுந்தும் விழுந்தும் எழுந்தும் ஆடியும் பாடியும் பல்வகை வருத்தமுறுவார். இப்படிக் கொஞ்சம் நாழிகையாகப் பின்ன ரெழுந்து, "என்

நேசமே, என் ஆசையை என்று தீர்ப்பையோ! என்பாசமே, என் பவக்கடலை யென்று வற்றச் செய்வையோ! உன் திருவருளென்று தருவையோ! என் மனம் உன்னை யன்றி வேறு பொருளை நாடுகின்றிலதே! 'வடக்கு நோக்கி' என்னும் ஸ்காந்தப் பொருள், எவ்வகை, வடக்குத் திசையையே காட்டுகின்றதோ, அவ்வகையே என்மனமும் உன்னையே நாடுகின்றதே! கன்னியர் மனதைக் களவாடக் கண்ணனாய்த் தோன்றினைபோலும்! உன்னழகைப்பருக என்னெதிரே யின்னொருக்கால் தோன்றுவையோ! உலகமெலா மளந்தவனே! உன் மனதை யளந்தெடுக்க என் போல்வார்க்கு முடியுமா! கடலைக் கடந்தோனே! உன் மனக்கடலைக் கடக்க என்போல்வாராலாகுமா? உன் குவளைக் கண்ணும் பவளவாயும், பங்கயமுகமும் சங்கெனு மிடறும், கிளியெனு மொழியும் குயிலெனு மிசையும், கற்றையங் குழலும் அற்புத வெழிலும் தோன்ற என் பக்கல் வந்து முத்தந் தந்து அணைத்து ஆதரிப்பினன்றி என் உயிர் நிலைக்காது" என்று தரைமீது வீழ்ந்து புரண்டலறியழுது மூர்ச்சிதரானார். கதாதரர் அவரைத் தூக்கவே, அவரெழுந்து நின்று "என்னைத் தடுக்கவேண்டாம்; நான் என்னுடைய கிருஷ்ணனிடம் செல்கின்றேன் என்று சொல்லிக் கொண்டே ஓடினார்னால் ஓடமுடியாது கீழே மறுபடி வீழ்ந்தார்

இப்படியே அன்று உச்சிகாலம் வருமளவும் இருந்து அப்போது சிஷ்யர்களை நோக்கி, "என் அன்பர்களே! இந்த என்னுடல் உங்களுடையதே! நீங்கள் அதை எவ்வழியிலாகிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். என்னை நீங்கள் போஷித்துப் போற்றி வந்ததுபோல் உலகில் எவரும் செய்திரார். என்னை அவ்வாறே நேசித்து மிருக்கின்றீர். ஆகையால் உங்களைவிட்டுப் போவதற்கு என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் கட்டாயம்போய் என்னுடைய கிருஷ்ண பிரானை எப்படியாயினும் காணவேண்டும்" என்று சொல்லினார். அதற்கு சிஷ்யர்கள் ஒன்றுஞ் சொல்லமுடியாது சும்மாவிருக்க, ஸ்வாமிகள் "பிறவிப்பயனெய்துதற்கு இன்றியமையாத செய்கை இறைவனைத்துதித்தலே:

'அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க்கல்லாற் பிறவாழி நீந்தலரிது'

என்று நாயனாரும் கூறியிருக்கின்றாரன்றோ? ஆகையால் நாம் இங்கு ஒன்றாய் வாசஞ்செய்தாலும் தனித்தனி யிருந்தாலும் மாளிகையில் இருப்பினும் காட்டை யடைந்தாலும் எல்லாம் ஒன்று தான். அன்பர்களே, நீங்கள் நான்பிரிந்து போனபின் கிருஷ்ணனைத் துதியுங்கள்; அப்படி நான்போவதும் பொதுவாய் ஜனங்களின் நன்மைக்காகத்தான். வியாபாரிகள் 'திரைகடலோடியும் திரவியம்' தேடிவந்து எப்படி அதனால் எல்லாரும் சுகமாய் வாழச் செய்கிறார்களோ அதுபோலவே நான்போய் கிருஷ்ணப் பிரேமை சம்பாதித்து வந்து உங்களுக்கெல்லாம் பகுத்துக்கொடுப்பேன்" என்று மிக ஆற்றாமையோடு கூறினார்.

இந்த சமாசாரம் பக்தர்கள் காதினில் பேரிடிபோல் வீழ்ந்தது. இதுவரையில் மௌனம் சாதித்தும் ஸ்வாமிகள் சொல்லி அங்கு எதிர் பேசாமலும் இருந்தவர்கள் இப்போது சிறிது தைரியங்கொண்டு ஒவ்வொன்று பேசினர். ஸ்ரீபாஸர், "எவ்வெவர்கள் கிருஷ்ணப்பிரேமைக்காக உம்மைவிட்டுப் பிரிந்திருக்க மனத்துணிவு கொண்டிருக்கின்றார்களோ அவர்கள் இருக்கட்டும்; என்னால் அப்படி பிரிந்திருக்க முடியாது. ஆகையால் உம்முடைய தைரியப் பேச்சுகள் என்வரையிலும் சிறிதும் பிரயோசனமில்லை; 'குருவியின் தலையில் பனங்காய் கட்டுவதுபோல்' என்னால் தாங்க முடியாத பாரத்தை யென்மீது ஏற்றுகிறீர்களோ, வெகு நன்றாயிருக்கிறது!" என்றார். கதாதரர், "ஸ்வாமீ! நீர் சொல்வது விந்தையாயிருக்கின்றது. எங்களைவிட்டுப் பிரிதலென்றால் அன்னை சசிதேவியாரையும் விட்டுப்போதலன்றோ? அப்படி "பெண்ணென்றால் பேயு மிரங்கும்" என்பது பழமொழி; அதிலும் தாயென்றால் இரங்காதவர் பேயினுங்கொடியரன்றோ! வயது முதிர்ந்து நரை திரை முதலிய தோற்றங்கள் மிகுந்து அங்கமுழுதும் கூனிக்குறுகி உறிகள்போல நரம்பு தூக்கி, "பீளை சோரக் கண்ணிடுங்கி" இன்றைக்கோ நாளைக்கோ பரகாயப் பிரவேசமென்று வருந்தும் அன்னையைப் பின்னர் விட்டுச் செல்லத் துன்னிய ரெவர்தான் விரும்புவர்! அந்தந்தோ! நமது கொடுமையைக் கேட்கவென்றால் காது பிளக்கின்றிலது! செய்கையைச் சொல்லவென்றால் நாவு

மசைகின்றிலது! இப்படிச் செய்யும் கிருஷ்ணபக்தி, யாது பக்தியோ! நான் அதைப் பக்தியென்றே சொல்லமாட்டேன். அது முக்தியும் தராது, சக்தியுந்தராது! ஸ்வாமிகாள்! அம்மாள் கந்தைக் கழவும், பின்னை கும்பகோணத்தில் கோதானஞ் செய்வதென்கிற விசேஷத்தை தாங்கள் தான் கற்றுக்கொடுக்கிறீர்கள்" என்று சொல்ல, பக்தர்கள் இவ்வளவு தைரியமாய் எப்போதும் பேசாதவர் பேசினரே யென்று ஆச்சர்யப்பட்டாரேனும் அவர்கள் மொத்தத்தில் சந்தோஷப்பட்டு என்னபதில் சொல்லுவாரென்று ஸ்வாமிகள் முகத்தை நோக்கினர். அதற்கு, ஸ்வாமிகள் "என்னை நீர் மனப்பூர்வமாய் நேசித்தால் நான் சென்றபிறகு நீரே என்னன்னையாருக்குத் தைரியஞ்சொல்லிக் காப்பாற்றவேண்டும். நான் அவரைப்பற்றியே பெரு விசாரப்பட்டுக் கொண்டிருக்கின்றேன், அந்த விஷயத்தில் எனக்குதவி புரிவதே நண்பரான உமது கடன். என்னாலிங்கு இருந்தலோ அசாத்தியம்; ஏனெனின், உயிரில்லாத என் சரீரத்தை வைத்துக்கொண்டு நீரென் செய்வீர்? என்னுயிர் ஸ்ரீகிருஷ்ணனிடஞ் சென்றதுமக்குத் தெரியாதா? என்னிலைமையைச் சொல்லுகிறேன் கேளும். கிருஷ்ண விரகமாகிற தீ என்னைப்பற்றி சிறிது சிறிதாக உருக்கிக்கொண்டிருக்கிறது. அதனால் உலக ஆசை இன்பம் ஒன்றுங் கிடையாது. கிருஷ்ணன் தவிர வேறு ஒரு பொருளிலும் என்மனம் நாடாது. ஆகையால் உங்கள் அன்பனாகிய என்னைத் தீ எரித்துக் கொல்ல நீர் பாத்திருப்பீரா?" என்று பதில் கூறினர்.

இப்படி ஒவ்வொருவரும் பேசி வருவது பயனில்லாதது கண்டு முகுந்தர், "ஸ்வாமீ! நீர் எங்களை விட்டுப்போக முடியுமா? அதை நினைக்கும்போதே அடிவயிற்றில் தீ வைத்ததுபோல் பதைபதைக்கின்றோமே, உங்களைப் பிரிந்து உயிர்தரித்திருக்க முடியுமா?" என்று சொல்லி ஸ்வாமிகள் பாதங்களில் வீழ்ந்து வருந்தவும், பக்தர்கள் எல்லோரும் அதுபோலவே செய்து கோவென்றழுதார்கள். அதனால் ஸ்வாமிகள் மனந்தாளகில்லாராகி, ஒன்றும் பேசத்தோன்றாது விழித்து, பின் தாம் பிரிவதாயின் அப்போதே பிரிந்துபோய் திரும்பி எப்போதும் பார்க்காமலிருப்பதற்கல்ல

என்று ஒருவாறு சொல்லி ஒவ்வொருவராக அவரெல்லாரையும் ஆலிங்கனஞ்செய்து புன்னகை புரிந்து சிறிது தேற்றினர். அதற்கப்புறம் ஸ்வாமிகள் ஒவ்வொரு சிஷ்யரின் வீடுதோறுஞ் சென்று அவரை, "என்னன்பரே! மனிதர் படுந்துன்பத்தினைப் பார்த்துச் சகியேன். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று எத்தனைபேர் தற்கால சுகத்திலேயே லட்சியம் வைத்து மற்றவையனைத்தையும் முற்றிலு மறக்கிறார்கள்! அயோக்கிய ஸ்ரேஷ்டனாகிய துரியோதனன் புலை நரகத்தழுந்தி வாதைப்படும்போது, நற்குண சம்பன்னராகிய தர்மராஜர் ஓர் கயிற்றை விடுத்து அத்துரியோதனனை வெளிவரும்படி வழிகாட்ட, அப்பாவியோ தனக்கு அவர் செய்யு முபகாரத்தையுஞ் சிறிது முணராது, நெருப்பில் விழப்போகிற தேளையெடுத்து விட்டவன் கையையே அஃது கொட்டுவதுபோல், . தர்மராஜரையும் தன்பக்க லிழுத்துக்கொள்ள முயன்றனனென்று ஒருகதையுண்டு. அதுபோன்றே, இப்பூவுலகின் பாமரர்களுக்கு நன்மை யென்றும் தீமையென்றும் பகுத்தறிதல் கிடையாது. நற்புத்தி யொருவர் சொன்னாலும் கைக்கொள்ளார்; தாம் பிடித்த முசலுக்கு மூன்றேகாலென்பர்; வாதுக்கிழுப்பர்; வம்புக்கழைப்பர்; ஓயாது சிரிப்பர்; கொக்கரிப்பர்; காரணமின்றிக் கைகொட்டுவர், நாரணனென்றால் வாய் தடுமாறுவர்; கோழிச்சண்டையில் கொண்டாட்டம், கோபாலன் பால் திண்டாட்டம்; ஆட்டுச் சண்டையில் அகமகிழ்ச்சி, ஐயனைச் செய்வது மிக விகழ்ச்சி; இவர்களை நல்வழிக்கிழுக்க முயன்றால் நாய்போல் விழுவார்கள்; இவர்களிடம், பெருமான் பேர் சொன்னால் பேய்போலறைவார்கள். இவர்களைத் திருப்புவதென்றால் இறைவன் துணையின்றியாதொன்று மியலாது; ஆகையால் நான் கட்டாயம் போகவேண்டியிருக்கிறது. அதற்கு நீர் அனுமதிதந்து உதவிபுரிவீராக!" என்றுவேண்டிக் கொள்வர். ஸ்ரீகிருஷ்ணனைப் பிரிந்ததினால் விரகம் மேலிட்டு என் வாழ்வே பாழாய் முடிந்தது. ஐயோ! அவன் சுந்தரமுகமும் மந்தகாசமும் என் மனதைக் கொள்ளை கொண்டு போனதே! அவன் கருணைக்கடல்; காதற் களஞ்சியம்; ஆகையால் நான் அவனைக்காணப் போகவேண்டும். நான் போவது உமக்கு

கஷ்டமாயிருந்தால் அதற்கென்னை மன்னியும்" என்று பலவிதமாய் இரந்து பேசி அவரை எல்லாம் தாம் போவதற்குச் சம்மதிக்கும்படி செய்தார்.

ஸ்வாமிகள் தந்நிலைமையில் இரண்டாந்தரம் மாறுபாடு அடைந்தது முதல் சசிதேவியார் மனக்கவலை யதிகமாயிற்று. அவர் முதல் பிள்ளையாகிய விஸ்வரூபரைப்போல் ஸ்வாமிகளும் சன்னியாசியாவரோ வென்று அந்தம்மாள் திகில்கொண்டிருந்தார்; ஆகையால் சந்திரசேகரர் மனைவியாகிய தம் சகோதரியாரை வரவழைத்து அவரிடம் ஆலோசனைகேட்க, அவர் ஸ்வாமிகளை நேரில் கேட்டறிந்து கொள்ளுவதே உத்தமம் என்றார். அத்தருணம் தற்செயலாய் ஸ்வாமிகளும் அங்குவரவே, அவரைப்பார்த்து சசிதேவியார் "என்னருமை நிமையே? உன்னை ஒருநிமிஷமேனும் பிரிந்து வாழ என்மனம் துணியாது. என்று உனக்குத் தெரியுமல்லவா? ஆகையால் நீ எப்பொதும் என்னைவிட்டுப் போகமாட்டாயே?" என்று கேட்கவே, அவர்சற்று யோசித்து, "அம்மா, நான் ஒருதிவ்விய ஸ்தலத்தினுக்குப்போகலாம் என்று தான் எண்ணியிருக்கிறேன். நீர் ஒன்றும் பயப்படவேண்டியதில்லை. நான் போவதாயிருந்தால் உம் அனுமதிபெற்றே போவேன். அப்படிப் போனால், கட்டாயம் திரும்பிவந்து உம்மைச்சேவிப்பேன்" என்று சொன்னார்.

இதனால் சசிதேவியாருக்கு மனத்தேற்றம் உண்டாகி தாம் முந்திச்செய்த வோர்சூழ்ச்சியின் ஞாபகம் வந்தது. உடனே ஸ்வாமிகளை நோக்கி, "நிமையே; நான் உனக்கு ஒருகெடுதி செய்தேன்; என்பிழையைப் பொறுத்துக்கொள்ளுகிறாயா?" என்று கேட்கவும் அவர், நீர் இவ்விஷயத்தில் என்ன செய்திருந்தபோதிலும் அது பிழையாகாது. செய்ததைச் சொல்லுமம்மா" என்று சொன்னார். சசிதேவியார், "உன் மூத்தோன் விஸ்வரூபன் உனக்கு வயது வந்தபிறகு உன்னிடம் கொடுக்கும்படி சொல்லி ஒரு புஸ்தகம் என்கையில் கொடுத்தான்" என்று கூறி, இன்னும் பேசமுடியாது நிற்க, ஸ்வாமிகள் அப்புஸ்தகத்தைப் பற்றி மிக்க ஆவல் கொண்டவராய் அதைச் சீக்கிரம் கொண்டு வரும்படி வேண்டினர். பின் அத்தேவியார், "அதைக் கொடுத்த சின்னாளிலெல்லாம் அவன் வீடுவாசல் உற்றார் பெற்றார் எல்லாந் துறந்தான். உலக வாழ்க்கை அநித்தியம் என்று அவன் கல்வியறிவினால் அறிந்ததினால் தான் துறவியானான் என்று நினைத்திருந்தேன். மேலும் உன்னையும் தன்வழிவரும்படி கனவில் ஓர்நாள் உனக்குஞ் சொன்னானல்லவா! ஒருவேளை அந்தபுஸ்தகத்தை வாசித்தால் நீயும் அவனைப்போல் சன்னியாசியாய் விடுவையோ என்று பயந்து அதனைத்தீயினில் எறிந்தேன்" என்றார். ஸ்வாமிகள் இதனால் சற்று மனம் நொந்தவராய்ப் பின் திடப்படுத்திக்கொண்டு, "அம்மா! நீர் என்மேல் வைத்த அன்பினாலன்றோ அப்படிசெய்தீர். அது பெரிதல்ல" என்று சொல்லிப் போனார்.

ஆனால் சசிதேவியம்மாள் சுகமாய் அநேகநாளிருக்கவில்லை. இப்பூவுலகி லவதரித்தோர் யாவரே நீடியசுகமனுபவித்தார்? நீதி நூற்காரரும்,

"கோடி பொன் னுடையவ ரெனினுங் கோமுடி
சூடிய வேந்தரே யெனினுந் துன்பொடுங்
கூடிய வாழ்க்கைய ரன்றிக் கூறுங்கா
னீடிய சுகமுளோர் நிலத்தி னில்லையே"

என்றன்றோ சொல்லினர். நாளுக்குநாள் பக்தர்கள் முகத்தைப்பார்த்து வரவே அவருக்கு மனக்குறை தோன்றினது. சிஷ்யர்கள் ஓர்நாள் அவரிடம் வந்து, "அம்மணி! ஸ்வாமிகள் நதியாவை விட்டுப் போவதாய் யோசனை பண்ணியிருக்கின்றார். நீரே அவரை ஓடாமற் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று சொன்னார்கள். இதனால் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்தம்மாள் ஓர் நாள் ஸ்வாமிகளைப் பார்த்து, "நிமையே! நீ ஒரு திவ்யஸ்தல யாத்திரை போகவேண்டும் என்று சொன்னாயே. போவது எங்கே? சொல்லு" என்று கேட்கவும், ஸ்வாமிகள் தம் மெண்ணத்தினைத் தெரிவிக்கக் காலம்வந்துவிட்டது என்று நினைத்து, "அம்மா? நான் பிருந்தாவனம் போய்வருவதை என் ஜென்மவேலையாக பாவித்திருக்கின்றேன்; என் கண்மணியிடம் செல்லாது எத்தனைநாள் காலங்கழிப்பேன்! அவன் ஒய்யாரமும் சுகுமாரமும் என்னையவன் பக்கலிழுக்காது விடாது, உம்முத்திரவின்றி நான் போவதில்லையென்று

உமக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்; ஆனபடியால் இப்போது போவதற்கு எனக்கு அனுமதி கொடுக்கமாட்டீரா?" என்று வெகு ஊக்கத்தோடு சொன்னார். அந்த கேள்விக்கு நேராய் பதில்கூற முடியாமையால் அத்தேவியார், "நிமையே! உன்னைப்பற்றி ஜனங்கள் என்னென்னவோ சொல்லிக் கொள்கிறார்களே, பித்துப்பிடித்தது என்றும் பேய்பிடித்ததென்றும் திருட்டுத்தனமென்றும்; அதென்ன? எனக்கு உண்மையைச்சொல்" என்று கேட்டார். அதற்கு ஸ்வாமிகள் கண்ணுந்தண்ணீருமாய் மனக்கலக்கத்தோடு "என்னம்மணீ! கேளும் கேளும். என்னை நீரே பத்துமாதஞ் சுமந்து பெற்றெடுத்தீர்; முலைப்பாலூட்டி தாராட்டிச் சீராட்டி வளர்த்தீர். எனக்கு ஒரு தந்தையைப்போலவே யிருந்து "கல்வியினாங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை" என்பதையறிந்து கல்வி பயிற்றுவித்தீர்; இன்னும் சகல உபசாரமும் செய்தீர். ஆகையால் இந்த என்னுடல் உமதுடையதேயாயிற்று. அதை நியாயமாய் உமக்காகவே உபயோகித்து உம்முடைய குறைவாழ்நாளை சுகப்படுத்துவதேயன்றோ என்கடன்? அதற்கென்ன சந்தேகம்? அஃதப்படியிருக்க ஸ்ரீகிருஷ்ணனே என்னை நாளுக்குநாள் சிறிதுசிறிதே கொள்ளைகொண்டு போவதல்லால் உம்மையுந் தவிர்க்கச் செய்கிறான். நான் என்செய்வேன்? கூன்குருடு முதலிய குறைகளால் உலகில் எத்தனையோபேர் தம் பெற்றோருக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்யக்கூடாமலும், அவ்வாறு குறை யொன்றுமில்லையாயினும் அனேகர் அக்கடனைச் சிறிதுங் கவனியாது நன்றி கெட்ட மதிகேடராய் விளங்குகின்றார்களல்லவா? அன்னோரிலேயே நான் ஒருவனாகவிருக்கின்றேன்; என்னுடைய கிருஷ்ணனை நாடி நான் போகாதிருப்பேனோ! அவன் முகத்தைப்பார்த்து அகமகிழாதிருப்பேனோ! அவன் கருணைநோக்கி ஸ்மரணைசெய்யாதொழிவேனோ! அம்மா! நான் முதலில் துறவியாகவேண்டும். எனக்கு அனுமதி கொடுத்து அனுப்பும்படி உம்மை வேண்டுகிறேன். பரோபகாரமான சிந்தையுடைய ஒருதாய் தம் அன்பால் என்னபயன் விளைக்கக்கூடும் என்று உலகினர் இதனாலேயே அறிவார்." என்று சொன்னார்.

அதைக்கேட்ட சசிதேவியார், "அப்பா! நிமை! உன் தமையன் விஸ்வரூபனைப் போன்றல்லவோ நீ போவதற்கு என் மனப்

பூர்வமான அனுமதியுந் தரவேண்டுகிறாய்?" தாயினுடைய அன்பு இன்னதென நீ அறியாய். நீ கேட்பது எத்தன்மையாயினும் நான் இல்லையென்று சொன்னதில்லையே, ஆகையால் உனது திருப்திக்காக மாத்திரம் அனுமதி கொடுக்க முடியுமேயன்றி மனப்பூர்வமாய் பூரண சம்மதியாய் உத்தரவு கொடுத்தனுப்புவதேலாது. நான் உன் அன்னையல்லவா? உன்னையன்றி எனக்குத் துணையார்? அதிகமில்லாவிடினும் மற்ற தாய்மாரைப் போலவாயினும் நான் உன்னை நேசிக்கின்றேனல்லவா?" என்று சொன்னார். அத்தனை மனவேதனைகொண்டு கலங்கிநின்ற தஞ் செல்வனை நோக்கி, "அதுநிற்க, விஷ்ணுப்பிரியைக் கென்னவழி?" என்று கேட்டார்.

நாராசங்காய்ச்சி நடுச்செவியி லிட்டதுபோன்று ஸ்வாமிகளை வருத்திய அக்கேள்விக்கு, எவ்வாறு பதில் சொல்வதென்று சற்று அறியாது விழித்து பின், "அம்மா! நான் போவதாயிருந்தால் அவள் அனுமதி பெற்றேபோவேன்; அதன்றியும், அவள் சதாகாலம் தெய்வீக மகிழ்ச்சி அநுபவித்திருக்கும்படி செய்துதான் விட்டுப்போவேன். எனக்காக என்னமோ அவள் சிலவேளையில் துக்கிப்பாள். ஆனால் நான் ஸ்ரீகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட திவ்விய காரியத்தைச் செய்வதற்குத்தான் போகிறேனாதலால் அந்த எண்ணத்தினால் தன்னைத் தேற்றிக் கொள்ளலாம். ஆம், ஆம்; அவளது உலக வாழ்க்கை துன்பமாத்தானிருக்கும்; ஆனால் என் வாழ்க்கை பதின் மடங்கு அதனினும் சோகத்தான் முடியும்" என்றார்.

இவ்வாறு ஸ்வாமிகள் பேசிமுடிக்கு முன்னமே, சசிதேவியார், "ஆனால் நீ அந்த சிறுபெண்ணை என் கழுத்திற்கட்டி மயாலயமடும்படி விட்டுப்போகவா எண்ணியிருக்கின்றாய்? ஐயோ! பரிதாபம்! நிமையே! நீயொரு பெரிய தபசியானாய் அல்லவா? ஆயின் தாயாரையும் மனைவியையும் பிரிவாற்றாமையால் பரிதபிக்க விட்டுப்போவதோ தபசியின் ஒழுக்கம்? உன்னுடைய வாத்ஸல்ய குணத்தால் மானிடர் அனுபவிக்கின்ற பொல்லாங்கண்டு சகிக்கமுடியாது உன் மனம் நோகின்றது இந்த சமாசாரம் உலகினர் சொல்வது மாத்திரமன்று! நானே நேரி லனேகந்தரம் கண்டறிந்திருக்கின்றேன். உன்னுடைய அன்னையும் இல்லாளும் அப்படிப்பட்ட மனிதர்தானே; எங்களுக்கு மட்டும் நீயேன் கொடியனாக நடந்துகொள்ள வெண்ணினாய்?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள் தாம் புத்திரஸ்தானத்தில் நின்றே தம்மன்னையாரிடம் விடைபெற்றுப் போவது அசாத்தியம் என்று அறிந்து குருஸ்தானத்திற்கு மாறிநின்று பின்வருமாறு தம்மாதாவினுக்கு அறிவு புகட்டிப் பேசுவாராயினர்: "அம்மா! நீர் இவ்வாறு எப்போது கேட்பீர் என்று நான் எதிர்பார்த்திருந்தேன். நான் பிறருக்குக்கொடியனாகிப் பிழைபட நடந்துகொண்டால் என்பிழையைப் பொறுப்பார் என்மேல் அன்புவைத்தவரல்லால் வேறுயார்? என்பும் பிறருக்கு உரியராவார் அன்புடையாரேயன்றோ? நாம் ஒருவருக்கொருவர் தறிக்க வொண்ணாப் பாசத்தாற் கட்டுண்டிருக்கிறோமாதலின் உம்மிடம் ஒருதடையுமின்றித் தாராளமாய் என்மனதிலுள்ளவற்றையெல்லாம் சொல்லுகிறேன் கேளும். உலகினர் மேலுற்ற பச்சாதாபத்தினால்தான் நான் உங்களை விட்டுப்போவது. ஆகையால் நான் செய்யப்போகுங்காரியம் தேவகாரியமே. என்மேல் விசேஷ அன்புவைத்திருக்கிற நீரே யக்காரியத்தை இனிது செய்து முடித்தற்கு பூதற்றுணையாயிருக்கவேண்டும். அப்படியின்றி உம்முடைய ஆசைக்குமரன் செய்யுஞ் சற்காரியத்தினுக்கு நீரே தடையாயிருப்பீர் என்று எண்ணுதலே எனக்கு சாலத்துன்பம் விளைக்கும். அம்மா! யோசித்துப்பாரும். உலகத்தில் ஒவ்வொரு பிராணியும் நாடியடையவேண்டுவது ஸ்ரீகிருஷ்ணனையன்றி வேறென்ன? அவனையடைவதே இப்பிரபஞ்ச வாழ்க்கையின் தனிப்பயன். அதுவே யின்பம்; அன்றி அவனையடைந்து அநுபவியாதிருத்தலே பிணியும் துன்பமும். ஆகையால் உலகினர் படுந்துன்பமே [illegible]யன்றி வேறன்று. அவனையடைந்தவருக்குப் பிணியேது? துன்பமேது? அவனை யடைந்துவிட்டால்,

'அல்ல லென்செயு மருவினையென் செயுந்
தொல்லை வல்வினைத் தொடர்ந்தா லென்செயும்?'

ஆகையால் அம்மா! நீர் ஸ்ரீகிருஷ்ணனைப்பணியும், அவரே உமக்கு தைரியமும் சுகமும் கொடுத்து ரட்சிப்பார். உலகில் நடக்குங் காரியத்தினுக்கெல்லாம் அவரேகாரண பூதராகையால் நாம் அவர் பணித்தலைக்குச் சிறிதும் முகங்கோணாது அதனை கிளர்ச்சியுடன் நிறைவேற்றவேண்டும். எனக்கும் போவதில் பிரியமில்லை என்றாலும் அவர் ஏவுதலினுக்கு மாறுகொள்ளுதல் நன்றல்லவென்றே போகத் தீர்மானித்துள்ளேன். ஆகையால் நீர் என் கடனை நிறைவேற்றுதற்கு உதவிபுரியவேண்டும். நீர் மனங்கோணாது எனக்கு அனுமதி கொடுத்தாலொழிய நான் போக முடியாது என்று உமக்குத் தெரியுமல்லவா? ஆகையால் மனது பெரிதுபண்ணி எனக்கு விடைதர வேண்டும்" என்றிவ்வாறு ஸ்வாமிகள் விநயமாய் பேசுவதைக் கேட்டார். அந்தம்மாள் அவற்றின் உண்மையை யெதிர்க்க முடியாது கண்களில் நீர் கலங்க வருந்தினவராய், "நிமையே! நான் இப்படிவரும் என்று எதிர்பார்த்திருந்தேன். விசுவரூபன் செயலே பின்னர் இப்படியாகும் என்று எதிர்பார்க்கச் செய்தது. என்னுடைய அபார ஆனந்தமே அது வெகுகாலம் நீடித்து நில்லாது என்று எனக்குத் தெரிவித்தது. நான் உன் தகப்பனார் இறந்ததனால் மனம்வருந்தி இருக்கையில் உலகினர் எல்லாரும் போற்றும்படியான பிள்ளையைப் படைத்த பாக்கியமே என்னைத் தேற்றினது. * * * அதல்ல. நான் என்னவோ பிதற்றுகின்றேன். உன்னுடைய அபார அன்பே என்னைத் தேற்றிற்று. இப்புவியில் உன்னைப் போன்ற பிள்ளையைப்பெற்ற பாக்கியத்தை நான் அன்றி எத்தாய் பெற்றாள்? மேலும் எனக்கு மோக்ஷத்தினைப்பற்றிச் சிந்தையேயில்லை. உன்னுடைய தாய் மோக்ஷமடையத் தடையுண்டோ? இப்படியெல்லாம் நான் அனேகந்தரம் எண்ணியிருக்கிறேன்; ஆனால் உடனே அவ்வளவு சுகத்தினுக்கு நான் அருகளோ என்று நினைத்துவருந்துவேன். நீ என்னை விட்டுப் போகவேண்டியதவசியந்தான். ஏனெனில் என்னைச் சுற்றியிருப்பவர் எல்லாரும் துன்பமுற்று வருந்திக் கிடக்கையில் நான்மட்டும் சதா இன்பமனுபவித்திருப்பது கிரமமல்ல. ஆனால் நான் உன்னாலேயே உயிர்வைத்திருக்கின்றேன்; உன்னைப்பிரிந்து நான் எப்படி ஆவிதரிப்பேன்? சை! சை! நான் ஏன் இப்படி என்னைப்பற்றிப் பேசுகின்றேன்? நான் துன்பப்படவேண்டியது தான். என்றாலும் நான் ஒரு ஆசை வைத்திருந்தேன். என்னவென்றால், நீ இல்வாழ்க்கையிலேயே யிருந்து உன் குழந்தைகளை நான் எடுத்து வளர்த்துக்கொண்டு பேரானந்த மனுபவிக்கலாம் என்பதுதான். அதை நினைத்தென்ன பயன்? அதெல்லாம் கனவாய் முடிந்துவிட்டது. ஆனால் உன்னை நான் பூவைப்

போல் மிருதுவாய் வளர்த்துவிட்டேனே. நீயோ எப்போதும் ப்ரேமையால் நிலைமாறிக்கிடக்கும் சுபாவங்கொண்டிருக்கிறாய்; அதனால் உனக்கு மற்றவரே அன்னமிட்டு உன்னை வளர்த்து வரவேண்டியிருக்கிறது. நீ காட்டிற்சென்று எப்படி யிருப்பாய்? உன்னுடைய பாதம் மிக மிருதுவானதாயிற்றே; வெறுங்காலோடு எப்படி கரடுமுரடாயிருக்குந் தரையிலும் முள்ளிலும் நடப்பாய்? மேலும் கோவண காவி உடை தவிர வேறொன்றின்றி நீ தண்டகமண்டலம் தாங்கி இல்லந்தோறுஞ் சென்று இரந்துண்டு இளைப்பு வந்தக்கால் மரநிழலில் கட்டாந்தரைமீது படுத்துறங்கி வெயிலிலும் மழையிலும் காற்றிலும் குளிரிலும் கிடக்கவேண்டுமே. நிமையே, நான் இவையெல்லாம் முன்னமே மனதில் எண்ணியிருக்கிறேன். நீயோ சன்னியாசி யாகிறதற்கு என்னை விடைகொடுத்தனுப்பச் சொல்கிறாய். பிள்ளையைப் பெற்றுவளர்த்த தாய் யாராயினும் அப்படி அனுப்ப மனந் துணிவாரா?" என்று சொல்லினர்.

சசிதேவியார் இவ்வாறெல்லாம் மனநிலை தடுமாறிப் பேசுவதைக் கண்டு ஸ்வாமிகள் நெஞ்சம் கலக்கமுற்று அவருடைய கரங்களைப்பற்றி, "அம்மா! இதென்ன! இப்படி நீர் வருத்தப்படுவீராயின், நான் போவதில்லை. நீ ரிவ்வாறு கல்லுங்கரையக் கசிந்துருகின், கரைந்த மனமும் வருந்திவிடக் கேட்பானேன்? நீர் விடைகொடுத்தாலன்றி என்னால் போகமுடியாதென்று உமக்குத் தெரியாதா?" என்றுசொல்லவும், அந்தம்மாள் "என் அப்பனே! நான் வருந்தப்படுவதில்லை; ஸ்ரீகிருஷ்ணனுடைய இஷ்டம் அப்படியிருத்தலால் நான் விடைகொடுத் தனுப்பத் தடையில்லை. ஆனால் மனப்பூர்வமாய் உன்னைப்போவென்று சொல்லியனுப்புதற்கும் என்னால் முடியுமா?" என்றார்.

ஸ்வாமிகள் "அம்மா! நான் பந்துமித்திரர்களையும் உம்மையும் விட்டுப்போவதில் சிறிதும் வருத்தமின்றி என்னிச்சையால் போகவேண்டும் என்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? நான் இங்கேயே யிருந்துவிடவேண்டும் என்று எண்ணங்கொள்ளும்போதே ஒருவிதமான மனச்சஞ்சலம் என்னை வருத்தி வீட்டைவிட்டுப்

போம்படி ஏவுகின்றது. அதைத்தடுக்க நான் வல்லேனல்லேன். நான் போகாதிருப்பின் என்னுயிர் நில்லாது. நான் துறவாதிருப்பின் என் கவலை இறவாதொழியும்: நான் வீட்டிலிருப்பின் நாட்டில் நன்மை காணாது! ஐயோ! என்மனத்துயரை யா னென்னென்று சொல்வேன்! திருடித்திருடித் திரிந்திளைத்தா ரெத்தனையோ பேர்; அவர்கள் பாவத்தைத் திருடும் பரமனைக் கண்டறிந்தார் ஒருவருமிலர்! பொய்யே பேசிப் புரண்டொழிந்தார் பூவுலகி லெத்தனைபேர்! உலகம் யாவும் பொய்யென வெறுத்து மெய்ப்பொருளை மேவி மேன்மை யடைந்தா ரொருவருமிலர்! சூதே பேசி வாதே விளைத்துச் சுடுசாம்ப ரானவ ரெத்தனைபேர்! சூதை யகற்றிச் சுகம் பெருக்கிச் சுந்தரனை வந்திப்பவ ரொருவருமிலர்!

ஐயகோ வலமந்தே னலமந்தே னாழியான்ற னருட்கடலை
மாந்திடாஅ தலமந் தேனால்
வெய்யபுன் மாக்கடாமே யெண்ணிலவர் வெய்யினுறு
புழுதனினும் மிடியுற் றோர்தாம்
மெய்ப்படியும் வினைத்தொகுதி நோய்விளைக்கும் வெந்துயரு
நோக்காது விழுமம் நீங்கி
னைப்படிய நடந்தனரே யென்செய்கேன் னைந்துமனம்
நொந்துநின்றே னென்செய் கேனே.
ஆஆவென்றே யாடியயர்ந்தா ரொருசாரார்
போபோவென்றே புன்மைபுகன்றா ரொருசாரார்
கூகூவென்றே கூவிகுரைத்தா ரொருசாரார்
தூதூவென்றே தூறினர்துயில்வா ரொருசாரார்.

இவர்களைக் கடைத்தேற்றுவதே என் கொள்கையாய்விட்டது; இவர்கள் துன்பமே யெக்காலும் என்மனதை வருத்துகின்றது. என்கதி அப்படி யிருப்பதால் நான் ஸ்ரீகிருஷ்ணனை நாடி விரைந்துசெல்லவேண்டும்; அப்பகவானை இப்பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பாங்கிலும் தேடியே செல்வேன். ஆனால் பிருந்தாவனத்தில் அவரைக் காண்பேன்——" இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது பிருந்தாவனத்தில் இறைவனைக் காண்டலின் துணிபினால் ஸ்வாமிகள் அத்யந்த ஆனந்தங்கொண்டு மெய்ம்மறந்து கீழே உட்கார்ந்துபரவசமானார். அவரன்னையார் அதனைக்கண்டவுடனே சிறிது

நீர்கொணர்ந்து அவர் முகத்திற் றெளித்து "நிமையே!" "நிமையே!" என்றழைத்தார். ஸ்வாமிகள் தன் நினைவு பெற்று, "அம்மா! உலகினர் பகவானை மறந்து கேவலம் சேதனப் பொருளிலெல்லாம் இச்சைவைத்து இடர்ப்பட்டிருக்கின்றனர். ஆகையால் பகவான் என்னை இல்லந்தோறுஞ் சென்று அவருடைய பரமகாருண்ய மேன்மையையும் அன்பர்க் கெளியனாகுந் திண்மையையும் யாவரும் அறியப் புகன்றுவரும்படி கட்டளையிடுகின்றார். மானிடரோ தம்மைப் போன்று இகசுகங்களி லீடுபட்ட ஒருவன் சொல்லினைக் கொள்ளாராகையால் நான் துறவியாகவேண்டியிருக்கின்றது. பகவான் என்னால் இவ்விதம் பொதுஜனங்களின் துன்பத்தினை யொழிக்க நிச்சயித்திருக்கின்றார். நான் அப்பணி செய்யப் போகட்டுமா? அன்றி உம்முடனே யிருக்கட்டுமா?" என்று கேட்டார்.

இதனால் சசிதேவியார் நல்லுணர்வு பெற்று, "என் அப்பனே! நான் உண்மை யறிந்தேன். உன்னைத் தடைசெய்தது அறியாமையினாலேயே என்பதற்கு என்ன சந்தேகம்? நீ போக வேண்டிய தவசியந்தான். போய் இப்புவியில் தவழ்ந்து செல்லும் பெற்றியினராய் அஞ்ஞான இருளில் அழுந்தி யுழலும் மாந்தர்களை ஞானக்கரையேற்றி பக்தியமிர்தம் உண்பித்துப் பிழைப்பூட்டுவாய். ஞானம் இல்லாச் சேயர்கள் ஆவின் கன்றினும் அதிகமல்ல என்பது உண்மையே! அண்ட சராசரங்களுக் கெல்லாங் காரணனான ஸ்ரீகிருஷ்ணன் நீயே என்று மறந்திருந்தது இப்போதுதான் ஞாபகங்கொண்டேன். உன்னைப்பெற்று வளர்த்த பாக்கியம் எனக்கு உண்டானதே யருமை யல்லவா? கௌசலையும் தேவகியும் என்னிலும் உயர்ந்தோராகவேமாட்டார் என்னைச் சிலகாலம் அன்னையென்று விளித்து நடக்க உனக்குக் கிருபை யிருந்தது. உனக்கு நான் புதல்வி; எனக்கு நீ புதல்வன்; எல்லாமாய் நிறைந்த உனக்கு இது இயற்கையே! இப்போது உமது பிள்ளைகளை யெல்லாம் காப்பாற்றுதற்கு அவர்கள் குருவாகி நிற்க எண்ணங் கொள்கின்றீர். ஆகையால் நீர் போவதில் எனக்கு வருத்தம் சிறிதும் இல்லை. அன்றி பெருமகிழ்ச்சியே நிகழ்கின்றது" என்று சொல்லி விடை கொடுத்தனர்.

ஸ்வாமிகள் பெருமகிழ்ச்சி கொண்டார். அவரன்னையாரோ சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பவும் துன்பநிலை கொண்டவராய், "அந்தோ! என்னைப்போல் பாவியும் ஒரு தாயாய் உலகிலிருப்பளோ? எத்தாய் தன் அரும்புதல்வனைக் காட்டினுக்குப் போக ஒட்டுவள்? ராமனைக் காட்டுக் கனுப்பிய கைகை மாற்றாந்தா யல்லளோ? அவள் கடின சிந்தைய ளல்லளோ?" என்று சொல்லி விசனப்பட்டார். ஸ்வாமிகள், "அன்பின் மிக்க என் அன்னையே! ஸ்ரீகிருஷ்ணனே எனக்கு விடைகொடுக்கும்படி உம்முடைய மனத்தைப் பரிபக்குவப் படுத்தினர்போலும்! ஆகையால் நீர் தைரியத்தைக் கைவிடாது கூடியமட்டும் துன்பத்தை யொழிக்கவேண்டும். நான் உமக்குப் புத்திரனாகப் பிறந்ததில் உமக்கு ஒரு பயனும் அடையாமலிருந்தேன் அல்லவா? நான் இனி இவ்விடம் விட்டுப் போகும்வரைக்கும் இயற்கையான கிரகஸ்தனாகவே யிருந்து உம்மை இயன்றமட்டும் களிப்பிப்பேன். என்னம்மணி! நீர் என்னை நினைக்கும்போதெல்லாம் நான் வந்து உம்முடைய மனதுக்குத் தோன்றி உமது ஆற்றாமையைத் தீர்ப்பேன். மேலும் உம்முடைய சரீரத்தையும் ஆன்மாவையும் நானே பாதுகாப்பேன். ஆனால் விஷ்ணுப்ரியையை விட்டுப்போக நேர்ந்திருப்பதே எனக்குப் பெரிய துன்பமாயிருக்கின்றது. அப்பெண்ணை நீரே தைரியப்படுத்தி ரட்சிக்க வேண்டும். அவள் அழகுக் கணிகலம்; பொறுமைக்குப் பொக்கிஷம்; நாணிய நடையாள்; கன்னனிற் கொடையாள். நீரே அவளைக்காப்பாற்ற வேண்டும்; ஏனெனில் அச்சிறுமி பேதை யானபடியால் உம்முடைய ஆசீர்வாதமும் ஆதரவும் அவளுக்கு இன்றி யமையாதன. அவளும் என்னை நினைத்த போதெல்லாம் மனதில் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி முடித்தார்.

பதினாறுவது அத்தியாயம்.

துறவியாதற்கு அனுமதி பெறுதல்.

மகாவிஷ்ணு ப்ரசன்னம்.

ஓர்நாளிரவு மணியோ ஒன்பதாய் விட்டது! பகலெல்லாம் இகல் விளைத்த சூரியன் கடுமையால், வெய்யில் தாழ்ந்து இத்தனை நாழிகை யான்போதிலும், ஒருவித நெருப்புக் காற்று அடித்துக்கொண்டிருந்ததேயன்றி, பல்லவ மசையும் மெல்லியகாற்று சல்லாபத்துடன் குளிர்ந்து வீசவில்லை! அன்று பௌர்ணமிக்கு எட்டு நாள் முந்தியதினமாயிருந்தது. அல்லாமலும், வானம் களங்கமற்றிராமல், அங்குமிங்கும் மேகக் கூட்டங்கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. இக்காரணங்களால், சந்திரன் தன் ஒளி குன்றி, இயற்கைத் தோற்றங்களைச் சிறிது சிறிதே பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தான். நாட்டு வெளிகளில் இருட்டு வேளையில் கைவிளக்கேந்திச் செல்வார்க்கு, எவ்வகை, சில வஸ்துக்கள் விவரமாய்த் தெரிந்தும், வேறுசில பொருள்கள் மறைந்து மறைந்து தோன்றியும், மற்றுஞ் சில தோற்றங்கள் புகை பூத்ததெனவிளங்கியும் காணப்படுகின்றனவோ, அவ்வாறே, மழுங்கிய நிலவின் கொழுங்கதிர் விளக்கால், அங்கு சுற்றிலுமிருந்த மலைகளும் மரங்களும் செடிகளும் கொடிகளும் தெரிந்தும் தெரியாதும் தோன்றின. நாலுபக்கங்களிலும் நிச்சப்தமே குடிகொண்டிருந்தது! சலசலவென்று அருவி பாயுமொலியும், ஒவ்வோரிடங்களில் காகம் கத்துவதும், ஆந்தை அலறுவதும் கேட்கப்படுகின்றனவேயன்றி வேறொரு சந்தடியுங் காணோம்! மெல்லிய தென்றல் இல்லாமையினாலும், சந்திரன் தன்னொளி சுந்தரம் போனதாலும், ஆடவர் மகளிர்க்கும் இயற்கையில் விளையும் அவா வுண்டாவதற்கு அங்கு இடமேயில்லை. இவ்விதமாய் சந்தடியின்றி சமாதானமே குடிகொண்டிருக்கும் வேளையில், ஆலோசனையின் அதிகாரம் அதிகப்பட்டதால், ஒவ்வொருவர் மனதிலும் அடாவடியாய் விடாமுயற்சியுடன் வீற்றிருக்கும் எண்ணங்களைப் பற்றியே பன்னிப் பன்னி நினைத்திருக்கும்படி யிருந்தது.

இந்த சமயத்தில், நவத்வீபத்திற்கு வெகு சமீபத்தில், ஒரு வண்டி வந்துகொண்டிருக்கிறது! அதில் ஆலோசனையாலபகரிக்கப்பட்ட ஒள்ளிய நுதலும் தெள்ளிய விழியும், சிறிது சிறிதே அசைந்து கொண்டிருக்கும் அதரக்கனியும் சற்று உட்கார்ந்தும் சற்று சயனித்தும் தன்னிலைமை மாறினும் கொண்ட எண்ணம் மாறாத கோதை ஒருத்தி வருகின்றனள்! அத்தருணம் அப்பெண்ணரசி வேறொருவருடனும் பேசாது இருப்பதும், வண்டியிலிருந்த மற்றையோரும் ஏனென்று கேளாமல், மௌனத்தையே சரணமடைந்திருப்பதும், அவர்கள் யாதோ வோர் பெரிய விஷயத்தை யெண்ணி யெண்ணி யேக்கங்கொண்டிருப்பதை விளக்குகிறது. இவ்வண்டியும் நகர்ந்து நகர்ந்து வெகுதூரங்கடந்து ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் கிரகவாயிலருகில் வந்து நிற்கிறது! வண்டியிலிருந்து அவர் தன் காதல்மனைவியாராகிய விஷ்ணுப்ரியை இறங்கி வீட்டிற்குட் சென்றனர்.

விஷ்ணுப்ரியை தன் தாயார் வீட்டிலிருக்கும்போது, ஸ்வாமி சந்நியாசம் பூண உத்தேசித்திருக்கிறாரென்கிற விஷயங்கேள்விப்பட்டு அதே கவலைகொள்ள நேரிட்டது. இதுகாரணம் பற்றியே சீக்கிரம் தன் கணவனாரைப் பார்க்கவேண்டுமென்று அவர் நவத்வீபத்திற்குப் புறப்பட்டு வந்தது. ஸ்வாமிகள் இரக்கமுள்ள மனதையுடையோரானமையின், அவர் தன்மையுடைய தாயையும், எளிமையுடைய தன்னையும், அடிமையுடைய அன்பரையும் பரதவிக்கவிட்டுச் செல்லாரென்று ஒருவித ஆறுதல் விஷ்ணுப்ரியை மனதில் விளைந்திருந்தது.

வீட்டிற்கு வரும்போது இரவு ஒன்பது மணிக்குமேலாய் விட்டதால், வெகு சீக்கிரத்தில் தன் இராப்போசனத்தை முடித்து, சரசமியைந்த அரசிளங்குமரிபோல், விஷ்ணுப்ரியை சந்தன தாம்பூலாதிகள் எடுத்துக்கொண்டு, தன் காதற்கணவன் படுத்திருந்த பள்ளியறைக்குட் சென்றனர்; அவர் என்றுமில்லாத வழக்கமாய் அன்று அயர்ந்து நித்திரை செய்வதையுங் கண்டனர்.

ஹா! ஹா!! உலக இயற்கை யென்னென்றுரைப்பது! கந்தம் மிகுந்த சுந்தர மலர்களில் பாழும் பாம்பு படுத்திருப்பதுபோல், இனிய காரியங்க ளிரண்டென்றால், இடையூறோ ஆயிரக்கணக்காய் நேருவது இயல்பாயிருக்கின்றது! "தொடங்குங்காற் றுன்பமாய்"ப் பின்னரன்றோ இன்பம் பயக்கின்றது, கல்வியாகிய கண்ணாடியும்; அதுபோன்றே, காதக்கணக்காய் வழிகடந்து, மாதக்கணக்காய் மறைந்திருந்து, காதலனைக்கண்டு ஆதரம்பேச அணுகும்போது, அவர் தூக்கம் தாங்கி ஏக்கம் விளைத்தால், விஷ்ணுப்ரியையுடைய மனம் எவ்வாறு வருந்தியிருக்கும்? "நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாய் முடிகிறதே!" என்று விஷ்ணுப்ரியையானவர் சற்று வருத்தமுற்று பின் ஒருவாறு தேறினவராய்; "அந்தோ! அன்பரைப் பிரிந்து இத்தனை இரவும் ஏக்கமே பெரிதாய்த் தொலைத்து வந்தபோதும் அவரைக்கண்டு பேசிக் களிக்க இல்லாமற் போயிற்றே! என்றாலு மென்ன? நான் அவர் திருமுகத்தினையென்று இவ்வமயம்போல் உற்றுப்பார்க்க நேர்ந்தது. குண்டுமணியிடத்தில் கருமையும், ரோஜாவிடத்தில் முட்களும், சந்திரனிடத்தில் களங்கமும் தோன்றினபோதிலும், என் கண்மணி முகத்தில் கடுமையென்பது கடுகளவேனும் காண வில்லையே! வருணனே கருணைமாரிபொழிவது போல் எல்லோருக்கும் நயங்காட்டிப் பயமோட்டி, என்புமுருக அன்புவிளைத்த அருமைத் திருமுகத்தின் அழகைப்பருக அமைந்த என் பாக்கியமே பாக்கியம்!

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்"

என்று அறிவிற்சிறந்த ஆரியர் கூறியிருப்பதில் எவ்வளவோ பொருள்பொதிந்திருக்கின்றது. என்றுங்கடுகடுப்பிலாது கருணையே பொங்கித் ததும்பிய மனதிற் கேற்கத்தானே முகமு மமைந்திருக்கும்! மாணிக்கத்தைக் கொடு போய் மட்பாத்திரத்தில் யாவரேனும் வைப்பரா? அபாரசத்தியும் அபாரயுக்தியும் இயற்கையிற் பொருந்திய இறைவனார், அகத்தினழகுக் கேற்கவன்றோ முகத்தினழகை யமைத்திருப்பர்! வதன ஒளியும் அதர அழகும் இன்றுதான் நாணம் நீங்கிக் காண நேர்ந்தது.

ஆகையால் அவர் நித்திரை செய்ததும் நன்றே யாயிற்று. இப்போது என்மனதார நன்றாய்ப் பார்த்து என் ஆசையைத்தீர்ப்பேன். என்னைப்போல் உலகில் யாவரே பாக்கியசாலி! ஐயோ! நாதர் என்னைவிட்டுத் துறவியாக எண்ணங்கொண் டிருக்கிறார் என்று நான் கேள்விப்பட வில்லையா? ஆமாம்! அது உண்மையாய்த் தானிருக்க வேண்டும். உலகில் பல்லாயிரம் பேர் துன்ப மனுபவித்து வருந்தியிருக்க நான் மட்டும் இடைவிடாத இன்பம் நுகர்ந்திருப்பது நியாயமாமோ?" என்று பலவாறு சிந்தித்தார். சிந்திக்கவும் அந்தம்மாள் மனதேங்கி அவ்வேக்கத்தின் வன்மையால் கண்ணீர் கலகல வென்று வீழ்ந்தது. கண்ணீர், நித்திரையிலமர்ந்த ஸ்வாமிகள் பாதங்களில் வீழ, அவர் திடீரென விழித்துக் கொண்டு எழுந்து அழுது கொண்டிருந்த தம் தேவியாரைப் பார்த்து அவரை வெகு விநயமாய் கட்டியணைத்து, "என் அன்பின் நிலையே! ஆனந்தப் பெருக்கே! கண்ணீரேன்? என்ன விசனம்? என்று வினவினார். ஸ்வாமிகள் அதி விநயமே அவர் கண்ணீர் பதின்மடங்காய் விழச்செய்தது. அதனால் சற்றுப் பொறுத்துப்பின் ஸ்வாமிகளை இகழ்வார் போல் நோக்கி "என்நாதரே! உம்மைப் பற்றி நான் கேள்விப் பட்டது உண்மையோ?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள் உடனே அக்கேள்வி எதைப்பற்றி என்பதையறிந்து கொண்டவராய், அவ்விஷயத்தைப்பற்றி தகுந்தபடி பேச சமயம் இன்னும் வாய்க்கவில்லை யென் றெண்ணினமையால் அக்கேள்வி காதில் படவில்லையெனத் தோன்றும்படி ஒன்றும்பேசாது மௌனமாயிருந்தார். ஆனால் அக்காலையில் அவர் அதியுல்லாசமாய்ப் பேசுவதற்கேற்ற முகக்குறி கொண்டிருந்ததால் விஷ்ணுப்ரியை சிறிது தைரியங் கொண்டவராய்த் திரும்பவும், ஏன் ஊரார் அவரைப்பற்றி அவ்வாறு பேசிக்கொள்ளுகிறார்கள் என்றும் அவ்வாறு அவர் நடந்தால் அஃதழகாகுமா என்றுங் கேட்டார். ஸ்வாமிகள் கலுக்கென்று நகைத்து, "ஆகா! நாம் இத்தனைகாலம் பிரிந்திருந்து இன்று சேர்ந்து இப்படித்தானா பேசிக்கொண்டிருக்கிறது? "காசிக்குப் போயுங் கர்மம் தொலைய வில்லையே! இந்த விஷயத்தை விட்டு வேடிக்கையாய்ச் சந்தோஷமாய்ப் பேசுவோம்"

என்று சொன்னார். அதனால் ஒருவரோடொருவர் சிறிது நேரம் கொஞ்சிக் குலாவிப்பேசி ஆனந்தக் கடலில் மூழ்கி யிருந்தனர். ஆனால் ஸ்வாமிகள் களங்கமற்ற தம் பேதைக்காதலியை விட்டுப் போகவேண்டி யிருக்கிறதைப் பற்றிய நினைவு தோன்றினதால் மனதினுள் வர்ணிக்கமுடியாத விசனம் அனுபவித்து வருந்தியும் அதனை வெளிக்காட்டாது அடக்கினார். என்றாலும், "அணைகடந்த வெள்ளத்தையடக்க ஆரால் முடியும்?" அந்ததேவியார் இதனையுணர்ந்து "என்நாதா! நீர் ஏன் வருந்துகிறீர்?" என்று வினவவும், ஸ்வாமிகள், "நான் அழுகிறேனா? நான் நகைப்பதுனக்குத் தெரியவில்லையா?" என்றார். அவர் பதில் இப்படி சொன்னாராயினும், உள் விசனம் அக்கேள்வியினாலேயே அதிகரித்து கண்ணீர் ததும்பி விழச்செய்தது. அதனால் அந்தம்மாள் உடனே அடக்கமுடியாத ஆத்திரத்தோடு "நாதா! நீர் வருத்தப்படுவது நன்றாய்த் தெரிகிறது. என்னை வெளிச்சிரிப்பால் ஏமாற்ற யோசித்தீர்! இது நாடகத்தில் சிரிக்கும் நகையே யன்றி, வாஸ்தவத்தில் வந்த மகிழ்வன்று! நீர் ஏதோ பெருங்கொடுமைசெய்ய எண்ணங்கொண் டிருக்கிறீர் நான் கேள்விப்பட்டதும் உண்மை யாகத்தா னிருக்க வேண்டும்" "மனதுநிறைய மாயம்வைத்து வாய்நிறைய நகை விளைத்தல் யாது பயன்?" என்று சொன்னார்.

உடனே ஸ்வாமிகள் தம் நகையை யொழித்துவிட்டு, தங்கருத்தைத் தேவி யறியச் சமயம் வந்தது என்று நினைத்து, "ஆமாம். நீ சொன்னது சரிதான்; நான் சன்னியாசியாகத் தீர்மானித்திருக்கிறேன்" என்று மெள்ளச் சொன்னார். கேட்ட சொற்களின் அருத்தத்தினை நம்புவதோ என்ற ஆசங்கை திருவதில் இருக்கும் தேவியை நோக்கி ஸ்வாமிகள் பின்னுஞ் சொல்வார்:— "நீயும் நானும் ஊழியி னிறுதிவரைக்கும் பூவில் மணம்போன்றும், விளக்கி லொளிபோன்றும் கட்டப்பட் டிருக்கிறோம். நம்மைப்பிரிக்க எவராலும் எதனாலும் ஒண்ணாது; ஆனால் நாமே மடமையால் பிரிந்தால் தான் பிரியலாம். வாழ்க்கையின் பயனையடைய நாமிருவரும் ஸ்ரீகிருஷ்ணனை நாடுவது நன்றல்லவா? ஆன்மாவாகிய கொடிக்கு அவரே கொழுகொம்பு; அன்பாகிய அணிகலன் வைத்த

அழகுப்பெட்டி! என் சொல்லைக் கவனமாய்க்கேள். நான் உன்னுடைய ஆப்தனல்லவா? விஷ்ணுவாகிய பரம்பொருளினுக்குப் பிரியமானவள் என்று பொருள் படும்படியான 'விஷ்ணுப்ரியை' என்றபேர் அல்லவா உனக்கிருக்கிறது? அது வெறும் பேராய் மட்டுமிராது உன் செய்கையினாலும் அப்பேர் தகுதியாம்படி நடந்துகொள். பேரும் நடக்கையும் பெரிதும் பொருந்தவேண்டும். இவ்வுலகினை மறந்துவிடு. இது அநித்யமானதுதானே?" என்று பலவாறு கூறினார்.

இதைக்கேட்டு மிகவும் மனம் வருந்தி, விஷ்ணுப்ரியை கொஞ்சம் தேறினவுடன் ஸ்வாமிகளை நோக்கி "உம்முடைய தாயாருக்கு அல்லல் விளைக்காதீர்! உம்மையேநம்பியஉத்தமியார்க்கு மும்மையும் துயரம் முழுதளிப்ப தாகாதே! உலகினர் உம்மை எளனம் செய்வார்கள். என்னைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். ஏனெனில் உம்முடன் சுகமாய் வாழ்ந்திருக்கும் பாக்கியத்தினுக்கு நான் அருகளல்ல. அன்பிலும் போதாது; அழகிலும் போதாது; நிறையிலும் போதாது; பொறையிலும் போதாது; ஒருவேளை உம்முடைய மனோபீஷ்டப்படி உலகினரைத் துன்பசாகரத்தினின்றும் விடுதலையாக்கி ரட்சிப்பதற்கு நான் தடையாயிருக்கின்றேன். ஆகையால் நான் என் தாய் வீடு போய்ச்சேர்ந்து அங்கேயே யிருந்துவிடுகிறேன். நீர் உம்முடைய அன்னையாரைமட்டும் விட்டுப்போகவேண்டாம்" என்று இரந்து கூறினர். ஸ்வாமிகள் உடனே "என் பிரியையே! இந்த வீண் யோசனைகளையெல்லாம் விடு. நான் உன்னைப் பூரண அன்புவைத்து நேசிப்பது போலவே நீயும் என்னை நேசிக்கிறாய். உன்னுடைய அருமையும் பெருமையும் எனக்கு நன்றாய்த் தெரியும்; ஆகையால் ஒரு பிரயோசன மில்லாமலும் உன்னைத் திடீரென்று விட்டுப் பிரிந்து சங்கடம் விளைப்பது தகுதியன்று. நான் பிரிந்து போவதாய் நீ துன்பப்படுவாய் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். நானும் அதேவிதமாய்த்தான் துன்பப்படுவேன். வேறுவழியிருந்தால் நான் வீணாய் ஏன் இப்படி உனக்குந் துன்பம் விளைத்து நானும் துன்பப்படச் செய்துகொள்ளவேண்டும்? நான் போகவேண்டுவது ஸ்ரீகிருஷ்ண

னைத் தொழுதற்குத் தான். அதனால் இருவருக்கும் நன்மையுண்டு. ஆகையால் நீ சந்தோஷமாய் விடைகொடுத்தால் நான் போவதில் மன நிம்மதியும் சுகமும் உண்டு" என்று சொன்னார்.

விஷ்ணுப்ரியை "நாதா! நான் என்ன உம்மைப் பிடித்தா வைத்திருக்கின்றேன். கையி லடங்காமலும் கரகத்தி லடங்காமலும் காற்று போன்றவ ராயிற்றே நீவிர்! உம் மிஷ்டம்போல் நீர் போவதைவிட்டு என்னை ஏன் விடை கேட்கின்றீர்?" என்று சொல்லவும், அவர் "அப்படியல்ல. நீ என் இல்லாள் அல்லவா? முறைப்படி நான் சகலமான உன் உலக இச்சைகளைப் பூர்த்தி செய்வதாய் வாக்குக்கொடுத்து அல்லவா உன்னை மணம் புரிந்தேன்? உன் அனுமதியின்றி உன்னை நான் விட்டுப்போக எனக்கென்ன நியாயமிருக்கிறது?" என்றார். விஷ்ணுப்ரியை "அதெல்லாம் சரிதான். ஆனால் நீர் என்னை விட்டுப்போகத்தீர்மானித்து விட்டீரா? அதெப்படி சாத்தியமாகும்? உம் தாயார் இதைக் கேட்ட க்ஷணமே உயிர் துறப்பரே. அவரைவிட்டுப்போக எண்ணவே வேண்டாம். நதியாவிலிருக்கும் உம்முடைய பக்தர்கள் அனைவரும் உம்முடன் வந்து விடுவார்கள்; இன்றேல் பிராண[illegible]ப் பறி கொடுப்பரே. நீர் என்னிடம் வேடிக்கையாய்ப் பேசுகிறீரேயன்றி உண்மையாய்ப் பேசுவதல்லவென்று திடமாய் நம்புகிறேன். என்றாலும், இதனை அம்மாளிடஞ் சென்று உரைப்பேன்" என்றுசொல்லியுடனே எழுந்துபோகஆரம்பித்தார். ஸ்வாமிகள் அவரைத்தடுத்து தாம் தாயாரிடம் எல்லா சங்கதிகளையுமுரைத்து அவர் அனுமதி பெற்றதையும் உறுதியாய்ச் சொல்லித் தெரிவித்தார்.

விஷ்ணுப்ரியை ஸ்வாமிகள் சொல்வதின் உண்மையில் பூரண நம்பிக்கை யில்லாவிடினும் சொல்லொணாதபடி தலைசுற்றவும் புத்தி கலங்கி கீழே வீழ்ந்து பின் தன் நாதனால் தேற்றப்பட்டு எழுந்து கண்களில் தாரை தாரையாய் நீர்விட்டு "என்னைப்போல் பாக்கியசாலி யுலகில் யார்? என்றாலும், நான் பூரணமாய் மனக்கிளர்ச்சி கொண்டிருக்கவில்லை. நீர் ஸ்ரீபாசர் வீட்டில் கிருஷ்ணகீர்த்தனஞ் செய்துகொண்டிருக்கையில் நித்திரை வராது படுக்கையில் இப்படியும் அப்படியும் அசைந்து கொண்டிருப்பேன். ஆனால் கீர்த்தனம் முடிந்து நீர் வந்தபோது உம்மருகில் வந்து நிற்கத்தகுந்த யோக்யதை எனக்கில்லையென்று நினைத்து வருந்துவேன். நீர் என் நாயகனாயிருப்பினும் உமது திருமுகத்தை என் கண்ணாரக் கண்டு களிக்கச் சமயம் வாய்த்ததே இல்லை. இப்போது நீர் உமது இளமனைவியை பரிதவிக்க விட்டுப்போவீர்! எம்மதமேனும் இதற்குச் சம்மதப்படுமா? உமது அன்னையாரிடம் நீர் அனுமதி பெற்றதாய்ச் சொல்கிறீர். அவர் மிக்க பெருந்தன்மை வாய்ந்தவர். அவருடைய மனோதைரியம் எனக்கில்லை. மேலும் அவர் வயதானவர்; அவர் சீக்கிரத்தில் காலஞ்சென்றுவிடுவாராதலால் இத்துன்பத்தினின்றும் சிறிது போதில் விடுதலையாய் விடுவர். நானோ அத்துன்பத்தினை யனுபவிக்க இருக்கவேண்டியது எத்தனைகாலமோ, ஸ்வாமிக்குத்தான் தெரியும். ஆகையால், நாதா! என்னை விட்டுப் போகவேண்டாம். ஒருபோதும் உம்மை அவமதிக்காத என்னை விட்டுப்போவது உமக்குச் சரியன்று. உம்மை விட்டு நான் உயிர்தரிக்கேன். அன்பனைவிட்டு ஆவிதரிக்கலாகுமா?" என்று சொல்லி வணங்கி வேண்டிக்கொண்டு எதிர்ப்பார்க்க ஓர் விநோதந் தோன்றியது.

பனியை நீக்கித் தினகர னெழுந்ததுபோல், அவ்வறையின்கண் ஒள்ளிய உருவம் ஒன்று தோன்றியது. அஃது யாதாயிருக்கலாம்! தேவ வுருவமோ, அன்றி மானிட வுருவமோ என்று சற்றுப் போது விழித்தனள்.

சங்குடன் சக்கரந் தங்கிய கரமும்
மறுவுடன் மங்கை பொருந்திய மார்பும்
பீதக வாடையும் பீடுறு பார்வையும்
முத்தை யிகழ்ந்த முறுவலின் சிறப்பும்
தொத்தலர் துளபம் சுற்றிய குழலும்
சுந்தர வதனமுஞ் சந்திர னெழிலும்
திருவடி பற்றிய சிறி துயர்களைப்
பிறவிக் கடலினிற் பிறழா வண்ணம்
அபயந் தந்துமே யாண்டருள் தகைமையும்
இனிதிற் காட்டி யிலகொளி பரப்பிப்
பறவைக் கரசனும் பண்ணவன் மீது
இறைவ னிருந்தன னிமைக்கையி லன்றே.

இதனால் விஷ்ணுப்ரியைக்கு விளைந்த ஆச்சரியத்திற்கோ அளவில்லை; ஆனந்தமும் அதிகமாயிற்று. "ஏ! பரந்தாமா! பக்தவத்ஸலா! ஏழையின் துயர் நீக்குவதற்கு உன் திருவுள்ள மியைந்த வண்மையை யெளியனேன் சொல்ல லாகுமா! பாற்கடலில் கிட்டிய பூனையொன்று, அதைப் பருகிவிடுவதாய்ப் பந்தயம் போடுவது போலும், கொடிய மனப் பதடிகள் கோபம் நீங்கிக் குணம்பெற்ற தாய் வேடங் காட்டுவது போலு மாகுமே யன்றி, என் சித்தமும் பக்தியும் யாதொரு பயனுஞ் செய்வதில்லை. இஃதிப்படியாயினும், உன் வல்லமையோ சர்வவல்லமையாயினும், உன் ஞானமோ சர்வஜ்ஞத்துவமாயினும், நீ யிருப்பதோ எள்ளினி லெண்ணெய் போலும் பூவினில் மணம்போலும் அங்குமிங்கு மெங்கும் கரந்துறைவதாயினும், உன் அபார அன்பே எனக்கு அறிவைத் தந்தது, அன்பை யூட்டிற்று, தைரியம் விளைத்தது, உன்னை யோர் வரம் கேட்கும் படிக்கும் ஏவிற்று. என் மனதைக் கொள்ளை கொண்டு என் அன்பெலாங் கவர்ந்து என் வாழ்நாளை வாழ்நாளாக்கிய வள்ளல் வீட்டையும் நாட்டையும் உற்றாரையும் பெற்றாரையும் மனைவியையும் மக்களையும் விட்டுச் செல்வதாய் ஒரு விதி நேரிட்டிருக்கிறது. அதைத் தாங்கள் எப்படி யாயினும் தடுத்து என் மனதிற்கு மகிழ்வு விளைக்கவேண்டும். கொண்ட கணவனை விண்டு நின்ற கோதையின் கதிக்கு என்னை யாளாக்காது என்னைக் காத்தருளல்வேண்டும். துகிலுரிந்தகாலத்தில் துரோபதையின் துயர் நீக்கியும், ஆதிமூலமே யென்றலறிய ஆனைக்கு அன் றருள்புரிந்தும், அடுத்தவரைக் காத்தும் கெடுப்பவரைக் கெடுத்தும் கருணையே உருவம்பூண்ட தாம் ஏழையாகிய என்னை வாழச் செய்யலாகாதா? இது தமக்கு அரியதா? இக்காரியம் வெகு பெரியதா? பக்ஷியை வாகனமாய்க் கொண்ட நீ யென்னை ரக்ஷிக்க லாகாதா? இவ்வளவு கருணை காட்டி என்னைக் கரையேற்றுவது உனக்கு முடியாத காரியமா? ஆங்காங்கு, எத்தனையோபேர் உன்னைக் கண்டு ஆனந்த மடைவதற்குக் கடுந்தவம் புரிந்து காற்றை யுண்டு கணக்கில்லாத அவஸ்தைப் படுகிறார்கள்! பஞ்சாக்கினி மத்தியில் நின்று தங்கள் பஞ்சமா பாதகத்தையும் பறக்கடித்துப் பஞ்சாயுதனை உன்

சேவை எப்பொழுது கிட்டுமோ என்று இரவும் பகலாய் மாதமும் வருடமுமாய் உலகத்தை வெறுத்து அலகிலாத் தவம் புரிந்து கணக்கில்லாத பேர் காத்துக்கொண் டிருக்கிறார்கள்! அவர்கட்கெல்லாம் உன் சேவை கிட்டாது, எனக்கு நேரிட்டது என் பாக்கியமே! ஆயினும் வானத்தையும் பூமியையு மொன்றாய் அளந்த உன் பெருமை சொல்ல என்னா லாகுமா!

"மண்முழுதும் விண்முழுதும் மண்ணளந்த
நின்பெருமை வயங்கிற் றென்றால்
கண்முழுதும் கண்ணகலாக் கண்ணில்லேன்
கண்ணரசே கணிக்கற் பாற்றோ
உண்முழுது முறுதுயர முடனெகிழ
வுயிர்நெகிழ வுருக்கிற் றையா
புண்முழுதும் வேரறுத்துப் புரந்தருள்வாய்
புரவலர்தம் பொற்பின் வைப்பே.

அருள்பூத்த வன்புநெறி யருள்காட்டி யருளில்லா
விருளர்க்கு மருளைப் போக்க
அருளளித்த அருளாளா அன்பாளா அருளேக்க
மீண்டென்பா லருளல் வேண்டும்
அருள்பழுத்த பழச்சுவையே அருள்பூத்த நறுமலரே
அருள்விளங்கு மகன்ற வானே
அருள்நிறைந்த நாதாந்த வற்புதமே யருட்சோதி
யருளுணர்வே யமலத் தேவே."

விஷ்ணுப்ரியாதேவியார் மேற் கூறியவாறு பேசினபோது ஸ்வாமிகள் முற்றிலும் தோல்வியடைந்தவராய் பதில் சொல்ல ஒன்றுந் தோன்றாது விழிக்க வேண்டியிருந்தது. என்றாலும் தாம் அவதரித்த காரியம் நிறைவேறியே தீரவேண்டுமாகையால் அவர் இவ்விதமாய் ஓர் அற்புதக்காட்சி தோற்றுவித்தேனும் தம் மெண்ணம் கைகூடும்படி செய்யலாம் என்று நினைத்தார். ஆனால் அது ஒன்றும் பயனில்லாமற் போயிற்று. ஏனெனில், அந்த தேவியார் சிறிதும் அக்காட்சியைக் கண்டு அஞ்சாமல் கரங்குவித்து விநயமாய் "ஜகத்காரணா! பக்தவத்ஸலா! எனக்கு ஓர் வரந்தாரும். என் நாதனை எனக்குக் கொடும்" என்று சொன்னார்: அதற்கு

விஷ்ணு, "என்னையே நீ யடையும்போது உனக்கு வேறென்ன குறை?" என்று கேட்க, "என் தேவனே! நான் என் நாதனின்றி உயிர் வாழ்தற்கு முடியாது. கருணாநிதியான உம்மை நான் சரணடைந்து போற்றுவேன்; ஆனால் என் நாயகனை என் பிராணனைவிட பதின்மடங்காய் நேசிக்கின்றேன். ஆகையால் அவரை எனக்குக் கொடும்" என்று விஷ்ணுப்ரியை இரந்து கேட்டார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்ற வாக்கியத்தின் உண்மை யறிந்து ஒன்றான பரம்பொருளையுந் தவிர்த்து கணவனையே பற்றுக்கோடாக விரும்பி வேண்டும்படியான தன்மனைவியின் ஒப்பிலா நேசத்தினைத் தாம் சுட்டறுத்தே ஸ்வாமிகள் துறவியாக வேண்டியிருந்தது. அவர் மனிதர்பால் வைத்த கருணையா லன்றோ அப்படிச் செய்தார்!

உடனே விஷ்ணுரூபம் மாறி ஸ்வாமிகள் தன்னிலை யடைந்து விஷ்ணுப்ரியாவை கட்டி யணைத்து "என்கண்ணே! பெண்கள் நாயகமே! மனைவிகள் தனிமுதலே! சாக்ஷாத் ஸ்ரீ விஷ்ணுவையும் விட என்னையே யன்றோ மேலாகக் கொண்டாய்" என்றுசொல்லி யழுதார். அப்போது விஷ்ணுப்ரியாவும் துக்கப்படவே, ஸ்வாமிகள் "எனக்கு நீயே உரிய துணையான படியால் ஹரிநாம சுகானுபவத்தினைப் பல்லோருக்கும் விநியோகஞ் செய்வதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். அந்த திவ்யகாரியத்தைச் செய்வதற்கு நான் துறவியாக வேண்டும்" என்று சொல்லினர். அதற்கு அத்தேவியார், "நாதா! நீர் போகும் போது என்னையும் ஏன் அழைத்துப் போகாது விடவேண்டும் என்றுதானே நான் வேண்டிக் கொள்கின்றேன். சீதையாகிய மாதரசி, நாட்டை விட்டு, நாதனுடன் காட்டிற்குப் போக வில்லையோ?" என்றார். ஸ்வாமிகள் உடனே புன்னகை புரிந்து, "அது முடியாது. உன்னை நான் பரிதபிக்க விட்டுத்தான் போகவேண்டி யிருக்கிறது. நீயும் அன்னையார் முதலியோரும் என்னால் விடுங் கண்ணீரன்றோ மானிடர் பாவத்துக்கு ஓர்கோடாலியாவது? நான் உங்களை யெல்லாம் விட்டுப் போவதால் உலகினர் என்னைப்பற்றி மனதுருகி பக்தியாகிற

விதை முளைக்க வைப்பதற்கு பக்குவமடைந் திருப்ப ராதலால் நன்மை யடைவார்கள். நீ என் பிரிவாற்றாமையால் வருந்துவதினால் பல்லோர் நன்மை யடைகிறார்கள் என்பதைக் கவனித்தால் நீ என்னைப் போகவிடாதிருத்தல் சுயநயம் பாராட்டுவ தாகவே முடியும். ஆகையால் உலகினர் எண்ணிலர் காப்பாற்றப் படுவதை நோக்கி நீ ஏன் துன்பமடையக் கூடாது? புறாவிற்காகத் தாரசில் தன் சதையைச் சிபிச்சக்கரவர்த்தி நிறுத்துக் கொடுக்கவில்லையா?" என்று சொன்னார். அப்போது அந்தம்மாள் மற்றவர்களுக்காகத் தான் துன்பப் படுவதற்கு சம்மதப்பட்டு இருந்தாலும் ஸ்வாமிகளைப் பிரிந்து உயிர் வாழ்தல்தான் முடியாமலிருக்கும் என்று தெரிவித்தலும், அவர், "அப்படி யிருக்கும் என்று ஏன் நினைக்கிறாய்? என்னைப் போன்ற நீயும் தைரியத்தைக் கைவிடாமலிரு, பிரிவாற்றாமை பிரிவாற்றாமை என்கிறாயே? அதென்ன? இவ்விதமான தேவகாரியஞ் செய்வதற்காகப் பிரிந்து போதலும் அவ்வாறு சொல்வதற்குத் தகுதியாமோ? அதுநிற்க,நாம் பிரியும் விதமென்ன? என்னுடல் தவிர மற்றவை யனைத்தும் உன்னை விட்டகலா. உன்னைப்போன்றே நானும்வருந்தியுயிர் வாழ்வேன். ஒருவரையொருவர் எப்போதும்மனதினால்நேசித்துக்கொண்டேயிருப்போம்.என்னைப் பற்றி சமாசாரம் அடிக்கடி உனக்கு எவ்விதமேனும் வந்துகொண்டே யிருக்கும். என்னைப் பார்க்கவேண்டுமாயின் உன் மனதினில் பார்க்கலாம். என்னை உன் இருதயத்துள் பதியவைத்து என்னுடன் வாழ்வாய். மனிதர் சாதாரணமாய் ஸ்ரீகிருஷ்ணனை யடைவதென்பதே அவருடைய தேகத்தினை யடைவதல்ல; அது எக்காலும் முடியாது. ஆனால் மனதில் ஆவியோடு ஆவிசேர்வதுபோல் அக்கடவுளை பக்தியால் நேசித்து வாழ்தலே இவ்வுலகினருக்கு மேலான ஆனந்தானுபவம். ஆகையால் கவலையை யொழித்து ஸ்ரீ கிருஷ்ணனை இரவும் பகலும் தியானிப்பாய். இன்னொன்று ரகசியம் சொல்கிறேன் கேள். சாதாரண மனிதர்போல் நீயும் ஒருத்தி யாகையால் எனக்காக ஒவ்வோர் வேளை விசேஷமாய் வருந்தவேண்டி யிருக்கு மல்லவா? அவ்வாறு வருந்துவது உனக்குமாத்திரமல்ல, உலகத்திற்கெல்லாம் இயற்கையே. ஆனால் அதற்கு வெகுமதியாக எப்பி

ரானே ஓர்வித தேவானந்தத்தினை யுண்டாக்கி உனக்குத் துன்பஞ் சிறிதும் தோன்றா திருக்கும்வண்ணஞ் செய்து ரட்சிப்பார். மேலும் உலகினர் உன்னை ஆயுள் உள்ளளவும் வாழ்த்திப் போற்றுவார்கள். இதனினும் நீ வேண்டும் மேம்பாடு யாது?" என்று கூறினார்.

இப்படியெல்லாம் பலவிதமாய் ஸ்வாமிகள் தைரியப்பேச்சுகள் பேசினமையால் ஒருவாறு தேறின அவர் தேவியார் கடைசியாய் மனப்பூர்வமான அனுமதி கொடுத்தபின் அவரைத் திருப்தி செய்வதற்காகச் சின்னாள் சுகமாய் அங்கேயே இல்வாழ்க்கை நடாத்தி வந்தார்.

பதினாறாவது அத்தியாயம்.

துறவியாதல்.

ஸ்வாமிகள் தாம் துறவியாதற்கு தம் பந்துமித்திரர்கள் எல்லாரிடமிருந்தும் அனுமதிபெற்ற பின் அவர்களை யெல்லாம் சந்தோஷப் படுத்தவேண்டுமென்றே அவர் நடந்துகொண்டிருந்தார். அவர் ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தும் போற்றியும்,

"மாசாய் மறைக்கு மலவலியு நானும் வேறின்றி
ஆசாவிகார மல மாயி னேனைப் பொருட்படுத்திப்
பேசாத வின்புருவின் நின்னோ டென்னைப் பின்வைத்த
ஈசா வெனை யிங்கிட் டெங்குற்றாயோ வெந்தாயே,"

என்று சதாகாலமும் ஏக்கமுற்றும்,

"ஓயாதோ வென்கவலை யுள்ளே யானந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே," என்றும்,

"பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பனோ"

என்றும், தாம் துறவியாகிப் போவதைப்பற்றியே மனனம் பண்ணிக்கொண்டு மிருந்தாரேனும், அவற்றினை யெல்லாம் பிறருக்குத் தெரிவிக்காது வெகு அன்புடன் . தம் அன்னையாரை அவர் மனதுபோல் நல்லூண் தயார்செய்யும்படி வேண்டிப் புசித்தும் இதுபோன்ற பல விவகாரங்களிலும் தாம் உலகப்பற்றுடனிருந்து இல்வாழ்வானைப்போலவே நடந்தும் வந்தார். ஆதலால் அனைவரும் களித்து "ஸ்வாமிகள் இனித் துறவியாகார்; அப்படி துறவி யாவரேனும் இன்னும் பத்துப்பன்னிரண்டு வருஷத்திற்கு முன் போகார்" என்று பேசிக்கொள்ளும்படி யாயிற்று.

இவ்வாறு பல்லோரும் இவரைப்பற்றி மயங்கிப் பேசிவந்தாலும் இவர் தாம் முன்னமேயே புறப்பட்டுப் போவதற்கென்று தீர்மானித்துக்கொண்ட நாள் நெருங்கியது. அதற்கு முந்தின நாள் எப்போதும்போல் காலையில் எழுந்து வந்தனவழிபாடு செய்து

கொண்டு காலைப் போசனம் அருந்தினார். அவர் நடக்கையால் மறுநாளே அவர் வீடுவாசல் உற்றார் பெற்றார் எல்லாரையும் விட்டுத் துறந்துபோவார் என்று ஒருவராலும் அறிய முடியவில்லை. எப்போதும் பேசுவதுபோல் ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றி மித்திரரிடம் போற்றிப் பேசினர். அன்று சாயங்காலம் பட்டாடை ஒன்று கட்டிக்கொண்டு தம்முடைய ஊரைக் கடைசியாய் ஒருமுறை சுற்றிப்பார்த்து வரப் புறப்பட்டார்.

ஸ்வாமிகள் வழிப்பட்ட இனிய தோற்றங்களைக் கண்டு, அவர் பலவாறு பேசுவாராயினார்.

“ஓ! மனதுக்கினிய மனோரஞ்சிதமே! என் சிறுவயது முதல் உன்னைக் காண்பதில் எனக்கு விளைந்த ஆனந்தத்திற்கு மோரளவுண்டா? என்னைக் காணுந்தோறும் உனக்கு மகிழ்ச்சி மீறி சுகந்தம் கொடுத்து என்னைக் களிப்பித்ததில்லையா! ஆயினும் உனக்குமினிய மனோரஞ்சிதமாகிய கோபாலன் என் மனதைக் கொள்ளை கொண்டன னாதலால், அவனை நாடி நான் போகவேண்டி யிருக்கின்றது! மனஞ்சலிக்காது நீ யெனக்கு விடைகொடுத் தனுப்ப வேண்டும். இல்லாவிடில், மனோரஞ்சிதமாகிய என் பூவே, உனக்கு அந்தப் பேர் நிலைக்காதே! ஓ! சல்லாபந் தந்த பொல்லாத மல்லிகையே! உன்னைச் சங்கெனக் கருதி வண்டு வந்து ஊதுங்கால், அந்த அழகைப்பார்த்து எத்தனைதரம் மனம் பூரித்தேன்! குடியனைப்போல வண்டு குணங் கெட்டதாயினும், பெரியோர்போல் நீ பிறர்க்கு உன் பெருமை புகட்டினையே! மல்லிகையை மதியாதான் எல்லாவற்றையும் மதியானே! உன் மணமறியாதான் யாதொரு குணமு மறியானே! உன் இனிமையே துறையாய் என்பால் இன்பம் விளைத்த அன்பன் பக்கல் போகவேண்டும்! எனக்கு விடை தருவாய்! ஓ! மயிலே, மாங்குயிலே நீவிர் விடை தாரீரா! உமது நாதமும் கீதமும் நடனமும் எனக்கு விளைத்த மகிழ்வைச் செப்ப என்னால் தரமில்லை! அதைத் தெரிந்தே, உம்மைப்போன்றே கீதம் பாடி தேவநடமாடி அன்பாய் வந்து என்பு முருக்கினனே! உம்மைவிட்டு நான் போகிறே னென்று நீவிர் கோபித்தலாகாது” என்று பலவகையாய் பிரிவாற்றாமை காட்டினார்.

இவ்வாறு அவர் சிறுபிள்ளையாயிருந்து விளையாடிக்கொண்டிருந்த இடங்களையும், பண்டிதராயிருந்து சிஷ்யர்கட்குக் கற்பித்து வந்த இடங்களையும், தாம் வழக்கமாய் ஸ்நாநஞ்செய்து வித்துவக் களஞ்சியுமான கேசவரைத் தோல்வியடைவித்தும் சிஷ்யர்களுடனும் மித்திரர்களுடனும் ஸ்ரீகிருஷ்ணனுடைய நாமசங்கீர்த்தன சத்காலக்ஷேபம் பண்ணியும் வந்த ஸ்நாநகடத்தையும், தாம் நேசித்த மரங்கள், செடிகள், புட்பங்களை, தோட்டங்கள் முதலிய எல்லாவிடங்களையும் வஸ்துக்களையும் கண்டு மனதிலேயே உத்தரவு பெற்றுக்கொண்டார். திரும்பி வீட்டுக்குவந்து தாழ்வாரத்தில் சிநேகிதருடன் உட்கார்ந்தார். அவர் போவதற்கு முன் இன்னும் இரண்டு வேலை செய்யவேண்டியிருந்தது. ஒன்று தமதன்னையாரைத் திருப்தி செய்வதற்காக ஒருவேளை அவர் மனதுபோல் செய்துவைக்கும் பலவகை சித்திரான்னங்களுடன் அமுது செய்ய வேண்டுமென்பது. ஆகையால் அவரை இஷ்டப்படி சமையல் செய்யும்படி வேண்டினர். அவர் செய்துவைக்கவே, அன்று மனதாரப் புசித்தனர். இன்னொருவேலை அவ்வூராரை வருவித்து அவரிடம் விடைபெறவேண்டுமென்பதே. அதற்காக எல்லோரையும் தம் தெய்வீக சக்தியால் அங்குவரும்படி இழுத்தார்.

ஸ்ரீ கிருஷ்ணலீலையில் எப்படி அவர் கோபியர்களை குழலோசையால் தம்மிடம் இழுத்துக் காத்தனரோ அப்படியே ஸ்வாமிகள் தாம் நதியாவை விட்டுப் போகு முன்னர் அவ்வூராரைத் தம் வீட்டில் இரும்பைக் காந்த மிழுக்கின்றவாறு இழுத்து நற்புத்தி போதித்துப் போகவேண்டும் என்று எண்ணங்கொண்டார். உடனே ஜனங்கள் புஷ்பமாலைகளும், கறிகாய்கள், பாற்கட்டி, வெண்ணெய், சிற்றுண்டி முதலியவைகளும் கைக்கொண்டு கும்பல் கும்பலாய் வந்து போயினர். அவர்களுக்கெல்லாம் ஸ்ரீகிருஷ்ணனுடைய நற்குணங்களை யெடுத்துரைத்தும் அவரைத் தனித்தனி கட்டித் தழுவி பக்திப்ரேமை யுண்டாகும்படி செய்தும் ஹரி கீர்த்தனம் செய்யும்படி வேண்டியும் அவர்களுக்குப் பேரானந்தம் உண்டாகும்படி செய்தே யனுப்பினார். அன்றிரவு தம் பத்தினியாரிடம் வெகு அன்புடன் சரசசல்லாபப்பேச்சுகளுடனும்,கந்தகஸ்தூரி சவ்வாது

முதலிய பரிமளங்களுடனும் அளவிலாத மகிழ்ச்சி யுண்டாகும்படி யிருந்து கழித்தார்.

அப்பொழுது நடு நிசியாயிற்று! ஆடவனை யணைந்த அயர்ச்சி காரணமாய், விஷ்ணுப்ரியை அன்பனை இன்புறத்தழுவி நல்ல நித்திரையி லாழ்ந்தனர்! ஒரு தலையணையைத் தமக்குப்பதிலா யமைத்து மெல்ல வெழுந்தார் கௌரங்கரும்! உற்று நோக்கினர்! தன்னை மறந்து தலைவி தூங்குவதையும், மாசற்ற முகத்தில் வியர்வைத் துளிகள் முத்தென அரும்பி விளங்குவதையும் நன்றாயறிந்து, ஸ்வாமிகள் தாம் அவ்வுன்னத மனைவியை விட்டுப்பிரிய வேண்டியிருக்கின்றதே யென்று உள்ளுக்குள் குழைந்து, தம் ஆசையனைத்தையும் காட்டிக் கடைசியாய் ஒரு முத்தங்கொடுத்தார். பின் தம் உயர்ந்த உடைகளைக் கழற்றி யெறிந்தார். அணிகளை வேறொருபுறம் போக்கினர். தாம் துறவியாவதற்குப் போக ஆயத்தமானார்.

அந்த நடு நிசிநேரத்தில் அவர் சத்தம் உண்டாகாமலிருக்கும்படி அவ்வறைக் கதவைத் திறந்து வெளிவந்தார்; அவரன்னையார் அங்கு உறங்கிக் கிடப்பதைக் கண்டார்; கைகூப்பிக் கும்பிட்டு மனதினிலேயே விடைபெற்றார்; வெளிக்கதவையுந் திறந்து வாயிலடைந்தார்; பின் ஒரே ஓட்டமாய் கங்கைநோக்கிச் சென்றார். அந்நதியைக் கடப்பதற்குப் படகேறினால் தாம் போகும் மார்க்கம் தெரிந்துவிடும் என்று நினைத்தார். ஆகையால் நேராய் நீந்திக் தாண்டலாமென்று நீரில் இறங்கினர்.

மெத்தத் தூங்கின விஷ்ணுப்ரியை சற்று நேரத்தில் கண்விழித்தனர்! தலைவரைக்காணோம், தலையணை யிருக்கின்றது! முன்னும் பார்த்தார், பின்னும் பார்த்தார், எங்குங்காணோம்! என்றும் வெளிகிளம்பாத அன்பர் இன்று எங்கு சென்றனர் என்று விழித்தார்! மல ஜலபாதை நிவர்த்திசெய்து கொள்ளப் போயினரோ, இப்பொழுது தான் போனாரோ, முன்னமே போனாரோ, என்று சிறிது ஏங்கினர்! சீக்கிரம் வந்து விடுவாரென்று சிறிது தைரியம் பூண்டார். தைரியமும் அதைரியமும் இருதயத்தின் இரண்டு தடைகளுடனும் மாறிமாறித் தோன்றின! காற்றால் செடி அசைந்தாலும் கணவனார் வருகிறாரென்று காதை நீட்டிக்கேட்பார்! பின்னர், காணோமே யென்று கலங்குவார்! என் போனாரென்று மறுபடியும் மருளுவார்! "ஐயோ!" என்பார். மோசம் செய்தாரோ!" என்பார்! "சந்நியாஸம் பூண்டாரோ!" என்பார்! "என் தலைவிதி யிப்படி யாயிற்றே" என்பார்! "இல்லை. இல்லை, வந்துவிடுவார்" என்பார்! இப்படி ஒரு நிமிஷத்திற்குள் ஒன்பதாயிரம் எண்ணம் எண்ணினர்! இஃது வாயுவேகமோ, மின்சாரவேகமோ, யாதெனக் கூறலாகும்! எல்லா வேகத்திலும் மேற்பட்ட மனோவேகத்திற்கு உவமையு முண்டா? அதுவும், பிராணனுக்கு ஹானி நேர்ந்து உயிர்போகிற அரை யொரு நிமிஷத்திற்குள் கணக்கு வழக்கில்லாத எண்ணத்தொகுதிகள் நம்மனதிற் பாய்ந்து போகின்றன வென்பதை நாம் அறிந்தே யிருக்கிறோம். கிணற்றில் விழுந்து கணத்தில் உயிர்போவதற்குள் நம் வாழ்நாள் சம்பவங்களெல்லாம் புகைப்படம் போன்று மனக்கண்ணெதிர்ப்பட்டு நமக்குத் தோன்றவில்லையா? ஒவ்வொரு முக்கியமான காரியமும் தவறிப்போகாது, நாடகம்போல் அங்கங்கள் களங்களாய்ப் பிரிக்கப்பட்டுத் தெளிவாய் விளங்க வில்லையா? அது போன்றே இச்சமயமும் விஷ்ணுப்ரியை தன் வாழ்நாள் முழுவதையும் ஒன்று அல்லது இரண்டு விநாடிக்குள் உற்று நோக்கி இப்பொழுது நேர்ந்த இடையூறின் தன்மையை நினைந்து நினைந்து மிகவும் வருந்தினர். உடனே கதவைத்திறந்து வெளிவந்து நடந்ததை தன் மாமியாராகிய சசிதேவிக்குக் கூறினர். அதன் மீது இருவரும் வீட்டு வெளியில் வந்து தேட வாரம்பித்தார்கள்.

ஸ்வாமிகள் மனது என்ன பரிபக்குவமடைந்தது! சற்று நேரத்திற்கு முன் உயர்ந்த பஞ்சு சயனத்தில் அதியாப்த வெகு சௌந்தர்ய மனைவியைக் கட்டியணைத்திருந்தவர் அப்போது அர்த்த ராத்திரி குளிரில் இடுப்பில் ஒரு கந்தை தவிர வேறு வஸ்திரமின்றி ஆற்றில் நீந்துவாராயினர்; சீக்கிரம் அக்கரையேறிச் சென்று பொழுது விடியுமுன் பார்ப்போர் தம்மையறியாதிருக்கும்படியான தேசஞ்சேர்ந்தார். அவர் கடைசிநாள் மிக அன்புடனிருந்து எல்லாரையும் களிக்கச் செய்ததேனெனில், அதனாலேயே பொது ஜனங்களெல்லாம் எம்பிரான் கருணையும் அன்பும் சாலவாய்ந்தவர்

என்றறியும் பொருட்டுதான் என்று அவர் சிஷ்யர் கூறுகின்றனர்.

இது சமாச்சாரம் ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் காதினில் படவும், அவர்கள் அனைவரும் வந்து ஆலோசித்து மாமி மருகியர் இருவருக்கும் தைரியஞ்சொல்லினர். அப்போது நித்யானந்தர் ஸ்வாமிகள் கேசவ பாரதியென்ற ஓர் துறவியாரிடம் தீட்சை பெற்றுக் கொள்வதாய்ச் சொன்னது ஞாபகம் வந்ததால் அவர் அங்குதான் போயிருக்க வேண்டுமென்று நினைத்து தாமே அங்கு சென்று அவரை யழைத்து வருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டார்.

ஸ்வாமிகளோ, அவர்தம் ஆப்த சிநேகிதரான நித்யானந்தருக்குச் சொல்லியிருந்தபடியே கத்துவா என்னு மூருக்குப்போய் அங்கு ஒரு குடிசையில் உட்கார்ந்து இருந்த துறவிப் பெரியோரான கேசவ பாரதியாரிடம் சென்று அவரடிவணங்கி நின்றார். அப்பெரியோர் ஸ்வாமிகளின் இளமையையும் சுந்தரரூப விலாசத்தையும் திவ்ய தேஜஸையும் பார்த்து, திடுக்கிட்டவராய், "என்னை வணங்குவதேன்? என்னைவிட மிகப் பெரியோராய்க் காணப்படுகின்றீரே! நீரார்?" என்று வினவவும், ஸ்வாமிகள் கைகட்டிக் கொண்டு மிகுந்த பணிவோடு, "என்னை நிமை என்ற பெயரிட்டு அழைப்பார்கள். உம்முடைய திருவடிக் கமலங்களை முன்னொரு தரம் நதியாவில் தரிசித்துள்ளேன். என்னை அப்போது தீட்சை செய்து சன்னியாசி யாக்குவதாய் வாக்குக் கொடுத்தீர்கள். என்னை எப்படியாகிலும் கிருபைபண்ணி சம்சார சாகரத்தினின்றும் நீந்தும்படி செய்து ரட்சிக்கவேண்டும். உம்மை இதோ சரணமடைந்தேன்." என்றார். பாரதியார் அப்போது ஸ்வாமிகளை முந்திப் பார்த்த சமாசாரம் எல்லாம் ஞாபகம் வந்தது; அக்காலையில் இவர் ஸ்வாமியவதாரமே என்று நம்பினது சரியல்ல என்று தோன்றியது; மேலும் இப்பேர்க்கொத்த இளங்குமரர் உலக வின்பங்களிலேயே யமர்ந்து இருப்பதை விட்டு விடுவதாய்த் தீர்மானித்ததை நினைக்கவும், தாம் அவருக்கு தீட்சைசெய்விக்கக் கூடாதென்று நினைத்தார். ஆனால் முந்தி வாக்கு கொடுத்திருக்கையால் எப்படி முடியாது என்று சொல்வது என்று விழித்து அங்கேயே யிருப்பின் சிலநாள் போன பின்னரே பதிலுரைக்கக் கூடுமென்று

சொல்லினர். ஸ்வாமிகள் அழகைப்பார்க்க அத்துறவியார் மனமே நொந்தது. "ஹா! ஹா! என்ன கருணா நயனம்! சுந்தர வுருவம்! இந்த மிருதுவான தேகம் சன்னியாசி ஆஸ்ரமத்தில் எப்படி யிருந்து சகிக்கும்?" என்றிப்படி யெல்லாம் எண்ணி "அப்பா! நிமையே! நான் உனக்கு வாக்குக் கொடுத்த துண்மைதான்! அதை நிறைவேற்றுதற்கும் தயாராகத்தா னிருக்கின்றேன். ஆனால் உன்னைப் போன்ற பால்யர்களை எங்கள் மடத்தில் சேர்ப்பது அடாத காரியம். அதற்கு ஒருவர்க்கு குறைந்தது ஐம்பது வயதாவது ஆயிருக்கவேண்டும்; ஐம்புலன்களை வெல்லுதற்கு மிக்க ஆற்றல் வேண்டியிருக்கிறது; வயதான விஸ்வாமித்திர ரிஷியும் மேனகையால் மனநிலை கெட்டு வருந்தியதாய் வாசித் தறிந் திருக்கின்றோ மல்லவா? ஒரு இல்வாழ்வான் அப்படி மனத் தளர்ச்சியால் குற்றஞ் செய்வானாயின் அவனுக்கு பிராயச் சித்தம் உண்டு; சன்னியாசிக்கோ பிராயச்சித்தமே கிடையாது. ஆகையால் தான் நாங்கள் ஐம்பது வயதாகுமுன் எவருக்கும் சன்னியாசி தீட்சை செய்து வைப்பதில்லை" என்றார். ஸ்ரீகிருஷ்ண த்யானத்திலேயே மறந்திருந்த ஸ்வாமிகள் திடீரென விழித்துப் பார்த்து பாரதியார் கருத்தை யறிந்தவராய், "ஸ்வாமி! நீர் என்னை ஏதோ பரிக்ஷை செய்ய வேண்டியே இவ்வாறு புகல்கின்றீர்; உமக்கு தகுந்தபடி நான் மாறுத்தரம் சொல்லத் தெரியா சிறியனே யாயினும் ஒன்று சொல்லுகின்றேன். சிறுவர் இறக்கின்றதே யில்லையா? அவர்களுக்கு ஆன்மா இல்லையா? பேதைமைக்கே பெண்கள் பிறந்தார்க ளென்பதைப் போல் பேதைமையாய்ப் பேசுகின்றீரே! ஆகையால் வீணாய் இப்படி என்னை ஏமாற்றவேண்டாம். நான் பிருந்தாவனம் போய் கிருஷ்ணனைத் தரிசியாமல் உயிர் வைத்திரேன். அங்கு போவதற்குத் தடையாயிருக்கிற உலக பந்தத்தினின்றும் நீரே என்னை விடுவிக்கச் செய்து காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னார். அதற்குத் துறவியார் "உனக்குத் தடையாயிருப்பவர் உன் அன்னையும் மனைவியுந்தா னன்றோ?" என்று கேட்டார். ஸ்வாமிகள் ஆமென்று சொல்ல அவர் பின்னுஞ் சொல்வார்: "நீ அவ்விருவோருக்கும் செய்கடனைச் செலுத்தவேண்டி யிருத்தலால் தற்காலம் நீ வீட்டைவிட்டுப் போகக்கூடாது. ஆகவே, நான்

உனக்கு வேண்டியதைச் செய்யுமுன்னர் அந்த உன் கடனினின்றும் உன்னை விடுவிக்க வேண்டும்; இல்லாவிடின், மன நிம்மதியுடன் நீ பிருந்தாவனம் உன் விஷ்டப்படி போக முடியாது. ஆனபடியால் உன்னைச் சன்னியாசி யாக்க நான் காரணனானால் தெய்வம் என்னைத் தண்டிக்கும். உன் அன்னையும் மனைவியும் என்னைச் சபிப்பார்கள். அப்போது அச்சாபமும் பலிக்கும்" என்றார்.

இதற்குள் இவரைத் தேடிவந்த சிஷ்யர்களும் வேறு அந்நியரும் அநேகராய் வந்து ஒரு பெருங் கும்பல் கூடிவிட்டது. ஒவ்வொருவரும் பால்ய ரொருவர் கடவுளை யென்ன லாம்படி யான தேஜஸோடும் முக வசீகரமு முடையவர் தன்னாத தாயையும் சிறு மனைவியையும் விட்டுத் துறவியாக வந்திருக்கின்றார் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த செய்தி வீதிதோறும் பின் நகரெங்கணும் பரவியதால் வேடிக்கை பார்க்க ஜனங்கள் விசேஷமாய் வந்துகொண்டே யிருந்தார்கள். இதனாலன்றோ "புதியனகண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்" என்றார் கம்பரும். இவர்கள் எல்லாரையும் பார்த்து ஸ்வாமிகள் புன்னகைபுரிந்து கட்டித் தழுவி ஆனந்த முண்டாக்கினார். தம்மைத் தேடி வந்த பக்தரைப் பார்த்து, "நீங்கள் வந்தது நல்லதாயிற்று; நாளையதினம் ஜாதிகு வீடு தேசம் முதலிய பந்தங்களை யறுத்து விடுவேன். பின் கிருஷ்ணனை யடைவேன்" என்று சொல்லும் போது அவரை அடைதலின் எண்ணத்தாலேயே பெரு மகிழ்ச்சி கொண்டு, ஸ்வாமிகள் "முகுந்தரே! கிருஷ்ண கீர்த்தனம் ஒன்று பாடும். என் மனம் அவனைச்சேரவேண்டுமென்றே ஏக்கமாயிருக்கின்றது. சங்கீதத்தில் லயிப்பதில்ஸ்வாமியிடம்லயிக்கலாமன்றோ!" என்றார். ஸ்வாமிகளைத் திருப்பி யழைத்துப் போகலாம் என்று வந்த முகுந்தரும் அதை மறுக்க முடியாது தன்னை மறந்து ஸ்ருதி லயத்திற் கிணங்கப் பாடவும், ஸ்வாமிகள் அத்யந்த சந்தோஷத்தினால் நடன மாடினார். அக்காட்சி வெகு விநோதமா யிருந்ததால் எதிரிருந்த ஜனங்கள் அதிசயப்பட்டு சிலர் அக்கீர்த்தனத்தில் கலந்து பாடினர்; மற்றுஞ் சிலர் தத்தம் வீட்டிலுக் கோடி அங்குள்ளாரையும் அழைத்து வந்தனர்.

ஸ்வாமிகள் கண்களில் பெருகிய ஆனந்தக்கண்ணீ ரருவியைக் கண்டு அனைவரும் ஆச்சர்யப்பட்டார்கள்.

ஸ்வாமிகள்,— சந்திரசேகரர், நிதை இவர்களால் கீர்த்தனத்தினை நிறுத்தினார். உடனே சன்னியாசியார், "நிமையே! உலகத்தில் மனிதன் அடையவேண்டுவனவற்றில் கிருஷ்ணப்ரேமையே முதன்மையான தாயின் நீ யதைப் பூரணமாய்ப் பெற்றிருக்கின்றாய். உனக்கு எங்கள் மடத்தில் சேர்ந்து காயிலை தின்பதும் காவி யுறைவதும் தீயிடை நிற்பதும் பூவலம் வருதலும் இவைபோன்ற கருமங்களும் எற்றுக்கு? நாங்கள் சன்னியாசி யானது எங்கள் ஆத்மாக்களை காப்பாற்ற வேண்டு மென்று தான். நீ உலகத்தி லுள்ள மனிதர்களுடைய ஆத்துமாக்களை யெல்லாம் காப்பாற்றும் படியான திறமை வாய்ந்திருக்கிறாய். ஆகையால் நீ சன்னியாசி யாக வேண்டிய நிமித்த மொன்று மில்லை" என்று சொன்னார். அதைக்கேட்ட ஸ்வாமிகள் மிக நொந்தவராய் "ஸ்வாமி! என்மேல் கிருபை செய்து அவ்வாறு பேச வேண்டாம். அப்படி பேசுவது என்னை மிக வருத்துகின்றது. நான் காப்பாற்றப்பட வேண்டி வந்தேனே யன்றி கொண்டாடப் படவேண்டி யன்று. என்னை தயைசெய்து விடுவித்து ரட்சியும். எனக்கும் உம்மைவிட வேறு கதியில்லை.

'குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்
புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்
இலங்குபாத மன்றிமற்றோர் பற்றிலே னெம்மீசனே.'

மேலும், கிருஷ்ணனை விட்டகன்றே யிருக்கின்றேன் என்று நினைக்கும் போதே என்மனம் ஏங்கி யலைகின்றது. ஆகையால் விரைவில் என்னைக் காப்பாற்றும்." என்றார். சன்னியாசியார், "நிமையே! உன்னை நான் இன்னு மறியவில்லை யென்று நினைத்தாய்? நீ தேடுவதாய்ச் சொல்லுகிற கிருஷ்ணன் நீயே!" என்று சொல்லவும், ஸ்வாமிகள் கோவென் றழுது தரையில் வீழ்ந்து "ஸ்வாமீ! நான் முன்னமேயே மன நோவினால் சீவனற்று இருக்கின்றேன். என்னை யின்னும் போற்றி உயிர்விடச் செய்யாதேயும். எம்பிரான் சிருஷ்டியில் அணுவையும் புழுவையும் போன்ற ஒரு பிராணியாகிய

என்னை சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணன் என்று சொல்கிறீர். அப்பேச்சு கேட்பதே தேவ தூஷணத்திற்குள்ளாகும். ஆனபடியால் என்னை இன்னும் அவ்வாறு பேசி வருத்த வேண்டாம்'' என்று வெகு இரக்கமாய்க் கேட்டுக் கொண்டார். அவருடைய அழுகையையும் துக்கத்தினையும் நோக்கி இத்துறவியார் “ஐயோ! யோசனை யில்லாமற் சொல்லி அவர் மனநோகச் செய்தோமே!'' என்று நினைத்தாரேனும், ஸ்வாமிகட்கு தீட்சை செய்ய மட்டும் கூடாது என்று திடமாய் எண்ணங்கொண்டு, “கிமை! நான் அறியாது சொன்னதைக் குறித்து வருத்தப்பட வேண்டாம். ஆனால் நான் உனக்கு தீட்சை செய்விக்க முடியாது. நீ முதலில் உன் அன்னையாரிடம் அனுமதி பெறுவதோடு ஒரு குழந்தையும் பெற்றுப் பின்னரே வரவேண்டும்'' என்றார்.

ஸ்வாமிகள் மிக வணக்கமாய் கேசவ பாரதியாரைப் பார்த்து, “ஸ்வாமீ! கேளும்; என் அன்னையாரும் என் மனைவியும் எனக்கு மனப் பூர்வமாய் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நான் வயதில் சிறியன் என்கின்றீரே? கூற்றுவன் வயது இன்னும் ஆகவில்லையென்று எவனிடமேனும் வராமல் இருந்து விடுகின்றானா? பெரியோர் இறப்பதைப் போன்றே சிறியோரும் இறக்கின்றார்கள் அல்லவா? “ஐயர் வராததினால் அமாவாசை நிற்குமோ'' என்று ஒரு பழமொழி யுண்டு. அதுபோல், நமக்கு வேளை வந்துவிட்டால், வயது கொஞ்சமென்று வராம லிருப்பனோ தென்னாட்டுக் கரசனும்!

‘இன்றோ பகலோ விரவோ வருநாளி
லென்றோ வறியே னெளியேனே—மன்றோங்குந்
தாயனையாய் நின்னருளாந் தண்ணமுத முண்டுவந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள்.’

என்றல்லவோ பெரியோரும் பின்னொன்று வருங்கால மறியக் கூடாமையை வெளியிட்டு உரைத்திருக்கின்றனர்? ஆகையால் என்னைக் காப்பாற்றும். நீர் ‘மாட்டேன்’ என்கின்றதே என்னைச் சிறிது சிறிதே யுருக்கி விடுகின்றது என்று சொன்னார். அதற்குப் பாரதியார், “கிமையே! என் மனத்தினி[illegible]படி சொல்கின்றேன், கேள். உன்னைப்போல் ஒருவனை நான் வேறு எங்கும் எப்போதும் கண்டதுமில்லை; இன்னும் யாரேனும் கண்டதாக வாயினும் கேட்டதுமில்லை. புஷ்பத்தினைவிட மிருதுவாயிருக்கின்றது உன் சரீரம்; சிங்காரக் கோலத்திற் கியைந்த உன் திருவுருவம், சிகையை நீக்கி ஆடை போக்கி அவதிப்படுதற் கேற்றதல்லவே! முகத்தில் மோகனமும், கண்ணில் கருணையும், அங்கமெல்லாம் தங்கநிறமும், முத்தன்ன பற்களும், விரிந்த மார்பும், பரந்த தோளும் என்னையே மயக்குகின்றதே! அதி சரச சல்லாப சங்கீதப் பேச்சும், மத்த யானையைப் பழித்த நடையும், உன் சிறு நகையும், பெருமிதமும், இழிவடைந்தோர்க் கருள் புரியும் விழியழகும், காத்தேனென்று அபயங் கொடுக்கும் அருட்கரமும், பொற்பும் புகழும் அன்பும் அமரிக்கையும் யான் என்னவென்று சொல்வேன்! நீ வெகு சுகமாகவே வளர்க்கப்பட்டிருக்கின்றாப்போல் காணப் படுகிறாய். என் மடத்தி லுள்ளோர் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்க ளின்னவென்று நீ யறிந்தவனல்ல. அக் கஷ்டங்களை யனுபவிக்க முடியாது வெகுசீக்கிரத்தில் நீ உயிர்விட நேரும். “சனப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கிட்டுக் கொள்வதுபோல்'' அந்த தோஷம் என்னை வந்து சுற்றி யென்னை கஷ்டத்திற் குள்ளாக்கும். உன் தாயும் மனைவியும் என்னை சபிப்பார்கள். அச்சாபமும் நியாயமாயே என் வினையால் வந்த தாகு மானமையால் பலிக்கும். அதன்றியும் நான் முன் கூறியபடி நீ சன்னியாசி யாக வேண்டிய நிமித்தம் யாது மில்லை. இதில் பின்னுமொரு கஷ்டமுண்டு. உன் தாயாரும் மனைவியும் மனப்பூர்வமாய் உனக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள். எப்படி உன்னை என்னால் இப்போது மறுத்துப் பேச முடியாது தவிக்கின்றேனோ அப்படியே அவரும் தம் மனச் சாட்சிக்கு விரோதமாய் அனுமதி தந்திருப்பார். ஐம்புலன்களையும் சுட்டறுத்த எனக்கே உன்னைப் பார்க்க மனம் இரங்கிவிட்டது. கண்ணீரும் வந்தது. ஆனால் ஜனங்கள் அதைப்பார்த்து ஏதேனும் என்னைப்பற்றி குறைவாய்ப் பேசிக் கொள்வார்களோ என்ற பயத்தினால் மிக்க கஷ்டத்துடன் கண்ணீர் வரவொட்டாது அடக்கினேன். ஆகையால் என்மீது வருத்தம் வையாதே.

ஆயிரக் கணக்காய் ஜனங்கள் உனக்காக கண்ணீர் விடுவதைப்பார்." என்று சொல்லினர்.

உடனே ஸ்வாமிகள் ஜனங்கள் பக்கமாய்த் திரும்பிப் பார்த்தார். அப்போது அவர்கள் எல்லாரும் கோவென்று கதறி அவரை வீட்டினுக்குத் திரும்பிப் போய் தேடிவருந்தும் தாயாரையும் மனைவியையும் காப்பாற்றும்படி வேண்டினர். அருகினில் நின்ற ஒருவர், "பண்டிதரே! உமது ரூப லாவண்யமும் திவ்விய தேஜசும் பக்தியும் ப்ரேமையும் என் நாவினால் நவிலத் தரமன்று. நீர் இடையில் கந்தை யுடுத்து மர நிழலிலும் குகையிலும் வாசஞ்செய்ய விரும்புகின்றீர். அந்த காட்சியைப் பார்க்க மனந்தாளாது கன்னெஞ்சினரும் உயிரை விடுவார்" என்று சொன்னார். மற்றொருவர், "ஸ்வாமீ! தங்களை யென்ன வென்றோ நினைத்தேன்! கனிந்த மன துடையவ ரென்று கருதினேன்; கண்ணுக்குக் கண்ணாய் விளங்கும் காதல் மனைவியையும், கருத்தெல்லாம் உம் மீதே யிருத்திக் கண்ணுந் தண்ணீருமாய்க் கலங்கும் தாயாரையும் பரதவிக்க விட்டுப் போவீர்களென்று கனவிலும் நினைத்தேனில்லை! உமது நெஞ்சம் கல்லினுங் கடிது, தீயினும் கொடிது, வைரத்தினும் வலிது" என்று கூறினார். பின்னுமொருவர் "ஐயோ, நல்லவிதி நடுவிலிருக்க இக் கோண விதியும் குறுக்கே வந்ததோ உமக்கு! விடும், விடும் உமது வீண் அபிப்பிராயத்தை" என்று சிறிது சினமாய்ப் பேசினார்.

ஸ்வாமிகள் கைகட்டிக் கண்ணுந் தண்ணீருமாய் நின்று, "பிள்ளைகள் பெற்ற தாய் தந்தையரே! நான் என் ஸ்ரீகிருஷ்ணனை யடையுமாறு அனுக்கிரகிக்க வேண்டும். நான் அவனையடையாததனால் அனுபவிக்கின்ற துன்பம் இன்னவென்று உமக்குத் தெரியாது. இவ்வுலகில் எனக்கு ராஜனைப் போன்று அரண்மனையில் வாழ்வதும் பிச்சைக்காரனாகி மரத்தடியில் இருப்பதும் ஒன்றுதான். எனக்கு அப்படி யிருப்பதானாலும் கவலை யுண்டாகாது. ஆனால் என் மனம் கிருஷ்ணனின்றி வெளியா யிருக்கிறது. அவன் என் மனதினில் இருப்பதே யின்பம்; இல்லாமையே துன்பம்;

நான் நீங்கள் உரைப்பது போல் சிறுவனாகத்தா னிருக்கின்றேன். என் தேக நிறமும் கொஞ்சம் அழகாய்த்தா னிருக்கிறது. அப்படி என்ன மேன்மை யிருப்பினும் என் தேகத்தினை யர்ப்பணம் பண்ணுதற்கு ஸ்ரீகிருஷ்ணனே யன்றோ எல்லா வற்றினும் மிக உரியவன்" என்று சொன்னார்.

ஸ்வாமிகள் இவ்வாறு பேசினபோது, அவர் கருத்தும் ஊக்கமும், அவர் குரலின் இனிமையும், முகத்தில் தெரியும் தெய்வப் பெருந் தகைமையும் பார்த்து ஜனங்கள் பின்னொரு முறை தம் பெருந் துக்கத்தினை வெளிகாட்ட நேரிட்டது; என்றாலும், அவர்கள் வேறொன்றும் பேச நாவெழாது வாளா நின்றனர். ஸ்வாமிகளை எப்படியாயினும் அழைத்து வருவதாய் அவரன்னை யாருக்குச் சொல்லிவந்த அவரன்பர்களும் தாம் செய்வதற்கொன்றுந் தோன்றாது சித்திரப் பதுமைகள் போல் தம்பித்து உட்கார்ந்து இருந்தார்கள். பொதுவாய் ஜனங்கள் முதலில் ஸ்வாமிகளைப் பார்க்க ஒருவித அன்பு அவர் பால் தோன்றினதால் அவர் சன்னியாசியாவதைக் குறித்து அநுதாபப் பட்டவராய் "ஐயோ! பாவம்! இந்த ஒப்பற்ற ஒரே பிள்ளையினைப் படைத்த தள்ளாத அன்னை இதைக் கேட்டு எப்படி சகிப்பள்? பின் இவர் மனைவியோ ஒருபோதும் பிரிவாற்றாமையால் உயிர் விடாதிராள்!" என்று பேசினர். பின் ஸ்வாமிகள் தாம் சிறிதும் வருத்த முற்றவராய் காணப்படாது அத்யந்த ஆனந்தம் அனுபவிப்பவராய் ஆடிப்பாடி யிருத்தலைக் கண்ணுற்ற காலையில், "ஆஹா! என்ன ஆனந்தம்! நாம் என்ன மதிகேடாயினோம்! இவ்வுலகில் எப்பொருள் சாஸ்வதமா யிருப்பது? மண்ணாசை பெண்ணாசை இவைகளால் எவர் நன்மை யடைந்தார்? செல்வம் கீர்த்தி அந்தஸ்து இவைகளால் தான் பயன் என்னை? இவை எவையேனும் இவ்வுலகம் விட்டுப் போம்போது தொடருமோ? இதை யறிந்ததா னன்றோ, பெரியோர் "பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்" என்று கூறியுள்ளார்! இந்த உண்மையை நன்கறியாமல் நாம் தந்தை தாய் தமர் தார மகவென்னு மிவை யெல்லாமே மேலான பொருள் என்று நம்பி ஒன்றான பரம்பொருளை மறந்து விட்டது மன்றி நல்லவழி நாடும் அண்ணலை கண்ணீர் விட்

டுத்தடைசெய்து இடுக்கண்செய்ய எத்தனித்தோம். சை! சை! இனி நாம் ஸ்வாமிகளைப் பற்றி ஒன்றுஞ் சொல்ல வொண்ணாது. அவர் செய்யத் துணிந்ததே சற்கருமம். நாமும் செய்யவேண்டிய முதற் கருமம் அதுவே. தாய் என்றும் தாரம் என்றும் இருவர்படும் துன்பத்தை யன்றோ நாம் முன் நினைத்து வருந்தினோம். தாய் என்பது யார்? தாரம் என்பதுதான் யார்? அவரவர் வினையை யனுபவிக்க அவ்வவரேயன்றோ அருகர்? இஃதன்றியும், நாம் மறந்துவிட்ட ஸ்ரீகிருஷ்ணன் எப்படிப் பட்டவர்? என்ன நன்மை? என்ன அன்பு? என்ன கருணை வாய்ந்தவர்? என்ன தரும நெறியினர்? அவரை யடையப் பாத்திரரா யிருக்கையில் நாம் வருத்தப்படுவது ஏன்? துக்கம் என்று சொல்வதே மாயை; எல்லாம் இன்பமே" என்றிப்படி பலவிதமாய்ச் சொல்லுவர்.

பாரதியாருக்கும் ஸ்வாமிகளை சன்னியாசியாக்குதற் குள்ளாகக் கூடாது என்ற எண்ணம் சிறிது சிறிதே மாறிக்கொண்டு இருத்தலால், "நிமையே! உன் அன்னையும் மனைவியும் தாராளமாய் அனுமதி கொடுத்தா லொழிய நான் உனக்கு தீக்ஷை செய்யக் கூடாமல் இருக்கிறேன். நீ அனுமதி பெற்றதாய்ச் சொல்கிறாய். அது எனக்குத் திருப்திப் படவில்லை. ஆகையால் நீ திரும்பிப்போய் அவர்களிடம் இன்னொரு முறை அனுமதி பெற்றுவா. நான் அப்போது நீ வேண்டுவதைச் செய்வேன்" என்னவும், ஸ்வாமிகள் சற்று வருத்த முற்றவராய் அவரை நோக்கி, "உமதிஷ்டம் அப்படியாயின் நான் போய் அனுமதி பெற்றே வருகிறேன்" என்று சொல்லி யெழுந்து ஒரே ஓட்டமாய் வீட்டினுக்கு ஓட வாரம்பித்தார். பாரதியார் எப்படி யாயினும் ஸ்வாமிகளை தம்மை விட்டுப் போகும்படிசெய்து பின் தான் அந்த வூரைவிட் டோடித் தப்பலாம் என்ற எண்ணங் கொண்டே இவ்வாறு சொல்லி யனுப்பினர். ஆனால் ஸ்வாமிகள் ஓட ஆரம்பிக்கும் போது அவரைப் பார்த்த பார்வை மனம் கலங்கச் செய்தது. அவர் நினைத்தது: "ஆ! ஆ! நாம் என்னகாரியம் செய்கிறோம். சூதுவாது ஒன்றுந் தெரியாத இந்த தெய்வச் சிறுவனை நாம் ஏமாற்றி யன்றோ அனுப்புகிறோம். சை! சை! நாம் அப்படி யொழுகுதல் துறவியாய நமக்கு ஏற்குமா?" என்றிவ்வாறு எண்ணி உடனே கைகொட்டி ஸ்வாமிகளை யழைத்து, "பண்டிதரே! நான் உமக்கு தீக்ஷை செய்விக்கின்றேன்" என்று வாக்குத் தந்தனர்.

ஸ்வாமிகள் உடனே அளவிலா ஆனந்தம் கொண்டவராய் ஜனங்களைப் பார்த்து "நாளையதினம் என்னுடைய பந்தங் களைவதால் நான் காப்பாற்றப் பட்டவனானேன். என்னை எல்லோரும் ஆசீர்வதியுங்கள்" என்று சொல்லினர். மறுநாள் தம்மை யழைத்துப் போகவந்த சந்திரசேகரரையே தீக்ஷைக் குரிய சாமக்கிரியைகளெல்லாம் தயார்செய்யச் சொல்லினர். அவர் தாம் திரும்பி சசிதேவியாரிடம்போய் "அம்மா! நான் உமது குமாரரை யழைக்கமுடியாது" என்று எப்படிசொல்வது என்று கண்ணீர்விட்டுப் புலம்பினர். அங்கே ஸ்வாமிகள் எதிரிலிருந்த ஒரு பலிஷ்ட வாலிபன், "நாம் ஏன் இப்படி ஓலமிடவேண்டும்! இந்த கேசவ பாரதியன்றோ இதற்கெல்லாம் காரணம்! அவரை யாற்றினுக் கப்புறங் கொண்டு போவோம்: இன்றேல், அவரைச்சாடுவோம். அவரேன் நிமை பண்டிதரைத் துறவியாக்க வொத்துக்கொள்ள வேண்டும்?" என்றான். இதைஅங்கிருந்த வேறுசில வாலிபரும் ஆமோதிக்க பலர் அந்த பாரதியாரைத் தண்டிப்பதாய் பயமுறுத்தினர். துறவியார் மனம் புழுங்கி யெழுந்து ஜனங்களைப் பார்த்து, "ஜனங்களே! நீர் சொல்வதே யறிவின் மிக்கவொழுக்கம். என்னைக் கொன்று விடுங்கள். அதனால் என் துன்பமும் கஷ்டமும் நீங்கிவிடும்" என்று உரைத்தார். அப்போது ஜனங்கள், "அந்த வருத்தம் உமக்கேன்? நீர் தீக்ஷை செய்விப்பதில்லை யென்றால் ஒரு கஷ்டமு மில்லாமற் போகுமே?" என்றுகேட்கவும், அவர், "என் கஷ்டம் உமக்குத் தெரியாது. நீர் எல்லாரும் இந்த சிறுபண்டிதனை நேசிக்கின்றீர்க ளல்லவா? நீரே அவரை துறவியாக வேண்டாம் என்று சொல்லிக் கேட்டுக் கொண்டு போம்படி செய்யலாமே. அப்படி செய்ய முடியுமா? பாருங்கள்" என்று பதில் சொல்லினர்.

அவர் சொல்வதும் நியாயந்தான் என்று ஜனங்கள் அவ்வாறு செய்யப் பிரயத்தனப்பட்டு கும்பல் கும்பலாய் ஸ்வாமிகளிடஞ் சென்றனர். ஆயின் ஸ்வாமிகள் ஒவ்வொருவரிடமும் பேசி தாம்

செய்வதே மேன்மையென்றும் செய்யத்தக்க தென்றும் அவரை யொப்புக்கொள்ளும்படி செய்தனுப்பினர். அவ்வெண்ணத்தை மாற்றவேண்டி யவரிடஞ்சென்றவரெல்லாம் அவர் செய்வதே தாமுஞ் செய்யவேண்டிய கருமமெனத் துணிந்து வந்தனரே யன்றி அதை மாற்ற முடியவில்லை. ஆகையால் உடனே அவ்வூர் நாவிதனை ஹரிதாஸன் என்பானை ஸ்வாமிகள் தலைமயிர் வாங்க அழைத்து வந்தனர். அவன் அவரையும் அவர் சிரரோம சௌந்தரியத்தினையும் நோக்கி, "பிரபுக்களே! இந்த விதமான தலைமயிரை என்றும் நான் கண்டதே யில்லை; ஆகையால் அதை நாசஞ்செய்வது தெய்வ சம்மதமா யிராது. அதைப் பார்க்க என் மனம் நோகின்றது; என் கைகள் நடுக்கமுற்றன; அந்த காரியம் செய்வதைவிட அவரைக் கொன்றுவிடுவது மேலெனத் தோன்றுகிறது" என்று சொல்லிவிட்டான். பின் ஸ்வாமிகள் அவனைப் பலவிதமாய் மிக இரங்கிக் கேட்டுக்கொண்டு அவன் சம்மதிக்கும்படி செய்து அவனிடம் உட்கார்ந்தார். அவனும் தன் வேலையை யாரம்பிக்கவே, எதிர் நின்ற ஜனங்கள் பின்னு மொருதரம் கண்ணீர் விட நேரிட்டது. ஆனால் ஸ்வாமிகள் அளவிலா ஆனந்தம் கொண்டவராய், "அப்பா! நாவிதா! சற்றுப் பொறு. நான்கொஞ்சம் நடனமாடி வருகின்றேன்" என்று சொல்லி யெழுந்து தம் மனதார நிருத்தஞ் செய்து பாடினர்.

இப்படி தம் ஆனந்தத்தை வெளியிட்டதால் ஸ்வாமிகளைப் பார்க்க ஜனங்கள் சொல்ல முடியா வகை துக்கப்பட்டு, "ஸ்வாமி! நீர் உமது மகிழ்ச்சியின் மிகுதியை வெளிப்படுத்தலே எங்கள் மனதினை துக்கத்தால் வெடிக்கச் செய்கிறது. நீர் அழுதால் எங்களுக்குச் சிறிது ஆறுதலாக விருக்கும்" என்று சொன்னார்கள். ஸ்வாமிகள் அப்பேச்சினைக் கவனியாதவர்போல் நிருத்தஞ் செய்துகொண்டே யிருந்தனர். இதற்குள், இந்த கோலாகலத்தைக் கண்ட நாவிதனுக்கும் அத்யந்த சந்தோஷந் தோன்றினதால் எழுந்து ஆட வாரம்பித்தான். ஜனங்கள் அன்று கண்ட காட்சி விநோதமும் பூண்ட மகிழ்ச்சியும் செப்பத் தரமன்று. பின் இவ்விருவோரையும் ஆட்டத்தினை நிறுத்தி மேலாக வேண்டிய காரியத்தினை

கவனிக்கும்படி வேண்டிக் கொள்ளவே, அவர்கள் திரும்பி உட்கார்ந்து மயிர்வாங்குங் காரியத்தினை ஒருவாறு முடித்தார்கள். ஸ்வாமிகள் ஸ்நானஞ் செய்வதற்கு ஆற்றினுக்குச் சென்றனர். பாரதியார் தவிர மற்றெல்லோரும் அவருடனே சென்று வழியாங்கணும் கீர்த்தனம் பாடினர்.

ஆற்றினின்றுந் திரும்பி வந்த காலையில் பாரதியார் ஸ்வாமிகளுக்கு காவி அங்க வஸ்திரத்தை கொடுத்தனர். அதனை மிகப் பணிவோடு இருகரத்தாலும் எந்தி வாங்கித் தலைமேற் கொண்டார். உடனே ஜனங்கள்பக்கம் திரும்பிநின்று, "தாய் தந்தையர்களே! நான் இப்போது சன்னியாசி யாஸ்ரமத்திற் குரிய உடைகளைத் தரிக்கின்றேன். அத் திருச் சின்னங்களைத் தரித்தபின் நான் ஆஸ்ரம தர்மம் தவறாது நடந்துகொள்ளும்படி எனக்கு ஆசிகூறி அனுக்கிரகிக்க வேண்டுகின்றேன்" என்றார். ஜனங்கள் அப்போதும் ஒருமுறை ஓவென்று கதறினர். ஸ்வாமிகள் ஆரவியார் பக்கல் சென்று உட்காரவே அவர் மந்திரோபதேசஞ் செய்யப்பெற்று

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமி

என்ற தீக்ஷா நாமமும் பெற்றனர். அப் பெயரினுக்குப் பொருள் யாதெனின், "மனிதரின் மனதினில் ஸ்ரீகிருஷ்ணனை ஞாபக மூட்டி ஸ்மரிக்கச் செய்பவர்" என்பதே. உடனே அவர் பக்தர் அவரைப் பணிந்து நின்று, "ஆசார்யரே! பண்டிதரே! ஸ்வாமீ! எம்மைக் காப்பாற்றும்" என்று வேண்டினர். மற்ற ஜனங்களும் அவரை நமஸ்கரித்து நின்று "பாவிகளுக் கெல்லாம் இரட்சகரே! எம்மையும் இரட்சியும்" என்று பிரார்த்தித்தார்கள்.

ஸ்வாமிகள் தமது கருத்தினை முடித்ததால் பெருமகிழ்ச்சி கொண்டு பிருந்தாவனம் போகப் புறப்பட்டுப் போனார். உடனே பாரதியார் ஞாபகம் பண்ணபடி, தண்ட கமண்டலங்களையும் கையிலேந்திப் போக வழியில்லாமல் ஜனங்கள் நெருங்கி நின்றமையால் சற்று நின்று, "ஜனங்களே! பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணனைக் காணுமாறு ஆசீர்வாதஞ் செய்யுங்கள். சன்னியாசி யாஸ்ரம தருமம் தவறி யொழுகி மடத்திற்குக் கெட்டபேர் வாராதபடி அனுக்கிரகஞ் செய்யுங்கள். சன்னியாசியான நான் உங்களை பிரத்தற்குப்

பாத்தியப் பட்டவனானே னல்லவா? ஆகையால் நான் உங்களை யிரந்து கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால் நீங்கள் ஒருபோதும் ஸ்ரீகிருஷ்ணனை மறவா திருத்தலே" என்று சொன்னார். அதைக் கேட்ட ஜனங்கள் அக்காட்சியின் உருக்கத்தினால் மனதேங்கி, "நாங்கள் ஒருபோதும் ஸ்ரீகிருஷ்ணனை மறக்கோம்" என்றனர். பின்னர் தமது சிறிய தகப்பனாரான சந்திரசேகரரைப் பார்த்து, "என்னை மன்னிக்கும்படி என் அன்னையாரை வேண்டிக் கொண்டதாய்ச் சொல்லி, அங்கு எல்லோரையும் ஸ்ரீகிருஷ்ணனை சதா தியானம் பண்ணச் சொல்லும்" என்று சொல்லினர்.

இப்படி அவர் இவ்வுலகில் லௌகிக விஷயமாய்ச் செய்ய வேண்டியவை யாவையும் செய்து விட்ட பின்னர் பிருந்தாவனத்தை நாடிச் சென்றனர்.

பதினெட்டாவது அத்தியாயம்.

ஸ்வாமிகள் சாந்திபுரம் போதல்: நதியா நகரத்தார் ஸ்வாமியைச் சேவித்தல்.

யோகத்தாலும் தபசினாலும் சாக்ஷாத் ஜகதீசனை யடையப் பிரயத்தனப்படுகின்ற அத்வைதவாதிகளும், ரிஷி ஸ்ரேஷ்டர்களும் அவர் செய்யும் முயற்சிகளுக்கு இன்றியமையாத ஐம்புலனையும் அடக்கி ஒன்றான ஜோதியுட் கலத்தலினால் சமாதி என்று சொல்லப்படும் ஓர்வித நிஷ்டையிலிருப்பதுபோல் பக்தி வழியையே கடைப்பிடித்த விசிஷ்டாத்வைதியாரும், கருணா சாகரமும் அன்புக் களஞ்சியமுமான எம் பெருமானைப் பாச வலையாற் கட்டி ஐம்புலனையு மவனிடமே செலுத்தி சுற்றி யுள்ள சட பதார்த்தங்களை முற்றும் மறத்தலினால் அதே மாதிரியான நிஷ்டையை அடைகிறார்கள். அப்படி அவர் சமாதியி லமர்ந்தக்கால் அவர் பார்வை குறைந்து எதிருள்ளவற்றை யின்னவென் றறியார்; கை கொட்டி யழைக்கினும் செவி மடுக்கார்; உடலை யசைத் திழுக்கினும் சமாதி யொழியார்; வாய்பேசார்; உலகில் பல்லாயிரம் ஜீவான்மாக்களுக்குத் தீங்கிழைத்து அல்லற் படுத்தும் காமனும் அவரை வெல்ல வகையறியாது திகைத்து நின்று கலக்கமுறுவான்; காற்று அடித்தாலும் கண்டறியார்; கடுமழை பெய்தாலும் கருத்தில் வையார்; காத வழி நடந்தாலும் கால் கடுக்குதே யென்னார்கள்; இவர்கள் மனம் முழுவதும் இறைவனிடமே குடிகொண்டு விட்டது; எல்லாம் இறைவன் ஸ்வரூபமே யென்பார்கள்; நடப்பன யாவும் அவன் காரியமே யென்பார்கள்; கண்ணன் உருவையே இவர் கண்டு களிப்பது; கேசவன் பெருமையையே கேட்டு மகிழ்வது; உண்ணுவதும் அவன் பிரசாதத்தையே; முகர்வதும் அவன் சூட்டிய மாலையையே. சாதாரணமாய் ஜனங்கள் ஏதாயினும் ஓர் காரியத்தில் மனதை ஒரு வழிப்படுத்திக் கவனிப்பாராயின்,

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

என்றவாறு வேறு எவ் விவகாரங்களிலும் மனதினைச் செல்ல விடா திருப்பர். என்றால் ஆத்துமா கடைத்தேறுவதற் கென்றே தனி முதற் பொருளை நாடிச் செய்யும் தெய்வப் பரம காரியத்தினைச் செய்யுங்கால் மேற் குறித்தவாறு சமாதி யடைந் திருப்பதும் ஒரு வியப்பாமோ!

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் துறவியா னவுடன் அந்த சமாதி நிலை சிறிது சிறிதே யடைய ஆரம்பித்தார். முதலில் அவர் கண்கள் மட்டும் போகும் வழி காட்ட உபயோகப் பட்டனவே தவிர அவர் ஸ்ரவணேந்திரியம் வழியடைந்ததால் வெளியோசை யொன்றும் உட்புகா தொழிந்த தாயிற்று. அவர் அக்காலையில் பிருந்தாவனம் போய் சேரும் எண்ணத்தினையே மேற்கொண்டவராய் பின் தொடர்ந் தோடி வரும் அன்பர்களும் தம்மை நின்று போம்படி கூவியழைத்துச் சொல்லுவனவற்றையும் அறியாராகி தமக்கு சரீர இளைப்பு சிறிதுந் தோன்றாமலும் அன்னபானாதிகள் வேண்டாமலும் கனவேகமாய் நடந்து செல்வாராயினார். ஜனங்கள் ஸ்வாமிகளுடன் போக முடியாது பின்னிடவே, நித்யானந்தர், சந்திரசேகரர், முகுந்தர், கோவிந்தர் என்ற நால்வர் மட்டுமே ஸ்வாமிகள் போவதைப் பார்த்துக் கொண்டே பின் ஓடிச் சென்றனர். நித்யானந்தர் ஓட வலியிலாது வருந்தி ஸ்வாமிகளைக் கூவி, "என்னை சகோதரர் என்று விளித்தவ ரன்றோ நீர்? நின்று செல்லும். எங்களையு மழைத்துப்போம். இளைத்தவனாகிய என்னை இரண்டுமையில் பின் விடுகிறீரே" என்று கூறியது ஒன்றும் பிரயோசனப் படாமற் போனது. மீண்டும் நித்யானந்தர், "ஐயோ! அவரை. சகோதரர் என்பது மடைமை யன்றோ? அன்பினால் ஒருவருக் கொருவர் கட்டப்பட் டுள்ள பந்தங்களை யெல்லாம் சுட்டறுத்துத் துறவியாய அவர் ஆசார்யராக வன்றோ இருக்கின்றார். குற்றங் களைந்த குரு ராஜனை நண்பன் என்பது நாவின் மடமையன்றோ! அவரைத் திரும்பவும் அன்பான பேச்சுகளால் வென்று விடலாம் என்று நினைக்கலாமோ?" என்று எண்ணினார். பின் "ஸ்வாமீ! ஆசார்யரே! ஜகத் ரட்சகரே! துன்ப சாகரத்துட் படிந்தவரைக் கரை சேர்க்குந் தெப்பமே! பாவந் தனைப் பரிகரித்து அதனை யிழைத்த ஜீவனைக் காக்குந் தயவாளரே! திக்கற்றவருக் கொப்பற்ற துணையே! சற்றுப் பொறும். உம்மை யழைப்பது பாவி நிதை யன்றோ! என்னை யிவ்வாறு வருந்த இங்கு விட்டு செல்வ துமக் கடுக்குமோ! அரு நரகத்துக்கு ஆளாகும் ஆயிரக் கணக்கான பேரையும் அல்லல் தொலைத்து அருள் பெறச் செய்யவேண்டு மென்று அல்லும் பகலும் அனவரதமும் அழுது துயருற்ற நீவிர் அடியேனை யிப்படி அவதிப் படுத்த லாகுமா? என் கண்ணாளரே! ஸ்ரீ கௌரங்கரே! பொறும் பொறும்! சற்றுப் பொறும்! இல்லாவிடின் என்னுயிர் நில்லாது. நட்டாற்றிற் கைவிடும் நண்பர் நீரல்லவென் றெனக்கு நன்றாய்த் தெரியும். ஆயின் ஏனோ இவ்வகை சோதனை புரிகின்றீர்! வாதனை விளைக்கின்றீர்! காலைப் பற்றிய பாம்பு கடியாமல் விடாது. சற்று நில்லாவிடின், உம்மைப் பின் தொடர முடியாது" என்று சொன்னார். ஆனால் ஸ்வாமிகள் அதனையும் தம் காதினால் கேட்டாரில்லை.

ஸ்வாமிகள் அற்றை நாள் முழுவதும் அப்படியே ஓடி அன்று மாலை ஒரு கிராமத்துட் புகுந்து மறைந்து விட்டார். அந்தோ! அவரைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு காரணத்தினாலேயே தைரியத்தைக் கைவிடா திருந்த பக்தர்கள் என்செய்வார்கள்! எதிர் வருபவரை யெல்லாம் நோக்கி, "ஐயா! அளவிலாப் பொற்பமைந்த பாலசன்யாசி யொருவர் இவ்வழி போவதைக் கண்டீரோ? பால கிருஷ்ணன்போல் பழுதற்ற பால சந்நியாசி யொருவரைப் பார்த்தீரா! அவர் கண்களின் கருணையும், முகத்தின் மோகனமும், தேகத்தின் காந்தியும், பக்தியின் பரவசமும் உங்கள் மனதைக் கவர்ந்திருக்கலாமே! ஓ! வேகமாய்ச் செல்லும் வேதியரே! நான் கேட்பதற்குச் சற்றுநின்று நன்மொழி கூறீரோ! நல்லவர்க் கெல்லாம் நாயகராய் வல்லவராகிய வயது சன்னியாசி ஒருவரைக் கண்டீரோ? வேதப்பொருளை யெல்லாம் போதத்

தாலே புணர்ந்த புண்ணிய ராயிற்றே அவர்! ஆ! என் அருமைப் பிள்ளாய்! நீ எங்கு நின்றும் வருகின்றனை? கள்ளங் கபடில்லாமல் வெள்ளை மனதுடைய நீ என் உள்ளங் குளிர ஒருமொழி கூறுயா? உடுத்த காவியும், ஒரு நிலை மனதும், பரந்த நெற்றியும் பதிந்த பார்வையும், அழகிய மேனியும், அன்பார்ந்த உள்ளமுமுடைய ஒருவனைக் கண்டாயா? ஐயா! பெரியவரே! நீவிர் யாரோ, நேரே சென்றாலும் பாராது போகின்றீரே? உம்மைப் போல் ஒருவரையும் பாராது, உலகத்துக்கெல்லாம் ஒருவனாகிய கடவுளையே பார்த்துச் செல்லும் பரதேசியா ரொருவரைப் பார்த்தீரா?" என்று பலபேரைப் பலவிதமாய் வினவினர். எவரும் கண்டோம் என்று சொல்லாததால் மனம் மிக வருந்தினவராய் அந்த கிராமத்தில் அவ் விரவெல்லாம் ஸ்வாமிகளைக் காணும்படி பிரார்த்தனை செய்த வண்ணமாய்க் கழித்தார். அந்த கிராமத்தார் இவர்களைப் பலவிதமாய் உபசரித்து ஊணருந்த வேண்டியும், ஸ்வாமிகளைக் காணாது அருந்தோம் என்று சொல்லி யிருந்துவிட்டார்கள். பொழுது விடியுங்காலையில் வெகு தூரத்தினின்று ஒரு அழுகுரல் கேட்டது. அது யாருடைய குரலா யிருக்கலாம்! ஸ்வாமிகளைத் தவிர வேறு எவராவது அவ்வளவு உருக்கமாய் அழ முடியுமோ! உடனே எழுந்து பக்தர்கள் அக்குரல் வரும் வழியே நோக்கி யோடினர். அவ்வூருக்கு வெளியே ஓர் ஆலமரத் தடியில் சாய்ந்து இடது கையால் தலையைத் தாங்கிப் புலம்பும் ஸ்வாமிகளைக் கண்டனர். அவர் குரலைக் கேட்கக் கல்லுங் கரையும். அவ்விதமான உருக்கமும் இன்பமும் வாய்ந்த குரலிசை இவ்வுலகில் எவரும் எப்போதும் கண்டதில்லை. அக்குரலைக் கேட்பவர் மனம் உருகித் தாபப்படாமலு மிருந்த தில்லை.

அந்தோ! அவ்வேளை எங்கு பார்த்தாலும் சந்தடியென்பதேயின்றிச் சுந்தரம் வாய்ந்திருந்தது. சித்த சமாதானமும் இயற்கைச் சமாதானமும் ஒருங்கு கூடி விளையாடுவ தென்னலாம்படி எங்கும் நிச்சப்தமா யிருந்தது. ஆனால் பக்தர்கள் மனம் மாத்திரம் துக்கத்தால் பரவசப்பட் டிருந்தது. அச்சோ! ஐயன் பெருமை யறிய யாவரால் முடியும்! பரவச மடைந்து உருகி யுள்வருந்தி புண்பட்ட மனதிற் கிசையப் பண்ணிசை பாடினனே! விகாரம் ஓங்க *முகாரிபாடினனே! பைந்நாகம் மயங்கப் †புன்னாக மிசைத்தனனே!

ஸ்வாமிகள் அப்படி வருந்திய தேன்? "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவா" ளாகி தம்மையே நம்பியிருந்த பிராண சகியைப் [illegible]துவிட்டதனாலோ? அன்றி உலகினைத் துறந்ததோடு தம் அன்பின் மிக்க தாயாரை விட்டுப் பிரிந்ததனாலோ? அல்லது சென்ற நான்கிரவும் நான்கு பகலும் காற்றைத் தவிர வேறு ஆகாரமின்றியும் உறக்க மின்றியும் அலைந்து திரிந்ததனாலோ? அஃது மில்லையாயின்; கட்டக் கந்தையும் படுக்கப் பாயும் கூட இல்லாமல் வெயிலும் குளிரிலும் உடல் காய்ந்தும் நடுக்கியும் அவஸ்தைப்பட வேண்டியிருந்ததை நினைத்ததனாலோ? இல்லை; இல்லை. ஸ்ரீகிருஷ்ணனிடம் தோன்றியுள்ள ஆற்றாக் காதலால், "என் நாதா! என்னைக் கைவிட வேண்டாம். இன்னும் ஒரு கணமும் உமது பிரிவாற்றேன். நான் உமக்கு என்ன அபசாரம் செய்திருந்த போதிலும் நீர் பரம தயாளரானாலும் நான் உமது சிறு குழவி யாதலாலும் என்னை மன்னித்து ரக்ஷியும்" என்று சொல்லிக்கொண்டு புலம்பினர்.

ஸ்வாமிகள் சற்று நேரத்திற் கெல்லாம் எழுந்து பின்னும் நடப்பா ராயினர். பக்தர்களும் அவரைத் தொடர்ந்து சென்றனர். ஸ்வாமிகள் பிருந்தா வனத்திலேயே தமது அந்திய நாட்களைக் கழிக்க வெண்ணிச் சென்ற ஓர் பிராமணனைப் போற்றிச் சொல்லிய ஸ்லோக மொன்றினைச் சொல்லி "அந்தப் பிராமணரே உத்தமர்; அவர் எண்ணமே உத்தமம்; உலகில் ஒவ்வொருவரும் அப்படியே செய்யவேண்டும்" என்று அதற்கு விசேஷார்த்தம் உரைத்தார். இப்படி பேசிக்கொண்டே யோடின ஸ்வாமிகள் தம்மூரி னின்றும் தொலைதூரம் போக முடியவில்லை. வழியில் அவருக்குப் பல இடையூறுகள் நேரிட்டன. அந்த பிரதேசத்தின் இயற்கையே அவ்விடையூறுகட்கு காரணமாய் இருந்தது. ஏனெனில் வழியில் பள்ளங்களும் மேடுகளும் சிற்றாறுகளும் பெருமலைப் பாங்குகளும் மாறி மாறி யமைந்துள்ளதால் அவர் ஓர்கால் கீழ்ப்புறமும் மற்றோர் கால் மேற்புறமும் நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. இவ்வாறு

---

* முகாரி இராகம். † புன்னாகவராளி யென்னு மிராகம்.

அவர் தாம் விரும்பிய வண்ணம் அதி சீக்கிரத்தில் துலைதூரம் போக முடியாமைக்கு விஷ்ணுப்ரியை அம்மாள் கதறுதலே காரணம் என்று சிலர் கூறுகின்றனர். அந்தம்மாள் ஸ்வாமிகள் பிரிந்து சென்ற தினம் முதல் ஒரே மனதுடன் எம்பிரானிடம் முறையிட்டுக் கொண்டும் கண்ணீர் விட்டு அழுதுகொண்டுமிருந்தமையே நம் ஸ்வாமிகள் முன் ஓர் பெருஞ் சக்தியாய் தோன்றி அவரைப் போக வொட்டாது தடுத்தது.

இப்படி ஸ்வாமிகள் துறவியாய தினத்திற்கு ஐந்தாம் நாட் காலையில் ஓர் மைதானத்தில் சிறுவர் சிலர் மாடுமேய்த்துக் கொண்டிருந்த வழியாய்ச் செல்ல நேரிட்டது. அவ் வாலிபர்கள் ஸ்வாமிகளைக் கண்ட மாத்திரத்தில் அவர்களுக்கு ஏதோ ஓர்வித எண்ணந் தோன்றி "ஹரியை பஜி" என்று உரத்திக் கூவினார்கள். ஸ்வாமிகள் சமாதி நிலையினின்று சிறிது தெளிந்து கண்திறந்து சிறுவர்களைக் கண்டு களிப்போடு அழைத்து, "சிறுவர்களே! உங்களுக்கு ஹரி நாமத்தினைக் கற்றுத் தந்தவர் யார்? அதனை எங்கறிந்தீர்கள்? நீங்கள் பிருந்தா வனத்தவரோ?" என்று வினவ, அவர்கள் ஒன்றுஞ் சொல்ல அறியாது விழித்து நின்றனர். உடனே ஸ்வாமிகள் அவர்கள் பிருந்தா வனத்தோராகவே யிருக்க வேண்டும் என்று நினைத்து அவரில் முதல்வனைத் தட்டிக் கொடுத்து "அப்பா! நான் உங்களுக்கு எவ்வளவு கடமைப் பட்டவன் தெரியுமா? ஹரிநாமத்தினைக்கேட்டு நான் களித்து எத்தனையோ நாள் ஆயிற்று. அந்தக் களிப் பின்றியே நான் உயிர் துறக்குங் கதியடைந்தேன். நீங்கள் ஹரியென்று சொன்னமையே என்னை ரக்ஷித்தது. இன்னும் ஒருமுறை சொல்லுங்கள்" என்று வினயமாய்க் கேட்கவும் அவர்கள் அவ்வாறே சொல்லிக் கூவினார்கள்.

பின்னர் ஸ்வாமிகள் அவ் வாலிபர்களை "பிருந்தா வனத்திற்கு வழியெது?" என்று வினவினர். அப்போது அவருக்குப்பின் நின்ற நித்யானந்தர் நல்ல சமயம் வாய்த்தது என்றும் இனி ஸ்வாமிகளைத் திருப்பி யழைத்துப் போகலாம் என்றும் எண்ணினவராய் அவ் இடையர்களுக்கு சைகையால் சாந்திபுரம் போகும் பாதையைக் காட்டும்படி சொல்லவே, அவர்களும் அதை யறிந்தவராய் அவ்வழியையே சுட்டிக் காட்டினர். ஸ்வாமிகள் இவ்விதமாய் சாந்திபுரம் போகும் வழியே சென்றனர்.

உடனே நித்யானந்தரும் தனியே சந்திரசேகருடன் ஆலோசனை செய்தனர். நித்யானந்தர் சொல்லியது, "நீர் சாந்திபுரம் நேராய்ச் சேர்ந்து அத்வைதாசார்யரை ஒருபடகு கொண்டுவந்து வைத்து இக்கரையில் காத்திருக்கும்படி செய்யும். நான் எப்படியாயினும் ஸ்வாமிகளை யழைத்துக் கொண்டு வருகிறேன்: கண்ணனைப் பக்தியாகிற கயிற்றால் கட்டிய சகதேவனைப் போலவே ஐயனை யெப்படி யாயினும் அன்பாற் கட்டி அரை நாழிகையில் அழைத்து வருவேன்! ஆசார்யரை சாந்தி புரத்திற் காணாவிட்டால் நதியாவுக்குப் போயாவது படகு கொண்டு வந்திருக்கும்படி செய்யும்" என்பதே. அதற்கு சம்மதித்தவராய் சந்திரசேகரர் ஒருகுறுக்கு வழியாய் முன் சென்றனர். பிருந்தாவனஞ் செல்ல முயன்ற பிராமணோத்தமரைப் பற்றி ஸ்வாமிகள் திரும்பவும் நினைந்தவராய் அந்த ஸ்லோகத்தினைச் சொல்லி விசேஷார்த்தம் பண்ணுவரானார். சற்று நேர மானவுடன் தமக்குப்பின் யாரோவொருவர் வருவதாய் அறிந்து அது யார் என்று திரும்பிப் பாராமல் ஸ்வாமிகள் "பிருந்தாவனம் இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது, தெரியுமா?" என்று கேட்டார். நித்யானந்தர் தாமிருப்பதை யறிந்து தான் கேட்கின்றார் என்று நினைத்து "பிருந்தாவனம் இன்னும் சிறிது தூரந்தான் இருக்கிறது. நாம் அதற்கு வெகு அருகாமையில் வந்து சேர்ந்து விட்டோம்" என்று பதில் சொல்லவே, ஸ்வாமிகள் வேறு அதனைப்பற்றி சிறிதும் யோசனை செய்யாமலும் பதில் சொன்னவர் யார் என்றும் அது எவ்வாறு உண்மையாய் இருக்கக்கூடும் என்றும் விசாரியாமலும் திரும்பவும் கிழ பிராமணரை நினைத்து அவரைப் போல் பிருந்தா வனத்தில் தம் நாட்களைக் கழிக்கு மெண்ணத்தினால் ஆனந்தக் கடலில் நீந்திச் செல்வா ராயினார்.

ஸ்வாமிகள் அப்போது தந்நிலை யடைந்து விட்டார் என்று நித்யானந்தர் நினைத்து திடீரென்று அவர் முன் வந்து வணங்கி நின்றார். துறவியான பிறகு ஸ்வாமிகளை அவர் நேராய் அப்

போது தான் முதற்றரம் பார்த்தார். ஆனதால், நித்யானந்தர் மனம் புண்ணு யிருந்தது; கண்ணில் நீர்த்துளி ததும்பிற்று; மனம் வியர்வை யெழுந்தது; விசனம் பொங்கிற்று; உடல் நடுங்கிற்று; என்றாலும், வெளி காட்டின் தன் காரியம் பயன் பெறாது என்று எண்ணி அவைகளை அடக்கினார். ஸ்வாமிகள் அவர் முகத்தை யுற்று நோக்கி சந்தேக விபரீதத் துடன், "உமது முகம் நான் எங்கேயோ பார்த்திருக்கின்றேன் போல் தோன்று கிறதே!" பார்த்த முகம் போல் பழுதற விளங்கு கிறதே!" என்றார். நித்யானந்தர் வெளிக்கு மட்டும் புன்முறுவல் செய்தவராய் "என்ன ஸ்வாமி! நான் உமதடிமை, பாவி நிதை யல்லவா?" என்று சொல்லவும், ஸ்வாமிகள், "அஃதெப்படி யிருக்கக் கூடும்? பங்காளத்தில் உம்மை விட்டுவந்து, நான் பிருந்தாவனஞ் சேர்ந்தேனே! இதென்ன ஆச்சரியம்! அங்கு மிருப்பீர் இங்கு மிருப்பீர் எங்கு மிருப்பீரோ? நீர் இங்கெப்படி வந்தீர்?" என்று கேட்டார். நித்யானந்தர் "ஸ்வாமீ! நீர் பிருந்தா வனம் போவதை யறிந்து உம்மைப் பின் தொடர்ந்தேன். தேனைச் சிந்தி ஈயை விருந்துக் கழைக்கவும் வேண்டுமோ!" என்னவும், ஸ்வாமிகள், "ஆகா! நல்லதே நீர் வந்தது! நா மிருவரும் பிருந்தையில் ஹரித்தியானம் செய்வது ஆனந்தமா யிருக்கலா மன்றோ? ஆனால் நீரங்கு முன்சென் றிருக்கிறீ ராதலால் வழி யுமக்குத் தெரியுமே! என்னை யழைத்துப் போம். கண்ணையும் கொடுத்துக் கோலையும் கொடுத்தானே, கண்ண பிரான்!" என்றார்.

நித்யானந்தர் கோரினதும் அதுதான். அவர் சாந்தி புரத்திற்கு ஸ்வாமிகளை யழைத்துச் செல்வா ராயினார். நல்லமொழியால் வல்லவனை வழி நெடுக அழைத்துக் கொண்டே போனார். ஆசாரியர் படகை வைத்துக் கொண் டிருக்குந் துறைக்குப் போய் அங்கிருந்து படகேறி யாற்றைக் கடந்து அத்வைதாசாரியர் வீட்டினுக்குச் சென்று பசி யாற்றலாம் என்று எண்ணி நித்யானந்தர் முன் அவ்வழி யேக ஸ்வாமிகள் பின் சென்றார். ஆனால் ஸ்வாமி மனம் ஸ்ரீ கிருஷ்ணனையே நாடி யிருந்ததால் அவனைப் பற்றியும் அவனிருப்பிட மாகிய பிருந்தா வனத்தைப் பற்றியும் பேசிக் கொண்டே வந்தார்; அவர்க்கு ஆசையும் அதுவே, நேசமும் அதுவே, அனைத்தும் அதுவே யாய் விட்டது. "இன்னும் பிருந்தை எவ்வளவு தூர மிருக்கிறது?" என்றுகேட்பார்; அதனருகேவந்து விட்டதாய் நித்யானந்தர் சொல்லிய வுடன், "ஸ்ரீ கிருஷ்ணன் எனக்குத் தன்னுருவைக் காட்டுவானோ?" என்பார்.

நித்யாநந்தர்க்கோ இந்தப் பேச்சுகளைக் கேட்பது தொந்தரவா யிருந்தது. ஏனெனில், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலே தெரியும் என்பது போல், ஸ்வாமிகள் ஓர்கால் தன் கபடச் செய்கையை அறிந்து கொள்வரோ என்று பயந்திருந்தார். ஆகையால், "ஸ்வாமீ! ஸ்ரீகிருஷ்ண ப்ரேமையே சடமாகி உடலையும் போஷித்து வரும் படியான உமக்கு ஆகாரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனந்த மயமாய் நின்றவர்க்கு அல்லல் எங்கிருந்து வரும்? கேவலம் பசிதீர உண்பதும் உறங்குவதுமே தொழிலாக வுடையோ ராகிய மானிடரில் ஒருவனாகிய எனக்கு பசியும் தாகமும் மேலிட்டு வருத்து கின்றது. அடக்க முயன்றால் அதிகமாய் வளர்கின்றது; தடுக்கப் பார்த்தால் தலைமேலேறுகிறது" என்றுசொல்லி அப்படியாயினும்ஸ்வாமிகளுக்கு உலக விவகாரங் களில் ஞாபக மூட்டி தன்னிலை யடையச் செய்யலாம் என்று எண்ணினர். அதுவும் பயன் படாது பிருந்தாவனம் பின்னும் எத்தனை மயிலுள்ளது என்று வரையறுத்துச் சொல்லும் படி ஸ்வாமிகள் கேட்கவும், அப்போது வெகுதூரத்தில் ஒரு சிறு வெள்ளிக் கம்பிபோற் காணப்பட்ட பகீரதி நதியைக் காட்டி "ஸ்வாமீ! அதோ! பார்த்தீரா? அது யமுனையாறு; கடலைத்தாண்டி கரைக்கு வந்துசேர்ந்தோம்!" என்று சொன்னார். அதனைக் கேட்டவுடன் ஐந்துநாள் ஊணுறக்க மின்றி நடந்தமையால் தோன்றிய அயர்வையும் விடுத்து, தன்னை மறந்து எல்லாவற்றையும் துறந்து, தலைகால் தெரியாது மின்னலைப் போன்று கனவேகமாய் ஓடி, அவ்யாற்றிற் குதித்து மூழ்கி மறைந்தனர். பின் அவர் கரையேறி நின்று கண்களை மூடினவாறே கை யிரண்டும் சிரமேல் குவித்து ஆனந்தக் கண்ணீர் பெருகவிட்டு பக்தி ஸ்வரூபமாய் விளங்கினார்; குதித்துக் கூத்தாடினார்; பக்தி பரவசத்தாற் பாடினார்; கண்ணன் எங்கே யெங்கே யென்று தேடினார். அவர் எதிரில் அத்வைதா

சார்யர் படகை வைத்துக் கொண்டிருந்ததை காணவில்லை. ஆசார்யரும் ஸ்வாமிகள் துறவியாயபின் பார்க்கவில்லை யாகையால் தலைமயிர் கழித்துக் காஷாயந் தரித்து எதிர் நிற்பவரே ஸ்வாமிகள் என்று அறியவில்லை. அண்ணனே யாயினும் அப்பனே யாயினும் உரு மாறி யிருந்தால் உறவின ரேனும் அறிவாரா? ஆனால் சற்று நேரத்தினுக் கெல்லாம் நித்யானந்தர் வந்தமையால் ஸ்வாமிகளை யறிந்தவராய் ஆசார்யர் அவரருகிற் செல்லவும் கால் அடி வைக்க முடியாத அவ்வளவு துக்கங் கொண்டவராய் கோவென்று கதறுவாரானார்.

“ஐயோ! இஃதும் என் கண்செய்த புண்ணியமா! பூவினும் மெல்லியதாய், நவரத்தினங்களினும் ஒள்ளியதாய், வெகு சுந்தரமாய், சுகுமாரமாய் அனைவர் மனதையும் அபகரிக்கும் அழகுத் திருமேனி அலங்கோல மாயிற்றே! பார்ப்போர் கண்ணைப் பறிக்கும்படி மந்தகாசம் செய்த சுந்தர முகமும் வாடி வதங்கியதே! இளைப்பும் ஏக்கமும் மிகுத்துக் காட்டுகிறதே! கண்ணன் மீதே காதலாகிக் கையும் காலும் துவண்டனவே, மெய்யும் குரலும் மெலிந்தனவே! ஐயையோ சின்னாட்களுக்கு முன், ஆசை விளைத்த அழகுமேனியை, இற்றைப்போது, மாசு படிந்து மறைத்து விட்டதே! அம்புவி யாளும் அரசர்கள் யாவரும் வெட்கி யோடும்படியான, அவர்தம் கம்பீரத் தோற்றமும் நடையும் உடையும் எல்லாம் பழைய நாள் கதையாய் விட்டதே! முன் உடுத்த சரிகைப் பட்டு வஸ்திரங்களுக்கு மாறாக இப்பொழுது காவி வஸ்திரமும், கம்பீர நடைக்கு மாறாக குனிந்த சிரமும் ஒடுங்கிய உடலுமாக ஒருவித நடுங்கிய நடை காண்கின்றதே! அந்தோ! என்னால் பொறுக்க முடியாத இந்த கோலத்தை, அன்பின் மிக்க இவர் தம் அன்னையாரும், மாண்பின் மிக்க மனைவியாரும் பார்க்க நேரிடின், ஐயோ! அவர் தம் அவதியை என்ன வென்று சொல்லக் கூடும்! தரையில் விழுவாரோ, புரண்டழுவாரோ! உடம்பை அடித்துக் கொள்வாரோ! தலையை உடைத்துக் கொள்வாரோ! யாதாகுமோ!” என்று ஆசார்யர் பலவகை அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார்.

பிருந்தாவனம் யமுனா நதி தீரத்துள்ளது.

சுத்த ஆனந்த அநுபவத்தில் மூழ்கி யிருந்த ஸ்வாமிகள் ஆசார்யரின் அழுகுரலால் கண் திறந்து பார்த்து அவரை வினவி ஆசார்யர்தான் என்று அறிந்துகொண்டு, “ஆஹா! என்ன ஆச்சர்யம்! இனி நாம் மூவரும் பிருந்தையில் ஸ்ரீகிருஷ்ண த்யானத்திலே யமர்ந்து நாட்களைக் கழிப்போம்; மூவராகிய தேவனைக் காண மூவரா யிருத்தல் முதன்மை யல்லவா?” என்று சொன்னார். அத்வைதருக்கு நிதை செய்த சூழ்ச்சி தெரியா தாகையால் ஸ்வாமிகள் பேச்சும் உரைக் கூடாததா யிருந்தது. ஆனதால் சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது சுற்றிச் சுற்றி விழித்தார். ஸ்வாமிகள் அப்போது, “ஆனால் நீர் எனக்கு முந்தி எப்படி இங்கு வந்தீர்?” என்று அவரைக் கேட்க ஆசார்யருக்கு சந்தேகம் முன்னினும் அதிகமாய் பதில் சொல்லத் தெரியாது விழித்து நிதையை நோக்கினர். உடனே ஸ்வாமிகள் பூரணமாய்த் தந்நிலை பெற்றவராய் நிதை செய்த சூழ்ச்சியையும் எதிரில் பகிரதி யாரும் அக்கரை சாந்தி புரமும் உள்ளன என்றுந் தெரிந்து கொண்டார். இதனால் மிகவாய்த் துன்பப் பட்டாரேனும், சாத்வீக சிரேஷ்டரான படியால் ஸ்வாமிகள் சிறிதும் முகங் கடுமை யின்றி, நிதையை நோக்கி “ஸ்வாமி! நீர் செய்த சூழ்ச்சியை யறிந்தேன். உமது இளையோனாகிய என்னை இப்படி ஏமாற்றுதல் தர்மமாமோ? இப்படிச் செய்த தேன்? நான் கிருஷ்ண ஸ்வாமியை யடைய வென்றே துறவி யாச்சிரமம் புகுந்தேன்; ஆனால் என்னை நீர் வழிமறைத்துக் கொணர்ந்தீர். இந்த காரியம் ஒரு சகோதரர் செய்யத் தகுந்ததோ? எனக்குத் தெரிந்து யாதொரு குற்றமுஞ் செய்யாத என்னைத் தண்டித்தல் எவ்வாற்றானும் ஒவ்வாது. தாம் என் விஷயத்தில் இவ்வளவு வஞ்சம் காட்டினது எதற்கு? கண்ணனைக் காணல் வேண்டும்; மழலையி னினிய அவன் குழலிசை கேட்டல் வேண்டும்; அவனுக்குப் பாமாலை தந்து அவன் தன் பூமாலை பெறுதல் வேண்டும்; பக்தி யுறுதல் வேண்டும்; ஆனந்த மடைதல் வேண்டும் என்று யான் அகோராத்திரமாய் அல்ல லுற்றது தமக்குத் தெரியாத தல்லவே! இஃதிவ்வா றிருப்பினும் சங்குடன் சக்கரம் அங்கையில் தாங்கிய ஐயனைக் காணாதிருக்கத் தாம் அனுக்

கிரகம் செய்தது அழகான தல்லவே! நம்பி வந்தவரை நட்டாற்றில் கைவிடுபவனும் செய்யாத காரியத்தை, நல்லோர்க் கெல்லாம் நாயகரான தாம் நடத்தலாமா? தூங்கவைத்துக் கழுத்தறுக்கும் துர்ச்சனர் செய்யாத வேலையைத் துன்பம் போக்கும் துணைவராகிய தாம் தொடங்கலாமா? அன்பர்க் கெல்லாம் அன்பராய், பொல்லார்க்கும் நல்லவராய், புத்தி யதிக முடையவராய், பூரண பக்தி பெற்றவராய், சுத்த சத்துவராய், எத்தவர்க்கும் நற்றவராய், என் ஆத்தும லாபத்துக் குற்றவராய் விளங்கும் தாம் இப்படி செய்யலாகாது. உம்மீதும் குற்றமில்லை; எல்லாம் என் தலை விதியே" என்றார்.

நித்யானந்தர் பதில் ஒன்றுஞ் சொல்ல முடியாமல் தலை குனிந்து நிற்க; ஆசார்யர் நடந்ததை யறிந்து கொண்டவராய், அவர் பக்கம் பேசுவார்: "ஸ்வாமீ! சூழ்ச்சி யொன்றும் செய்யப் படவில்லை. உம்மையும் கேவலம் ஒரு நரன் அப்படி எமாற்றி விடவல்லனோ? கடவுளை யேமாற்றக் காசினியில் யாவரால் முடியும்? முடியாத காரியம் முக்கரணம் போட்டாலும் ஆகுமா? பகீரதிக்கு மேற் கலையா யோடுவது யமுனை யென்று சாஸ்திரங்கள் உரைப்பது பொய்யாமோ? ஆகவே, நீர் ஸ்நானஞ் செய்தது யமுனையிற்றான்" என்றார். ஸ்வாமிகள், "ஆனால் இவ்வூரும் பிருந்தை யென்று சொல்லினரே! அது மட்டு மாவது பொய் யன்றோ?" என்னவும், அத்வைதர், "நீர் இருக்கு மிடமாகிய இது பிருந்தை யல்லவோ? அதை மறுக்க வல்லவர் யாவர்?" என்றும் "ராமரிருக்கு மிடமே அயோத்தி" என்று ஜனங்கள் வசனமாய் வழங்குவதும் அதே நியாயந் தா னன்றோ வென்றுங் கூறி அதற்குத் தக்க சாஸ்திரப் பிரமாண மான மேற் கோள்களைக் காட்டினார். ஆசார்யர் மறுபடி "ஆனால் உமது ஆணையாலேயே எல்லாம் நடக்கின்றன. இவ்வுலகினைப் பம்பரம்போ லாட்டு கின்ற கர்த்தர் நீரே. நீரே ஜகத் காரணர்; ஜகபரி பாலகர்; நீரே எல்லா வற்றிற்கும் பிராணதாரர்! எல்லாம் செய்ய வல்லவரும் எல்லாம் செய்பவரு மாகிய தாம், ஒன்றும் தெரியா தென்று கோழித் திருடன் போலக் கூடக் குலாவுகிறீரே! எம்மைக் காத்து ரக்ஷிக்கும் பொருட்டே நீர் இவண் வந்தீர். உம்மைக் குறித்து அனைவோரும் ஆகாரம் வெறுத்தும் உறக்கந் தவிர்த்தும் அலக்கண்தாங்கி வருந்துகின்றார்கள். நீரும் போனக முண்டு ஐந்து நாட்கள் கழிந்தன. நீர் தாம் உலக முண்ட பெருவாயர்! உண்டாலும் உண்டீர்! உறங்கினாலும் உறங்கினீர்! பட்டினி கிடந்தாலும் கிடப்பீர்! உம்மாலாகிற காரியம் எம்மா லாகுமா? ஒருநா ளுணவை யொழி யென்றாலும் ஒழிக்க முடிய வில்லை; இரண்டு நாளைக்குச் சேர்த்துச் சாப்பிடவும் சாய வில்லை; குளிரும் தாங்க முடியாது; வெய்யிலும் பொறுக்க முடியாது. ஆகையால் இப் படகேறி யக்கரை சேர்வோம்" என்று சொல்லி ஸ்வாமிகளுடைய வலது கரத்தினைப் பற்றி யழைத்தார்.

ஸ்வாமிகள் சிறிது கோபங்கொண்டவராய் தமது கரத்தினை விடுவித்துக்கொண்டு நின்று, "ஆகா! எந்த பம்பரம்போல் நான் உலகினை ஆட்டுவிக்கின்றேன் என்று வெறுஞ் சொற்களால் சொன்னீர்களோ அந்த பம்பரமாகவே என்னை ஆட்டுவிக்கின்றீர் அன்றோ? பொம்மலாட்டத்தில் கயிற்றிற் கட்டிய பொம்மைபோன்று நீரும் இழுக்கின்றீர்; நானும் ஆடுகின்றேன். என் சுயேச்சையாய் நான் ஒன்றுஞ் செய்யவல்ல னல்லேனாய்த் தீர்ந்தேன். புத்தியுஞ் செத்தது, பித்தனுமானேன்; சொன்னது செய்தேன், வந்ததுபட்டேன். அந்தோ! பிருந்தாவனம் போக வெண்ணின நான் சாந்திபுரம் சேர்ந்தேன்" என்று சொல்லி நிதையை நோக்கினர். நித்யானந்தர் சிறிது தைரியங் கொண்டவராய், "ஸ்வாமீ! உம்மைப்போல் கிருஷ்ண ப்ரேமையாலேயே தேகத்தைப் போஷித்து வரமுடியாத எங்களுக்கு ஐந்து நாட்கள் ஆகார மின்றி யிருத்தல் சாலத் துன்பம் விளைத்ததன்றி உயிர் துறக்கச் செய்வதாயு மிருக்கின்றது. ஆகையால் அத்வைதர் வீடு சென்று பசியாற்றிக் களை தீர்த்தல் நன்று. இந்த கருணை செய்யாவிடின் மரணமடைவோம்; அல்லவென்றால் இல்லையாவோம். இது நிற்க, ஆங் கெல்லோரும் உம்மைப் பார்க்கவேண்டு மென்றே எக்கம் பெரிதுங் கொண்டிருக்கின்றார்கள். அவர்கட்காகவாயினும் அங்கு போக வேண்டுமன்றோ? நான் உம்மை எமாற்றியதும் உண்மையே; பொய் சொன்னதும் உண்மையே; கபடம் புரிந்ததும் உண்மையே; களங்கப் பூண்ட

தும் உண்மையே; அவ் வபராதத்தினுக்குத் தக்க தண்டனை ஸ்ரீகிருஷ்ணனிடம் பெற சித்தமா யிருக்கின்றேன்" என்று சொன்னார். ஆசார்யரும் ஸ்வாமிகளை யழைக்க, ஸ்வாமிகள் கோபமாறி படகேறினார்.

அவர்கள் வேடிக்கைப் பேச்சுகள் பேசிக்கொண்டே யாற்றைக் கடந்து ஆசார்யர் இல்லஞ் சேர்ந்தனர். அப் பெரியோர் அகமகிழ்ச்சி செப்பத் தரமன்று. ஸ்வாமிகளை நோக்கி,' என் பாக்கியமே பாக்கியம்! எவர்க்குக் கிடைக்கும் இந்த ஸ்லாக்கியம்! அற்பனிடத்தில் உன் பொற்பைத் தந்தனையே! மருளைப்போக்கி அருளைக் கொடுத்தனையே!

"முன்னமே துயின்றருளிய முதுபயோ ததியோ
பன்னகாதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்துதற்
கென்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடில் * * *"' என்று

ஆசார்யர் கூறினார்.

பின் ஆசார்யர் தண்ணீர் கொணர்ந்து ஸ்வாமிகள் சீர்பாதங்களை சுத்தி செய்யப் போதர, ஸ்வாமிகள் அதைத் தடுத்து தன்னை 'ஆட்டபொம்மை' யாகவே மதித்துவிடா திருக்க வேண்டினர். போசன மானவுடன் ஆசார்யர் தமது சிஷ்யர்களுக்கு கீர்த்தனை பாடக் கற்றுக் கொடுத்திருப்பதைத் தெரிவிக்க வேண்டினவராய், அவர்களைக் கீர்த்தனை பாடும்படி சொல்லவே ஸ்வாமிகளும் மூர்ச்சித்துப் பின் தெளிந் தெழுந்து நடிக்க வாரம்பித்தார்.

அன்றிரவு நித்யானந்தரும் ஸ்வாமிகளும் ஒரே அறையிற் படுக்க, அப்போது நிதை, "ஸ்வாமீ! ஒரு கோரிக்கை, என்னை மன்னிக்கவேண்டும். நதியாவில் உமது தாயாரும் பக்தர்களும் உம்மைக் காண வேங்கிக் கதறுகின்றார்கள். அவர்கள் விழுவதும் அழுவதும் பட்டினி கிடப்பதும் பரதவிப்பதும் என்னால் சொல்ல முடியாது; செத்துப்போன உடலைப்போன்றும் பட்டுப்போன மரத்தைப்போலும் ஆவி சிவனற்று அலைகிறார்கள்; அவர்களை யிங்கு அழைத்துவர விரும்புகின்றேன்" என்று சொன்னார். ஸ்வாமிகள் சற்று ஆலோசித்து, "ஆமாம்; நான் அவர்களிடம் சொல்லாது இம

றென்று புறப்பட்டு வந்ததால் அவர்களுக்கு துன்பமுண்டாயிற்று. அத்துன்பமே என்னை பிருந்தாவனம் போகவொட்டாமற் செய்தது. அவர்கள் கண்ணீரே வழியை மறுத்த ஆற்றுப் பெருக்காயிற்று; இல்லாத தடைகளை உண்டாக்கிற்று. அவர்களை யழைத்து வாரும். அவர்களிடம் சொல்லிப் போகின்றேன்" என்று பதில் கூறினார். நித்யானந்தர் சந்தோஷம் மேலிட்டவராய், "நான் யார் யாரை யழைத்து வருகிறது? இஷ்டப்படுபவர் எல்லோரையும் அழைத்து வரலாமா?" என்று கேட்க, ஸ்வாமிகள் விஷ்ணுப்ரியா தேவியைப் பற்றிதான் அப்படி கேட்கின்றார் என்று நினைத்தவராய், "இஷ்டப் படுபவரில் ஒருவர் தவிர மற்றெல்லாரையும் அழைத்து வரலாம்" என்று சொல்லி யனுமதி தந்தனர்.

நித்யானந்தர் மறுநாட்காலை புறப்பட்டு நதியாவுக்குப்போய் சசிதேவியாரையும் பக்தர்களையுங் கண்டெல்லா சங்கதிகளையும் ஆதியோடந்தமாய் தெரிவித்தார். அப்போது அந்நகரத்தினரும் ஸ்வாமிகள் தாயாரும் மனைவியாரும் பட்ட துன்பத்தின் தன்மை எம்மால் செப்பத் தரமன்று. சசிதேவியார் மூர்ச்சிதராய் வீழ்ந்து பின் தேறித் தெளிந்தனர். ஸ்வாமிகளின் சிஷ்யர்களும் பக்தர்களும் சிநேகிதரும் பகைவரும் அனைவரும் ஒருங்கே சசிதேவியம்மாள் வீடுசென்று தம் காதில் அரைகுறையாய் வீழ்ந்த செய்திகளின் உண்மையை வினவி யறிந்து அந்தம்மாளுக்குத் தேறுதல் சொல்வாராயினர்.

ஆனால் அந்நகர் முழுவதும் ஆச்சர்யத்தில் அமர்ந்து பலவிதமாய் ஸ்வாமிகள் மேன்மையைப்பற்றிப் பேசத்தலைபட்டது. "ஈதென்ன கொள்ளை? இதனைப்போல் யாரே கண்டனர்? நிமை பண்டிதர் ஓர் அரசனைப்போல் இன்பமும் சுகமும் அனுபவித்திருந்தவரன்றோ! எந்தஅரசன் இவ்வாறு இகலோக லாபம் சிறிதுங் கருதாது துறவியானான்! மன்மதனைப் பழிக்குஞ் சுந்தரமும் சரஸ்வதி தேவியாரை நிகர்த்த கல்வியும் வாய்ந்த இவர் தண்டு கமண்டலமும் கந்தையும் காட்டு மிருகங்கள் உறவும் நாடியன்றோ அனைத்தையுந் துறந்தார்! க்ஷீர நுரைபோல் தாவள்யமாயும் அன்னச் சிறகுபோல் மிருதுவாயும் உள்ள பஞ்சணை மெத்தையைத் துறந்து

கல்லும் முள்ளும் கரடு முரடுமாயுள்ள வெறுந்தரையிலன்றோ சயனிக்கப்புகுந்தார்! என்று அவ்வூரார் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாய் இக்கலிகாலத்தில் தனவந்தனாயிருப்பவனொருவன் தன்னை யிரந்து வணங்கிக் கேட்கும் பிச்சைக்காரனுக்கு ஒரு கைப்பிடி யரிசி கொடுத்து உதவுவது கூட அருமையாயிருக்கின்றது. அப்படியிருக்க, ஏழையொருவன் தானுண்ணப்போந்த வேளையாசித்த வறியனுக்குத் தனுணவினைப் பகிர்த்துக் கொடுப்பது எவ்வளவு அருமை! என்ன மேன்மை! அதற்குமேல், அன்பின் மிக்க தாயாரையும், வயதிளங் காதலியையும் பரிதபிக்க விட்டுப் பிரிந்து துறவியாச்சிரமம் புக்குப் பரோபகாரஞ் செய்யும் மகானுடைய மேன்மையையும் தெய்வத் தன்மையையும் என்னென்றுரைக்கலாம்! இக்காலத்தில் காவி தரித்த ஸ்வாமிகளைக் காணுதல் அருமையல்ல. அவற்றுள் அனேகர் பாலப்பருவ மெல்லாம்,

" சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்து
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து" ம்,
"நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்
நீதியல்லாதன செய்தும்,"

துறவிவேடந் தாங்கியாயினும் ஊரை ஏமாற்றி வயிறை வளர்க்கலாம் என்று வீட்டைவிட்டுப் புறப்படுவார்கள். ஆயின் சிறுபான்மையோர் ஏதாயினும் ஓர் வழியால் நற்புத்தியும் பக்தியு முண்டாகி,

" எளியனேன் சிறியன் யான் செய்பிழைகள் சிறியவோ
வெழுகடலினும் பெரியவே
யென்செய்கே னென்செய்கே னினியாயினுஞ்
செயாதெந்தை நினையேத்த வென்றால்
வளியின் வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சான்
மயங்குகின்றே னடியனேன்
மனமெனது வசமாக நின துவச னாக
வந்தறிவு தந்தருளுவாய்"

என்று கோரித் தம் வினை தீர்க்க முயலுவார்கள். ஆனால், சைதன்ய ஸ்வாமிகளைப் போல் உலகத்தோரின் பாவச்செயலும் பக்தியின்மையும் கண்டு சிந்தையின் மூழ்கி அவரது நற்கதி நாடியே தாம் பொறி யவித்தும் உற்றார் பெற்றாரை யிடர்ப்படுத்தியும் உலகந் துறந்த பெரியோரைக் காண்ட லரிதே. அதனாற்றான், கல்வி யறிவிற்சிறந்த எம்பெருமாட்டியாரும்,

" அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்தலரிது
பேடு நீக்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந்தவமுந் தான் செயலரிது"

என்று செப்பினர். நம் கௌரங்க ஸ்வாமிகள் செய்த தானத்தின் மேன்மையும் தவத்தின் பெருமையும் இதை வாசிக்கும் பக்திமானும் புத்திமானும் தாமே யறிந்து கொள்ளவேண்டும்.

இது நிற்க; நித்யானந்தர் முயற்சியால் சசியம்மாளும் விஷ்ணுப்ரியையும் ஸ்வாமிகள் போயபின் இதுகாறும் பட்டினியாய்க் கிடந்தவர்கள் இப்போது அவசரமாய்க் கொஞ்சம் சமைத்து உண்டு பின் சாந்திபுரம் போகப் புறப்பட்டார்கள். அக்கால ஆசாரத்தினுக்கேற்க ஒரு பல்லக்கு வந்தது. அதனுள் சசிதேவியார் ஏறி உட்கார்ந்தனர். பின் அவர் மருகியும் பாதச்சிலம்பொலிக்க நடந்து பல்லக்கேற வந்தார். ஆனால் அவர் வருவதற்கு ஸ்வாமிக ளனுமதி யில்லையென்று நிதை சொன்னார். அதை யறிந்த சனங்களும் அந்தம்மாளும் மிக வியசனப்பட்டார்கள்.

விஷ்ணுப்ரியா தேவியாரோ தம்முயிர்க்காதலரான ஸ்வாமிகள் சொல்லினுக் கெதிர்நடக்க மனதினாலுங்கூட வெண்ணியிராத வுத்தமி; செப்பியதற்கு எதிராய் நடக்கும் சிகண்டி யல்லர்! ஆனமையால் உடனே திரும்பி வீட்டினுக்குட் போயினர். அப்படி நடந்தபோது தோன்றிய அவர் சிலம்பின் நூபுரமானது அங்கு நின்ற ஜனங்கள் எல்லாருடைய மனதினைப் பிளந்து துன்பப்படுத்

தியது; கணவனைப் பிரிந்த கற்புடையாளின் கருத்தைக்காட்டி வருத்தம் விளைத்தது. அத்தேவியார் தமக்குள் பலவாறு சிந்தித்து "ஆ! ஆ! நதியாமுழுதும் ஸ்வாமிகளைப் பார்க்கப் புறப்பட்டிருக்க, நான் ஒருத்தியே யன்றோ கொடுத்துவையாத பாவியானேன்? அவரவர் வினை அவரவரையே சுற்று மென்பது இங்குதான் அழகாய் அமைந்தது. ஸ்வாமிகள் துறவியாயதால் வருந்துபவரின் முதன்மையாயுள்ளவர் என்னையன்றி மற்று யார்? ஆகையால் துறவியாரான சிரேஷ்டரைப்பார்க்க நான் அன்றோ முதலில் போகவேண்டும்? அப்படியிருக்க என்னை வரவேண்டாம் என்று ஆக்ஞாபித்தல் நீதியாமோ? முதலுக்கே மோசம்வைத்து, மற்றதுசெய்யின் உத்தம மென்னை? சை! சை! அவ்வெண்ணமே கொடிது. அன்பே யோருருக்கொண்டாலன்ன என் காதலர் ஓர் அநீதியும் செய்யற்பாலரோ? விளக்கொளியில் இருட்டெவ்வகை நேரும்? என் பர்த்தா செய்யும் பரம காரியத்திற்கு நானன்றோ முதற்றுணைவி? ஆகையால் என்னைமட்டும் வராமலிருக்கச் சொன்னதும் என்னை கௌரவப் படுத்தியதே யாயிற்று. என்னாதர் என்னைப் பூரணமாய் நேசித் திருக்கையில் எனக்கு வேறென்ன வேண்டியிருக்கிறது?" என்று இப்படி தம்முள் நினைத்துத் தேறினர். சசிதேவியார் மருகியார் வராது தாம் போவதில் மனக்குறையால் மயங்கித் தியங்க, விஷ்ணுப்ரியை தம்மை விட்டுப் போகலாம் என்று தெரிவித்தனர். உடனே பல்லக்கு புறப்பட்டது. அதன் கூடச் சென்று ஸ்வாமிகளைப் பார்த்து வரத் தீர்மானித்த பலரும் அப்போது "ஹரிபோல்" "ஹரிபோல்" என்று இடைவிடாது சப்தித்தார்கள்.

சசிதேவியாருடன் நதியா ஜனங்கள் சாந்திபுரத்தை யணுகியபொழுது அந்தவூரில் ஸ்வாமிகளைப் பார்க்க வந்தவர்களே ஒரு பெருங் கும்பலாய் நின்றிருந்தனர். ஸ்வாமிகளைப் பார்த்துப் போகவந்தவர்கள் வேடிக்கை பார்க்கத் தாமே வந்தன ரன்று. ஒவ்வொருவரும், இரும்பைக் காந்தமிழுக்கிறதுபோல் இழுக்கப்பட்டு கண்ணீரரும்பி வியர்வையரும்பி, கண்ணனாகிற கரும்பை விரும்பி ஸ்வாமிகளிடம் சேர்ந்தனர். ஸ்வாமிகள் எல்லாரும் தம்மைப்

பார்க்கும்படி அவ்வீட்டு மாடியின் மீதேறி நின்றார். சன்னியாசியாச்சிரம வுடைதாங்கி அவர் பக்தியே யோருருக்கொடு வந்தாலன்ன தெய்வத் தன்மையோடு விளங்கினர். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் தன்னையே ஸ்வாமிகள் பார்க்கின்றார் என்று தோன்றும்படி அனைவருக்கும் அவர் காட்சி தந்து "ஹரியை பஜியுங்கள், ஹரிநாம சங்கீர்த்தனம் பண்ணுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். சாந்திபுரச் சனங்கள் "ஹரிபோல்" என்று கூவினார்கள். அச்சமயம் நதியாஜனங்களும் அக் கூச்சலுக்குப் பிரதி சப்தஞ்செய்வதுபோல் சப்தித்தார்கள்.

ஸ்வாமிகளின் தாயார் இப்படி நதியாவிலிருந்து வருவதையறிந்த ஜனங்கள் பல்லக்கு போக வழிபண்ணவும், ஸ்வாமிகளுமதைக் கண்டு மாடியினின்று மிறங்கி எதிர்கொள்ள வந்தனர். பல்லக்கினின்று தேவியார் இறங்கியவுடன் ஸ்வாமிகள் அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தார்.

துறவியானவர் ஒருவர் கிருகஸ்தனைப்போல் சுகதுக்கங்களில் மனதை ஈடுபடுத்துவதும், எவ்விதத்திலாவது ஒன்றிற் சிறந்தவரையாயினும் வேறு யாவரை யாயினும் தலைவணங்கித் துதித்தலும் போன்ற செய்கைகளைச் செய்யாமலிருக்க கடமைப்பட்டவர். ஆகையால் தம் புதல்வன்செய்யுங் காரியம் அடாதது என்று நம்ப இடமிருந்தது. மேலும், ஸ்வாமிகளின் முழுத் தேஜஸையும் நீத்தாருடையையும் பார்க்க எதிர் நின்றது தம்புத்திரன் ஆகையால் தமக்கு வந்தன வழிபாடு செய்யத்தக்க தாழ்ந்த நிலைமையன் என்ற எண்ணத்தினை முற்றும் மறக்கச்செய்தது. ஆகையால் அவர், "நிமையே! நீர் என்னைச் சேவிப்பது தகுதியோ? நீர் துறவியாய்விட்டீர். நான் இன்னும் கிருகஸ் தாச்சிரமத்திலேயே யிருக்கின்றேனல்லவா? ஆகையால் நீர் என்னை வணங்குவது என்னைத் துன்பத்துட் படுத்துமன்றோ? ஆனால் நான் பித்தரைப்போல் பிதற்றுகின்றேன். நன்மை யிதுவென்றும் தீமை யிதுவென்றுமுமக்குத் தெரியாதா? எனக்கு இது தீமை விளைக்கற்பாலது என்று தெரிந்திருந்தால் நீர் இப்படியுஞ் செய்வீரோ" என்று தடுமாற்றமாய்ப்

பேசி, பின் அன்னைக்குரிய ஆற்றாமை தோன்றியதால் உட்கார்ந்து நிமையையும் எழுந்திருக்கச் சொல்லினர்.

ஸ்வாமிகள் எழுந்திருக்கவே, அந்தம்மாள் அவர் முகத்தினை யுற்றுப்பார்த்து அவர் சிரத்தினைத்தடவி; "நிமை, திவ்விய சுந்தரம் வாய்ந்த உன் தலைமயிரை வாங்க நாவிதனொருவன் எப்படி மனந் துணிந்தான்! அக்கொடும் பாரதிதான் எப்படி சின்னஞ் சிறுவயதான உன்னைத் தம்மினஞ் சேர்க்கத்துணிந்தார்?" என்று சொல்லினர். ஸ்வாமிகள் சிரந்தாழ்த்தி கரங்குவித்து பணிவோடு உட்கார்ந்தவர் தாம் ஏதோ பெருங்குற்றமொன்றினைச்செய்தவர்போல் விளங்கினர். அவரன்னையார் பின்னும் சொல்வார்: "நிமை! பேதைமைவாய்ந்த பெண் அதிலும் நாதனிழந்த கைம்பெண்ணான நான் இதற்காகவோ உனக்கு முதற்றரமான கல்வி பயிற்றுவிக்க என்னென்னவோ பாடுபட்டேன்? உன்னை யிந்த கோலத்திற் காண என்கண் என்ன தீவினை செய்ததோ அறியேன். உன்னை விட்டுப்பிரிந்து ஒருகணமேனும் என்னாவி தரிக்காதிருக்கும்படி அவ்வளவு அன்பாய் என்னுயிருக் குயிராய நின்னை வளர்த்த நான் நீ மரத்தடியிலயர்வதும் சோறு இரந்து உண்பதும் கந்தையுடுப்பதும் கானகந்திரிவதும் பார்த்து எப்படி சகிப்பேன்? அது ஒருபக்கம் இருக்கட்டும்; நிமை, உன் பேதை மனைவி என் கழுத்திற்கு கயிறும் மனதுக்கு வாளும் வயிற்றினுக்குச் செந்தீயுமாய் இருப்பதை நினைத்தாயோ? நான் அச்சிறுமியை எப்படி தேற்றுவேன்? அவள் மனத்துயரெப்படி மாற்றுவேன்? இத்தனை சங்கடம் அன்னை யொருத்தியாற் றாங்கவும் கூடுமோ? நீ துறவியாக தீர்மானித்திருந்தால் நான் சாகும் வரையில் காத்திருந் திருக்கக் கூடாதா?" என்று பலவாறு வினவினர். ஸ்வாமிகள் மிக்க வியசனத்துடன், "அம்மா! நான் ஓர்வித மயக்க வசத்தால் இக்காரியம் செய்துவிட்டேன். நீர் இங்கு வந்தெனைக் கண்டுபிடிக்க நேர்ந்ததாகையால் இனிநான் உம் மனுமதியின்றி ஒரு காரியமும் செய்யத்துணியேன். இவ்வுடலும் நும்மதே; ஆகையால் இனி யுமதாணை யின்றி யும்மை விட்டுப்போகேன். நான் துறவியாய்விட்டதைப்பற்றி சஞ்சலம் வேண்டாம். உமக்கிஷ்டமிருந்தால் நான் திரும்பவும் கிருகஸ்தனாகி நதியாவுக்கும் வந்துவிடுவேன். அம்மா, நான் உம்மைத் திடீரெனவிட்டுப் போயதால் நீர் சாலத் துன்பப்பட்டீர் என்று இப்போது தான் நன்றாய் அறிகின்றேன். ஆகையால் என்னை மன்னிக்கவேண்டும்" என்று சொல்லினர்.

பின்னர் ஆசார்யமனைவியான சீதாதேவியார் சசிதேவியாரை அந்தப்புர மழைத்துப் போயினர். அங்கு சீதாதேவியார் ஸ்வாமிகளுக்கு அமுது சமைக்க வெத்தனிக்கையில் சசிதேவியம்மாள் "அம்மா, அவ்வேலை நான்செய்கிறேன். என் அருமைமகனுக்கு நான் சோறு சமைப்பது இதுவே கடைசி தரமோ என்னவோ; ஆகையால் என்மேல் தயவு கூர்ந்து என்னை யிவ்வேலை செய்ய விடவேண்டும்" என்று சொல்லவும், சீதாதேவியார் அதற்கு சம்மதித்து சசிதேவியாரை சந்தோஷிப்பித்தனர்.

அன்றுமாலை ஒரு பெருங் கீர்த்தனா காலக்ஷேபம் நடந்தேறியது. ஸ்வாமிகளும் ஆடிப்பாடி யகங் கரைந்தார். அதனால் தம்மை மறந்து அடிக்கடி பரவசமாய் ஸ்மரணை கெட்டு வீழ்வர். அதைப் பார்க்க அவர் அன்னையார் சாலத்துன்பமடைவர்; அப்படி வீழ்வதில் கைகால் முறிந்து காயம் படுமோ வென்று பயமுறுவர்; பின் கீர்த்தனை நின்றாற்றான் தம்மகன் இப்படி அபாயத்திற் குள்ளாகாது போய் சயனிப்பான் என்று சொல்வர். இப்படி இரண்டு மூன்று நாளாயின. ஸ்வாமிகள் தாய்சொல் மீறி நடப்ப தில்லை யென்று சொல்லியது வெறும் பேச்சுதான் என்று எல்லோரும் நினைத்தார்கள்; ஆனால் ஸ்வாமிகள் தாம் சொல்லியவாறே நடக்கவேண்டும் என்று எண்ணினா ராகையால் பக்தர்களை அழைத்து "நண்பர்களே! உம்மைத் திடீரென நான் விட்டுப் போகப் புறப்பட்டது சரியன்று. ஆகையினாற்றான் என்னால் பிருந்தாவனம் போக சாத்தியப்படவில்லை. என் அன்னை என்னைப்பற்றி வருந்தியதை நினைத்து என் மனம் விசாரப்பட்டுக்கொண் டிருக்கையில் நான் அவர் சொல் மீறி நடப்பதில்லை யென்று வாக்குக் கொடுத்தேன். ஆகையால் அவர் என்னைப்பற்றி என்ன யோசித்திருக்கின்றார் என்று தெரியவேண்டும். அவர் என்ன சொன்னபோதிலும் அதைப் பரிபாலிக்கவே தீர்மானித் துள்ளேன். அவர் நான்

திரும்பி நதியாவுக்குப் போய் கிரகஸ்தனாகவே மாறியிருக்க ஆக்ஞாபித்தாலும் அப்படியே செய்யக் காத்திருக்கிறேன். நான் நேராய் அவரிடம் போய் நின்றால் என்னைப்பார்க்க அவர் மனோதைரியம்விட்டு வருந்துகின்றாராதலால் நீங்கள் அவரிடம் சென்று அவர் ஆக்ஞையைக் கேட்டு எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்றார்.

இவ்வார்த்தைகள் பக்தர்களை யாச்சர்யக் கடலில் வீழ்த்தி அவற்றின் பயனறிய வொட்டாது தயங்கச் செய்தன. இதனால் அவர்கள் தமக்குள்ளே "ஒரு வாரத்திற்கு முன் துறவியான ஸ்வாமிகள் இப்போது அவர் தாயாரைச் சரணடைகின்றார்; அவர் என்ன சொல்லினும் அதனைக் கடப்பதில்லை யென்கின்றார். அந்தாயாருக்கோ இவரைத் தவிர வேறு கதியில்லை. அறுபத்தேழு வயது நிறைந்த அன்னையாரை இப்படி ஸ்வாமிகள் கேட்டால் அவரை நதியாவுக் கழைக்காது வேறென் செய்வார்? ஆனால் இது முறையோ? துறவியான ஒருவர் திரும்பவும் வீடு வந்து சேர்ந்தால் அவர் இவ்வுலகத்தில் சனங்கள் எல்லாராலும் அச்செய்கைக்கு இகழப்படுவதன்றி அவ்வுலகத்திலும் தொலையா வபகீர்த்திக் காளாவா ரல்லவா? என்றாலும், ஸ்வாமிகள் அவ்வித கட்டுப்பாடுகட் கெல்லாம் அதீதமானவர்; ஸ்ரீகிருஷ்ணனே வேற்றுருக்கொண்டு ஸ்வாமிகளாக வந்திருக்கின்றனர்; அவரிரங்துண்ண வரச் செய்ததே மானிடர் தீச்செயல்க ளாகும்; அப்படியிருந்தாயினும் கீழோரை நல்வழி யடையச் செய்வோம் என்ற எண்ணங்கொண்டதால் ஸ்வாமிகள் துறவியானார். ஆனால் அவரைத் துறவியாய் நிற்க வொட்டாது மாற்றி ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்யவேண்டும்" என்று எண்ணினார்கள். ஆகையால் ஸ்வாமிகள் சொல் அவர்களைச் சந்தோஷப்படுத்தியது. உடனே அவர்கள் சசிதேவியாரை யடைந்து ஸ்வாமிகளுரையைச் சொல்லி நின்றனர்.

சசிதேவியார் தமது சிந்தனையாகிற இராகு அவர் உளமாகிற சந்திரனை விழுங்கவும், அக்கொடுமையால் விளைந்தவற்றினை அவர் முகம் பளிங்குபோல் எதிர்நின்ற பக்தர்களுக்குக் காட்டவும் தலைகுனிந்து மௌனமாய் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தார்.

இது பக்தர்களுக்கு ஆச்சர்யகரமாயிருந்தது. அவர்கள், "அம்மா! நீர் ஏன் மயங்குகின்றீர்? ஸ்வாமிகள் வீட்டை விட்டுப்போகவும் நீர் எண்ணுவீரோ?" என்று சொல்லவும், அந்தம்மாள் தம் துன்பத்தினை வெளிப்படுத்தப் புன்னகை செய்து, "நிமையை வீட்டுக் கழைத்துப் போகவேண்டும் என்று சொல்கிறீர்கள்? அது முடியாத காரியமே. ஆகாத காரியத்தை அறுபதுநாழிகையும் சிந்தித்தாவதென்ன? அவன் எந்த வூருக்குப் போயிருந்தால் அவனுக்கு சந்தோஷமாயும் எனக்கும் அடிக்கடி பார்க்க அனுகூலமாயும் இருக்கும் என்று தான் யோசிக்கிறேன்" என்றார். இதனால் பக்தர்கள் துன்பப்பட்டவராய், "அம்மா! உமது குமாரன் நீர் இஷ்டப்பட்டால் வீட்டுக்குத் திரும்பிவரத் தயாராக இருக்கையில், நீரே வீட்டை விட்டுத் துரத்தி விடுவீரோ? கண்ணைப் பிடுங்கிக் காட்டிலெறிவதுபோல், பிள்ளையைப் போக்கடித்து பிரதிஷ்டை பெறுகிறீர் நீவிர்" என்று சொல்லினர். அந்தம்மாள் திரும்பவும் புன்சிரிப்பு கொண்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம், அவர் சொல்லிய தாவது: "நான் என் மகனை வீட்டுக் கழைத்துப்போவது எனக்கும் பல்லாயிரம் சனங்களுக்கும் சந்தோஷம் விளைப்பதற் கென்னவோ சந்தேகமில்லை; ஆனால் பொது ஜனங்கள் என்னை யிகழ்வார்கள். அவ்விகழ்ச்சி எனக்கும் உங்களுக்கும் பொறுக்க முடியாததா யிருக்கும். அதுவும் பெரிதல்ல. ஒருவாரம் முந்தி நிமை ஒரு தெய்வ விரதம் மேற்கொண்டான்; இப்போது அதனைத் தவிர்ப்பதால் அவன் ஆத்தும யாத்திரையில் பின்னிடைவான். சாணேற முழம் சறுக்கிய கதைக்கு சாட்சி இதுவே யாகும். அவன் போவதில் நான் துன்பம் மேலிட்டு உயிர் துறக்க நேரு மென்பது உண்மைதான்; ஆனால் அவன் பிராண யாத்திரையிற் றடை செய்வதைவிட நான் ஆயிரம் தரம் இறப்பது மேல் என்று தான் நினைக்கிறேன். நான் கேசவபாரதியாஸ்ரமத்தில் அன்று இருந்திருப்பேனேல், அவனைத் துறவியாக வொட்டாது தடுக்க முயன்றிருப்பேன். இப்போது முந்திப் போனதால் அது முடியாது. என் சுயநலம் பாராட்டாது அவன் நன்மையைக் கோருபவளாயின் நான் அவனை என்னுடன் வசித்

கச் சொல்லக் கூடாதல்லவா? ஆகையால் என்னை விட்டுப் போனதில் எள்ளளவேனும் அவன் துன்பப்பட வேண்டிய தில்லை யென்று சொல்லுங்கள். கஷ்டம்நீங்கி அவன் கண்ணனடி பணியட்டும். நானே அவனுக்கு அனுமதி கொடுத்திருக்கின்றேன் அன்றோ! என் அனுமதி யின்றி அவன் போகிறவன் அல்லவே! அவனை வீட்டுக் கழைக்காமைக்கு என் மேல் குற்றங் கூறுவீரோ! அவன் என்னிடத்தில் முழு நம்பிக்கை வைத்தா னல்லவா! அவன் தாய் ஒருபோதும் தன் நன்மைக்காக அவன் பிராண யாத்திரைக்கு பங்கம் வரச் செய்யாள் என்று துணிவு கொண்டிருப்பதா லல்லவா அவன் என்னில் பூரண நம்பிக்கை வைத்தது! அந்த நம்பிக்கைக்குத் துரோகஞ்செய்வதெனக்குத் தகுமோ! அவன் என்னை யறிந்திருப்பதுபோல் நானு மவனை யறிந்துள்ளேன். ஆகையால் துறவியான என் மகன் எந்த விதத்திலும் துறவியாகவே தானிருக்கவேண்டும் என்று சொல்லுங்கள்'' என்பதே.

சசிதேவியார் இவ்வாறு பேசியபோது அவருடைய கம்பீர பார்வையும் அதி சுந்தர வதனமும் பக்தர்கட்கு அற்புதமாய்த் தோன்றின. ஆகையால் அவர்கள் "சபாஷ்! சபாஷ்!! நாம் என்ன இப்படி மதிமயங்கித் துன்புற்றோம். ஸ்வாமிகளிடம் நமக்கு உண்டாய பக்தி விசேஷத்தினா லன்றோ நேரொழுக்கம் இது, நடத்தற்கு முறை யிது வென்று அறியாமல் பிதற்றினோம். ஆசை மிகுதியாலே அறிவை யிழந்தோம்; பக்தியாகிற பாசத்தால் யுக்தி யென்பது எத்திசையுங் காணவில்லை; உலகத்தில் ஒரு தாய் தன் அன்பின் மிகுதியாலேயே தன் புத்திரனை வருந்தி தத்தஞ்செய்ய மனந்துணிவளா! ஆனால் ஸ்வாமிகள் தமதன்னையாரின் தன்மையை நன்றாய் அறிந்தவர்! ஆகையால்தான் அவரைத் தம் மன்னையாராய் வகித்தார். அத் தாயாரும் அப்படிப்பட்ட குமாரனைப் பெறத் தவம் மிகப் புரிந்திருக்கவேண்டும்'' என்று பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் அத்தம்மாள் இதனையொன்றும் கவனியாது தம்முள் ஆலோசித்துப் பின், "நிமையே ஜகந்நாதம் என்ற க்ஷேத்திரத்தில் வசிப்பது நன்றாயிருக்கு மல்லவா? அந்த திவ்விய க்ஷேத்திரத்தில் சன்யாசிகள் பலர் நிறைந்திருப்பார்; அன்றி யாத்திரைக்காக அவ்வூர் போய் வருபவர் எண்ணிலர். பிருந்தையைப்போல் வசிக்க அது அவ்வளவு தூரமானது மல்ல. ஆகையால் நீ அங்கு சென்றிருந்தால் உன் ஆஸ்ரம தர்மமும் நிறைவேறும்; அடிக்கடி உன்னைப் பற்றி சமாச்சாரமும் எனக்கு கிடைத்துக்கொண்டிருக்கும்'' என்றார்.

இத் தீர்மானத்தினைக் கேட்ட ஸ்வாமிகள் அந்த க்ஷணமே பிருந்தாவனத்தின் நினைவை விட்டு ஜகந்நாதத்தில் எழுந்தருளி யிருக்கும் நீலாசல சந்திர மூர்த்தியையே மனனம் செய்த தன்றி அம்மூர்த்தியை "என்று காண்போம்?'' என்றவாறு ப்ரேமை கொண்டவராய் வருந்தினர். பிறகு அவருடைய அன்னையும் சிநேகிதர்களும் அவரைச் சின்னாள் பின்னும் அங்கேயே யிருந்து போம்படி மன்றாடிக் கேட்டமையால் ஸ்வாமிகள் சாந்திபுரத்தில் ஐந்து இரவு கழித்து அப்புறம் அனைவரும் பிரிவாற்றாமையால் கண்ணீர் சொரிந்து வருந்தவிட்டு நித்யானந்தர், முகுந்தர், ஜகதானந்தர், கோவிந்தர், தாமோதரர் என்ற ஐவரையுந் தம்முடன் துணையாகக் கொண்டு புறப்பட்டனர். அநேகர் ஸ்வாமிகளுடன் போகத் தயாராக விருந்தாரேனும் ஸ்வாமிகள் மறுத்தமையால் துன்புற்று நின்றுவிட வேண்டி யிருந்தது. நதியா நகரத்து ஜனங்களும் புறப்பட்டுத் தம்மூர் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் தம் நகரஞ் சேர்ந்தபோது எழுப்பிய கூக்குரலே விஷ்ணுப்ரியா தேவிக்கு தம் நாயகர் தம்மையும் இகலோக பந்தத்தினையுந் தவிர்த்துத் துறவியாயினர் என்று தெரிவித்தது.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஜகந்நாத் விஜயம்: வாசுதேவசார்வபௌமர் பக்தி யடைதல்.

சாந்திபுரத்தினை விட்டுப் புறப்பட்டது முதல் ஸ்வாமிகள் துறவியாஸ்ரம தர்மத்தினை வெகு கடோரமாயும் கிரமமாயும் நடாத்துவாராயினர். அவர் சிறிதும் தம் சரீர சௌகர்யங்களை கவனிப்பதற் கில்லாமல் முற்றிலும் ஜகந்நாதனைச் சிந்தித்து அவனிருப்பிடமே நோக்கி ஓடுவார். வெகுசீக்கிரம் கல்கத்தா தாண்டி பங்காளதேசத் தெல்லையினைச் சார்ந்தார். ஆங்கே கங்காநதி தன் னளவற்ற கிளைநதிகளுடன் சமுத்திர சங்கம மாகின்ற உன்னதக் காட்சி விளங்கியது. வேறு மனித சஞ்சாரமுங் கிடையாத அந்தப் பிரதேசத்தைக் கடப்பது சுலபமானதன் றாகையால் ஸ்வாமிகள் சற்று தங்கித்தான் போகவேண்டு மென்று அவர் சிஷ்யர் நினைத்தனர். ஆனால் ஸ்வாமிகள் அவ்வித அசந்தர்ப்பங்களால் தடைபட்டுத் தவிப்பவரோ! அத்தேசாதிபதியாகிய ராமச்சந்திர கான் என்ற துலுக்க உத்தியோகஸ்தன் ஸ்வாமிகளைப் பற்றியும் அவர் வரவைப் பற்றியும் கேள்விப்பட்டு அக்ஷணமே அவரைத் தேடிவந்து அவர் திருவுருவத்தினைக் கண்டு பிரமித்து நின்று தான் வேண்டிய உதவி செய்யக் காத்திருப்பதாய்த் தெரிவித்தான். நதிக்கு அக்கரையில் ஒரிஸ்ஸா தேசத்தைச் சேர வேண்டுவதே ஸ்வாமிகளின் அபிப்பிராயம் என்று சொல்லவும், அவன் அவ்வாறு ஜனங்களை அக் கரை சேர விடாதிருக்க உத்தரவு பெற்றிருக்கின்றனாயினும், எப்படியேனும் அத்யந்த பிரேமையால் கண்ணீர் பெருகவிடும் ஸ்வாமிகளுக்கு சந்தோஷம் உண்டு பண்ணினாற் போதும் என்று எண்ணங் கொண்டு தானே ஒரு படகு கொணர்ந்து ஸ்வாமிகளையும் அவர் சிஷ்யர்களையும் யாற்றினைத் தாண்டிச்செல விடுத்தான்.

ஸ்வாமிகள் பின் நடந்து செல்லுகையில், வழியே ஒருதுறையில் வஸ்திரம் துவைத்துக் கொண்டிருந்த வண்ணானொருவனைக் கண்டு ஹரி பஜனம் பண்ணும்படி அவனை வேண்டினர். அவன் தன்தொழிலை விட்டுப் பஜனஞ்செய்ய வொண்ணாது என்றுசொல்ல ஸ்வாமிகள், “இவ்வளவு தானா? அலை ஓய்வதும் எப்பொழுது, நீ ஸ்நாநஞ்செய்வது மெப்பொழுது? நான் அவ் வஸ்திரம்வெளுக்கிறேன்; நீ ஹரிநாமத்தினைச்சொல்” என்றுரைத்து, அவ் வஸ்திரத்தைக் கொடுக்க வேண்டினர். அவன் துணியைக் கொடுக்காமலே, “நீ என்ன பிடிவாதக்காரனா யிருக்கின்றாய். உனக்கென்ன வேண்டுஞ் சொல்?” என்று கோபக்குறியோடு கேட்கவும், ஸ்வாமிகள் திரும்பவும் ஹரிநாமத்தினை யுச்சரிக்கும்படி சொல்லினர். அவன் அப்படியே சொல்லுகையில்அந்த நாமம் அவன் நாவினைப்பிடித்துக் கொண்டாற்போல் ஆனதால், அவன் இருகரங்களையும் உயரத்தூக்கி நின்று நர்த்தனஞ் செய்து கொண்டே ஹரி நாமத்தைச் செப்பினான். அப்போது அவனுக்கு வழக்கப்படி சோறுகொண்டு வந்த அவன் மனைவி அந்த ஆட்டக் கோலத்தினைக் கண்டு வியந்து ஏதோ பேய் பிசாசம் தன் புருஷனை யண்டிப் பிடித்தாட்டுகின்றது என்று நினைந்து ஓடிச்சென்று அவ்வூராரை யழைத்து வந்தனள். வந்த ஜனங்கள் சிலர் அவனைக்கட்டி நிறுத்த முயல்கையில், அவர்களுக்கும் அந்தப் “பேய்” பிடித்தமையால் அனைவரும் ஹரிநாமத்தினைக் கதறிக்கொண்டே பக்திமிகுந்து பரவசமாய் ஆடினர். அப்படி அவ்வூர் முழுவதும் பக்திக் கொண்டாட்டத்தில் குதூகலித்தமையைக் கண்டு ஸ்வாமிகளும் சிஷ்யர்களும் ஆனந்தித்துப் பின் தம் வழியே சென்றனர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் அவர்கள் கண்களுக்கு பூரிநகர் என்ற ஜகந்நாதத்தின் கோபுரங்கள் தென்பட்டன. ஓங்கியெழுந்த உத்தம சிகரங்களைக் கண்டபோதே, ஸ்வாமிகள் தம் நினைவை மறந்து, கண்ணன் வசம் நண்ணி விட்டார். கோபுர தரிசனத்தால் அனைவரும் பாப விமோசன மடைகின்றனராக, புண்ணியமே உருவாயமைந்த கண்ணியர்க்கு கோபுர சேவையால் உண்மைகள் புலப்

படுமென்பது உரைக்கவும் வேண்டுமோ! "எல்லை இல்லாமல் அல்லல் விளைக்கும் தொல்லை மாக்களே! உண்மையைக் காண நுங்களுக்குக் கண்கள் குருடா யொழிந்தனவோ! என்னைப் பாருங்கள், ஓடி வாருங்கள், நுந்தம் பவபாசம் தீருங்கள்!" என்று மன்றாடுவது போல் அக் கோபுரமானது மிக்க உயரமாய் உன்னதம் பெற்று விளங்கிற்று. பாவஞ் செய்தோ ரிடம் பரிந்து பேசுவது போலவே மேன்மை பெற்ற ஆன்மாக்க ளிடமும் வாஞ்சை யுடன் அஃது வார்த்தை யாடியது: "புன்மை நீக்கி நன்மை யேற்ற புத்தியாளரே! இத்தருணமே, ஈங்கு வந்தருள்வீராக! புத்தி யுடையோர்க்கும் பக்தி யுடையோருக்கும் முத்தி தருவோமென்று அத்தன் ஆதரத்துடன் மெத்த நேரம் இங்கே கத்திக்கொண் டிருக்கின்றான்! உம்மைக் கொடுவர எம்மைப் போக்கினான்: உத்தமத்திற் படிந்த சத்துவரே உளமகிழ்ந்து ஓடிவாருங்கள்! நற்றவர் தம்மை நாடிக் கொணர உத்தர வெமக்கு உறுதியாய்த் தந்தனன்: நாலுவேதமும் ஓதா துணர்ந்து சால்வு மகிழ்ந்த மேலவரே வாருங்கள்!" என்று பலவிதமாய் அஃது பகர்வதுபோல் தோன்றியது. கேவலம் மனிதராய்ப் பிறந்தோரே, ஆவல் இவ்விதம் அடைவரானால், அத்தனை பக்தனாக அவதரித்த அருமை யாளருக்கு அதன் பெருமை யெத்தனை உரிமையாய்க் காணப்படும்! அதை நோக்கிய ஸ்வாமிகள், "ஹா! ஹா! அக்கோபுரத்தின்மீது ஸ்ரீகிருஷ்ணன் இருந்து கொண்டு புன்னகை புரிந்து என்னைக் கைகாட்டி யழைக்கின்றான் பாருங்கள்" என்றார். பக்தர்கள் அத் திசை யுற்று நோக்கினர்; அவர்கள் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஸ்வாமிகள் தாம் ஜகந்நாதரை சிஷ்யர்களுடன் தரிசிக்க இஷ்டப்பட வில்லை; ஆதலால் சிஷ்யர்கள் தமக்கு முந்தியாயினும் பிந்தியாயினும் செல்லும்படி சொல்லி விட்டு ஸ்வாமிகள் "ஆசை காட்டிப் பாசம் விளைத்த நேசா வருகின்றேன்; என் எண்ண மெல்லாம் கொள்ளை கொண்ட கண்ணா வருகின்றேன்; பக்தி தந்து முக்தி கொடுக்கும் பரமா வருகின்றேன்; வாய்மையால் மகிழும் வள்ளால் வருகிறேன்; நான் இதோ வருகிறேன்; நான்வருகிறேன்" என்று கூவிக்கொண்டே அக்கோவிலைநோக்கி யோடினார்.

அந்தக் கோவிலில் ஜகந்நாத ஸ்வாமியின் தரிசனம் சாதாரணமான பிரயாணிகளுக்கு லகுவாய் அகப்பட்டால் அதில் லக்ஷியம் வையார்கள் என்று அவ்வூ ரதிபதியான பிரதாபருத்திரன் என்பவன் அதன் வாயிலில் சில வாயில்காப்போரை வைத்து அவ்வரசன் அனுமதியின்றி எவரையும் உள்ளே விடாவண்ணம் அவர்களுக்குத் திட்டஞ்செய் திருந்தான். அந்த அரசனும் மிக்க பக்திவாய்ந்தவனானதால் மற்ற பணியாளரைப் போல் தானும் ஓர் பணியாளர்த் தலைவன் என்று பேர் பெறும்படி தினந்தோறும் ஸ்வாமி சன்னிதியில் ஓர் தங்க அலகைப் பிடித்து குப்பையைப் போக்குவது வழக்கமாயிருந்தது. இவ்வித ஏற்பாட்டினாற் றான் ஆதியில் பௌத்தருக்கேற்ற அந்த கோயிலின் விக்கிரகம் வெகு கோரமானதாயும் அவலக்ஷணமாயும் இருந்த போதினும் சிரமப்பட்டுப் போய் வணங்கும் பக்தனுக்குக் கிடைத்தற்கரிய காட்சியாக மாறி விடுகின்றது; ய[illegible]நன்தானே சர்வேஸ்வரனைக் கண்டதாலேயே ஒருவாறு திருப்தியடைகிறான்; தான் அவ்வாறு காட்சி பெற்றதாலேயே தன் பாவமொழிந்து முக்தி எய்தற்குப் பாத்திரனான தன்மையை நினைந்து பக்தி பண்ணுகிறான்.

ஸ்வாமிகள் மெய்மறந்து கிருஷ்ணனைக் கட்டியணைக்க ஓடுபவர் வழியில் வாயிலாளரிருப்பதைக் கவனியார் என்ற எண்ணத்தினால் அவருடைய பக்தர்கள் மனக்கவலை கொண்டு பின் ஓடிவந்தனர். அவர்கள் எண்ணியவாறே ஸ்வாமிகளும் வாயிலாளரைச் சிறிதும் கவனியாது "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னலாம்படி மின்னலைப்போல் பறந்தோடி ஜகந்நாதரிருப்பிடஞ் சென்றனர். அவருக்கு அவ்விக்கிரகத்தினைக் கட்டியணைக்கவேண்டுமென்ற எண்ண மிருந்தது; முத்தம் தந்து பக்திசெய்ய வேண்டுமென்று சித்த மிருந்தது. அதனால், மேடைமீது இருந்த ஸ்வாமியைப் பிடிக்கக் குதித்தேறினர். ஆனால் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியுடைவது போல் பிடி தவறி கீழேவீழ்ந்து மூர்ச்சிதரானார்.

காவலாளர் தங் காவலைமீறி யொருவர் போயினர் என்றதை யறிந்து அடங்காக் கோபங்கொண்டு ஒரே கும்பலாய் ஓடிவந்து

ஸ்வாமிகளைப் புடைக்க வாரம்பித்தனர். ஆனால் அச்சமயம் ஓர் விநோதம் நடந்தது. ஸ்வாமிகள் வருகையைப் பார்த்த ஒருபிராமணர் அவரின் உருவத்தாலேயே அவர் ஏதோ பெரிய மகானாய்த் தானிருக்க வேண்டும் என்ற எண்ணந் தோன்றியதால் அவரைப் பார்த்துக் கொண்டே உள் புகுந்தார். அப்போது கோபாவேசங் கொண்ட வாயிற்காப்போரைப் பார்க்கவும் ஸ்வாமிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று ஓடிவந்து கீழ்வீழ்ந்து கிடக்கும் ஸ்வாமிகளைத் தம் முடம்பினால் மூடிக்கொண்டு, "அடா! துராத்மாக்களா! நில்லுங்கள் நில்லுங்கள்! இவர் எப்பிரானே யல்லாவிடினும் ஒரு பெரிய மகான் என்று பார்க்கும் போதே தெரியவில்லையா?" என்று உரத்திக் கத்தினார். அப் பிராமணோத்தமர் பேச்சினையுந் தவிர்த்து ஸ்வாமிகளைப் புடைத்திருப்ப ரக்காவலாளர். ஆனால் அந்த பிராமணர் சாமானியரல்ல. அவ்வூர் அரசனாகிய பிரதாபருத்திரனுக்கு இரண்டாவது அந்தஸ்தினை வகித்தவரும், நதியா நகரத்து பிரதம பண்டிதரும், இப்புவி முழுவதும் நியாய தத்துவத்தை ஸ்தாபித்தவர் என்று கீர்த்தி பெற்றவரும், சமஸ்கிருத தத்துவ வேத பாண்டியத்தில் காசிநகர் பிரகாசானந்த சரஸ்வதியார் ஒருவருக்கே இரண்டாவ தானவரும், இந்தியா முழுவதும் சாஸ்திரங்கள் கற்பதற்குத் தேடிச் செல்லும்படியான பெரும் கல்விச்சாலை ஏற்படுத்தியவரும், ஆகிய **வாசுதேவ சார்வபௌமர்** என்று பட்டம் பெற்ற மகத்தானவ ராதலால் அவரைக் கண்டு காவற்காரர் பிரமித்து நின்றனர். அப் பண்டிதர் தர்க்க சாஸ்திர விசாரணைகளிலும் வாதங்களிலும் மனத்தினை முற்றும் படிய வைத்தும் வாதப்போரில் எதிர் நிற்கவுங் கூட வெவரையும் விடாதபடி யகங்காரம் சாலவுங் கொண்டும் கேவலம் ஆத்தும விசாரணை சிறிதுமின்றி ஒரு மதத்திலும் நம்பிக்கை வையாது இகலோக வாணாளை வீணே கழித்துவந்தவ ராதலால், அவர் ஸ்வாமிகளின் சுந்தரவடிவமும் சுயம்பிரகாசமும் தூய்மையே பொதிந்த தூசிலா வதனமும் அன்பின் மிகுந்த அருட்கடல் நயனமும் பார்க்கவே இதுவரையிலும் கண்டிராத நூதன வுணர்ச்சி யொன்று அவர் மனதில் உண்டானது. அவர் நினைத்ததாவது: "ஆஹா! என்ன விநோதம்! கிருஷ்ணப்ரேமை என்று ஒன்றிருப்பது வாஸ்தவமாய்த்தானிருக்கவேண்டும் அல்லவா? அதனாற்றா னன்றோ இத்துறவிப் பெரியர் ஈசனுருவைக் கண்டு மெய்ம்மறந்து வீழ நேர்ந்தது! ஆகையால் கடவுள் ஒருவர் இருக்கவேண்டும் என்றும் அவர் கிருபாசாகரம் என்றும் அவர்க்கு அன்பே பிரதான மென்றும் அறியலாமல்லவா? அவர் எப்படிப்பட்டவ ராயினும் கேவலம் மனிதஸ்வரூபமமைந்த ஒரு வஸ்துவா யிருப்பினும், அவர் இப்படி நேசித்தவர்க்கு ஆப்தராய் தீனபந்து பக்தவத்ஸலன் ஆபத்பாந்தவன் அனாதரக்ஷகன் என்ற நாமங்களை வகித்தற்குப் பாத்திரராய்த்தானிருக்கவேண்டும். பால்யரான இவரே பாக்கியசாலி; வீண் விவகாரங்களில் காலங் கழித்த நானே மூடன். ஆகையால் இவரிடமிருந்து எப்படியாயினும் கொஞ்சம் பக்தியை சம்பாதித்துக் கொள்ளவேண்டும்" என்பதே.

சார்வபௌமர் பின்னர் தம் சிஷ்யர்களைக் கொண்டு பிரக்ஞையற்றிருந்த ஸ்வாமிகளை தம்மில்லஞ் சேர்ப்பித்தனர். இதற்குள் ஸ்வாமிகள் சிஷ்யர்களும் அங்கே வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகளின் பிரிய சிஷ்யரான **கோபீநாதர்** சார்வபௌமருடைய தங்கையின் கணவராகையால் அச்சமயம் தம் மனைவியுடன் அங்கே வந்திருந்தார். அவருக்கு ஸ்வாமிகள் துறவியாய சமாசாரம் தெரியாது; அதனால் ஸ்வாமிகளைக் கண்டு தெரிந்துகொள்ள வில்லை யாயினும் அவர் சிஷ்யர்கள் வந்தவுடனே எல்லாம் அறிந்துகொண்டார். சார்வபௌமரும் தம் மைத்துனரால் ஸ்வாமிகளைப்பற்றி எல்லா விஷயமு மறிந்தார். ஸ்வாமிகள் தம் பக்தர்கள் வேண்டுமென்று எழுப்பிய ஹரிநாம சப்தத்தினால் மயக்கம் நீங்கி யெழுந்தபோது அவர் பாதங்களில் வீழ்ந்து ஆசீர்வதிக்கப் பெற்ற சார்வபௌமர் ஸ்வாமிகளின் பூர்வோத்தர மறிந்தபின் சிறிது சிறிதே அவரைப் பற்றி தமக்குண்டாகிய அதிசயமும் பக்தியும் சூரியன்முன் நின்ற பனிபோற் பறந்துபோகவிட்டார்.

அஃதன்றியும் அன்றையதினம் சார்வபௌமர் கோபீநாதருடன் ஸ்வாமிகளைப் பற்றி சில வார்த்தைகள் பேசி யவரை நிந்திக்கவும் ஸ்வாமிகளிடம் தமக் குண்டாய நம்பிக்கையாலும் பக்தியா

னும் கோபீநாதருக்கு கோபம் பிறந்தது. அப்போது ஸ்வாமிகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய அவதாரமே யாகையால் அவரைப் பற்றி குறைகூறுதல் தேவ தூஷணமாகும் என்று கோபீநாதர் சொல்லவேண்டிய தாயிற்று. சார்வபௌமருடைய சிஷ்யர்கள் முன்னரே இவ் வாக்குவாதம் நேர்ந்ததால் அச்சமயம் அவர்களே கோபீநாதரைக் கேலிசெய்ய வாரம்பித்து, "பண்டிதரே! அத்துறவியார் ஒரு அவதாரம் என்று நீர் சொல்வதெப்படி? நீரே அதை நிரூபிக்கவேண்டும். முதலில் உமது கொள்கைக்கு ஆதாரமெங்கே? பிரமாணமேது? எப்படி உதகரிப்பீர்? வெகு அதிசயமாய் இருக்கின்றது" என்றனர். கோபீநாதர் தாம் ஸ்வாமிகளைப் பற்றி யறிந்துள்ள பெருமையை இவ்வாறு தர்க்கித்தற் கிடமாகும்படி எடுத்துப் பேசிவிட்டது ஒரு தவறு என் றுணர்ந்தவராய் பின்வாங்க மனம் பொறுமல் "பண்டிதரே! அச் சன்னியாசியாரைப் பற்றி நீர் தவறி நடந்து இடர்ப்படா வண்ணம் நான் உண்மையை வெளியிட்டேனே யன்றி வேறில்லை. அவர் பால்யர் என்று மோசம் போகவேண்டாம்; காலங் கடந்த சர்வேஸ்வரனே யவர்; அதனைநான் அறிந்திருக்கிறேன்; உங்களுக்கோ இன்னும் தெரியாது; ஆனால் வெகு சீக்கிரம் நீரும் உண்மை யறிவீர்" என்று சொல்லினர்.

இந்த வாக்குவாதத்தினால் ஸ்வாமிகளிடம் இருந்த மரியாதை யெல்லா மொழிந்து சார்வபௌமர் அவரைத் தமக்குத் தாழ்ந்தவராகவே நினைத்து அவ்வாறு அவரிடமும் நடப்பாராயினர். ஸ்வாமிகளுக்கு அவர் பலவிதமாய் நற்புத்தி போதிப்பர்; அவர் பால்யராதலால் வழிதப்பி நடக்கா திருக்க முயற்சி பெரிதுமே செய்ய வேண்டு மென்பர்; அவர் பாரதியா ரொருவரிடம் தீக்ஷைபெற்றது இழிவான தென்றும் பாரதி வகையினரைவிட உயர்ந்தவராகிய சரஸ்வதியார் ஒருவரிடம் மறுபடி தீக்ஷை பெறவேண்டு மென்றுஞ் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடு தாமே செய்வதாய் வெகு தயாளமாய்ச் சொல்வர்; அவர் கீர்த்தனம் பாடுவதும் நாட்டிய மாடுவதும் துறவியாய ஒருவர்க் கழகல்ல வென்று சொல்லி யதனை விடப் பணிப்பர். இவ்விதமாய் பேசுவதைப்பற்றி ஸ்வாமிகள் சிறிதும் குற்றமாய்க் கொள்ளாது சார்வபௌமர் எவ்வளவு தம்மை உயர்த்திக் கொண்டு பேசுகிறாரோ அவ்வளவு தாழ்த்திக் கொள்வர்; தாம் தீக்ஷைபெறுகையில் மனநிலைமயங்கி யிருந்தமையால் தவறிப்போயிற் றென்பர்; தாம் ஒன்று மறியாப் பாலனாகையால் தம்மைத் தக்கபடி மாற்றி நல்வழி காட்டி விடவேண்டும் என்று வணங்கிக் கேட்பா. சார்வபௌமர்க்கோ இவற்றினைக் கேட்கப் பின்னு மகங்காரப்பேய் பலமாய்ப் பிடித்தது. அவருக்கு

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றனமென்று களியற்க —சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்"

என்ற வாய்மை யெடுத்துரைத்து அவர் செருக்கை சமனப்படுத்துபவர் எவரு மில்லை. அவர் காலத்தில் அவர் எத்தனையோ பெரும் பண்டிதர்களை வென்று அவர்களை மானபங்கம் செய்து துரத்தி யடித்திருக்கின்றனர். அப்பேர்க் கொத்தவர் பால்யரான ஸ்வாமிகளிடம் துறவிக்குரிய மரியாதை செய்வதே அவர் கவுரதைக்குப் பெருங் குறையாய்த் தோன்றியது.

இவை யெல்லாம் பார்க்க கோபீநாதர் மனம் தாளவில்லை. ஆகையால் ஓர்நாள் ஸ்வாமிகள் தம் மைத்துனரைக் காப்பாற்றினால் அல்லது காப்பாற்றுவதாய் வாக்கு கொடுத்தால் அன்றி ஒரு பிடி யன்னமும் புசிப்பதில்லை யென்று தமக்குள் பிரதிக்ஞை பண்ணிக்கொண்டார். இச் செய்தியை முகுந்தர் அறிந்து ஸ்வாமிகளிடம் தெரிவித்தார். ஸ்வாமிகள் தம்மை சார்வபௌமர் மிக்க அன்போடு நடத்தி வருகிறார் என்றும் அவரைப்பற்றி சிஷ்யர்கள் இப்படி குறை கூறுவது சரியல்ல வென்றும் சொல்லவும், கோபீநாதர், "ஸ்வாமி! எங்களை யிப்படிப் பேசி யேமாற்ற வேண்டாம். என் மைத்துனர் பாண்டித்தியம் மிகப் பெற்றிருப்பினும், சர்வேஸ்வரனை நினையாதும் உம்மை நம்பாதும் பக்தி சிறிதும் அடையாதும் மறு ஜன்மத்திற்கு வினை தேடிக்கொண் டிருக்கின்றார். அவரைக் காப்பாற்றும். அன்றேல், நான் ஒருபோதும் புசியேன்" என்று செப்பினர். ஸ்வாமிகள் புன்னகையுடன், "நீர் கிருஷ்ண பக்தன் அல்லவா? ஸ்ரீகிருஷ்ணன் தன் பக்தனை ஒருபோதும்

கைவிடான். நீரோ வும் மைத்துனரை ரக்ஷிக்கத் தீர்மானித்து விட்டீர். ஆகையால் அவர் ரக்ஷிக்கப்படுவதற் கென்ன தடை?" என்றுரைத்தார். அவர் சிஷ்யர்கள் சார்வபௌமர் ரக்ஷிக்கப் படுவார் என்று திடமாய் நம்பியதால் உடனே "ஹரிபோல்" முழக்கி ஸ்வாமிகளைப் போற்றினர்.

மறுநாள் சார்வபௌமர் ஸ்வாமிகளை நோக்கி, "நீர் வேதம் படித்தறிய வேண்டிய தவசியம். அதை நான் உமக்குப் படித்துக் கொடுக்க கடமைப்பட் டிருக்கிறேன். ஆகையால் நாம் நாளை துவக்கி கோயில் மண்டபத்தில் தினந்தோறும் படித்து வருவோம்" என்று சொல்லவும், ஸ்வாமிகள் "அப்படியே யாகட்டும்" என்று வந்தனோபசாரத்தோடு ஒத்துக்கொண்டார். அவ்வாறே சார்வபௌமர் வாசிக்கவும் ஸ்வாமிகள் எதிரே அவருடைய சிஷ்யர்களுடன் உட்கார்ந்து மௌனமாய்க் கேட்டு வருவராயினார். அப்படி ஐந்தாறு நாட்களானவுடன் சார்வபௌமர் ஸ்வாமிகளைப் பற்றி தம்முள் எண்ணுவார் "நாம் இப் புது சிஷ்யனைப் பற்றி என்ன நினைக்கிறது? அவர் மௌனமா யிருப்பது என்? அவர் நாம் வாசிப்பதை யறிந்து கொள்கின்றாரோ? இவ்வளவு புத்திசாலிப் பார்வை யுடைத்தா யிருப்பதால் அறிந்துதான் மௌனமா யிருக்கவேண்டும். ஒருவேளை நாம் சொல்வன அவர் கருத்தினுக்கும் கொள்கைக்கும் மாறுபடுகின்றனவோ? ஆமாம்! அப்படித்தான் இருக்கவேண்டும்; ஏனெனில் அவர் முகம் மாறுபாட்டுக் குறி யடிக்கடி விளக்குகின்றது. ஆகையால் அதைப்பற்றிக் கேட்டு அறியவேண்டும்" என்று பலவாறு நினைத்தவராய் ஏழாம் நாள் வழக்கம்போல் மண்டபத்தில் கூடியவுடன் "கிருஷ்ண சைதன்யரே! இந்த ஆறுநாளாக நான் வேதங்களைப் படிக்க நீர் கேட்டுவந்தும் ஏன் ஒன்றும் அதைப்பற்றி தர்க்கிக்க வில்லை?" என்று வினவினார். அதற்கு ஸ்வாமிகள் "நீர் என்னைக் கவனித்து வரும்படித் தானே படித்தீர். நான் அப்படியே கவனித்து வந்தேன்" என்றார். சார்வபௌமர், "ஆம், ஆம்; ஆனால் தர்க்கமொன்று மின்றி ஒருவர் எப்படி வாசித்துக் கொண்டேயிருக்கலாம்? நீர் ஏதாகிலும் ஆக்ஷேபனை யிருந்தாலும் உமக்கு

அர்த்தமாகாத விஷயங்களிருந்தாலும், அவைகளைத் தெரிவித்தால் தான் நல்லது" என்று சொல்லவும் ஸ்வாமிகள், "நான் ஆக்ஷேபனை சொல்வதே யசாத்தியம். ஏனெனில் நீர் சொல்லும் வியாக்கியானம் சிறிதும் எனக்கு விளங்கவில்லை" என்றார்.

பண்டிதரஃதேன் என்று வினவவும், ஸ்வாமிகள் "வேதங்கள் அர்த்தம் எளிதில் விளங்குவனவாய்த்தா னிருக்கின்றன; ஆனால் சங்கரர் வேறு தாமே சில கொள்கைகளுடைத்தா யிருந்ததால் அவற்றினுக்கு முரணாகா திருக்கும்படி வேத வாக்கியங்களுக்கு நேரா யர்த்தம் பண்ணாது மாற்றிக்கொள்ள வேண்டிய தாயிற்று" என்று சொல்லினர். பண்டிதர் மட்டிலா வாச்சர்யத்துடன் ஸ்வாமிகளை ஏற இறங்கப்பார்த்து, "ஆஹா! நம்மெதிரில் சங்கராசார்யர் பாஷ்யத்தினுக்குக் குறைகூறுபவரும் ஒருவர் ஏற்பட்டன ரல்லவா? நமக்கெதிர் நிற்கத் தகுந்தவரே உலகத்தில் எவருமில்லை. அப்படியிருக்க, வேதங்களைப் படிக்க காசி நகர்க்குப் போகாத இச்சிறுவன் அல்லவோ நம்முடன் வாதஞ்செய்யத் துணிந்தான்" என்று தமக்குள் எண்ணினவராய், "உம்மையும் நீர் சொல்வனவற்றையும் நான் சரியாய் அறிந்தேனோ என்னவோ தெரியவில்லை. சங்கரர் வியாக்கியானமா உமக்கு அர்த்தமாகவில்லை? ஆஹா! நீர் வெளிக்குப் பசுபோல் வெகுஅடக்க முள்ளவராய்க் காணப்படுகின்றீர். உமக்கு மனதில் மட்டிலா அகங்காரம் குடிகொண் டிருக்கிறது. நீர் வேதங்களை யுணர்ந்தபடி எனக்கு விளக்கும் பார்ப்போம்" என்று கோபாவேசத்துடன் சொன்னார்.

ஸ்வாமிகள் அவர் கோபத்தினைக் கண்டும் அசையாதவராய், "பண்டிதரே; வேதம்படித்து அதன் நேரருத்தத்தினை ஒரு சிறு குழந்தையும் அறிந்துகொள்ளும். ஆனால் சங்கரபாஷ்யம் அந்நேரிய பொருளுக்கு மாறுபட்டதால் அருத்தம் கடுமையாய் பண்ணப்பட்டது. பொருள் நேராய் எளிதில் விளங்குகிறதால் அவ்வியாக்கியானத்தைப் படித்து இடர்ப்பட வேண்டியதென்?" என்று சொல்லி ஒவ்வொரு சுலோகமாய் வேதங்களைச் சொல்லியதற்கு அருத்தமும் உரைப்பா ராயினார். சார்வபௌமர் தமக்கிருந்த கோபத்தினால் ஸ்வாமிகளை அதிகாரம் பண்ணி யடக்கிவிட்

டிருப்பார். ஆனால் ஸ்வாமிகள் ஆரம்பித்த வன்மை யவரைச்சற்று கவனித்துக் கேட்கச்செய்தது. பண்டிதர் மிக்க மனோதர்மம் வாய்ந்தவ ராதலால் ஸ்வாமிகளினுடைய சாதுர்ய வியாக்கியானம் அவர் மனதைக் களிக்கச்செய்தது. ஸ்வாமிகள் முதலில் நேரான அர்த்தம் சொல்லி பின் சங்கரர் வியாக்கியானம் நேரிய தல்லவென்றும் நிரூபிப்பா ராயினார். பண்டிதர்க்கு அவர் சொல்வதில் ஆக்ஷேபணைகள் பல தோன்றின; ஆனால் அவர் அவற்றைச் சொல்லுமுன் ஸ்வாமிகளே அவ் வாக்ஷேபணைகள் நிகழக் கூடியவையென்று அவற்றை விவரித்து அவ்வவற்றிற் கேற்ற சமாதானங்களும் தாமே சொல்லிவந்தார். இவ்விதமாய் தாம் கூறிய சமாதானங்களுக்கு ஆதாரமாக பெருங் கவிஞர் கலைஞர் எழுதியுள்ள சாஸ்திரங்களி னின்று மேற்கோள்களும் எடுத்துரைப்பார். அதன்றியும் வாசாமகோசரமாய் தாம் விவரித்து வருவனவற்றில் ஸ்வாமிகள் தம்முடைய மனோதர்ம விசேஷத்தினால் உவமை யுருவகை முதலிய பல அணிகளும் வினோதங்களும் வெகு லேசாய் அமைத்து தம் பாஷாதிறத்தையும் பிரகாசிக்கச் செய்தார். இதனால் சிறிது சிறிதே பண்டிதருக்கு ஸ்வாமிகளைப் பற்றி மரியாதை தோன்றி தம் நாவெழாது மௌனமாய் பிரமித்திருக்கச் செய்தது. அவர் மனதில் எண்ணுவார்: "இவர் பெரும் பண்டிதராய்த்தா னிருக்கவேண்டும்; இல்லை இல்லை; அதனினும் மேன்மை பெற்றவராய் நம்மைவிடப் பெரியவராய்த் தான் தோன்றுகின்றார். கோபீநாதர் இவரைக் கடவுளே யென்று சொல்வதில் என்ன விபரீதம்? அவர் கடவுளரே யல்லராயின் பிரகஸ்பதியாய் இருக்க வேண்டும். ஆஹா! என்ன வித்தை! என்ன சொல்வன்மை! என்ன சக்தி! என்ன மனோதர்மம் வாய்ந்தவ ரிவர்!" என்று பலவாறு எண்ணினவராய்க் கடைசியில், "ஸ்வாமீ! நீர் வேதமாய ரென்று நான் அறியவில்லை. வேதமே யுமக்கு அரிச்சுவடியா யிருக்கின்றது. இன்று நீர் செய்த தோ ரற்புதம். வேதத்தின் அர்த்தத்தினையே நீர் மாற்றி விட்டீர்" என்று பெருமை பேசுகையில், ஸ்வாமிகள் நடுவில் "பண்டிதரே, வேதங்கள் ப்ரேமை பக்தியை பிரதிபாதிக்கின்றன வென்பதில் என்ன விபரீதம்? முனீஸ்வரரும் யோகீஸ்வரரும் பக்தியே நாடியிருக்கின்றனர்" என்று சொல்லி ஸ்ரீமத் பாகவதத்தி லிருந்து ஒரு ஸ்லோகம் மேற்கோளாய் எடுத் துரைத்தனர். அப்போது சார்வபௌமர் அந்தக் கவியினை விளக்கி யர்த்தஞ் சொல்லும்படி கேட்டார். ஸ்வாமிகள், புன்சிரிப்புடன், "நான் சொல்கின்றேன்; நீரே முதலில் வியாக்கியானஞ் சொல்லும் கேட்போம்" என்று சொல்லவும், பண்டிதர் வேத வியாக்கியானத்தில் தோல்வி யடைந்ததனால் உண்டாகிய மானக்குறைவை ஒருவாறு இந்த கவிக்கு வியாக்கியானஞ் சொல்லியாகிலும் மாற்றிக் கொள்ளலாம் என்று நம்பியதால் கொஞ்சம் சந்தோஷத்துடன் தந் திறத்தினையெல்லாங் காட்ட வாரம்பித்தார்.

சமஸ்கிருத பாஷை சுபாவமாய் பதங்களைப் பலவகையாய்ப் பிரித்து அப்படி பிரிக்கப்பட்ட தனிப் பதங்களுக்குரிய பல அர்த்தங்களாலும் ஓர் கவிக்கு சொல்வன்மையோடு கூடிய புத்திமான் அவ்வன்மைக்குத் தக்கபடி எண்ணிலா வுரைகள் கற்பித்துச் சொல்ல இடங்கொடுக்கக் கூடியது என்று எல்லாருக்குந் தெரிந்த விஷயம். அதனாலேயே சிற்சில நூற்களுக்கு பல வியாக்கியானங்கள் பலவிதபொருள்கள்செய்யப்பட்டிருக்கின்றன. அதனாற்றான் சார்வபௌமர் அப்போது தமது அபார கல்வித் திறத்தினை யந்த சுலோகத்தினுக்குப் பொருள் பலவகையாய்க் கூறப் பிரயோகித்தார். அப்படியே அவர் ஒன்பது தனி யுரைகள் கூறினர். அவற்றினைக் கேட்ட ஸ்வாமிகளும் அவர் திறத்தினை வியந்து பேசிப் பின்னர், "ஆனால் நீர் சொல்லிய உரைகள் ஓர் பாஷாவல்லவன் உரைக்கத் தக்கனவேயே தவிர ஞானிகள் அல்லது பக்திமான்கள் சொல்வனவல்ல. அக்கவி பாடிய வாசிரியர் வேறுவகை யுரை கருதியே அவ்வாறு பாடியிருக்க வேண்டும். அவற்றினை என்னால் விவரிக்க முடியுமோ பார்க்கலாம்" என்று சொல்லி அவர் சொல்லிய ஒன்பது உரைகளைச் சிறிதுங் கவனியாது விட்டுத் தாம் நூதனமாய்ப் பொருள் சொல்வாராயினார். அப்போதே பண்டிதருக்கு கொஞ்சம் ஆயாசம் தோன்றியது. முன்னிகழ்ந்த வினோதத்தினால் தம்முடைய மேலான கல்வித்திறனைப் பற்றி யிருந்த நம்பிக்கை முற்று மொழிந்து போய் எதிர் நின்ற சன்

னியாச பால்யர் மனதினால் நினைக்கக்கூடிய வெல்லா அற்புதங்களையும் விளைவிக்கத் தக்க பாண்டித்திய முடையவர் என்று நினைக்க வேண்டியிருந்தது. ஆகையால் நூதனமான ஒரு அர்த்தம் சொல்லி முடித்தவுடனே அவ்வுரை தாம் கூறிய வுரைகளுக்குச் சிறிதும் சம்பந்தமில்லா திருத்தலும் பிரேமை பக்தியைப் பற்றி ஸ்வாமிகளின் கொள்கையையே ஸ்தாபித்தலும் பார்க்க பண்டிதரின் ஆச்சர்யம் சொல்லத் தரமன்று. அதனால் அவர் "ஸ்வாமி! நீர் வேதங் கற்றிருப்பது மன்றி சமஸ்கிருத பாஷையிலும் மிக்க பாண்டித்தியம் பெற்றிருக்கின்றீர்" என்று சொல்லிப் புகழ்ந்தார்.

ஸ்வாமிகளோ அவ்வாறு தம்மை புகழ்ந்து பேசியதை கவனியாது இரண்டாவது மூன்றாவது அர்த்தஞ் சொல்லினர். அவர் தம்மில் விளக்கிய சக்தி கேவலம் ஒரு மனிதன் பெற்றிருக்கக் கூடியதன்று. ஏனெனில், ஒருசமஸ்கிருத ஸ்லோகத்திற்கு அப்பாஷா வல்லவ ரொருவரால் பலவித வுரை கூறப்படுவதில் விநோதம் ஒன்றுமில்லையேனும், அந்த ஸ்லோகம் முதற்றர வித்துவா னொருவரால் ஒன்பது அர்த்தம் பிழிந் தெடுக்கப்பட்ட பின் இன்னொருவர் பிழிவதற்கு அதில் சத்தெப்படி யிருக்கும்? மேலும் ஸ்வாமிகள் தாம் அந்த ஸ்லோகத்தினுக்குப் பொருள் கூறவேண்டி யிருக்கும் என்று முந்தியே படித்து வந்தாரில்லை. அவர் தாம் தற்செயலாய் உரைத்த ஸ்லோக மாகையால் அவர் விளக்கிய திறமும் இயற்றிய விநோதமும் எம்மால் விரிக்கத் தரமன்று. அப்படியே ஸ்வாமிகள் அர்த்தங்கள் சொல்லிக்கொண் டிருக்கையில், பண்டிதர் அளவிலா ஆச்சர்யத்தால் பிரமித்தவராய், "ஹரி! ஹரி! இது மனிதர் செய்யும் காரியமன்று. அவர் பிருகஸ்பதியாய் மட்டு மிருப்பினும் நான் வாக்குவாதஞ் செய்யத் துணிவேன். ஆனால் அதைவிட உயர்ந்தவர்போல் காணப்படுகிறார். அவர் சரஸ்வதியோ! அன்றி அவர் நாதரான ஸ்ரீகிருஷ்ணனோ!" என்று பலவாறாய் தம் மெண்ணத்தினை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

ஸ்வாமிகள் நிறுத்தாமல் பின்னும் பின்னும் புதிய அர்த்தங்கள் சொல்லிக்கொண்டே யிருந்ததால் சார்வபௌமருக்கு பிரமை

அதிகமாய்த் தோன்றி பதினெட் டர்த்தங்கள் * சொல்லி முடிந்தவுடன் எழுந்து அவர் பாதங்களில் விழுந்து பணிந்து, "ஐயரே! உமக்கு நான்செய்த அபசாரத்தினை மன்னிக்க வேண்டும். இப்புவியிற் பிறந்தோர் எவரும் உமக்கு நிகராகார் என்ற உண்மையறியாது உம்மை எனக்குத் தாழ்ந்தவ ரென்று கொண்டு மோசம் போனேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்," என்று மிக விநயமாய்க் கேட்டனர். ஸ்வாமிகள் தமக் கேதாவது இன்னுரை பேசி யேக்கம் நீக்குவார் என்று எதிர்பார்த்த சார்வபௌமர் அவ்வாறு உரைகளே ஒன்றும் வராதிருந்தமையால் தலைநிமிர்ந் தூற்று நோக்கினர்; விநோதக் காட்சி கண்டனர்; மதி விண்டனர்; தரை வீழ்ந்தனர். ஏனெனில், ஆங்கு ஸ்வாமிகள் மறைந்து விட்டனர்; அவர்க்கு பதிலாக சாக்ஷாத் எம்பெருமான் அறுகரங்களுடன் விளங்கித் தம் அரியகாட்சி தந்தனர்; இரு கரங்களில் வில்லும் அம்புந் தாங்கித் தாம் துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாய் சக்கரவர்த்தித் திருமகனாராய்த் தோன்றிய உண்மையையும், மற்றிரு கரங்களில் தீங்குழல் தாங்கித் தாம் அன்புருக் கோலமும் அருட்பெருந் தகைமையும் கருணையஞ் சோதியும் இனிய தீஞ்சொற்களும் வாய்ந்து ஸ்ரீகிருஷ்ணனாய் விளங்கிய வாய்மையையும், மற்று மிருகரங்களில் தண்டு கமண்டலங்கள் தாங்கித் தாம் ஜீவராசிகளிடம் அன்பை யிரக்க கௌராங்க ஸ்வாமியாய் அவதரித்த மாண்பினையும் சங்கையிற் படிந்த தம் பக்தனுக்கு ஒருங்கே விளக்கினர்.

பண்டிதர் மயக்கம்நீங்கி யெழுந்தபோது தம்மைப் பால்ய சன்னியாசியார் தட்டி யெழுப்புவதைக் கண்டு ஆச்சர்யங் கொண்டு நாலாபுறத்திலும் பயனின்றி விழித்துப்பார்த்து "ஐயோ! அவர் எங்கு போயினர்?" என்று கூவினார். ஸ்வாமிகள் அவர் வினாவினைச் சிறிதும் கவனியாது, "நாழிகை யாயிற்று. வீட்டுக்குப் போகலாம் வாரும்," என்று சொல்லி யழைத்துப் போயினர்.

---

* ஸ்வாமிகள் தடைசெய்யப் படாதிருப்பாராயின் இன்னும் பல்வகையர்த்தங்கள் விரித்திருப்பார் என்பதற் கையமில்லை. பின்னொரு காலத்து அவர் அந்த ஸ்லோகத்தினுக்கே அறுபது அர்த்தம் கூறியிருக்கின்றாராம். இன்னும் ஸமஸ்கிருத பண்டிதரால் அவ்வியாக்யானம் அரியதாயும் விநோதமாயு மிருக்கின்றதாய், கொண்டாடப் படுகிறதாம்.

பண்டிதர் அற்றைநாள் முழுவதும் நம்பிக்கையும் ஆசங்கையும் மாறி மாறித் தோன்றினதால் மிக வருந்தினர். ஒருவேளை "ஆகா! என்ன நமது பாக்கியமே பாக்கியம்! அவதாரம் என்று பக்தர்கள் சொல்வதில் கொஞ்சமேனும் நம்பிக்கை யின்றி வீண் குதர்த்தங்களில் வாணாளைக் கழித்து வந்த பாவியாய எனக்கு மன்றோ ஜகந்நாதனுடைய அருள் கிடைத்தது. எனக்கு பரமேசனே யன்றோ காட்சி தந்தார்; நம்பிக்கை யுண்டாக்கினார். இனி நான் காப்பாற்றப் படுவதிற் றடை யுண்டோ?" என்று நினைத்து சந்தோஷ மடைவர். ஆனால் மற்றும் ஓர்வேளை, "நான் கண்ட காட்சி மாயமாய் இருக்கலா மன்றோ? ஆனால் அந்த துறவியார் சங்கர பாஷியத்தினைப் பிழையென்று ரூபித்ததும் வேதங்களுக்கு புதிய வுரை கூறியதும் பாகவத ஸ்லோகத்தினுக்கு பலவுரை விவரித்ததும் எப்படி பொய்யாகும்? மாயமாகும்? ஆகையால் ஸ்வாமிகள் அவதார புருஷராய்த் தானிருக்க வேண்டும்; அவரை நான் இகழ்ந்தேனே! ஐயோ! அவரை என் சிஷ்யர் முன் அவமதித்துப் பேசி விட்டேனே. என்ன அபராதஞ் செய்தேன்! ஸ்வாமீ! என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று எண்ணி ஏங்குவார்.

இப்படி யவ்விரவைக் கழித்து பண்டிதர் காலைப்பொழுதில் சற்று அயர்ந்தார். ஸ்வாமிகள் வழக்கம்போல் அதிகாலையில் துயிலெழுந்து காலைக்கடன் கழித்து சன்னிதிக்குட் சென்று திருமாலை பணிந்து பிரசாதம் கொஞ்சம் பெற்றுத் தம் முந்தானையில் அதனை முடிந்து பின் திரும்பி பண்டிதர் வீட்டுக்கு வேகமாய்ச் சென்றார்; அவர் நித்திரையினின்று மெழுந்திருக்க வில்லை; ஆதலால் அவர் பள்ளியறைக் கதவைத் தட்டினார். பண்டிதர் நித்திரை தெளிந் தெழுந்து வந்து ஸ்வாமிகளின் அடி வணங்க, அவர் வழக்கம்போல் "நீர் எம்பிரானிடமே உமது ஆத்துமாவை அர்ப்பணம் பண்ணுவீராக!" என்று ஆசிர்வதித்துப் பின் தம் முந்தானையிலிருந்த பிரசாதத்தை யெடுத்து அவர் கையில் அதனை வைத்து, "இது ஜகந்நாதர் பிரசாதம்; அருந்தும்" என்று சொன்னார். பண்டிதர் நித்திரையி னின்றும் விழித்தெழுந்து காலைக் கடன் தீர்க்காது முக சுத்திகூட செய்யாதிருந்ததால் பிரசாதத்தினை யுட்கொள்ள சிறிது மயங்கினார். ஆனால் ஸ்வாமிகள் சொல்லினுக்கு மாறி நடத்தற்குங் கூடாமல் "பிரசாதம் எவ்வேளையில் எக்காரியஞ் செய்கையில் எவ்விடத்தில் அகப்படினும் அதனை உடனே தடையின்றி அருந்தலாம்" என்று விதி யிருக்கிறது என்று சொல்லி அப் பிரசாதத்தினை யுட்கொண்டார். அக்கணமே தன்னை மறந்து விட்டமையால் தரையில் வீழ்ந்தார்; பின் ஸ்வாமிகளால் ஸ்மரணை கிடைத்து எழுந்தார். ஸ்வாமிகள், "நான் இன்றே இவ்வுலகினை வென்றேன்; இப்போதே விண்ணுலகினை யடைந்தேன்; இக்கணமே என் விரதம் நிறைவேறியது; தாபம் தலை யோடியது. ஏனெனில், பண்டிதரில் முதல்வரான நீரே உலக ஆசாரங்கட்கும் நடைகட்கும் உமக்கு மேற்பட்டிருந்த பிணைகளைக் கட்டறுத்தீர். இன்று எம்பிரானும் உம்மை தம் மன்பின ராக்கினர்" என்று சொல்லிவிட்டு சார்வபௌமரைக் கட்டியணைத்தார். அதனால் பண்டிதர்க் குண்டாய புளகமும் அத்யானந்தமும் செப்பத்தர மன்று. அவர் மெய்ம்மறந்து ஆடினார். அதனாலேயே அவருக்கு பக்தி தோன்றியது என்று சொல்லலாம்.

காண்டாமிருகம் ஒன்று நடனஞ் செய்தது என்று சொல்வதை நம்பினாலும் நம்பலாம்; அத்வைதியா ராகியும் சிஷ்யவர்க்கங்கள் விசேஷமாய்க் கொண்ட பண்டித ஸ்ரேஷ்டராகியும் அரசனுக்கு இரண்டாவதான நிலைமையி லிருந்தவரான சார்வபௌமர் நடித்தார் என்று சொல்வதை யாரும் நம்புவது கஷ்டமாய் இருந்தது. ஆனால் ஜகத் காரணரான சர்வேஸ்வரன் விளைக்க அதுவும் அரியதாமோ?

ஸ்வாமிகள் மற்றவர்களை பக்திமான்கள் ஆக்கின விதமும் பண்டிதரை மாற்றிய வகையும் தம்முள் எப்படி ஒற்றுமைப்படுகின்றன, எவ்வழி வேற்றுமைப்படுகின்றன வென்று கவனிக்க வேண்டிய தவசியம். எவ்வெவரை எவ்வெவ்வகையால் பக்தராக்க வேண்டிய தின்றியமை யாதோ அவ்வவ்விதமே யனுசரித் திருக்கின்றார். சிலரை தமது திருஷ்டியாலும் சிலரை வெறும் ஸ்பரிசத்தாலும் வேறு சிலரை ஆலிங்கனஞ் செய்தும், மற்றுஞ் சிலரை நற்போதனையாலும் தர்க்கத்தினாலும் பக்தராக்கி

விட்டவர் சார்வபௌமரை மாற்ற கஷ்டம் பெரிதுமே கொண்டார். தமக்கு நிகரில்லை யென்ற வாணவம் அப்பண்டிதருக்கு தலைமட்டு மேறி யிருந்ததால் முதலில் அதனைப் போக்கவேண்டி யிருந்தது. ஏனெனின், அகங்காரம் குடிகொண்டிருக்கு மிடத்து குடிவெறி மதவெறி காமவெறி பித்தவெறி முதலிய அவஸ்தைகள் ஏதேனு மொன்றிற் படிந்திருக்கு மாப்போல் வேறெந்த விதமான புதுக் கொள்கைகளுந் தோன்றுதல் அசாத்தியம். ஆகையினாற்றான் ஸ்வாமிகள் தாம் அவரைவிட பன்மடங் கதிக பாண்டித்தியம் பெற்றவராய் விளங்கவேண்டி யிருந்தது. அதன் பின்னர் அவர் அவதாரத்தின் உண்மையில் சற்றும் நம்பிக்கை யின்றி வருந்தியவரானதால் ஸ்வாமிகள் தாமே அவதாரபுருஷ ரென்று தம் காட்சி கொடுத்து திவ்யமாய் அவ் வுண்மையை ஸ்தாபித்து நம்பிக்கையு முண்டாக்க வேண்டி யிருந்தது. ஆனால் வெறும் நம்பிக்கையால் மட்டும் ஆத்தும லாப மொன்றுங் கிடைக்கா தாகையால் பக்தி யுண்டாவதற் கேற்றபடி பின்னும் ஸ்வாமிகள் முயல வேண்டிய தாயிற்று. பக்தி ஜனித்தற்கோ மனத் தூய்மையும் பரிபக்குவமும் பக்தி செய்யப்படுபவருக்காக இவ்வுலகினை முற்றுந் துறக்கத் தயாராக விருக்கும் பண்பும் அமைந்திருக்க வேண்டும். ஆகையால் ஸ்வாமிகள் பிரசாதத்தினைக் கொணர்ந்து அதிகாலையில் பண்டிதரை யெழுப்பி யதைக் கொடுத்தனர். அதனால் கண்ணனை யடையத் தயாராயிருத்தல் விளங்கியது; பக்தியும் பிரேமையும் தோன்ற விடங் கொடுத்தது. கடைசியாய் ஸ்வாமிகள் அவரைக் கட்டித் தழுவியதே பக்தியை உண்டாக்கிற்று. பக்தி ஜனித்தற் கறிகுறியே அவர் புளகமும் கண்ணீரும் நடனமும்.

அச்சமயம் கோபீநாதருடைய ஆனந்தம் ஓரளவின் பாற்பட்டதன்று. அவர் தம் மைத்துனருக்கு வேடிக்கையாய் இடித்துக் காட்ட வெண்ணி, "பண்டிதரே! இப்பால சன்னியாசியாரைத் திரும்பவும் சரஸ்வதி மடத்தாரால் தீக்ஷை பெறுவிக்க வேண்டிய சமயம் வந்துவிட வில்லையா? அச்சிறுவர் காமகாதிகளுக் கிரையாவது எளி தன்று? நீர் அவருக்கு வேதம் எம்மட்டும் கற்றுக் கொடுத்தீர்?" என்று சொல்லவும், பண்டிதர் நகைத்து

"கோபீநாத்! உம்மாலேயே நான் தன்யனானேன். ஸ்வாமி நான் உம்முடைய பந்து என்றதாலேயே என்னை யாட்கொண்டாரே தவிர வேறு என்னில் எவ்வித நற்குணமேனு முளது என்றதால் அன்று," என்று போற்றிப் பேசினர்.

சார்வபௌமர் அன்று தொட்டு ஸ்வாமிகளின் ஆப்த சிஷ்யராய் விளங்கினார்; ஸ்வாமிகள் அறுகரங்களுடன் தோன்றிய அருட்கோலத்தினை ஜகந்நாதர் கோவிலிலேயே நிருமித்து வைக்க அரசனிடம் அனுமதி பெற்றார்; அஃதன்றியும், ஸ்வாமிகள் மீது நூறு ஸ்லோகங்கள் அடங்கியதோர் பாமாலை பாடி யருளினார்.

இருபதாவது அத்தியாயம்.

தக்ஷணப்ரதேச விஜயம்.

ஸ்வாமிகள் பூரியிலேயே பின்னுஞ் சில நாளிருந்து தாம் தென்தேச யாத்திரை செய்து வருவதாய்த் தம் பிரிய சிஷ்யர்கட்குத் தெரிவித்தார். சிஷ்யர்கள் அவரை சந்தோஷமாய்ப் போம்படி சொல்லும் மனத்தரல்லர். அவர்கள் பலவிதமாய் ஆக்ஷேபனைகள் சொன்னார்க ளாதலால், தாம் சிலமாதங்களில் திரும்பி வருவதாயும் இறந்துபோன தம தண்ணனாரான விஸ்வரூபரைத் தேடிக்கண்டு வர ஆவலாயிருப்பதாகவும் சொல்லிப் புறப்பட்டார். அவருடன் செல்ல பல பக்தர் விரும்பி யிருந்தாரேனும் அவர் எவரும் தம்முடன் வரவேண்டிய தில்லை யென்று சொல்லிக் கடைசியில் கோவிந்தரை யழைத்துப்போக ஒத்துக்கொண்டார். சார்வபௌமர் ஸ்வாமிகள் புறப்பட்டபோது அளவிலா ஏக்கம் கொண்டனர்; மூர்ச்சித்து வீழ்ந்தனர். ஸ்வாமிகள் மனந்தாளாது சீக்கிரம் அவரை விட்டுப் போயினர். அலால்நாத் என்னு மூர்வரையில் அவர் சிஷ்யர்கள் அவருடன் சென்று வழிவிட்டனர்.

ஸ்வாமிகள் தந் தமையனாரைத் தேடுதல் வெறும் பேச்சென்றும் உண்மையில் தென்னாட்டாரையும் காப்பாற்ற வேண்டும் என்று தங்கடனாய்க் கொண்டதை நிறைவேற்றுவதே இவ்யாத்திரைக்குக் காரணம் என்று பக்தர் அனைவரும் தெரிந்து கொண்டனர். இத் திவ்விய சரித்திரத்தை அவருடன் சென்ற கோவிந்தரே தாம் கண்காட்சியாய்க் கண்டவாறு எழுதியிருக்கின்றார். ஸ்வாமிகள் சாதாரணமாய் ஓரூருக்குப் போம்போதே அவ்வூர் ஜனங்கள் அவர் வருவதைக் கேள்வியுற்று எதிர்கொண் டழைத்துச் செல்வது இயற்கையா யிருந்தது. ஸ்வாமிகளுடைய பிரதாபம் தாம் போகு முந்தியே சென்றிருந்தது. அந்நகரத்தாரும் அவருடைய திவ்விய ஆகர்ஷண சக்தியால் அவரிடம் இழுக்கப் படுவார்கள்

அவரிடம் ஸ்வாமிகள் “ஹரிபஜனை செய்யுங்கள்” என்று சொல்வர்; உடனே அவர்களுக்கு பக்தி வெகு அற்புதமாய்த் தோன்றும். அவர்கள் ஹரிநாமத்தினைச் சொல்லிக்கொண்டே ஸ்வாமிகளைப் பின்தொடருவார். அப்படி சிறிது தூரஞ் சென்றவுடன் ஸ்வாமிகள் திரும்பி யவர்களைக் கட்டித் தழுவுவார்; அந்த ஸ்பரிச தீக்ஷையின் மகிமையால் அவரில் ஒவ்வொருவரும் பல்லோருக்கு அத்தீக்ஷை நிறைவேற்றத் தக்க சக்தி பெறுவார்; அவரைத் திரும்பிப் போய் ஜனங்க ளெல்லாருக்கும் ஹரிநாமத்தின் மகிமையை யறிவித்து அதனைப் பரவச்செய்யும்படி பணிப்பார்.

ஸ்வாமிகள் தம் வழியில் குஷ்டரோகியான வாசுதேவரை யாலிங்கனஞ் செய்தார். அப்பக்திமான் ஸ்வாமிகளுடைய பிரதாபத்தினைக் கேள்விப்பட்டு அவரைச் சேவிக்க வேண்டுமென்று ஆவலாய் இருந்த காலையில் ஸ்வாமிகள் இரண்டு மைலுக் கப்பாலுள்ள கூர்ம சன்னிதியில் தங்கியிருப்பதாய்ச் சமாச்சாரம்வந்தது. உடனே புறப்பட்டு அக் கோயிற்குப் போயினர் அப்பெரியர். ஆனால் அவர் அங்கு செல்வதற்குள் ஸ்வாமிகள் அந்நகர் நீங்கிப் போயினார் என்று தெரிந்து “ஆ! ஆ! கிருஷ்ணா! என்னைத்தவிர்த்தாயோ?” என்று கதறி வீழ்ந்தார். ஸ்வாமிகள் அவ் வழுகைக் குரல் கேட்டுத் திரும்பி வந்தனர். குஷ்டரோகியார் தம் ரோகத்தின் இயற்கையால் ஊரைவிட்டு வெளியே வாசஞ்செய்ய வேண்டியிருந்தது. மனிதர் அவரைக்காணின், தூர்நாற்றஞ் சகியாது ரோகம் தொத்துமென்ற பீதியால் துலைதூரம் போவார். அப்படி யிருந்தும், ஸ்வாமிகள் அவரைத் தூக்கி மார்புறத் தழுவினார்; உடனே இருவோரும் தம்மை மறந்தார்; உள்ளங் களித்தார்; புளகங் கொண்டார்; பின்னெழுந்தார். வாசுதேவர் எழுந்தபோது தாம் முற்றிலும் மாறி சுத்த திவ்விய தேஜஸோடு கூடிய உடல்தாங்கி நின்றார்; ரோகம் மாயமாய்ப் போயது.

வாசுதேவர் ஏதோ கர்ம வசத்தால் அப் பெரு வியாதியால் வருந்தினாராயினும் அவர் மிக்க பக்திமான். அவருடைய அளவிலாத ஜீவகாருண்யமும் ஒப்பற்ற மனத்தூய்மையும் சுயநயம் பாராட்டாது கிருஷ்ணனிடம் வைராக்கியமாய் பக்தி செய்தலும்

அவரை மகான் என்று சொல்லின. தம் காலில் ரோகத்தால் ஏற்பட்ட குழிகளில் தம் தசையைத் தின்று பல கிருமிகள் ஜீவித்து நிற்கும். அவற்றிலொன்று தரையில் விழுமாயின், அவர் "அதுவும் ஓருயிரல்லவா? அதற்கு இரையாகிற தசை யில்லாமையால் அது உயிர்விட நேருமே! அந்தோ! பாவியாய் நான் வருந்த வேண்டியிருப்பினும் அச் சிறு கிருமி தன் இருப்பிடத்தை விட்டுப் போய் பரதவிக்க வேண்டியதேன்?" என்ற எண்ணத்தராய் அதனைத் தமது கையினாலெடுத்து தம் காலில் வைத்து விடுவார். இவ்வித விசேஷ கருணையாலேயே அவர் எம்பிரானுக்குச் சொந்தமானார். தம்முடல் பரிசுத்தமான போது அவர் ஸ்வாமிகளைப் பார்த்து, "என்ன காரியஞ் செய்தீர், ஸ்வாமி? நான் ரோகந்தீருதற்கு வரவில்லையே; உம்முடைய திருப்பாத சேவைக்காகவே நான் வந்தேன். என் ரோகம் எனக்கு அடக்கம் என்ற நற்குணம் போதித்தது. அதனால் நான் உம்மை யடையலாம் என்று நம்பினேன். ரோகம் நீங்கி பரிசுத்தனாய்விடின், எனக்கு திரும்பவும் அகங்காரந் தோன்றி என்னைக் கெடுக்கும்" என்று சொல்லினர். ஸ்வாமிகள், "நீர் அப்படியொன்றும் மனச் சஞ்சலம் அடைய வேண்டியதில்லை. எம்பிரான் உம்முடைய கருணையின் வரம் பின்மையும் பக்தியின் தேவத்தன்மையும் கண்டுகந்தே உம்மை யாட்கொண்டார்" என்று அவரைப் போற்றி "வாசுதேவ ரக்ஷகர்" என்ற திவ்ய நாமம் பூண்டு சென்றார்.

ஸ்வாமிகள் தென்னாட்டில் சந்தித்த மனிதரில் முதன்மையானவர் ராமானந்தராய் ராஜர். அவர் பிரதாப ருத்திர ராகிய ஒரிஸ்ஸா அரசருக்கு அடிமையும், அவ் ராஜ்யத்தின் தென் மாகாணத்திற்கதிபதியுமாகி விஜயாநகரில் வாசஞ் செய்திருந்தார். அவர் சாஸ்திர விசாரணை விசேஷமாய் செய்து சார்வபௌமருடன் தத்துவ தர்க்கங்கள் செய்து தாம் பக்தி மார்க்கத்தின் சார்பாய் என்ன வாதித்தும் அவர் அதனை ஒத்துக்கொள்ளாது குதர்க்கஞ் செய்வதைக் கேட்டுமிருக்கிறார். சார்வபௌமர் பக்திமானானபின் அவரைக் கண்டு பேசவில்லை யாகையால் ஸ்வாமிகள் தெற்கே போகப் புறப்படும்போது ராம்ராய் ராஜரைப்பற்றிச் சொல்லி யவரைப் பார்த்தருள வேண்டும் என்று அவர் கோரினார். அக்கோரிக்கையை முன்னிட்டே ஸ்வாமிகள் அந்நகர்க்குப் போய் கோதாவரி நதிக்கரையில் அவ்வரசன் ஒவ்வோர் வேளை சென்று ஸ்நானஞ்செய்யும் துறைக்கருகே உட்கார்ந்தார். ராமானந்தரும் அன்று (ஸ்வாமிகளால் மனதினில் அழைக்கப்பட்டோ, அன்றி தற்செயலாகவோ) ஆயிரம் சனங்கள் புடைசூழ வெகு ஆடம்பரத்துடன் அங்கு வந்து ஸ்வாமிகளைக் கண்டு "இவர் யாரோ பெருந்தவர்போல் தோன்றுகிறது" என்று நினைத்து அவரடி பணிந்தார். ஸ்வாமிகள் கிருஷ்ண நாமத்தினைச் சொல்லும்படி வேண்டிப் பின் "ராமானந்தர் நீர்தாமோ?" என்று வினவினார். அவர் ஆமென்று சொல்லவும், ஸ்வாமிகள் ஓர் "ஹூங்கார"த்துடன் எழுந்து அவரைக் காடாலிங்கனஞ் செய்ததால் அக்ஷணமே இருவரும் மூர்ச்சையாகி வீழ்ந்து கிடந்தனர். ஸ்மரணை யொழிந்ததேனும் பாதி மூடியிருந்த கண்ணிணைகள் தாரை தாரையாய் நீர் பெருக விடுவதையும் அவர்கள் உடல்கள் புளகந் தாங்கி விளங்குவதையும் கண்டு அவ்வரசன் சனங்கள் மனமுருகி பக்திவசப்பட்டனர்.

ஸ்வாமிகளும் அரசனும் சிறிது பொழுதில் மயக்கந் தீர்ந்தெழுந்து ஒருவரை யொருவர் உற்றுப்பார்க்க நின்றனர். ஸ்வாமிகள், "நான் பூரி நகரினின்று புறப்பட்ட காலையில் என் பிரியரான வாசுதேவ சார்வபௌமர் ராமானந்தஸ்வாமி என்ற மஹானைத் தரிசிக்க என்னைப் பணித்தனர். ஆதலாற்றான் நான் இங்கு வந்தேன். உம்மைக் காண்பது இவ்வளவு சுலபமாய் முடிந்ததைப் பற்றி நான் பெருமகிழ்ச்சி கொண்டேன்" என்று சொல்லவே, அவ்வரசர் "என் ஆயுளில் இன்றே சிறந்த நாள். உம்முடைய ரூபத்தையும் சக்தியையும் பார்க்க நீர் ஏதோ வைகுண்டத்திலிருந்து தெய்வகாரியத்தான் வந்தீர் என்று நினைக்கின்றேன். ஆகா! உம்முடைய தரிசனத்தாலேயே என் மனிதரில் உள்ள மூடனும் பாபியும் நாஸ்திகனுங்கூட பக்தியாற் பரவசமாயினர் பாரும். அவர்கள் கண்ணீர் விடுவதும் நாட்டியம் ஆடுவதும் ஸ்ரீகிருஷ்ணனைப் போற்றுவதும் ஹரிநாம மறைவதும் பாரும்" என்று போற்றிப் பேசினர். அப்படி சிலநேரஞ் சென்றபின் ஸ்வாமிகள், "ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றி

உம்முடைய பிரசங்கங்களைக் கேட்க ஆவலா யிருக்கின்றேன்" என்று சொல்லி, அவரை அன்று மாலையில் மறுபடியும் வரும்படி வேண்டினர். ஸ்வாமிகள் ராமானந்தர் வழியாய் ஞானத்தைவிட பக்தி சிறந்ததென்பதும் உலகில் தனவந்தனா யிருப்பினும் இகலோக சுகத்தில் ஈடுபட்டிருப்பினும் கிருஷ்ணபக்தி செய்வதிற்றடையாய் அவையிராது என்பதும் ராதாவின் பிரேமை எல்லாவற்றினும் மேலானது என்பதும் பிரசங்க வாயிலாய் மானிடர் அறியும் வண்ணம் வெளிப்படுத்தினர்.

அன்று மாலை ராமானந்தர் சாதாரண மனிதன்போல் உடுத்துக் கொண்டு ஒரே பணியாளனுடன் ஸ்வாமிகளிடம் சேர்ந்தார். வழக்கம்போல் நமஸ்காரமும் ஆசீர்வாதமும் ஆனபிறகு ஸ்வாமிகள் "ராமானந்தரே! மனிதர் மோக்ஷமடைய வழி எது?" என்று கேட்டார். அரசர் ஸ்வாமிகள் என்ன மதத்தினர் என்றும் இவ்வாறு தம்மை ஏன் வினவ வேண்டும் என்றும் அறியாது சற்று நிதானித்துத் தாம் அதைப்பற்றி அவர்முன் பேசுவது தகுதியன்று என்று சொல்லவும், ஸ்வாமிகள் தாம் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும் மனிதர் மோக்ஷமடையும் மார்க்கத்தினைப் பற்றியும் அவர் உபந்நியாசித்தலைக் கேட்கவே வந்ததால் தம் நம்பிக்கை கெட்டு மனக்குறை கொள்ள வைக்காம லிருக்கும்படி வேண்டினர். ராமானந்தர், "மோக்ஷமடையும் மார்க்கம் எல்லாம் நம் சாஸ்திரங்களில் குறிக்கப் பட்டிருக்கின்ற தாகையால் குருடரும் அவ்வழி சென்று முத்தி யெய்தலாம். மனிதர் தம் பெற்றோர் மதத்தினையே மனசுத்தியோடு அநுசரித்தல் தான் வேண்டியது" என்று சொல்லியவுடனே ஸ்வாமிகள் அவ்விஷயத்தில் பின்னும் ஆழ்ந்து சென்று பேசும்படி கோரினர். ராஜர், "முத்தியடைய வேறோர் வழியும் உளது. சாக்ஷாத்கடவுளை முற்றும் நம்பி 'அவனன்றி யோரணுவும் அசையாது' என்ற திடமனத்தராய் ஒழுகினால், அவர் ஆட்கொண்டு கடைத்தேற்றுவார். அப்படியாய், பெரியார் ஒருவர்

'முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே'

என்று போற்றியதாலும் அதனை யறியலாம்" என் றுரைத்தார்.

ஸ்வாமிகள் திரும்பவும் அவரை பின்னும் ஆழ்ந்து செல்லக் கோரினார். அரசர் யோசித்து, "மனிதர் தாம் நம்பிய கடவுளர்க்காக பெற்றோர் மதத்தினையுந் துறக்கத் தயாராக விருக்கவேண்டும். அதன்றியும் ஞானமும் பக்தியும் கொண்டு கடவுளை வழிபடுபவன் முத்தி யெய்துவான்" என்று கூறினார். ஸ்வாமிகள் "ராமராஜரே! நீ ரிப்படி பொதுவாய்ப் பேசுவது என் தாகத்தினைத் தணிக்கவில்லை. இன்னும் தெளிவானதாயும் மனதினை உயர்த்துவதாயும் ஏங்கி யல்லல்படும் ஆத்துமாவினுக்கு அபயங் கொடுத்து நிம்மதி யுண்டாக்குவதாயும் உம்மிடம் பிரசங்கம் கேட்கவே நான் வந்தேன். ஆகையால் விஷயத்தில் இன்னும் ஊன்றிப்பேச வேண்டுகின்றேன்" என்னவும், அவர் "ஞானத்தைவிட பக்தியே சிறந்தது. ஆகையால் ஞானத்தில் மனதை ஈடுபடுத்தாது பக்தி பெருக ஒழுகுதலே முக்திக்கு வித்தாகும்." என்றுரைத்தார். ஸ்வாமிகள், "நீர் சொல்லிய மூடபக்தியின் விசேஷம் யாது? அதனினும் மேன்மையானது எது?" என்று வினவவும், அரசர், "ஸ்வாமீ! ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் அடிபணியப் பெற்ற சக்கரவர்த்தி ஒருவரின் மனைவி அவரை நேசிப்பதிலும் சாதாரண மனிதன் ஒருவனை அவன் அந்தஸ்துக்கு ஒத்த அவன் மனைவி நேசிப்பது சுத்தமா யிருக்குமல்லவா? ஒரு ஆயர்ச் சிறுமி தன் நாயகனுடைய ஸ்திதி கௌரதை பிரதாபம் வல்லமை ஒன்றுந் தெரியாது அவனை முற்றிலும் நேசிக்கின்றாள்; திடீரென்று அவள் தன் புருஷன் ஒரு பூமண்டல சக்கரவர்த்தி என்றும் தன்னைப்போன்ற அறுகோடி பிராணிகளுக்கு அவன் தலைவன் என்றும் அறிகிறாள். பரிசுத்த மனதுடன் நேசிக்கின்ற அச் சிறுமிக்கு இச்செய்தியொரு பயனும் விளைக்கிறதில்லை. ஓர்வேளை துன்பமே யுண்டாகும்; ஏனெனில் தன் நாயகன் தன்னுடைய சுக துக்கங்களிலேயே ஈடுபட்டிராது தன்னைப்போன்ற அறுகோடி எண்ணினரைப்பற்றி கவனத்தை செலுத்தவேண்டி யிருக்கிறதே என்று அவளுக்கு ஒரு குறை தோன்றும். மேலும் ஞானவான் கடவுளைப் பற்றியும் அவர் குணங்களைப்பற்றியும் தர்க்கித்துக்கொண்டு இடரிற்படுவான்;

ஆனால் பக்தனே எம்பிரானுடைய மேன்மைக் குணங்களை இயற்கையுணர்வினால் அறிந்து அவனிடம் பூரண நம்பிக்கை தோன்ற சந்தோஷிப்பான். பக்தி பாசத்திலும் பலவகை யுண்டு; ஒரு வேலைக்காரன் தன் எசமானனிடம் வைக்கக்கூடிய அன்பு; அதற்கு மேல் ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் வைக்கும் நேசம்; சகோதர வாஞ்சை; (பலராமர் ஸ்ரீகிருஷ்ணனிடம் வைத்தது) நண்பரில் தோன்றும் சிநேகம்; நந்தனும் யசோதையும், ஸ்ரீகிருஷ்ணனிடம் விளக்கிய புத்திரவாத்ஸல்யம் இன்னும் மேலானது; அதனினும் மேலானது நாயக நாயகி சம்பந்தமான காதல்—ருக்மிணி தேவியும் அவள் சக்களத்திகளும் கண்ணனில் வைத்தது; எல்லாவற்றிலும் மேலானது ஒரு பெண் தன் சோரனிடம் வைத்த மோகம். அதனால் அவள் சுயநயம் பாராட்டாது தான் இவ்வுலகத்தில் அவதூறுக் காளாய்ச் சமைவதையும் கவனியாது தன்னுடலையே தானஞ் செய்கிறாள். அவ்விதமாய் எம்பிரானை நேசிப்பதே எல்லாவற்றிலும் சிறந்தது. ராதா ஸ்ரீகிருஷ்ணனிடம் வைத்த காதல் இவ்வுலகில் வேறெங்கும் காண வொண்ணாதது. அக்காதல் மாசில்லாத பரிசுத்தமானது. ராதா தன் நாயகனுக்காக உலகத்தையே துறந்தாள். தன் பதிவிரதா தர்மத்திலும் லக்ஷியம் வைக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணனுடைய சுகமே தனக்கு சுகம் விளைப்பது. அவனைவிட்டுத் தான் வசிப்பது முடியாது. தான் சாகுந் தருவாயிலிருந்தபோதும் அவன் நாமமே உயிரைக் கொணர்ந்துவிட்டது. இருந்தாலும் தான் ஸ்ரீகிருஷ்ணனிடம் ஒன்று பெறவேண்டும் என்று நினைத்ததே கிடையாது. கண்ணனை மதுரையி லிருந்து பிருந்தாவனம் கொண்டு வருவதாய் அவள் தோழியர் சொல்ல அவள் தடுத்து அரசனாய் சுகித் திருப்பவரை யிங்கு காட்டில் துன்புறச் செய்யக் கொணர்வது தகுதி யன்று என்கிறாள். ஆனால் ம[illegible]ரையில் அவரை மனோசுத்தியுடன் நேசிப்பவ ரில்லை யென்று கண்டு அங்கு அவர் மனம் சுகித் திராது; ஆகையால் அவர் இங்கு உள்ளன்பு வைத்தவரிடம் வந்துவிடுவதே நன்றெனத் தேறி அவரை யழைப்பாள்" என்று விஸ்தாரமாய் பிரசங்கித்தார்.

ஸ்வாமிகள் இடையில் ஒரு வார்த்தையும் சொல்லி[illegible]

கத்திற்கு பங்கம் வரவொட்டாது கேட்டு ஆனந்தித்தார். ஸ்வாமிகள் அந்த ராதாவின் நேசத்தையே நன்கு விளக்க வந்தார். ராமராஜர் ஸ்வாமிகளை யுற்று நோக்கி "நீரே அந்த கிருஷ்ணனன்றோ? என்னைக் காப்பாற்ற வந்த நீர் எனக்கு தரிசனம் கொடாது என்னை ஏமாற்றலாமா?" என்று சொல்லி நமஸ்கரித்துப் பின் தலை நிமிர்ந்து பார்த்தார். ஸ்வாமிகள் ஓடிவிட்டார்; அவர்க்கு பதிலாக ராதாகிருஷ்ணர் நின்றுகொண் டிருந்தனர். ராஜர் அக்காட்சி பொறாது மூர்ச்சைகொண்டு வீழ்ந்தனர்.

* * *

ஸ்வாமிகள் வித்தியாநகரில் பின்னும் சிலநாளிருந்து தெற்கே போகப் புறப்படுகையில் ராமராஜரைப்பார்த்து "நான் திரும்பிப் போகையில் இங்கு வருகிறேன். அப்போது நீரும் என்னுடன் பூரிக்குப்போகத் தயாராக விருக்கவேண்டும், அங்கே கிருஷ்ணனைப்பற்றி சதாகாலமும் சம்பாஷித்துக கொண்டிருப்பது எவ்வளவு சுகமாயிருக்கும்!" என்று சொல்லினர். ராமராஜரும் கிருஷ்ணனைப்பற்றி பேசுவதற்காகவே ராஜ்யத்தைத் துறந்து போகத் தயாராக விருந்தார். சார்வபௌமர் பக்தியின்றி தடுமாறியதால் அறுகைக்கடவுள் பிரத்தியக்ஷமாகக் கண்டனர்; ராமானந்தர் பக்திமானாகவே யிருந்ததால் ராதாகிருஷ்ணரைப் பிரசன்னமாய்க் கண்டனர்.

ஸ்வாமிகள் தென் நாட்டினைச் சுற்றிவர இரண்டு வருஷமாயிற்று. அங்கே மஹம்மதீயர் படையெடுத்து வராததால் அந்நாடு யாங்கணும் செழித்து வித்தையில் பல்லோர் பிரவர்த்தித்து அனேகர் மத அபிவிர்த்திக்கும் உழைத்து வந்தனர். ஆகையால் ஸ்வாமிகள் துரிதமாய் யாத்திரை செய்துகொண்டே வழியில் உள்ள முக்கியமான அத்வைத வாதிகளையும் சன்னியாசித் தலைவர்களையும் பௌத்தமதப் பிரவசனர்களையும் நாட்டில்பொதுவாய் ஹிம்சை விளைத்துவரும் கள்ளத் தலைவர்களையும் தாசிகளையும் காப்பாற்றியும் பக்தி பிரேமை யுண்டாக்கியும் சில்லோரைப் பெரிய மகரிஷிகளாகச் செய்தும் அனேக விநோதங்களை யியற்றிச் சென்றனர்.

வித்தியாநகரி லிருந்து ஸ்வாமிகள் **த்ரீமாண்டு** என்ற நகர்

சேர்ந்து ஆங்கு பௌத்த மதத்தலைவரைப் பக்திமா னாக்கினர். துங்கபத்திரா நதி தீரத்தில் **தண்டிராம்** என்ற பண்டிதரை யாட்கொண்டு அவருக்கு **ஹரிதாசர்** என்ற திருநாமமுஞ் சாற்றினர். அங்குநின்று **அக்ஷயபாத்** என்ற ஊரில் சென்றபோது அங்கு ஒரு வர்த்தகன் ஸ்வாமிகள் புலனை முற்றும் வென்ற மஹானோ என்று பரிசோதிக்க எண்ணங்கொண்டு வேசைய ரிருவரை யவரிடம் அனுப்பினார். ஸ்வாமிகள் அந்த மூவரையும் அவ் வியாபாரியின் மனைவியான **கமலகுமாரி** என்பவளையும் காப்பாற்றி யருளினார். அதன்பின் ஸ்வாமிகள் இருபது மைலுள்ள ஒரு காட்டினைத் தாண்டி மூன்னா என்ற நகரில் ஆயிரங்கணக்கா யுள்ள ஜனங்கள் நடுவே நர்த்தனஞ் செய்து அனைவர்க்கும் பக்தி யுண்டாக்குவித்தனர். அங்கிருந்து **வேங்கடம்** சென்று **பூக்ளாவூர்** கள்ளர் தலைவனையுங் கள்ளர்க் கூட்டத்தினையும் ஒருங்கே காப்பாற்றினார். அப்போது ஸ்வாமிகள் மூன்றுநாள் ஆகார மின்றி யிருந்து நாலாம் நாள் கொஞ்சம் பால் அருந்த வேண்டி யிருந்தது.

கிரீஸ்வராலயத்தில் நிஷ்டையிலிருந்த மௌன சாமியாரைத் தட்டி யெழுப்பி ஸ்வாமிகள் பிரேமை யுண்டாக்கி யருளினார். பின்னர் ஸ்வாமிகள் **திருப்பதி** சேர்ந்தார். அங்கே யவரிடம் தர்க்கஞ் செய்யவந்த **மதுரா** பண்டிதர் ஸ்வாமிகளைக் கண்டபோதே உடல் நடுங்கி சமயம் மாறினர். அங்கிருந்து ஸ்வாமிகள் **பாணா-நரசிம்ம** ஸ்வாமி சன்னிதி, **விஷ்ணு-காஞ்சி**, சேவித்துப் பின் **சாந்தி** சேர்ந்து ஆங்கு **சதானந்தபூரி** என்ற அத்வைத சன்னியாசியை யாட்கொண்டார். பின் **சைபள்ளி**, **தஞ்சை**; **சாண்டலு** மலையில் சன்னியாச கோஷ்டிக்குத் தலைவரான **சூரேஸ்வரர்** என்பவரை பக்திமா னாக்கினர்; **புதுக்கோட்டையில்** சிறுவர் சிறுமியருடன் கூத்தாடினார்; அப்போது புஷ்பமாரி பொழிந்ததை நோக்கி யனைவரும் ஆச்சர்யங்கொண்டார்கள்; அங்கே ஓர் வயோதிக அந்தகப் பிராமணன் ஸ்வாமிகளைச் சேவித்தான்; அவன் அக்ஷணமே கண்பெற்று ஸ்வாமிகளை ஊன்றிப்பார்த்து வீழ்ந்து உயிரைவிட்டான்; ஸ்வாமிகள் அவனுக்கு சரம காரியங்களை நிறைவேற்றினார். அங்கிருந்து ரங்கக்ஷேத்ர மாகிய **ஸ்ரீரங்கம்** போய் அங்கே வெங்கடபட்டரென்ற ஒருவர் வீட்டில் மாரிகாலங் கழித்தார். அப்போது பட்டர் குடும்பத்தாரை ராமாநுஜ மதத்தினின்று கிருஷ்ணபக்த ராக்கினர்.

திரிபாத்ரா நகரில் **பார்க்கதேவர்** என்ற தத்துவசாஸ்திரியாரைக் காப்பாற்றி யவரிடம் ஏழுநாள் வசித்துப்பின் ஒருகாட்டினுட் புகுந்து சென்றார். அக்காட்டினைத் தாண்ட பதினைந்துநாளாயின; **கன்னியாகுமரி** கடந்து ஸ்வாமிகள் **திருவாங்கூர்** தேசத்திற் சென்றார். அத்தேசாதிபதி அவர் வரவைக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க விரும்பி அவரை யழைத்து வரும்படி சில மனிதரை யனுப்பினார். ஸ்வாமிகள் வராதது கண்டுப் பின் தாமே புறப்பட்டுச்சென்று அவரடி பணிந்து அவரால் ஆசிர்வதிக்கப் பெற்றார். அங்கிருந்து **ராமகிரி** சேர்ந்து அங்கிருந்த அத்வைத சன்னியாசிகட்கு பக்தி மார்க்கம் போதித்தார். **மத்ஸ்யநாகம்**, **பஞ்சவடி**, **சித்தல்** என்ற ஊர்களைக் கடந்து துங்கபத்ரா நதிக்கரை சேர்ந்து அங்கு **சாந்தபூர்** நகரில் **ஈசுவர பாரதி** என்ற பேர்பெற்ற சன்னியாசியாரைத் தம் வழிப்படுத்தினார். பின் கொடிய ஜெந்துக்கள் நிறைந்த காட்டினைத் தாண்டி **கூர்ச்சரம்**; நதியாநகரினை வித்யாவிசேஷத்தில் ஒத்ததான **பூனா**; அங்கு **தாச்சாரம்** என்ற ஏரிக் கரை யுட்கார்ந்து கிருஷ்ணனைக் குறித்து பிரலாபிக்கையில் ஒரு துஷ்டன் வேடிக்கை பார்க்க வெண்ணிக் கிருஷ்ணன் அவ்வேரியில் இருப்பதாய்ச் சொல்ல ஸ்வாமிகள் ஏரியில் குதித்து மூழ்கிவிட்டார். அப்போது அவர் இறந்து விட்டாரோ என்று பயந்து அனேகர் ஏரியில் மூழ்கி அவரைத் தூக்கி கரை சேர்த்தனர்.

ஸ்வாமிகள் விஜயஞ்செய்ததில் அடுத்த நகரம் **போலேஸ்வரர்** கோவில்; பின் **தேவலேஸ்வரம்**; அப்புறம் **காண்டவ** நகர்; அங்கே "முராரிகள்" என்று பெயர் வாய்ந்த வேசைப் பெண்கள் அக்கோவிலைச் சேர்ந்து கேவலமாய் நெறிகெட்ட வாழ்க்கையிற் படிந்து ஒழுகுவார். அவர்கள் நெறிபிறழத் தொடங்குகையில் தேவதாசியாகின்றமையால் கற்பு நிலையில் நிற்கவேண்டிய தில்லை யென்று போதிக்கப் பட்டதாலேயே அவ்வாறு வேசையர் தொழிலை மேற்கொண்டனர்; ஆகையால் வெளிக்கு மட்டும் சுந்தரமாய் ஆடிப்பாடி வாழ்ந்தனரேனும்மனதுள் மிக்கதம்கேட்டை நினைந்துவருந்துவார்.

ஸ்வாமிகள் சின்னஞ் சிறுவயதினரானதால் அவர்கட்கு இவரைப் பற்றி காதலிக்க நேர்ந்தது. ஆனால் ஸ்வாமிகள் அவர் நிலை நோக்கி மிக்க பரிதாபங்கொண்டு கண்ணீர் சொரிய, அவர்களும் தந்நிலையையுணர்ந்து ஸ்வாமிகள் பாதங்களில் வீழ்ந்து தம்மைக் காப்பாற்ற வேண்டினர். தேவதாசிகளானமையாலேயே கடவுளிடம் பக்தி பண்ணி நெறி பிறழாது நடக்கவேண்டியது அவசியம் என்று அவர் சொல்லினர். அவர்களும் அன்றையதினமே தம் ஹீனத் தொழிலைவிட்டுப் பின் உத்தமிகளானார்கள்.

ஸ்வாமிகள் சோரநந்தி என்ற காட்டினுட் புகுந்து ஆங்கு நவரோஜி என்ற பீல் ஜாதியானான கள்வர்தலைவனைத் தேடிச் சென்றனர். அவர் அங்கு போகப் புறப்பட்டபோதே அநேகர் அத்துஷ்டன் என்ன கொடுமைக்கு மஞ்சான் ஆகையால் அங்கு போகவேண்டாம் என்று சொல்லினர். ஸ்வாமிகள் அதனைக் கவனியாது கள்ளரிருப்பிடம் சென்று அங்கே ஒரு மரத்தடியிற் சாய்ந்து உட்கார்ந்தார். இதை யறிந்த நவரோஜி அவரைப் பிடித்துவரச் சிலரை யனுப்பினான். வந்தவர் என்ன சொல்லியும் ஸ்வாமிகள் செவிகொடாது கிருஷ்ணத்யானத்தில் மூழ்கி யிருந்ததால் திரும்பிப்போய் தலைவனிடம் தெரிவித்தனர். அவன் கோபாவேசங்கொண்டு உருவின கத்தியை கையில் பிடித்து வேகமாய் ஸ்வாமியிடம் வந்து, "கள்ளர் ஜாகையில் சாதுவாகிய உமக்கு என்ன காரியம்?" என்று வினவினான். ஸ்வாமிகள் அவனை யார்வத்துடன் உற்று நோக்கி, "நீர் கள்ளராயினும் உம்மிடம் அளவிறந்த கடவுள் பக்தி யிருக்கின்றதே!" என்றுரைத்தார். ஸ்வாமிகள் தரிசனமே அக் கள்வனைச் சாந்தப்படுத்திற்று. அதனால் ஸ்வாமிகள் அப்படி சொல்லியதை தப்பர்த்தம் பண்ணாமல் கேட்டு "அஃதெங்ஙனம்?" என்று கேட்டான். ஸ்வாமிகள், "உமக்கு கள்ளத்தனம் ஒரு தொழிலாயிருக்கின்றதே யன்றி உமது மனதில் இருக்கும் பக்தி எவர்க்கும் கிடைப்பதரிதே" என்று தாம் திடமாய் நம்பியதாய்க் கூறினார். கள்ளன் "நீர் சொல்வது என்ன? நான் இப்போது இத்துஷ்டத் தொழிலை விட்டு எம்பிரான் சரண் புகுந்தால் அவர் என்னையாட்கொண்டு ரக்ஷிப்பார் என்று சொல்கிறீர்?" என்று கேட்கவும் ஸ்வாமிகள் அதற்குத் தடையொன்று மில்லை என்று பதில் சொல்லினர். அக்கள்ளன் அதனை நம்பினவனாய் "ஆகா! நாம் என்ன மதிகேடனாய்த் திரிந்தோம். நம் வயதோ அறுபதாயிற்று; நமக்கு மனைவி மக்கள் சுற்றமொன்றுமில்லை. நம் முடிவுநாள் இன்றோ நாளை என்னும்படி கிட்டியது" என்று கண்ணீர் சொரியவிட்டு தன் கைவாளை யெறிந்து விட்டுத் தன் குழுவினரை நோக்கி, "உமக்கு நான் இனித்தலைவனா யிருத்தல் ஒண்ணாது. நீர் வேறொரு தலைவனாவது கொள்ள வேண்டும்; இன்றேல் இக்கூட்டத்தினை யொழிக்கவாவது வேண்டும். நான் இப்பெரியோரைப் பணிந்து அவருடன் செல்லத் துணிந்தேன்" என்று சொல்லித் தன்னுடையைக் கிழித்தெறிந்து ஸ்வாமிகளுடன் சென்றான்.

ஸ்வாமிகள் பண்டரபுரம் சேர்ந்தார். ஆங்கு தம் தமையனான விஸ்வரூபர் மறைந்த செய்தியைக் கேட்டறிந்தார். அங்கேயே மகாராஷ்டிர தேசத்தினைத் தம் வழிப்படுத்திய துகாராம ஸ்வாமியும் ஸ்வாமிகளாலோ அல்லது அவர் சிஷ்யரொருவராலோ பக்தராக்கப் பட்டார். அப்புறம் மூல நதிக்கரையி லுள்ள காண்டவ சன்னதி; நாசிக் நகர்; திரும்பவும் பஞ்சவடி; தாமான்; சூரட்; அங்கே அஷ்டபுஜ தேவதைக்கு வழக்கமாய் பலியிடுவதை நிறுத்தினர்; பின் ப்ரோச்; பரோடா; அங்கே கள்வர்தலைவனான நவரோஜி ஸ்வாமிகள் துடைமீது படுத்து உயிர் நீங்கி வைகுந்தப் பதவியடைந்தான்; அவ்வூர் அரசனும் வந்து ஸ்வாமிகளை வணங்கிச் சென்றான்; பின் ஆமடபாத்; கோகா; அங்கே பிரபல்யதாசி ஒருத்தியைக் கண்டு அவளுக்கு பக்தி யுண்டாக்கித் தன் தொழிலையும் அளவற்ற ஆஸ்தியையும் துறந்து ஒரு குடிசையில் வாழ்ந்து கடவுளிடம் பக்தி பண்ணும்படி ஏவினர்; அப்புறம் ஜாப்பரபாத்; சோமநாதபுரம்; ஜூனாகர்; அங்கே கர்ம ரோகத்தால் வருந்திய பார்க்கதேவரைச் சந்தித்து அவர் ரோகத்தினைப் போக்கி அவரை பக்தராக்கினார். அப்புறம் பிரவாஸ நகர்; துவாரகா; திரும்பவும் பரோடா, வித்தியாநகர்; அவ்வூர்க்கு அதிபதியான ராமாநந்தர் ஸ்வாமிகளை மிக்க மரியாதையோடு அழைத்து உபசாரம் செய்தார்,

தாம் முந்தியே ஏற்பாடு செய்த பிரகாரம் அவரை வரும்படி ஸ்வாமிகள் அழைக்க, அரசர் "ஸ்வாமீ! நீர் தென்னாட்டிற்குப் போகப்புறப்பட்டவுடனே நான் என் வேலைக்கு ராஜிநாமா கொடுப்பதாய் பிரதாபருத்ர சக்கரவர்த்திக்கு தெரிவித்தேன். அவர் அதனை ஒப்புக்கொள்ள வில்லை. மறுபடி நான் உமக்கு அடிமையாய் விட்டதாயும் உமதாணையை மீறி நடக்கவல்லேன் என்று எழுதிய தன்பேரில் அவர் எனக்கு விடைகொடுத்தனர், ஆனால் நாமிருவரும் ஒன்றாய் அவரிடம் போகமுடியாது. ஏனெனில் நான் சைன்யங்களுடன் வரவேண்டியிருக்கிறது. ஆகையால் நீர் முதலில் போம். நான் சீக்கிரத்தில் பின்னே வருகிறேன்" என்று சொல்லி ஸ்வாமிகளை யனுப்பினார்.

ஸ்வாமிகளால் தம்வழி கொண்டு வரப்பட்டவரில் முதன்மையாய் அவர் காரியத்தையே அனுஷ்டித்து நன்மை செய்யப் போந்தவர் துகாராமஸ்வாமி, நாராயண ஸ்வாமி, பல்லவா சாரியார், என்பவரே. துகாராமஸ்வாமி பூனா நகரிலிருந்து மகாராஷ்டிர தேசத்தை வைஷ்ணவமய மாக்கிய மஹான்; நாராயணஸ்வாமியோ கூர்ஜ்ஜரம் என்று சொல்லப் பட்ட தேசத்திற்றோன்றி அடக்கத்தில் நிகரின்றி யொழுகினார். அவர் அடக்கத்தின் விசேஷத்தால் தன்னை எவராயினும் பாதுகை கொண்டடிப்பரேல், அவர் சிறிதும் கோபங் கொள்ளாது அப்பாதுகையைத் திரும்பவும் அணியும்படி தாமே எடுத்துக் கொடுப்பார்; பல்லவாசாரியாரோ பம்பாய் ராஜதானியில் கொஞ்சம் அபகீர்த்திக் காளாயினாரேனும், பெரிய மஹான் என்பதிற் சந்தேகமில்லை; அவருடைய சிஷ்யர்கள் மதவிஷயத்திற் செய்த குறைகளுகு அவர் பேர் கெட்டது.

இருபத்தொன்றாவது அத்தியாயம்.

பிரதாபருத்ரர் இரக்ஷகம்.

பிரகாசானந்தசரஸ்வதி யாட்கொள்ளப்படல்.

நதியா விஜயம் — ஸ்வாமிகள் அந்தர்த்தானமாதல்.

ஸ்வாமிகள் மறுபடி பூரிநகரை யடைந்தபொழுது அவர் சிஷ்யர்கட்கும் பக்தர்கட்குந் தோன்றிய அகமகிழ்ச்சிக்கோ ரளவில்லை. அந்நகராரில் முன் ஸ்வாமிகளைப் பார்க்காதவர்கள்கூட பக்தர்களுடன் ஒருநாட் பிரயாணதூரம் வந்து ஸ்வாமிகளை யழைத்து உபசரித்தார்கள். ஸ்வாமிகள் அந்நகரில் சன்னதிக் கருகே ஒரு குடிசையில் வசித்தனர். அங்கு அவரைப்பார்க்க சுற்றுப் பிரதேசங்களினின்றும் எண்ணிலர் வந்தனர்கள். அவர் பிரதாபமும் இந்தியா முழுவதும் பரவி விட்டிருந்தது. ஓரிஸ்ஸா தேசத்து அரசரான பிரதாபருத்திரரும் தம் சார்வபௌமரும் ராமானந்தரும் ஸ்வாமிகளைப் பற்றி நம்பிக்கை வைக்கவேண்டியிருந்தது; சார்வபௌமரும் ராமானந்தரும் அவரைப்பணித்தது அந்நம்பிக்கையை ஸ்திரப்படுத்திற்று; ஸ்வாமிகளின் பிரிய சிஷ்யர்களான அவர்கள் ஸ்வாமிகளைப் பணிய அரசருக்கு விடைதரவேண்டும் என்று மன்றாடிக் கேட்டனர். ஆனால் ஸ்வாமிகள் எளிதில் வசப்படுபவ ரல்லர். ஏனெனில் பிரதாபருத்திரருக்கு தம் ராஜ நிலைமையால் ஏற்பட்டிருந்த அகம்பாவத்தினைப் போக்கவேண்டியிருந்தது. ஸ்வாமிகளைப் பார்க்க வேண்டுமென்ற ஏக்கம் பெரிதே தாங்கி தூக்கம் முற்றும் நீங்கி வருந்தினாரேனும் ஸ்வாமிகள் அவரைப் பார்க்க சம்மதிக்காததால் அவர், "ஸ்வாமீ! பாபிகளை அனுக்கிரகிக்க வந்த நீர் பாபிகளில் முதன்மையான என்னை நிக்கிரகித்தல் தகுதியோ? மருட் படிந்துழலும் மாந்தரை அருள்தந்து காத்தல் வேண்டி அவதரித்த நீர் அம்மாந்தரிற் கடையனாய் அகம்பாவம் தலைதேக்கி நின்ற அடியனை

கடைக்கணியாது நீத்தல் முறையோ? என் எதிர் நிற்கவொட்டாது அடிமையாய் நடத்திய ராமாநந்தர் உமக்கு இணைபிரியாத் தோழனாய் விளங்க அரசனாகிய நானன்றோ உம்மடியிணையும் காணா துழல்கின்றேன்! என் துரப்பாக்கியத்தை என்னென்று சொல்வேன்! எவரை நான் அடிமையாகக் கொண்டிருந்தேனோ அவரே ஸ்வாமிகளிடம் எனக்காக சிபார்சி செய்யவேண்டி யிருக்கிறதே!" என்று பலவாறு பேசி வருந்தினர்; அவர் அகம்பாவத்தினை முற்றுந் துலைத்து அடக்கமும் அமைதியும் சாந்தமும் சோகமும் பெற்று நற்கதி பெறப் பாத்திரரானார். பக்திமான் ஸ்வாமியின் அருள் வேண்டுமென்று பிடிவாதமாய் முயல்வானானால் அவனுக்கு அருள் கிடைக்காமற் போகுமா? ஓர் நாள் ஸ்வாமிகள் மெய்ம்மறந்து இருந்தபோது ராமாநந்தர் சொல்லிய பிரகாரம் அரசர் சாதாரண மனிதன்போல் உடுத்துவந்து ஸ்வாமிகளுடைய பாதங்களைத் தம் மடியில் எடுத்து வைத்து பாகவத ஸ்லோகங்களை சொல்லிக்கொண்டே அப்பாதங்களை தம் கைகளால் மெதுவாய் தேய்த்தார். ஸ்வாமிகள் சிறிது சுயநிலை யுணர்ச்சி யிருந்தமையால் அந்த ஸ்லோகங்களைக்கேட் டானந்தித்து ஒரு 'ஹுங்கா' ரத்துடனெழுந்து "அன்பின் மிக்க ஆரியரே! என் செவிக்கின்பம் பயக்க அமுதம் பொழியும் நீர் யாவர்? துறவியான நான் உமக்குத்தர ஒன்று மில்லாதவன்; ஆகையால் நான் உம்மை கட்டியணைக்கின்றேன்; அதுவே என்னாற்கூடும்?" என்று உரைத்துக்கொண்டே அவரைத் தம் மார்புறத் தழுவினார். அவ்விருவோரும் மெய்ம்மறந்து வீழ்ந்தனர். * * * அனைவரும் அரசரை பாக்கியசாலி என்று போற்றினர். அவரும் ஸ்வாமிகளைத் தாம் எப்போதும் "பிரதாபருத்திர ரக்ஷகர்" என்றபெயர் கொண்டே யழைப்பதாய்ச் சொல்லினர்.

ஸ்வாமிகள் பூரி வந்து சேர்ந்த சமாச்சாரம் நதியாவுக்குதெரிவித்தவுடன் சசிதேவியாரும் விஷ்ணுப்ரியா தேவியாரும் சிறிது தேறினர். அந்த நகர் பக்தர்கள் அனைவரும் ஸ்வாமிகளைப்பார்த்துவரப் புறப்பட்டனர். ஹரிதாசர் மகம்மதிய ஜாதியாரானதால் ஒரிஸ்ஸா தேசத்திற் பிரவேசிக்க தமக்கு உத்தரவில்லை யாயினும்

ஸ்வாமிகளுக்கு அத்தேசத் தரசர் அடிமையாய் விட்டதால் தம் சற்குருவைப்போய் பார்க்க பயங்கொண்டாரில்லை. ஸ்வாமிகளை பக்தர்களை சந்தித்தபோது "முராரி எங்கே?" என்று கேட்டார். சில பக்தர்கள் அவரைத் தேடியழைக்க ஓடினர்: முராரிதாசர் ஸ்வாமிகள் குடிசைக்கருகே களிப்பின் மிகுதியால் மெய்ம்மறந்து வீழ்ந்துவிட்டாராகையால் பின் தங்கிவிட்டார். அவரை ஸ்வாமிகள் கட்டி அணைக்க போம்பொழுது அவர், "ஸ்வாமீ! ஊத்தை நிறைந்த தூர்த்தன், நான்! பாபம்பொதிந்த பாதகன்; அசுத்தக் களஞ்சியம்; அதம ஸ்ரேஷ்டன்; ஆகையால் என்னைத்தொடாதீர். அக்கருணைக்கு நான் பாத்திரனல்ல" என்றார். ஸ்வாமிகள் அவரை பலாத்காரமாய்க் கட்டியணைத்து அதனால் தன்னையே சுத்தப்படுத்திக் கொண்டதாய்ச் சொல்லினர். அந்த பக்தர்கள் அங்கு நான்கு மாதங்களிருந்து ஸ்வாமிகள் ஏவலால்திரும்பி தம் வீடுபோய்ச் சேர்ந்தார்.

ஸ்வாமிகள் நித்யானந்தரை விளித்து "நீர் வங்காளதேசம் போகவேண்டும்" என்று சொல்லவே, அவர், "நாதா! உம்மை விட்டுப் பிரிந்தா? முடியாது. உயிரைவிட்டு உடலென் செய்யும்? நீரெனதாவியன்றோ?" என்று சொல்லி மறுத்தார். ஸ்வாமிகள் வங்காளதேசத்தில்ஜனங்கள் வருந்துகின்றார் என்றும் நித்யானந்தர் ஒருவரே அக்காரியத்தினைச் செய்ய வல்லவரென்றுஞ் சொல்லினர். நிதை ஸ்வாமிகளை விட்டுப் போவதற்கு மனம்வருந்த ஸ்வாமிகள் "நீர் பிரிந்து போவதால் வருத்தப்படுவது நீர் மட்டுமல்ல; நானும் வருத்தப்படுகிறேன். வங்காளத்தில் வித்துவான்கள் நிரம்ப விருப்பதால் அவர் வித்துவ விநோத விளக்கத்தால் லேசாய் வழிப்படுவ தில்லை; அன்பு, பக்தி போன்ற விசேஷ மனோவிகாரங்களாற்றான் வெல்லப் படவேண்டும். நீரே நித்ய ஆனந்தர்; கிருஷ்ணனைப் பணிவதிற் றோன்றும் அகமகிழ்ச்சியைக் காட்டவல்லவர்; மனிதனில் புத்திகோசரந் தவிர வேறொரு பதார்த்தமும் இருக்கிறது என்று ரூபிக்க இயைந்தவர். உயர்ந்தவர்க்கும், தாழ்ந்தவர்க்கும், ஞானிகட்கும், அஞ்ஞானிகட்கும், பக்திமானுக்கும் நாஸ்திகனுக்கும், நல்லவனுக்கும் பொல்லாதவனுக்கும் தாரதம்மியம்

பாராது அனைவர்க்கும் பக்தியை விளைத்து முத்தியை யடையச் செய்வீர்” என்று சொல்லி பன்னிருபக்தர்களை அவருக்கு துணையாய் அனுப்பினார். அவர்கள் நதியாவுக்குச் சென்று பின் வங்காளத்தில் சைதன்ய மதத்தை ஸ்தாபிக்க முயன்றனர். அவர் ஜனங்களை யாட்கொள்வதில் பிரசங்கமுங் கிடையாது; பத்திரிகை பரவச்செய்வதுங் கிடையாது. அவர் பித்தர்போல் தோன்றி தம்மானந்தத்தினை யனைவர்க்கும் வெளிகாட்டி சாத்மீக லக்ஷணத்தே படிந்து தம் அடக்கத்தாலேயே வென்றார். ஜனங்கள்முன் ஸ்வாமிகள் பிரதாபத்தினை யெடுத்துச் சொல்வார்; அவர் அதனை யொப்புக் கொள்ளாவிடின் அவரை நமஸ்கரித்து ஒப்புக் கொள்ளும்படி இரந்து கேட்பர். அப்படியே வங்காளதேசம் முழுவதும் சைதன்ய மார்க்கத்தினை யனுசரித்தது.

மறுபடியும் அடுத்த வருஷத்தில் நதியா ஜனங்கள் ஸ்திரீகளுடன் பூரிக்குப்போய் ஸ்வாமிகளைத் தரிசித்தார்கள். சிவானந்தஸேன் என்ற மஹான் தாமே பூரிக்குப் போய்வரும் பிரயாணிகளுடைய யாத்திரைச் சிலவினை கொடுப்பதாய் ஒத்துக்கொண்டு அத்தருமத்தினை இருபது வருஷகாலமாய் நிறைவேற்றினர். அப்போது வாசுதேவர் என்ற பரிசுத்தர் ஸ்வாமிகளைச் சேவித்து ஒரு வரம்வேண்டுமென்றனர். அவர்சொல்லியது: “கிருபாகடாக்ஷரே! ஸ்வாமீ! உமது அடிமையின் துக்கத்தினைப் போக்க வேண்டும். ஜனங்கள் பாவச் செயல்கள் செய்து மட்டிலாத் துன்பத்தினை அனுபவிக்கின்றார்கள். அப்பாவமெல்லாம் எனக்கு மாற்றி விட வேண்டும். நான் ஒருவன் அப்பாவங்களை யேற்று நரகாவஸ்தை யடைகின்றேன்; உமது புத்திரரான மற்றவர் சுகப்பட்டால் எனக்குப்போதும்” என்று சொல்லவும், அனைவரும் அவரது பக்திசிரத்தைக்கும் கருணை விசேஷத்தையும் புகழ்ந்து வியந்தார்கள்.

இப்படி ஸ்வாமிகள் பக்தி மார்க்கத்தைப் போதித்து வருகையில் காசி நகரில் வசித்த பண்டிதரான பிரகாசானந்த சரஸ்வதி என்ற அத்வைதியார் ஒருவரே ஸ்வாமிகள் மதத்தினை யிகழ்ந்து பேசி ஸ்வாமிகளே மோசக்காரர் என்றும் அவதூறு பேசி வந்தனர். ஆனால் தம் பிரவே[illegible]க்காற்பங்கு பண்டிதப் பெருமை

யடைந்து விளங்கிய வாசுதேவ சார்வபௌமரும் ஸ்வாமிகளை ஒத்துக்கொண்டார் என்று கேள்விப்பட்டபோது ஸ்வாமிகளைத் தாமும் பார்க்கவேண்டும் என்ற அவா தோன்றியது; இருந்தாலும் அவருக்கு மாந்திரீகப் பயிற்சி யுண்டென்றும் அதனால் மனிதரை வென்றுவிடுகிறார் என்றும் தம்மிடம் அந்த சக்தியைக் காட்டி வெல்ல முடியாது என்றும் பேசி வந்தனர். அவர் தம்மனதில் ஸ்வாமிகளை தரிசிக்க வரவேண்டுமென்ற அவாவினால் “காசிநகரைத் தரிசியாது வாழும் மனிதர் மிருகத்தினை யொத்தவரே” என்று பொருள் படும்படி ஒரு சமஸ்கிருத ஸ்லோகம் எழுதி ஸ்வாமிகளுக்கு அனுப்பினார். ஸ்வாமிகள் அந்த மரியாதையற்ற நிருபத்திற்கும் ஒரு பதில் அனுப்பினார்; அதாவது, “அனேக வந்தனம்; எனக்கு நீலாசலத்து ஸ்ரீகிருஷ்ணனே போதும்; ஆகையால் காசிநகர் தரிசிக்கத் தற்காலம் இஷ்டமில்லை” என்பதே. இதற்கு மறுமொழியாய் ஸ்வாமிகளுக்கு ஒரு வசை நிரம்பிய கடிதம் எழுதினார் பண்டிதர்; ஸ்வாமிகள் அதனை லக்ஷயஞ் செய்யாது பதிலும் அனுப்பவில்லை.

ஸ்வாமிகள் முந்தியே தபன்மிஸ்ரருக்குத் தாம் வருவதாய் வாக்களித்து அவரை காசிநகரில் வசித்திருக்கும்படி உத்தரவு செய்திருந்தார். அதை பூர்த்தி செய்யவேண்டியிருந்ததால் பிருந்தாவனம் போகும் வழியில் காசியைச் சேர்ந்தார் ஸ்வாமிகள். அவரைப் பார்க்க சரஸ்வதியாருக்கு அவா விருப்பினும் தாமே போய் அவரைக் காணுதல் தம் கௌரதைக்குக் குறைவு என்று நினைத்ததால் அப்படி செய்யவில்லை; ஸ்வாமிகளும் அவரைப் போய் பார்க்கவில்லை. ஸ்வாமிகள் அவரைச் சந்திக்காமலே பிருந்தாவனம் போய்விட்டனர். இது சரஸ்வதியாருக்கு நிந்திக்கப் பின்னும் இடங்கொடுத்தது; “அவன் நம்மிடம் வர மனந்துணியான்” என்றும்,” “அவன் என்னிடம் வந்து இங்கு தலை காட்டுவானேல், அவன் வள்ளல் வெளியாய் விடுமல்லவா?” என்றும் தம் சிஷ்யரிடம் பேசிவந்தார்.

ஸ்வாமிகள் பிருந்தாவனத்திருந்து திரும்பிப் போகையிற் திரும்பவும் காசி நகரை யடைந்தனர். அதைக்கேட்ட சரஸ்வதி

யார் மனதினில் மட்டும் "இவன் ஓர்கால் நம்மையும் வென்று விடுவனு" என்று ஒரு பயந் தோன்றினும் அதை வெளிக்காட்டாது பேசி வந்தார். அந்நகரில் ஸ்வாமிகளுக்கு பக்தர்கள் அனேகர் ஆனமைகண்டு சரஸ்வதியாருக்கு ஸ்வாமிகளிடம் மாச்சரியம் தோன்றியது. ஸ்வாமிகளுடைய பக்தர்களுக்கு அவர் எப்படியாயினும் சரஸ்வதியாரைச் சந்தித்தால் போதும், அப்போது அத்வைதரான பிரகாசானந்தர் ஸ்வாமிகட்கு அடிமையாய் விடுவார் என்று பேசிக்கொண்டிருந்து "எப்படி இவர்களை ஒன்றே கூடும்படி செய்யலாம்?" என்று யோசித்தார்கள.

புதிதாய் ஸ்வாமிகளின் அடியாரான ஒரு மகாராஷ்டிர பிராமணர் ஓர் நாள் அந்த நகரத்து சன்னியாசிகட்கெல்லாம் விருந்து செய்வதாய்த் தெரிவித்து அனைவரையும் அழைப்பித்தார். அன்று அவ்விடத்திற்கு ஸ்வாமிகளையும் வரும்படி அவரும் மற்ற சில சிஷ்யர்களும் அழைத்தார்கள். ஸ்வாமிகள் விருந்து ஏற்பாடான காரணத்தை யறிந்தவராய் புன்னகை செய்து மௌனமாய் இருந்தார். அவர்கள் யதார்த்தத்தினை விவரித்துச் சொல்லி, "ஸ்வாமி! அவர்கள் உம்மைப் பார்க்கவே யில்லை யாதலாற்றான் உம்மைத் தூஷிக்கிறார்கள். உம்முடைய திவ்ய தேஜஸை ஒருமுறை பார்த்தால் அதுவே அவரை பக்தராக்கி விடும். மேலும் அவர் எங்களை படுத்தும் பாடு சொல்லத் தரமன்று. நீரோ புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் கடந்தவர். நீர் போய பின் அவர் எங்கள் எதிரி உம்மை யிகழ்ந்து எங்களைத் துன்பத்துட் படுத்துவார். ஆகையால் அங்குவந்து எங்களைக் காப்பாற்றும்" என்று சொல்லவே ஸ்வாமிகள் தாம் வருவதாய் ஒத்துக்கொண்டார்.

ஸ்வாமிகள் வருவதாய் கேள்விப்பட்ட பிரகாசானந்த சரஸ்வதியார் மனம் கவலையி லாழ்ந்தது. சன்னியாசிகள் எல்லாரும் ஒரு பெரிய கூடாரப் பந்தலில் கூடினர்; விருந்தினராகிய அவர்கள் மிகுதியாய் உபசரிக்கப்பட்டார்கள். சரஸ்வதியார் எண்ணுவார்: "ஆ! நாமிருப்பது தெரிந்தும் நம்மவர் ஆயிரங் கணக்காய் இங்கு கூடியிருப்பதை யறிந்தும் அவர் இங்கு வரத் துணிந்தது என்ன? நான் அவரை நிந்திப்பது உலகம் அறிந்திருந்தும் அவர் நம்மிடம் வருவது ஏன்?" என்று பலவாறு சிந்தனையில் ஆழ்ந்து இருக்கையில் ஸ்வாமிகள் தம் சிஷ்யரில் நால்வருடன் அங்கு வந்து தலைகுனிந்த வண்ணமாய் அடக்கமே யோருருவாய் விளங்கத் தோன்றி வெளியிருந்த ஜலங்கொண்டு தமது பாதங்களைக் கழுவிப் பின் சன்னியாசிகளை யெல்லாங் கும்பிட்டு அப் பந்தருள் வராது வெளியே உட்கார்ந்தார்.

ஸ்வாமிகள் உருவினைக் கண்டபோதே சரஸ்வதியார் நடுக்கங்கொண்டனர். அவர் "ஆகா! என்ன காம்பீரம்! அவர் ஒரு மகாபுருஷர் என்பதில் என்னதடை?" என்று நினைத்தார். ஸ்வாமிகள் வெளியே ஒரு பிச்சைக்காரனைப்போல் உட்கார்ந்ததால் அவர் மனம் நைந்துருகிப் புண்பட்டதுபோ லாயிற்று. தாம் அவரை யிகழ்ந்து பேசியதா லல்லவா அவர் இப்படி வெளியே உட்கார நேர்ந்தது என்று சரஸ்வதியார் மனம் புழுங்கியதால் தாம் பேசியது அநியாயம் என்று தோன்றிற்று. சாதாரணமாய் பிரகாசானந்தர் தம் விருந்தாளியை அப்படி உட்கார விடார்; அங்கு விருந்திடுபவரான பிராமணர் அச் சைதன்யருக்கே அடிமையாய் விட்டிருப்பதால் அவருடைய விருந்தாளி தாம் சிஷ்யர்களுடன் அங்கு நிறைந்திருக்குங் காரணத்தாலேயே வெளியில் மரியாதைத் தாழ்வான இடத்தில் உட்கார விட்டிருப்பது பெருங்குறையாய் முடிந்தது. இதன்றியும், ஸ்வாமிகளுடைய தரிசனம் சரஸ்வதியார் மனதினை முற்றுங் கவர்ந்தது. "ஆ! ஆ! என்ன கொடுமை! சார்வபௌமரை மாந்த்ரீக வசத்தால் வென்று ஊரை மோசஞ்செய்யும் பாதகர் இவரோ? நிஷ்களங்கமும், அமரிக்கையும், அடக்கமேன்மையும், புத்திவன்மையும் முகத்தில் விளங்கும் தன்மையான இவரோ தாமே தெய்வம் என்று ஜனங்களை வஞ்சிக்கும் தீயர்? சை! சை! நான் அப்படி நினைத்ததே தவறு" என்று அவர் மனதில் எண்ணினர்.

உடனே சரஸ்வதியார் எழுந்து, "ஸ்வாமி! நீர் அங்கே இருத்தல் தகுதியன்று; உள்ளே வந்து எம்மை கௌரவப்படுத்தி வார்த்தையாட வேண்டும்" என்று சொல்லும்போது அவர் சிஷ்யரானவர் ஆயிரங் கணக்கினரும் மரியாதையுட னெழுந்து நின்றனர். ஸ்வா

மிகள் மிக வணக்கமாய் கை கட்டித் தலைகுனிந்து நின்று “பாரதி கூட்டம் சேர்ந்த துறவியாய நான் மேலான சரஸ்வதி கூட்டத்தாராகிய உங்களுக்கு நடுவே வந்து உட்காருவதற்குத் தக்க யோக்கியதை கிடையாதவன்; ஆகையால் நான் இங்கேயே இருக்கின்றேன்; என்னை மன்னிக்கவும்” என்று சொல்லினர். சரஸ்வதியார் அது சரியன்று என்றுரைத்து முன்சென்று ஸ்வாமிகளைக் கைபிடித் தழைத்துக் கொண்டுபோய் தம்மாசனத்திற்குப் பக்கத்தில் உட்காரவைத்தார். பின் அவரையவர் மனது வருத்திக்கொண்டேயிருந்தது; அதனால் ஒருபோதும் தமக்கு தீமை சிறிதும் செய்யாத சைதன்யரை தாமேயன்றோ யிகழ்ந்தும் வசைகூறி யவமதித்தும் நியாய விரோதமாய் நடத்தினார் என்ற எண்ணமும் உண்டானது. தாம் இழைத்த தீங்கினுக்கு ஒருவாறு பரிகாரமா யிருக்கட்டும் என்று “ஸ்வாமி! நீரும் எங்களைப்போன்ற நீத்தா ரொருவரே. இந்நகரத்தில் வந்து சில நாளாய் வசிக்கின்ற நீர் எங்களுடன் கலக்காம லிருப்பது முறையோ?” என்று வினயமாய்ப் பேசினர். ஸ்வாமிகள் அதற்கு ஏதோ ஒரு சாக்கு சொல்லவே, சரஸ்வதியார் மறுபடியும் “இதன்றியும் தேவரூபம் வகித்துத் துறவியாய் விளங்கும் நீர் முக்கிய கடனாகிய வேதபாராயணம் நிறைவேற்றுவ தில்லை; மேலும், நீர் கீர்த்தனம் பாடுவதும் நர்த்தனம் செய்வதும் துறவிக் கழகல்ல. மனிதர்களை ஆளப்பிறந்த நீர் இவ்வாறு நடந்தால் ஜனங்கள் அதனைப்பார்த்து கெடுவதற்கு இடமாகும்; ஆனால் நீர் அப்படி செய்வதற்கு என்ன காரணம் என்று தயவுசெய்துசொல்லும்” என்று கேட்டார்.

ஸ்வாமிகள் தம்மை மிகத்தாழ்த்திக் கொண்டே, “ஸ்ரீபதே! என் நிலையைச் சொல்கிறேன் கேளும். நான் ஒரு மூடன் என்றறிந்த என் குருவானவர் என் மூடத்தனத்துக்குத் தகுந்தபடி சுலுவாய் செய்யக் கூடியவாறு ஸ்ரீகிருஷ்ண நாமோச்சாரணம் செய்யும்படி பணித்தனர். அப்படியே நான் செய்ய வாரம்பித்தேன். ஆனால் அந்த நாமம் என்னைக் கொள்ளைகொண்டது; ஆனந்தம் என் மனதைத் தேக்கி என்னிலையை முற்றும் மறக்கச் செய்தது. நான் ஆடுவதும் பாடுவதும் எனக்கு ஒரு விகார நோயின் செயலாய்த் தோன்றியது; அதனைக் குறித்து என் குருவினிடம் முறையிட்டேன். அவர் அது நோயல்ல, கிருஷ்ண நாமம் விளைத்த நலம் என்றும், அது பெற்றதே நான் பரிபக்குவமடைந்ததை விளக்குகிறதென்றுஞ் சொல்லினர். நான் சொல்லக்கூடியது இதுதான். நான் ஆடுவது உண்மைதான்; பாடுவதும் வாஸ்தவந்தான். ஆனால் அவைகளை நான் சுயேச்சையாய் செய்யவில்லை. அன்பும் அருளும் அபாரமாய் வகித்த கடவுளாகிய கிருஷ்ணனுடைய திருநாமத்தின் மகிமையே என்னை யப்படி செய்யச் சொல்கின்றது” என்று பதில் கூறினர்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி என்று ஸ்வாமிகள் உச்சரிப்பதைக் கேட்ட பக்தர்கள் அனைவரும் உடல் சிலிர்க்க பரவசப்பட்டனர். அப்பண்டிதரும் என்றுங் காணு வகை அனுதாபப்பட்டனர். என்றாலும், அவர் தம்முடைய உயர்ந்தபடியினின்றும் இறங்காதிருக்க எண்ணங் கொண்டவராய் “நீர் சொல்வது நியாயமாயும் மனதையுருக்குவதாயும் இருக்கிறது. கிருஷ்ண ப்ரேமையே அன்பன் அடையத்தக்க மேலான பொருள் எனச் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆனால் நீர் வேதம் ஓதாததேன் என்று சொல்லவில்லையே” என்றுரைக்கவும், ஸ்வாமிகள் “நீர் வேதங்கள் என்று கொள்வது சங்கர பாஷ்யமே யல்லவா? சாக்ஷாத் ஜகதீசனுக்கும் மனிதனுக்கும் ஏற்றத் தாழ்வு கற்பியாத அந்த பாஷ்யம் எனக்கு சம்மதப்பட வில்லை. வேதங்களைப்பற்றி குறையொன்றுஞ் சொல்லத்தகாது; ஆனால் சங்கரர் தம்முடைய அத்வைத கொள்கையையே அவை ஸ்தாபிக்கின்றன என்று ரூபித்தற்கு அவ்வேத வாக்கியங்களுக்கு நேராய் அர்த்தஞ் சொல்லாது பதச்சேதனைகள், கடுஞ்சந்தி கற்பனைகள் முதலியவற்றால் இடர்ப்படுகின்றார்” என்று சொல்லினார்.

பிரகாசானந்தரும் மற்றவர்களும் திடுக்கிட்டார். பக்திக்கு காத தூரமே நின்ற அவர்கள் அனைவரும் சங்கரபாஷ்யத்திலேயே முழு நம்பிக்கை வைத்திருந்தார்க ளாகையால் அவர்கள் மற்ற சன்னியாசிகளைப் போலவே அத்வைதிகளா யிருந்தார்கள். அதனால் ஸ்வாமிகள் சொல் அவர்களுக்கு கடுமையாய் இருந்தது. என்

னாலும், பண்டிதர் கோபங்கொள்ளாது ஸ்வாமிகளை நேரான அர்த்தம் சொல்லும்படி கேட்க, அவர் முன் சார்வபௌமர்க்கு விவரித்தவாறே விசிஷ்டாத்வைதபரமான பொருளைக்கூறி சங்கரபாஷ்யத்தினைக் கண்டனஞ் செய்தார். அவற்றினை யெல்லாங் கவனமாய்க் கேட்ட ஜனங்கள் ஆச்சர்யத்தில் மூழ்கினர். பண்டிதர் தாம் ஸ்வாமிகளை யவமதித்துப் பேசிய வனைத்தும் தம் ஆணவத்தினாற்றான் என்றும், வேதங்களை முற்று முணர்ந்ததாய் நினைத்து மோசம்போன தாம் அன்றே கற்க வாரம்பித்ததாயும் சொல்லித் தமக்கு கிருஷ்ண ப்ரேமை உண்டாக்க ஸ்வாமிகளையே ஆசார்யராக விருக்கும்படி பிரார்த்தித்து அவரடி பணிந்தார். அதனால் அவர் சிஷ்யர்களான சன்னியாசிகளும் ஸ்வாமிகளை வணங்கி அவரை நம்ப வேண்டி யிருந்தது.

மறுநாள் ஸ்வாமிகள் ஸ்நாநஞ்செய்து யாற்றினின்றும் திரும்பி வருகையில் வழக்கம்போல் விந்துமாதவர் கோவிலிற் சென்று அங்கிருந்த சுந்தர விக்கிரகவாயிலாய் ஸ்ரீகிருஷ்ணனைத் தரிசித்தார். அதனால் பக்தி பெருகி பரவசமாகி ஆனந்தக் கூத்தாடினார். அவருடன் சென்ற சிஷ்யர்கள் ஹரிகோஷம் செய்து ஆரவாரித்தனர். இவ் வாரவாரம் பண்டிதர் காதில் வீழ்ந்தது. அவர் ஸ்வாமிகளான சுந்தர பால உருவத்தினையும் தெய்வத்தன்மை வாய்ந்த திருமுகத்தினையுங் கண்டும், அவருடைய இனிமையான குரலைக் கேட்டும், ஸ்ரீகிருஷ்ண நாமத்தினை யுச்சரிக்கையில் எழும் குதூகலத்தினைத் தரிசித்தும் இருந்தாரே தவிர பரவசப்பட்ட நிலையில் அவரைப்பார்த்ததில்லை. ஆகையால் அச் சமயமாயினும் பார்க்கலாம் என்ற அவாமிகுதியால் அவர் எழுந்து ஓடினர். அவர் சிஷ்யர்களும் பின்தொடர்ந்து சென்றனர். பண்டிதரைப் பார்த்த ஜனங்கள் ஸ்வாமிகளிடம் போக வழிபண்ணினதால் சுலபமாய் ஸ்வாமிகள் எதிரேபோய் நின்றனர். அத்தெய்வக் காட்சியால் பண்டிதர்தம் மகங்கார முற்றுமொழிந்து ஸ்வாமிகள் அவதார உண்மையை அறிய வழியுண்டாயிற்று; இயற்கையாய் அவருக்குள் தம்பித்திருந்த உன்னத உணர்ச்சிகளும் சிறிது சிறிதே வெளி கிளம்பியதால் அவர் கண்களினின்றும் நீர் ததும்பியது; ஆனந்த மிகுதியால் மெய்ம்மறக்க நேர்ந்தது.

ஸ்வாமிகளைப்பார்க்கப்பார்க்கப் அவருடைய ஆட்டத்திலுங் கலக்க ஆரம்பித்தார். அவர் கண்ணீரைத் துடைத்துப் பார்க்க எதிர் நின்றவர் துறவி யல்ல ரென்றும் அவர் பொன்னிறத்தர், சுயம்பிரகாசர், ஸ்ரீ கௌரங்க ரென்றுங் கண்டறிந்து அவர்பால் அடங்கா அன்புபூண்டனர்.

ஆங்கு நின்றிருந்த ஜனங்களின் ஆரவாரத்தால் ஸ்ரீசைதன்ய ஸ்வாமிகள் தம் நினைவுக்கு வந்து பண்டித ரடிபணிந்து ஆசி கூறும்படி வேண்டினர். இதனால் பிரகாசானந்த சரஸ்வதியார் மனம் மிகவருந்தி "எந்தையீர்! கண்ணனாகிய தாமே கருணைகொண்டு ஏழையாகிய மோழையைக் காப்பாற்ற எழுந்தருளி என்[illegible] அடி பணிவது எற்றுக்கு? நான் வாயில் வந்தபடி வைது என் வாணாளை வீணாய்க் கழித்தேனே! இன்றாயினும் உமது பொன்னடி பணிந்து புண்ணியம் செய்யப் புந்தி தருவீராயின், அஃதே யெனக்குப் போதியது" என்று புகன்றனர். இதைக்கேட்ட ஸ்வாமிகள் பண்டிதரை நோக்கி "அறிவின் மிக்கு உறுதி பயந்த அற்புதரே! தாம் இவ்வாறு சொல்லல் கூடாது; மனிதனைக் கடவுளென்பது மஹாபாபம்" என்றனர். பிரகாசானந்த சரஸ்வதியார் "நன்று நன்று! நீவிர் இன்று கூறிய மாற்றம்! என் மனத்தகத்து தினந்தோறு முறைந்து நேயம் விளைத்த ஞாயம் எனக்கு எங்ஙனம் தோன்றாது போகும்? கண்ணுக் கெதிரில் காகம் கறுப்பாய்த் தோன்றவும், வெண்ணிறம் பெற்று அஃது விளங்குவதென்று வீரம் பேசுவார்போன்று ஏதோ தாமும் இப்போது சில பல சொல்லுகின்றீர்! மறைந்து நின்று மாயம் விளைக்க மனங் கொண்டீராயின் மகிதலத்தில் மற்றையோர் யாது செய்தல் கூடும்? ஆயினும் தாம் பக்தரென்றாயினும் சித்தங் கொள்ளல் வேண்டுமோ" யென்று கூறினார்.

அன்றிரவு பிரகாசானந்த சரஸ்வதியார் ஸ்வாமிகளைப் பார்க்க, ஒருவரை யொருவர் இறுகத்தழுவி, அன்பின் மிகுதியால் மண்ணில் விழுந்து மயக்கங் கொண்டனர். களை தெளிந்த பின்னர், பெருமானார் பிரகாசானந்தரை நோக்கி "நீவிர் பிருந்தாவனம் சென்று ஆங்கிருக்கக் கடவீர்! அஃதுதான் உமக்கியைந்த அழகிய இடமாகும்" என்று பணித்தனர். புலவர்பெருமான் கடவுட்

பெருமானை நோக்கி, "என் காதற் கனி ரசமே! என்றுந் தெவிட்டாது நன்றே விளைக்கும் தெள்ளிய வமுதமே! கட்டிக் கரை சேர்க்கும் திட்டமுடையவனே! என் ஆசைக் கனிகலனே! அழகுக்கிருப்பிடமே! நேசம் பெருக்கும் நிதிக்குவையே! பாசம் போக்கும் பரந்தாமா! உன்னைப் பிரிந்து ஒரு கணமாயினும் ஆவிதரிக்கேன்" என்று குறைகூறி யிரந்தனர். இதைக்கேட்ட ஸ்வாமிகள், "நீவிர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்! என்னை வேண்டும்போது உன்னதமாய் உம்தம் உள்ளந்தன்னில் உதயமாவேன். ஆதலின், நீர் உடனே பிருந்தாவனம் சென்று நம் மதஸ்தாபனஞ் செய்வீராக!" என்று கூறலும், பண்டிதர் சம்மதித்துப் போயினர். பிரகாசானந்தர் பிருந்தாவனம் செல்லலும், ஸ்வாமிகள் ஜகந்நாதம் செல்வாராயினார். பிருந்தாவனத்தில், பிரகாசானந்த சரஸ்வதியார் அனேக அரும் பெரும் நூல்க ளியற்றினார். அவைகளில் முக்கியமானது "சைதன்ய சந்திராமிர்தம்" என்பதே. கல்லாகிய தம் மனதைக் கனி யாக்கிய பண்பு எத்தகைத்தோ, இரும்பாகிய இதயத்தைக் கரும்பாக்கிய இயல்பு எவ்வகைத்தோ, மாயம் போக்கி மாயம் விளைத்த மாட்சி எவ்வாறாயினதோ என்று உள்ளுக்குள் குழைந்து வள்ளலை வழுத்திப் பண்டிதர் பாடிய ஸ்லோக ரத்னங்கள் அதனிடம் வெகுவாய்க் காண்கின்றன.

ஸ்வாமிகள் பங்காளதேசத்து மால்டா மாகாணஞ் சேர்ந்தபோது ரூபன், சனாதன் என்ற பெரிய அந்தஸ்தினரைத் தம் வழிப்படுத்தினர். கர்நாடக பிராமண வம்சத்தினரா யிருந்தபோதிலும் சகோதரர்களான இவர்கள் சக்ரவர்த்தியான ஹுஸேன் ஷா என்பவனுடைய சகவாச மிகுதியால் பாதி மகம்மதியராகவே மாறியிருந்தனர். இவர்கள் பேர்கள் கூட தாபிர்காஷ் என்றும் சாகர்மாலிக் என்றும் அரசனால் மாற்றப்பட்டிருந்தன. பாரஸீகம், அராபிக், சமஸ்கிருத பாஷைகளில் இவர்கள் மிக்க பாண்டித்யம் பெற்றிருந்ததாலும் ராஜ்யத்தில் மிக்க பக்தி ஸ்ரத்தையுடன் வேலைபார்க்கும் பண்பை யுடைத்தா யிருந்ததாலும் அவர்கள் அரசனால் மிகவாய் நேசிக்கப்பட்டார்கள். மறுபடியும் ஹிந்து மதத்தினுக்கு திரும்பி வந்து சேருவதற்கு வேறு வழி தோன்றாது மயங்கினவராய் அவர்கள் ஸ்வாமிகளுக்கு விநயமாய் ஒரு நிருபம் வரைந்து விடுத்தனர். ஸ்வாமிகள் அவர்களை பிருந்தாவனத்தே போய் அங்கு தமக்காக காத்திருக்கும்படி பணித்தனர். பின்னர் ரூப கோஸ்வாமி ஸ்வாமிகளை பிரயாக் என்ற அலஹபாத் நகரத்தில் சந்திக்க நேர்ந்தது. ஸ்வாமிகள் அவரைப் பத்தே நாளில் ஆத்ம விஷயங்களிற் பயில்வித்து பிருந்தாவனத்திற்குப்போய் சுத்த பக்தி ப்ரேமையைப்பற்றி, சாஸ்திர சம்மதமான நூல்கள் இயற்றும்படிக்கும் ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி தமது லீலைகளைப் புரிந்து மத விஷயமாய் ஜனங்களுக்கு நன்மை பயத்த இடங்களில் எல்லாம் மதப்பிரவசனம் செய்யும்படிக்கும் கட்டளையிட் டருளினார். அவர் அவ்வாறே பக்தி மத விஷயமாய் மிக உழைத்து, "பக்தி ரஸாம்ருத சிந்து," "மதுரா மாஹாத்மியம்," "லகு ஹரிநாமாம்ருத வியாகரணம்," "நாடக சந்திரிகா" முதலிய பல மகத்தான நூல்கள் இயற்றினார். சனாதன கோஸ்வாமி காசிநகரில் ஸ்வாமிகளை சந்தித்து அவரால் இரண்டு மாதத்தில் ஆத்மார்த்தமாய் முற்றும் கற்பிக்கப் பெற்று பெரிய மஹான் ஆனார்.

கடைசியாக, ஸ்வாமிகள் தாம் முன்னர் வாக்குத்தத்தஞ் செய்ததை நிறைவேற்றுவான் வேண்டி, நவத்வீபத்திற்குச் செல்லப் புறப்பட்டனர். இப்போது கோடிக் கணக்காய் ஜனங்கள் ஸ்வாமிகளைத் தொடர்ந்து செல்லலும், அவர்களை யெல்லாம் நிறுத்துவது அவர்க்கு வெகு கஷ்டமாய் முடிந்தது. கடலின் மணலை யெண்ணினாலும், கௌரங்கர் சீடரை யெண்ணுவது முடியாத தாயிற்று. நவத்வீபஞ் சென்று, தாயாரடிபணிந்து தனயன் நிற்றலும், முகமூடி முன்னேநின்றார் ஒரு மாது! இவர்தாம் விஷ்ணுப்பிரியை.

"நாதா! நீர் எல்லோரையும் காப்பாற்றி ஏழையைக் கைவிடலாகுமா?" அப்போது ஸ்வாமிகள் முகத்தில் சிறிது துக்கக் குறி காணப்பட்டது.

"கண்ணனையே எண்ணத்தில் நண்ணிவிட்டால், இன்பமன்றித் துன்பங் கிடையாது."

"என் மனம் ஆறுதலடைவதற்கு அடையாளம் யாதேனும் தரல் வேண்டும்."

"என்னிடம் யாதொன்றும் கிடையாதே."

"தம் பாதரக்ஷையை யாயினுங் கொடுத்தருளல் வேண்டும்."

இதன்மீது ஸ்வாமிகள் கொடுத்த பாதரக்ஷையை பக்தி விநயத்தோடு விஷ்ணுப்பிரியை பெற்றுக்கொண்டனர். இப்பாதுகை இந்நாளிலும் வணங்கப்பட்டு வருகிறது. இதுதான் சைதன்ய ஸ்வாமிகளும் விஷ்ணுப்பிரியையும் கடைசிதரம் சந்தித்தது.

நவத்வீபத்தினின்றும், ஸ்வாமிகள் பலபத்திர ரென்பவரை உடனழைத்துக்கொண்டு, அநேக வனங்களையும் மலைகளையும் ஆறுகளையும் அருவிகளையும் கடந்து ஜகந்நாதத்திற்குப் போய் சேர்ந்தனர். இந்தப் பிரயாணத்தில் மஹாப்பிரபு வழியில் நடத்திய விநோதங்கட்கு அளவில்லை. ஸ்வாமிகள் கிருஷ்ண நாமம் சொன்ன மாத்திரத்தில் புலிகள் யானைகள் முதலிய துஷ்ட ஜந்துக்களும் பக்தி யடைந்து பரவசமாகி நர்த்தனஞ் செய்தனவாம்.

இவ்விதமாய் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள், தமது முப்பத்தோராம் வயது முதல் நாற்பத்தெட்டாம் வயது வரைக்கும் ஜகந்நாதத்தில் இடையறாது வசித்தனர். லக்ஷ்மி தங்கிய வீட்டில் லக்ஷணம் பழுதுறாதது போல், பகவானே பக்தனாய் விளங்கி வீற்றிருக்கும் திவ்விய ஸ்தலத்தில் பக்தியே அரசாளும் என்பதற்கு யாது தடை? ஸ்ரீ ஜகந்நாதருடைய பிரக்கியாதிபெற்ற ரதோத்ஸவமொன்றில், எத்தனையோபெயர் தேரை யிழுக்கவும் அசையாதிருப்ப, ஸ்வாமிகள் பக்தி மிகுந்து தம் சிரசால் அவ் ரதத்தைத் தீண்டிய மாத்திரத்தில் அஃது ஓடியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தோத கோபிநாதருடைய திவ்யாலயத்தில் ஓர் நாள் சங்கீர்த்தன காலக்ஷேபம் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில், நமது பொன்னார் மேனியர் பூவுலகை நீத்தேக வெண்ணங்கொண்டு, அதிக பக்தி பரவசங்காட்டி, 'கண்ணனைக் கண்டேனே' யென்று கடலை நோக்கிச் சென்று உடலை மறந்து நின்று, பின்னர் கடல்மே னடப்பார் போன்று ஆங்குள்ளோ ரனைவர்க்கும் தோன்றித் தம் அசாதாரண சக்தி புலப்படுத்தி அந்தர்த்தானமாயினர்.

சரித்திரம் சம்பூர்ணம்.

சைதன்ய ஸ்வாமிகள் மதக்கொள்கைகளும், நற்போதனைகளும்.

இந்தியாதேசத்தின் பெரும்பாலாரை ஒரு காலத்தில் தம் வழிப்படுத்திய வசியாளரும், சுத்த சாத்வீக பரம காருண்யசிரோன்மணியாய்விளங்கிய மஹாப்பிரபுவும், சாதிமத நெறிகளிலே சமயச் சேற்றிலே சாத்திரச்சந்தடிகளிலே எப்போதும் வாணாளை வீணாகப் போக்குபவரையும் அறிவு கொளுத்தி பக்தி ப்ரேமையாகிய தெய்வப் பெருங் கொடைகளால் ரக்ஷித்த தயவாளரும், ஆன ஸ்ரீ கௌராங்க ஸ்வாமிகள் என்ன மதத்தினர், என்ன கொள்கையினர், என்ன சாஸ்திரப் பற்றுடையர், எந்த நற்குணங்களைப் பேணினர், என்ன கற்பித்தனர், எவ்வகை ஒழுகினர்? என்றனவற்றைச் சிறிது கவனிப்போம்.

மனிதருடைய சாமான்ய அறிவால் சாக்ஷாத் ஜகதீசனைக் கிட்டுவ தரிது என்பது அவர் முதற்கொள்கை. அனுமானத்தால் தேவனை யறியவொண்ணாது; ஆனால் மத ருசி கொஞ்ச மிருப்பினும் ஆத்தும விலக்ஷணத்தினை கிரகிக்கலாம். ஆத்தும விஷயங்களை விளக்குவது அருள் ஒன்றே. தெய்வத்தன்மை வாய்ந்த பரிசுத்த ஆத்துமாக்கள் மூலமாய் அருள்வகையாய்த் தோன்றியவை வேதம். ஆகையால் வேதங்களும் அவைகளை விளக்குவனவான புராணங்களுமே ஆத்தும விஷயங்களில் தனி சாக்ஷியாய் நித்திய மானவைகளாய் விளங்குகின்றன. ஸ்வாமிகளினுடைய அபிப்பிராயப் பிரகாரம் வேதங்கள் ஒன்பது முக்கிய உண்மைகளைக் கற்பிக்கின்றன. அவை பின் வருமாறு:

(1) சாக்ஷாத் ஹரி ஒருவரே சர்வ வல்லபர்; இணையில்லாதவர்; தனிப் பரம்பொருள். தத்துவ விஷயமாய்ப் பேசுகையில் சிருஷ்டி தத்துவம் பிரம்மாவிடம் அமைந்திருக்கிறதென்றும், சம்

ஹாரத்தொழில் சிவனால் நடத்தப்பட்டு வருகிறதென்றும், இந்திரன் அவர்களில் ஒருபடி தாழ்ந்த தேவலோகத் ததிபதி என்றும் சொல்லப்பட்டு வருகிறதே தவிர அவர்களைப் பரம்பொருள் என்றே எண்ணுவது கிடையாது. இத்தேவ தாம்சங்கள் ஆதிமூலரிடம் சிற்சில அதிகாரங்களைப் பெற்று அவருடைய ராஜ்யத்தை நடைபெறச் செய்கிறார்கள். ஆத்துமா கடவுளை இரண்டு வகையாய் அறியும். ஒருவகையில் அவருடைய சர்வ வல்லமையும் மகத்தும் பிரதாபமுமே விளங்கி தெய்வங்கட்கெல்லாந் தெய்வமாயும் பிரபுக்களுக்கெல்லாம் மகாப் பிரபுவாயும் வைகுந்தத்தில் ஸ்ரீமந் நாராயணராக அறியப்படுகிறார். மற்றோர்வகையில், மேலான ஆனந்தப் பரவச மயமாய் ஜகன்மோகன சர்வாலங்க்ருதராய், மனிதரில் மனிதனாய் அவதரித்தும் தெய்வங்களுக்கு மேலான பரம்பொருளாக மதிக்கப் படுபவராய், ஜீவாத்மாக்களைத் தம்மிடம் இழுத்தும் நேசித்தும் ஆனந்த மிகுதியாற் பரவசமாக்கியும் தமது அபாரகருணையை விளக்குபவராய், ராதாகிருஷ்ணராய் அறியப்படுகிறார். இந்த சட சரீர சம்பந்தத்தோடு அவரை யறிய முடியாதாயினும் ஜீவாத்துமா அவரை நோக்கவும் அவருடன் கலந்து பேசவும் சாத்தியமாகும். சட பதார்த்தத்தில் லயப்பட்ட ஆத்துமா தன்னிலையினால் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியையும் அவரது லீலைகளையும் காண யோக்கியதை யற்றிருப்பினும் அவரே இஷ்டப்பட்டால் ஒவ்வொரு மனிதனுக்கும் தம் காட்சியை தம் வல்லமையால் கொடுக்கக்கூடும். ஞான விசேஷத்தினால் அவரையும் அவரது லீலைகளையும் அனுமானித் தறிய முடியாது. ஆனால் மனிதனுடைய ஆத்தும சுகிர்தம் வரவர ஓங்குவதால் அவன் எம்பிரானைத் தரிசித்து அவரை மனப்பூர்வமாய் நேசிக்க நேரிடுகிறது. ஆகையால் இச்சட சம்பந்தத்தினைச் சிறிது சிறிதே விலக்க முயலவேண்டும். ஆத்துமாவின் இருப்பையே ஒத்துக்கொள்ளாது தர்க்கிப்பவரிடம் கலப்பதால் ஏற்படும் அகங்கார மமகார அவஸ்தைகளைப் போக்கவேண்டும். அடக்கமே ஒப்பற்ற பூஷணமாய்க் கொண்டு ஆத்தும சுத்தியை யடைய முயல்வோரிடம் மரியாதை வைத்து அவர்களுடனே மனப்பூர்வமாய் அந் நடக்கையில் ஒழுகினால் கிருஷ்ணனை வெகு சீக்கிரத்திற் காண வழி உண்டாம்.

(2) ஹரியானவர் எப்போதும் அபார அளவில்லாத சக்தி வாய்ந்தவர்; அவரது சக்திக்கு அளவு வரை யறுத்தல் காலவகையானும் இடவகையானும் அமையாது. அவர் தம் சக்திகளை இச்சாமாத்திரத்தில் பிரயோகிக்க வல்லவர். அவர் ஒரு பந்தத்தால் கட்டுப்படுபவ ரல்லர்; சட்டமும் திட்டமும் அவரது இச்சையாலும் சக்தியாலும் உண்டாவனவே தவிர, அவரை ஒரு சட்ட திட்டமும் கட்டுப்படுத்தல் ஏலாது. அவர் சடபதார்த்தத்தை சிருஷ்டி செய்யத்தக்க மாயாசக்தியும், ஜீவாத்துமாக்களை உண்டாக்க வல்ல ஜீவசக்தியும், இச்சா மாத்திரத்தில் எவ்வகை ரூபத்துடனும் சரீரத்துடனும் தோன்ற வல்ல ஆத்மசக்தி அல்லது சித்சக்தியும் உடைத்தாயிருக்கிறார். அவர் சக்திக்கும் அவருக்கும் பேதப்படுத்தி தனியாய் அவைகளை அறிய முடியாது; என்றாலும், அவருடைய ஒவ்வொரு செய்கைகளில் அந்த சக்திகள் விளங்குவதைக் காணலாம்.

(3) ஸ்தாயிபாவம், விபாவ்ம், அநுபாவம், சாத்வீகம், சஞ்சாரம் என்பனவற்றைத் தொகுப்பதான ரஸத்திற்கு ஹரியே இருப்பிடம்; அவரே ரஸக்கடல்; அந்த ரஸத்தில் ஒரு சிறு துளியே ஜீவாத்மாவில் காணப்படும். ரஸம் என்பது ஆத்ம சம்பந்தமானது; ஆனால் சரீர சம்பந்தமான ஆத்மா ரஸிகத்துவம் அடைந்திருப்பதாய் நாம்சொல்வது சடபதார்த்தத்தில் ஆத்மாசந்தோஷித்து ஐம்புலன் வழியாய்ச் செல்லும் மனதினில் ஈடுபட்டு தன்னை மறத்தலையே ஆகையால் இது தப்பர்த்தமே; இது ஆத்மாவின் இலக்ஷணத்தை யறியாது அவித்தையாகிற அந்தகாரத்தில் அழுந்தியுழல்வதே யாகும். ஆனால் ஆத்மா தன்னுள் நோக்கினால் ஆத்மரஸம் விருத்தியடையும், சரீரரஸம் குறைந்துபோகும். ஸ்ரீகிருஷ்ணரஸம் சித்துலகத்தேயே காணலாகும். இந்த மாயையால் மூடப்பட்ட உலகத்திற் பிறந்திருக்கும் மனிதருக்கு அந்த ரஸம் காணப்படாது இடையில் ஒருதிரை இருக்கின்றது. அத்திரை கிருஷ்ண சகாயத்தாலும் அவருளாலும் எப்போது நீக்கப்படுகிறதோ அப்போது பிருந்தாவன லீலைகள் முற்றும் நமது கண்களுக்குப் புலப்

படும். ஆகையால் அதனை யறிந்து நாம் அந்த லீலைகளைக் கண்டு களிப்புற வழிதேட வேண்டிய தவசியம்.

(4) அந்த பரமாத்மாவில் ஜீவாத்மா ஒரு கூறு; ஒரு சிறு பாகம். ஜீவாத்மா என்பது ஜெந்து, மனித, தேவ சம்பந்தமான எல்லாவற்றினையும் உணர்த்துகிறது. ஆத்மா ஒருதேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தை எடுக்க வல்லதே; அதாவது கூடுவிட்டுக் கூடு பாயத்தக்கதே. இங்கு ஒருகூறு என்றது கல்லை உடைத்துப் பிளப்பதுபோல் கூறுபடுத்தப்பட்ட தன்று; ஒரு தீபத்தினின்றும் பல தீபங்கள் ஏற்றப்படுவதுபோலும் ரசவாதத்தினால் பொன் மற்ற லோகங்களினின்று பெறப்படுவது போலும் உண்டாவதே. அவ்வகையே ஆத்மாவானது கடவுளால் ஏற்படுத்தப்பட்டு மாயையால் தனது தெய்வத் தன்மையையும் தெய்வ அடிமைத்துவத்தையும் மறந்துபின் பிறப் பிறப்பில் போதுமான அனுபவத்தால் தன் பூர்வ நிலை யுணர்ந்து முத்தி யடைகிறது.

(5) சில ஜீவாத்மாக்கள் பிரகிருதி அதாவது பிரபஞ்சம், அவித்தை, மாயையில் முற்றும் படிந்து அதனின்றும் விடுவித்துக் கொள்ள வகையறியாது உழல்கின்றன. மாயை யென்பது கடவுளுக்கு அபகாரம் செய்து அவருக்கு நன்றி கெட்டதாகும் ஜீவாத்மாக்களைக் கைதிகளாக்கிச் சிறைக்குட் படுத்தி புத்திவரச் செய்வதான தெய்வச்சக்தியே. ஜீவர்கள் தம் சுயேச்சையாய் கெட்ட வழி தேடிச்சென்று தாம் என்றும் ஒன்றான சர்வேஸ்வரனுக்கு அடிமைப்பட்டவர் என்ற உண்மையை மறந்து இவ்வுலக சுகத்திலேயே மனதினைப்படிய விடுவதால் அவர்கள் சத்வ ரஜோ தமோ குணங்களுடைத்தான மாயை என்ற பாசக் கயிற்றால் பிணைக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் இருவகை சரீரத்துட் கட்டப்பட்டு கர்ம, அகர்ம, விகர்மங்களால் பிறப்பிறப்பு, உலகத்துன்பம், நரகாவஸ்தை முதலியவைகளை சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். சரீரமானது ஸ்தூல சரீரமென்றும் லிங்க சரீரமென்று மிருவகைத்து. ஸ்தூல சரீரமாகிய வெளி சரீரத்தினுக்கு இருபது தத்வங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவையாவன: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களும், சத்த ஸ்பரிச ரூப ரஸ கந்தம் என்ற பஞ்ச உணர்ச்சிகளும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற பஞ்சேந்திரியங்களும், கை கால் முதலிய ஐந்து அவயவங்களும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களும் லிங்க சரீரத்தைப் பொருத்தது. ஆகையால் இவ்வுலகத்தினை சுகானுபவத்திற்கே அமைந்ததென்று நம்பி வினை சம்பாதித்துக்கொண்டு வருந்தாமல் அது நம்மைத் திருத்த ஏற்பட்ட சிறையென்று நாம் அறிந்து அதனின்றும் விடுவித்துக் கொள்வதற்கே உழைக்கவேண்டும்.

(6) வேறு சில ஜீவாத்மாக்கள் பிரகிருத சம்பந்தத்தினின்றும் விடுபட்டனவாய் இருக்கின்றன. மாயா பந்தத்தில் ஈடுபட்டவர்கள் சுகமும் துக்கமும் செல்வமும் வறுமையும் முதலியவற்றினை யடைந்து வாழ்வார்கள். இப்பந்தத்தினைப் போக்குவதற்கு மார்க்க மெது? தர்மத்தானும், யோகப்பயிற்சியானும், சாங்கிய வழியானும், வைராக்கிய விரக்தி மார்க்கத்தானும் மனிதன்தான் அடைய விரும்புவதை அடைவது நேரல்ல. ஆனால் ஹரிபக்த ரஸிகரான ஒரு வைஷ்ணவரைக் கண்டு அவரால் பக்தி உண்டாக்கப்பட்டால், மனிதன் சுலபமாய் மாயாபந்தத்தினை யறுத்து சுத்த ரஸத்தில் மனஸை ஈடுபடுத்தி பரம சுகத்தை யனுபவிக்கின்றான். சடபதார்த்தத்தில் மின்சார சக்தி ஒன்றிலிருந்து மற்றொன்றிற் பாய்வது போல் பக்தியும் ஒரு ஆத்துமாவினின்று சுபாவத்தில் ஒத்த மற்றொரு ஆத்மாவிற் றோன்றும். பக்திமான் பரமாத்மாவை தஞ்சமடைந்து ஒவ்வொரு காரியத்தையும் "அவன்" மேல் பாரத்தைப் போட்டே செய்து ஒரு பலனும் அடைய விரும்பார். பக்தியானது அநந்ய சரணமாய் பகவானை யடையச்செய்யும்; தேவனிடத்து முழு நம்பிக்கையும், ஒரு பயனையும் விரும்பாது அவனையும் அவன் அடியாரையும் என்றும் எப்போதும் பணிந்து அவருக்கு ஊழியஞ் செய்வதே பெரிய சுகானுபவமாய் எண்ணி யொழுகும் ஒழுக்கமும், மற்ற விஷயத்திலும் சுகத்திலும் மனம் செலுத்தாத நெறியும் அப்பக்திக்கு இன்றி யமையாதன. ஆகையால் மனிதன் அவ்வாறு ஒழுகி பக்தியை சம்பாதித்து முத்தியடைய முயல வேண்டியது.

(7) எல்லா ஆன்ம சடத்தோற்றங்களும் சர்வேஸ்வரனுடைய அசிந்திய பேதாபேத ப்ரகாசம் என்றறிய வேண்டியது; மானத தத்வங்களைப் பற்றி தர்க்கித்துக் கொண்டிருப்பதிற் பயனில்லை. வேதங்கள் சிலவிடங்களில் ஜீவன் பரமாத்மாவினின்றும் வேறானது என்றும் மற்றவிடங்களில் அவை யிரண்டும் ஒன்றே என்றும் ஸ்தாபிக்கின்றது. ஆனால் வேதங்கள் எப்போதும் உண்மையே விளக்குகின்றது; ஏனெனில் ஜீவன் ஒரே காலத்தில் சர்வேஸ்வரனின்றும் வேறுபட்டும் ஒருமித்தும் இருக்கிறது. இவ்விஷயம் சாதாரணமாய் தார்க்கிகர்களால் அறியப்படுவதில்லை. மனிதனுடைய மனதுக்கு எட்டா சக்திகளை பிரயோகிப்பதில் மட்டும் எம்பிரான் ஜீவனுக்கும் இவ்வுலகத்திற்கும் வேறாய் இருந்து திரும்பவும் எப்போதும் அவைகளுடன் ஒருமித்தும் இருக்கிறார். சங்கராசார்யருடைய விவர்த்தவாதம் பிசகுதான்; வேதாந்தம் சக்தி பரிணாம வாதத்தையே கற்பிக்கின்றது; அதுவே நித்யமான ஆத்ம நேசத்தினை ஒத்துக்கொள்கின்றது. நிலைபெற்ற நிர்விகார வஸ்துவான சர்வேஸ்வரன் தமது சித் சக்தியால் திவ்ய ரஸ வேறுபாடுகளுடன் பொருந்திய சித் ஜகத்தினை உண்டாக்கியும், ஜீவசக்தியால் பலவகையும் எண்ணிலா ரூப வேறுபாடுகளும் நிலைகளும் அமைந்த பலகோடி ஜீவராசிகளை சிருஷ்டித்தும், மாயா சக்தியால் அந்த ஆத்மாக்களுக்குத் தக்கவாறு பலவித உலகங்களை நிர்மாணித்தும் இருக்கிறார்.

(8) ஆத்மலாபத்தில் மேன்மையானதை யடைவதற்கு பக்தியே தனிமார்க்கம். கர்மத்தினால் மட்டும் நேராய் உடனே ஆத்மலாபத்தினை யடைவது அசாத்தியம். ஞானமும் அவ்வாறே நேராய் கடைசியான பதவியை அடைவிக்க முடியாதது. கர்மமும் ஞானமும் பக்தியின் அனுசரணையாலேயேதான் ஆத்மலாபத்தினை யடையச் செய்வன. பக்தியென்பது வேறுவிதமான ஒரு இச்சையுமின்றி கர்மம் ஞானம் முதலியவற்றால் சிறிதும் கலக்கப்படாது கிருஷ்ணனிடம் வைக்கக்கூடிய நேசமே. இதனால் அது ஒரு உணர்ச்சியையும் ஒரு தொழிலையும் உணர்த்துகிறது என்று அறியலாம். பக்தியானது, சாதனபக்தி, பாவபக்தி, பிரேமபக்தி, என்று மூன்று அந்தஸ்தினையுடையது. உணர்ச்சி தோன்று முன் விளங்குவது சாதனபக்தி. உணர்ச்சி தோன்றிய உடன் பாவபக்தியும், அவ்வுணர்ச்சி அபரிமிதமாய் தொழினிகழ்ச்சிக்குக் காரணமாகும்போது பிரேம பக்தியுமாகும். பக்தி உண்டாவதற்குச்சாதனமானவை சாக்ஷாத் கிருஷ்ணனுடைய நாமமும் ரூபமும் குணமகிமைகளும் லீலைகளும் சதா செவிகளால் கேட்பதும், அவைகளை யுச்சரிப்பதும், கீர்த்தனாமுகமாய் பாடுவதும், அவற்றை மனனஞ்செய்வதும், அவருடைய பாதங்களுக்குப் பணி செய்வதும், அவரைத் தோத்திரிப்பதும், நமஸ்கரித்தலும், அவர்க்கு களிப்புண்டாவதற்கேற்ற கருமங்களையெல்லாம் செய்தலும், அவரை நேசிப்பதும், அவரிடமே பூரணப் பற்று வைத்தலும் ஆக ஒன்பது வகைப்படும். அவற்றில் கிருஷ்ண கீர்த்தனமே மேலானது. அடக்கத்துடன் அவரை யடைய முயலவேண்டுமே தவிர வீணான வாதங்களில் தலையிடலாகாது. காலம் இடம் முதலியவைகளில் வரையறுக்கப்படாத சர்வ வல்லமை சர்வ வியாபகம் சர்வக்ஞத்துவம் முதலிய குணங்கள் வாய்ந்த சர்வேஸ்வரனை ஒரு விக்ரக ரூபத்தால் வரையறுத்து வைத்து வணங்குவது சரியன்று என்று சிலர் கூறுகின்றனர்; என்றாலும், ஸ்வாமிகள் ஸ்ரீமூர்த்தி ஆராதனையால் பக்தி யுண்டாவதற்கிடமென்று அதனைப் போற்றினர். கேவலம் எதிர்நின்ற சடரூபத்தையே ஸர்வேஸ்வரன் என்று நினைத்துப் பணிதல் தப்புதான்: ஆனால் விக்ரகம் அல்லது அதைப்போன்ற ஒரு ரூபத்தை மனதில் ஆவாஹனம் பண்ணாது கடவுளைப் பணிதல் அசாத்தியமே. இதுபற்றி ஒரு மூர்த்தியை வீட்டினுக்கு ரக்ஷகராக ஏற்படுத்தி வைத்து அவர் பிரசாதத்தினையே உண்டும், அவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட புஷ்பங்களையே அணிந்தும், மனப்பூர்வமாய் ஆத்மோஜ்ஜீவனந் தேடியொழுகவேண்டியது மனிதர் கடமையாகும். அதனால் மனிதர் தொழுகையின் வைத்த மனப்பாங்கினுக்குத் தக்கபடி கடவுள் பக்தி அவர்கட்குத் தோன்றும்.

(9) சர்வேஸ்வர பிரேமையையே ஆத்மா அந்த்யத்தில் அடையவிரும்பவேண்டிய முக்தி. சாதாரணமாய் மனிதன் இன்னொருவனுக்கு உபகாரஞ் செய்கையில் ஏதோ ஒருவித சுய லாபங் கருதி

யிருந்தால் அந் நன்றி பயத்தல் அவ்வளவு ஸ்ரேஷ்டமான தல்ல என்று எல்லாரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க பகவானிடம் பக்தி ஸ்ரத்தை வைத்து ஒழுகுபவர் சுய லாபத்தைக் கோரினால், அந்த பக்தி தாழ்ந்தது இழிவானது என்று சொல்லவும் வேண்டுமோ? என்றாலும், கர்ம மார்க்கிகள் பகவானைத் தொழுவதே சுய சுகானுபவத்திற்காகத்தான். ஸ்வாமி நற்கருமம் செய்வதற்கு பதிலாக சுகத்தை உண்டுபண்ணுவார், சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்ய பதவிகளைத்தந்து சித்துலகம்சேர்ப்பார் என்ற நம்பிக்கையாற்றான் அவர் பிரார்த்திக்கப்படுகிறார், தொழப்படுகிறார், போற்றப்படுகிறார். அவர் அப்படி பிரதியுபகாரஞ் செய்வதில் நம்பிக்கை தோன்றா தாயின் பகவான் கதி என்னவோ? "Love for love's sake" என்று அன்புண்டாக வேண்டுமென்ற பயனையே கருதி அன்புசெய்வது என்று ஆங்கிலேயர் சொல்லுவது போன்ற மேலானதும் சுயநயம் பாராட்டாததுமான செய்கையே உத்தமமானது. பகவத்பக்தி யொன்றை அதற்காகவே விரும்பி பகவானைப் பணியவேண்டும்; பிரேமையே கடைசியாய் ஆத்மா அடையக்கூடிய உன்னத நிலையென்று நம்பி எம்பிரானைப் போற்றி அவருக்கே நம்மை யர்ப்பணஞ் செய்துவிடவேண்டும்.

ரதி என்பது ஸ்ரீ கிருஷ்ணனிடந் தோன்றிய சுத்தமான ஆத்மப்ரியம்; உல்லாஸம் சேர்ந்தால் அது ப்ரீதி யாகும். ப்ரீதியினால் எம்பிரானிடம் பூரண நேசமும் அவனைச் சேராத வஸ்துக்களிடம் வெறுப்பும் உண்டாகும். பகவான் என்னுடையவனே என்ற எண்ணமும் நிகழுமாயின், அது பிரேமை யாகும்; அப்போது கண்ணன் எனக்குச் சொந்தமானவன், நானும் அவர்க்கு அடியனே என்ற தோற்றங் காண்கின்றது. பிரேமையுடன் திட நம்பிக்கை சேரின், அது பிரணயம் ஆகும்; அங்கு வணக்கமும்; மரியாதையும் தீர்ந்து போகிறது. அதனுடன் ஸ்ரீதரர் என்னையே தனியாய் நேசிக்கின்றார், பிறிதொருவரைக் கடைக்கண்ணாலும் நோக்குவதில்லை என்ற கருத்து அமையுங்கால், அது 'மன்' ஆகின்றது பெருமையும் மகிமையும் வாய்ந்த பேரருளாளர் அதற்கு வசப்படுகிறார். மன உருக்கமும் விசேஷமாய் சித்தித்தபோது அது ஸ்நேகம் என்று சொல்லப்படும்; அச்சமயம் பிதா புத்ர சம்பந்தம் விளங்க, பக்தன் பகவானைக் குறித்துக் கண்ணீர் விடுவதும் அவருடன் சதா கலந்திருக்க அவாக்கொள்வதும் அவருடைய சுகத்தினைப் பற்றிக் கவற்சி யடைவதும் இயற்கையாகும். அதனுடன் அவா மிருந்தால் ராகம் எனப் பெயர்பெறும்; அது சித்தியான போது ஒருநிமிஷமும் பிரிய சகியாது, நாயக நாயகி பாவம் விளங்க, தாசன் பிரிவாற்றாமையால் வருந்துவதே சுகமாய் முடியும். ராகம் மிக்கு நாயகனை ஒவ்வொருநிமிஷமும் புதியோராய் வேறானவராய்பாவித்துதன்னையும் அப்படியேநினைக்க நேர்ந்தகாலை அநுராகம் என்று சொல்லப்படும். அதனில் ஒருவருக்கொருவர் அடிமைப்பட்டும் நாயகனை எப்போதும் இணைபிரியாது தொடர்ந்து செல்ல விரும்பியும் இருக்க நேரும். அநுராகம் ஆச்சர்யகரமாய் ஓங்கி அந்தமில்லாது வளர்ந்து பித்தனாக்கி விடுவது போலாயின் அதுவே மஹாபாவம் என்று பெயர் பெறும். அதனைச் சொற்களால் விவரிக்க முடியாது. ரதி நிலையினின்றும் மஹாபாவ நிலைமீருயுள்ள விகாரங்கள் முற்றுந்தான் ஸ்தாயிபாவம் என்று சொல்லப்படும். அது விபாவம், அநுபாவம், ஸ்வாதிகம், சஞ்சாரர், என்பன வற்றிற் சேர, ஸ்ரீகிருஷ்ண ப்ரேம ரஸம் ஆகிற பேரின்ப மாகிவிடும்.

தம்முடைய அவதார காரியத்தினை இன்னதென ஒரு அற்புதச் செய்கையால் சிறு பிராயத்தேயே ஸ்வாமிகள் ஒருவாறு விளக்கினார். தீர்த்த யாத்திரை சென்ற பிராமணரொருவர் ஸ்வாமிகளுடைய பெற்றோரால் உபசரிக்கப்பட்டு அவர் வீட்டிலேயே விருந்தினராய் ஒருநாள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அவர் வழக்கம்போல் தளிகைசெய்து கிருஷ்ணஸ்வாமிக்கு அமுதுசெய்விக்கவேண்டி அப்பெருமானை மானஸ பூஜைசெய்து வழிப்படுதலி னமர்ந்தார். அப்போது நிமைச்சிறுவர் அங்கோடிச்சென்று பிரசாதத்தினை உண்டு விட்டனர். அப் பிராமணோத்தமர் அப்பாலயர் செயலைக்கண்டு ஆச்சர்யங்கொண்டு பின் ஜகன்னாத மிஸ்ரர் வேண்டுகோளுக்கிசைந்து திரும்பவும் தளிகை அமிசை செய்தனர். அப்போதும் அப் பக்திமான் நிஷ்டையிலமரும் சமயம் பார்த்திருந்து கௌரங்கர் தெய்வத்திற்களித்த அன்னத்தினைப் பருகிச்சென்ற

னர். வேதியர் மிஸ்ரரால் கட்டாயப்படுத்தப் பட்டமையால் மூன்றாம்முறை போனகம் சமைத்து தேவபூசனை செய்யத்தொடங்கினர். அச்சமயம் வீட்டிலுள்ள மற்றையோர்கள் நித்திரையில் அமர்ந்தனராக, நிமை ஸ்வாமிகள் கிருஷ்ணரூபந்தாங்கி அம்மறையோருக்குத் தம்மரிய கோலங்காட்டி அவருக்குப் பெருமகிழ்ச்சி விளைவித்தனர்.

ஸ்வாமிகள் தம்மைக் காசி க்ஷேத்ர சன்னியாசிகள் சாக்ஷாத் எம்பிரானே என்று போற்றிப் பணிந்தபோது அவர் தம்மைப் போன்ற ஜீவரைப் பகவான் என்னல் பெரும்பாவமென்று சொல்லி அவரைக் கண்டித்தார். அவர் எம்பிரானுடைய நிஜ விக்கிரகத்தைத் தவிர வேறு ரூபத்தினைத் தொழுதல் அடாது என்று பன்முறை போதித்திருக்கின்றார்; பக்தர்கள் நீதிநெறி வழுவாது ஒழுகவேண்டும் என்றும் தம் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் உலகினர்க்கு அறிவிக்கின்றார்.

அவர் வர்ணாஸ்ரமதர்மம் உலகவாழ்க்கை நடைபெறுவதற்கே ரிஷிகள் உண்டாக்கினது என்று நம்பினார். ஆகையால் அதற்கும் மதவிஷயத்திற்கும் சம்பந்தமில்லையென்று சொல்லிபிரத்யும்ந மிஸ்ரர் என்றகடும்பிராமணரை ஆன்ம ஞான போதனைக்காக ராமானந்த ராஜரிடம் போகப் பணித்தார். அதனால் சூத்திரராயினும் பிராமணராயினும் சன்னியாசியாயினும் கிருஷ்ணதத்வமெவர் அறிந்தாரோ அவர் ஆசார்யராக இருக்கலாம் என்று பெறப்படுகின்றது.

ஏழைகட்கும் அநாதரவாய் நிற்பவருக்கும் வேண்டியபடி உதவிபுரிய கிரகஸ்தர்கள் ஊக்கங்கொண் டிருக்கவேண்டும் என்று ஸ்வாமிகள் கற்பித்திருக்கின்றார். மேலும் ஜனங்களுக்கு கல்வி பயில்வித்தலில் அனேகர் உதவி புரியவேண்டும். அவர் மதம் ஒரு ஜாதியாருக்கும் ஒரு வகுப்பினருக்கும் ஒரு ஊராருக்கும் பிரத்யேகமாய் ஏற்பட்டதன்று; அனைவரும் அம்மதத்தினை அனுஷ்டிக்கலாம். ஹரிதாஸர் என்ற மகம்மதியரை தம் வழிப்படுத்தியதே இதற்குப் போதிய சான்றாம். மேலும் சங்கீர்த்தனா சுபாவமே வேற்றுமை யின்றி எல்லா ஜாதியாரையும் மதத்தாரையும் ஒன்றுசேர்த்து ஒருமைப் படுத்தி வாழச்செய்யும். சைதன்யர்

பிக்க விரும்பியதை வாய்ச்சொல் முகமாய் மட்டுமின்றி
கையாலும் ஒழுக்கத்தாலும் விளக்கியே போதித்தனர்.
தன்ய ஸ்வாமிகள் தாம் நினைத்த காரியங்களை எவ்வகை
றைவேற்ற வல்ல சூரராகவே விளங்கினார். சில பொறா
பிராமணர் அவரிடம் சென்று சக்கரவர்த்தியார் அவரை
ஒரு சைன்யம் அனுப்பின சமாசாரத்தை தெரிவித்த
துவர், “அது சரிதான்; நான் செய்வ தின்னவென்று
செய்துவரும் ராஜனும் கண்டு அறியவேண்டிய தவசி
என்று சொன்னாரே தவிர வேறொன்றும் சொல்ல
தமது குருவான கேசவ பாரதியார் மத சோதரரான
ந்த பாரதியார் புலித்தோற் போர்வையுடன் ஸ்வாமிகள்
தபோது, அவர் கிரமப்படி அவர் கோவணமும் கௌபீன
வேறெதை யுடுத்துவரினும் சேவிப்பதில்லை யென்று
ர். சன்னியாசியா யிருப்பவர் தம் உடைக்காக மிருகங்
கால்வதைச் சரியென்று சொல்லக்கூடா தாகையால் ஸ்வா
ம்மீது அதிருப்தி கொண்டனர் என்று தெரிந்துகொண்ட
லை அவர் அகற்றி எதிர் சென்றார்; அப்போதே ஸ்வாமிகள்
மரியாதையாய் சேவித்தார்.
வாமிகள் சாஸ்திர வாக்கியங்களைக் கவனியாது அவற்றின்
ரயே கொள்ளும்படி தம் பக்தருக்குப் போதித்தார். தேவா
என்ற பண்டிதர் ஒருவர் பக்தி யின்னதென் றறியாது
பாகவதத்தை வாசித்தபோது இடர்ப்பட அவரைவிட்டுப்
க்தியை யுணர்ந்தபோதே யவரைத் தழுவி அவர் செய்த
ளை மன்னித்தார். ஸ்வாமிகள் தம் ஆயுள் முழுவதும்
ஷகரமான உல்லாசராகவே விளங்கினார். தம் ஊராரை
கலிசெய்வது அவர்களுக்கு கோபம் உண்டாகும்படி அவ்
ருதியாய் இருக்கும். ஸ்ரீதர ஸ்வாமியார் பாகவதத்தினுக்கு
ாக்யானஞ் செய்திருக்க, அதனை ‘ஒப்பமாட்டேன்’ என்று
பல்லவபட்டர் என்ற மகத்தான பண்டிதர் ஒருவர்
ரு வியாக்யானஞ்செய்து ஸ்வாமிகள் பார்வைக்குக் கொண
காடுத்து, “நான் ஸ்வாமியா ருரையை மதிக்கேன்,” என்று

ஸ்ரீதரரைப்பற்றி சொல்லவும், ஸ்வாமிகள், "கற்பொழிந்த ஸ்திரீயே தன் ஸ்வாமியி னுரையைப் புறக்கணிப்பாள்" என்று குத்துப் பாடாய் கூறினர். அதனால் பண்டிதர் நன்மதி பெற்று ஸ்ரீதர ஸ்வாமியை யிகழ்வதை விட்டனர்.

ஸ்வாமிகளை பக்தாவதாரர் என்று எண்ணிறந்த பக்திமான்கள் போற்றுகிறார்கள். இந்நூலை வாசிக்கும் பக்தி ரத்னங்காள்! சைதன்ய மகாப்பிரபுவின் மகிமையும் பிரதாபமும் அறியும் தமிழ்மொழிச் செல்வர்காள்! ஒப்பற்ற பரந்தாமன் உத்தம குணங்களை ஓதி யுணரும் உத்தமர்காள்! அவதாரம் என்றே நம்பாவிடினும், அவர் பக்தியிற் சிறந்த புருஷோத்தமர்; தேசு நிறைந்த உடலைத் தாங்கி மாசிலா மனத்தராய் நேச பாசத்தால் தியரையும் பிணைத்து ரக்ஷித்த தயவாளர், ஜாதிமதவேற்றுமை பாராட்டாது தம்மெதிர் வந்த பல்லோருக்கும் அன்பும் ஆனந்தமும் பக்தியும் பிரேமையும் தானஞ்செய்த வள்ளலார், சுயநலத்தை முற்றுந்துறந்து பரோபகாரார்த்தமாய் தம் வாழ்வை யிழந்த பேரருளாளர் என்று மட்டாயினும் அவரை யறிந்து அவரையும் அவர் போதனைகளையும் தெரிந்து கற்று நல்லொழுக்கம் மேற்கொண்டு ஒழுகுதல் நலம் எனத் தோன்ற இறைவன் அருள் புரிவாரென்று அவரை யேத்தித் தொழுகின்றோம்.

அரிய காரியங்களையும் பெரிய உபதேசங்களையும் அனேக விதங்களாய்ச் சிநேகங் காட்டி இயற்றி யருளிய ஸ்ரீஸ்வாமிகள் கிருஷ்ணாவதார ரென்றும் பக்தாவதார ரென்றும் வங்காளதேயத்து வைணவர்கள் வணங்குகின்றார்கள். உத்தம வழியிற் படிந்து மெத்தவும் சிரத்தை பூண்ட பக்தி ரத்னங்காள்! பரந்தாமனுக்கே பாமாலை பாடி சிரந்தனிற் பூமாலை சூடும் புண்ணியர்காள்! அண்ணலருள் பெற்ற கண்ணியர்காள்! நீவிர் ஸ்ரீ சைதன்யரைத் தன்னியரென் றுபினும் நாடீரா, அவர் புகழ்ப் பதம் பாடீரா, குணங் கண்டுகொண் டாடீரா, இகலோக வாழ்க்கைப் பின் பரலோக சுகம் தேடீரா! எல்லா மறிந்த உமக்கு யாமுரைப்பது மூளதேயோ! சிதம்பரத்துப் பிள்ளைக்குத் திருவாசகம் கற்பிப்பதும் திருவரங்கத்துப் பிள்ளைக்குத் திருவாய்மொழி போதிப்

பதும் நனிமிக அழகிதேயோ! கல்யாண குணங்க ளெல்லாவற்றையும் பெற்று, சர்வஜீவ ராசிக ளிடத்தும் தயாளம் வைத்து, அபூர்வ மஹோன்னத முற்று விளங்கும் மஹான்க ளாகிய பெரியோர் சற்றுப் போதாயினும் இத்திசை திரும்பினதா லன்றோ இத்தகைய நூலியற்ற நேர்ந்தது? நாட்டிற் கணிகலனாய் நல்லோர் காணாத போது, நாம் எத்தைக் கொண்டு யாதென விங்குரைப்பது? "சடைத் தம்பிரான் சாதத்துக் கழுதால் மொட்டைத் தம்பிரானுக்கு மோரெங்கே கிடைக்கும்?" என்பதன்றோ பழமொழி? 'வேத மோதிய வேதியர்க் கோர் மழை' என்பதும் கற்றுணர் தோர் துணிபே யன்றோ? வங்காள தேயத்தில் மஹானாய் தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சக்ஷு தீக்ஷையின் வ மையாலே யன்றோ ஸ்ரீ விவேகானந்தரும் உலகத்தைப் பம்ப மென்றாட்டினர்! தென் னிந்தியாவில் சாத்வீக ஸ்ரேஷ்டராயும், மஹாத்மாவாயும் விளங்கிய ஸ்ரீ நாராயணவன ஸ்வாமிகள் பதகமலத் தொண்டு பூண்டு பாங்குற்றோர் பல பெயரன்றோ?

ஈரிரண்டு நூற்றாண்டுகட்கு முன்னர் இந்தியா முழுவதையும் இணை யிலாதபடி தம் இசைபாடச் செய்த இறைவனா ராகிய ஸ்ரீ சைதன்ய ஸ்வாமிகட்கு நமஸ்காரம் புரிகின்றோம். தம் இளம் பிராயத்திலேயே பற்பல அற்புதம் காட்டி வித்தகம் விளைத்த உத்தமராகும் ஸ்ரீகௌரங்கர்க்கு சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பிக்கின்றோம். கயாக்ஷேத்திரம் சென்று தியான வசப்பட்டு கண்ணனிடமே நண்ணிவிட்ட புண்ணியர்பால் எமது மனம் பொருத்துகின்றோம். கீர்த்தனை பாடி ஆர்த்தி விளைத்த மூர்த்திக்கே யாம் பூசனை புரிகின்றோம். விஸ்வரூபம் காட்டி விஸ்வாசம் விளைவித்த கிருஷ்ணாவதாரர் கீர்த்தியையே யாம் கிளக்கின்றோம். ஜகைமாதை யென்பார் பகைமை யடக்கி ஐக்கதலப் பிரகாசரான ஸ்வாமிக்கே வந்தனம் செலுத்துகின்றோம். காஜியை யடக்கியும் செத்த குழந்தையைப் பேசுவித்தும் நாடக மாடியும் கீர்த்தனை பாடியும் நல்லனதைச் செய்த வல்லரையே யாம் வரிக்கின்றோம்.

கோபம் நீக்கவும் பாபம் போக்கவும் பல்லோர்க்கும் அருள் புரிந்து ஆபத்தி னின்றும் தாபத்தி னின்றும் அவர்களைக் காத்த

மூவர்மருந்தாகிய தேவாமிர்தமே! இகழ்ச்சியைத் தணந்து புகழ்ச்சியை மணந்து கீதமாகிற நாதஸுகத்தால் போதம் காட்டும் வேதப் பொருளே! அற்புதனே வெகு பொற்பினனே நித்தியனே நிர்மலனே சத்தியனே சமரசனே, தன்யர் மனத்தில் பக்தி விளக்கும் சைதன்ய மஹாப் பிரபுவே! நும் பொன்னடி போற்றி, புகழ்ப்பதம் போற்றி, நன்னயம் போற்றி, நளினம் போற்றி, பக்தியும் போற்றி, சக்தியும் போற்றி, பாடலும் போற்றி ஆடலும் போற்றி; நேசமும் போற்றி, பாசமும் போற்றி; நிரஞ்சனா போற்றி போற்றி.

“ முனியேநான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா
தனியே னாருயிரே யென் தலைமிசையாய் வந்திட்டு [யே.
இனிநான் போகலொட்டே னொன்றும் மாயம்செய்யே லென்னை

மாயம்செய்யே லென்னை உன்திரு மார்வத்து மாலைநங்கை
வாசம்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்
நேசம்செய் துன்னோ டென்னை யுயிர்வே றின்றி யொன்றாகவே
கூசம்செய்யாதுகொண்டாயென்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ.

கூவிக்கொள்ளாய்வந்தந்தோ என்பொல்லாக்கருமாணிக்கமே
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்நான்
மேவித்தொழும்பிரமன்சிவ னிந்திரனாதிக்கெல்லாம்
நாவிக்கமலமுதற்கிழங்கே உம்பரந்ததுவே.

உம்பரந்தண்பாழேயோ அதனுள்மிசைநீயேயோ
அம்பரநற்சோதி யதனுள்பிரமனரன்நீ
உம்பரும்யாதவரும்படைத்த முனிவனவன் நீ
எம்பரம்சாதிக்கலுற் றென்னைப்போர விட்டிட்டாயே.

போரவிட்டிட்டென்னைநீ புறம்போக்கலுற்றால் பின்னையான்
ஆரைக்கொண்டெத்தையந்தோ! எனதென்பதென்? யானென்ப
தீரவிரும்புண்டநீரதுபோல வென்னாருயிரை [தென்?
ஆரப்பருக எனக்காராவமுதானாயே.

எனக்காராவமுதா யெனதாவியையின்னுயிரை
மனக்காராமைமன் னியுண்டிட்டா யினியுண்டொழியாய்
புனக்காயாநிறத்த புண்டரீகக்கட்செங்கனிவாய்
உனக்கேற்குங்கோலமலர்ப்பாவைக்கன்பா என்னன்பேயோ.

கோலமலர்ப் பாவைக் கன்பா கியவென் னன்பேயோ
நீலவரை யிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்ப
கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்
நீலக்கடல்கடைந்தாயுன்னைப்பெற்றினிப்போக்குவனோ.

பெற்றினிப்போக்குவனோ வுன்னையென்தனிப்பேருயிரை
உற்றவிருவினையா யுயிராய்ப்பயனாவையாய்
முற்றவிம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு
முற்றக்கரந்தொளித்தா யென்முதல்தனிவித்தேயோ.

முதல்தனிவித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம்
முதல்தனியுன்னையுன்னை யெனைநாள்வந்துகூடுவன்நான்
முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்
முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலீயோ.

சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ
சூழ்ந்ததனிற்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ
சூழ்ந்ததனில்பெரிய வென்னவாவறச்சூழ்ந்தாயே.

அவாவறச்சூ ழரியையயனையரனையலற்றி
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன
அவா விலந்தாதிகளா லிவையாயிரமும் முடிந்த
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே.”

ஸ்ரீக்ருஷ்ண சைதன்யஸ்வாமிகள்
திருவடிகளே சரணம்.
ஓம் தத் ஸத்.

முக்கிய பிழைதிருத்தம்.

xxiv-பக்கம், நூலாசிரியர்கள் முகவுரை 6-வரி—'உருபும்' என்பதை 'உருவம்' என்று மாற்றுக.

,, 28-வரி—'இன்னம்' என்பதை 'இன்னும்' எனத் திருத்துக.

பாயிரம் 3-பக்கம், 14-வரி—'மேகம்' என்பதை 'வானம்' என்று திருத்துக.

8-பக்கம், 23-வரி—'எழுபத்' என்பதை 'அறுபத்' என்று மாற்றிக்கொள்க.

76-பக்கம், 5-வரி—'நாம் சங்கீர்த்தனம்' என்பதை 'நாம சங்கீர்த்தனம்' என்று வாசித்துக்கொள்க.

37,38-பக்கம் - ஸ்ரீபாஸர் என்பதை ஸ்ரீதரர் என மாற்றுக.

49-பக்கம் - "அத்வைதா சாரியரைக் காண்டல் - ஸ்வாமிகள் பக்திப் பரவசம் - ஸ்வாமிகள் ஜோதித்தோற்றம்" என்ற தலைப்பினைக் கூட்டிக்கொள்க.

136-பக்கம் - 20, 21 வரி—"இவ்வாறு வைதீக ரோர்க்கு நடப்பினும், அஃதறியாத லௌகிகர்கள்" என்பதற்கு பதிலாய் 'அனைவரும்' என்று வாசிக்க.

154-பக்கம் - 10-வரி—'கதாதரர்' தொடங்கி வேறு பாரா வாகப் பிரித்துக் கொள்க.

185-பக்கம் - 2-வரி—'தம்முன்' என்பதன் பின்னர் 'வெளியார்' என்பதை வருவித்துக் கொள்ளுக.

211-பக்கம் - 12-வரி—பாட்டின் முதல் வரி-'வலமக்தே' என்பதை ஒழிக்க.

ஸ்ரீக்ருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்.

இக்கிரந்தம் வேண்டியவர்கள் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டு-விஜய ரத்னப்பிள்ளை,
63, சாமிபிள்ளைத் தெரு, சூளை, சென்னை.

திரு-பக்தவத்ஸலம் பிள்ளை, பி. ஏ.,
சுந்தரப்பிள்ளை வீதி, புரசைவாக்கம், சென்னை.

மானேஜர்,
தியாஸபிஸ்ட்ஸ் ஆபீஸ், அடையார், சென்னை.

ஸ்ரீநிவாஸ வரதாசாரி அண்ட் கோ,
திருவல்லிக்கேணி அண்டு எஸ்பிளனேட், சென்னை.

T. பெருமாள் முதலியார் அண்டு ஸன்ஸ்,
ஜவுளி வியாபாரம், கம்மர்ஷியல் தெரு, பெங்களூர்.

விலை:—ஸ்டிப் பவுண்டு	2—0—0.
உயர்ந்த கலிகோ பவுண்டு	2—8—0.

பத்து புத்தகம் ஏககாலத்தில் வாங்குவோருக்கு ஒருகாபி இனாமாகக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் [illegible] கொடுத்தல் வேண்டும்.

11900